N2",31 M63


| | PAGES |
|---|---|
| ***Friday, 29th March* 1963.** | |
| I Questions and Answers .. .. .. .. .. | 101–138<br>219–239 |
| II Announcements— | |
| (1) Nomination to the Rules Committee .. .. .. | 135 |
| (2) Election to the House Committee .. .. .. | 135–136 |
| III Government Resolution— | |
| Nomination of Council Members to associate with the Committee on Subordinate Legislation .. .. .. | 136 |
| IV Government Bills— | |
| (1) The Madras Appropriation (No. 2) Bill, 1963 (L.A. Bill No. 8 of 1963) .. .. .. .. .. .. | 136–137 |
| (2) The Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) .. .. .. .. .. .. | 137–217 |
| (3) The Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963) .. .. .. .. | 217–218 |
| V Papers laid on the table of the House .. .. .. .. | 218 |
| ***Saturday, 30th March* 1963.** | |
| I Questions and Answers .. .. .. .. .. | 241–265<br>330–338 |
| II Calling attention to the theft, dacoity, etc., at Tindivanam. | 266 |
| III Statement *re* grant of enhanced rebate for handloom cloth by the Kerala Government .. .. .. .. .. | 266–267 |
| IV Announcement— | |
| (1) Nomination to the Business Advisory Committee .. | 267 |
| (2) Nomination to the Committee on Subordinate Legislation .. .. .. .. .. .. | 267 |
| (3) Nomination to the Committee on Government Assurances .. .. .. .. .. .. | 268 |
| (4) The Madras Appropriation (No. 2) Bill, 1963 .. .. | 268 |
| (5) The Madras Appropriation (No. 3) Bill, 1963 .. .. | 268 |
| V Presentation of Reports— | |
| (1) Report of the Committee on Subordinate Legislation .. | 268 |
| (2) Report of the Committee of Privileges ('Dina Thanthi' case) .. .. .. .. .. .. .. | 269 |
| (3) Report of the Committee on Estimates .. .. | 269 |
| (4) Report of the Committee on Government Assurances. | 269 |
| VI Non-Official Business— | |
| Bills— | |
| (1) The Madras Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1962 (L.A. Bill No. 19 of 1962) .. .. .. .. .. .. .. | 269 |
| (2) The Madras University (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 20 of 1962) .. .. .. .. | 272 |
| Resolutions— | |
| (1) Constitution of a Tamil Popularisation Board .. | 276 |
| (2) Effective Implementation of Prohibition .. .. | 284 |





| | PAGES |
|---|---|
| ***Saturday, 30ht March* 1963—cont.** | |
| VII Government Motion— | |
| Discussion on the Educational Pattern .. .. .. | 290–329 |
| VIII Papers laid on the table of the House .. .. .. .. | 329 |
| ***Monday, 1st April* 1963.** | |
| I Questions and Answers .. .. .. .. .. | 339–392 |
| II Point of order *re* originating of the discussion on 'Educational pattern' in the Council .. .. .. .. .. | 392–393 |
| III Calling attention to the inadequacy of supply of water in the Krishnagiri Reservoir Project Canals .. .. .. | 393–394 |
| IV Announcements— | |
| (1) The Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963) .. .. .. .. | 394 |
| (2) Nomination of Council Members to associate with the Committee on Subordinate Legislation .. .. | 394 |
| (3) Election to the Committee of Privileges .. .. | 481–482 |
| V Government Motion—Discussion on the Educational Pattern—*cont.* .. .. .. .. .. .. .. .. | 395–480 |
| VI Papers laid on the table of the House .. .. .. .. | 482–483 |

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**28th to 30th March, and 1st April 1963.**

**Volume XII (Nos. 1 to 4)**

## TABLE OF CONTENTS.

*Thursday, 28th March* 1963.


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. | 1–30 |
| II Presentation of the Report of the Committee on Estimates on Motor Vehicles Tax Administration .. .. .. .. | 30 |
| III Voting on Demands for Supplementary Grants for 1962–63 .. | 30–46 |
| IV Announcements— | |
| (1) The Madras Appropriation (No. 2) Bill, 1963 (L.A. Bill, No. 8 of 1963) .. .. .. .. .. .. | 46 |
| (2) The Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) .. .. .. .. .. .. | 99 |
| V Government Bills— | |
| (1) The Madras Appropriation (No. 2) Bill, 1963 (L.A. Bill No. 8 of 1963) .. .. .. .. .. .. | 46 |
| (2) The Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) .. .. .. .. .. . | 99 |
| VI Voting on Demands for Grants for 1963–64—*cont.* | |
| Demand No. III—General Sales Tax and other Taxes and Duties— Administration .. .. .. .. .. | 46–88 |
| Demand No. IV—Stamps Administration .. .. .. | 89–93 |
| Demand No. XXI—Cinchona .. .. .. .. .. | 93 |
| Demand No. XXXI—Famine Relief .. .. .. .. | 93–97 |
| Demand No. XXXIII—Miscellaneous .. .. .. | 97 |
| Demand No. XXXVI—Other Miscellaneous and assignment. | 97 |
| Demand No. XXXVII—Compensation to Zamindars .. | 97–98 |
| Demand No. XLV—Commuted value of pension .. .. | 97–98 |
| Demand No. XLVII—Loans and Advances by State Government .. .. .. .. .. .. .. .. | 98 |
| VII Papers laid on the table of the House .. .. .. | 99–100 |

## *How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion .. .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. .. .. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes:<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amedment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G.A. .. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. .. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. .. | Statement. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 28th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*பறவைகளை வேட்டையாடல் (வேதாரண்யம்)*

*398 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுகாவில் வேதாரண்யம் முதலிய கடற்கரைப் பகுதிகளில் பறவைகளை வேட்டையாடக் கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

(இ) Teal (Small water duck) என்னும் பறவை பயிர்களை நாசம் செய்வதால் அதை மட்டும் வேட்டையாட அனுமதி கொடுக்கப்படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** (அ) சில வகை காட்டு நீர்ப்பறவைகளையும், குருவிகளையும் சுடுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

(இ) இல்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** ஸார், திருத்துறைப்பூண்டி கடலோரப் பகுதியாக இருப்பதால் அங்கே நிலத்தில் விளைந்த நெல்லை எல்லாம் பறவை அழித்து விடுகிறது. அந்தப் பகுதியில் மாத்திரம் பறவைகளைப்பிடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** பறவைகளைப் பிடிப்பது என்றால் அது மிகவும் தொந்திரவாக வந்து சேரும். அவைகளை விரட்டுவதற்கு ஒரு மெஷின் இருக்கிறது. அதைப்பற்றி விவசாய இலாகா மூலமாக விவசாயிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை வாங்கி உபயோகித்தால் தொந்திரவு இல்லாமல் இருக்கும்.

**திரு. சி. ம. அம்பிகாபதி:** ஸார், அந்தச் சிறவி பறவை ஒரு தரம் ஒரு ஏக்கர் நிலத்தில் படையாக விழுந்தால் அத்தனை நெல்லையும் சாப்பிட்டு விட்டுச் செல்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பறவையை மாத்திரம் சுடுவதற்கு அனுமதி தரப்படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** பறவையைச் சுடக்கூடாது என்று முக்கியக் கேள்வியில் பதில் சொல்லி இருக்கிறேன். ஒரு மணி நேரத்திற்கு இரண்டு நிமிஷத்திற்கு

ஒரு தரம் சப்தம் போட்டுக்கொண்டே இருக்கக்கூடிய மெஷீன் இருக்கிறது. மிகவும் சொற்பத் தொகையை வைத்தே அந்தக் காரியத்தைச் செய்யலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், அமைச்சர் அவர்கள் கூறிய பிரகாரம் அந்த வெடியை வெடித்தாலும் கூட பறவைகள் கலைந்து போவதில்லை. இதெல்லாம் அந்தப் பறவைகளுக்குப் பழக்கமாகி விட்டது. ஆகையால் அதைப் பிடித்தால் தான் அந்த ஆபத்தைத் தடுக்க முடியும். இதைப் பிடிக்கவாவது அனுமதி வழங்கப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** தஞ்சை ஜில்லாவில் மாத்திரம் அல்ல, தென்னாற்காடு ஜில்லாவிலிருந்து கூட ஒரு பஞ்சாயத்து யூனியனிடமிருந்து இப்படிப்பட்ட தகவல் வந்தது. அவர்களுக்கும் இதைத்தான் சொல்லி வந்திருக்கிறோம். அவர்கள் இப்படிப்பட்ட மெஷீன்களை வைத்திருக்கிறார்கள். பறவையைப்பிடிப்பது என்பது அவ்வளவு சரியல்ல.

## பாதுகாப்பு நிதி

* 399 **கேள்வி.—திரு. எல். ஆனந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய பாதுகாப்பு நிதி வசூலிக்கக் கள்ளக்குறிச்சி தாலுகா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்திற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளதா ?

(இ) இவர்கள் வசூலித்த தொகை எவ்வளவு ?

(உ) வசூலித்த பூராத் தொகையும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டுவிட்டதா ?

(எ) இல்லையென்றால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், பாதுகாப்பு நிதிக்கு நாடகம் நடத்தி வசூல் செய்து கொடுப்பதை அரசாங்கத்தார் வேண்டாமென்று இப்போது கருதுகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உண்டு, இல்லை என்று இதற்குப் பொதுவாக விடை அளிக்க முடியாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தால் பரிசிலனை செய்து, சில சமயங்களில் அனுமதி அளிக்கிறோம், சில சமயங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது.

**திரு. ஆர். ரங்கசாமி :** ஸார், பாதுகாப்பு நிதிக்காக அவர்களாக நாடகம் நடத்தி நிதி கொடுப்பதை தடுக்கிறார்களா ? அல்லது வேறு யாராவது ஏற்பாடு செய்திருப்பது நிறுத்தி வைக்கப்படுகிறதா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு எம்மாதிரி ஏற்பாடு செய்து வசூலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அரசாங்கம் அனுமதி அளிக்கும் அல்லது அனுமதி மறுக்கும். கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாகப் புகார் சொல்வதற்கு இடமளிக்கக் கூடாதென்பதில் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அப்படிக் கவனித்து வந்தபோதிலும் இந்தக் கேள்வியில் வந்த புகார்போல் ஆதாரமற்ற புகார்களே வந்துகொண்டிருக்கின்றன.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸார், சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட உடனேயே ஆங்காங்குள்ள மக்கள் பிரிதிநிதிகளும், முக்கியஸ்தர்களும் சேர்ந்து மிக அதிகமான தொகையை வசூலித்துக் கொண்டு வந்தார்கள். இப்போது தாசில்தாரோ, அல்லது கலெக்டரோ வந்தால்தான் வசூலிக்கப்படுகிறது என்ற ஏற்பாடு இருப்பதால் வசூல் குறைந்திருப்பது உண்மையா ? அப்படியானால் ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட சிறிய சிறிய கமிட்டிகள் அமைத்து நிதி வசூலிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறுவது எனக்குப் புரியவில்லை. எப்போதும் உள்ள கொள்கைதான் இப்போதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு அளவு கடந்த, அற்புதமான உற்சாகம், உணர்ச்சி இருக்கிறது. நாட்டின் பாதுகாப்பிற்கு அவர்களுடைய காணிக்கையைச் செலுத்த வேண்டுமென்று ஆங்காங்கு மக்கள் முன்வருகிறார்கள். இதிலே அதிகாரிகள் பங்கு எல்லாம், அவ்வாறு தொகை வசூலிக்கப்பட்டால் அதைக் கண்காணித்து, சரியாகக் கணக்கெடுத்து, சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்க்கவேண்டுமென்பதுதான்.

## போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டுதல் (சென்னை)

* 400 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகருக்குள் போலீசாருக்கென்று 1962-ல் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை ? அதற்கு ஆன செலவென்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சென்னை மாநகரில் போலீசாருக்காக கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட 492 வீடுகளில், 377 வீடுகள் 1962-ல் கட்டப்பட்டன. இதற்காக 1962-ல் 14,93,015 ரூபாய் செலவிடப்பட்டது.

## அணை கட்டுதல் (தாணிபாடி பிர்க்கா)

* 401 **கேள்வி.—திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செங்கம் தாலுகா, தாணிபாடி பிர்க்கா, போந்தை கிராமத்தில் தீப்பந்தான் அணை கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் திட்டம் ரெவின்யூ போர்டு உணவு உற்பத்தித் துறையின் ஆலோசனையில் இருக்கிறது.

The proposal is under the consideration of the Board of Revenue (Food Production).

**திரு. எ. ஆறுமுகம் :** ஸார், இந்த வேலை எப்போது துவக்கப்படும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் திட்டத்திற்காக 95,000 ரூபாய் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். இதுபற்றி கலெக்டர் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயம் தெரிந்தவுடன் இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

### தரிசு நிலங்கள் (வடாற்காடு மாவட்டம்)

*** 402 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் பயிரிடத்தக்க தரிசு நிலம் எத்தனை ஏக்கர் உளது ?

(இ) கடந்த நிதியாண்டுக் காலத்தில், தரிசு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவேண்டி வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(உ) அவற்றுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை ?

(எ) அவ்வகையில் பட்டா நிலமாக மாறிய நிலம் எத்தனை ஏக்கர் ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) 1—4—1961-ல் எடுத்த கணக்குப்படி வட ஆற்காடு மாவட்டத்தில் பயிரிடத்தக்க தரிசு நிலத்தின் மொத்தப் பரப்பு 72,972 ஏகர் 3 செண்ட்.

(இ) 12,850 விண்ணப்பங்கள் வந்தன.

(உ) 4,893 விண்ணப்பதாரர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(எ) மொத்தம் 9,942 ஏக்கர் 75 சென்ட் நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டது.

**புலவர் கா. கோவிந்தன் :** ஸார், 12,850 விண்ணப்பங்கள் வந்தும், 4,893 விண்ணப்பங்கள்தான் அனுமதிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மற்ற விண்ணப்பங்கள் நிலைமை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளலாமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** விண்ணப்பம் போட்டவர்களில் எத்தனையோ பேர் நிலம் பெறுவதற்குத் தகுதி இல்லாதவர்களாக இருந்திருக்கலாம். அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுக்கவேண்டுமென்ற கட்டாயம் கிடையாது விண்ணப்பம் போட்டவர்களில் நிலம் பெறக்கூடிய தகுதி உள்ளவர்கள் 4,893 பேர்கள். அவர்களுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள்.



**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஸார், பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலங்களில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ?

**கனம் திரு. வெ. ராமையா :** அதைப் பற்றி தகவல் இல்லை. இருக்கும் நிலைமையைப் பார்த்தால் அதிகமான நிலங்கள் ஹரிஜனங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், ஒரு ஏக்கருக்கு மேல் பட்டா செய்து கொடுப்பதற்கான அதிகாரம் மாவட்ட அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படவில்லை, ரெவின்யூ போர்டுக்கு வந்து பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் பட்டா செய்து கொடுக்கப்படுகிறது. மாவட்ட அதிகாரிகள் 5 ஏக்கருக்குள் இருக்கும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து நிலம் கொடுக்க சர்க்கார் வழிவகை செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** நிலம் கொடுப்பதிலே நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நிலத்தினுடைய பெறுமானம் பலதரப்பட்டது. எல்லா நிலத்தையும் எல்லா அதிகாரிகளும் கொடுத்துவிடலாம் என்று அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரும் பட்சத்தில் பல சிக்கல்கள் ஏற்படும். ஆகையால் தான் ஒரு தரம் பொருந்திய நிலமும் யார் யாருக்குக் கொடுக்கப்படவேண்டுமென்பதற்கு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் படி கொடுக்கப்படுகிறது. ரெவின்யூ போர்டுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ போவதால் ஒன்றும் காலதாமதம் ஏற்படவில்லை. எல்லாப் பிரார்த்தனைகளையும் முறையாகப் பரிசீலனை செய்துதான் இதைக் கொடுக்க முடியும்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** ஸார், பட்டா செய்து கொடுக்கப்படுகிற நிலம், தரிசு நிலம் மட்டுமா அல்லது ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சம் தரிசு நிலமும் அடங்கி இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

**திரு. எஸ். முருகையன் :** ஸார், பெயரளவுக்கு ஹரிஜனங்களின் பேரில் பட்டா செய்து விட்டு ஊரிலே வசதியாக உள்ளவர்கள் கிட்டத்தட்ட 20, 30 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் இந்த 4, 5 ஏக்கர்களையும் அனுபவித்து வருகிறார்கள் என்கிற புகார் சர்க்காருக்கு வந்ததா ? அந்த நிலைமை இல்லாமல் உண்மையிலேயே ஹரிஜனங்களுக்கு நிலம் கொடுக்க வழிவகை செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் கூறக்கூடிய புகார் என்னுடைய பார்வைக்கு வரவில்லை. ஹரிஜனங்களுக்கு நிலம் பட்டா செய்து கொடுக்கிறோம். ஹரிஜனங்களும் சேர்ந்து அரசாங்கத்தை ஏமாற்றுவார்களானால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. அரசாங்கமும் பொறுப்பாளி அல்ல. கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இதைப் போன்ற தகவல்களை என் பார்வைக்குக் கொண்டு வரும் பட்சத்தில் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை அரசாங்கம் எடுத்துக்கொள்ள முடியும்.

[28th March 1963

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஸார், நில ஒருமைப்பாடு செய்யக் கூடிய அதிகாரிகள் தாலூகாவிற்கு ஒருவர் இருப்பதால், அதிக மான விண்ணப்பங்கள் வருவதால் இன்னொரு அதிகாரியை நிய மித்து, நில ஒருமைப்பாடுகளைச் செய்ய துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நான் பார்த்த வரையில் இப்போது இருக்கக் கூடிய ஏற்பாடு, விண்ணப்பங்கள் அதிகமாக இருந்தால் அப்போது விசேஷ அதிகாரிகளைப் போடுகிறார்கள். ஆகையால் விண்ணப்பங்கள் அதிகமாக வரும்போது அதைத் தேக்கி வைக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் இல்லை.

**திரு. ஆ. துரை அரசன் :** ஸார், மாநிலம் பூராவிலும் ஒரு குறிப் பிட்ட காலத்திற்குள் இந்த மனுக்களையெல்லாம் பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்திரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்போது இருக்கக்கூடிய நிலை யில் அதிகமான தேக்கம் இருப்பதாகச் சொல்லுவதற்கில்லை. இப்போதுகூட விசேஷ கவனம் செலுத்தித்தான் இதைத் தீர்த்துக்கொண்டிருக்கிறது. நிலம் இருக்கும் வரையில், அதைப் பெறவேண்டும் என்று மக்கள் நினைப்பு இருக்கும் வரையில், இது தொடர்ச்சியாக இருந்துகொண்டுதான் இருக்கும். இதை 3 மாதம் அல்லது 6 மாதம் அல்லது ஒரு வருஷத்திற்குள் தீர்த்துவிட முடியும் என்று சொல்லக் கூடிய பிரச்னை இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இப்போது பயிரிடத் தக்க நிலங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும், அமைச்சர் அவர்கள் கூறிய மாதிரி, 60,000 ஏக்கர் வரையில் இருப் பதாகத் தெரிகிறது. மதிய உணவுத் திட்டத்திற்காக வேண்டி அந்தந்த பஞ்சாயத்துக்களின் எல்லைக்குள் இருக்கக் கூடிய அத் தகைய நிலங்களை அந்தந்த பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஒவ்வொரு பஞ்சாயத்து எல்லை யிலும் இருக்கக் கூடிய தரிசு நிலங்களில் அல்லது புறம்போக்கு நிலங்களில் அவர்கள் சாகுபடி செய்யவேண்டுமென்று முடிவு செய்தால் அதில் சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் இடைஞ்சல்கள் இருந்தால் அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வந்தால் கவனிக்கலாம்.

**திரு. சி. பொன்னுசாமி :** ஸார், இந்த நிலங்களை விவசாயம் செய்ய வாய்ப்பு உள்ளவர்கள் லீஸுக்குக் கேட்டால் கொடுப்பதற் குச் சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** லீஸுக்குக் கொடுப்பது தனிப் பிரச்னை. அப்படி வேண்டுமென்று கோரக் கூடியவர்கள் அரசாங் கத்திற்கு விண்ணப்பம் கொடுத்தால் இருக்கக் கூடிய சட்டத்தின் கத்திற்கு விண்ணப்பம் கொடுத்தால் இருக்கக் கூடிய சட்டத்தின் படும்.



28th March 1963]

**திரு. ஜே. மாதா கவுடர் :** முன்பு அவசர கால உணவு உற் பத்தித் திட்டத்தின்கீழ் எல்லா பூமிகளிலும், தரிசு நிலங்களிலெல் லாம் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய ஆரம்பித்து நடக்கிறது. குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் திரும்பத் திரும்ப அந்த இடத்திலேயே பயிரிடுகின்ற காரணத்தினால் விளைவு குறைந்து விட்டது. ஆகையால் நீலகிரியைப் பொருத்த வரையில் லீஸுக்கு பூமியைக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நீலகிரியில் இது போன்ற நிலைமை இருந்தால் லீஸுக்கு வேண்டுமென்று கேட்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்வார்கள்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** தலைவர் அவர்களே, 10 ஆண்டு, 15 ஆண்டு காலமாக இது போன்ற தரிசு நிலங்களைப் பயிரிட்டு வருகிறவர்கள், கீழே தாசில்தார், மேலே டெபுடி கலெக் டர், கலெக்டர் அதற்கு மேலே போர்டு வரையில் போய், பட்டா போட்டுக்கொடுப்பதற்கில்லை என்ற பதிலையே பெற்று ஏமாற்ற நிலையில் இருக்கிறார்களே, அந்த நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் இருந்தால் அவர்களுக்குப் பட்டா கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் சொல்லக் கூடிய கருத்தை ஏற்றுக்கொண்டால் ஏழைகளுக்கு நிச்சயமாக நிலம் கிடைக்காது. இதைப் போல ஆக்கிரமிப்பு செய்தவர்கள் கொஞ்சம் அதிக வசதி படைத்தவர்கள். 10 வருஷமாக ஆக்கிர மிப்பு செய்திருக்கிற காரணத்திற்காக அரசாங்கம் இந்த நிலையை ஒப்புக்கொண்டு பட்டா எல்லோருக்கும் கொடுத்தால், அது சரி யாக இருக்காது. உண்மையில் ஏழைகள் இது போல இருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, தக்க அதிகாரிகளைச் சந்தித்து நேராகத் தங்கள் நிலையை விவரமாகச் சொல்லும் பட்சத்தில், அவர்கள் தனிப்பட்ட முறையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு நிலத்தைக் கொடுக்க முயற்சி எடுப்பார்கள்.

**திரு. ரா. கு. வீரப்ப செட்டியார் :** ஸார், ஜமாபந்தி நேரங் களில் இப்பேர்ப்பட்ட பட்டா செய்யவேண்டுமென்ற கோரிக்கை கள் கொடுத்தால் உடனுக்குடன் பரிசீலனை செய்வதில்லை. ஜமா பந்தி நேரங்களில் கொடுக்கப்படும் கோரிக்கைகளை அந்த வருஷத் திலேயே தீர்மானம் செய்யவேண்டும் என்று அரசாங்கம் அதிகாரி களுக்கு உத்தரவு போடுவார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பொதுவாக உத்திரவு போட அரசாங்கம் தயாராயில்லை. நிலம் கொடுப்பது மிகவும் ஜாக் கிரதையாகச் செய்யவேண்டிய ஒரு பிரச்னை. ஜமாபந்தி காலத் தில் செய்யக்கூடிய பிரச்னையாக மட்டும் இருக்க முடியாது. விதிகளை அனுசரித்து, எந்தெந்த அதிகாரிகள், எந்தெந்த இடங் களைக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறதோ அவர்கள் தக்க முறையில் பரிசீலனை செய்து தக்கவர்களுக்குக் கொடுப்பார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களை முன்பு இருந்த ஆக்கிரமிப்புடன் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆக்கிரமிப்பு உள்ள நிலங்களை அவர்கள் ஒப்படைக்கவில்லை என்ற அளவில் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே ஆக்கிரமிப்பு உள்ள புறம்போக்கு நிலங்களை ஒப்படைக்கவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஒப்படைக்கும் முறையிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஏனென்றால் சில ஆக்கிரமிப்புகளை எடுத்துக் கொண்டால் ஏழைகள் ஆக்கிரமித்திருப்பார்கள். அவர்களுக்கு அந்த பட்டா கொடுக்கவேண்டிய சூழ்நிலையெல்லாம் இருக்கலாம். இப்போது பஞ்சாயத்துக்கு வந்தவுடனே அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய ஏழை விவசாயிகளையும் மற்றவர்களையும் வெளியேற்ற எல்லா முயற்சியும் எடுக்கிறார்கள். ஆகையால் இதிலே ஆராய்ந்துதான் முடிவு சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு அது அரசாங்கத்தின் அல்லது கலெக்டரின் அல்லது மற்ற அதிகாரிகளின் பார்வையில் இருக்கின்றது.

**திரு. கே. பொன்னையா :** பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்குகளில் ஏற்கனவே 10 வருஷங்களுக்கு மேலாக ஹரிஜன மக்கள் உழுது ஜீவித்து வருகிறார்கள். அதை பஞ்சாயத்து போர்டார் லீஸுக்காவது கொடுக்க சர்க்கார் சிபாரிசு வேண்டும்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் கமலநாதன் அவர்களுடைய கேள்விக்கு அவர் பதில் சொல்லுகிறார். அந்த முறையில் இதையெல்லாம் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டும்.

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் :** நிலம் இல்லாத ஏழைகளுக்கு நிலங்கள் ஊழாரி செய்யப்படுவதற்கு இடைஞ்சலாக கர்ணம் முதலியவர்களால் மற்றவர்களால் ஆக்கிரமித்து வரப்படுவதைத் தடுக்க வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஏழைகளுக்கு இதை அஸைன்மெண்ட் செய்யவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கை. கொஞ்சம் நிலம் உள்ளவர்கள் மேலும் இந்த நிலங்களை சேர்த்துக் கொண்டு பல பேர்கள் பல வருஷங்களாக ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமிப்பு செய்திருக்கக்கூடியவர்களை வெளியேற்றவேண்டும் என்பது அரசாங்கத்தின் முயற்சி கூட. அப்படிப் பட்டவர்களை வெளியேற்றியவுடன் நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க எல்லா முயற்சியும் எடுக்கப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களை நிலமுள்ளவர்களும், வசதியுள்ளவர்களும் 10 ஏக்கர், 15 ஏக்கர் என்று ஆக்கிரமிப்பு செய்து வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு அல்லது மற்ற அதிகாரிகள் அவர்களை வெளியேற்றுவதில் தயக்கம் காட்டுகிறார்கள். இந்த மாதிரியான ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?





**கனம் திரு. வெ. ராமைய்யா :** வெளியேற்ற வேண்டிய பொறுப்பு எந்தெந்த அதிகாரிகளுக்கு இருக்கிறதோ அவர்கள் செய்து கொண்டிருப்பார்கள். அதில் ஏதேனும் கஷ்டங்கள் இருந்தால் அதை அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டு வந்தால் அரசாங்கம் அவைகளைப் போக்க முடியும். அரசாங்கத்திற்கே சில சமயங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. கடந்த ஒரு சில மாதங்களாக பல ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். இதிலே கொஞ்சம் வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் உடனே கோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். இந்த விஷயத்தில் சட்ட சபை அங்கத்தினர்கள் அத்தனை பேர்களும் ஒத்துழைப்புக் கொடுத்தால் இதிலே கொஞ்சம் தீவிரமாக இருக்க முடியும்.

**திரு. சா. ராமசாமி :** கடந்த செட்டில்மெண்டுக்குப் பிறகு, செட்டில்மெண்ட் முடிந்து 40 ஆண்டுகள் ஆகின்ற காரணத்தினால் பூஸ்திதியில் சாகுபடிக்கு லாயக்காக இருக்கிற நிலங்கள் சர்க்கார் கணக்குகளில் ஏரிப் புறம்போக்கு, வண்டிப்பாதை புறம்போக்கு என்று இருக்கிறது. சர்க்கார் கணக்கில் வண்டிப்பாதை புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு என்று இருக்கிற நிலங்கள் சாகுபடிக்கு லாயக்காக இருந்தால் தரிசுப் புறம்போக்கு என்று மாற்ற அரசாங்கம் முற்படுமா ?

**கனம் திரு. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் கூறுவது செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்பட்ட முடிவு. அதைப் பொதுவாகத் திரும்ப மாற்றவேண்டுமென்றால் மறு செட்டில்மெண்ட் செய்யவேண்டும். இடையிடையே அதிகாரிகள் முயற்சி எடுத்து இது போல பூமியினுடைய தரத்தை பட்டியலில் மாற்ற முயற்சி எடுத்து அதையும் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதைப்பற்றி திட்டவட்டமான பதில் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஏழை விவசாயிகள் பட்டா கோரும்போது பஞ்சாயத்துத் தலைவர்கள் தீர்மானம் இருந்தால் தான் பட்டா கொடுப்பதாகப் பரவலாக இருந்து வரும் வதந்தி சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** வதந்திக்கு பதில் சொல்ல நான் தயாராக இல்லை.

**திரு. ஏ. ஆறுமுகம் :** ஸார், இப்பொழுது பஞ்சாயத்து போர்டார் அங்கே இருக்கும் நிலங்களில் மரம் நடவேண்டும், செடிகள் பயிராக்கவேண்டும் என்று சொல்லி, ஏழை ஹரிஜன மக்களை அங்கே விவசாயம் செய்யமுடியாமல் தடுக்கிறார்கள். ஆகவே, இந்த தரிசு நிலங்களை பஞ்சாயத்துக்குக் கொடுத்தால் ஏழைகளுக்குக் கொடுக்கக்கூடாது என்பதுதான் ஏற்படுகிறது. இது தவிர்க்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பஞ்சாயத்துக்களும், அரசாங்கமும் ஏழைகளுக்கு துன்பம் இல்லாமல் நிலங்களைக் கொடுக்கத்

தான் முயற்சி எடுக்கிறார்கள். பஞ்சாயத்தைப் பொறுத்த வரை, அவர்கள் மரம் நடவேண்டுமென்றால், அதற்குத் தகுதியுள்ள நிலங்களில்தான் செய்வார்கள்.

**திரு. சி. ம. அம்பிகாபதி:** தனிப் பட்டா செய்து கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுவதால், அதைத் தவிர்க்க கூட்டுப் பண்ணை விவசாயம் செய்ய நிலமற்ற ஏழை மக்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. வெ. ராமையா:** அதுபோல ஏழை மக்கள், ஹரிஜன மக்கள் முன்வந்தால், அரசாங்கம் நிலத்தைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மற்ற உதவிகளும்கூட செய்கிறது. திருச்சி ஜில்லாவில், முன்பிருந்த கலெக்டரின் பெருமுயற்சியால், பல கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டு அவை நல்ல விதமாக நடைபெற்றுவருகின்றன. அது சம்பந்தப்பட்ட மற்ற அமைச்சர்களுக்கும் தெரியும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, இப்பொழுது மாடு மேய்க்கும் புறம்போக்கு நிலங்கள் மேய்ச்சலுக்கு என்று ஒதுக்கப்படுமா? அம்மாதிரி நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று மனுப் போடுகிறார்களே; அதை நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா:** மனுப்போடுவதை யாரும் தடை செய்ய முடியாது. ஆனால், மனுப் போடுகிறார்கள் என்ற காரணத்திற்காக அரசாங்கம் பட்டா செய்து கொடுக்காது. அதைப் பரிசீலனை செய்து மேய்ச்சல் புறம்போக்காகச் செய்வது உசிதம் என்றால் அப்படியும் செய்யும். கால்நடை அபிவிருத்தியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது என்பது அங்கத்தினர்களுக்கு தெரியும்.

**திரு. மு. பொ. வடிவேல்:** தலைவர் அவர்களே, சில பஞ்சாயத்து போர்டுகளிடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கும் நிலங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை குத்தகைக்கு விடமுடியாதபடி சட்டம் தடுக்கிறது. வெறும் அபராதம் மட்டும் போட்டுவிடுகிறார்கள். அதை மாற்றி டெண்டர் 'கால் பார்' செய்து குத்தகைக்குவிட உத்தரவு இடப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா:** அதற்கு தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிக்கப்படும்.

**திரு. காஞ்சி மணிமொழியார்:** தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்த மாநில அகதிகள் தரிசு நிலங்களை விவசாயத்திற்கு வேண்டுமென்று மனுப்போட்டிருக்கிறார்களா ? அவைகள் அனுதாபத்தோடு கவனிக்கப்பட்டு, நிலம் வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** மனு வந்திருக்கிறதா என்று இப்பொழுது சொல்ல முடியாது. மனு வந்தால் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தும் என்று சொல்ல விரும்புகிறேன்.



**திரு. டி. கார்ச்சா கவுடர்:** தலைவர் அவர்களே, ஹரிஜனங்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் நிலம் அளிப்பதை ஓர் ஆண்டுக்குள்ளே எப்படியாவது பைசல் செய்யவேண்டும் என்று உத்தரவு போடப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா:** எப்படியாவது பைசல் செய்ய வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. முறையாக பரிசீலனை செய்யவேண்டும். பிற்பாடு சங்கடம் வராமல் செய்ய வேண்டும்.

**திரு. கே. பொன்னையா:** முன்நாட்களில் வாழ்ந்த ஜமீன்தார்கள் ஆக்கிரமித்து அனுபவித்து வந்த நிலங்களை கூட்டுறவு முறையில் பயிரிட ஹரிஜனங்களுக்குக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமையா:** செட்டில்மெண்ட் காலத்தில் இருந்த ஒரு கஷ்டம் தெரிந்தது. அதைத் திரும்ப அரசாங்கம் நீடிக்கவிடாது. அதற்கு மறு பரிசீலனை செய்து புது முறையில் என்னென்ன உதவிகள் செய்யவேண்டுமோ அதைச் செய்யும்.

**திரு. க. தா. பெருமாள் ராஜு:** தலைவர் அவர்களே, சுமார் ஒரு ஆண்டுக்கு முன் சர்க்காரால் ரீ-சர்வே செய்யப்பட்டது. எப்பொழுது பட்டா வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. சி. பொன்னுசாமி:** ஸார், ஹரிஜனங்களுக்கு கூட்டுறவு முறையிலே விவசாயத்தை நடத்த இந்த நிலங்களெல்லாம் கொடுக்கப்படும் என்று தெரியப்படுத்த ஆங்காங்கே வசதி செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா:** இதற்கு அரசாங்கம் பெரிய முயற்சி எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அந்தந்த ஸ்தலத்தில் இருக்கும் மக்களுக்கு இம்மாதிரி கூட்டுறவு முறையில் பண்ணை நடத்துவதாக இருந்தால் நிலம் கொடுக்கப்படும் என்பது தெரியும். அதற்கு அரசாங்கம் வேறு உதவிகளும் செய்கிறார்கள் என்பதும் தெரியும். ஆனால், அந்த மக்கள் கூட்டுறவு காலனிகள் அமைக்க அதிகமாக முன்வருவதில்லை. அவர்கள் கோருவதெல்லாம், தனிப் பட்ட முறையில் விற்க, அடமானம் செய்ய, எது வேண்டுமானாலும் செய்யக்கூடிய அளவில் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான். கூட்டுறவு முறையில் அவர்கள் சாகுபடி செய்ய அங்கத்தினர்களைப் போன்றவர்கள் ஹரிஜனங்களுக்கு போதுமான முறையில் எடுத்துச் சொல்லவேண்டும்.

**திரு. ஏ. ஆறுமுகம்:** இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களுக்கே பஞ்சாயத்துக்கள் பட்டா வழங்குவது என்பதை ஆலோசனை செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா:** ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள் என்ற காரணத்திற்காக பட்டா வழங்கவேண்டும் என்பதை

ஒப்புக்கொள்ள முடியாது. அவர்களும் முறையாக அரசாங்கத்திற்கு மனுச்செய்தால், அதைப் பரிசீலனை செய்து அவர்களுக்குக் கொடுக்கலாம் என்றால், கொடுக்க முடியும்.

**திரு. சி. ம. அம்பிகாபதி :** சில கிராமங்களிலே கிராம சமுதாய நிலம் என்று சொல்லிக்கொண்டு, சொந்தப் பட்டா நிலம் உள்ளவர்கள் மட்டும் சாகுபடி செய்து அனுபவித்து வருகிறார்கள். அதை நீக்கி, நிலமற்றவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க ஆலோசனை செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** ஸார், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் புறம்போக்குகள் அதற்கான தனிப் பெயரில் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நியதி இருக்கும்போது, குறிப்பிட்ட கிராமத்தில் சுமார் 200 ஏக்கரா மேய்ச்சல் தரையை ஆக்கிரமித்திருந்த ஆக்கிரமிப்பாளரை அப்புறப்படுத்த வேண்டும் என்று 1945-லேயே அரசாங்கத்தில் ஆலோசனை இருந்தது. இப்பொழுது அது பஞ்சாயத்துக்கு வந்த பிறகு அவருக்கே கலெக்டர் அஸைன் செய்யச்சொல்லி இருக்கிறார். அரசாங்கத்தின் நோக்கம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கத்தின் நோக்கம் புறம்போக்கை ஆக்கிரமிக்கக் கூடாது என்பது. 1945-லேயே அப்படிப்பட்ட முடிவுக்கு வந்தது. அந்த நிலம் சாகுபடிக்கு ஏழைக்குக் கொடுக்கலாம் என்று அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தார்கள். அதிலே சிக்கல்கள் ஏற்பட்டன. இன்னும் சிக்கலான நிலையிலேயே பஞ்சாயத்திற்குப் போய் இருக்கிறது. பஞ்சாயத்து தங்களுக்கு ஆக்கிரமிப்பாளருக்கே கொடுக்க உரிமை என்று நினைக்கிறது. அந்த நினைப்பு தவறு.

**திரு. எம். எஸ். மணி :** ராணுவத்தில் பணியாற்றி திரும்பியவர்களுக்கு இந்த தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதில் முதலிடம் அளிக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** முதலிடமா என்பதை திட்ட வட்டமாகச் சொல்லமுடியாது. அவர்களுக்கும் நிலம் கொடுக்க உதவி செய்யப்படும்.

**திரு. எஸ். முத்துலிங்கம் :** அநேக கிராமங்களில் ஹரிஜனங்கள் பல காலமாக ஆண்டு அனுபவித்து வந்திருக்கிற சர்க்கார் புறம்போக்கு நிலங்களை அவர்களுக்கே அடமானம் செய்துகொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்தமாதிரி உப கேள்வி 4, 5 கேட்கப்பட்டு பதிலளித்திருக்கிறேன். இருந்தாலும் சொல்லுகிறேன். ஆக்கிரமிப்பு செய்த ஒரு காரணத்திற்காக கொடுக்க வேண்டுமென்றால், அது முடியாது. அவர்கள் முறையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி, நிலமற்றவர்கள் என்று



விண்ணப்பம் கொடுத்தால், அதைப் பரிசீலனை செய்து, கொடுக்கலாம் என்றால் கொடுக்க முடியும். கனம் அங்கத்தினர் கேள்வி போடுவதற்குப் பதிலாக, அவர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அழைத்துச் சென்று மனுக் கொடுக்கச் செய்தால், அவர்களுடைய கோரிக்கை நடக்கும்.

**திரு. சி. பொன்னுசாமி :** கடற்கரை ஓரத்தில் உள்ள நிலங்களை, கூட்டுறவு முறையில் உப்பளம் போடுவதற்குக் கொடுத்து தனிச் சலுகைகள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. கே. பி. பழனிசாமி :** பல ஆண்டுகளாக ஹரிஜனங்கள் அஸெஸ்ட் வேஸ்டுகளை செப்பனிட்டும், உழுது பயிர்செய்தும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு பி. மெமோவும் வந்திருக்கிறது. அப்படிப் பட்ட நிலையில், திடீரென்று ஏன் அவர்களை அப்புறப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமையா :** பி. மெமோ கொடுக்கப்பட்டால், அதுவே பட்டா என்று நினைக்கிறார்கள். அது சரியல்ல. ஆக்ரமிப்பு செய்திருக்கிறார்கள், ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், உடனடியாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் ஒரு பாரம் தான் அது. அதையெல்லாம் விட்டு விட்டு, அவர்கள் பி. மெமோ வந்தால் நிலம் வந்து விடும் என்று இருந்தால் அது அவர்களுக்குத்தான் பாதகமாக முடியும். அந்த நிலத்தைப் பார்த்து திரும்ப எடுத்து மற்றொரு ஏழை நிலமற்றவருக்குத்தான் கொடுக்கிறோம். பி. மெமோ பட்டா இல்லை என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதை அங்கத்தினர் அவர்களுக்கு எடுத்துச் சொன்னால், சிக்கல்கள் இருக்காது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 9-00 .m.
நிலங்கள் சம்பந்தமாக தொடர்ச்சியாக 12 வருஷங்களாக அபராதத் தொகையும், லாண்டு செஸும் கொடுத்துக்கொண்டு வருவதினால், சட்டபூர்வமாக அவர்களுக்கு ஏதாவது உரிமை ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** நிச்சயமாக இல்லை.

**திரு. பி. ஜயராஜ் :** சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் எவிக்ஷன் செய்யப்பட்ட பிறகு, மறுபடியும் ஆக்கிரமிப்பு செய்தால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் ?

**கனம் திரு. வெ. ராமையா :** மறுபடியும் அவர்களை எவிக்ஷன் செய்யும்.

**கனம் சபாநாயகர் :** சட்டப்படி நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. சி. ம. அம்பிகாபதி :** 'சுவாம்ப்' புறம்போக்கு என்ற அனம் புறம்போக்கு நிலங்களை அடமானம் செய்யும்பொழுது, அவர்களிடமிருந்து சில தொகை வசூலிக்கப்படுகிறது. அந்தத்

தொகை வசூலிக்கப்படாத வகையில், இனமாக அலைன்மெண்டு செய்துகொடுக்க அரசாங்கம் முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இதுபற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. அ. ராகவ ரெட்டி :** ஏரி உள்வாய் புறம்போக்கு நிலங்களை ஏழைகள் சாகுபடி செய்ய முதலில் அனுமதித்துவிட்டு, ஜமாபந்தி காலத்தில் அவர்களிடமிருந்து ஏராளமான அபராதம் வசூலிக்கப் படுவதால், அவர்கள் அதை கட்டமுடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, இதை முதலிலேயே தடுக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஏரி உள்வாயில், நீர்ப்பிடிப்புக்கு உள்ளே விவசாயம் செய்வதற்கு அரசாங்க அதிகாரிகள் யாருமே அனுமதி கொடுக்க மாட்டார்கள். ஆனால், நிலம் உள்ளவர்களும் சரி, நிலம் இல்லாதவர்களும் சரி, தங்களுக்கு இருக்கக்கூடிய தைரியத்திலே அங்கே போய் விவசாயம் செய்துவிடுவார்கள். அதற்குப் பிறகு அதிகமான தீர்வை கட்ட வேண்டுமென்றால் அவர்கள் கட்டித்தான் ஆகவேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையையும் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கக்கூடாது. அதோடு மட்டுமல்லாமல் எவ்வளவு விரைவிலே அவர்களை வெளியேற்ற வேண்டுமோ அதற்கு வேண்டிய முயற்சியும் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஒவ்வொரு பகுதியிலும் ஆக்கிரமிக்கப் பட்ட தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், ஆக்கிரமிப்பு இல்லாமல் இருக்கக்கூடிய சில நிலங்கள் எல்லாவற்றையுமே சேர்த்து ஒரு லிஸ்டு எடுத்து, தனிப்பட்டவர்களுக்கு சிரமம் இல்லாமல் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கு ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய அரசாங்கம் உத்தரவு போடுவார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அம்மாதிரி உத்தேசம் இப்பொழுது இல்லை.

*Cement (Adulteration)*

*403 Q.—Sri A. K. SUBBIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Works be pleased to state the steps taken to prevent adultration of cement and to ensure proper distribution of cement to the consumers?

THE HON. SRI V. RAMAIAH : No specific case of adulteration by the dealers (Licensed stockists) has been brought to the notice of the Government. To ensure proper and equitable distribution of cement, the Government have imposed cent per cent control and have also issued orders fixing percentage for distribution of the quantity allottd to the State to the public, Government departments and others.



**திரு. கே. மதியழகன் :** சிமெண்டில் மணலைக் கலப்பதாகவும், அந்த மணலை அரைப்பதற்கு உபயோகப்படுத்தப்படுகிற இயந்திரத்தினால் அதிகமாக மின்சாரம் செலவழிவதாகவும் நம்முடைய மாநிலத்தில் இருக்கிற புகார்கள் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** என்னுடைய 'மெயின்' பதிலிலேயே அரசாங்கத்தின் கவனத்திற்கு இதுபோன்ற கம்ப்ளைண்டு வரவில்லை என்று சொன்னேன். இதே கேள்வி ஒரு சில மாதங்களுக்கு முன்பு இந்த சட்ட மன்றத்தில் வந்தது. அப்பொழுது சில உப கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடிய முறையில் நான் குறிப்பிட்டதை இந்த நோட்டிலேயே எழுதிவைத்திருக்கிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களோ, மற்றவர்களோ இதிலே தவறுதல் நடக்கக்கூடியதை அதிகாரிகளுடைய பார்வைக்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற புகார்கள் சொல்லக்கூடிய காரணத்தினால், என்னுடைய பார்வைக்கு நேரடியாகக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் திட்டவட்டமாக நான் சொல்லியிருக்கிறேன். நான் இப்பொழுது சொல்ல விரும்புவது எல்லாம் இதுபோல ஒரு விதமான புகாரும் எனக்கு வரவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் ஹைபாதெடிகல் கேள்வியை போடுகிறார் என்று சந்தேகம் இருக்கிறது. உண்மையிலேயே ஹைபாதெடிகல் கேள்வியில்லாமல் அவருடைய கவனத்திற்கு, பார்வைக்கு இது போல ஒரு கம்ப்ளைண்டு வந்திருந்து, அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. வி. எஸ். எல். மணி :** சிமெண்டு விநியோக முறையிலே பெர்மிட் முறையில் விநியோகம் வந்த பிறகுதான், விலைவாசி அதிகமாக ஏறிக் கொண்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். பெர்மிட் முறைக்கு முன்னால் இந்த விலை கிடையாது. இன்றைக்கு ஒரு மூட்டை ரூ. 16-க்கு விற்கிறது.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் நேரிடையாகக் கேள்வியைக் கேட்க வேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** பெர்மிட் முறையை எடுத்துவிடுவதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ? அம்மாதிரி எடுத்துவிட்டால், பெர்மிட் ராஜ் என்ற பெயரையும் தவிர்க்கலாம் என அரசினர் அறிவார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினருக்கு மனக்கஷ்டம் போல் இருக்கிறது. சிமெண்டில் ஏராளமான பற்றாக்குறை இருக்கிறது. அது ஒரு சிலருக்கு மட்டும் கிடைப்பதற்குப் பதிலாக, பெர்மிட் கொடுக்கக்கூடிய காரணத்தினால், சிறிய கட்டிடங்கள் கட்டுவதற்காக சாதாரண நடுத்தர மக்களுக்கும், ஏழைகளுக்கும் சிமெண்டு கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. பெர்மிட் முறையை எடுத்துவிட்டால், நடுத்தர மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் சிமெண்டு கிடைக்காமல் போய்விடும். இந்த

முறையில் அரசாங்கத்திற்குக் கொஞ்சம் கஷ்டம் இருந்தாலும்கூட சாதாரண மக்களுக்கு சிமெண்டு கிடைக்கவேண்டுமென்ற காரணத்தினால், இதை நடைமுறையில் வைத்திருக்கிறோம். நான் பல ஜில்லாக்களிலே சென்று அதிகாரிகள் மத்தியிலேயும், பொது மக்கள் மத்தியிலேயும் பேசும்பொழுது, பர்மிட் முறையை எடுத்து விடவேண்டுமென்று யாரும் சொல்லி நான் கேட்டதில்லை.

**திரு. கே. மதியழகன்:** கடந்த ஆண்டில் 1962-ல் ஒதுக்கப்பட்ட சிமெண்டில் சர்க்கார் உபயோகத்திற்காக எத்தனை சத விகிதம் ஒதுக்கப்பட்டது? பொது மக்கள் உபயோகத்திற்காக எத்தனை சத விகிதம் ஒதுக்கப்பட்டது?

**கனம் திரு. வெ. ராமையா:** தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. எஸ். மாதவன்:** அண்மையில் ஸ்டேட்டுக்கு உள்ள சிமெண்டு அலாட்மெண்டை மத்திய சர்க்கார் கூட்டியிருக்கிறார்களா? அப்படிக் கூட்டியிருந்தால், பெர்மிட் ஸிஸ்டத்தை கொஞ்சம் லிபரலைஸ் செய்ய சர்க்கார் முன்வருவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** நமது மாகாணத்திற்கு எவ்வளவு சிமெண்டு தேவையோ அந்தத் தேவையை கணக்குப் போட்டு, மத்திய சர்க்காருடைய பார்வைக்குக் கொண்டுவருகிறோம். அவர்கள் மொத்தமாக நாட்டில் எவ்வளவு சிமெண்டு இருக்கிறதோ அதற்குத் தகுந்த முறையில் நமக்கு அலாட் செய்கிறார்கள். அவர்கள் கொடுப்பது நமக்குப்போதாது. ஆகையால் நமக்கு அதிகமாக சிமெண்டு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். சில சந்தர்ப்பங்களில் ஸ்பெஷல் கோடாவும் கொடுக்கிறார்கள். அப்படி வரும்பொழுது அந்த கோடா பொதுமக்கள் உபயோகத்திற்கும், அரசாங்க வேலைகளுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது.

**திரு. ம. கமலநாதன்:** பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு அளவு சிமெண்டு ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில், ஒவ்வொரு மாதத்திற்கும் உள்ள கோடா அந்த மாதத்தில் கொடுக்கப்படுவதில்லை. மூன்று கோடாவிற்கான பணத்தை செலுத்திய பிறகும், இன்னும் சிமெண்டு வந்து சேராத நிலைமை இருக்கிறது என்றால், எங்கே தாமதம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** பஞ்சாயத்து யூனியன் வேலைகளுக்கு மட்டுமில்லை, மிக அத்தியாவசியமான வேலைகளுக்கும்கூட, பெரிய பெரிய திட்டங்களுக்கும்கூட, குறிப்பாக குந்தா மின்சாரத் திட்டம், பரம்பிகுளம் ஆளியாறு திட்டம், ஆகிய வேலைகளுக்குக்கூட எந்தத் தேதியில் எந்த மாதத்தில் சிமெண்டு வரும் என்று தெரியாமல் கூட இருக்க வேண்டிய கஷ்டம் இருக்கிறது. சிமெண்டுக்கு நாம் கோடா கொடுக்கிறோம். சிமெண்டு மில்கள் அதை உற்பத்தி செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஒரு மாதத்தில் வந்துவிடும் என்ற நிலை இல்லை. அந்த குவார்ட்டருக்குள் வந்துவிடும் என்பதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய நிலை.



**திரு. எம். தண்டாயுதபாணி:** சாதாரண ஏழை, எளியவர்களுக்கு தாசில்தார், ஆர்.டி.ஓ. அவர்கள் பெர்மிட் கொடுத்தும்கூட, 3 மாதம், 4 மாதம் வரை அவர்களுக்கு சிமெண்டு கிடைப்பதில்லை, ஆனால் பெர்மிட் கிடைத்திருக்கிறது. 3 மாத காலத்திற்குள் அவர்களுக்குக் கட்டாயமாக சிமெண்டு கிடைக்க வழிவகை செய்யப்படுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** 3 மாதம், 4 மாதம் காத்திருக்க வேண்டிய நிலை இருக்காது. காரணம், சிமெண்டு வருவதற்குக் கொஞ்சம் முன்கூட்டியே அவர்கள் பெர்மிட் கொடுக்கிறார்கள். ஆனால், மனுக்கொடுத்த தேதியிலிருந்து 3 மாதம், 4 மாதம் கூட ஆகலாம். கோட்டா வந்த பிறகு பெர்மிட் கொடுக்கக்கூடிய காரணத்தினால் இந்தக் கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சமயம் அவர்களுடைய பகுதியில் இம்மாதிரி விசேஷமான நிலை இருக்கிறதோ என்பது தெரியவில்லை

**திரு. ஜே. மாதா கவுடர்:** சர்க்கார் துறையிலே வேண்டிய சிமெண்டை உற்பத்தி செய்வதற்குத் தனியாக ஒரு சிமெண்டுத் தொழிற்சாலை ஏற்படுத்துவதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இருந்ததே? அது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமையா:** நான் பதில் சொல்லுவதற்கு முன்கூட்டியே தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு அந்தக் கேள்வியைப் போட்டால் அவர்கள் பதில் சொல்லுவார்கள்.

**திரு. காஞ்சி மணிமொழியார்:** சாதாரண மக்களுக்கு சிமெண்டு கிடைக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான் இந்தப் பெர்மிட் முறை இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், சொந்தமாக வீடு கட்டிக்கொள்ளும் சாதாரண மக்களுக்கு சிமெண்டு கிடைப்பதில் மிகவும் கஷ்டமும், தாமதமும் ஏற்படுகிறது. அதே நேரத்தில் கண்டிராக்டர்களுக்கு மிக அதிகமாக சிமெண்டு கிடைத்து, பிளாக் மார்கெட்டில் 400, 500 மூட்டைகளை ஒரே சமயத்தில் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமையா:** இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால், கனம் அங்கத்தினர் இம்மாதிரி தவறுதல்கள் நடக்கக்கூடிய இடங்களை என்னுடைய பார்வைக்குக் கொண்டுவந்தால், அதில் விசேஷ கவனம் செலுத்தலாம். கோட்டா பெர்மிட் சாதாரண மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய முக்கிய விருப்பம். ஆனால், சாதாரண மக்கள்கூட, கட்டிடங்கள் கட்டுவதற்குப் பதிலாக, பெர்மிட்டுக்கு எழுதிப்போட்டு, அதை வாங்கி மற்றவர்களுக்கு விற்பது நமக்குத் தெரியும். இதை தடை செய்வதற்குப் பொது மக்களும் கொஞ்சம் அதிகக் கவனம் செலுத்தினால், தவறான விநியோகம் நின்றுவிடும்.

[28th March 1963

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** இப்பொழுது சிமெண்ட் கிடைக்காத நிலைமை இருக்கிறது. தாசில்தாரிடம் போய் எழுதிக் கொடுத்து, பெர்மிட் வாங்குகிறோம். ஆனால் ஒவ்வொரு மாதமும் ஸ்டாக் குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு என்ன காரணம்? இந்தப் பற்றாக்குறையை நீக்க, சர்க்காரே ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவுவதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் எல்லாம் தொழிற்சாலை ஆரம்பித்து விட முடியாது. பொதுவான கொள்கை அடிப்படையில்தான் தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். இப்பொழுது பற்றாக்குறை இருப்பது உண்மை. புதுத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சென்ற ஆறு அல்லது ஒன்பது மாதங்களாக எடுத்துக் கொண்ட முயற்சியிலே, பல்வேறு நிலையில் இருக்கக்கூடிய அரசாங்கக் கட்டிடங்களுக்கு, சிமெண்ட் உபயோகிப்பதற்குப் பதிலாக, சுண்ணாம்பு உபயோகிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். அந்த அடிப்படையிலே பஞ்சாயத்து யூனியன்களில் நடக்கக்கூடிய வேலைகளுக்கெல்லாம், சிமெண்டுக்குப் பதிலாக சுண்ணாம்பு உபயோகிக்க முயற்சி எடுக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், சுண்ணாம்பு உற்பத்தி செய்யக் கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்பாடு செய்வதற்கு, அந்த வட்டார வளர்ச்சியிலுள்ள தொழில் விஸ்தரிப்பு அதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார். அந்த முறையிலே பஞ்சாயத்து யூனியன்களிலே சுண்ணாம்பு உற்பத்தி அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, சென்னை நகரத்தில் ஹவுஸிங் போர்டார் சிமெண்ட் உபயோகிப்பதற்குப் பதிலாக, சுண்ணாம்பு உபயோகிக்க தொடங்கி விட்டார்கள். அதைப் போல், கோயம்புத்தூர் ஜில்லாவிலே சுண்ணாம்பிலே ஒரு காலனியே கட்டியிருக்கிறார்கள். நான் சம்பந்தப்பட்ட என்ஜினியர்களிடம் பேசின பிறகு, இப்பொழுது ஒவ்வொரு என்ஜினியருடைய முயற்சியும், சிமெண்டுக்குப் பதிலாக, சுண்ணாம்பு உபயோகிப்பதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனால், இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால், பொது மக்கள் சுண்ணாம்பை விரும்பவில்லை. சிமெண்டை உபயோகித்தால் தான் நல்ல கட்டிடம் வரும் என்று நினைக்கிறார்கள். மற்றொரு நிலையில் இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, கிராம வாசிகள் டாக்டர் கொடுக்கும் மருந்தைச் சாப்பிடுவது கிடையாது. ஊசி போட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

MR. SPEAKER: The Hon. Minister seems to be making a long speech.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** சிமெண்டைக் குறைவாக உபயோகிப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ, அதைச் சர்க்கார் எடுத்து வருகிறார்கள்.

**திரு. ஆ. தங்கவேலு:** 10 மூட்டைகள் வரை சிமெண்ட் தேவைப் பட்டால், கர்ணத்தின் சர்டிபிகேட் மீது கொடுக்கப்பட்டு வருகிறது. மேற்கொண்டு ஒன்றிரண்டு மூட்டைகள் தேவைப்



28th March 1963]

பட்டால்கூட, பிளான் போட்டு, எஸ்டிமேட் தயார் செய்து அனுப்பவேண்டியிருக்கிறது. அவ்வாறு பிளான் போடுபவர்களையும், எஸ்டிமேட் தயாரிப்பவர்களையும் தேடிச் சென்று, கஷ்டப்பட வேண்டியிருப்பதால், 25 மூட்டைகள்வரை கர்ணம் அல்லது மணியக்காரர் செர்டிபிகேட்டின் மீது கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** மாற்றி அமைக்கத் தேவையில்லை. இப்பொழுது இருக்கக் கூடிய முறைதான் நல்லது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். வெளி இடங்களிலே போய்ப் பார்க்கும்பொழுது, இந்த 10 மூட்டைகளுக்குக் கூட பிளான் இருந்தால் நல்லது என்று சொல்லுகிறார்கள். அதையும் பரிசீலனை செய்ய ஆசைப்படுகிறேன்.

**திரு. ஆ. துரை அரசன்:** வட்டாரங்களில் சாதாரணமாக மனுப்போட்டவர்களுக்கு உடனடியாகக் கிடைக்காமலும், செல்வாக்கு உடையவர்களுக்கு சீக்கிரத்தில் கிடைத்து விடுவதாகவும் புகார் இருக்கிறது. ஆகவே வரிசை நம்பர் பிரகாரம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** அந்தப் புகார் இதில் மட்டுமில்லை. எல்லாவற்றிலும் இருக்கிறது. கிடைப்பவர்கள் எல்லாம் அந்தஸ்து உடையவர்கள் என்று நினைக்கிறார்கள். அந்த நினைப்புத் தவறு. நானே பல இடங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். அங்கு அனுஷ்டிக்கக்கூடிய முறை என்னவென்றால் எல்லா மனுக்களையும் வரிசைக் கிரமமாக வைத்து, ஒவ்வொரு மனுவையும் பரிசீலனை செய்து, வரிசைக் கிரமத்தில் முடிவு எடுக்கிறார்கள்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** பொதுவாக கண்ட்ரோலின் நோக்கம் சரிதான். ஆனால் நடைமுறையில் செயல்படும்போது, நோக்கத்திற்கு நேர் மாறாக நடப்பதை உணர்கிறோம்.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினருடைய கேள்வி என்ன?

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** இந்த சிமெண்ட் கண்ட்ரோலை 6 மாதம் தள்ளி வைத்து, இருக்கிற நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இந்த உபகேள்வி, சாதாரண மனுக்களையும் வரிசைக் கிரமமாக வைத்து, ஒவ்வொரு மனுவையும் அவர்களுக்கும் தெரியும். நான் அவருடைய தொகுதியிலுள்ள தாலூகாவிற்குப் போய் இருந்தேன். அவர்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது கனம் அங்கத்தினர் இந்த முறை நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்பொழுது சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நம்முடைய மாநிலத்தின் திட்ட வேலைகளுக்காக அதிக சிமெண்டை மத்திய சர்க்காரிடமிருந்து பெறுவதற்கு பொதுப் பணித் துறை அமைச்சர் நேரடியாகத்

[28th March 1963

தொடர்பு கொள்ள வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் முடிவு செய்ததற்கிணங்க, அவர்கள் தொடர்பு கொண்ட சந்தர்ப்பங்கள் எத்தனை? அதனுல் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைத்த அதிகப் படியான சிமெண்ட் எவ்வளவு?

*கனம் திரு. வெ. ராமைய்யா:* தொடர்பு கொள்வது என்றுல் எப்படி? நேராகப் போய் வருவதிலும் கஷ்டமிருக்கிறது. இருந் தாலும் சந்தர்ப்பம் ஏற்படும்பொழுதெல்லாம், வலியுறுத்தி மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதி வருகிறேம். அவர்களும் தகுந்த முறையில் கஷ்டங்களை உணர்ந்து, தேவைக்குத் தகுந்தபடி கொடுத்துக்கொண்டு வருகிறுர்கள்.

*Joint patta holders (Loans)*

* 404 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Joint patta holders are experiencing difficulties in getting loans; and

(*b*) if so, the steps taken by the Government to redress their grievances?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) The matter is under the consideration of the Government in consultation with the Board of Revenue.

*திரு. எஸ் மாதவன்:* 11—2—1958-ல், இந்த மன்றத்திலே அப் பொழுது இருந்த ரெவென்யூ அமைச்சர் அவர்கள், இந்தக் கூட்டுப் பட்டாதார்களுக்குக் கடன் கொடுக்க வசதி செய்து, 1957-லிருந்து, 2 ஆண்டுகளுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறேம் என்று சொன்னுர்கள். அந்த உத்தரவை நீடிக்க அரசாங்கம் முன்வருமா?

*கனம் திரு. வெ. ராமைய்யா:* அந்த உத்தரவினுல் இருக்கக் கூடிய பலன் இப்பொழுது தொடர்ந்திருக்கிறது.

*திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர்:* கீழ் பவானிப் பிர தேசத்தில் இந்தக் கூட்டுப்பட்டா முறையில் கிஸ்தி வசூல் செய்வது விவசாயிகளுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுக்கிறது. இதை மாற்றி அமைத்து காலை நம்பர்கள் அடிப்படையில் கிஸ்தி வசூல் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

*கனம் திரு. வெ. ராமைய்யா:* கூட்டுப் பட்டா முறையில் இருக் கக்கூடியவர்கள் தனிப்பட்டா வேண்டுமென்று மனுக் கொடுத்தால் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. சென்ற வருஷம் பட்ஜெட் விவாதத்தின்போது சொன்ன கருத்தை ஒட்டி, நான் பல ஜில்லாக் களுக்குச் சென்று பார்த்தேன். அப்படிப் பார்க்கும்பொழுது, பொதுவான விதிகளின்படி போடுவது சரியாக இருக்காது என்று தெரிந்தது. இருக்கக் கூடிய நிலைமையைப் பரிசீலனை செய்து,



28th March 1963]

கூட்டுப் பட்டாவிலிருந்து பிரிந்து போகவேண்டும் என்று சொன்னுல், அந்த விஷயத்தில் அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்ற நிலைமை இப்பொழுது இருக்கிறது.

*திரு. சி. பொன்னுசாமி:* கூட்டுப் பட்டாக்கள் கொடுப்பதற்கு என்ன காரணம்? சர்க்காரே முன் வந்து தனிப்பட்டா கொடுக்க மாவட்டத் தலைவர்களுக்கு உத்தரவு போட முன் வருமா?

*கனம் திரு. வெ. ராமைய்யா:* நான் முன்பு ஒரு உப கேள்விக்குப் பதில் சொன்னேன். இதிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. பாத்திய உரிமைகள் பல பேருக்குப் பல வகைகளில் இருக்கின்றன. எனவே, சென்னையிலிருந்து ஒரு உத்தரவைப் போட்டு, அதன்படி கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை. கூட்டுப் பட்டாவிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்று சொல்லு கிறவர்கள் மனுக் கொடுத்தால், அதைத் தீவிரமாக பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் இப்பொழுது இருக்கக்கூடிய முடிவு.

*போக்குவரத்து நெருக்கடி (தாம்பரம்)*

* 405 *கேள்வி.*—திரு. முனு. ஆதி: கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

கனம் சபாநாயகர் அவர்களே, இன்று விவாதிக்க இருக்கிற இந்த மானிய கோரிக்கை சென்னை ராஜ்ய வருவாயின் முதுகெலும்பு போன்றது. இதற்கு முன்பெல்லாம் நம்முடைய ராஜ்யத்தின் வருவாய் பெருவாரியாக நில வரி மூலமாகத்தான் வந்துகொண்டிருந்தது. ஆனால் இன்றைக்கு 25 கோடி ரூபாய்க்கு மேல் நம்முடைய ராஜ்யத்தினுடைய வருவாய் விற்பனை வரியின் மூல



28th March 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மாக வந்துக்கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் சாதாரணமாக விவசாய மாநிலமாக இருந்து வந்த நம்முடைய ராஜ்யம் வேகமாகத் தொழில் துறையிலும், வர்த்தகத் துறையிலும் முன்னேற்றம் அடைந்து வருவதால், அதனுடைய பிரதிபலிப்பாக வருவாய் இந்தத் துறையில் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறது. இது சம்பந்தமாக சில புள்ளிவிவரங்களை நான் கொடுக்க விரும்புகிறேன். புதிதாக 1959-ம் வருஷத்தில் சென்னை ராஜ்ய ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் சட்டத்தை நாம் திருத்தி அமைத்தோம். அந்தத் திருத்தி அமைத்த சட்டத்தின் கீழ், 1959/60-ல் நமக்குக் கிடைத்த வருமானம் 12 கோடி 82 லட்ச ரூபாய். 1961/62-ல் இந்த வருவாய் 15 கோடி 79 லட்ச ரூபாயாக உயர்ந்தது. 1962/63-ம் வருஷத்தில் திருத்திய மதிப்பீட்டின்படி 17 கோடி 59 லட்ச ரூபாய் வருமென்று எதிர் பார்க்கிறோம். 1963/64-ம் வருஷத்தில் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் மூலமாக கிடைக்குமென்று நாம் மதிப்பிட்டிருப்பது 19 கோடி 70 லட்ச ரூபாய். எந்த விதமான மாறுதலும் செய்யாமல்—வரி வீதத்தில் எந்த விதமான உயர்வும் செய்யாமல்—12 கோடி ரூபாயாக இருந்த வருவாய் நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்குள்ளாக 19 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கிற வர்த்தகப் பெருக்கத்தின் காரணமாகத் தான் இருக்க முடியும்.

அதே போல, மத்திய விற்பனை வரியை எடுத்துக்கொண்டாலும், நம்முடைய வருவாய் கணிசமான முறையில் உயர்ந்திருக்கிறது. மத்திய விற்பனை வரி என்பது நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற பண்டங்களை வேறு ராஜ்யங்களுக்கு விற்பனை செய்தால், இந்த ராஜ்யத்திலிருந்து மற்ற ராஜ்யத்திற்கு விற்பனை செய்கிற மதிப்பின் பேரில் ஒரு சதவீதம் வசூலிப்பது என்று இந்த ஆண்டு வரையில் நடந்து வந்திருக்கிறது. ஒரு சதவீதம் என்ற கணக்குப் படி பார்த்தால் எந்த அளவுக்கு வேறு ராஜ்யங்களுக்கு நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தி ஆகக் கூடிய பண்டங்கள் விற்கப்பட்டிருக்கின்றன என்று கண்டுபிடிக்க முடியும். அந்த முறையில் பார்த்தால் 1959-60-ம் ஆண்டில் 1 கோடியே 88 லட்சம் ரூபாய் நமக்கு மத்திய விற்பனை வரியாகக் கிடைத்தது. அதாவது சற்று ஏறக் குறைய 188 கோடி ரூபாய் பெருமானமுள்ள சரக்குகள் நம்முடைய நாஜ்யத்திலிருந்து வேறு ராஜ்யங்களுக்கு விற்றிருந்தால் தான் நமக்கு 1 கோடியே 88 லட்சம் ரூபாய் இந்த விதமாக வருவாய் கிடைத்திருக்கும். அந்தத் தொகை 1961-62-ம் வருஷத்தில் 2 கோடியே 70 லட்சம் ரூபாயாக உயர்ந்தது. 1962-63-ம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டின்படி 3 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதனால் நடப்பு ஆண்டில் சற்று ஏறக் குறைய 300 கோடி ரூபாய் பெருமானமுள்ள பண்டங்கள் நம் ராஜ்யத்திலிருந்து வேறு ராஜ்யங்களுக்கு விற்றிருப்பதால் தான் 3 கோடி ரூபாய் இதன் மூலம் நமக்கு வருமானம் வந்தது. நான்கு ஆண்டுகளில் சற்று ஏறக் குறைய 120 கோடி ரூபாய் அளவுக்கு நம் ராஜ்யத்திலிருந்து வேறு ராஜ்யங்களுக்கு பொருள்களை விற்பது தமிழ் நாட்டில் உயர்ந்திருப்பது தான் இந்த வருவாய்க்குக் காரணம். அதே போல பட்ஜெட் மதிப்பீட்டின்படி 1963-64-ம் ஆண்டுக்கு மேற்கொண்டு 10 சதவீதம் உயரும் என்று எதிர்பார்க்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th March 1963

கிறோம். வியாபாரம் இன்னும் 10 சதவீதம் உயர்ந்து 3 கோடி ரூபாய் வருமானம் இருப்பது 3 கோடியே 30 லட்சம் ரூபாய் கிடைக்கும் நிலைமை ஏற்படும்.

மோட்டார் எண்ணெயின் மீது விதிக்கிற வரியும் அதே விதமாகத் தான்—விற்பனை வரி, எக்ஸைஸ் ட்யூடி அல்ல; மத்திய சர்க்கார் போடும் வரியை நீக்கி ராஜ்ய சர்க்கார் வரியைப் பற்றி மாத்திரம் சொல்லுகிறேன்—அந்த வரியும் நமக்குக் கணிசமான முறையில் உயர்ந்திருக்கிறது. 1959-60-ம் ஆண்டில் 2 கோடியே 4 லட்சம் ரூபாயாக இருந்தது நடப்பு ஆண்டில் திருத்திய மதிப்பீட்டின்படி 3 கோடியே 10 லட்சமாக இருக்கும். அது வருகிற ஆண்டில் 3 கோடியே 25 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே போல எண்டெர்டெயின்மெண்ட் டாக்ஸை எடுத்துக் கொள்வோமானால்—தமாஷா வரி—1959-60-ம் ஆண்டில் 1 கோடியே 82 லட்சம் ரூபாயாக இருந்தது, 1962-63-ம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின்படி 2 கோடியே 64 லட்சம் ரூபாயாக உயரும். 1963-64-ம் ஆண்டில் அது 2 கோடியே 84 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தத் தொகை பூராவும் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடப்படும். 90 சதவிகிதம் இந்த வருவாயை ராஜ்ய சர்க்கார் வைத்துக்கொள்வதில்லை. இதை ராஜ்ய சர்க்கார் வசூல் செய்து அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுத்து விடுகிறது.

சென்ற வருஷத்தில் புதிதாக ஒரு வரி போட்டோம் எலெக்ட்ரிஸிட்டி (டாக்ஸேஷன் ஆன் கன்ஸம்ப்ஷன்) ஆக்ட் ஆஃப் 1962 பிரகாரம் மின்சாரம் உபயோகிக்கிறவர்களுக்கு அதனுடைய கன்ஸம்ப்ஷன் மீது ஒரு வரி விதிக்கப்பட்டது. அந்த வரியின் மூலமாக நடப்பு ஆண்டிலே 1 கோடியே 51 லட்சம் ரூபாய் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு வருவாய் பெற்றுத் தருகிற இந்த ஸ்தாபனத்திலே செலவுகள் மிகக் குறைவு என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 25 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்கிற இந்த நிர்வாகத்தின் செலவு 1963-64-ம் ஆண்டுக்கு நம் மதிப்பீடு— நாம் எதிர்பார்ப்பது—69 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் தான். இதில் ஸ்தாபனம் வெகு சிக்கனமாக வரி வசூல் செய்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். 1959-60-ம் ஆண்டிலிருந்து 1963-64-ம் ஆண்டு வரையில் கணக்குப் பார்த்தாலும் கூட, பே கமிஷன் சிபாரிசு வந்து, புதிதாக அதிகமான பஞ்சப்படி உயர்வு கொடுத்து, இந்த இரண்டையும் செய்த பிறகு கூட 51 லட்சம் ரூபாயாக இருந்தது 69 லட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இது சம்பந்தமாக விவாதம் நடக்கிற போது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ராஜ்யத்தில் இருக்கிற விற்பனை வரியைப் பரிசீலனைச் செய்ய ஒரு நிபுணர் மூலமாகச் செய்ய வேண்டுமென்று சர்க்கார் எண்ணம் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். ஆனால் இப்போது இருக்கிற நெருக்கடி நிலைமையை



28th March 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

உத்தேசித்து இருக்கின்ற வரி விதிப்பதில் எந்த விதமான குழப்பங்களும் ஏற்படுத்தக்கூடாது என்ற காரணத்திற்காக அதை நாங்கள் ஒத்திப்போட்டுவிட்டோம்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

அந்த விதமான பரிசீலனை நெருக்கடி தீர்ந்த பிறகுதான் செய்யப்படும்.

இந்த இலாகா நிர்வாகத்தில் முக்கியமான ஒரு கொள்கையை விளக்க விரும்புகிறேன். சர்க்காருக்கு வரி வசூல் அதிகமாகச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் வரி விதிப்பை நாங்கள் பார்ப்பதில்லை. எந்த முறையில் வரி விதிப்பை மாற்றி அமைத்தால் ராஜ்யத்தில் இருக்கிற தொழில், வர்த்தகம் வேகமாக வளரும் என்ற அடிப்படையில் தான் நாங்கள் வரி விதிப்புக் கொள்கையை இதில் அமல் நடத்துகின்றோம். இதற்குப் பல சான்றுகளை நான் கூற முடியும். உதாரணமாக எலெக்டரிக்கல் சாமான்களுக்கு நம்முடைய ராஜ்யத்தில் 7 சதவீதம் வரி விதித்திருந்தோம். அந்த எலெக்ட்ரிக்கல் சாமான்களை மெட்ராஸ் ஸ்டேட் எலெக்ட்ரிஸிட்டி போர்டு வாங்குகிற போதும், அல்லது வேறு எலெக்ட்ரிக்கல் அண்டர்டேக்கிங்ஸ் வாங்குகிறபோதும், மற்ற ராஜ்யங்களிலிருந்து வாங்கினால் அவர்கள் மத்திய விற்பனை வரி 1 சதவீதம் கொடுத்து அதை வாங்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது. ஆகவே, நம் ராஜ்யத்தில் உற்பத்தி ஆகிற எலெக்ட்ரிக்கல் கூட்ஸ் நம் ராஜ்யத்தில் விற்பனை ஆகவில்லை. மற்ற ராஜ்யங்களிலிருந்து செண்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் கொடுத்து வாங்கும் நிலைமை ஏற்பட்டது. அதைப் பற்றி நம்முடைய ராஜ்ய சர்க்கார் உடனடியாகப் பரிசீலனை செய்து நம் ராஜ்யத்தில் எலெக்ட்ரிக்கல் கூட்ஸை ஸ்டேட் எலெக்ட்ரிஸிட்டி போர்டோ அல்லது மற்ற எலெக்ட்ரிக்கல் அண்டர்டேக்கிங்ஸோ வாங்கினால், அவர்களுக்கு விற்பனை செய்தால் வரி 2 சதவீதம் என்று குறைத்து விட்டோம்.

அதே போல ஒரு வாரத்திற்கு முன்பு எண்ணெய் சம்பந்தமாக நான் தெரிவித்தேன். நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகிற எண்ணெய்யை வனஸ்பதி தயாரிக்கின்றவர்கள் அல்லது ஹோட்டல் நடத்துகிறவர்கள் வாங்காமல், மத்திய விற்பனை வரி கொடுத்து பிற மாநிலங்களிலிருந்து வாங்குகிற காரணத்தினால் 3 சதவிகிதம் இருந்ததை 2 சதவிகிதம் மல்ட்டி பாயிண்ட் என்று மாற்றி அமைத்தோம்.

எந்தெந்த சந்தர்ப்பங்களில் நம் ராஜ்ய வியாபாரம், வர்த்தகம் இவையெல்லாம், நம் ராஜ்யத்தை விட்டு வேறு ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டு விடுகிறது அல்லது அதை திருப்பி விடுகின்றன என்று நினைக்கும்போதெல்லாம் வரி வீதத்தைக் கணிசமான முறையில் மாற்றி அமைத்திருக்கிறோம். சென்ற ஆண்டில் பல விதமான சலுகைகள் இந்த விற்பனை வரி சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறோம். அவற்றுள் சிலவற்றை நான் படிக்க விரும்புகிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th March 1963

The following exemptions were given :—

Sales of bandage cloth and gauze.

Sales of pottery (articles made of baked clay and stoneware).

Sales of honey and bee wax.

Sales by the Corporation of Madras, any Municipal Council, Panchayat Union or Panchayat in the State of Madras, of compost manure manufactured by them to agriculturists and agricultural co-operative societies.

Sales of goods made by any dealer to bona fide foreign tourist.

Purchase of cotton by the Madras State Khadi and Village Industries Board.

Sales of education films and film strips.

இந்தவிதமாகப் பல விதி விலக்குகள் கொடுத்தோம். அதேபோல விற்பனை வரியிலே—வரி விதிப்பிலே—சற்று வரி வீதத்தைக் கூடக் குறைத்திருக்கிறோம்.

Tax payable on sales of spoons made of stainless steel -க்கு 6 சதவிகிதமாக இருந்ததை 2 சதவிகிதமாகக் குறைத்தோம்.

Tax on hand-made matches, hand-made paper, fibres and stocks, hand-made toys made of paper, cloth, wood, etc.

எல்லாவற்றிற்கும் 2 சதவீதமாகக் குறைத்துவிட்டோம். இந்த விதமாக எந்தெந்த சமயத்திலே வியாபாரம் பாதிக்கப் படுகிறது என்று சொன்னாலும், உடனடியாக அவ்வப்போது பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய நிவாரணங்களை அளித்து வருகிறோம். ஆகவே இந்த மான்யக் கோரிக்கையை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

SRI RAMA. ARANGANNAL : Sir, I move the following cut-motion—

"That the allotment of Rs. 75,04,700 under Demand No. III —General Sales Tax and other taxes and Duties—Administration be reduced by Rs. 100".

MR. DEPUTY SPEAKER : The Demand and the cut-motion are before the House for discussion.

* **திரு. வி. எஸ். எஸ் மணி :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த பொது விற்பனை வரி என்பது ஒரு காமதேனு என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்த பொது விற்பனை வரியானது, அமைச்சரவர்கள் சொன்னது போல், நில வருவாய்க்கு அடுத்தாற்போல அரசாங்கத்தின் வருவாய்த் துறையில் ஒரு முதுகெலும்பாக இருக்கிறது. இது நிலவருவாய்க்கு மேலாகவும் இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வருவாயானது உண்மையிலேயே, அரசாங்கத்திற்கு நல்லதொரு வருவாய்த்துறை என்றாலும், பொதுவாக இது ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் முறையில் தான் அமைந்திருக்கிறது



28th March 1963] [திரு. வி. எஸ். எஸ். மணி]

என்று சொல்ல விரும்புகிறேன். இந்த விற்பனை வரி ஏழை எளியவர்கள் வாங்கிச்சாப்பிடும் உணவுப் பண்டங்கள் மீது தான் பெரும்பாலாக இருந்து வருகிறது. இது வர்த்தகர்களைப் பாதிக்கும் முறையில் இல்லை. அமைச்சரவர்கள் இது வர்த்தகத் துறை வளர்ச்சிக்கு அறிகுறி என்று கூடச் சொன்னார்கள். அப்படி வர்த்தகத் துறை வளர்ச்சி என்று சொல்வதற்கில்லை. வர்த்தகர்கள் ஏழைகள் அல்ல, ஏழை மக்கள் தான் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே இந்த வரியை உணவுப் பொருள்கள் மீது இருப்பதை விட்டு விட்டு (எக்ஸம்ஷன்) விதிவிலக்கு கொடுத்து அதை லக்ஷரி குட்ஸ் பொருள்கள் மீது விதித்தால், நிச்சயமாக ஏழை மக்கள் பாதிக்கப் படாமல் நல்ல நிலையில் இருக்க முடியும் லக்ஷரி குட்ஸ் மீது இந்த வரியை விதித்தால், ஒரு சில வசதி படைத்த மக்கள்தான் பாதிக்கப் படுவார்கள், ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்கள். பெரும்பாலாக, விற்பனையாகும் உணவுப் பொருள்களை வாங்கிச் சாப்பிடும் மக்களில் ஏழைஎளியவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள். அவர்களைப் பாதிக்கும் முறையில் விற்பனை வரி அமைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருள் எதுவானாலும், அவைகள் எல்லாவற்றிற்கும் இந்த வரியிலிருந்து எக்ஸம்ஷன் கொடுத்து ஏழை மக்களுக்கு வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விற்பனை வரி கிராமங்களிலே உள்ள சிறு சிறு வியாபாரிகளுக்கு மிகவும் தொல்லை கொடுக்கும் முறையில் அமைந்திருக்கிறது. விற்பனை வரி வசூல் செய்யும் அதிகாரிகள் சிறு வியாபாரிகளைத் தங்கள் கணக்கு வழக்குகளை தங்கள் அலுவலகத்திற்குக் கொண்டு வருமாறு சம்மன்ஸ் அனுப்புகிறார்கள். சிறு கிராமத்தில் இருக்கும் வியாபாரிகள் தங்கள் கணக்குகளைத் தூக்கிக்கொண்டு நகரில் உள்ள அலுவலகங்கள் இருக்கும் இடத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. அது அவர்களுக்குத் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, அந்த அந்த கிராமங்களில், சம்பந்தப்பட்ட உதவி விற்பனை அதிகாரிகள் போய் ஒரு பொதுவான இடத்தில் முகாம் செய்து, வியாபாரிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்து, அந்த தணிக்கையின் பேரில் வரி விதிப்பது என்றால் அது சிறு வியாபாரிகளுக்கு சாதகமாக இருக்கும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விற்பனை வரியை எஸ்.டி. என்று S.T. பில்லில் போடுகிறார்கள். பில்லின் மொத்தக் கிரயத்தின் பேரில் இதை விதிக்கிறார்கள். ஆகவே, பில்லின் மொத்தத் தொகை என்பது "காஸ்ட் ஆப் தி ஆர்டிகிள் பிளஸ் எஸ்.டி." ஆண்டு இறுதியில் வியாபாரி கணக்கைப் பார்க்கும் போது, விற்ற பில்களின் கூட்டுத்தொகை தான் அவருடைய டர்ன்ஓவர் ஆகிறது. எனவே விதிக்கும் விற்பனை வரி, வரிக்கு வரியாகும் நிலைமையாகிறது. அதை மாற்றி, அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட விற்பனை வரி அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு, விற்பனை வரிக்கும் வரி என்ற நிலைமை இருக்கக் கூடாது என்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

இரண்டாவதாக, வரி விதிப்பானது, ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், வியாபாரிகளுடைய கணக்குகளைத் தணிக்கை செய்த பிறகு, அதன் மொத்த விற்பனைத்தொகையின் பேரில் விதிக்கப்

பட்ட வரியை மொத்தமாகக் கொடுக்கிறார்கள். ஒரு வியாபாரி ஒரு ஆண்டில் தன் வியாபாரத்தை நிறுத்திவிட்டால் அவனுக்கு வரி இருக்கக்கூடாது என்பதுதான் நியதி. ஆனால், அதிகாரிகள், முன் ஆண்டில் என்ன வரி விதிக்கப்பட்டதோ அதை வியாபாரி முன்கூட்டியே கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். "வியாபாரத்தை நிறுத்தி விட்டேன்" என்று எழுதிக் கொடுத்திருந்தாலும், அதிகாரிகள் அட்வான்ஸ் ஆக வரியைக் கட்டுங்கள்; பின்னால் அந்தப் பணத்தை ரிபண்ட் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமை அந்த வியாபாரிக்குத் தொல்லை கொடுக்கும் முறையில் இருக்கிறது.

இந்த வரி ஒரு முனைவரியாக சில பொருள்கள் மீது இருக்கிறது. பலமுனைவரியாக சில பொருள்கள் மீது இருப்பதால், அது வரிக்கு மேல் வரி போடுவதாக அமைகிறது. ஒரு கையிலிருந்து மற்றொரு கைக்கு பொருள்கள் மாறும் போது, கடைசியில் வாங்கிச்சாப்பிடும், கன்ஸ்யூமர்கள் தான் இந்த அதிக வரியைத் தாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த வரி ஒருமுனை வரியாக இருந்தால், அந்த அதிகப்படியான வரி மக்கள் மீது விழாமல் இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பொருள் மீது வரி விதித்தாலும், ஆரம்ப காலத்திலேயே ஒரு முனை வரியாக இருந்து விட்டால், அதிகாரிகளின் தொல்லை இருக்காது; நிர்வாகச் செலவும் குறையும்; பல அலுவலகங்கள் இருப்பதையும் குறைக்கலாம், அதிகாரிகளையும் குறைக்கலாம். ஆகவே (ஸிங்கிள் பாயிண்ட்) ஒரு முனை வரி என்று சொல்லக் கூடிய ஒரு பாயிண்ட்லே எல்லாப் பொருள்கள் மீதும் வரி விதித்து விட்டால் மிக்க நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஸ்டாம்ப். ட்யூடி சம்பந்தமாக, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆயிரம் ரூபாய்க்கு ஒருவர் இன்ஷூரன்ஸ் பாலிசி எடுத்துக் கொண்டால், அதன் மீது ஒரு கடன் வாங்க வேண்டுமென்றால், 1,000 ரூபாய்க்கு ரூ. 25 ஸ்டாம்பாக கொடுக்க வேண்டியிருக்கிறது.

**கனம் உதவி சபாநாயகர் :** அந்த டிமாண்ட் இப்பொழுது சபை முன் இல்லை. அதை அடுத்தாற்போல் எடுத்துக் கொள்வோம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கடைசியாக நான் சொல்லிக் கொள்
10-30 a.m. வது, ஏழை மக்கள் வாங்கிச்சாப்பிடும் உணவுப் பொருள்களுக்கு வரி விதிக்கக் கூடாது. எக்ஸெம்ஷன் கொடுக்க வேண்டும். குறிப்பாக புட் க்ரையின்ஸ் என்று வரக்கூடிய பொருள்கள் மீது, (ஸேல்ஸ் டாக்ஸ்), விற்பனை வரி இருக்கக் கூடாது என்று சொல்லிக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி இலாகா நல்ல முறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகிறது. 1959-லே வியாபாரிகள், மற்றும் பொது மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க புதிய 'ஆல் காம்ப்ரெஹென்ஸிவ்'





சட்டம் கொண்டு வரப்பட்டது. முன்பிருந்த சட்டம் திருத்தப்பட்டு, மாற்றப்பட்டு அமைக்கப்பட்டது. அது மட்டுமல்ல, 1959-க்குப் பின்னால்கூட, நடைமுறையில் இருந்த ஒரு சில கஷ்டங்களை அவ்வப்போது எடுத்துச் சொன்ன பொழுது, அமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்தபடி, அந்த அளவுக்கு வளைந்து கொடுக்கக்கூடிய முறையில், சில பொருள்களுக்கு வரியை மாற்றி அமைத்திருக்கிறார்கள். பல நல்ல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஸிங்கிள் பாய்ண்டு டாக்ஸை கூடுமானவரையில் மாற்றக்கூடாது என்று கேட்டுக் கொண்டார். இந்த புது ரெஜிம் வருவதற்கு முன்னால் கூட 1957-1962-ல் இதே மாதிரி தான் அப்பொழுது சொன்னதை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் ஸிங்கிள் பாயிண்டுக்கு மாற்றவேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னோம். அனுபவபூர்வமாக பார்க்கும்பொழுது, ஸிங்கிள் பாயிண்டுக்கு மாற்றப்பட்ட தொழில்களெல்லாம் வெளி மாகாணங்களுக்குப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. ஸிங்கில் பாயிண்டு டாக்ஸ் 6 சத விகிதம், 7 சத விகிதம் என்று போடும்பொழுது மிகவும் கஷ்டமாகிவிட்டது. ஆகையால் மறுபடியும் பழையபடி மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொண்டதின் பேரில், அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து இப்பொழுது பல பொருள்களுக்கு மீண்டும் மல்டி பாயிண்டு டாக்ஸ் கொண்டு வந்திருக்கிறார்கள். இதையெல்லாம் நன்றாக பரிசீலனை செய்து, செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நடைமுறையில் உள்ள கஷ்டங்களை நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். பல பொருள்களுக்கு இப்பொழுது மல்டி பாயிண்டு டாக்ஸ் போடப்பட்டிருக்கிறது. ஸ்லாப் லிமிட் கூட ஓரளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்பளத்துக்கு ஸிங்கில் பாயிண்டு டாக்ஸ் மிகவும் கஷ்டமாக இருந்தது, பிறகு அது மல்டி பாயிண்டு டாக்ஸாக மாற்றப்பட்டது. அந்த மாதிரி வகையில் நல்ல சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் இன்னொன்று பற்றியும் குறிப்பிட்டார்கள். நமது ராஜ்யத்தில் புதியதாக சில தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. நமது ராஜ்யத்தில் ஏற்கனவே இல்லாத புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்படும்பொழுது, ஸிங்கல் பாயிண்டு டாக்ஸ் ஓரளவுக்கு அதிகமாக இருந்தால், ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் நடத்த முடியாமல் கூட போய்விடலாம் என்று சொன்னார். அவ்வப்பொழுது அரசாங்கம் இதை நன்றாகப் பரிசீலனை செய்து, மல்டி பாயிண்டு டாக்ஸ் போடுவதோ, அல்லது எந்த வகையில் டாக்ஸை குறைக்கவேண்டுமோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக, கொள்கை அளவிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போனதடவை கூட இது சம்பந்தமாக பிரஸ்தாபித்திருக்கிறேன். அடிஷனல் எக்ஸைஸ் டியூடியில் நமக்கு சென்டிரல் கவர்ன்மெண்டு பங்குத் தொகை கொடுக்கும்பொழுது, மொத்த அளவில் கணக்குப் பார்த்தால், நமக்குக் கிடைக்கவேண்டிய வருமானம் ஓரளவுக்கு நஷ்டமாகிறது. 1957-வது வருஷத்திய புள்ளிவிவரத்தை வைத்து, அதை ஸ்டாடிஸ்டிக்காக வைத்து, அந்த

[திரு. வை. சங்கரன்] [28th March 1963

அளவுக்கு காரண்டி செய்யப்படுகிறது ரூ. 2 கோடி 80 லட்சம் அல்லது 83 லட்சம் என்று நினைக்கிறேன். அந்த அளவுக்கு காரண்டி செய்யப்பட்டு, அதற்கு மேலே ஸர்பிளஸிலே 9 பெர்சண்ட் அலோகேட் செய்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளிவிவரப்படி இப்பொழுது விற்பனை வரி 19 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. நம்முடைய நிர்வாகத்தினுள்ள விற்பனை வரி 1957-லிருந்ததைப் போல் இப்பொழுது இரண்டு மடங்காக அதிகரித்திருக்கிறது. செண்டு பெர்செண்ட் அதிகரித்திருக்கிறது. மத்திய சர்க்கார் வசூல் பண்ணி நமக்குக் கொடுக்கிற அடிஷனல் எக்ஸை டியூடி தொகை 1957-க்கு மேல் 10 சத விகிதம், 15 சத விகிதம் தான் கூடியிருக்கிறது. அடிஷனல் எக்ஸைஸ் டியூடியாக மாற்றப்பட்டதால் நமக்கு ஒன்றுக்கு இரண்டு மடங்காக கிடைக்கக்கூடிய வருவாய், இன்று 10 சத விகிதம், 20 சத விகிதம் தான் கூட கிடைக்கிறது. அதனால் நமக்கு கணிசமான தொகை, ஒரு சில கோடி ரூபாய் வருமானம் குறைந்து விடுகிறது. அடிஷனல் எக்ஸைஸ் டியூடியை மத்திய சர்க்காரே வசூல் செய்துகொள்ளுகிறார்கள். நாம் வசூல் செய்ய வேண்டிய சிரமம் இல்லை. அவ்வளவு தான். ஆனால் பொதுவாக அதனால் கணிசமான அளவுக்கு நாம் வருமானத்தை இழக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி போன தடவையும் சொல்லியிருக்கிறேன். மற்ற ராஜ்யங்களும் இதேமாதிரி ரெப்ரெஸெண்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி நன்றாக பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மத்திய சர்க்கார் இப்பொழுது ஆயில் எக்ஸ்பெல்லர் எண்ணைக்கு எக்ஸைஸ் டியூடியை எடுக்கப்போவதாகத் தெரிகிறது. அப்படியிருக்கக்கூடிய நிலைமையில், அப்படி எடுத்துவிட்டால், மில் எண்ணை விலை குறைந்து, ஒரு காடேஜ் இண்டஸ்ரியாக இருக்கக்கூடிய நாட்டுச் செக்கு வியாபாரம் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டுவிடும் என்று சொல்லுகிறார்கள். அதையும் நன்றாகக் கவனிக்கவேண்டும்.

ஒரு முக்கியமான விஷயம் அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது, அதாவது ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பது. 1—4—1962-யிலிருந்து பிரெஞ்சு காபிக்கு மல்டி பாயிண்டு டாக்ஸ் போட்டார்கள். அதற்கு முன்னாலே 'where the coffee portion of it அந்த பிரெஞ்சு காபிக்கு வரி has already suffered tax' இல்லை. ஒரு சில இடங்களில் என்று நினைக்கிறேன். பழைய கேஸ்களையெல்லாம் ரிஓபன் பண்ணி, பெண்டிங் கேஸஸ், அதாவது 1959-60, 1960-61, 1961-62-ம் வருஷத்திய டாக்ஸ் சம்பந்தமாக பெண்டிங் கேஸ்களை எடுத்து, அவைகளுக்கு மல்டி பாயிண்டு டாக்ஸ் போட்டார்கள். அதிகாரிகளுக்கு இருக்கிற 'எக்ஸூபரென்ஸ்டு கலெக்ட் டாக்ஸ்' காரணமாக இந்த மாதிரி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இம்மாதிரி பல கேஸ்கள் டிரிபியூனலில் பெண்டிங் ஆக இருக்கின்றன. டிரிபியூனலில் இருக்கும்பொழுது நாங்கள் எப்படி குறுக்கிட முடியும் என்று அரசாங்கம் சொல்லுகிறார்கள். இதனால் பெரிய 'ஹார்ட்ஷிப்' ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்று அப்பளம் சம்பந்தமாகவும்



28th March 1963] [திரு. வை. சங்கரன்]

முன்பு நடந்தது. பிறகு சர்க்காரிடம் முறையிடப்பட்டு, ரெட்ராஸ்பெக்டிவாக வசூல் செய்யக்கூடாது என்று விதி பிறப்பித்தார்கள். இம்மாதிரி கேஸ்கள் வந்த பிறகு வியாபார சமூகம் அதை மேலதிகாரிகளின் கவனத்திற்கோ அல்லது அரசாங்கத்தின் கவனத்திற்கோ கொண்டுவந்த பிறகுதான் பரிசீலனை செய்து மாதக்கணக்கு ஆகி, பின்னால் தான் நிவாரணம் கிடைக்கிறது. அந்த முறையில் இல்லாமல், பொதுவாக எதையும் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து வசூல் செய்யக்கூடாது என்ற ஒரு விதியை பிறப்பித்தால் நலமாக இருக்கும். ஒவ்வொரு தரமும் இதற்காக படையெடுத்து அரசாங்கத்தினிடம் முறையிட்டபிறகு தான், மாதங்களுக்குப் பிறகு நிவாரணம் கிடைக்கிறது என்ற நிலை இருக்கக்கூடாது. இதனால் டிரிபியூனலுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. (குறுக்கீடு) இந்த மாதிரி குறிப்பாக பிரெஞ்சு காபியைப் பொறுத்த வரையிலும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது விஷயத்தில் சீக்கிரம் சர்க்கார் உத்தரவு பிறப்பிக்கவேண்டும். நான் சொன்ன மாதிரி ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கக் கூடாது என்ற பொதுவான உத்தரவையும் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நெருக்கடி நிலைமையை உத்தேசித்து எக்ஸ்பெர்ட் பரிசீலனையை ஒத்திவைத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். இதை மீண்டும் புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் அதிகமான செலவு ஏற்படுவதற்கு இடமில்லை. சில ஆயிரக்கணக்கான ரூபாய் தான் ஆகலாம். போன தடவை நாம் எக்ஸ்பெர்ட் அபாயிண்டு செய்தபோது கூட, அவருடைய எல்லா ரெகமெண்டேஷன்களையும் ஒத்துக்கொள்ளவில்லை. அவைகளைப் பரிசீலனை செய்து எது கன்வீனியண்டோ அவைகளைத் தான் ஒத்துக்கொண்டோம். எக்ஸ்பெர்ட் சொன்ன எல்லா ரெகமெண்டேஷன்களையும் சர்க்கார் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. எக்ஸ்பெர்ட் அபாயிண்டு செய்து பரிசீலனை செய்தால், கூடுமானவரையில் ஸிம்ப்ளிபை பண்ணுவதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகையினால், எமெர்ஜென்ஸி காரணமாக எக்ஸ்பெர்ட் அபாயிண்டு பண்ணுவதை தள்ளிவைக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மொத்த வருவாயில் கணிசமான அளவுக்கு விற்பனை வரி மூலம் நாம் வருமானம் பெறுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சுமார் ரூ. 20 கோடி அளவுக்கு வருமானம் இருக்கிறது. ஆனால் செலவு ரூ. 60, 70 லட்சம் தான் ஆகிறது. ஆகவே வியாபார சமூகத்திற்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுத்து, அவர்களிடம் நல்ல முறையில் வரி வாங்க வேண்டும். மதுரை போன்ற பெரிய நகரங்களிலே பல இடங்களிலே சர்க்கிள் ஆபீஸ்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் எந்த விதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. அங்கே மேஜை, நாற்காலிகள் கூட சரியாக இல்லை. அந்த ஆபீஸ்களுக்கு ரெப்ரெஸெண்டேஷன் பண்ணுவதற்கு பொது மக்களும், வியாபாரிகளும் அது சம்பந்தமாக அட்வகேட்களும் போகவேண்டியிருக்கிறது. அதையெல்லாம் எடுத்துவிட்டு இதுபோன்று வரிவிதிப்பு டிபார்ட்மெண்டுக்கு

[திரு. வை. சங்கரன்] [28th March 1963

என்று நகரத்திற்கு மத்தியில் ஒரு புதிய கட்டிடம் கட்டி அதில் எல்லா சர்கிள் ஆபீஸ்களையும் வைத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். அதற்காக சில தெருக்கள் தாண்டிப் போக வேண்டிய நிலை இருந்தால் கூட பரவாயில்லை. எல்லா ஆபீஸ்களையும், மத்திம மான ஒரு இடத்தில் அமைத்து அங்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, பர்ணிசர் வசதி, போன் வசதி முதலிய வசதி களைச் செய்துகொடுத்து, வியாபாரிகளும், மற்றுமுள்ளவர்களுக் கும் சௌகரியமாக இருக்கும்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கமர்ஸியல் டாக்ஸ் ஆபீஸிலும் தமிழைப் புகுத்தியிருக்கிறார்கள். வியாபாரிகளில் கணிசமான அளவுக்கு தமிழ் தெரிந்தவர்கள் தான் இருக்கிறார்கள். ஆகவே, ரிடர்ன் பாரங்களையும் தமிழிலேயே அச்சடித்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்றேன். அதற்கு வழி வகை செய்தால் அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும். அதுபோல, ஆக்ட்ஸ் அண்டு ரூல்ஸ் ஆங்கிலத்தில் தான் இருக்கிறது. தமிழில் இல்லை. ஆகவே, ஆக்ட்ஸ் அண்டு ரூல்களை தமிழில் மொழி பெயர்ப்புச் செய்து அதை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டிஸ்டிரிக்ட் அட்வைசரி கமிட்டியை எடுத்துக் கொண்டால் பல இடங்களில் அவை இன்னும் சரியான முறையில் பங்ஷன் பண்ணவில்லை. சில இடங்களில் கூட்டங்கள் நடக்க வில்லை என்றும் கேள்விப்படுகிறேன். இவைகள் சரியான முறை யில் நடக்கின்றனவா என்பது பற்றி ரிபோர்ட் 'கால் பார்' பண்ணி அவைகள் நல்ல முறையில் இயங்கும்படிச் செய்ய வேண்டும். அந்தக் கமிட்டிகளுடைய ரெகமெண்டேஷன்களை பரி சீலனை செய்து கூடியவரையில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது செண்டிரல் ஸேல்ஸ் டாக்ஸ் ஒரு பெர்சண்டை 2 பெர்சண்டாகக் கூட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்த பில் பாஸ் ஆன பிறகும், எப்பொழுது அது அமுலுக்கு வருகிறது என்பதை வியாபாரிகள் தெரிந்துக்கொள்ள முடியாத நிலைமை இருக்கிறது. பில் பாஸ் ஆன பிறகு எந்த டேட்டிலிருந்து அது அமுலுக்கு வரும் என்பதை சர்க்கார் அறிந்து, வியாபாரிகளுக்குத் தெரியும் படியான நிலைமையில் வெளியிடவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

கடைசியாக நான் வரியைக் குறைக்கவேண்டுமென்று சொல்ல வில்லை. ஆனால் 2, 3 பொருள்களுக்கு வரி போடக்கூடாது என்று 6, 7 ஆண்டுகளாகவே சொல்லிக் கொண்டு வருகிறோம். கனம் அமைச்சர் அவர்கள் மனம் இறங்கி சீக்கிரம் அந்தக் கோரிக்கை யை அனுதாபத்துடன் கவனிக்கவேண்டும். ஒரு தடவைக்கு 4 தடவைகளாக எடுத்துச் சொன்னதின் பேரில் பல பொருள்களுக்கு வரி மாற்றப்பட்டிருக்கிறது. புட்கிரைன்களில் ஸ்டேபிள் புட் கிராப் நெல். அந்த நெல்லுக்கு வரியை எடுத்துவிடவேண்டும். அதனால் நமக்கு கொஞ்சம் தொகை தான் வருமானத்தில் குறையும். பொதுவாக, நெல் முக்கிய உணவுப் பொளாக இருக்



28th March 1963] [திரு. வை. சங்கரன்]

கிறது. அதன் மீது விற்பனை வரி வசூலிப்பதிலே நடைமுறையில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன என்பது அதிகாரிகளுக் கும் தெரியும். விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்க முடிய வில்லை. களத்து மேட்டிலிருந்து எடுக்க வேண்டியிருக்கிறது. இப் பொழுது இருக்கும் முறை சரியான கணக்குகள் வைக்க தூண்டு வதாக இல்லை. ஆகவே, நெல்லைப் பொறுத்தவரையில் இந்த வரி யை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அழுகும் பொருள்களைப் பொறுத்தவரையில், பாலையும் அழுகும் பொருளாக எடுத்துக்கொண்டு, அதற்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏழைகள் உபயோகிக்கக் கூடிய பட்டாணி, பொரி கடலை வெளி ராஜ்யங்களிலிருந்து நமது ராஜ்யத்திற்கு வருகிறது. பட்டாணி யைப் பொறுத்த வரையில் 100-க்கு 100 பஞ்சாபிலிருந்து வருகிறது. சிறிய சிறிய அளவில், 2 அணா அல்லது 4 அணா அளவுக்கு இதை விற்கிறார்கள். இதன் மீது விற்பனை வரி வசூலிப் பது கஷ்டமாக இருக்கிறது. இதன் மீதுள்ள வரியை ஒருமுனை வரியாகப் போட்டுவிட்டால் நலமாக இருக்குமென்று சொல்கிறார் கள். இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

கடைசியாக, வியாபாரிகள் அவ்வப்பொழுது கொடுக்கும் யோசனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. அ. ராகவ ரெட்டி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி விதிப்பைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த விற்பனை வரி விதிக்கும் அலுவலகங்களுக்கு வியாபாரிகள் சென்றால், அவர்களை அங்கே எப்படி வரவேற்கிறார் கள் என்பதைப் பற்றி சென்ற ஆண்டிலே கூட சொன்னேன். முன்பு இருந்த நிலைமைதான் இப்பொழுதும் நீடிக்கிறது. அவர் களை மரியாதையாக நடத்துவதற்கும், அவர்கள் உட்காருவதற்கும் போதிய வசதிகள் செய்து கொடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும்; கனம் அமைச்சர் அவர்களையும் நான் மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய சென்னை நகரத்திற்கு மூன்று பக்கங்களிலும் செக் போஸ்டுகள் வைத்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே, கவரப்பேட்டையிலே ஒரு செக் போஸ்ட் இருக்கிறது. அந்த வழி யாக ஆந்திராவிலிருந்து சென்னை நகருக்கு லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் லாரிகள் மூலம் தினந்தோறும் வருகின்றன. சாதாரணமாக சிறு அதிகாரிகளைப் போட்டு, அந்த லாரிகளை மடக்கி, அவர்களிடமிருந்து ஏராளமான பணத்தை வசூலிக்கிறார்கள். பெரும் அளவு தொகைக்கு ரசீது கொடுக்கப் படவில்லை என்றுதான் நான் கேள்விப்படுகிறேன். அதற்குத் தகுந்த ஒரு ஏற்பாடு செய்ய வேண்மென்று கேட்டுக் கொள்ளு கிறேன். இல்லாவிட்டால் செக் போஸ்டுகளையாவது எடுத்து விட வேண்டும். செக் போஸ்டு என்று போட்டால், அது ஒழுங்கான

[திரு. அ. ராகவ ரெட்டி] [28th March 1963

முறையில் நடக்க வேண்டும். ஆகவே, இந்த கவரப் பேட்டை செக் போஸ்டு விஷயத்தை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

என்னுடைய சொந்த கிராமத்திலேயே வரி இலாகாவைச் சேர்ந்த Flying squad சில அதிகாரிகள், இரவில் ஜீப்பில் வந்து முக்கியமாக சென்னைக்கு அரிசி கொண்டு வரும் லாரிகளை மடக்கி நூற்றுக்கணக்கான ரூபாய்களை லாரிக்காரர்களிடமிருந்து வசூலிக்கிறார்கள். அவர்கள் வசூலிக்கும் எல்லாத் தொகைக்கும் ரசீது கொடுப்பது கிடையாது. அப்படி இரவில் அரிசி கொண்டு வருபவர்களை மடக்கி பணத்தை வசூல் செய்யும் பொழுது, அங்கே இருக்கும் கிராம அதிகாரிகளையோ அல்லது பஞ்சாயத்து தலைவரையோ வைத்துக்கொண்டு வசூல் செய்து கொடுத்த பணத்திற்கு நியாயமான ரசீது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக, போட்டிருக்கும் வரிகளில் 100-க்கு 75 பங்காவது பெரிய வியாபாரிகள் கட்டுவதில்லை என்பது தெரிந்த விஷயம் தான். மேலும் மேலும் வரிகளைப் போடுவதைவிட போட்டிருக்கும் வரிகளை Evade பண்ணுகிறவர்களுக்கு இடம் கொடுக்காமல் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, உணவுப் பொருள்களுக்கு இம்மாதிரி வரி விதிப்பதிலே இருக்கிற கஷ்டங்களை பலர் எடுத்துச் சொன்னார்கள். நான்கு நாட்களுக்கு முன்புதான் பாலவாக்கம் கிராமத்திலே அரிசி கொண்டுவரும் லாரிகளை மடக்கி பணம் வசூலித்ததினால், அந்த லாரிக்காரர் வாங்கின விலையைவிட 4 ரூபாய் தள்ளிக் கொடுக்க கூடிய நிலைமை ஏற்பட்டு, தகராறு எல்லாம் ஏற்பட்டது. ஆகையால் உணவு தானியங்களுக்கு விற்பனை வரி இல்லாமல் செய்ய வேண்டுமென்பதை பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, சர்க்கார் இதைப் பரிசீலித்து, உணவுப் பொருள்களின் மீது இருக்கும் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எஸ். மாதவன்:** மதிப்பிற்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரிதான் நம்முடைய மாநிலத்திற்கு நல்ல வருமானத்தை பெரிய அளவிலே கொடுக்கக் கூடிய ஒரு வரி என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் அந்த வரியைக் கண்டுதான் மக்கள் பயப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும். காரணம் என்னவென்றால், சாதாரண வியாபாரிகளைக் கூட பாதிக்கக் கூடிய அளவிலே இந்த வரி விதிப்பு அமைந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்கு இவ்வளவு வியாபாரம் செய்கின்ற அளவு இருக்கிறது என்றால், அதைக் கணக்கிட்டு அதற்குள்ள வரியைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால், சிறிய வியாபாரிகளைப் பொறுத்தவரையில், தொடக்கத்திலும் சரி, பின்னரும் சரி, கணக்கு வைப்பதில்



28th March 1963] [திரு. எஸ். மாதவன்]

எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. எந்த அளவுக்கு ஒரு ஆண்டில் அவர்களுக்கு வியாபாரம் நடக்கிறதோ, அதைக் கணக்கிட்டு அவர்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும். விற்பனை வரி அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. பெட்டிக் கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகள் இந்த வரியினால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த சிறிய வியாபாரிகளுக்கு அதிகாரிகளிடமிருந்து தொந்தரவு ஏற்படாத ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்பதுதான். வியாபாரிகள் வரி கொடுப்பதிலிருந்து தப்பித்துக் கொள்ளக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். கனம் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, நம்முடைய மாநிலத்தில் இந்த விற்பனை வரியிலிருந்து தப்பித்துக் கொள்பவர்கள் அதிக அளவில் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இந்த "டாக்ஸ் எவேஷனுக்கு" காரணம் பெரும்பாலும் வியாபாரிகள் கணக்கு வைத்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதுதான். மேலும் வியாபாரிகள் இந்தச் சட்டத்தை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது என்பதையும் நான் அனுபவத்தில் காண்கிறேன். இந்த வரியை அஸெஸ் பண்ணுவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் வியாபாரிகளுக்கு பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன என்று நான் கருதுகிறேன். ஒரு வியாபாரி எந்த அளவுக்கு வியாபாரம் செய்கிறார், எந்த அளவுக்கு அவர் வரி கட்ட வேண்டுமென்று அதிகாரிகள் அஸெஸ் பண்ணுவதிலே காலதாமதம் அதிகமாக ஏற்படுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வியாபாரி தன்னுடைய வியாபாரத்தை முடித்துவிட்டு, இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த அஸெஸ்மெண்ட் ஆர்டர் வருகிறது. ஆகவே, இம்மாதிரி அஸெஸ்மெண்ட் செய்வதிலே இருக்கக் கூடிய குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சிறிய வியாபாரிகளைப் பொறுத்தவரையில், அஸெஸ்மெண்ட் செய்வதிலே காலதாமதம் இல்லாதவாறு செய்யும்படி அதிகாரிகளுக்கு ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரி தான் ஏற்கனவே உத்தேச வரியாக ஒரு வரி போட உத்திரவிட்டிருக்கிறார்கள். உத்தேச வரியைக் கொடுப்பதற்கு வியாபாரிகள் தயாராக இருக்கிறார்கள். சாதாரண வியாபாரிகள் இந்த வரியைக் கொடுப்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். நல்ல வசதியுள்ள வியாபாரிகள் இந்த வரியைக் கொடுப்பதற்கு சுணக்கம் காட்டுகிறார்கள். இந்த வரியைக் கொடுப்பதிலிருந்து பின் வாங்க ஆசைப்படுகிறார்கள். காரணம் என்ன? அவர்களுக்கு அஸெஸ்மெண்ட் ஆனவுடனேயே, அதாவது வரி எவ்வளவு என்று தீர்மானித்த பிறகு, கூடுதல் ஆகக் கட்டிய வரியை அவர்கள் திரும்பப் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அது அதிகத் தொந்தரவாக இருக்கிறதென்பதை உணர்ந்து ஆண்டு

[திரு. எஸ். மாதவன்] [28th March 1963

முடிந்தவுடன் இவ்வளவு வரி என்று கட்டிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு உடனடியாக ஒரு காலவரையறை ஏற்படுத்தி ஒரு மாதம், இரண்டு மாதத்திற்குள் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தினால் வியாபாரிகளுக்கு வசதியாக இருக்கும். டிபார்ட்மெண்டிலே உள்ளவர்கள் எப்போது திருப்பிக்கொடுக்க மனம் வருகிறதோ அப்போது திருப்பிக் கொடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. இதனால்தான் வியாபாரிகள் இந்த வரியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு முயற்சிக்கிறார்கள். இதை உணர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த வரியைத் திருப்பிக் கொடுப்பது என்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இன்னொரு கருத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அதிகாரிகள் அடிக்கடி வியாபாரிகள் ஸ்தலங்களுக்குப் போய் சோதனையிடுகிறார்கள். இதுவே வியாபாரிகள் வரியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு ஒரு முறையாகவும் வழியாகவும் இருக்கிறது. சாதாரணமாக கிராமங்களில் பார்க்கும்போது, திடீரென்று ஒவ்வொரு வியாபாரியும் எழுந்து ஓட ஆரம்பித்துவிடுவார்கள். ஏன் இப்படி ஓடுகிறார்கள் என்று பார்த்தால் தெருக்கடைசியில் விற்பனை வரி அதிகாரி வருவதைப் பார்க்கலாம். இந்த விதமாக வியாபாரிகள் அதிகாரிகளைக் கண்டு ஓடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது வியாபாரிகளுக்கும் அவமானமாக இருக்கிறது. அங்கே போகிறார்களே அந்த அதிகாரிகளுக்கும் அவமானமாக இருக்கிறது. அதிகாரிகள் இந்த விதமான சூழ்நிலை ஏற்படுகிறதே என்று வருத்தப்படும்படியான நிலைமையும் ஏற்படுகிறது. இதை சுமுகமாக தீர்ப்பதற்கு வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கணக்குகள் எப்படி வைக்கவேண்டும், எங்கெங்கு வைக்கவேண்டும், எந்தத் தேதிக்குள் காட்டவேண்டும் என்று ஒரு நியதியை ஏற்படுத்தி விடுவோமானால் இதுபோன்ற கஷ்டங்கள் இருக்காது என்று நான் நம்புகிறேன். அப்படியே சில வியாபாரிகள் தப்பித்துக்கொள்கிறார்கள் என்ற கருத்து அதிகாரிகளுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ ஏற்படுமானால் அதை இண்டலிஜென்ஸ் ஸ்குவாடு என்று அமைத்து அவர்கள் மூலமாக இந்தச் சோதனையை நடத்தலாம். அதிகாரிகள் திடீரென்று சோதனை போடக்கூடிய நிலையில் அவர்களுடைய நிர்வாகத்திலே ஊழல்கள் ஏற்படுகிற சூழ்நிலையும், வியாபாரிகள் அதிகாரிகளை சரிக்கட்டிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதைப் போக்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே மாதிரிதான் இந்த அதிகாரிகள் வரி போடுகிறார்களே அதன் பேரில் மேல் அதிகாரிகளுக்கு அவர்கள் அப்பீல் செய்ய வேண்டியிருக்கிறது. அல்லது அதே அதிகாரிக்கு அப்பீல் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றி அமைப்பதற்கு முயற்சி எடுக்கலாமா என்று இந்த அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி அப்பீல் செய்யக்



28th March 1963] [திரு. எஸ். மாதவன்]

கூடிய அதிகாரத்தை வேறு துறைக்கு மாற்றி விடலாமா என்ற யோசனையை நம்முடைய அரசாங்கம் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் கூறிக்கொள்வது இந்த சிவில் நீதி மன்றங்களுக்கு இந்த அப்பீல் அதிகாரங்களை கொடுத்துவிடலாமா என்று இந்த அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். சிவில் நீதி மன்றங்களில் காலதாமதம் அதிகமாக ஏற்படலாம். அப்படி இருந்த போதிலும் இரண்டாவது, மூன்றாவது அப்பீல்களை ஜில்லா நிர்வாகத்திலுள்ள சிவில் கோர்ட்டுகளுக்குக் கொடுத்துவிடக்கூடிய சூழ்நிலை நல்லதா என்று அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே சமயத்தில் இந்த அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் உள்ள தொடர்பு எப்படி இருக்கவேண்டும். அது சீராக அமைவதற்கு நம்முடைய அரசாங்கம் எந்த அளவிலே முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதில் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். 1957-லே ஒரு அதிகாரியை நியமித்து அவர் அறிக்கையிலேகூட இதைப்பற்றி விரிவாக கூறியிருக்கிறார்கள். மக்களுக்கும், அதாவது வியாபாரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் உள்ள தொடர்பை எவ்வளவுக்கெவ்வளவு சீரான முறையிலே அமைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு இந்த வரித் துறையிலே இருக்கும் கஷ்டங்கள் நீங்கிவிடும் என்று அவர் கூறி இருக்கிறார். அவர்கள் சில யோசனைகள் கூட கூறி இருக்கிறார்கள். டிரேடு அசோசியேஷன்கள்—ஆங்காங்கு வியாபாரிகள் சங்கங்களை ஏற்படுத்தி அந்தச் சங்கங்களுக்கும், அதிகாரிகளுக்கும் தொடர்பு ஏற்படுத்தி, சட்டத்திலே ஏற்படும் திருத்தங்களைப்பற்றி வியாபாரிகளுக்கு அந்தச் சங்கங்கள் மூலமாக எடுத்துரைக்கவேண்டும். அப்படி எடுத்துரைத்ததால் அடிக்கடி இந்தச் சட்டத்திலே கொண்டு வருகிற திருத்தங்கள் அவர்களுக்கு புரிந்து கொள்ள வசதியாக இருக்கும். அவை கெஜட்டில் பப்ளிக் செய்யப்படுகின்றன. சில சமயங்களில் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படுகின்றன. அப்படி இருந்த போதிலும், இந்த வியாபாரிகள் சங்கங்கள் மூலமாக இந்த திருத்தச் சட்டங்களையும், மாற்றி அமைத்தச் சட்டங்களையும் தெரிவித்தால் வியாபாரிகள் அவைகளைத் தெரிந்துகொண்டு உடனுக்குடன் அவைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமென்பதை அந்த நிபுணர் கூறி இருக்கிறார். அதை நன்றாக அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கூட இந்த அட்வைசரி கமிட்டியைப் பற்றிக் கூறினார்கள். அதைப்பற்றி அந்த நிபுணர் கூட தமது அறிக்கையில் கூறி இருக்கிறார். ஆங்காங்கு அட்வைசரி கமிட்டிகள் ஏற்படுத்தி அதனுடைய செயல் முறைகள் நன்றாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அவர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து குறிப்பாக சிறிய வியாபாரிகள் கஷ்டங்களை அட்வைசரி கமிட்டிக்கு எடுத்துச் சொல்லி அவர்கள் தீர்த்து வைக்கக்கூடிய வாய்ப்பை! அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். மாதவன்] [28th March 1963

அதே மாதிரி இன்னொன்று. இந்த சிறிய வியாபாரிகளைப் பொருத்தவரையில் அரசாங்கமும், அதிகாரிகளும் கொஞ்சம் கண் காணிப்போடு இருக்கவேண்டும். அவர்கள் சட்டத்திலிருந்து தவறிவிட்டாலோ, குற்றம் செய்துவிட்டாலோ அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. அதிலே யாரும் ஆட்சேபம் செய்யவில்லை. கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதிலே சிறிய வியாபாரிகள்கூட பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கம் இந்த முறையை ஒரு விதமாக மாற்றியமைக்கவேண்டும். அதாவது உடனடியாக தண்டனை கொடுக்காமல், ஒரு முறை இரண்டு முறை தவணை கொடுப்பது போல் வார்னிங் கொடுக்கலாம். மீண்டும் மீண்டும் இரண்டு அல்லது மூன்று தடவை செய்தால் அதன் பிறகு பீனல் ப்ரொவிஷன்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நியதியை அதிகாரிகள் பின்பற்ற அரசாங்கம் உத்திரவிடவேண்டும். சாதாரணமாக சிறிய வியாபாரிகள் இந்தக் குற்றங்களைச் செய்ய மாட்டார்கள். அப்படிச் செய்து விட்டாலும் இது மாதிரி மறு முறை செய்யாத சூழ்நிலை ஏற்படும்.

மேலும் கணக்கு வைப்பதில் தவறுகள் ஏற்படுகின்றன. கணக்கு வைக்காத சூழ்நிலையில் அதிகாரிகள் சந்தேகப்படுகிறார்கள். கணக்குகள் வைக்க சிறிய வியாபாரிகளுக்கு முடியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தவறுகள் செய்யும் நிலைமையும் ஏற்படுகிறது. அதை மாற்றுவதற்கு ஒரு முறை, இரண்டு முறை வார்னிங் கொடுக்கலாம் என்ற யோசனையைப் பின்பற்ற வேண்டும். இதைக்கூட நம் அரசாங்கத்திற்கு ஏற்கனவே பல நிபுணர்கள் ஆலோசனை கூறி இருக்கிறார்கள். அதையும் பரிசீலித்து சிறிய வியாபாரிகளுக்கு இதிலிருந்து விதிவிலக்குக் கொடுத்து வார்னிங் கொடுப்பதை அதிகமாக செய்து அவர்களுக்குக் கஷ்டமில்லாத சூழ் நிலையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** சட்டமன்ற உப தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த விற்பனை வரி மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விற்பனை வரி வருமானத்தை நம்முடைய மாநிலத்துக்கு எடுத்துச் சொல்லும்போது, கற்பக விருட்சம் என்றும், காமதேனு என்றும் நாம் விவரித்துக்கொண்டு இருப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மேலும் மாநில அரசுக்கு வரவேண்டிய வருமானத்தில், மிக நல்ல முறையில் அதிகமான வருமானத்தையும், குறைந்த செலவிலே ஆக்கித்தருகிற இலாகாவை உடையதாய் இது இருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கியமாக இந்த வருமான வரி வசூலிக்கிற அதிகாரிகளுடைய செலவை எடுத்துப் பார்ப்போமானால் மிகக் குறைவாக இருக்கிறது அதற்காக அந்த அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்



28th March 1963] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

பட்டிருக்கிறோம். முக்கியமாக நாட்டிலே திட்டங்கள் வகுத்து, திட்டங்கள் நிறைவேற்றுவதன் பலனை பார்க்கிறோம், வியாபாரத்திலே அதிக செழிப்பு, எங்கும் தொழில்வளம் அதிகமாகப் பெருகி வருகிற நிலைமையிலே இருக்கிறது. ஒரு பஜாருக்குப் போனால், ஒரு ஜவுளிகடை இருந்த இடத்தில் நான்கு ஐந்து ஜவுளிக்கடைகள் இருப்பதைப் பார்க்கிறோம். ஒரு பெட்டிக் கடை இருந்த இடத்தில் பத்து பெட்டிக் கடைகள் இருப்பதைப் பார்க்கிறோம். அதே போல கட்டிடங்களை எடுத்துக்கொண்டால் ஆங்காங்கே திட்டங்களின் காரணமாக அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதிக வேலை வாய்ப்பும், தொழில் வளமும் காணும் வகையில் இந்த விற்பனை வரி அதிகமாகப் போய்க் கொண்டே போகிறது. ஆகவே அரசாங்கத்திற்கு அது ஒரு நல்ல வருமானத் 11-00 a.m.
திற்கு வழியாக இருப்பதால், இதிலே சில சிக்கல்கள், சிரமங்கள் வரும்போது, அவற்றை எடுத்துச்சொல்ல என் போன்றவர்கள் கடமைப்பட்டிருக்கிறோம். உதாரணமாக, நம்முடைய தமிழ் மாநிலத்தில் முக்கியமான ஹாண்டு மேடு இன்டஸ்ட்ரியாக இருப்பது தீப்பெட்டித் தொழிலாகும். பிற மாநிலங்களில் இல்லாத நிலையில் நமது தமிழகத்தில் தீப்பெட்டித் தொழில் வளர்ந்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் பெரிய தீப்பெட்டி மன்னர்கள் உண்டாகியிருக்கிறார்கள் என்றால், பல லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய அளவுக்கு அங்கே இந்தத் தொழிலைப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தத் தொழில் இப்பொழுது மிகவும் வளர்ந்திருக்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால், இருபது தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருந்த நிலை போக, இப்போது 600-க்கும் மேலாக சிறிய தொழில்கள் அங்கு வளர்ந்திருக்கின்றன. அமைச்சர் அவர்கள் தொழில் வளத்தில் மிகவும் அக்கறை உள்ளவர்கள். தொழிலாளர்களுடைய நன்மைக்காகவும் உரிமைக்காகவும் போராடியவர்கள். அவர்கள் இன்று தொழில் இலாகாவை ஏற்று நடத்துகிறார்கள். நம்முடைய தேசத்திலேயே சிறப்பாக நம் தமிழகம் தொழில்துறையில் மணக்க வேண்டுமென்று அரும்பாடு பட்டுக்கொண்டு வருகிறார்கள். அப்படியிருக்கக்கூடிய அமைச்சர் அவர்கள் இந்தத் தீப்பெட்டித் தொழிலையும் சிறிது கருணையுள்ளத்தோடு கவனித்திருக்கிறார் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

ஹாண்டு மேடு இன்டஸ்ட்ரியை ஏ, பி, ஸி என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள். 'ஸி' க்ளாசுக்கு அதிக ரிபேட் தொகை எக்ஸைஸ் ட்யூட்டியில் கொடுக்கிறார்கள். 'பி'-ல் இயந்திரத்தினால் உற்பத்தியாகும் விம்கோ தீப்பெட்டித் தொழிலுக்கும், இதற்கும் இருக்கும் வித்தியாசம் ஒரு ந.பை. தான் இருக்கிறது. ஒரு க்ரோஸ் தீப்பெட்டி 7½ ரூபாய் என்றால், அதற்கு எக்ஸைஸ் ட்யூடி 4½ ரூபாய் ஆகிறது. இது தவிர, உற்பத்திச் செலவு, தொழிலாளிகளுக்குக் கூலி, முதலுக்கு வட்டி, லாபம் எல்லாவற்றையும் சேர்த்தாலும் ஒரு ந.பை தான் வித்தியாசம் விம்கோவுக்கும்

[திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்] [28th March 1963

இதற்கும் இருக்கிறது என்ற நிலையில், இந்த மாநிலத்தில் கையினால் செய்யக்கூடிய இந்தத் தீப்பெட்டித் தொழில் நசித்து விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தாழ்மையான விண்ணப்பமாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தமிழ் மாநிலத்திலிருந்துதான் தமிழ்நாட்டுக்கு வடக்கே இருக்கும் அத்தனை மாநிலங்களுக்கும் தீப்பெட்டி போகிறது. ஆனால், விம்கோ கம்பெனியார் இந்திய தேசத்தில் நான்கைந்து இடங்களில் தொழிற்சாலைகளை வைத்து, இயந்திரங்களின் மூலம் தீப்பெட்டிகளை உற்பத்தி செய்கிறார்கள். அவர்களுக்கு உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதற்குக் காரணம், இயந்திரங்கள் மூலம் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்கிறார்கள். ஆங்காங்கே டெப்போக்களும் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சென்ட்ரல் சேல்ஸ் டாக்சும் அவர்கள் கொடுக்க வேண்டிய நிலைமை இல்லை. ஆனால், நம்முடைய தமிழகத்தில் கையினால் செய்யக்கூடிய தீப்பெட்டிகளை பிற மாநிலங்களுக்கு அனுப்பும்போது மற்ற பகுதிகளில் டெப்போக்கள் வைத்துக்கொள்ள முடிவதில்லை. ஆகவே இயந்திரத்தின் மூலம் தீப்பெட்டிகள் செய்யும் தொழிலோடு இவர்கள் போட்டியிட முடியாத அவல நிலையில் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் சற்றுக் கவனித்துப் பார்க்க வேண்டும். ஒரு ந.பை. வித்தியாசம் வரும்போது சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸை ஒரு சத விகிதத்திலிருந்து இரண்டு சத விகிதமாகக் கூட்டப் போகிறார்கள் என்று அறிகிறோம். அப்படி வரும்போது, ஒரு க்ரோஸ் தீப்பெட்டி 7½ ரூபாய் வரும்போது, அதிலே இரண்டு சத விகிதம் ஆகிய 15 ந.பை. போய் விட்டது என்றால், கையினால் செய்யக்கூடிய தீப்பெட்டித் தொழில் உலகத்தை விட்டே மறைந்துவிடக்கூடிய நிலையும், தீப்பெட்டித் தொழிலையே மூடிவிட்டு வேறு தொழில்களைப் பார்க்க வேண்டிய நிலையும் வந்து விடும். ஆகவே, முக்கியமாக நம்முடைய மாநிலத்தில் பானை செய்வது, பாய் முடைவது, பொம்மை செய்வது, தேனீ வளர்ப்பது, இப்படிப்பட்ட கைத்தொழில்களுக்கெல்லாம் நாம் சலுகை செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலத்தில் வரிசையாக இத்தனை குடிசைத் தொழில்களுக்கு அவர்கள் சலுகை கொடுத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் விடச் சிறப்பாக இந்தத் தீப்பெட்டித் தொழில் நடைபெறுகிறது. இந்தக் குடிசைத் தொழில் ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடியதாகவும், அவரவர்கள் வீட்டிலேயே இருந்து தொழில் செய்யக்கூடியதாகவும் இருப்பதைப் பார்க்க மிகவும் அற்புதமாக இருக்கும். ஜப்பான் நாட்டில் சிறு தொழில்கள் சிறப்பாக நடப்பதைப் பார்க்க நம் நாட்டிலிருந்து தூது கோஷ்டியை அங்கு நாம் அனுப்புவதைவிட, அந்த நாட்டிலுள்ளவர்களை நம் நாட்டுக்கு அழைத்து வந்து, தமிழகத்தில் நடக்கும் இந்தத் தீப்பெட்டித் தொழிலை அவர்களுக்குக் காண்பித்தால் அவர்கள் மிகவும் ஆச்சரியப்படக்கூடும். அந்த அளவுக்கு



28th March 1963] [திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்]

நம்முடைய நாட்டில் இந்தத் தொழில் குடிசைத் தொழிலாகப் பெருகி வருகிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குச் சலுகைகளை இந்த அரசாங்கம் செய்துகொடுத்திருக்கிறதா என்று நான் கேட்கிறேன். எத்தனையோ காட்டேஜ் இண்டஸ்ட்ரீசுக்கு—குறிப்பாக ஸி க்ளாசுக்கு—எக்ஸைஸ் ட்யூடி ரிபேட் கொடுக்கிறோம். 1500 க்ரோஸ் செய்யக்கூடிய அளவுக்குத் தொழில்கள் செய்யும்போது அவர்களுக்கு ஒருவிதமான சலுகையும் மாநில சர்க்காரிடமிருந்து கிடையாது. சென்ட்ரல் எக்ஸைஸ் ட்யூடி இரண்டு சத விகிதம் அளவுக்கு இருக்கும்போது, 15 ந.பை. கொடுக்கவேண்டிய நிலை வரும்போது, கட்டாயம் இந்தத் தொழில் நசித்துவிடும். தொழில் அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலைக் காப்பாற்ற ஆவன செய்யவேண்டும். தமிழ்நாட்டில் நடைபெறும் சிறு தொழில்களிலேயே மிகவும் பாராட்டப்படத்தக்க ஒரு தொழில் இருக்கிறது என்றால், அது இந்தத் தீப்பெட்டித் தொழில்தான் என்றால் அது மிகையாகாது. முக்கியமாக, திருநெல்வேலி, கோயில்பட்டி, குருவிக்குளம், சங்கரன்கோயில், சிவகாசி, சாத்தூர் இப்படிப்பட்ட இடங்களில் தீப்பெட்டித் தொழில் மிகப் பிரமாதமான முறையில் வளருகிறது. இயந்திரத்தினால் செய்யப்படும் தீப்பெட்டியின் தரம் அளவுக்கு கையினால் செய்யப்படும் இந்தத் தீப்பெட்டிகளின் தரம் உயர்ந்திருக்கிறதென்று சொன்னால், அதற்குக் காரணம் இருபதாண்டுகளாக அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலதிபர்களின் பெரு முயற்சியும் அக்கறையும், தொழிலாளர்களின் திறமையும் தான் இயந்திரத்தினால் செய்யப்படும் தீப்பெட்டியோடு போட்டியிடும் அளவுக்கு சுத்தமாகவும், வேலைப்பாடு உள்ளதாகவும் இந்தக் கைதொழில் வளர்ந்திருக்கிறது. மத்திய விற்பனை வரி இரண்டு சத விகிதம் என்று வருவது டாக்சுக்கு டாக்ஸ் போடுகிற மாதிரி இருக்கிறது. எக்ஸைஸ் ட்யூடியாகிய 4½ ரூபாய்க்கு இன்னொரு வரி போடாமல், வரிக்கு மேல் வரி போடாமல் உற்பத்தி செய்கிற இடத்திலேயே 2 சத விகிதம் வரி போட்டால் அவர்களுக்கு ஒரு பெரிய சலுகை செய்தவர்களாவோம். அந்தத் தொழிலைக் காப்பாற்றினவர்களாவோம். அந்தப் பெருமையும் புண்ணியமும் நமது கனம் தொழில் அமைச்சர் அவர்களைச் சாரும் என்று கூறிக்கொண்டு, இந் நாட்டில் தொழில் மணம் பெருகி, பாரதத்திற்கும், உலகத்திற்கும் அது பரவவேண்டுமென்று ஆவல் காட்டும் நமது அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

திரு. சி. கு. சின்னராஜி கவுண்டர்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி மானியத்தின்மீது நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். உணவுப் பொருள்களின் மீது விற்பனை வரி விதிக்கப்படுவதை ரத்து செய்து, அவற்றுக்கு விதி விலக்கு அளிக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். உணவுப் பொருள்களுக்கு வரி இருப்பதால் விவசாயிகளும் சிறு

[திரு. சி. கு. சின்ன ராஜி கவுண்டர்] [28th March 1963

வியாபாரிகளும் பாதிக்கப்பட்டு, நசுங்கிக்கொண்டிருக்கிறார்கள். கணக்கு வைக்கக்கூட அவர்களுக்குத் தெரியாது. அதனால் விவசாயிகள் சந்தைகளிலும், பஜாரிலும், மில்களிலும் தங்களுடைய பொருள்களை அனுப்பி விற்கவேண்டியிருப்பதால், விற்பனை வரியை உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் எடுத்துவிடும்படி நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பாலுக்கும் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் ஏராளமாகப் பால் உற்பத்தியாகி விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பாலும் அழுகும் பொருளைச் சேர்ந்ததாக இருப்பதால், அதன் மீதுள்ள விற்பனை வரியையும் ரத்து செய்துவிடும்படி நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வியாபாரிகள் பத்தாயிரம ரூபாயக்கு விற்பனை செய்தால் விற்பனை வரி கட்ட வேண்டும் என்று இருக்கிறது. இது ஒரு சிறிய தொகையாக இருப்பதால், 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்தால்தான் விற்பனை வரி கட்ட வேண்டும் என்று சட்டத்தைத் திருத்தி அமுலாக்கவேண்டுமென்று நான் மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன். குறிப்பாக உணவுப் பொருள்கள் மீதுள்ள விற்பனை வரியை எடுத்துவிடும்படி மிகவும் பணிவோடு கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பொது விற்பனை வரி மானியத்தை ஆதரித்துச் சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். தொழில் அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் ஒரு வருஷத்திற்கு ஒரு தொழிற்சாலை விதம் ஆரம்பிக்கப்பட்டு வந்தது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், வருஷத்திற்கு இரண்டு தொழிற்சாலைகள் விதம் ஏற்பட்டு வருவதாகச் சொன்னார்கள். நமது ராஜ்யத்தில் முதலில் 19 கோடி ரூபாய் விற்பனை வரியிலிருந்து வந்துகொண்டிருந்தது. இப்பொழுது 30, 32 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படியிருக்கும்போது, அரிசிக்கு ஒரு சத விகிதம விற்பனை வரி இருக்கிறது. வெளி மாநிலங்களுக்கு அனுப்பினால் இரண்டு சத விகிதம் சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் விதிக்கப்படும என்று தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வரி அரிசிக்கும் உண்டா இல்லையா என்பதற்கு எந்தவிதமான தகவலும் தெரியாமல்தான் வியாபாரிகள் இருக்கிறார்கள். அந்த ஒரு சத விகிதத்தையும் எடுத்து விடவேண்டுமென்று நான் கூறவில்லை. கோளா மாநிலத்திற்கு அரிசி அனுப்பினால் அதற்கு இரண்டு சத விகித மத்திய விற்பனை வரி கொடுக்கவேண்டுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திருச்சியில் சுப்பிரமணியபுரத்தில் சர்க்கூட் ஹவுசுக்குப் பக்கத்தில் விற்பனை வரி அலுவலகம் இருக்கிறது. அங்கு ஏதாவது ஒரு கணக்குக் கொண்டுபோகவேண்டும் என்றால், போக வர நான்



28th March 1963] [திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்]

கைந்து ரூபாய் செலவு செய்துகொண்டுதான் போக வேண்டியிருக்கிறது. அங்கு போகிற நேரத்தில், 'ஸி.டி.ஓ. வரவில்லை, லேட்டாக வருவார்' என்று சொல்லப்படுகிறது. எப்பொழுது வருவார் என்று தெரிந்துகொள்வதற்கும் வாய்ப்பு வசதி இல்லை. அங்கே சென்றால் வியாபாரிகள் தங்குவதற்கும் இட வசதி இல்லை. இந்தத் துறையில் 30, 32 கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றாலும், இந்த இலாகாவில் செலவு குறைவாக இருக்கிறது. விற்பனை வரி அலுவலகத்திற்கு வரும் வியாபாரிகளுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

ஷெட்யூல்டு ஃபாரமில் டெலிவரி நோட் போட்டு எந்த விதமான பொருளை ஏற்றிக் கொண்டு சென்றாலும், உதாரணமாக தஞ்சாவூரிலிருந்து திருச்சிக்குக் கொண்டு செல்லும்போது, ஆர்.சி. நம்பர் இல்லை, லைசென்ஸ் நம்பர் இல்லை, சென்ட்ரல் சேல்ஸ்டாக்ஸ் நம்பர் இல்லை என்று ஏதாவது ஒரு குறையைச் சொல்லி 20 ரூபாய்க்கு 40 ரூபாயாக, ஒரு பங்குக்கு இரண்டு பங்காக வரி வசூலித்து விடுகிறார்கள். அதுவும் பார்டியினுடைய பெயரிலே ரசீது கொடுப்பதில்லை. லாரி டிரைவர் பெயரிலே ரசீதைக் கொடுக்கிறார்கள். பார்ட்டி கட்டியிருக்கிறாரா, இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் விசாரிக்காமலேயே அந்த வரியை வாங்கி விடுகிறார்கள். இந்த மாதிரி வசூலிக்கப்படுகிற தொகையானது ஒரு நாளைக்கு 4,000, 5,000 வசூல் ஆவதாகச் சொல்லப்படுகிறது.

திருச்சிராப்பள்ளியில் ஸ்பெஷல் சப் ஜெயில் அருகில் ஆபீஸ் கட்டடங்கள் ஏராளமாகக் காலியாக இருக்கின்றன. அங்கு 20 கட்டடங்களுக்கு மேல் காலியாக இருக்கின்றன. அந்த இடத்தில் ஆபீஸ்களை வைத்தால் வியாபாரிகளுக்குச் சவுகரியமாக இருக்கும். இப்போது அவர்கள் அந்த ஆபீஸ்களுக்குச் செல்லவேண்டுமென்றால் 5 ரூபாய், 10 ரூபாய் செலவு செய்து கொண்டு போய் வர வேண்டியிருக்கிறது. அவர்கள் ஒரு வருஷத்திற்கு ஐந்தாறு தடவை அந்த ஆபீசுக்குப் போய்வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தக் காலியான இடங்களில் ஆபீஸ்களை அமைத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

லால்குடி தாலூகாவில் ஒரு ஆபீஸ் இருக்கிறது. கணக்குகளைக் கொடுப்பதற்காக அந்த ஆபீசுக்கு மீண்டும் மீண்டும் போகவேண்டியிருக்கிறது. மணச்ச நல்லூரில் காம்ப் போட்டு மாதத்திற்கு ஒரு முறை அங்கே வந்து பார்த்து கணக்கை முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஷெட்யூல்டு பாரங்களில் கணக்குகளை எழுதவேண்டிய நிலைமை இருக்கிறது. எழுதி ஒரு வருஷம் கழித்து கணக்குகளைப் பார்க்கும்போது, முதல் பட்டியல் சரி இல்லை, டெலிவரி நோட் கொண்டு வரவேண்டும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதிலே ஏதாவது விட்டுப் போயிருந்தால் 7 சத விகிதம் வரி விதித்து விடுகிறார்கள். அப்படி ஏதாவது விட்டுப் போயிருந்தால் கூட திரும்பி

[திரு. ந. சுப்பிரமணிய செட்டியார்] [28th March 1963

யும் அதைக் கேட்டு வாங்கிக் கொள்ளுமாறு உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆர். ரெங்கசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக விற்பனை வரியை அநேகமாக ஒப்புக்கொண்டு அதிலே செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றி மட்டும் இப்போது எல்லோரும் எடுத்துப் பேசுகிறார்கள். ஆகவே, விற்பனை வரியை எடுத்து விடவேண்டுமென்ற பிரச்னை எழவில்லை. விற்பனை வரியைப் பொறுத்தவரையிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. எங்கள் ஊரிலே சில வியாபாரிகளோடு பேசிக்கொண்டிருக்கும்போது, 'விற்பனை வரியை இந்த ஆண்டு உயர்த்தவில்லையா?' என்று கேட்டார்கள். விற்பனை வரியை உயர்த்தவில்லையா என்று கேட்கிறார்களே என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவுக்கெவ்வளவு விற்பனை வரி உயருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு லாபம் கிடைக்குமென்று அவர்கள் சொன்னார்கள். உயர்த்தப்படுகின்ற விற்பனை வரியை லாபமாக வைத்துக் கொள்ளுகிறோம் என்பதை அவர்கள் அந்த மாதிரிச் சொன்னார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இப்போது ஆயில் எக்ஸ்பெல்லர்களுக்கு எக்சைஸ் டியூட்டியை எடுத்து விட்டார்கள். அதன் காரணமாகத் திண்டுக்கல்லில் ஆயில் எக்ஸ்பெல்லர் வைத்திருக்கிறவர்கள் மிகவும் கவலைப் பட்டார்கள். வரியை எடுத்து விட்டதன் காரணமாக எண்ணெயை மிகமிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த வரியைக் கொண்டு வருவதற்காக ஏதாவது ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கூட என்னிடம் சொன்னார்கள். இதிலிருந்து வரிகளை எடுத்து விடுவதால் கூட எவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது என்பதை நாம் எல்லோரும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

விற்பனை வரிச் சட்டத்திலே அர்த்தம் புரியாதபடி சில விதிகள் இருக்கின்றன. பொதுவாக எடுத்துக் கொண்டால் இன்று சொசைடிகள் சம்பந்தப்பட்ட வரையில் விவசாயிகள் கொண்டு வந்து வைக்கக் கூடிய பொருள்களை வியாபாரிகளுக்கு விற்றுக் கொடுக்கிறார்கள். அந்தப் பொருள்களைப் பொறுத்தவரையில் சொசைடிக்கு வரக்கூடியதெல்லாம் கமிஷன்தான். கமிஷன் வரக் கூடிய அளவில், கமிஷனைப் பொறுத்த மட்டில் வரிகள் போடுவதில்லை. விற்பனை செய்யப்படுகிற பொருள்கள் அத்தனைக்கும் விற்பனை வரி கட்டவேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. அந்த நிலைமையில் சொசைட்டிகள் அத்தனையும் அநேகமாக விற்பனை வரி கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக நல்ல முறையில் நடக்காததன் காரணமாக சொசைடிகளை நல்ல நிலையில் நடத்த முடியாமல் மூடிவிடக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. சொசைட்டிகள் சம்பந்தப்பட்ட வரையில் நல்ல முறையில் விற்பனை வரியைக் கட்டி வியாபாரம் செய்தால், மற்ற வியாபாரிகள் விற்பனை வரி இல்லாத முறையிலே விற்று அதிக லாபம் சம்பாதிக்க ஏதுவாகிறது. விற்பனை வரியைக் கொடுக்காது ஏமாற்றி விட்டு விற்பனை செய்து விடுகிறார்கள்.



28th March 1963] [திரு. ஆர். ரெங்கசாமி]

ஆயில் எக்ஸ்பெல்லர் மில்களில் போய்ப்பார்த்தால் மலை மாதிரிக் கடலைப்பொட்டு வைக்கப்பட்டிருக்கும். ஆனால் அங்குள்ள கணக்குகளுக்கும், அங்கு விற்கப்பட்ட கடலைக்கோ, எண்ணெய்க்கோ சம்பந்தமே இருக்காது. அரிசி விற்பனையைப் பொறுத்த மட்டில் பார்த்தால் கூட சுமார் 1½ லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் கணக்கில் வருகிறது. ஆனால் ரைஸ் மில்களில் ஊருக்கு 50 மில்கள் வேண்டுமென்று கேட்கிறார்கள். அங்கு இருக்கிறவர்கள் சாப்பிடக்கூடிய அரிசிதானா என்று கூட யோசிக்கவேண்டியிருக்கிறது.

விவசாயிகள் மாடு விற்பது, வாங்குவது போன்ற காரியங்களுக்கெல்லாம் இப்போது விற்பனை வரி போடுகிறார்கள். சாதாரணமாகச் சந்தையில் நூற்றுக்கணக்கான மாடுகள் விற்கப்படுகின்றன. இவ்வளவு மாடுகள் விற்றதற்கு விற்பனை வரி கட்டவேண்டுமென்று திடீரென்று உத்தரவிடுகிறார்கள். தேளுக்கு விஷம் இருப்பது போல், ஒருசில விற்பனை வரி ஆபீசர்கள் கோபம் வந்த உடனே நினைத்த இடத்திலே இஷ்டப்படி வரி கட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் கஷ்டமான சூழ்நிலை ஏற்படுகிறது. மாடுகள் விற்கும்போது எப்படிக் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று விவசாயிகளுக்குத் தெரியாது. மாடுகளை விற்கும்போது விற்பனை வரி போட வேண்டாமென்று அரசாங்கம் உத்தரவிடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட சொசைட்டிகள் விற்கும் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. பி. வி. சீராமுலு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று விற்பனை வரி மான்யத்தின்மீது என் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் கொண்டு வந்துள்ள வெட்டுப்பிரேரணையின் மீது நான் சில வார்த்தைகள் கூற இருக்கிறேன். விற்பனை வரியில் இரண்டு வித வரிகள் உண்டு. ஒன்று நேர்முகமான வரி, மற்றொன்று மறைமுகமான வரி. நேர்முகமான வரியை எப்படி வசூல் செய்கிறார்கள், மறைமுகமான வரியை எப்படி வசூல் செய்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். விற்பனை வரியை எடுத்துக் கொண்டால் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் உண்டான தொடர்பு என்ன, அது எப்படி, எந்தக் காரணத்தைக் கொண்டு 1 சத விகிதம் இருந்ததை 2 சத விகிதம் ஆக்கியிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், மத்திய அரசாங்கத்தில் இருந்து வரி வசூல் செய்வதில் நம் மாநில அரசாங்கத்திற்கு என்ன பங்கு? அதனால் நமக்கு லாபமா அல்லது நஷ்டமா? நான் ஒன்று கூற விரும்புகிறேன். **Central Sales-tax adopted by Government, Chapter IV, Section 14'** பிரகாரம் ஆயில்

[திரு. பி. வி. சீராமுலு] [28th March 1963

ஸீட்ஸ், எண்ணெய் வித்துக்கள் நிலக்கரி பஞ்சு பருத்தி ஆடைகள், தோல், இரும்பு, பருத்தி நூல் இதற்கெல்லாம் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இட்டார்சி அல்லது பம்பாயில் ஒரு வியாபாரி சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸிலிருந்து தப்ப வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏனெனில், சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் வந்த பிறகு இட்டார்சியில் ஒரு வாகன் எள் அல்லது கடலைக்காய் வாங்கினால் இங்கிருந்து 'ஸி' பாரம் கொடுக்கவேண்டும். 'ஸி' பாரம் கொடுக்கவில்லை என்றால் லோக்கலிலே 2 சத விகிதத்திற்கு விற்று விடுவது என்றால், நம் மாநிலத்திற்கு 15,000 வாகன்கள் வருகிறது என்றால் இதனால் நமக்கு லாபமா நஷ்டமா? 'ஸி' பாரம் வைத்தால் நமக்கு பங்கு உண்டு. ஆனால் மத்திய அரசாங்கம் அந்தந்த மாநிலங்களுக்கு என்று வைத்துக் கொண்டு மாநிலத்தின் மூலம் நம் மாநிலத்திற்கு விற்றால் வியாபாரம் இல்லாமல் இப்போது வாகன்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதற்காக, இந்த அரசாங்கம் அல்லது அதிகாரிகள் இம்மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும் நடக்கும் வியாபார நுணுக்கங்களை அறிந்து எந்தளவு இதில் தவறு ஏற்பட்டிருக்கிறது, எந்தளவு தவறு இல்லை என்று இது வரையில் கண்டு பிடித்ததாகக் கூறமுடியாது. அண்டை மாநிலத்தில் இதுபோல் நடக்கிறது என்றால் வெளி மாநிலங்களுக்கும் நாம் இங்கிருந்து அனுப்புவோமானால் 'ஸி' பாரம் இல்லாமல் அனுப்ப ஏற்பாடு செய்கிறார்கள் வியாபாரிகள். 'ஸி' பாரம் வேண்டுமென்று எ.சி.டீ.ஓ. மூலம் வாங்கிவிட்டோம். வாங்கிய பிறகு நமக்கு வரும் குட்ஸ் மூலம் வருகிறது. ரயில் மூலம் வருகிறது என்று பார்த்து அவர்கள் பாங்க் மூலம் சர்க்கை அனுப்புகிறார்கள். சர்க்கை அனுப்பி, யார் பேரில் அனுப்பினாலும் சரி அனுப்பாவிட்டாலும் சரி, இந்த டிக்ளயேர்ட் குட்ஸை 8 சத விகிதம் எறை கொடுத்து விட்டு இங்கு இருந்து விடுகிறார்கள். 'ஸி' பாரம் கொடுத்தால்தான் சரக்கு வரும் என்று எண்ணி வியாபாரம் நடத்துவதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் முடிவு அப்படியல்ல.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ், State of Origin எந்த ராஜ்யத்தில் விற்கிறார்களோ அந்த ராஜ்யத்தைச் சேர்ந்தது. இட்டார்சியில் எள் விற்றால் சேல்ஸ் டாக்ஸ் 2 சத விகிதம் மத்திய பிரதேசுக்கு போகிறது. லோக்கலில் விற்றாலும் அந்த 2 சத விகிதம் மத்திய பிரதேசுக்குத்தான் போகும் ஆகவே எப்படி நஷ்டம் ஏற்படுகிறது என்று விளக்கினால் பரிசீலிக்கமுடியும்.

திரு. பி. வி. சீராமுலு : நமக்கு 'ஸி' பாரம் மாநில அரசாங்கம் மூலம் கொடுக்கிறார்கள். நாம் ஒரு வாகன் வாங்குகிறோம் என்று வைத்துக் கொள்வோம். இட்டார்சியில் வாங்கினால் அவர்களுக்கு 'ஸி' பாரம் வேண்டாம் உனக்கு 2 சத விகிதம் போட்டு 10 வாகன் வேண்டுமானால் பாங்க் மூலம் அனுப்புகிறேன் என்று சொல்கிறார்கள். டிக்ளேர்ட் குட்ஸ் என்று குறிப்பிடப்பட்டிருக்



28th March 1963] [திரு. பி. வி. சீராமுலு]

கிறது இங்கே. இங்கு வியாபாரம் கேட்கிறார்கள், அவர்கள் இதை அங்கே வேண்டாமென்று சொல்கிறார்கள், இப்படியிருக்கும் போது நமக்கு எப்படி லாபம் கிடைக்கிறது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் கொடுத்தாலும் சரி அல்லது லோக்கல் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் கொடுத்தாலும் சரி அந்தப் பணம் எந்த இடத்தில் விற்பனை செய்யப்படுகிறதோ அந்த ராஜ்யத்திற்குத்தான் சேரும்: அதனால நமக்கு நஷ்டம் வராது.

திரு. பி. வி. சீராமுலு : இந்த மாநிலம் பூராவும் ஒரு மாதிரியாக வியாபாரம் நடக்கிறதா என்று பார்த்தால் சேலம் மாவட்டத்தில் நடக்கும் வியாபாரத்திற்கும் கோவை மாவட்டத்தில் நடக்கும் வியாபாரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. சேலத்தில் 'ஸி' பாரம் வேண்டாமென்று சொல்கிறார்கள், ஈரோட்டில் 'ஸி' பாரம் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். 'ஸி' பாரம் கொடுக்கவில்லை என்றால் வியாபாரிகள் இந்த சர்க்காருக்கு 7 சத விகிதம் கட்டவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஒரு மாவட்டத்திற்குள்ளதுதான் மற்றவற்றிற்கும் இருக்கவேண்டும். ஒரு இடத்தில் 'ஸி' பாரம் வேண்டாமென்று கூறும்போது வேறு இடத்தில், ஈரோட்டில் 7 சத விகிதம் கட்டித்தான் அஸெஸ்மென்ட் செய்யவேண்டும், இல்லாவிட்டால் உங்கள் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வோம் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். பின்னர், பம்பாய் அல்லது கல்கத்தாவிலிருந்து வேறு சாமான்கள் வேண்டுமென்று 'ஸி' பாரம் கொடுத்தால் இதற்கு 'ஸி' பாரம் கொடுக்கப்பட்டது, 7 சத விகிதம் கொடுக்கவேண்டுமென்று அதிகாரிகள் கூறுகிறார்கள். எனக்கு இரண்டு மூன்று இடங்களில் இருந்து பெல்ட் வருகிறது என்றால் அதற்கு 'ஸி' பாரம் கொடுக்க வேண்டுமா, கூடாதா? 'ஸி' பாரம் கொடுத்தால் தான் மத்திய அரசாங்கத்திற்கு 1 சத விகிதம் கொடுக்க முடியும். அப்படியிருக்க 7 சத விகிதத்துக்கு வாங்குவதா, 1 சத விகிதத்துக்கு வாங்குவதா ? சில இடங்களில் 'ஸி' பாரம் வேண்டாமென்று கூறுவதும், சில இடங்களில் வேண்டுமென்று கூறுவதும், இப்படி நிலை இருந்தால் என்ன நினைப்பது. ஆக அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு வரி போடவில்லை என்று அறிநிதி நிலை அறிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே 11-30 a.m.
சமர்ப்பித்தார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது மல்டி பாய்ண்ட் டாக்ஸ் என்று சொல்லும்போது அது வரி போடுவதாக ஆகாதா? சிங்கிள் பாய்ண்டக்கும் மல்டி பாய்ண்ட்க்கும் உள்ள வித்தியாசம் Manufacturer, wholesale, retailer என்று மூன்று கைகளுக்கு மாறினால் அப்போது மூன்று வரியையும் கூட்டினால் 6 சதவிகிதம் வரும்போது வரி போடுவதாகத்தான் ஆகும். ஆகவே இந்த ஆண்டு வரி போடவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்.

[திரு. பி. வி. சீராமுலு] [28th March 1963

இந்த மாநில சர்க்கார் அதிகாரிகளுக்கு எந்த ஒரு அதிகாரத்தை கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. வெஜிடெபிள் ஆயிலை சில ரிபைனரி மில்களுக்கு விற்கிறார்கள். விற்கும்போது நெ. 17 என்ற பாரத்தை பூர்த்தி செய்யவேண்டி யிருக்கிறது. ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியார் 17 லட்சம் ரூபாய்க்கு எண்ணெ வாங்கினார்கள். நெம்பர் 17 பாரத்தை பூர்த்தி செய்து கொடுத்தால் ஒரு சதவிகிதம்தான் வரி கொடுக்கமுடியும். மூன்று சதவிகிதம் கொடுக்கமுடியாது. அந்த பாரத்தினுடைய விதி அப்படி இருக்கிறது. அந்த பாரத்தை பூர்த்தி செய்து கொடுக்கிறோம். நீங்கள் வியாபாரம் செய்தால் செய்யுங்கள், இல்லாவிட்டால் வேண்டாமென்று சொல்கிறார்கள். மார்க்கெட் ஸ்தம்பித்துவிடக்கூடாது என்ற காரணத்தால் 17-ம் நம்பர் பாரத்தின்படி 1 சதவிகிதம் வரி போட்டு விற்றுவிட்டோம். ஆனால் அந்த பாரத்தை வைத்துக்கொண்டு ஸேல்ஸ் டாக்ஸ் ஆபீஸில் தணிக்கைக்குச் செல்லும்போது அவர்கள் அதை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். மூன்று சதவிகிதம் வரி வாங்குவதற்கு ஒரு சதவிகிதம் வாங்கியிருக்கிறார்கள். 'நீங்கள்தான் குற்றவாளிகள். அந்த மூன்று சதவிகிதத்தை நீங்கள்தான் கொடுக்கவேண்டும்' என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் ஹிந்துஸ்தான் லீவர் கம்பெனியாரை கேட்டபோது ஹைகோர்ட்டில் வேண்டுமானாலும் ரிட் மனு போடுங்கள், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லிவிட்டார்கள். கடைசியாக எங்களுடைய பணம்தான் போய்விட்டது.

1958-59-ம் ஆண்டு வியாபாரிகள் ஏ-3 நமூனாப்படி அந்தந்த மாதத்திற்கு என்னென்ன turnover ஆகிறதோ அதைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். 1959-60-ல் ஏ-2 ஆக அந்த பாரத்தை மாற்றினார்கள். ஏ-2 ஆக மாற்றியது ஸிங்கிள் பாய்ண்ட் வருவதற்காகத்தான். ஸிங்கிள் பாய்ண்ட் வந்தால் ஏ-2 பாரம் பிரகாரம் அந்தந்த வியாபாரிகள் தங்களுடைய கணக்கை பார்த்து வரி போட்டு வந்தார்கள். அப்படி இருக்கும்போது சில நாட்களுக்கு முன்பு இந்த மன்றத்திலே அமைச்சர் அவர்கள் செக்ஷன் 13-ஏ-ல் 'such a return என்று வாசகத்தைப்போட்டு எங்களுக்கு எந்த விதமான தீர்ப்பும் கூறாமல் இருந்துவிட்டார்கள். அந்த Such a return' என்ற வாசகத்தின்படி எப்படி வியாபாரிகள் நடந்து கொள்வது? ஒரு வியாபாரி சென்ற ஆண்டு எப்படி வரி கட்டினாரோ அதேபோல் இந்த ஆண்டும் வரி கட்டவேண்டுமோ அல்லது அந்தந்த மாதங்களில் வசூல் செய்யப்பட்டதற்கு மாத்திரம் வரி கொடுக்கவேண்டுமா என்பதை நல்லமுறையிலே விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ்க்கும், மதராஸ் ஸேல்ஸ் டாக்ஸ்க்கும் இரண்டு சதவிகிதம் வரி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸில் இரண்டு சதவிகிதமாக இருந்தால் இப்போது நம் மாநிலத்திற்கு 'declared goods' என்று வரும்போது அந்த டாக்ஸ் வருமா, வாராதா?. அப்படி வருவதாக இருந்தால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு தடவை



28th March 1963] [திரு. பி. வி. சீராமுலு]

குறிப்பிட்டிருக்கிறார்கள் — நம்முடைய ஜனத்தொகையின்படி நமக்கு அதிகமாகவே வருகிறதென்று. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் சென்னை மாநிலத்தையும் உத்தரபிரதேச மாநிலத்தையும் எடுத்துக்கொண்டால், சென்னை மாநில ஜனத்தொகை மூன்று கோடியே ஒரு லட்சத்து இருபத்தையாயிரம், உத்திர பிரதேசத்தின் ஜனத்தொகை ஆறு கோடியே முப்பத்திரண்டு லட்சத்து பதினைந்தாயிரம்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் இந்த மாதிரி தவறாகவே சொல்லிக்கொண்டு போவதால் இந்த சமயத்திலேயே திருத்திவிடலாமென்று நினைக்கிறேன். சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ்படி இந்த ராஜ்யம் மற்ற ராஜ்யத்திற்குப் பண்டங்களை விற்கிறபோது, விற்கிற பண்டங்கள் மீது இதுவரை 1 சதவிகிதம் வரியாக இருந்தது. இனி இரண்டு சதவிகிதமாக மாறும். அதுபோல உத்திரபிரதேசத்திலுள்ள பண்டங்களை சென்னை ராஜ்யத்திற்கு விற்கிறபோது உத்திரபிரதேசத்தில் என்னென்ன பண்டங்கள் விற்கிறார்களோ, அதற்கு சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸிலிருந்து 2 சதவிகிதம்கூட உத்திரபிரதேசம் எடுத்துக்கொள்ளும். விகிதாசார அடிப்படையிலே, ஜனத்தொகை அடிப்படையிலே பங்கீடு செய்வது கிடையாது.

**திரு. பி. வி. சீராமுலு:** சென்னை மாநிலத்தின் விஸ்தீரணம் பார்க்கும்போது அது 50,191 சதுர மைல். உத்திர பிரதேசத்தின் விஸ்தீரணம் 1,13,000 சதுர மைல். ஆனால் நாம் டாக்ஸ் வசூலிக்கும் கணக்கைப் பார்க்கும்போது நம்முடைய சென்னை மாநிலத்தில் 17 கோடியே 56 லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. உத்திரபிரதேசத்தில் 13 கோடி 20 லட்சம் ரூபாய்தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாகாணத்திற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்கப்படுவது 8 கோடி ரூபாய். அந்த மாகாணத்தின் கணக்குப்படி ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் அவர்களுக்கு கொடுக்கப்படுவது 15 கோடியே 60 லட்சம் ரூபாய். இதில் நாம் ஏமாறுகிறோம் என்றுதான் சொல்லவேண்டும். அந்த அடிப்படையில் அந்தந்த மாநிலத்தில் வசூலாகும் பணத்தை அந்தந்த மாநிலத்திற்கு கொடுக்கப்படுமானால் ஐந்தாண்டுத் திட்டங்களை வெகு சீக்கிரமாக, நான்கு ஆண்டுகளிலேயே முடித்துவிட முடியும்.

அடுத்தபடியாக சேல்ஸ் டாக்ஸ்-க்கு ஒரு இலக்கணம் வேண்டும். எவ்வளவு வரி போடவேண்டும், என்னென்ன முறையிலே இருக்க வேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயிக்கவேண்டும். ஸேல்ஸ் டாக்ஸ் பற்றி பேசும்போது 'more tax: more corruption, less tax, no corruption' என்று சொல்வார்கள். அதிகமாக வரிபோட்டால் அதிகமான லஞ்சத்திற்கு ஏதுவாகும். குறைவாக வரி போட்டால் லஞ்சம் இருக்காது என்று ஒரு விதி இருக்கிறது. அப்படி இருக்கும்போது அதிகமான வரியைப்போட்டால் அரசாங்கம் லஞ்சத்தை ஊக்குவிக்கிறது என்றுதான் நான் சொல்வேன். இதற்கு ஒரு உதாரணம் கூற

[திரு. பி. வி. சீராமுலு] [28th March 1963

வியாபாரியை எடுத்துக்கொள்வோம். ஒரு கடிகாரம் 100 ரூபாய்க்கு விற்ருனுல் அவன் கொடுக்கவேண்டிய ஸேல்ஸ் டாக்ஸ், டியூடி எல்லாம் சேர்ந்து 25 ரூபாய் ஆகிறது. மேற்கொண்டு நூற்றுக்கு ஐந்து ரூபாய் லாபம் வைத்து விற்ருல் நாள் ஒன்றுக்கு ஐந்து கடிகாரம் விற்பதாக வைத்துக்கொண்டால் 650 ரூபாய்க்கு வியாபாரம் செய்கிருன். அதை 30 நாட்களுக்கு கணக்கிட்டுப் பார்த்தால் 19,500 ரூபாய் வருகிறது. ஆனுல் அவனுடைய லாபத்திற்கும் முதலுக்கும் என்ன வித்தியாசம் என்று கணக்கிட்டுப்பார்த்தால் 4,500 ரூபாய் வருகிறது. கண்டிப்பாக அவன் 4,500 ரூபாய் லாபம் பெறமுடியாது. அதிகமாக வரி கேட்பதின் காரணமாக வியாபாரி தப்புக்கணக்கு வைக்கிருன். அதிகாரி, வந்தவரையில் பார்த்துக்கொள்ளலாம் என்ற வகையில் இரண்டு பேரும் பங்கு போட்டுக்கொள்கிருர்கள். இப்படி இருக்கும்போது வரியை இந்த அளவுக்கு உச்ச கட்டத்திற்கு உயர்த்தவேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். இவ்வளவு அதிகமான வரியை போட்டிருக்கும்போது 20 கோடி ரூபாய்க்கு வருமானம் வருகிறது என்ருல் இந்த வரியை குறைவாக்கினுல் நல்ல முறையிலே வரி கட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டு 20 கோடி என்பது 30 கோடி ஆக வரியின் மூலம் வரும். அதோடல்லாமல் அதிகாரிகள் சில இடங்களில் வியாபாரிகள் கொண்டு செல்லும்படியான சரக்குகளுக்கு ஆர்.ஸி. நம்பர் வேண்டும், சென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ் லைஸன்ஸ் வேண்டும். மாநில சேல்ஸ் டாக்ஸ் நம்பர் வேண்டும், பில் வேண்டுமென்றெல்லாம் சொல்கிருர்கள். வாஸ்தவம், கொடுக்க வேண்டியதுதான். அந்த வியாபாரி கொடுக்கவில்லையானுல் அவர்களுக்கு தண்டனை விதிக்கலாம். ஆனுல் லாரியில் செல்லும்போது தவறுதலாகவோ அல்லது வேறு விதமாகவோ வியாபாரி பில்லை மாத்திரம் கொடுத்து ஃபாரம் நம்பரை பில்லிலே போடவில்லை என்ற காரணத்தினுல் வியாபாரி மீது அந்த அதிகாரி ஏதாவது வரி போடவேண்டுமென்று போட்டால் நாங்கள் இங்கு கணக்கு வைத்திருக்கிறேம் என்று சொல்லி இங்கே கட்டிய ரூபாயை அங்கே பெற்றுக்கொள்ளலாம். ஆனுல் அதிகாரிகள் இது வரையிலும் எந்த வியாபாரிகள் மீதும் அந்த முறையில் செய்து கணக்குக் கொண்டு வந்ததாக இல்லை. லாரி டிரைவர் அல்லது க்ளீனர் மீது போட்டுக்கொண்டு போனுல் எந்த நியாயத்திலே நாங்கள் பெற முடியும். எந்த நியாயத்திலே குறை கூறமுடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, சேலம் மாவட்டத்திலே அதிகாரிகள் என்ன செய்கிருர்கள் என்று பார்த்தால் ஒவ்வொரு வாரத்திலும் சந்தை நடக்கும்போது அவர்கள் வந்து விடுகிருர்கள். நான் என்ன சொல்லுகிறேன் என்ருல் அவர்கள் வரவேண்டும் சர்ப்ரைஸ் விஸிட் செய்யவேண்டும். தவறுதல் செய்கிறவர்களுக்கு புனிஷ்மெண்ட் கொடுக்கவேண்டும். வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஆனுல் அதிகாரிகள் வருகின்றதன் காரணமாக வியாபாரம் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. வியாபாரச் சூழ்நிலை கெட்டு



28th March 1963] [திரு. பி. வி. சீராமுலு]

விடுகிறது. இரண்டாவது யாரையும் அவர்கள் பிடித்ததாகத் தகவல் இல்லை. அப்படிப் பிடித்தாலும் எந்த அளவுக்குப் பிடிக்கிருர்கள் என்று தெரியவில்லை. இதற்குச் சற்று அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு ஓரளவு விதிவிலக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்ருல் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே வியாபாரம் நடத்துவது மிகவும் கடினம். அந்த ஸ்தாபனங்களில் நடத்தும்படியான வியாபாரத்திற்கு இந்த மூன்று ஆண்டு காலமாக சிங்கிள் பாயிண்ட் என்பதன் காரணமாக மார்க்கெட்டிங் சொஸைட்டியில் நல்ல முறையில் நடத்த ஏதுவாக இருந்தது. இப்போது சிங்கிள் பாயிண்ட் வைக்கவில்லையென்ருல் கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு வரும்படியான ஆட்கள் வாங்க முடியாது போகும். ஏனென்ருல் பல முனைகளில் விற்பனை வரி கொடுத்து, கூட்டுறவு ஸ்தாபனமும் வரி கொடுத்து, லாபத்தைக் கூட்டி, கமிஷன் கொடுத்து வாங்குவதற்கு வியாபாரிகள் வருவதில்லை. ஆகையால் ஒரேயடியாக கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு மாத்திரம் ஏதாவது விதிவிலக்கு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரே ஒரு வார்த்தை நாட்டுச் செக்குகளைப் பற்றி நாட்டுச் செக்குகளுக்கு வரி போடப்படவில்லை. ஆனுல் அவர்களுக்கு எப்படி விதி விலக்கு என்பதை இந்த அரசாங்கமும் அதிகாரிகளும் நல்ல முறையில் பொதுமக்களுக்கு எடுத்து உரைக்கவேண்டும். ஏனென்ருல் நாட்டுச் செக்கு போட்டுத் தயார் செய்கிறவர்களுக்கு யாருக்கு இந்தச் சலுகை என்று பார்க்கும்போது ஒரு அரசியல் கட்சியில் தியாகி என்று ஒருவர் இருந்தால் எப்படி 5 ஏக்கர் நிலம் உண்டோ அதே போல நாட்டுச் செக்குகளுக்கு இந்த விதி விலக்கு உண்டு. ஏனென்ருல், அவர்கள் மில்காரர்களோடு போட்டி போட முடியாது என்ற காரணத்தைக் காட்டி, நாட்டுச் செக்குக்காரர்களுக்கு வரி இல்லை என்று சொல்லுகிருர்கள். ஆனுல் அதே பெயரிலே வைத்துக்கொண்டு பல பெரிய முதலாளிகளும் பெரிய ஆட்களும் சேர்ந்துக்கொண்டு இந்த நாட்டுச் செக்கு என்ற பெயரிலே எண்ணெயை விற்றுக்கொண்டிருக்கிருர்கள். ஆனுல் மில் எண்ணெய்க்கும் நாட்டுச் செக்கு எண்ணெய்க்கும் என்ன வித்தியாசம் என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. அதற்காக நான் ஒரு சிறு யோசனை சொல்லுகிறேன். இந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி நான் சொல்லிக்கொள்கிறேன், நாட்டுச் செக்குக்கு வரி விதித்து, அவர்களை கணக்கு வைத்துக் கொள்ளச் செய்து அவர்களுடைய கணக்கைப் பார்த்து. அந்தக் கணக்குப்படி ரிபேட் வேண்டுமென்ருல் கொடுத்துக் கொள்ளலாம். ஏனென்ருல் இந்த முறையை வைத்தால் அரசாங்கத்தை ஏமாற்றாமல் பார்த்துக்கொள்ளலாம். பத்து ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் அந்த வரியை வாங்கிக்கொள்ளலாம். ரிபேட் இன்ன முறையில் என்பதை 10,000 என்பதை 25,000 என்று வைத்துக்கொள்ளலாம், அல்லது 30,000 என்று வைத்துக்கொள்ளலாம், அல்லது 50,000 என்றுகூட வைத்துக்கொள்ளலாம். ஆனுல்

இந்தச் செக்குக்கும், மில் எண்ணெய்க்கும் வித்தியாசம் என்ன என்பதைச் சற்று ஆராய்ந்து ரிபேட் முறையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எதிர் கட்சி அங்கத்தினர் அவர்கள் கூறியது போல பெரிய மில்களில் பொட்டு அதிகமாக விற்பனை ஆகின்றன. அவர்கள் வைத்துக்கொள்கிற கணக்குக்கும், விற்பனை ஆகின்ற கணக்குக்கும் தாறுமாறாக இருக்கிறது. எங்கள் பகுதிகளில் இப்போது எந்த மில்களும் கடலைக்காய் அடிப்பதற்குக் கூலி வாங்குவதில்லை. பொட்டுக் கொடுத்தால்தான் நாங்கள் அடித்துக் கொடுப்போமே தவிர கூலி வாங்கிக்கொண்டு அடித்துத்தர மாட்டோம் என்று சொல்லிவிடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அதற்காக அதையும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. எஸ். ராமசாமி நாயுடு:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே விற்பனை வரி என்பது நிரந்தரமாக நிலைத்து நின்ற ஒரு வரி என்பதை அடிப்படையாக எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் பல விஷயங்களைப் பேசுகிறார்கள்.

. முதலிலே கணக்கு வைத்துக் கொள்வதிலே உள்ள கஷ்டம்; இரண்டாவது எந்தத் தொழில்களுக்கு வரி விதிப்பது என்பது; மூன்றாவது எந்தப் பொருள்களுக்கு வரி விதிப்பது என்பது. எல்லாவற்றுக்கும் பொதுவாக எந்த விதத்தில் வரி விதிப்பது என்பது. இந்த முறையில் இங்கே சர்ச்சை செய்யப்பட்டு வருகிறது. ஏ முதல் இஸட் வரையும் 1, 2 இலக்கமிட்ட ஃபாரங்கள் மூலமாகக் கணக்குக் கொடுக்க வேண்டியிருப்பதையும், சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படுவது பற்றியும் அங்கத்தினர்கள் பேசினார்கள். அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் பரிசீலித்து ஆவன செய்வார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். எந்தக் காரணத்தைக் கொண்டும் சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படும்படி விடமாட்டார்கள் என்பது எல்லோரும் அறிந்ததுதான். அந்த முறையில் நஷ்டம் ஏற்படாமல் செய்ய எடுத்துக் கொள்ளும் பல நடவடிக்கைகளால் ஏற்படக்கூடிய கஷ்டங்களைப்பற்றித்தான் இங்கே சட்ட சபையில் பல அங்கத்தினர்கள் பல விஷயங்களைப் பேசுகிறார்கள். முதலிலே கணக்கு வைத்துக்கொள்ள முடியவில்லை என்பது. இன்றைக்கு ஒரு சின்ன வெற்றிலை பாக்குக் கடை அல்லது ஒரு பெட்டிக் கடை வைத்திருந்தாலும் கூட அவர்கள் கணக்கு வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கணக்கு இல்லாமல் இருக்காது. யாருக்காவது கடன் கொடுத்தால்கூட அதையும் கணக்கு வைத்துக்கொண்டுதான் இருப்பார்கள். ஒரு பைசா மறந்து விட்டுவிடுகிறானா என்று பார்த்தால் அந்த மாதிரி யாரும் விட்டுவிட மாட்டான். ஆறு மாதத்திற்கு முன் பீடி வாங்கினாயே அதற்கு ஒரு நயா பைசா தரவேண்டும் என்று சொல்லி பெட்டிக் கடை வைத்திருக்கிறவன் வாங்கி விடுகிறான். விற்பனை வரியை வாங்குகிறவர்களிடத்திலிருந்து வசூல் செய்து விடுகிறார்கள். ஆனால் சர்க்காருக்கு கணக்கு வைத்துக்கொள்ளவில்லை என்ற ஓலம் மட்டும் இருந்து



கொண்டிருக்கும். பல அங்கத்தினர்கள் இங்கே பேசிய தோரணையிலிருந்து அந்த அங்கத்தினர்களும் விற்பனை வரி செலுத்துகிறவர்களாகவும் விற்பனை வரி செலுத்தும் தொழிலில் ஈடுபட்டவர்களாகவும் இருப்பார்களோ என்ற சந்தேகம் தோன்றுவதால், நான் சொல்லுவதைப்பற்றி யாரும் கோபித்துக்கொள்ளக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் . . . .

**திரு. பி. வி. சீராமுலு:** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவதைப் பார்த்தால் எதிர் கட்சியில் இருப்பவர்கள் விற்பனை வரிக்கு டிமிக்கி கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். ஓரளவுக்கு நாங்களும் விற்பனை வரி செலுத்திக்கொண்டுதான் இருக்கிறோம் . . . .

**கனம் உதவி சபாநாயகர்:** இந்த மாதிரி கனம் அங்கத்தினர் சொல்லவில்லை. கனம் அங்கத்தினர் ராமசாமி நாயுடு அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**திரு. எஸ். ராமசாமி நாயுடு:** இப்போது பேசிய அங்கத்தினருக்கு எதிர் கட்சி எது என்றுகூடப் புரியாமல் இருப்பது பற்றி மிகவும் வருந்துகிறேன். இன்றைய தினம் எல்லோரும் கணக்கு வைத்துக்கொள்கிறார்கள். எப்படி கணக்கு வைத்துக் கொள்கிறார்கள் என்றால் வாஸ்தவத்தில் இருக்கக்கூடிய ஒரு கணக்கு, பங்காளிக்காக ஒரு கணக்கு, சர்க்காருக்குக் கொடுக்க ஒரு கணக்கு, சமயத்திலே தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ள ஒரு கணக்கும் இருக்கின்றன. விற்பனைவரி அதிகாரிகள் விற்பனை வரிக்காக இந்தக் கணக்கில் எந்தக் கணக்கையாவது கைப்பற்றி விட்டு வரி போட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவைகளைக் கடையில் வைத்துக்கொள்வதில்லை. விற்பனை வரி அதிகாரி வரும்போது கணக்குக் கேட்பார்களே என்று எழுந்து ஓடிவிடுவார்கள். எந்த நிலையிலும் யார் வந்து பார்த்தாலும் பார்த்துக்கொள்ளட்டும் என்று தைரியமாக இருந்துவிடலாம் நல்ல முறையில், சரியான முறையில் கணக்குகளை வைத்துக்கொண்டுவிட்டால். ஆகையால் கணக்கைப் பற்றிப் பேசுவதிலே எந்தவித அர்த்தமும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். படிக்காதவர்கள் கடை வைக்கவில்லை. படித்தவர்கள், நயா பைசா கணக்கு எழுதுகிறவர்கள்தான் எல்லோரும். ஆகையால் அதைப் பற்றி கவலைப் படுவது வீணாக நேரத்தைப் போக்குவதாகும்.

தொழிலைப் பற்றி, சில தொழிலுக்கு விதிக்கலாம். சில தொழிலுக்கு கூடாது என்று சொல்லுகிறார்கள். சில பொருள்களுக்கு இந்த விதத்தில் விதிக்கலாம், குறைக்கலாம் அல்லது எடுத்துவிடலாம் என்று சொல்லுகிறார்கள். கூட்டலாம் என்று சொல்லுகிறவர்கள் இருக்கமாட்டார்கள். வரி விதிப்பில் கவனிக்க வேண்டிய அம்சம் என்ன என்பதை கவனிக்க மறந்து விடுகிறார்கள். விற்பனை வரி ஏற்படுவதன் மூலமாக உற்பத்தியாளர்களோ, முதலாளிகளோ, தொழிலாளர்களோ, ஹோல்சேலர்களோ, ரீடைலர்களோ எந்த விதமாகப் பாதிக்கப்படுகிறார்கள், கணக்கு வைப்பதைத் தவிர மற்றப்படி என்ன என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். வரியைப் போட்டால், வியாபாரிகள் கொடுக்கிறார்கள்; வரியை வசூலித்து சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள்.

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [28th March 1963

ஆனால், அது எங்கிருந்து வருகிறது? எந்தப் பொருளாக இருந்தாலும், எவன் அதை வாங்குகிறானோ, அவன் மீது சாடுகிறது. அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் அவர்களுக்கு நியாயம் செய்யமுடியும். விற்பனை வரி செலுத்துகிறவர்கள் என்று அந்தக் கோணத்தில் பார்த்தால், நமக்கு ஒன்றுமே புலப்படாது. அது நியாயமும் இல்லை. இந்த விற்பனை வரியை காமதேனு, கற்பக விருட்சம் என்றெல்லாம் ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது. நியாயம்தான். இதில் அதிக வருவாய் வருகிறது. நியாயமாகக் கொடுக்கவேண்டிய வரியை ஒளிக்காமல் கொடுத்தார்களேயானால், இன்னும் அதிகமாக வசூல் ஆகும். ஆனால் ஒன்று. இந்தக் காமதேனு, பால் கொடுக்க, எதை தன் மேய்ச்சல் தரையாக வைத்துக்கொண்டிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டும். நிறையப் பால் கொடுக்க, வற்றாது கறந்துகொண்டே இருக்க, அதற்கு மேயும் தரையாக இருப்பது 100-க்கு 80 பங்கு விவசாயிகள் கிராமத்திலிருக்கும் விவசாயத் தொழிலாளர்களும், நகரத்திலிருக்கும் தொழிலாளிகளும், இவர்கள் தலையிலே மேய்ந்து கொண்டுதான் அது பால் கொடுக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. கற்பக தரு என்கிறார்கள். ஆம், கற்பக தருதான். ஆனால், அதனுடைய பக்க வேர், சல்லி வேர்களெல்லாம், முதலாளிகளைத் தவிர மற்ற விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும், அவர்களுடைய உடம்பெல்லாம் பாவி, அவர்களைக் கசக்கி சாரைப் பிழிந்து பலனை எடுத்துத் தருகிறது. நமக்குப் பலன் கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே வருமானம் எவ்வளவானாலும், அடிப்படையில் கஷ்டத்தை கொடுக்கின்ற இடத்தில் அதை நிவர்த்திக்க வேண்டும். பொருள்களை உபயோகிக்கிறவர் கஷ்டப்படாமல், வரிப்பளுவை அதிகமாக சுமக்காமல்; ஏழை விவசாயிகள் நிறைந்த இந்த நாட்டில், அவர்கள் சுலபமாக வரியைச் சுமக்கும் முறையில் அதை அமைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு இருக்கவேண்டும். அந்த முறையில் ஏழை மக்களின் சர்க்காரை நடத்துகிறவர்கள் இந்த வரித் துறையைச் செப்பனிடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. உபயோகிக்கும் சில சாமான்களுக்கு விலக்கு கொடுக்கலாம் என்பதிலும் நியாயம் இருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் பௌடர் பூசிக்கொள்பவர்களுக்கு அந்த பௌடர் மீது வரி விதிக்கலாம்; ஆனால், இந்த தமிழ் நாட்டில் அரைத்துப் பூசும் மஞ்சளுக்கு வரி போட வேண்டுமா என்று சிந்திக்க வேண்டும். வரி யார்மேல் விழுகிறது, இன்றைய தேசீய நிலையில் வருவாய்க்கு உகந்த அளவில் எப்படிச் செய்வது, விவசாயிகளுக்குப் பாரம் இல்லாமல், உற்பத்தியாளர்கள் ஆனாலும் சரி, வியாபாரிகளானாலும் சரி, அவர்களைக் கவனியாமல் வரி அந்த வகையில் விதிக்கப்படவேண்டும் என்பதில் கவலை கொண்டு வரிமுறையை அமைக்க கனம் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வரி செலுத்துபவர்களில் பெரும்பாலோர்களுக்கு தோள்மேலே வரி கொடுக்கும் நிலை இருக்கிறது. அந்தக் காரணத்தினால், வரிப் பளுவை அதிகப்படுத்தக் கூடாது. விவசாயி நெரிஞ்சி முள் குத்தினால் பாராட்டமாட்டார்கள். ஆனால், முள் என்றால் குனிந்து



28th March 1963] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

பிடுங்குவான். அதனால் இங்கே காடெல்லாம் நெரிஞ்சுக்காடாக ஆக்கிவிடாமல், வசதி செய்து கொடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விற்பனைவரி இலாகாவிற்குக் கோரியிருக்கும் மானியத்தை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி சம்மந்தமாக சொல்லப்பட்ட பல கருத்துக்களுக்காக முதன் முதல் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த விவாதத்தில் பங்கு கொண்டவர்கள் பல யோசனைகள் சொன்னார்கள். சில தவறுகள் இருக்கின்றன என்றும் எடுத்துக் காட்டினார்கள். அவை இரண்டுக்கும் நான் கடமைப் பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதன் முதலிலே நான் சொல்லவேண்டிய பதிலை ஓரளவுக்கு கனம் அங்கத்தினர் திரு. ராமசாமி நாயுடு சொல்லிவிட்டார்கள். அதற்கு நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். வியாபாரம் செய்கிறவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளாமல் வியாபாரம் செய்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் வியாபாரம் சரியாக நடைபெறாது, அவர்கள் சீர் கெட்டுப் போய் விடுவார்கள். கணக்கை எந்த வகையிலாவது வைத்திருக்கலாம். ஆனால், கணக்கில்லாமல் மட்டும் யாரும் வியாபாரம் செய்ய மாட்டார்கள். கணக்கு வைத்துக் கொள்வது சிரமமாக இருக்கிறது, அதற்காக விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று சொல்வது பொருத்தமானது ஆகாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். சிறு வியாபாரிகளுக்கு சலுகை கொடுக்கவேண்டும் என்பது நியாயம் தான். அதற்காகத்தான் 10,000 வரை விதிவிலக்கு என்றும், 50,000 வரை கணக்குக் காட்டாமல் மொத்த விற்பனையின் மீது ஸ்லாப் ரேட்டாக கொடுக்கலாம் என்றும் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த சட்ட சபையில் முன்னால் 25,000 வரை ஸ்லாப் ரேட் கொடுக்கலாம் என்று போட்டு இருந்தோம். பரிசீலனை செய்த பிறகு, அதை 50,000 வரை ஸ்லாப் ரேட்டாகக் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே, சிறு வியாபாரிகள் ஸ்லாப் ரேட் கொடுப்பதால், தொல்லை தொந்தரவுகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம் என்று திட்டவட்டமாகக் கூற முடியும்.

அடுத்தாற்போல், இந்த உணவுப் பண்டங்கள் மீது விலக்கு அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்த விவாதம் இன்று நேற்று அல்ல. 1957-ம் வருஷ ஆரம்பத்திலேயே இதைச் சொன்னார்கள். இதை நமது சட்டசபை ஆய்வுக் குழு, செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்து, அந்த பரிசீலனையின் பேரில் 1 பர்செண்ட் போடுவது என்று குறைந்த அளவிலே நாம் நிர்ணயம் செய்தோம், 2 பர்செண்ட் போடும் வரியை 1 பர்செண்ட் ஆகக் குறைத்தோம். இன்றைக்கு, பக்கத்தில் இருக்கும் கேரள ராஜ்யத்திலே உணவுப் பொருள்கள்மீது போட்டிருக்கிறார்கள். ஆந்திராவில் வரி 3 பர்செண்ட் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம் ராஜ்யத்திலே 1 பர்செண்ட் என்று விதித்திருக்கிறோம். ஆகவே, நம் ராஜ்யத்திலே அதிகமாகவோ மக்கள் பாதிக்கப்படும்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th March 1963

அளவிலோ உணவுப் பொருள்கள்மீது வரி விதித்திருக்கிறோம் என்று சொன்னால், அது சரி இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வரியைக் குறைக்க வேண்டும் என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். இரண்டு பர்செண்ட் போட்டு இருப்பதால்தான் சர்க்காருக்கு தங்களுக்கு வரவேண்டிய வருவாயைப் பெறவில்லை, அதை ஒரு பர்செண்ட் ஆகக் குறைத்தால், உடனே அவர்களுக்கு முன்பு இருந்த வருவாயே வந்து விடும் என்று சொன்னார்கள். அதையும் பரிட்சை செய்து பார்த்தோம். பார்த்ததில் 1 பர்செண்ட் விகிதத்தில் வருவாய் பொதுவாகக் குறைந்துவிட்டது. வரி கொடுப்பதும், கொடுக்காததும் விகிதத்தைப் பொருத்தது இல்லை என்பது எங்களுக்குப் புரிந்தது. இந்த வரி, பண்டம் எவ்வளவு அதைத் தாங்க முடியும், ஏற்றுக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் விதிக்கப்படுகிறது. அதை ஒட்டிப் பார்க்கும்போது, நம் ராஜ்யத்தில் இன்றைக்கு ஒரு பர்செண்ட் கொடுப்பதால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சரியாகாது என்று நினைக்கிறேன்.

பாலுக்கு ஒரு பர்செண்ட்தான் வரி கன்ஸ்யூமருக்கு; ஒரு பர்செண்ட்; கூட்டுறவு சொசைடிகள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் விற்று வாங்கிக்கொள்கிறார்கள் என்றால், இதற்கு எந்த இடத்திலேயும் வரி கிடையாது. உபயோகிக்கிறவன் வாங்கும்போது அதற்கு ஒரு பர்செண்ட் வரி.

அடுத்தாற்போல், எல்லோரும் ஒரு வார்த்தை மீண்டும் மீண்டும்
12-00 noon. சொன்னார்கள். வரி மேல் வரி போடுகிறோம், 'டாக்ஸ் ஆன் டாக்ஸ்', இது ரொம்பத் தவறு என்று சொன்னார்கள். எந்தப் பொருளாதார நிபுணர் இதைச் சொன்னாரோ எனக்குத் தெரியாது. இன்றைக்கு உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் 'டாக்ஸ் ஆன் டாக்ஸ்' போட்டுக்கொண்டேதான் இருக்கிறார்கள். போடாத இடம் கிடையாது. கஸ்டம்ஸ் டியூடி போட்ட பண்டங்களின்மீது பர்சேஸ் டாக்ஸ் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். எக்ஸைஸ் டியூடிபோட்ட பண்டங்களின்மீது ஸேல்ஸ் டாக்ஸ் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். 'டாக்ஸ் ஆன் டாக்ஸ்' போடுவது ஏதோ தவறு போலவும், 'டாக்ஸ் ஆன் டாக்ஸ்' போட்டுவிட்டார்கள் என்று அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லுவது கொள்கை பூர்வமாக சரியானது அல்ல. நடைமுறையில் எல்லா இடங்களிலும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதை யாரும் இல்லை என்று மறுக்க முடியாது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** ஸேல்ஸ் டாக்ஸ் மீது ஸேல்ஸ்டாக்ஸ் கலெக்ட் பண்ணுகிறார்கள் என்று தான் சொன்னேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எக்ஸைஸ் டியூடி போட்டிருக்கும் பண்டங்களுக்கு ஸேல்ஸ் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். ஸேல்ஸ் டாக்ஸ் போடுவதின்பேரில் ஸேல்ஸ் போடக்கூடாது என்று அவர்கள் சொல்லுவதும் சரியல்ல. 'டாக்ஸ் ஆன் டாக்ஸ்' என்ற ஒரு கொள்கை அடிப்படையிலேதான், ஒரு வரி விதித்தால்



28th March 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மற்றொரு வரி விதிக்கக்கூடாது என்றுதான் நான் புரிந்துகொண்டேன். கனம் அங்கத்தினர் ஒரு வரி விதித்தால் மற்றொரு வரி விதிக்கக்கூடாது என்பது இல்லாமல், ஒரு வரி விதித்தால் அந்த விதத்தில் மற்றொரு வரி விதிக்கக்கூடாது என்று சொல்வார்களேயானால், அதுவும் கொள்கை அடிப்படையில் பொருந்தாது, சரியான கருத்து அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு எல்லா பண்டங்களிலும் பலவிதமான வரிகள் பல காரணங்களுக்காக பல துறைகளில் பல கட்டங்களில் விதிக்கப்படுகிறது. உதாரணமாக, காம்பொனெண்டு பார்ட்ஸ் எடுத்துக்கொண்டால், ஒரு என்ஜின் செய்யவேண்டுமென்று சொன்னாலும் சரி, ஏதாவது ஒரு இயந்திரம் என்று சொன்னாலும்கூட, அதற்குப் பல பாகங்கள் இருக்கின்றன. அந்தப் பாகங்களை விற்கிறபொழுது அதற்கு வரி விதிக்கின்றோம். அதற்கெல்லாம் வரி விதித்திருப்பதால், ஒரு என்ஜின் செய்யும்பொழுது அந்த என்ஜினுக்கு வரி விதிக்கக்கூடாது என்று சொன்னால், அது எந்த நாட்டிலும் நடைமுறையில் இல்லை. அந்த மாதிரி நிர்வாகத்தை 'பினான்ஷியல் அட்மினிட்டிரேஷனை' அந்த விதத்தில் செய்யமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ப்ரொவிஷனல் டாக்ஸ் சம்பந்தமாக பல கருத்துக்கள் சொன்னார்கள். இப்பொழுது நாம் அனுசரித்திருக்கிற சட்டப்படி சென்ற வருஷத்தில் எவ்வளவு டாக்ஸ் கொடுத்தார்களோ அதை ப்ரொவிஷனல் டாக்ஸாக கொடுக்கவேண்டுமென்பதுதான் விதி. ஏன் அந்த விதத்தில் செய்யவேண்டிய கணக்கு என்று அஸெஸி கொடுக்கிறார்கள். கமெர்ஷியல் டாக்ஸ் நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால், ப்ரொவிஷனல் டாக்ஸ் ஆபீஸர் இதை ஒத்துக்கொள்ளமாட்டேன், இது சரியில்லை' என்று சொல்லுகிறார். இதனால் இரண்டு பேர்களுக்கும் தகராறுகள் ஏற்படுகின்றன. இந்தத் தகராறுகளெல்லாம் தீரவேண்டும் என்பதற்காகத்தான் 'நீங்கள் சென்ற வருஷம் கொடுத்த டாக்ஸை கொடுத்துவிடுங்கள். பின்னால் ரிபண்டு வாங்கிக்கொள்ளலாம், அல்லது அடுத்த வருஷக் கணக்கில் அட்ஜஸ்ட் செய்துகொள்ளலாம்' என்று விதி செய்திருப்பது உண்மையிலேயே வியாபாரிகளுக்கு நன்மையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வியாபாரத்தை நிறுத்திவிட்டாலும், அவர்கள் மீது வரி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியல்ல. 'வியாபாரத்தை நிறுத்திவிட்டேன்' என்று நோட்டீஸ் கொடுத்தால், அதிகாரிகள் வந்து பரிசீலனை செய்து பார்த்து, அவர் வியாபாரத்தை நிறுத்திவிட்டார் என்று தெரிந்தால் அப்பொழுது வரி போடமாட்டார்கள். நோட்டீஸ் கொடுக்காமல் இருந்துவிட்டு, 'நான் வியாபாரத்தை நிறுத்திவிட்டேன்' என்று சொன்னால், அதை அதிகாரிகள் பரிசீலனை செய்து பார்த்துத்தான் சொல்ல வேண்டும். யாராவது சென்ற வருஷம் ஸேல்ஸ் டாக்ஸ் கொடுத்த வியாபாரி இந்த வருஷத்தில் வியாபாரத்தை நிறுத்திவிட்டால், 'நான் வியாபாரத்தை நிறுத்திவிட்டேன். ஸேல்ஸ் டாக்ஸ் போடும்படி

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th March 1963

யான நிலைமை இடையாது' என்று அவர்கள் நோட்டீஸ் கொடுத்து விட்டால், அதிகாரிகள் வந்து பரிசீலனை செய்து பார்த்து வியாபாரம் நிறுத்தப்பட்டிருந்தால் அவரை வரி கட்டும்படியாகச் சொல்ல மாட்டார்கள் அதிகாரிகள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சங்கரன் அவர்கள் சிங்கிள் பாயிண்டு, மல்டி பாயிண்டு டாக்ஸ் சம்பந்தமாக நமக்கு அனுபவத்தில் ஏற்பட்ட கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். சிங்கிள் பாயிண்டு டாக்ஸ் வரி போடுவது பெரிய வியாபாரிகளுக்கும், சாதாரண வர்த்தகம் செய்கிறவர்களுக்கும் நன்மை. மல்டி பாயிண்டு டாக்ஸ் போடுவது சிறு உற்பத்தியாளர்களுக்கு நன்மை. வியாபாரிகள் வந்து சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரியலிஸ்ட்ஸ் மல்டி பாயிண்டு டாக்ஸுக்கு மாற்றிவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கடந்த 4, 5 வருஷங்களாக இந்தப் பிரச்சனை தொடர்ந்து வந்திருக்கிறது. இது எப்படி என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு சைகிள் செய்வதாக வைத்துக்கொள்ளுங்கள். குறைந்தது 4 சதவிகிதம், 5 சதவிகிதம் என்று ஏதோ வரி போட்டால்கூட, பெரிய வியாபாரிகள் அதை விற்கும்பொழுது அந்தக் கணக்கில் வரி கொடுத்துவிடுகிறார்கள். அதே சமயத்தில் இரும்பு சாமான்கள் வியாபாரம் செய்கிற காய்லான் கடையை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் இரும்புக் குடம் பக்கெட் போன்றவைகளையெல்லாம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஸிங்கில் பாயிண்டு டாக்ஸ் என்று போட்டால், ரூபாய் 4,000, 3,000 5,000 அதாவது மாதம் ஒன்றுக்கு ரூபாய் 400, 500-க்கு வியாபாரம் பண்ணக்கூடியவர்களுக்கும் வரி போடக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. நாம் ஸிங்கிள் பாயின்ண்டு டாக்ஸ் போடும்பொழுது, 'ஐயர்ன் அண்டு ஸ்டீல் ஆர்டிகிள்ஸ்' என்றுதான் போடவேண்டியிருக்கிறது. அப்பொழுது பெரிய வியாபாரிகளாக இருந்தாலும், சிறிய வியாபாரிகளாக இருந்தாலும், அந்தப் பண்டங்களை வியாபாரம் செய்தால் அவர்கள் வரி கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. இந்த முரண்பாடு சமூகத்தில் இருக்கத்தான் இருக்கும். பெரிய வியாபாரிகளுக்கு, பெரிய உற்பத்தியாளர்களுக்கு ஒருமுனை வரி சாதகம். சிறிய உற்பத்தியாளர்களுக்கு பலமுனை வரி சாதகம். தமிழ் நாட்டில் எந்த அளவுக்கு சிறு தொழில்கள் வளரவேண்டுமென்று நினைக்கிறோமோ, எந்தத் தொழில்கள், சிறு தொழில்கள் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது என்று நினைக்கிறோமோ, அவை எல்லாவற்றிலும் இந்த விதமான முரண்பாடு ஏற்படுகிறபொழுது, சிறு தொழில்களுக்கு ஆதரவு அளிக்கின்ற முறையில்தான் நாம் விற்பனை வரியை மாற்றி அமைக்கிறோம், அப்படித்தான் அமைப்போம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஸிங்கிள் பாயண்டு டாக்ஸ்தான் நல்லது என்று பேசுவதும் அர்த்தமற்றது. மல்டி பாயண்டு டாக்ஸ் எப்பொழுதுமே இருக்க வேண்டுமென்று சொல்லுவதும் அர்த்தமற்றது. எந்தப் பொருள்கள் பாதிக்கப்படும்,



28th March 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

யார் பாதிக்கப்படுவார்கள் என்பதைப் பார்த்து, அந்தப் பொருள்களின் அடிப்படையிலே யாருக்கு நாம் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பதை நிர்ணயம் செய்துகொண்டு, அந்த அடிப்படையிலே இன்றைக்கு வரி விதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சங்கரன் அவர்கள் இன்னொரு விஷயத்தைப் பற்றியும் சொன்னார்கள். ரிட்ராஸ்பெக்டிவ் ஆபரேஷன் அடிக்கடி கொடுத்துவிடுகிறார்கள், ஏதாவது புதியதாக ஒரு இண்டர்ப்ரடேஷன் கொடுக்கின்ற காலத்தில், அதனால் பாதகம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அவர் சட்டம் தெரிந்தவர் என்ற காரணத்தினாலே அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு செக்ஷன் அல்லது ஒரு கிளாஸுக்கு ஒரு இண்டர்ப்ரடேஷன் கொடுப்போமானால், அந்த இண்டர்ப்ரடேஷன் கொடுத்த தேதியிலிருந்து அந்த அர்த்தம் என்பது அல்ல. ஆரம்பத்திலிருந்து அதுதான் அர்த்தம், சட்டப்படி பொருளாகும். ஆகவேதான் ரெவின்யூ போர்டார் ஒரு இண்டர்ப்ரடேஷன் கொடுத்தாலும், அல்லது அரசாங்கம் கொடுத்தாலும், அந்த இண்டர்ப்ரடேஷன் எந்தத் தேதியில் கொடுக்கிறார்களோ அந்தத் தேதியிலிருந்து அது அமுலுக்கு வராது. அந்த அர்த்தம்தான் சட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து, ஒவ்வொரு முறையும் அந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வழி செய்கிறோம். ஒரே விதியாகப் போட்டு, அந்தச் சிக்கல்களை தீர்க்க முடியவில்லை. பரிசீலனை செய்து பார்த்ததில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விதமான சிக்கல்களைத் தீர்க்க வேண்டியிருக்கிறது. அதுபோல பிரெஞ்சு காப்பி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சிக்கல்களை தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் எக்ஸ்பெர்ட்டை நியமிக்க வேண்டும் என்று சொன்னார்கள். பழைய பொருளாதாரக் கொள்கை ஒன்று உண்டு. 'ஓல்டு டாக்ஸ் இஸ் நோ டாக்ஸ்' அதாவது பழைய வரி ஒரு முறையிலே நடந்துகொண்டிருந்தால், அதையே நீடித்துக்கொண்டு போனால், அதனால் மக்கள் புதியதாக பாதிக்கப்பட மாட்டார்கள். நெருக்கடி நேரத்தில் ஒரு எக்ஸ்பெர்ட்டைப் போட்டு, அவர் ஒரு புது சிபார்சு செய்து, அதை நாம் ஏற்றுக்கொண்டு மாறுதல் செய்வோமானால், சில மாறுதல்கள் மூலம் குழப்பங்கள் ஏற்படலாம். ஆகவே நெருக்கடி காலத்தில் அதைச் செய்யவேண்டாம் என்ற நோக்கத்தோடுதான் நாங்கள் இதை நிறுத்திவைத்திருக்கிறோம்.

அடுத்தாற்போல் கமர்ஷியல் டாக்ஸ் அலுவலகங்களில் அலுவலர்-க்கும் மற்றும் அங்கு வருபவர்களுக்கும் போதிய வசதி இல்லை என்று சொன்னார்கள். அந்தக் குற்றச்சாட்டை நான் வந்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th March 1963

தத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில் விற்பனை வரி கொடுக்கிறவர்களெல்லாம் தமிழ் நாட்டு நிர்வாகத்திற்கு பெரிய சேவை செய்கிறார்கள். அந்த எண்ணம் தான் எனக்கு உண்டு. நானும் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த அலுவலகங்களுக்குப் பல கட்டிடங்கள் கட்ட வேண்டும், வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், மேஜை நாற்காலிகள் எல்லாம் போட்டுக்கொடுக்கவேண்டும், அங்கே வருபவர்களுக்கு குளிர்ந்த தண்ணீர் உட்கார்ந்த இடத்திலேயே கொடுக்க வேண்டும் என்றெல்லாம் முயற்சி எடுத்துக் கொண்டேன். ஆனால், அதற்கு நிலம் வாங்கவேண்டியிருக்கிறது, அதற்குப் பிறகுதான் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் எந்த இடத்திலாவது நல்ல கட்டிடம் ஒன்று இருக்கிறது என்று கொடுத்து அதை வாடகைக்கு சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம், அங்கே ஸேல்ஸ் டாக்ஸ் ஆபீஸ் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்வார்களேயானால், அதை உடனடியாக சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதில் கருத்து வேற்றுமை இல்லை. நெருக்கடி நிலைமை காரணமாக புதியதாக கட்டிடங்கள் கட்டுவதற்கு நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் இன்றைக்கு தடங்கல்பட்டுவிட்டது. ஆகவே தான் இந்த நிலைமை மிகவும் எனக்கு வருத்தம் தருகிறது என்று நான் சொன்னேன்.

தமிழில் பாரங்கள் அச்சடித்துக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நெருக்கடி நிலைமை காரணமாக அதை நிறுத்தி வைத்திருப்பதாக இலாகாவினர்கள் சொல்லுகிறார்கள். நெருக்கடி நிலைமை காரணமாக இதை நிறுத்தி வைக்க வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். பாரங்களை தமிழிலேயே அச்சடித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று நான் இப்பொழுது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, செக் போஸ்டில் ஏற்படுகிற கஷ்டத்தைப் பற்றி சொன்னார்கள். செக் போஸ்டில் என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்று சொன்னால், சிலர் பண்டத்தை லாரியில் ஏற்றி, 'ஸெல்ப் என்று போட்டுக்கொண்டு; கொண்டு வந்து விடுகிறார்கள், 'ஸெல்ப்' என்று போட்டு இங்கு கொண்டுவந்த பிறகு, யாருக்காவது அதை விற்றுவிடுகிறார்கள். 'ஸெல்ப்' என்று சொல்லிக் கொண்டு வந்துவிட்டு, விற்பனை செய்யவில்லை, வரி கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நாங்கள் 'ஸெல்ப்' என்று போட்டால், எந்த இடத்திற்கு, யாருக்குப் போகிறது என்பதற்கெல்லாம் விவரங்கள் கொடுக்க வேண்டும், விவரங்கள் கொடுக்காவிட்டால், அங்கே வரி போடுவோம் என்று சொல்லுகிறோம். இதற்கு முன்னால் இருந்த விதிகளின்படி, அந்த இடத்திலே அவர்கள் திருப்திகரமான பதில் கொடுக்கவில்லை என்று சொன்னால், அந்தப் பண்டங்களை 'கான்பிஸ்கேஷன்' செய்து விடுவது என்ற முறை வைத்திருந்



28th March 1963] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

தோம். இதனால் பலருக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டு சில புகார்கள் வந்தன. இப்பொழுது புதிதாக விதிகள் செய்திருக்கிறோம். அதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

'In respect of any lapse regarding the maintenance of goods vehicle record, delivery note, etc., i.e., records which are mentioned in Section 42 (3) or prescribed under Sections 43 and 44, the vehicle with goods will be released if an amount equal to the estimated tax on the goods carried is paid to the Chekpost Officer in the case of single point goods and an amount equal to twice the estimated tax is paid to the Checkpost Officer in respect of multi-point goods'.

ஏதாவது ஒரு சரக்கை செக் போஸ்டின் வழியாகக் கொண்டு போகிற பொழுது, அது உண்மையான நபருக்கு எடுத்துச் சொல்லப்படுகிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டால், அந்த இடத்திலே அவர்கள் டெபாசிட் செய்தால் போதும். ஸிங்கிள் பாயிண்ட் வரி விதிக்கக் கூடிய பொருளாக இருந்தால் ஒரு முனை வரியில் கட்ட வேண்டிய தொகையையும் மல்டி பாயிண்ட் வரி விதிக்கக் கூடிய பொருளாக இருந்தால் இருமுனை வரியையும் கட்ட வேண்டும்.

'The Officer shall issue the receipt for the amount paid which can be utilised by the consignee along with sales tax return either for the purpose of assessment against the tax due from him or for the refund to him if he proves that the goods referred to in the receipt had already suffered tax and are not liable to be taxed in his hands'.

அந்த விதமாகக் கொடுக்கப்பட்ட ரசீதைக் கொண்டு வந்து ரீபண்டு கேட்கலாம். தங்களுடைய விற்பனை வரிக் கணக்கைக் காட்டுகின்ற பொழுது, அந்த ரசீதைக் காட்டி, இந்தச் சரக்கு வேறொருவருடையது, விற்பனை வரி கட்டியாகிவிட்டது, அல்லது கட்ட வேண்டியதில்லை என்று நிரூபித்தால், அவர் கொடுக்க வேண்டிய விற்பனை வரியிலே இப்படி டெபாசிட் செய்த பணத்தை அட்ஜெஸ்ட் செய்து கொள்ளலாம் என்று விதிகள் செய்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் சுப்பிரமணிய செட்டியார், லாரிக்காரர்கள் பேரில் கொடுத்துவிடுகிறார்கள், கண்டக்டர்கள் பேரில் கொடுத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். யார் பேரில் கொடுத்தாலும், இந்தச் சரக்கு வேறொருவருடையது. முன்பே விற்பனை வரி கட்டப்பட்டிருக்கிறது. அல்லது அந்தச் சரக்கு இன்னொருவரிடத்திலே கொடுக்கப்பட்டது, அவர்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது என்று நிரூபித்தால், அவ்வாறு பணம் கட்டியதை அவர்கள் கொடுக்க வேண்டிய மற்ற வரிக்கு அட்ஜெஸ்ட் செய்யலாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த விதிகள் அமலுக்கு வந்த பிறகு இது சம்பந்தமாக வருகிற புகார்கள் மிகவும் குறைந்து விட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் பேசும்பொழுது, சட்டப் பிரச்சனைகளைப் பற்றிச் சொன்னார்கள். அவையெல்லாம் செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்யப்பட்டது. அப்படி பரிசீலனை செய்யப்பட்டு, சில வழக்குகள் சம்பந்தமாக தனியாக ஸேல்ஸ் டாக்ஸ் அப்பலேட் டிரிபயூனல் இருக்க வேண்டுமென்றும், அதற்கு மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் இருக்க வேண்டுமென்றும், அப்பொழுது முடிவு செய்யப்பட்டது. அந்த முறையில்தான் இப்பொழுது நடந்து கொண்டு வருகிறது. இந்த ஸேல்ஸ் டாக்ஸ் அப்பலேட் டிரிப்யூனலில் இருப்பவர்கள் நிர்வாகத் துறையைச் சேர்ந்தவர்கள் அல்ல. அதனுடைய சேர்மன் ஒரு ஜில்லா நீதிபதி. அவரைத் தவிர, ஒரு அக்கவுண்ட்ஸ் மெம்பரும், இலாகா விதிகளையெல்லாம் சொல்லுவதற்காக ஒரு இலாகா அதிகாரியும் இருக்கிறார்கள். இதைவிட வேறு எந்த முறையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. சிவில் கோர்ட்டுக்குப் போனால் காலதாமதம் ஏற்படும் என்று அப்பொழுது இருந்த அங்கத்தினர்கள் சொன்ன காரணத்தினால், சிவில் கோர்ட்டுக்கு கொண்டு போகவில்லை. இப்பொழுது கூட நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், சிவில் கோர்ட்டுக்கு உரிமை கொடுத்தால், தலைவலி போய்த் திருகு வலி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதனால் ஒரு நன்மையும் ஏற்படாது.

(Mr. Speaker in the chair)

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் தீப்பெட்டி செய்வதைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது ஒன்றும் கஷ்டம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் மத்திய விற்பனை வரியை இரண்டு சத விகிதமாக உயர்த்தி விட்டார்கள். வெளி ராஜ்யங்களுக்கு ஏற்றுமதி செய்தால் 2 சதவிகிதம் கொடுக்க வேண்டும். மத்திய சர்க்காரும் 2 சத விகிதத்துக்கு இந்த வரியை உயர்த்தி விட்டார்கள். அதனால் அவர்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருப்பதற்கில்லை. அவ்வாறு ஏதாவது இந்த வரியை அமுல் நடத்துவதிலே கஷ்டங்கள் இருக்குமானால், அதனால் நம்முடைய ராஜ்யத்தின் சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டால், அந்த சமயத்தில் சர்க்கார் அதைப் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, திரு. சீராமுலு அவர்கள் பல விஷயங்களைப் பற்றிச் சொன்னார்கள். சில அனுபவத்தை ஒட்டி சொல்லியது என்று நான் நினைக்கிறேன். அவர்கள் சொன்னதிலே மத்திய விற்பனை வரியைப்பற்றி அவர்கள் சொன்னது சரியல்ல. அவர்கள் பேசுகிறபொழுதே எடுத்துக் காட்டியது போல், இந்த ராஜ்யத்திலிருந்து வேறு ராஜ்யத்திற்கு விற்கப்படுமேயானால், மத்திய விற்பனை வரி இந்த ராஜ்யத்தைச் சேர்ந்தது. மத்திய சர்க்கார் வசூலித்துக் கொண்டு, விகிதாசாரப்படி பிரித்துக் கொடுக்கிற வரியல்ல இது. சென்னை



யிலிருந்து என்ஜினியரிங் சாமான்களை பக்கத்திலுள்ள மைசூர் ராஜ்யத்திற்கு விற்றால், அப்படி விற்கிற பொழுது 2 சத விகிதம் சென்னை ராஜ்யத்திற்குச் சேர்ந்தது. அதேபோல் மைசூர் ராஜ்யத்திலிருந்து சென்னை ராஜ்யத்திற்கு விற்றால், மத்திய விற்பனை வரி அவர்களைச் சார்ந்தது, ஆகவே மத்திய விற்பனை வரியை மத்திய சர்க்கார் வசூலித்து, விகிதாசாரப்படி பிரித்துக் கொடுப்பதுகிடையாது.

**திரு. பி. வி. சீராமுலு:** கனம் நிதி அமைச்சர் அவர்கள், அவர்களுடைய நிதி நிலை அறிக்கையிலே, மத்திய அரசாங்கம் விற்பனை வரி விதிக்கிறது, அதிலும் நமக்குப் பங்கு கிடைக்கும் என்று குறிப்பிட்டார்கள். அதனால்தான் அந்தந்த அரசாங்கம் வசூல் செய்தாலும், மத்திய அரசாங்கத்திலிருந்து பங்கு நமக்குக் கிடைக்கும் என்ற தோரணையில் நான் குறிப்பிட்டேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அது வேறு வரிகளைப் பொறுத்தது. உதாரணமாக, மத்திய சர்க்கார் எக்ஸைஸ் வரி விதிக்கிறார்கள். அதிலே நமக்குப் பங்கு உண்டு. வருமான வரி விதிக்கிறார்கள், அதிலும் பங்கு உண்டு. ஆனால், மத்திய விற்பனை வரியைப் பொறுத்தவரையில், அந்த மாதிரியல்ல, இதை நன்கு விளக்கி விட்டால் இதிலே பிரச்சினை இல்லை என்பது தெரியவரும்.

எண்ணெய் சம்பந்தமாக அவர்கள் ஒரு கம்பெனியிலிருந்து எண்ணெய் விற்றதிலே ஏற்பட்ட கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். சட்டத்தைப் பார்த்திருந்தால் இது நன்றாகப் புரிந்திருக்கும். ஏதாவது ஒரு இயந்திரத்தினுடைய பாகம் (காம்பொனென்டை) வாங்கி மற்றொரு இயந்திரமோ, அல்லது ஏதாவது பொருளோ செய்தால், அந்த விதமாகச் செய்கிற பொழுது, 1 சத விகிதம் என்று மூன்றாவது செக்ஷனில் 3-வது பிரிவில் போட்டிருக்கிறோம். அது இயந்திரத்தைப் பொறுத்தது. இதற்கான இன்டர்பிடேஷனைக் கூட அமெண்ட் செய்திருக்கிறோம்.

For the purpose of this sub-section component part meaus, the article which forms the identifiable constituent of the finished product'.

எண்ணெய் வனஸ்பதியாக மாறுகிறபொழுது அது ஒரு ஐடெண்டிபியபிள் பார்ட் அல்ல. அதனால் அது ஒரு கான்ஸ்டிடியுவன்ட் பார்ட் அல்ல. அப்படி இல்லாத காரணத்தால் அதற்கு 1 சத விகிதம் கன்ஸெஷன் கிடையாது, கம்பெனிக்காரர்கள் அவர்களிடத்திலே ஏன் இப்படி வாங்கினார்கள் என்று சொன்னால், ஆந்திராவிலிருந்து வாங்கினால் 1 சதவிகிதம் கொடுக்கிறோம், உங்களிடத்தில் வாங்கினால் 3 சத விகிதம் கொடுக்க வேண்டியிருக்கிறதே, நீங்களும் 1 சத விகிதத்தில் கொடுத்தால்தான் வாங்க முடியும் என்று சொல்லியிருப்பார்கள். அதற்காக 1 சத விகிதத்தில் விற்றிருக்கலாம். இந்தக் கடஷ்த்தைப் போக்குவதற்கு இப்பொழுது சட்டத்தை மாற்றி

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th March 1963

யிருக்கிறோம். "மல்டிபாயின்ட்" என்று சொல்லிவிட்டால், ஆந்திராவிலிருந்து 1 சத விகிதம் கொடுத்து வாங்கினாலும், டிரான்ஸ்போர்ட் காஸ்ட் 1 சத விகிதம் ஆகும். நம்முடைய ராஜ்யத்தில் வாங்கினாலும் 2 சத விகிதம், ஆந்திராவிலிருந்து வாங்கினாலும் 2 சத விகிதம். நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற எண்ணெய் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற உற்பத்தியாளர்கள் உபயோகிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக செய்யப்பட்ட திருத்தம் இது. அவர்களது நன்மைக்காகச் செய்யப்பட்ட ஒரு திருத்தம். இன்னும். more tax means more corruption, less tax means less corruption என்று சொன்னார்கள். நான் இதன் கூட வேறு ஒன்றையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, "No tax means to adminisration."

கடைசியாக திரு. ரெங்கசாமி ரெட்டியார் அவர்கள் பிண்ணாக்கு சம்பந்தமாக கஷ்டம் இருக்கிறது, 3 சத விகிதம் மல்டிபாயின்ட் வரி கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். எதற்காகச் செய்தது என்றால், சிறு செக்குகள் வைத்துக் கொண்டு இருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ரூபாய் 10,000-க்கு மேல் வியாபாரம் கிடையாது. பிண்ணாக்கு விற்பவர்கள் 'single point' ஆக வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. Multipoint ஆக இருந்தால் வரி கொடுக்க வேண்டியது இல்லை. இது குறித்து அவர்கள் சிறிய தொழில் நடத்துகின்றவர்களாக இருப்பதால் இதை மாற்றியமைத்திருக்கின்றோம்.

இந்த மானியக் கோரிக்கை சம்பந்தமாக சொன்ன கருத்துக்கள் எல்லாவற்றிற்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும்படியாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 75,04,700 under Demand No. III—General Sales Tax and other Taxes and Duties—Administration be reduced by Rs. 100.'

The cut motion was put and declared lost.

A poll was demanded and the House divided thus:—

Ayes: 37.

Noes: 64.

Neutral: Nil.

The cut motion was lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 75,04,700 under Demand No. III—General Sales Tax and other Taxes and Duties—Administration.'

The Demand was put and carried and the Grant was made.



28th March 1963]

DEMAND NO. IV—STAMPS ADMINISTRATION.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 34,21,700 under Demand No. IV—Stamps Administration.'

SRI S. MADHAVAN: Sir, I move—

'That the allotment of Rs. 34,21,700 under Demand No. IV—Stamps Administration be reduced by Rs. 100.'

MR. SPEAKER: The Demand and the cut motion are before the House for discussion.

* திரு. வி. எஸ். எஸ். மணி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த முத்திரைத்தாள் மானியத்தின்மீது ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முத்திரைத்தாள் விற்பனைக்கு ஸ்டாம்பு வெண்டர்கள் என்று சிலருக்கு லைசென்ஸ் கொடுத்து வைத்திருக்கிறார்கள். பெரிய நகரங்களில் கூட நான்கு பேர்கள், ஐந்து பேர்களுக்குத்தான் ஸ்டாம்பு வெண்டர்களாக லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முத்திரைத்தாள் வாங்கவேண்டுமென்றால் மிகவும் கஷ்டப்படவேண்டியதாக இருக்கிறது. அந்த ஸ்டாம்பு வெண்டர்களுடைய வீட்டுக்குப் போகவேண்டியதாக இருக்கிறது. அப்படிப் போய்க் கேட்டாலும் அவர்கள் தம் வசம் ஸ்டாம்புகள் இல்லை என்றும் இன்டென்டு போட்டு வாங்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் ஒரு யோசனையைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தபால் ஆபீஸ்களில் எப்படி நாம் தபால் ஸ்டாம்புகள் வாங்குகிறோமோ அந்த முறையிலே பதிவு ஆபீஸ்களிலே அரசாங்கத்தில் ஒரு ஆபீசரை நியமித்து அங்கே இந்த ஸ்டாம்புகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டால் மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு இந்த ஸ்டாம்பு டியூடியைக் குறித்து ஒரு சில வார்த்தைகளைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒருவர் ஆயிரத்திற்கோ இரண்டாயிரத்திற்கோ லைப் இன்ஷூரன்ஸ் பாலிசி எடுத்திருந்தால் அவர் அதன் பேரில் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. அதற்காக விதிக்கப்படும் கட்டணம் மிகவும் அதிகமாக இருக்கிறது. தான் செலுத்திய பணத்தின் பேரில் கடன் வாங்குவதற்கு அதிகமாகக் கட்டணம் விதிப்பது என்பது எந்த நியாயத்தில் சேரும்? செலுத்தப்பட்ட தொகையின் பேரில் ரூபாய் 1,000-க்கு ரூபாய் 25 வீதம் பத்திரம் வாங்கி எழுதிக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

12-30 p.m. **திரு. எஸ். மாதவன்:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஸ்டாம்ப் மானியத்தின் மீது நான் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஸ்டாம்ப் பத்திரங்கள் சப்-ட்ரெஷரியில் மக்களுக்குக் கிடைப்பதில் மிக்கக் குறைபாடும் கஷ்டமும் இருக்கிறது என்பதை அரசாங்கம் உணரவேண்டும். ஒரு சமயத்தில் ஒரு சப்-ட்ரெஷரியில் ஸ்டாம்புகள் விற்பனை செய்யக்கூடிய க்ளார்க் இல்லை என்ற காரணத்தினாலேயே அன்று அந்த ஊரில் அந்த சப்-ட்ரெஷரியில் ஸ்டாம்பு விற்பனை செய்யப்படவில்லை; அதனால் அன்றைக்கு சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸிலும் வேலை நடைபெறவில்லை. இதை உடனடியாக அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வந்ததில் அவர்களுடைய பதிலில், 'அங்கே ஆட்கள் அதிகமாக இல்லாத காரணத்தால், இது போன்ற சூழ்நிலை ஏற்படுகிறது; மீண்டும் இது நடைபெறாமல் பார்த்துக்கொள்ளுவோம்' என்று எழுதியிருக்கிறார்கள். அதை நம்முடைய அரசாங்கம் கவனித்து, ஆங்காங்குள்ள சப்-ட்ரெஷரிகளில் ஒழுங்கான முறையில் ஸ்டாம்ப்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுவாக, நீதித் துறையில் இருக்கும் ஸ்டாம்பு கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்பதை நம்முடைய அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். ஏற்கனவே சட்டக் கமிஷன் நிறுவப்பட்டு, அதிலே இது பரிசீலனை செய்யப்பட்டதாகக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அன்னிய ஆட்சிக் காலத்தில் நீதித் துறையைப்பற்றி அவர்கள் கவலைப்படாமல் இருந்ததற்குப் பொருள் உண்டு. ஆனால், ஜனநாயக ஆட்சியில் சாதாரண ஏழைக் குடிமகனுக்கும் நீதி மன்றத்தில் நீதி கிடைக்கவேண்டும் என்பதில் நாமெல்லாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அதற்குள்ள கட்டணம் அதிகமாக இருக்கும் காரணத்தால், சிறு சிறு வழக்குகளில் கூட நீதி பெறுவதற்கு ஏராளமான பொருள் செலவு செய்யப்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறதென்பதை நம்முடைய அரசாங்கம் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். 'நீதி மன்றங்கள் மூலமாக வசூலாகும் தொகையைவிட அந்த நீதி மன்றங்களுக்குச் செலவழிக்கப்படும் தொகை அதிகமாக இருக்கிற காரணத்தால், மேலும் அந்தக் கட்டணத்தைக் குறைக்க இடமில்லை' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. செலவை மட்டும் நாம் கருதாமல், ஏழை மக்களுக்கு நீதி எளிய முறையில் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற கொள்கையை நம்முடைய அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் சபாநாயகர் அவர்களே, முத்திரைத் தாள்களைப் பொறுத்த மானியத்தைப் பற்றி நான் சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த இலாகாவில் இருக்கும் அலுவலர்களுக்கெல்லாம் ஊதியம் சற்று அதிகமாகத் தரப்படவேண்டும் என்கிற கருத்தை நீதிபதியாக இருந்த திரு. கணபதியாப் பிள்ளை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மிகக் குறைவான சம்பளம் கொடுப்பதால்தான் இந்த



இலாகாவில் உள்ளவர்கள் வேறு வகையில் லஞ்சம் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். அதற்கு இடமில்லாமல், அந்த இலாகாவில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் நல்ல ஊதியம் தர அரசாங்கம் முன்வர வேண்டும். அதைக் கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து அவர்களுடைய ஊதியத்தைச் சற்று அதிகரிப்பதிலே அக்கறை காட்டுவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் சொன்னதுபோல, நீதித் துறையில் எவ்வளவு ஸ்டாம்ப் கட்டணத்தைக் குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்தால்தான் எளிமையாக அவர்கள் நீதியைப் பெற வழி இருக்கும். ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து மோட்டார்த் துறை அப்பீல் செய்வதற்கு 200 ரூபாய் ஸ்டாம்ப் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். நூறு ரூபாய் என்று இருந்ததே மிக அதிகம். அதை 200 ரூபாய் அளவுக்கு அதிகமாக்கியிருப்பதால், அப்பீல் போடுவதற்கே அஞ்சும் நிலைமை வந்துவிடும். இதற்குமேல் வக்கீல் செலவு வேறு இருக்கிறது. வரியை வேறு அதிகரித்திருக்கிறோம், மோட்டார்த் துறையில். மத்திய அரசாங்கத்திலிருந்து போட்ட வரியினால் டீசல் எண்ணெய்க்கு விலை ஏறிவிட்டது. ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பது இல்லை. இப்படியெல்லாம் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கும் சமயத்தில் சம்மட்டி அடிபோல், கனம் அமைச்சர் அவர்கள் அப்பீலுக்கு ஸ்டாம்ப் கட்டணத்தையும் 200 ரூபாய் அளவுக்கு உயர்த்திவிட்டார். இது உண்மையிலேயே வருந்தத்தக்கது. நான் முன்பே குறிப்பிட்டதுபோல, பொன் முட்டையிடும் வாத்தையே வெட்டிவிடக்கூடாது. அப்பொழுது முட்டைக்கே ஆபத்து வந்துவிடும். அப்படிப்பட்ட நிலைமையைக் கையாளாமல், இதற்கு ஸ்டாம்ப் கட்டணத்தைக் குறைக்க வேண்டும். இரண்டாவது, மூன்றாவது அப்பீலுக்கு வேண்டுமானால் கட்டணத்தை உயர்த்தலாமேயொழிய, முதல் அப்பீலுக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடக்கூடாது. நான் வக்கீலாக பதிவு செய்துகொண்ட காலத்தில் பத்து ரூபாயாக இருந்த கட்டணம் இப்பொழுது 200 ரூபாயாகக் கூட்டி போட்டுவிட்டது என்றால், நீதி கிடைப்பதற்கு வாய்ப்புகள் குறைந்துவிடும். ஆகையால், அமைச்சர் அவர்கள், அந்த இலாகாவில் வருமானம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால், மேலும் மேலும் 100, 100 ஆக அதிகரித்துக்கொண்டு போவார்களானால், அரசாங்கத்திற்கு இந்தத் துறையில் வருமானம் வருவதற்குக் கூடப் பஞ்சம் வந்துவிடும். முதல் அப்பீலிலேயே நாம் நீதியை வழங்க மறுத்தால் மிக கஷ்டமாக இருக்கும். இது Fleet ஆபரேட்டரைத்தான் பாதிக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்துக்கொண்டு நல்லவிதமாகப் பிழைப்பை நடத்தவேண்டுமென்று இருப்பவர்களைக்கூடப் பாதிக்கும். ஆகையால் கனம் அமைச்சர் அவர்கள், இதற்கு முன்பு இருந்தது போல அப்பீலுக்கான ஸ்டாம்ப் கட்டணத்தைக் குறைத்தால்தான் நீதி கிடைக்க வாய்ப்பு இருக்கும், நீதி தவறிவிடுமோ என்கிற பயமும் இல்லாமல் இருக்கும். கட்டணத்தை அதிகரித்து, தவறான பாதைகளில் போவதற்கு வாய்ப்பை அதிகரிக்கக்கூடாது. தயவு

[திருமதி டி. என். அனந்தநாயகி] [28th March 1963

செய்து அமைச்சர் அவர்கள் நீதித் துறையில் உள்ள ஸ்டாம்ப் கட்டணத்தைக் குறைத்து, சுலபமாக நீதியைப் பெற வழிசெய்ய வேண்டும். முதல் அப்பீலிலாவது அத்தகைய வழி செய்ய வேண்டியது மிக மிக அவசியம் என்று வற்புறுத்திக்கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகின்றேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது முக்கியமான குறைபாட்டைக் கனம் அங்கத்தினர் திரு. வி. எஸ். எஸ். மணி அவர்கள் சொன்னார்கள். போதுமான ஸ்டாம்ப் வெண்டர்கள் இல்லாத காரணத்தால், அல்லது சில சந்தர்ப்பங்களில் அவர்களிடத்தில் ஸ்டாம்ப்கள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் பல இடங்களில், குறிப்பாக சிறு கிராமங்களில், அல்லது சிறு நகரங்களில் ஸ்டாம்ப் கிடைப்பதில்லை என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அந்த நிலைமையைச் சீர்திருத்தக்கூடிய முறையில், வேறு முறையில் ஸ்டாம்ப்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும், போஸ்டாபீஸ் அல்லது அரசாங்க நிலையங்களில் ஸ்டாம்ப்கள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுதிருக்கும் ஏற்பாட்டின்படி, ஸ்டாம்ப் வெண்டர்கள் மூலமாகத்தான் ஸ்டாம்ப்கள் விற்பனை நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் ஏற்பாட்டின்படி, ஸ்டாம்ப் வெண்டர்கள் மூலமாகத்தான் ஸ்டாம்ப் விற்பனை நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் விதி முறைப்படி ஸ்தலத்தில் போதுமான விற்பனையாளர்கள் இல்லாமலிருந்து, அவர்களை அதிகப்படுத்தவேண்டும் என்றால், அதற்குப் போதுமான வசதி இருக்கிறது. ஆகையால், இப்பொழுது அரசாங்கத்தினுடைய நோக்கம், இதை மாற்றியமைக்கவேண்டாம் என்பதுதான்.

அடுத்தபடியாக, நீதி தரப்படுவதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைச் சொன்னார்கள். அதைப் பரிசீலனை செய்யவேண்டிய இடம் இது இல்லையென்றாலும்கூட, இதைத் தொடர்ந்து மொத்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்யும். குறிப்பாக, கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது—அவர்களுக்கு அதிகமாக பரிச்சயம் இருக்கும் இடம் என்று நினைக்கிறேன்—'மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் அப்பீலுக்குத் திடீரென்று ஸ்டாம்ப் கட்டணத்தை உயர்த்திவிட்ட காரணத்தால், போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு அதிகமாக பாதகம் ஏற்படும்' என்று சொன்னார்கள். இப்பொழுது நாம் உயர்த்தியிருப்பது ரொம்ப அதிகமில்லை. அவர்கள் குறிப்பிட்டதுபோல், 100 ரூபாய் அதிகப்படுத்தியிருக்கிறோம். இதனால் வக்கீலுக்கு வரும் வருமானம் குறைந்துவிடுமோ என்று அவர்களைப்போல் உள்ளவர்கள் நினைக்கலாம். அவர்களைப்போல் உள்ள வக்கீல்களுக்கு சற்று வருமானம் குறைந்தாலும் பரவாயில்லை என்று கருதி, அந்தத் தொழிலில் உள்ளவர்களுக்கு அதிகக் கஷ்டம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த நிர்வாகத்தில் வேறு ஏதேனும் சிக்கல்கள் இருக்கும்பட்சத்தில், சட்டசபையில் இப்பொழுது கூற முடியாவிட்டாலும், தனியாக எழுதி



28th March 1963 [திரு. வெ. ராமையா]

அனுப்பினால் கவனம் செலுத்தமுடியும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மானியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 34,21,700 under Demand No. IV —Stamps Administration be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 34,21,700 under Demand No. IV—Stamps Administration.'

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NO. XXI—CINCHONA.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 29,48,800 under Demand No. XXI—Cinchona.'

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 29,48,800 under Demand No. XXI—Cinchona.'

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NO. XXXI—FAMINE RELIEF.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,20,500 under Demand No. XXXI—Famine Relief."

* திரு. ஆ. துரை அரசன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, பஞ்ச நிவாரணத்திற்காக 7,20,500 ரூபாய் ஒதுக்கப்பட இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய தமிழகத்திலே, குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே 1950-க்கும் 1962-க்கும் இடையிலே இரண்டு தடவை புயல் ஏற்பட்டு அதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இரண்டு தடவை பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டது. அதிலும் குறிப்பாக புதுக்கோட்டை, அறந்தாங்கி வட்டங்கள் அதிகமான அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். 1952-ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தின்போது பஞ்ச நிவாரணத்திற்காக நபர் குடும்பம் ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் கொடுப்பதாகப் பறைசாற்றப்பட்டு, முடிவில் அவர்களுடைய கைக்குச் சென்ற தொகையைப் பார்த்தால் 50 ரூபாய்கூட இருக்காது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், உழவு

[திரு. ஆ. துரை அரசன்] [28th March 1963

மாடு வாங்க 300 ரூபாய் கடன் வேண்டுமென்று மனுப் போட்டவன் முடிவில் 30 ரூபாய்க்கு ஆடு வாங்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிய பரிதாப நிலைமையைப் போல்தான் பஞ்ச நிவாரண நிலைமையும் இருந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டு பருவ மழை தவறியதன் காரணமாக, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, ஆலங்குடி, புதுக்கோட்டை, திருமயம் பகுதிகளும், இராமநாதபுரத்தில் சில பகுதிகளும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டன என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அதன் காரணமாக அந்தப் பகுதிகளில் வரி வஜா செய்யும் வகையிலே திருமயம் பகுதிக்குச் சலுகை கொடுத்தார்கள். ஆனால் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை பகுதிகளுக்கு அந்தச் சலுகை கொடுக்கப்படவில்லை. ஒருவேளை நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே வெற்றி பெற்ற காரணத்தினால் இந்த சலுகை அந்தப் பகுதிகளுக்கு மட்டும் கொடுக்கப்பட்டதோ என்று மக்கள் நினைக்கிறார்கள். 9-2-1962-ல் நம்முடைய வருவாய்த்துறைக் கழகம் ஒரு சிபாரிசை அனுப்பியிருக்கிறது. பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டங்கள் இராமநாதபுரம் போன்ற பின் தங்கிய பிரதேசமாகக் கருதப்படக் கூடிய வட்டங்கள் என்றும், அந்த வட்டங்களுக்கும் இராமநாதபுரம் பகுதிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற வரிச்சலுகையை வழங்க வேண்டுமென்றும், பழைய பாக்கி 50 சதவிகிதமும் 1372-ஆம் பசலிக்கு 50 சதவிகிதம் வரிச்சலுகை காட்டவேண்டுமென்றும் குறிப்பிட்டு அனுப்பியிருக்கிறார்கள். ஆனாலும் அந்தச் சலுகை எங்கள் பகுதிக்குக் காட்டப்பட்டதா என்று பார்த்தால், இல்லை. கடந்த ஆண்டு வரி வஜா, என்று சொன்னார்கள் நாங்களும் நம்பினோம். எவ்வளவு வரி வஜா என்று கேட்ட நேரத்தில், எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு 30,000 ரூபாய்க்கு மேல் வரி வஜா செய்யப்பட்டது என்று கூறினார்கள். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள் அந்தப் பலனைப் பெற்றார்களா என்றால், இல்லை. நிச்சயமாக அந்தப் பலனை அந்த விவசாயிகள் பெறவில்லை என்ற குற்றச்சாட்டை நான் அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். பெரும் நிலச்சுவான்தார்கள்தான் அதன் முழுப் பலனையும் பெற்றிருக்கிறார்கள். திடீரென்று முன் அறிவிப்பு இல்லாமல் ஏழை விவசாயிகள் வீடுகளில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள ஏழை விவசாயிகளால் எப்படி ஒரே சமயத்தில் பலவரி-கடன்களை, வரிகளைச் செலுத்த முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். என்றைக்கு வடபகுதியில் ஆற்றிலே தண்ணீர் வரும் என்று காத்துக் கொண்டிருக்கிற பகுதியைச் சார்ந்தவர்கள் நாங்கள். என்றையதினம் ஆற்றிலே தண்ணீர் வருகிறதோ அன்றையதினம் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு வடபகுதிக்கு வந்து பண்ணை அடிக்கவேண்டிய பரிதாபமான நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை நீடிக்கத்தான் வேண்டுமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைச் சிரம் தாழ்த்திக் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். இந்த வரிச் சலுகைகள் நேரடியாகப் பாதிக்கப்பட்ட எங்கள் பகுதிக்கு நிச்சயமாகக் கொடுக்கப்படவேண்டும். கடன் வசூலிப்பதிலும் தவணைகள் வேண்டும். சாதாரணமாக





28th March 1963] [திரு. ஆ. துரை அரசன்]

மரக்கால்தான் விளைவு என்று சொன்னால்தான் வரி வஜா உண்டு என்று ரெவின்யூ இலாகாவினர் தெரிவித்திருக்கிறார்கள். 12½ மரக்கால் என்று சொன்னால்கூட வரி வஜா இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். இதைப்பற்றி நான் கனம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை அவர்களுடைய அலுவலகத்திலே நேரிலே சந்தித்து விவரங்களைச் சொன்னேன். 'சட்டம் அப்படி இருக்கிறது, என்ன செய்வது?' என்று அவர்கள் சொன்னார்கள். நிலத்தின் மீது வெட்டிவிடப்பட்ட வேர் தெரிந்தால்கூட, அதிகாரி வந்து பார்த்துவிட்டு கதிர் அறுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி வரி வசூலிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் நேரடியாகக் கண்காணித்து இந்தக் குறைபாடுகளையெல்லாம் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சத்தால் அடிக்கடி பாதிக்கப்படுகிற எங்கள் பகுதிக்கு நிவாரணத்தை நல்ல முறையிலே அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில ஐயப்பாடுகளும் எங்களுக்கு உண்டாகின்றன. அந்தப் பகுதியில் நாலைந்து திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் வெற்றிபெற்று விட்ட காரணத்தால்தான் அந்தப் பகுதிகள் புறக்கணிக்கப் படுகிறதோ என்ற ஐயப்பாடு மக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சனைகளை அரசியல் நோக்கத்திலே பார்க்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் சென்ற வருஷம் பொது விவாதத்தின்போது அப்போது இங்கே வீற்றிருந்த கனம் கலியாணசுந்தரம் அவர்கள், 'Famine' என்ற வார்த்தையையே எடுத்து விடவேண்டுமென்று சொன்னார்கள். 'பஞ்சம் என்ற கட்டம் ஓரளவு நீங்கிவிட்டது, ஆனால் இயற்கையின் மாற்றங்களின் காரணமாக ஏற்படக்கூடிய பல கஷ்டங்களை நிவர்த்தி செய்ய இந்த மானியம் இருக்கவேண்டும்' என்று சொன்னார்கள். அதையெல்லாம் நாம் ஞாபகத்தில் வைத்துப் பார்க்கும்போது, இந்த மானியத்தைப் பொறுத்தவரையில்—எங்கு பார்த்தாலும் 'famine condition' ஏராளமாக இருப்பதாக மனதில் கொண்டு, அதைச் சரியான முறையில் கண்காணிக்க இந்த இனத்தில் அதிகமான பணம் ஒதுக்கவேண்டுமென்ற கருத்து இருந்தால் அந்தக் கருத்துக்கு இடமே கிடையாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆனால் அடிக்கடி இயற்கை மாற்றங்களின் காரணமாக ஏற்படக்கூடிய பெரும் கஷ்டத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டு விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிற காரணத்தால் தான். இதற்கென்று தனியாக நிதி ஒதுக்கி, கஷ்டம் வருகின்ற போது பயன்படுத்துகிறோம். கனம் துரை அரசன் அவர்கள் 'பேமின் நிதி' சம்பந்தமாகப் பேசியதைவிட, ரெமிஷன் தாராளமாகக் கொடுக்கவேண்டுமென்பதைப் பற்றித்தான் வலியுறுத்திப் பேசினார். இதே கருத்தை ரெவின்யூ மானியத்தின் போதும் சொன்னார்கள். புதுக்கோட்டை, கிழக்கு இராமநாதபுரத்திற்கு விசேஷ சலுகையைக் கொடுத்துவிட்டு அறந்தாங்கி பகுதியை விட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். இந்த விஷயத்தில்

[திரு. வெ. ராமையா] [28th March 1963

ரெவின்யூ போர்டு ரீதியில் கூட எதையும் செய்துவிட முடியாது. வரக்கூடிய புள்ளி விவரங்கள், ஜில்லா கலெக்டர், அவருக்குக் கீழ் உள்ள இடங்களில் இருந்து வரவேண்டும்.

அந்த முறையில் பார்த்தால் மாநிலத்தில் எங்கெங்கு பருவ மழை இல்லாத காரணத்தால் பாதகம் ஏற்படுகிறதோ அங்கிருந்து வரக்கூடிய விவரங்களுக்கு தகுந்த முறையில் ஸ்தலத்தில் உள்ள அதிகாரிகள் ரெமிஷனுக்கு சிபார்சு செய்கிறார்கள், கொடுத்து விடவும் முடியும். ஆகவே அரசாங்கம் நேரடியாகத் தலையிட வேண்டிய அவசியமில்லை. ஆனால் இதில் கஷ்டமிருக்கிறது என்பதை உணருகிறேன். துரை அரசன் அவர்கள் சொன்ன கருத்தைக்கூட ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். ரெமிஷன் கொடுப்பதில், பெரிய அதிகாரிகள் நேரிடையாக பார்வையிடாமல் போகும் பட்சத்தில் சாவியாகிப் போன இடத்தில்கூட சிறிது காலம் கடந்து ஒரு பெரிய அதிகாரி போய் பார்க்கும்போது அடிக்கட்டை இருக்கிறது. ஆகவே விவசாயம் நடந்திருக்கிறது, தீர்வை போடலாம் என்ற தவறான கருத்துக்கு வருகிறார்கள். ரெவின்யூ மான்யத்தின்போது, எந்த ஆண்டு பருவமழை சரியாக இல்லையோ, அப்படியில்லை என்று தெரிய வரும்போது தக்க நேரத்தில் பெரிய அதிகாரிகள் ஒவ்வொரு இடத்தையும் பார்த்து பின்னர் முடிவிற்கு வரவேண்டும் என்ற முறையை இந்த ஆண்டிலிருந்து நடைமுறைக்கு கொண்டு வரவேண்டுமென்று சொன்னேன். இதனால் பல சிக்கல்கள் தீரும். புதுக்கோட்டை அல்லது கிழக்கு ராமநாதபுரம் பகுதிகளுக்கு விசேஷமாக சலுகை, ரெமிஷன் கொடுப்பதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டியதில்லை. நடைமுறையில் உள்ள பழக்கம் அது. கிழக்கு ராமநாதபுரம் பகுதி, புதுக்கோட்டைப் பிராந்தியம், அரந்தாங்கி தாலுகா, மணப்பாறை, உடையார்பாளையம் தாலுகா போன்ற பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். அக்கருத்தை கொடர்ந்து வலியுறுத்த வேண்டும். அதற்குத் தகுந்த முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஃபாமின் ரிலீப் பொறுத்தவரை, எங்கெங்கு மக்களுக்கு பாதகம் ஏற்படுகிறதோ அங்கு சிறிது தாராளமாகக் கொடுக்க அரசாங்கம் எப்போதும் தயார். அங்கத்தினர் அவர்கள் ஏழெட்டு ஆண்டுகளில் ஏற்பட்ட இரண்டு புயல்களைப் பற்றி கூறினார்கள். அவர்கள் நேரடியாகப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும் நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். தஞ்சை ஜில்லாவில் நடந்த நிவாரண வேலை, ராமநாதபுரம் ஜில்லாவில் நடந்தது எல்லாம் பார்த்திருக்கிறேன். அந்த வட்டாரத்திலுள்ள பாகிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் நல்ல தொண்டு செய்தது என்று சொன்னால் மிகை இல்லை. 1962-ல் தஞ்சை ஜில்லாவில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதகம் எவ்வளவு என்று தெரியும். அப்போது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் உண்மையில் பாராட்டத்தக்க முறையில் அமைந்தது என்று சொன்னால் மிகை இல்லை. எப்போது கஷ்டம் வருகிறதோ அப்போது அரசாங்கம் தகுந்தமுறையில் கண்டிப்பாக எல்லா நன்மைகளையும் மக்களுக்குச் செய்யும் என்று சொல்லிக்கொண்டு இந்த மான்யத்தை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



28th March 1963]

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 7,20,500 under Demand No. XXXI—Famine Relief."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXIII—MISCELLANEOUS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,49,51,500 under Demand No. XXXIII—Miscellaneous."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,49,51,500 under Demand No. XXXIII—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXVI—OTHER MISCELLANEOUS CONTRIBUTION AND ASSIGNMENTS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,84,66,600 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,84,66,600 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXVII—COMPENSATION TO ZAMINDARS.

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 39,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars."

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 39,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XLV—COMMUTED VALUE OF PENSIONS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,02,500 under Demand No. XLV—Commuted value of Pensions."

**திரு. ஆ. தங்கவேலு:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஓய்வு உபகாரத் தொகை மான்யத்தின் மீது நான் இரண்டொரு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். அரசாங்கத்தில் 35 ஆண்டுகள் பணியாற்றி உடல் தளர்ந்து, கண் பஞ்சடைந்து மிகக் கஷ்டமான நிலை இருக்கும் போது கொடுக்கக்கூடியதுதான் இந்த ஓய்வு உபகாரத் தொகை. இது ரூபாய் 6, 8, ரூபாய் 10 . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது "கம்யூட்டட் வால்யூ ஆஃப் பென்ஷன்ஸ்". சாதாரண பென்ஷன் அல்ல. பென்ஷனுக்கு ஈடாக மொத்தமாகக் கொடுப்பது, இது பென்ஷனைப் பற்றியது முன்பே நிறைவேற்றப் பட்டுவிட்டது

**திரு. ஆ. தங்கவேலு:** இது, இப்போது குறைந்த அளவு கொடுக்கப்படுகிறது, அதை உயர்த்திக் கொடுக்கவேண்டும். இதை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்பதுதான் என் கோரிக்கை. இந்த பென்ஷன் தொகையை எம். ஓ. மூலம் அனுப்பவேண்டும். பென்ஷன் வாங்குபவர்கள் வெளி ஊர்களில் இருந்து வரவேண்டியிருப்பதால் அவர்களுக்கு எம்.ஓ. அனுப்பி, தொகையையும் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் முன்பு கூறியதுபோல் இது "கம்யூட்டட் வால்யூ ஆஃப் பென்ஷன்ஸ்". என்ன வயதாயிற்று, எவ்வளவு நாட்கள் இருப்பார் என்றெல்லாம் ஒரு கணக்கு போட்டு இன்ஷூரன்ஸ் மாதிரி கொடுப்பது இது. மொத்தமாகக் கொடுப்பது. மொத்தமாக ஒரு செலவிற்கு உபயோகிக்கலாம் என்ற முறையில் இது அளிக்கப்படுகிறது.

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,02,500 under Demand No. XLV—Commuted value of Pensions."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XLVII—LOANS AND ADVANCES BY STATE GOVERNMENT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granetd a sum not exceeding Rs. 21,80,71,800 under Demand No. XLVII—Loans and Advances by State Government.

MR. SPEAKER: The question is—

"That the Government be granetd a sum not exceeding Rs. 21,80,71,800 under Demand No. XLVII—Loans and Advances by State Government."

The Demand was put and carried and the Grant was made.



## IV. ANNOUNCEMENTS—*cont.*

### (2) THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1963 (L.A. BILL NO. 9 OF 1963)

MR. SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in and consideration by the Legislative Assembly of the Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963).

### V.—GOVERNMENT BILLS—*cont.*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Appropriation No. 3 Bill, 1963. (L.A. Bill No. 9 of 1963)".

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras Appropriation No. 3 Bill, 1963. (L.A. Bill No. 9 of 1963)".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced. 1-00 p.m.

The House will now adjourn and meet again at 8-30 a.m., tomorrow.

The House then adjourned.

### VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders.

142. *Notification issued with G.O. Ms. No. 11, Food and Agriculture, dated 2nd January 1963 regarding establishment of regulated markets at Pattukottai, Adirampattinam, Muthupet and Thanjavur in Thanjavur district. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

143. *Notification issued with G.O. Ms. No. 170, Home, dated 11th January 1963 cancelling the exemption granted from the payment of motor vehicles tax in respect of Willys Jeep Station Wagon No. 9113 belonging to Co-operative for American Relief Everywhere, Inc., Madras and exempting from the payment of motor vehicles tax in respect of the Willys Station Wagon MSW No. 7857 belonging to the said Inc., Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

#### B. Reports, Notifications and other papers.

93. *Notification issued with G.O. Ms. No. 706, Industries, Labour and Co-operation (Co-operation), dated 4th February 1963 issuing rules relating to the inclusion of certain commodities under the Madras Warehouses Act, 1951 (Madras Act XV of 1951).*

**திரு. இராம. அரங்கண்ணல்:** குடிசைவாழ் மக்கள், அவர்களாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து மனை வாங்குவதற்கு முன் வந்தால் அரசாங்கம் ஆதரவு தருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எஞ்சி இருக்கிறவர்களுக்கு என்ன செய்வது என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதைப் பரிசிலிக்கலாம். ஏனென்றால் குடிசைவாழ்ப் பகுதியில் ஒரு ஏக்கருக்கு சற்றேறக்குறைய 150 முதல் 200 வரை மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் எத்தனை பேர் நிலத்தை வாங்கிக்கொள்வார்கள், நிலம் கிடைக்காதவர்கள் எங்கே போவார்கள் என்ற பிரச்சனை எல்லாம் எழுகிறது.

**திரு. கே. பொன்னையா:** தலைவர் அவர்களே, நமது சர்க்காரில் குடிசைவாழ் மக்களுக்கு மனை வாங்கிக் கொடுத்து, டவுன் பிளானிங் அமைத்துக் கொடுத்தால் போதும், வீடுகளை அவர்களே கட்டிக்கொள்வார்கள் என்ற கொள்கை இருந்ததே, அந்தக் கொள்கை எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எங்கெல்லாம் போதுமான இடம் கிடைக்கிறதோ அந்த இடத்தில் Open Developed plots கொடுக்கிறோம். எங்கெல்லாம் போதுமான இடம் இல்லையோ அங்கெல்லாம் tenements கட்டி எவ்வளவு அதிகமாக அங்கே அவர்கள் வசிக்கச் செய்யலாமோ அந்த விதம் செய்கிறோம்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** ஸார், சர்க்காருடைய புறம்போக்கு நிலத்தை குடிசை வாழ்வோர் தங்களுக்கு ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டுமென்று சர்க்காருக்கு மனு கொடுத்தார்களா? அவ்வாறு கொடுக்கப்பட்டிருந்தால் எத்தனை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அத்தவிதமான நிலம் ஆர்ஜிதம் செய்துகொடுக்கப்படமாட்டாது என்று திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஸார், மயிலாப்பூரில் காலியாக இருக்கிற தரிசு நிலங்களைப் பற்றி சர்வே செய்யப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஸ்லம்ஸ் பற்றித்தான் சர்வே செய்திருக்கிறார்கள். காலி நிலங்களை சர்வே செய்வதாய் இருந்தால் அது பொருத்தமாய் இருக்காது. யார் யாருக்கோ சொந்தமாக இருக்கும் நிலங்களை சர்க்கார் போய் சர்வே செய்து கொண்டிருப்பது அவ்வளவு சரியல்ல.

**திரு. காஞ்சி மணிமொழியார்:** தலைவர் அவர்களே, கோவில் நிலங்களில் குடிசைகள் இருந்தால் அந்த நிலங்களை நீண்டகால குத்தகைக்கு எடுத்து அதை சீர்திருத்துவதற்கு சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அங்கே எவ்வளவு பேர்கள் வசிக்கலாமோ அதற்கு அதிகமான பேர்கள் வசிக்கிற காரணத்தினால் அவர்களுக்கு அந்த இடத்தை லீஸுக்கு எடுத்துக் கொடுக்கவோ அல்லது வேறு வசதி செய்து கொடுக்கவோ



## பஞ்சாயத்துக்கள் (பிரித்தமைத்தல்)

* 419 **கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா பரயந்தாங்கல் பஞ்சாயத்திலிருந்து பழம்பூண்டி கிராமத்திற்கு தனி பஞ்சாயத்து பிரித்து கொடுக்க வேண்டி மகஜர் வந்துள்ளதா?

(இ) அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) ஆம். வந்தது.

(இ) பரயந்தாங்கல் பஞ்சாயத்தை இரண்டாகப் பிரிக்கும் பிரச்சனை நெருக்கடி நிலைமை தீர்ந்த பிறகுதான் எடுத்துக் கொள்ளப்படும். நெருக்கடி காலத்தில் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்கள் நடத்துவதற்கு 1962-ம் ஆண்டு சென்னை ஸ்தல ஸ்தாபனங்கள் (அங்கத்தினர்களின் பதவிக்கால நீடிப்பு) சட்டம் தடை விதிப்பதே இதற்குக் காரணமாகும்.

(*a*) Yes.

(*b*) The question of bifurcation of Parayanthangal Panchayat will be considered after the cessation of the emergency as the Madras Local Authorities (Extension of term of Office of Members) Act, 1962, prohibits elections to local authorities during the period of the emergency.

* 420 **கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலூகா மேட்டுவைலாம்பூர் பஞ்சாயத்திலிருந்து பள்ள வைலாம்பூருக்கு தனி பஞ்சாயத்தாக பிரித்துக் கொடுக்க மகஜர் வந்துள்ளதா?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The proposal could not be considered due to the enactment of the Madras Local Authorities (Extension of term of Office of Members) Act, 1962 which prohibits election during the period of the National Emergency.

**திரு. தே. பொன்னையா:** தலைவர் அவர்களே, ஒரு பகுதியை ஒரு பஞ்சாயத்தில் சேர்க்கவேண்டுமென்றால், அந்தப் பகுதியில் வாழும் மக்கள் இஷ்டத்தைப் பொறுத்தோ அல்லது அந்தப் பஞ்சாயத்து தீர்மானம் போட்டு சர்க்கார் அங்கீகாரத்தைப் பெற்று வந்தால் சேர்த்துக்கொள்ளப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எல்லாவற்றையும் விட சட்டம் இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையிலே எல்லாவற்றையும் ஆராய்ந்து அரசாங்கம் முடிவு செய்கிறது.

[29th March 1963

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், நெருக்கடி காலத்தில் கூட இப்போது இடைத்தேர்தல்களை நடத்துவதற்கு சர்க்கார் முன்வந்திருக்கும்போது பஞ்சாயத்துக்களை பிரித்து அதற்கெல்லாம் தகுந்த முறையிலே தேர்தல் நடத்துவதற்கு என்ன சிரமம் இருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்து தேர்தல், பஞ்சாயத்துக்களை மாற்றி அமைக்கும் விஷயம் ஆகியவைகள் இன்னும் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் :** ஸார், எனது தொகுதியில் வீரநல்லூர் பஞ்சாயத்திலிருந்து ரெவின்யூ வில்லேஜ் புதுக்குடி என்ற கிராமம் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. வீரவநல்லூர் பஞ்சாயத்திலிருந்து இந்தக் கிராமத்தைப் பிரித்து தனி பஞ்சாயத்தாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை வந்திருக்கிறதா? அதற்கு வேண்டிய அனுமதி வழங்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதையெல்லாம் தகுந்தவாறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வோம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், ஒரு பர்லாங் தொலை தூரத்தில் இரண்டு பெரிய கிராமங்கள் இருக்கின்றன, மக்கள் தொகை 5,000த்துக்கு மேல் இருந்தால் இரண்டையும் சேர்த்து டவுன் பஞ்சாயத்து அமைப்பது நலமென்று கருதுகிறீர்களா? அல்லது தனியாகப் பிரித்து மைனர் பஞ்சாயத்தாக அமைப்பது நலமென்று கருதுகிறீர்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கு தனி கேள்வி தேவை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, இப்போதிருக்கும் பஞ்சாயத்திலிருந்து ஒரு கிராமத்தைப் பிரித்து பஞ்சாயத்தை அமைக்கவேண்டுமென்றால் பஞ்சாயத்து போர்டில் தீர்மானம் போட்டு நிறைவேற்றப்பட்டால்தான் அவ்வாறு அமைப்பதற்கு வழி இருக்கிறது. இந்த முறையை மாற்றி அமைக்க உத்தேசமுண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க உத்தேசமில்லை.

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, ஒரு சில பஞ்சாயத்துக்கள் மிகவும் பெரிதாகவும், பரவலாகவும் இருப்பதினால் வரி வசூல் செய்வதற்கும், இன்னும் பல அபிவிருத்தி வேலைகள் செய்வதற்கும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே அவைகள் மாற்றி அமைக்கப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறது. குறிப்பிட்ட பஞ்சாயத்துக்கள் பற்றி ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படுகின்றன.



29th March 1963]

*கேரள மாநிலம் (தமிழ் நாடு மாநிலத்தோடு இணைத்தல்)*

* **421 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கேரள மாநிலத்தை தமிழ் மாநிலத்தோடு இணைக்கும் திட்டம் பற்றிய குறிப்பு எதையேனும் மத்திய அரசாங்கம் நம் மாநில அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளதா?

(இ) அப்படியானால் நம் மாநில அரசு அளித்த பதில் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் கருத்தை வெளியிட்டவர் ஒரு மத்திய அமைச்சர். அதனால் இது மத்திய அரசாங்கத்தின் கருத்தாக இருக்கலாமோ என தோன்றுகிறது. ஆகவே மத்திய அரசு மாநில அரசுக்கு இதைப் பற்றி ஏதாவது குறிப்பு அனுப்பியுள்ளதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தப் பிரச்சனையைப்பற்றி கருத்து தெரிவித்தவர் மத்திய அமைச்சர் அல்ல. மத்திய காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நிர்வாகி.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், மைசூர், ஆந்திரா மாநிலப் பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்கும் உத்தேசமுண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்பேர்ப்பட்ட உத்தேசம் இந்த அரசாங்கத்திடமில்லை.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** தலைவர் அவர்களே, கேரள மாகாணத்தில் சாஸ்வதமான காங்கிரஸ் ஆட்சி இனிமேல் இருக்காது என்பதற்காக, கேரள மாகாணத்தின் தென் பகுதியை தமிழ் நாட்டுடனும், வட பகுதியை மைசூருடனும் சேர்க்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு உண்டா? . . . .

**கனம் சபாநாயகர் :** அந்தக் கேள்வியை இங்கே எப்படி கேட்க முடியும்? பார்லிமெண்டில்தான் கேட்கவேண்டும்.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** அந்தமாதிரி மத்திய அரசாங்கத்தார் வற்புறுத்தி இருக்கிறார்களா? அப்படியானால் இந்த அரசாங்கத்தின் முடிவு என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் சம்பந்தப்பட்ட, தொடர்பு வைத்துக் கொள்ளும் கட்சிக்கு இம் மாதிரி யோசனை உண்டு. இந்த யோசனை இந்த அரசாங்கத்துக்கும் இல்லை, காங்கிரஸ் கட்சிக்குமில்லை.

[29th March 1963

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஸார், தமிழ் நாட்டிலே இருக்கக் கூடிய எந்த அரசியல் கட்சியாவது, கேரளம், ஆந்திரம், மைசூர் போன்ற பகுதிகளை தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்தவரையில் இன்றைக்கு இல்லை. இதற்கு முன்பு சில கட்சிகள் இத்தகைய அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார்கள்.

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, ஏற்கனவே எல்லை ஓரங்களில் உள்ள பிராந்தியங்கள், கோவை, பொள்ளாச்சி, வால் பாறை போன்ற பிரதேசங்கள் தங்களுக்குச் சேர வேண்டியவை என்று ஒரு சில இடங்களைப்பற்றி குமுறல் செய்கிறார்கள். அந்த நிலையில் ஒன்றாகச் சேர்த்துவிட்டால் என்ன ஆகும்? மத்திய சர்க்காரிடமிருந்து அந்தமாதிரி தீர்மானம் வந்தாலும் அதை கண்டிப்பாக இந்த அரசாங்கம் நிராகரிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப் பற்றி கனம் அங்கத்தினர் எவ்வித அச்சமும் கொள்ள வேண்டியதில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கன்னடம், கேரளம், தமிழகம், ஆந்திரம் ஆகிய நான்கு திராவிடப் பகுதிகளிலும் நல்ல ஒப்புயர்வான நிலையில் மின்சாரத் துறையிலும், தண்ணீர் பங்கீடு, மற்றும் போலீஸ் ஆகியவைகளில் ஒரு பொதுமையுணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் இது வளர்ந்து நல்ல முறையில் உருவாகும் என்கிற அறிகுறி நம் அரசாங்கத்திற்குப் படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது தனித் தனி மாநிலங்களாக இருக்கின்றன. ஆகவே சுமுகமான உறவு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதைச் சிதற அடிக்கக் கூடாது என்பது தான் நம் எல்லோருடைய கவலையெல்லாம்.

### உருள் இரும்பு தொழிற்சாலை (வட ஆற்காடு ஜில்லா)

* 422 கேள்வி.—**திரு. ர. ஜீவரத்னம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் உருள் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தும்படி வட ஆற்காடு ஜில்லா வடக்கு அபிவிருத்தி கவுன்சிலில் நிறைவேற்றிய தீர்மானம் அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ?

(இ) அப்படியானால் அரசாங்கம் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) கிடைத்தது.

(இ) இந்த வேண்டுகோளையும் இதைப் போன்ற மற்ற வேண்டுகோள்களையும் அரசாங்கம் உரிய காலத்தில் முறைப்படி யோசிக்கும்.



29th March 1963]

### *Adulteration of food stuffs*

* 423 Q.—Sri M. KALYANASUNDARAM :
Sri K. MOOKIAH THEVAR : } Will the Hon. the Ministtr for Publice Health be pleased to state the steps taken for effectively checking adulteration of food articles?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : A statement[a] on the measures taken to check adulteration of food stuffs is placed on the table of the House.

* 424 Q.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state the steps proposed to be taken for the effective prevention of adulteration of food stuffs served in hotels in big cities?

The Hon. Srimathi JOTHI VENKATACHELLUM : A statement[b] is placed on the table of the House.

**திரு. து. ப. அழகமுத்து :** ஸார், 1962-ம் ஆண்டில் இந்த கேஸ்களுடைய எண்ணிக்கை குறைந்திருப்பதற்கு சரியானபடி கவனம் செலுத்தாதது காரணமா? அல்லது உள்ளபடியே குறைந்திருக்கிறது என்று கருதுவதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், இவைகளைத் தடுப்பதற்கு கண்டிப்பான முறைகளை கையாளுவதால் உள்ளபடியே குறைந்திருக்கின்றன.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஜாபிதாவிலிருந்து 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை சென்னை நகரம் நீங்கலான மாவட்டங்களில் 287 கலப்பட கேஸ்கள் இருந்ததாகவும், அவைகளுள் தண்டிக்கப்பட்டவைகள் 17 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரம் சம்பந்தப்பட்ட மட்டில், அதே காலத்தில் 415 கலப்பட கேஸ்கள் போட்டதாகவும், ஆனால் ஒன்றுமே தண்டிக்கப்படவில்லை என்று கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதன் காரணம் என்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதில் என்ன காரணம் என்று கேட்டால், அனலிஸிஸ் செய்யக் கொண்டு போவதில் கிங் இன்ஸ்டிட்யூட், கார்ப்பொரேஷன் ஆகிய இரண்டு இடங்களில்தான் செய்ய வேண்டியிருக்கிறது, அதில் லிமிட்டெட் நம்பர்தான் செய்ய முடிகிறது. அவர்களிடமிருந்து ரிப்போர்ட் வந்த பிறகுதான் தண்டிக்க வேண்டிய தீர்மானம் எடுக்க முடியும். பல கேஸ்களில் அனலிஸிஸ் ரிப்போர்ட்டே வராத காரணத்தினால் அது குறைவாக இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** கலப்பட உணவுப் பண்டங்களை அருந்தியதன் காரணமாக இறந்தவர்களுடைய தொகையைக் கூற முடியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்கு தனிப்பட்ட கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

---

[a] Printed as Appendix I on pages 219–227

[b] Printed as Appendix II on pages 228–231

[29th March 1963

**திரு. சி. பொன்னுசாமி :** வெற்றிலைபாக்கு கடைகளில் ஸ்வீட், பலகாரங்கள் விற்கக்கூடிய சிறு வியாபாரிகளுக்குக்கூட இந்தச் சட்டம் அமல் நடத்தப்படுகிறது. அது நியாயமா? உணவுப் பண்டங்களை உண்டுபண்ணுகிறவர்களுக்குத்தானே இந்தச் சட்டத்தை அமல் நடத்தவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எல்லாம் தின்பண்டங்கள் என்று வருகிற காரணத்தினால் இந்தச் சட்டம் ஹோல்சேலர்ஸ், ரீடெய்லர்ஸ், வெற்றிலைபாக்குக் கடை, எதுவாக இருந்தாலும் அமல் நடத்தப்படுகிறது.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** சில உணவுக் கலப்படத்தில் பாஷாணம் ஏற்பட்டு அதனால் சாப்பிடுகிறவர்கள் இறந்து போகிறார்கள். அத்தகைய உணவுக் கலப்படம் செய்வதை கொலைக் குற்றமாகக் கருதி அவர்களுக்கு மரண தண்டனை கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

**கனம் சபாநாயகர் :** எப்படி அதைக் கொலைக் குற்றமாக மாற்ற முடியும்? According to the Indian Penal Code, it requires intention to murder.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், உணவுப் பண்டங்களில் விஷம் கலப்பதற்குக் காரணமாக அரசாங்கத்தில் கூறுகிறார்கள். ஹோட்டல்களில் உணவு தயாரிப்பதற்கும், விலை போகாமல் எஞ்சியுள்ள உணவுப் பண்டங்களை மீண்டும் தயாரிப்பதற்கும் விஷமுள்ள ரசாயனப் பொருள்களையும், செயற்கை மணங்களையும், நிறங்களையும், இனிப்புப் பொருள்களையும் உபயோகிப்பது என்று. இந்த விஷம் உள்ள செயற்கை மணங்களையும் நிறங்களையும் பயன்படுத்துவதற்கு முன்பே விஷம் ஏதாகிலும் இருக்கிறதா என்று பரிசீலனை செய்த பிறகுதான் ஹோட்டல்களில் பயன்படுத்தவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இப்போது, கலரிங், எஸென்ஸ் ஆகியவைகளையெல்லாம் ரெஸ்ட்ரிக்ட் செய்திருக்கிறது. கலரிங் போடக் கூடாது என்று அரசாங்கம் உத்திரவு போட்டிருக்கிறது.

**திரு. பி. வி. சீராமுலு :** ஸார், சில உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்யாமல் இருந்தும் தானாகவே உணவுக் கலப்படம் இருக்கிறது என்று ரிஸல்ட் வருகிறதே, இதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது ஆராய்ச்சி நடத்தியது உண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார். அனலிஸிஸ் செய்து அந்த ரிஸல்ட் வந்த பிறகுதான் தண்டிக்கப்படுகிறார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த ஆராய்ச்சி நிலையமாகிய கிங் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கிற சில சிப்பந்திகள் இத்தகைய குற்றவாளிகள் தப்பித்துக்கொள்ள வழி செய்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தெரியாது. கனம் அங்கத்தினருக்கு அம்மாதிரித் தெரிந்து அரசாங்கத்திற்கு தெரி



29th March 1963]

**திரு. எஸ். மாதவன் :** இப்போது கலப்படம் செய்கிறவர்களுக்கு தண்டனையாக அபராதம் விதிக்கலாம் என்று இருக்கிறது. அதை மாற்றி அமைத்து ஜெயில் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கட்டாயமாக்க அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதில் மூன்று வித தண்டனைகள் இருக்கின்றன. காரணத்தையொட்டி எப்படி கேஸ் வருகிறதோ அப்படித்தான் தண்டிக்க முடியும். அதை மாற்றி அமைக்க முடியாது.

**திரு. பி. வி. சீராமலு :** ஸார், எண்ணெய் வித்துக்கள் மழையினால் அடிபட்டு, பின்பு உலர்த்தி, அதை செக்குகளில் அல்லது எக்ஸ்பெல்லர்களில் ஆட்டி எண்ணெய் எடுத்தால், முதல் வாரத்தில் எஃப்.எஃப்.ஏ வருவதில்லை. அதன் பிறகு பார்த்தால் எஃப். எஃப். ஏ. சதவிகிதம், கலர் 5 சதவிகிதம், ஆஸிட் 1.2 சதவிகிதம் என்று வந்து அதற்குமேல் சில திருத்தங்கள் வருகின்றன. அதை இந்த அதிகாரிகள் குற்றம் என்று சொல்லுகிறார்களே, இதைப்பற்றி ஆராய்ச்சி நடத்தியது உண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்தமாதிரி கேஸ்களில் ரெப்ரஸெண்டேஷன் வந்திருக்கிறது. அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், உணவு விடுதிகளில் மிக மிக முக்கியமான இடம் சமையல் செய்யும் இடம். அங்கே போதுமான காற்று வசதி, சுகாதார வசதி இல்லாத காரணத்தினால், பண்டங்களில் பணியாளர்களின் வியர்வை கலப்படமாக சிந்தக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் தடுக்க ஏதாவது அரசாங்கம் யோசனை செய்திருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு ஹோட்டல் ப்ரொப்ரைடர்களுக்கெல்லாம் சொல்லியிருக்கிறோம். இதையெல்லாம் பூர்ணமாகத் தவிர்க்க முடியாது. நம் நாட்டின் க்ளைமேட்டிக் கண்டிஷனையெல்லாம் பார்க்கும்போது, இது கம்ப்ளீட் சக்ஸஸ் என்று சொல்ல நான் தயாராயில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பெரும்பாலும் இந்த லிஸ்டிலே பால், வெண்ணெய், நெய், நல்லெண்ணெய், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற திரவப் பதார்த்தங்களில்தான் கலப்படக் குற்றங்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. திரவ பதார்த்தங்களில்தான் சுலபமாகக் கலப்படம் செய்ய வசதி இருக்கிறது என்பது உண்மையா? அதை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** லிக்விட் என்று ஒன்றும் இல்லை. எல்லாவற்றிலும்தான் கலப்படம் செய்கிறார்கள் என்று இந்தச் சட்டத்தைத் தீவிரமாக அமல் நடத்துகிறார்கள்.

[29th March 1963

**திரு. ஜே. மாதா கவுடர்:** தேயிலை கலப்படம் முன்பு இருந்தது, 1962-ல் ஒரு கேஸும் இல்லாததற்குக் காரணம் தரக் குறைவான தேயிலையை மத்திய கலால் இலாகாவில் எடுத்து பூமியில் புதைத்து விடுகிறார்கள்; க்ளியரன்ஸ் கொடுப்பதில்லை. ஆனால் வெளியே தேயிலையோடு உளுத்தம்பொட்டைக் கலந்து விடுகிறார்கள். கலப்படம் செய்கிறார்கள் என்றால் முதலிலேயே கலப்படம் செய்யக்கூடிய பொருளை வெளியே அனுப்பாமல் புதைத்துவிட சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அம்மாதிரியான தகவலே கிடைக்கவில்லை அரசாங்கத்திற்கு.

**திரு. ஆர். ரங்கசாமி:** ஸார், பெரிய ஹோட்டல்களில் பாலில் தண்ணீர் கலப்பதற்கு பதில் காப்பி டிகாக்ஷனில் தண்ணீர் கலந்து கொடுக்கிறார்கள். அது கலப்பட சட்டத்தில் வரவில்லை. பெட்டிக் கடைகளில் பாலில் தண்ணீர் கலப்பதால் அவர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். தண்ணீரைக் கலப்பதால் உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லை என்ற காரணத்தினால் பாலுக்கு விதி விலக்கு அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஹோட்டல்களைப் பொறுத்தவரையில் அதற்கு எக்ஸெம்ஷன் உண்டு. அவர்கள் பாலில் தண்ணீர் கலக்கலாம். ஆனால் சுத்தமான மில்க் என்று விற்றால்தான் தவறு.

**திரு. கே. பொன்னையா:** இந்த உணவுக் கலப்படத்திற்குக் காரணம் பேராசைதான். ஆகவே, பேராசையைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** பேராசை என்பது தனிப்பட்டவர்களுடைய சொந்த குணம்.

**திரு. எம். தண்டாயுதபாணி:** ஸார், அமைச்சர் சொன்னார்கள், ஆராய்ச்சி செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று. இது ஆராய்ச்சி சாலைகள் குறைவாக இருப்பதால் தான் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஆராய்ச்சி சாலைகளை அதிகப்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா? அப்படியென்றால் எங்கே அமைக்க உத்தேசம்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இப்பொழுது இருப்பது கிண்டி இன்ஸ்டிட்யூட்டிலும், கார்ப்பொரேஷனிலும். இப்பொழுது இருக்கும் நெருக்கடியை உத்தேசித்து, கோயம்புத்தூரில் ரீஜனல் பேஸிஸில் ஒன்று ஸ்டார்ட் பண்ணலாம் என்று இருக்கிறோம்.

**திரு. மு. கருணாநிதி:** நிபுணர் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் சென்னையிலும், கோவையிலும் ஆராய்ச்சிசாலைகள் அமைக்க அரசினர் ஆலோசித்து வருகின்றனர் என்று அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறதே. அது எப்பொழுது நிறுவப் பெறும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த ஆண்டிலேயே நிறுவ வேண்டும் என்பதுதான் விருப்பம். கூடியசீக்கிரம் அது செய்யப்படும்.



29th March 1963]

**திரு. எஸ். முருகையன்:** சில நகரங்களிலே இவ்வளவு உணவுக் கலப்பட கேசுகள்தான் கண்டு பிடிக்கலாம் என்று ஒரு தடை இருக்கிறது. எவ்வளவு கேசுகள் வேண்டுமானாலும் கண்டுபிடிக்கலாம் என்று சொல்லிவிட்டால் உணவுக் கலப்படம் அதிகமாக இருக்காது. ஆகவே, சட்டத்தை மாற்றி அமைக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இப்பொழுதுதான் சொன்னேன், லிமிடட் நம்பர் ஆப் கேசுகள்தான் பிடிக்கமுடியும் என்று. அதற்கு அதிகம் என்றால் அனலிஸிஸ் கஷ்டமாக இருப்பதால்தான் அந்த லிமிட். கிங் இன்ஸ்டிட்யூட்டும், கார்ப்பொரேஷன் நிறுவனமும்தான் இதைச் செய்யவேண்டியிருக்கிறது. அதிகப்படியான கேசுகளைப் பிடித்துக்கொடுத்தால், பண்டங்கள் நல்லதாக இருந்தாலும்கூட காலதாமதத்தினால் அது கெட்டுப்போகும் நிலை ஏற்பட்டுவிடும், அடல்ட்டரேஷன் என்று ஆகிவிடும். ஆகவே தான் இந்த லிமிட் போடப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். மணி:** ஸார், பருத்திக் கொட்டையை ஆட்டி, அதன் எண்ணெயோடு 25 சத விகிதம் நல்லெண்ணெயைக் கலந்து அதை கேரளாவிற்கு நம் மாநிலத்தில் இருந்து அனுப்பியிருக்கிறார்கள். அதைப் புசித்த அந்த மக்களுக்கு பயித்தியம் பிடித்திருக்கிறது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இல்லை, ஸார். அந்த மாதிரி தகவல் என்னிடம் இல்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கிங் இன்ஸ்டிட்யூட்டிலும், கார்ப்பொரேஷனிலும் மட்டுந்தான் உணவுப் பண்டங்களை ஆராய்ச்சி செய்யவேண்டி இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மேலும் ஒரு ஸ்தாபனத்தை திருச்சியில் அல்லது தென் மாவட்டங்கள் ஒன்றில் அமைத்தால் அதிகப்படியான கலப்படத்தை தடை செய்யலாம். ஆகவே, அப்படி ஒரு அதிகப்படியான ஸ்தாபனத்தை அமைக்க சர்க்கார் முன்வருமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இப்பொழுதுதான் சொன்னேன், கோயம்புத்தூரில் ரீஜனல் பேஸிஸில் ஒரு ஸ்தாபனத்தை ஸ்டார்ட் பண்ணப் போகிறோம் என்று.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** ஓட்டல்களில் எச்சில் கலப்படம் அதிகமாக இருக்கிறது. உணவுப்பண்டங்களை ப்ளேட்டுகளிலும், ஸ்பூன்களிலும் கொடுப்பதால் அதை ஒழித்து, பண்டங்களை இலையில் பறிமாற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இதையெல்லாம் உத்தரவால் செய்ய முடியாது; இலைகள் எப்பொழுதுமே கிடைக்காது.

**கனம் சபாநாயகர்:** கையில் கொடுத்துவிட்டால் போச்சு!

[29th March 1963

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** தலைவர் அவர்களே, சர்க்கரையில் மாவு கலந்து விற்கும் வழக்கம் சாதாரணமாக இருக்கிறது. இரண்டு ஸ்பூன் சர்க்கரை போட்டால் ஒரு ஸ்பூன் சர்க்கரையின் தித்திப்புத்தான் இருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கத்தில் ஏதாவது ஆராய்ச்சி செய்தார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சர்க்கரையில் மாவு கலப்பதால் இனிப்பு குறையாது. சில சமயங்களில் வருகிற சர்க்கரையே இனிப்பு குறைந்ததாக இருக்கிறது. மாவு கலந்த இரண்டு ஸ்பூன் சர்க்கரை 50 சத விகிதம் இனிப்பு குறைய வழியே இல்லை.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** ஸார், அநேகமாக சில்லரைக் கடைக்காரர்கள்தான் தண்டிக்கப்படுகிறார்கள். மொத்தக் கடையில்தான் சில்லரைக் கடைக்காரர்கள் சரக்குகளை வாங்கி விற்கிறார்கள். ஆகவே, கலப்படம் என்று தெளிவாகத் தெரிந்ததும் மொத்தக் கடையிலும் சரக்கில் கலப்படம் இருக்கிறதா எங்கு கலப்படம் ஏற்பட்டது என்று அறிய சர்க்கார் ஏற்பாடு செய்து உள்ளார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஸார், ஹோல்ஸேலர்தான் தண்டிக்கப்படவேண்டும் என்று இருக்கிறது. இருந்த போதிலும், ரீடெய்லர்களும் தாங்களே சில பொருள்களைத் தயாரித்து விற்கிறார்கள். ஆகவே, ஹோல்ஸேலரிடம் வாங்கியதுதான் என்று சொல்ல முடியவில்லை. அதுதான் கஷ்டம்.

**திரு. சி. பொன்னுசாமி:** சில்லரைக் கடைக்காரர்கள், வெற்றிலைக் கடை வியாபாரிகள் ஏழைகள்; இவர்கள் குற்றத்திற்கு ஆளாகக் காரணம் இல்லை. ஆகவே, சட்டத்தை ரத்து செய்ய யோசனை செய்வார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கனம் அங்கத்தினர் சொல்வதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ரெப்ரசென்டேஷன் வந்திருக்கிறது. அதை ரத்து செய்ய முடியாது. ஆனால், என்ன செய்யலாம் என்று யோசனை செய்து வருகிறோம்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** ஸார், கிராமாந்தாரங்களிலே சிறிய ஹோட்டல்களிலே மாதிரி எடுக்கும்போது, டின் எண்ணெயையும், லூஸ் எண்ணெயையும் எடுத்து, இரண்டையும் ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது இரண்டின் மாதிரிகளுக்கும் வித்தியாசமில்லையென்றாலும் அத்தகைய மாதிரி கலவையுள்ளதாக இருந்தாலும் அத்தகைய சிறிய வியாபாரிகள் அக்கலவைக்குக் காரணமில்லை என்பதை அரசாங்கம் உணருவார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஆம், அந்த மாதிரி ரெப்ரசென்டேஷன் வந்திருக்கிறது. அதை ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.



29th March 1963]

**திரு. ஏ. எஸ். தங்கமுத்து கவுண்டர்:** எச்சில் கலப்படத்தைத் தவிர்க்க இலை கொடுப்பது கஷ்டம் என்று சொன்னார்கள்; ஸ்பூன், ப்ளேட்டு இவைகளைக் கொதிக்கும் நீரில் ஒரு 5, 10 நிமிஷங்கள் கண்டிப்பாகப் போட்டுவைத்த பிறகே மறுபடியும் உபயோகிக்க வேண்டும் என்று உத்தரவு போடுவார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஸார், அம்மாதிரி உத்தரவு ஏற்கனவே போட்டு இருக்கிறோம். ஹோட்டல்காரர்களும் அநேகமாக அப்ஸர்வ் செய்கிறார்கள். ஆனால், சாப்பிடப் போகிறவர்கள் அவசரப்படுத்துகிறார்கள், அதனால் அவர்கள் அதைச் செய்ய முடியவில்லை (சிரிப்பு).

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** தலைவர் அவர்களே, உணவுக் கலப்படப் பொருள்களின் லிஸ்டில் சர்க்கரை சேர்க்கப்படவில்லை. சர்க்கரையில் ரவை அதிகமாகச் சேர்க்கப்படுகிறது. சர்க்கரை லிஸ்டில் சேர்க்கப்படவில்லையே. அதில் கலப்படம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்படவில்லையா என அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சர்க்கரையில் ரவை கலப்பதில், ரவை பாய்ஸன் இல்லை. இதுவரைக்கும் கலப்படம் பற்றித் தகவல் இல்லை.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** ஸார், சர்க்கரையுடன் மாவு கலப்பதால் சர்க்கரை குறைவதில்லை என்கிறார்கள். ஒரு ஸ்பூன் மாவைப் போலவே சர்க்கரை குறையும் என்பது தெரியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** என்னுடைய பதிலை அங்கத்தினர் சரியாக கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். குறைய வில்லை என்று சொல்லவில்லை. சர்க்கரையின் இனிப்பு குறையும் என்கிறார்கள், அதன் இனிப்பு குறையாது என்று சொன்னேன், இனிப்பு குறைவதற்கு மாவு காரணம் இல்லை என்று சொன்னேன்.

### மாநில உணவு ஆலோசனைக் குழு

* 425 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் விவசாய 9-
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் a.1
பாரா—

மாநில உணவு ஆலோசனைக் கமிட்டியைக் கலைத்ததற்கு காரணம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன்:** உணவு ஆலோசனைக் குழுவை இனியும் தொடர்ந்து வைத்திருப்பது அவசியமில்லை என அரசினர் கருதினர்.

**The Government considered that there was no need for continuance of the Food Advisory Committee.**

***திரு. ஆ. கு. சுப்பையா :*** மாநில உணவுக் குழு இருப்பதனுல் உணவுப்பொருள் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்ற காரணத்தினுல் அதை அரசாங்கம் கலைத்துவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

***கனம் திரு. பூ. கக்கன் :*** அதற்காக அவ்வாறு செய்யவில்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

***திரு. கோ. சி. மணி :*** எதற்காகத்தான் அந்தக் குழு கலைக்கப்பட்டது என்பதை விளக்கமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

***கனம் திரு. பூ. கக்கன் :*** உணவு நெருக்கடி காலத்திலே இந்த அட்வைசரி கமிட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதனுடைய ஆலோசனை கேட்கப்பட்டது. குறிப்பாக சபை அங்கத்தினர்களுக்குத் தெரியும், நெல் விலையும் ரொம்ப இறங்கிப் போய் விட்டது. ஆகையினுலே இது அவசியம் இல்லை என்று கருதி அரசாங்கம் இதை கலைத்து விட்டது.

***திரு. கோ. சி. மணி :*** நெல்லை தவிர மற்ற உணவுப் பண்டங்களின் விலை இறங்காமல் இருப்பதன் காரணமாக, அதைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தக் கமிட்டி இயங்கக்கூடாதா என்பதை அறிய விரும்புகிறேன்.

***கனம் திரு. பூ. கக்கன் :*** அதையெல்லாம் அரசாங்கம் பார்த்துக்கொள்ளும்.

*New bus routes from Vellore*

* 426 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to put two buses, on the following routes during the year 1963 :—

(i) Vellore to Coimbatore via Salem; and

(ii) Vellore to Thanjavur via Thiruvannamalai, Panruti, Vadalur, Lower Anicut and Kumbakonam?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

*Liquor permits (Gazetted Officers)*

* 428 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of Gazetted Officers holding liquor permits; and

(*b*) whether the Government have issued any instructions to them not to be found drunk while on duty or while appearing in public places?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Four.

(*b*) No such instructions are necessary as the permit itself does not authorise consumption of liquor in any public place.





***திரு. எஸ். மாதவன் :*** மத்திய சர்க்காருடைய ஊழியர்களுடைய காண்டக்ட் ரூல்ஸில், இம்மாதிரி மது அருந்தக்கூடாது பொது இடங்களில் அல்லது வேலை பார்க்கும்பொழுது என்று ரூல்ஸை திருத்தி அமைத்திருக்கிருர்கள். அது நம்முடைய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அதுபோல் நம்முடைய மாநிலத்து விதிகளையும் திருத்தி அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

***கனம் திரு. பூ. கக்கன் :*** பொதுவான இடங்களில் குடிக்கக்கூடாது என்று இருக்கிறது. அந்த விதியைத்தான் இப்பொழுது நம்முடைய அரசாங்கம் கையாண்டு வருகிறது.

***திரு. இரா. நெடுஞ்செழியன் :*** மது அருந்த அனுமதிச் சீட்டுகள் கோரி அதிகாரிகளிடமிருந்து எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன என்பதை அறிவிக்க இயலுமா ?

***கனம் திரு. பூ. கக்கன் :*** அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

***திரு. எஸ். மாதவன் :*** பொது இடத்திலே மது அருந்தக் கூடாது என்று லைசென்ஸில் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் அறிவேன். நான் கேட்டது, அதை விதியாக காண்டக்ட் ரூல்ஸில் அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

***கனம் திரு. பூ. கக்கன் :*** இப்பொழுது அந்த ஆலோசனை அரசாங்கத்தினிடம் இல்லை.

***திரு. கோ. சி. மணி :*** மது அருந்துவதற்கு அனுமதிச் சீட்டு என்னென்ன காரணங்களுக்காக எந்த அடிப்படையிலே வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

***கனம் திரு. பூ. கக்கன் :*** உடல் நிலையைப் பொறுத்து யார் பெர்மிட் கேட்கிருர்களோ அவர்களுக்கு, அதுவும் அரசாங்கத்தின் கீழ் வேலை பார்த்து சம்பளம் வாங்கும் டாக்டர்கள் சிபார்சு செய்தால், அனுமதி வழங்கப்படுகிறது என்பதை இப்பொழுது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

***திரு. மு. கருணுநிதி :*** அனுமதிச் சீட்டு பெற்று மது அருந்துகிற அதிகாரிகள் அதனை மீறி பொது இடங்களில் மது அருந்துகிருர்கள் என்ற தகவல் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளதா ?

***கனம் திரு. பூ. கக்கன் :*** அப்படி ஒன்றும் அரசாங்கத்திற்கு தகவல் இல்லை. அப்படி வந்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

*Drinking water-supply (rural areas)*

* 429 *Q.*—Sri S. MURUGAIYAN (on behalf of Sri K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any survey has been carried out for providing drinking water facilities in the rural areas; and

[29th March 1963

(b) how much Madras will be getting from Rs. 85 crores, additionally allotted for the purpose?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) It is presumed that the Member refers to the provision made under the Local Development Works Programme under the Centrally sponsored schemes in the Third Plan period. If so, it is not a new or additional provision. The allotment of funds under this programme is made by the Planning Commission annually. The allotment to the State is Rs. 34·50 lakhs for each of the years 1961–62 and 1962–63.

(அ) இல்லை.

(இ) மூன்றாவது திட்டக்கால அளவில் மத்திய அரசினர் ஊக்குவிக்கும் திட்டங்களின்கீழ் ஸ்தல அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு ஒதுக்கியுள்ள தொகையை அங்கத்தினர் குறிப்பிடுவதாகக் கொள்கிறேன். அப்படியிருந்தால் இத்தொகை புதிதாகவோ, அதிகப்படியாகவோ ஒதுக்கப்படவில்லை. இந்த வேலைத் திட்டத்துக்கு திட்டக் கமிஷன் ஆண்டுதோறும் தொகை ஒதுக்குகிறது. 1961-62, 1962-63-ம் ஆண்டு ஒவ்வொன்றுக்கும் இம் மாநிலத்துக்கு ரூபாய் 34.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்து

* 430 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்தை (GRADE I) முதல்தாப் பஞ்சாயத்தாக ஆக்குவதற்கு ஏதேனும் மனு வந்துள்ளதா ?

(இ) அதன்மேல் எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) அம்மாதிரி மனு ஒன்றும் வரவில்லை. ஆனால், கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்து உள்பட, எல்லா நகரப் பஞ்சாயத்துக்களையும், அவைகளுடைய தற்போதைய நிதி நிலையை அனுசரித்து, விசேஷ, முதல்தர, இரண்டாந்தர பஞ்சாயத்துக்களாக பிரித்து வகைப்படுத்துகின்ற விஷயம் பற்றி கிராம அபிவிருத்தி கமிஷனர் பரிசீலனை செய்துவருகிறார்.

(a) & (b) No such petition has been received. However, the question of re-classification of all the Town Panchayats, including Karambakudi Town Panchayat, into selection grade, first grade and second grade with reference to their present financial position is being examined by the Additional Development Commissioner.

திரு. பி. முருகையன் : முதல் தர பஞ்சாயத்தாக ஆவதற்கு என்ன தகுதி இருக்கவேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்கு தனி கேள்வி வேண்டும்.



29th March 1963]

திரு. ஜே. மாதா கவுடர் : ரூபாய் 10,000-க்கு மேல் வரும்படி இருந்துவிட்டால் முதல் தர பஞ்சாயத்தாகச் செய்யலாம் என்று இப்பொழுது சட்டம் இருக்கிறது. தற்பொழுது ரூபாய் 10,000-க்கு மேல் வருமானம் இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களை முதல் தர பஞ்சாயத்துக்களாக செய்துவிட்டால், எக்ஸிக்யூடிவ் ஆபீசருக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டியிருப்பதனால் அபிவிருத்தி வேலைகள் தடைபடுகின்றன. ஆகவே, ரூபாய் 10,000 என்பதை மாற்றி ரூபாய் 20,000-க்கு மேல் வரும்படி வரக்கூடிய பஞ்சாயத்துக்களைதான் முதல்தர பஞ்சாயத்துக்கள் என்று சொல்லக்கூடிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்கு தனி கேள்வி வேண்டும்.

### கிராமப் பஞ்சாயத்துக்கள் (கணக்குத் தணிக்கை)

* 431 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமப் பஞ்சாயத்துக்களின் வரவு-செலவுக் கணக்குகளை தணிக்கை செய்ய பிரத்தியேகமான உத்தியோகஸ்தர்களை நியமிக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. நாராயணன் : இப்பொழுது பஞ்சாயத்துக்களில் 4 வருஷம் வரையில் ஆடிட் நடக்காமலேயே இருப்பதனால், அங்குள்ள விஷயங்களை கவனிப்பதற்கு முடியவில்லை. ஊழல் நிரம்பி வருகின்றது. அந்தந்த வருஷத்தில் ஆடிட் செய்தால் நல்ல முறையில் இருக்கும், ஊழலும் நடக்காது என்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. 'எக்ஸாமினர் ஆப் லோகல் பண்டு அகௌண்ட்ஸ்' அவர்கள்தான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஊழல் ஏதாவது இருந்தால், அது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. பஞ்சாயத்துக்களைப் பற்றி ஊழல்கள் நிறைந்ததாக இருக்கின்றன என்று சொல்லுவது முறை அல்ல.

திரு. இரா. நாராயணன் : இப்பொழுது ஈ.ஓ.பி.-யாக இருப்பவர் ஒரு மாதத்தில் எத்தனை பஞ்சாயத்துக்களை ஆடிட் செய்ய வேண்டும் என்ற முறை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றியெல்லாம் தனியாகக் கேள்வி கேட்கவேண்டும்.

[29th March 1963

திரு. ஜே. மாதா கவுடர்: தற்பொழுது ஈ. ஓ. பி. நியமித்த பிறகு 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆடிட் செய்யப்பட்டு, எந்த விதமான ஊழலும் இல்லை என்பதை அரசாங்கம் உணர்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதற்கு முன்னால் ஒரு கனம் அங்கத்தினர் கேட்ட உப கேள்விக்கு இது விடை அளிப்பதாகும்.

*Stray cattle*

* 432 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the nuisance and congestion to traffic caused by stray cattle, allowed by their owners, to graze in public streets; and

(b) the measures, proposed by the Government to control the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) The question of taking deterrent action against owners who allow cattle to stray in Madras City is under consideration.

The Cattle Trespass Act, 1871 provides for dealing with stray cattle in the moffussil. The question of amending this Act also is under consideration.

திரு. வி. எஸ். எஸ். மணி: கால்நடைகளின் தொல்லைகள் பெரும்பாலும் நகரங்களிலுள்ள வீதிகளில்தான் ஏற்படுகின்றன. அந்தக் கால்நடைகளை மேய்ப்பதற்காக சர்க்கார் பொது மேய்ச்சல் நிலங்களை ஏற்படுத்தி, கால்நடைகளை ஒவ்வொரு வீதியிலும் போய்ப் பிடித்து அந்த மேய்ச்சல் தரைக்குக் கொண்டுவருவதற்கு சர்க்காரில் ஆட்களை நியமித்து, அதற்கு ஏற்பாடு செய்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும். அம்மாதிரி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது இருக்கிற சட்டத்தை மாற்றி அமைப்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அது மாற்றி அமைக்கப்பட்ட பிறகு வேறு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. கோ. சி. மணி: கோவிலுக்குச் சொந்தமான மாடுகள் கோவில் காளை என்ற பெயரால் கடைவீதிகளில் அடிக்கடி தொல்லைகள் கொடுத்து அதனால் போக்குவரத்திற்குத் தடை ஏற்படுகிறது என்று அரசாங்கத்திற்குப் புகார் வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கோவில் மாடும் மாடுதான். தனிப்பட்டவர்களின் மாடும் மாடுதான். தனிப்பட்டவர்கள் கவனிப்பதில்லை, மாடுகளை தெருக்களில் விட்டுவிடுகிறார்கள்.



29th March 1963]

திரு. கே. பொன்னையா: தலைவர் அவர்களே, நமது நாட்டில் பொதுவாக கால்நடைகளைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். மாடு, கன்று உள்ளவர்கள் காலையில் எழுந்து அதைத் தொட்டு பூஜை செய்கிறார்கள். அப்படி மாடு, கன்று இல்லாதவர்கள் இப்படித் தெருவிலே அவைகள் வரும்போது தரிசிக்கவோ, பூஜை செய்யவோ முடிகிறது. ஆகவே அரசாங்கம் அதை எடுக்காமல் தெருவில் பழையபடி அலைய உத்தரவு பிறப்பிக்க யோசனை செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினருடைய யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது.

*Compulsory Notification of Vacancies Act*

* 433 Q.—Sri M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the provisions of the Compulsory Notification of Vacancies Act has been brought to the notice of employing authorities;

(b) in how many cases of violation of the Act have been detected:

(c) in how many cases prosecutions have been launched:

(d) in how many cases prosecutions have not been launched; and

(e) if so, why?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) 407 (Four hundred and seven) cases. (340 cases in private sector and 67 cases in public sector):

(c) None.

(d) 407 (Four hundred and seven).

(e) In most cases the failure on the part of employers to comply with the provisions of the Act was due to incorrect interpretation or lack of appreciation of certain clauses of the Act and not a wilful violation. Therefore a correct interpretation of implications of the provisions of the Act has been brought to the notice of the employers. On receipt of clarification the employers have come forward to comply with the Act.

No case of a persistent violation of the Act to warrant prosecution of culpable intent had come to the notice of the Government.

*Sago Mills*

* 434 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware that the fluid turned out of the Sago Mills produces a very bad smell; and

(b) whether it has any bad effect on public health?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: (a) Yes.

[29th March 1963

(b) The bad smell is only a nuisance. It does not endanger health.

(அ) ஆம்.

(இ) அந்தத் துர்நாற்றத்தினால் தொந்தரவே ஒழிய, சுகாதாரத்திற்குக் கேடு எதுவும் ஏற்படாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இதைப்பற்றி அரசாங்கத்தில் பரிசீலனை செய்யப்பட்டு சொல்லப்படுகிறதா? அல்லது உத்தேசத்தின் பேரில் சொல்லப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், துர்நாற்றத்தால் சுகாதாரத்திற்குக் கெடுதல் இல்லை என்று. துர்நாற்றம் என்றாலே சுகாதாரக் கெடுதல் என்றுதானே அர்த்தம்? ஆகவே துர்நாற்றத்தால் சுகாதாரம் கெடுகிறது என்பதால் அதைப்போக்க முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்லா துர்நாற்றமும் சுகாதாரத்திற்குக் கெடுதல் இல்லை என்று நான் சொல்லவில்லை. நியூசென்ஸ் என்றுதான் நான் சொன்னேன். Health Engineering Research Institute, Nagpur-ல் இருந்து என்ன செய்யவேண்டும், எப்படி ஒழுங்குப்படுத்தவேண்டும் என்று ரெக்கமென்டேஷன் வந்திருக்கிறது. பைலட் பிராஜெக்ட் ஆரம்பித்து இந்த வேலைகளுக்காக செடிமென்டேஷன் டாங்குகள் கட்ட அனுமதித்திருக்கிறது. இப்போது நான் சேலம் போயிருந்தபோதுகூட ஹெல்த் ஆபீசரிடம் சொல்லியிருக்கிறேன், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று. தாங்க முடியாத துர்நாற்றம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். பாக்டரி ஓனர்ஸ்கூட இந்த பைலட் பிராஜெக்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள்கூட அந்த வேலையை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். செடிமென்டேஷன் டாங்க் வற்புறுத்திக் கட்டித்தான் ஆக வேண்டியிருக்கிறது. சிலர் பைப்புகளை வைத்து, அதன் மூலம் தங்களுடைய லாண்டுகளுக்கு இரிகேட் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும்.

*Regional Transport Officers (transfer of certain powers)*

* 435 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHER: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to delegate certain powers of the Regional Transport Officers to the Superintendents in the Office of the Regional Transport Officers on following matters under Rule 135 of Madras Motor Vehicles Rules, 1940:—

(i) Renewal of licences of drivers and conductors; and



29th March 1963]

(ii) issue of temporary permits to spare buses for marriages, excursions, etc., during the absence of the Regional Tranport Officers at the headquarters?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

*Over-head reservoir at Woriyur*

* 436 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) when the foundation stone was laid by the Chief Minister for the construction of an over-head reservoir at Woriyur, in Tiruchirappalli Municipal area for improving drinking water-supply; and

(b) if so, the present stage of the progress of the work?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) On 25th March 1959.

(b) Detailed plans and estimates for Rs. 31·58 lakhs have been prepared and technically sanctioned by the Public Works Department. Tenders for one of the service reservoirs have been settled on 28th June 1962 and this work which is in progress is expected to be completed in August 1963. There has been difficulty in the acquisition of site for another reservoir. This has been settled now and it is expected that this reservoir will also be completed by November, 1963.

(அ) 1959 மார்ச் 25-ம் தேதியன்று கனம் முதல் அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

(இ) ரூபாய் 31·58 லட்சத்துக்கு விரிவான திட்டங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு, பொதுப்பணித் துறையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு நீர்த்தேக்கத்திற்கு டெண்டர் 28—6—1962 அன்று நிச்சயிக்கப்பட்டது. இத் திட்ட வேலை 1963 ஆகஸ்டில் பூர்த்தியாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொரு நீர்த்தேக்கத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் கஷ்டமிருந்தது. இக்கஷ்டமும் தீர்ந்து இந்த நீர்த்தேக்க வேலை ஆரம்பமாகியுள்ளது. இதுவும் 1963 நவம்பரில் பூர்த்தியாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

*Water-supply Scheme (Rasipuram)*

* 437 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any representation, dated 7th July 1962 was received from the Communist Party, Rasipuram Branch in Salem district requesting for the construction of a dam in Sitharmalai for the supply of drinking water; and

(b) the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

[29th March 1963

*Death of Sri Thiruppathisami (Goldsmith)*

* 1. Private Notice Question : Sri V. R. NEDUNCHEZHIYAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether he is aware of the sudden death (by hunger) of one Sri Thiruppathisami, goldsmith of Tiruchirappalli while he was going in procession along with other (unemployed) goldsmiths; and

(b) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes, but according to the information received about this incident, Sri Thiruppathisami died of heart failure and not of hunger.

(b) Sri Thiruppathisami was one among a procession of about 1,000 persons organised by the Tiruchirappalli Town Shroff and Jewellers' Association and other allied organisations on 22nd March 1963, to protest against the Gold Control Order. He fainted on the way, probably due to the strain of participating in the procession. He sat down on the road and became unconscious a few seconds later. He was immediately shifted to the hospital, before reaching which he had died.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இந்த ஊர்வலத்தை நீண்ட தொலைவிற்கு போலீஸார் திருப்பி விட்டதன் காரணமாகவும், அதற்குப் பிறகு வெய்யிலிலே நீண்ட நேரம் அவரை உட்கார வைத்ததன் காரணமாகவும் இந்த இறப்பு ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த ஊர்வலத்திலே கலந்து கொண்டவர்களைப்பற்றிச் சில விவரங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. தொழிலாளர்கள் மட்டும் கலந்துகொள்ளவில்லை. இதற்கு முன்னாலே கூட அவர்கள் ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதிலே—

(1) The Tiruchi Town Shroff and Jewellers' Association;

(2) The South Indian Synthetic Stones Manufacturers and Dealers Association;

(3) The Tamilnad Imitation Diamonds Producers Association;

(4) The Tiruchirappalli District Imitation Diamonds Workers Union;

(5) The Tiruchirappalli District Synthetic Stone Cutters Association;

6. The Tiruchirappalli District Jewellery Workers' Association;

(7) The Tiruchirappalli Goldsmiths' Association; and

(8) The Tiruchirappalli District Viswakarma Sangam.

இவர்கள் எல்லோரும் சேர்ந்து நடத்தினார்கள்.



29th March 1963]

இவர்கள் ஆபரண மாளிகை என்ற கட்டிடத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பித்தார்கள். ஆனால் இதில் பொற்கொல்லர்கள் என்று நிர்ணயிக்கக்கூடியவர்கள் கொஞ்சம் பேர்கள்தான் இருந்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்தார்கள். இதற்கு முன்னாலே கூட்டம் நடத்தினார்கள். அப்போது சூப்பரின்டென்டன்ட் ஆப் போலீஸ் அவர்கள் கூட்டத்தின் பிரதிநிதியிடம் சொன்னார்கள். முதல் அமைச்சர் முந்தியநாள் சென்னையில் இருந்தார்கள். "முதல் அமைச்சரை நீங்கள் பார்த்து கலந்து பேச வேண்டுமென்றால் நேராக சர்க்யூட் ஹவுஸுக்குப் போங்கள், அங்கு 11 மணிக்குமேல் போங்கள், ஏனென்றால் அவர்கள் 10 மணிக்கு வேறு கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிறார்கள்; கூட்டத்தில் இருக்கும்போது அவர்களைப் பார்ப்பது சௌகரியப்படாது" ஆகவே நேராக சர்க்யூட் ஹவுஸுக்குப் போய் இந்தக் கூட்டத்திற்கப்புறம் பாருங்கள் என்று சொன்னார்கள். இவர்கள் நீண்ட தூரம் ஊர்வலம் நடத்தினார்கள் என்றால் அது அவர்கள் பொறுப்பே தவிர, அதிகாரிகளுடைய பொறுப்பு அல்ல. முதல் மந்திரியினுடைய பொறுப்பும் அல்ல. அவர்கள் வெய்யிலில் நிறுத்தப்பட்டார்கள் என்று சொல்வதும் சரியல்ல. அவர்கள் நீண்ட தூரம் ஊர்வலம் எல்லாவற்றையும் நடத்தி, சுற்றிக்கொண்டு வந்து, அங்கே நின்றுகொண்டிருந்தார்கள். முதல் மந்திரி வரும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அப்படி இருக்கிறபோதுதான் அவர் வெய்யிலில் உட்கார்ந்து, மயக்கமுற்றுவிட்டார் என்பது செய்தி.

**திரு. மு. கருணாநிதி :** குறிப்பிட்ட அந்த 8 சங்கங்களில் 6 சங்கங்கள் காங்கிரஸ் சார்புடைய சங்கங்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் தொழிலாளர் இலாகா பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த சங்கங்களில் காங்கிரஸ் சங்கம் எது, காங்கிரஸ் அல்லாதார் சங்கம் எது என்றெல்லாம் நான் கவனிப்பது இல்லை. இதில் காங்கிரஸ் அல்லாத சங்கத்தாரும் வருகிறார்கள். இதிலே கட்சியை நுழைப்பது இல்லை, எங்களைப் பொறுத்தமட்டில்.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** மாரடைப்பால் இறந்தார் என்று சொல்கிறார்கள். எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு சொன்னார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டாக்டர் பரிசீலனை செய்து தெரிவித்த ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் சொல்கிறார்கள். போலீசார் யாரையும் அடித்ததாகச் செய்தி வரவில்லை. யாரும் புகார்கூடச் சொல்லவில்லை.

**திரு. எம். எஸ். மணி :** ஊர்வலம் வந்தவர்கள் அனைவரையும் திசை திருப்பி, ஐந்து மைலுக்கப்பால் தங்கியிருந்த முதல் அமைச்சரைக் காணச் செல்லும் நேரத்தில், அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கு இரண்டு பர்லாங்குக்கு முன்னேலேயே, போலீசார்—துப்பாக்கிப் போலீசார், கண்ணீர்ப் புகை போலீசார், தடி வைத்திருக்கும் போலீசார்—பயங்கரமாக நின்றுகொண்டு, 'மேலே போகக்கூடாது' என்று தடுத்ததன் காரணமாக, அலைந்த களைப்பி

னாலும், போலீசாரிடமுள்ள பயத்தினாலும், மயக்கம் போட்டுக் கீழே விழுந்து, அதன் காரணமாக இறந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதெல்லாம் கனம் அங்கத்தினருக்குக் கிடைத்த தகவலாக இருக்கலாம். அது அவர்கள் கருத்தாக இருக்கலாம். ஆனால், 'திசை திருப்பப்பட்டது' என்று சொல்வது சரியல்ல. போலீஸ் சூப்பரிண்டெண்ட், "நீங்கள் 11 மணிக்கு மேல் சர்க்யூட் ஹௌஸுக்குச் சென்று முதலமைச்சரைப் பார்க்கலாம்" என்று முந்திய தினமே சொன்னார்கள். ஆயிரம் பேர்கள் ஊர்வலம் வருவது தெரியாது. ஆயிரம் பேர்களையும் சர்க்யூட் ஹௌஸில் அனுமதிப்பது என்பதும் முறையல்ல. இங்கே கூட சில சமயங்களில் ஊர்வலம் வருவது உண்டு. அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் ஊர்வலத்தில் வந்தவர்கள் எல்லோரும் கோட்டைக்கு வெளியேதான் நிற்கவேண்டும். பிரதிநிதிகள் மட்டும்தான் அமைச்சர்களைப் பார்க்கவேண்டுமென்றால் பார்க்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களையோ, தலைவர்களையோ பார்க்கவேண்டுமென்றாலும், பிரதிநிதிகள்தான் உள்ளே வருகிறார்கள். 'போலீசார் ஏதோ பயங்கரத்தை உண்டு பண்ணினார்கள்' என்று சொல்வது சரியல்ல. ஆயிரம் பேர்கள் வரும்போது போலீஸ் பந்தோபஸ்து செய்யவேண்டியிருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** அந்தச் சங்கங்களினுடைய குறிப்பிட்ட பிரதிநிதிகளை மாத்திரம் சர்க்யூட் ஹௌஸிலே சந்திக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்லியது வாஸ்தவமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் ஏற்கனவே சொன்னேன்—ஆயிரம் பேர்களையும் சந்தித்துப் பேசுவது என்பது முடியாது. ஆயிரம் பேர்கள் சேர்ந்து, 'நாங்கள் மகாநாடு வைக்கிறோம், நீங்கள் அதிலே வந்து பேசவேண்டும், எங்களுடைய பேச்சைக் கேட்கவேண்டும்' என்று கேட்கலாம். ஆனால், ஒரு மகஜர் கொடுக்கவேண்டும் என்றுதான் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு, போலீஸ் சூபரின்டென்டென்டு, "பிரதிநிதிகள் 11 மணிக்கு மேல் சர்க்மட் ஹவுஸுக்கு வந்து முதலமைச்சரைக் காணலாம்; பத்து மணிக்கு தேவர் ஹாலில் நடக்கும் கூட்டத்திற்கு முதல் அமைச்சர் போகிறார்; அதை அவர் முடித்துக் கொண்டு வந்த பிறகு சர்க்கூட் ஹவுஸில் பிரதிநிதிகள் அவரைப் பார்க்கலாம்" என்று சொன்னார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** எட்டு சங்கப் பிரதிநிதிகள் மட்டும் 'முதல் அமைச்சர் அவர்களை தேவர் மன்றத்தில் பார்த்து நாங்கள் மகஜர் கொடுக்கிறோம்' என்று சொல்லியும்கூட, போலீசார், 'அந்த ரோட்டில் நடக்கக் கூடாது' என்று தடுத்து வேறு பக்கம் அனுப்பியது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே குறிப்பிட்டேன்—தேவர் ஹாலில் ஒரு குறிப்பிட்ட விஷயத்திற்காக நடக்கிற கூட்டத்தில் இவர்கள் போய் மகஜர் கொடுக்கிறது என்றால் அந்தக் கூட்டம் பாதிக்கப்படும்; அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் பாதிக்கப்படுவார்கள்; தேவர் ஹாலில் நடக்கும் கூட்டத்தில்



'டிஸ்டர்பன்ஸ்' இருக்கக் கூடாது; ஆகவே, சர்க்கூட் ஹவுஸுக்குப் போய் முதலமைச்சரைப் பார்க்கலாம் என்று முந்திய தினமே போலீஸ் சூபரின்டென்டென்டு சொல்லியிருக்கிறார். அப்படிச் செய்யாமல், 'தேவர் ஹாலில் முதலமைச்சரைப் பார்க்க அனுமதிக்கவில்லை' என்று குற்றஞ்சாட்டுவதற்குக் கொஞ்சங்கூட ஆதாரம் இல்லை.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில், அந்த நபர் வழியில் மயக்கம் அடைந்து, கீழே உட்கார்ந்து, பிரக்ஞை இழந்ததாகவும் சிறிது நேரத்தில் பிரக்ஞை வந்தவுடன் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதாகவும் அங்கே அவர் இறந்ததாகவும் சொன்னார்கள். அப்படியானால், இடைவேளையில் டாக்டர் பரிசோதனை செய்து பார்த்தாரா ? மயக்கம் தெளிந்த பிறகுதான் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போனார்கள் என்று சொல்வது சரியல்ல.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கீழே உட்கார்ந்திருந்தார். மயக்கம் உற்றிருக்கிறார் என்று தெரிந்தவுடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். ஆஸ்பத்திரியில் டாக்டர் பார்த்து விட்டு, மாரடைப்பினால் இறந்திருப்பதாகத் தெரிவித்தார். இதைத் தவிர கனம் அங்கத்தினருக்கு வேறு அபிப்பிராயம் இருந்தால் அவர் சொல்லலாம்.

MR. SPEAKER : What is the purpose of this question ?

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** முதலில் டாக்டர் அபிப்பிராயம் தெரிந்துகொள்ளப்படவில்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** திருச்சி 'ஆபரண மாளிகை'யிலிருந்து ஊர்வலம் புறப்பட்டிருக்கிறது. 'ஆபரண மாளிகை' என்பது தொழிலாளர்களுடையது அல்ல. அது ஒரு பெரிய முதலாளியினுடைய ஆபரண மாளிகை. அங்கிருந்து ஊர்வலம் புறப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் திருச்சிக்குச் சென்றிருக்கும் சமயத்தில், முதலமைச்சர் பேரில் களங்கம் ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக ஒருசில அரசியல் கட்சிகள் அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றியெல்லாம் அந்தந்தக் கனம் உறுப்பினர்கள் அவரவர்களுக்கு வேண்டிய அபிப்பிராயத்தை வைத்துக்கொள்ளலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தங்கக் கட்டுப்பாடு சம்பந்தமாக அமைச்சர்களைப் பார்த்தும், மகஜர்களைக் கொடுத்தும் ஒன்றும் காரியம் நடக்கவில்லை என்ற காரணத்திற்காக மனம் உடைந்த சிலர் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய துரித நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 'இவர்களைப் பற்றி அரசாங்கம் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாத காரணத்தால்தான் சிலர் மனம் உடைந்துபோயிருக்கிறார்கள், இறக்கிறார்கள்' என்று

சொல்வது சரியல்ல. அரசாங்கம் கூர்ந்து கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது. பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அதைப் பொற்கொல்லர்களே நன்றாக அறிவார்கள்.

**திரு. மு. பொ. வடிவேல்:** 'அம்மாதிரி பார்க்கப் போன ஒருவரை முதலமைச்சர் அடித்துவிட்டார்' என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவ்வாறு கூறுவது முற்றிலும் தவறு—இப்பொழுது தான் கனம் அங்கத்தினர் இத்தகைய புகார் கூறுவதைக் கேட்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** தூது கோஷ்டியினர் முதலமைச்சரைச் சந்தித்தபோது, பேப்பரை மீண்டும் பரிசீலனை செய்வதாகச் சொல்லி, அமைதியாக இருக்கவேண்டும் என்று அவர்கள் ஆறுதல் உண்டு பண்ணியது உண்மைதானா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** தூது கோஷ்டியினர் கனம் முதல் அமைச்சர் அவர்களை சர்க்யூட் ஹவுசில் சந்தித்துப் பேசினார்கள். அப்போது அந்தத் தூது கோஷ்டியினர், 'நாங்கள் 14 காரட் தங்கத்திலேயே நகை செய்ய முடியும், நகை செய்ய நாங்கள் தயாராயிருக்கிறோம்' என்று முதலமைச்சர் அவர்களிடம் ஒத்துக்கொண்டார்கள். முதலமைச்சரவர்களிடம் பேசி ஆறுதலோடுதான் தூது கோஷ்டியினர் திரும்பினார்கள் என்பது எனக்குக் கிடைத்த தகவல்.

**திரு. எம். எஸ். மணி:** ஊர்வலம் ஆபரண மாளிகைக்கு எதிரிலிருந்து புறப்பட்டது என்பதற்கு அத்தாட்சியாக நோட்டீஸ் வைத்திருக்கிறேன். அப்படிப் புறப்பட்டுச் சென்ற ஊர்வலம் பல திசைகளில் திருப்பப்பட்ட காரணத்தால், போகிற வழியில், முதலமைச்சர் காரைப் பார்த்ததும், தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கையைச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அப்பொழுது முதலமைச்சர் காரிலிருந்து இறங்கி வந்து, அங்கிருந்த அப்துல் ஹக்கீம் என்கிற தோழரை அடித்ததன் காரணமாக, வியாபாரிகளும், தொழிலாளர்களும் ஆத்திரங் கொண்டு, முதலமைச்சரின் படங்களை ரோட்டில் போட்டு உடைத்ததும், கொளுத்தியதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இவ்வளவு தகவல்களும் கனம் அங்கத்தினரிடம் இருக்கலாம். ஆனால், என்னிடம் அந்தத் தகவல் எல்லாம் வரவில்லை. ஆனால், மறுபடியும் சொல்கிறேன்—அதற்கு முந்தின தினம் போலீஸ் சூபரின்டென்டு, 'முதலமைச்சரை சர்க்யூட் ஹவுசுக்குச் சென்று பார்க்கலாம்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால், வேறொரு இடத்தில் அவர் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கும்போது, பெரிய கூட்டமாக வந்தால், குழப்பம் ஏற்படக்கூடாது என்பதற்காக, போலீசார் தலையிட்டு இருக்கலாம். அத்துமீறியிருந்தால் போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற தகவல் என்னிடம் இல்லை. அவர்கள் என்ன செய்தார்கள். போலீசார்கள் என்ன செய்தார்கள் என்கிற தகவல் இல்லை. ஆனால், அந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்தவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் தான் இதற்கெல்லாம் பொறுப்பேற்கவேண்டும். இதையெல்லாம் அவர்கள்தான் தவிர்த்திருக்க வேண்டும்.



**திரு. எஸ். ராமசாமி நாயுடு:** 14 காரட் தங்கத்தில் ஆபரணம் செய்யலாம் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டதனால் 14 காரட்டு தங்க ஆபரணங்கள் ஏராளமாகச் செய்தால் அம்மாதிரி ஊர்வலங்கள் வருவதற்கும், சாவுகள் ஏற்பட்டு பரிதாபப்பட வேண்டியதற்கும் இடமில்லாமல் போய்விடும். 14 காரட் தங்கத்திலே ஏராளமான ஆபரணங்கள் செய்யும்படியாக பரிதாபப்படுகிற கனம் அங்கத்தினர்களும் மற்றவர்களும் அவர்களுக்கு உதவி செய்வார்களா? அவ்விதம் சர்க்காரும் அவர்களுக்குச் சொல்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 14 காரட் தங்கத்தில் யார் நகை செய்வதற்கு முன்வந்தாலும் அரசாங்கம் ஆதரவு அளிக்கும் என்று முன்னமேயே தெரிவித்திருக்கிறேன். இப்பொழுது பலர் அவ்வாறு முன்வந்திருக்கிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** ஊர்வலத்தில் சென்றவர்களில் ஒருவரை முதல்மைச்சர் அவர்கள் ஏதோ அடித்துவிட்டதாக இரண்டு தினங்களுக்கு முன் . . .

MR. SPEAKER: Is there any other question? I do not allow this question. Already that question has been asked and the Hon. Minister has told that he has no information. Why should te same question be put? The hon. Member may please resume his seats.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தூது கோஷ்டித் தலைவர்களைச் சந்தித்ததாகச் சொன்னார்கள். அந்த இடத்திற்கு முன்னால் எல்லாத் தொழிலாளர்களும், மற்றவர்களும் வரிசையாகத் தார் ரோட்டில் உட்கார வைக்கப்பட்டிருந்த காரணத்தால் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திருப்பதிசாமி என்பவர் இறந்ததாகச் சொல்லப்படுகிறதே அது சரியா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அத்தகைய தகவல் என்னிடம் இல்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** திருச்சியில் மட்டுமல்ல, நாடெங்கிலும் தினம் தினம் பொற்கொல்லர்கள் மாண்டு வருகின்ற செய்தியைப் பத்திரிகைகளில் அமைச்சர் அவர்கள் பார்த்திருப்பார்கள். அரசாங்கத்தில் ஏற்பட்ட கொள்கை மாறுதல் காரணமாகத்தான் இப்படிப் பொற்கொல்லர்கள் இறக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் உணருகிறதா? அப்படி இறந்துவிடுகிறவர்களின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா? மேலும் பொற்கொல்லர்கள் இறக்காமலிருப்பதற்காகத் தடுப்பு நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு பேசி ஆவன செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கட்டுப்பாடு நாட்டின் நன்மையையொட்டி அமைக்கப்பட்டது. ஆனால் 'நாடெங்கும் பொற்கொல்லர்கள் மாண்டு வருகிறார்கள்'

[29th March 1963

என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவது அவர்கள் மடிய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் விரும்புவதாகத்தான் நான் எடுத்துக்கொள்வேன்.

9-30 a.m. **திரு. மு. கருணாநிதி :** முதலமைச்சர் அவர்கள் செயற்கை வைரத் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க முடியாது என்று கூறியதாகப் போலீஸ் அதிகாரிகள் திருச்சியில் கூறிவருவது உண்மையா? அரசாங்கத்திடம் அது பற்றிய தகவல் ஏதேனும் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்த பிரதிநிதிகளின் பெயர்களையெல்லாம் நான் சொன்னேன். அதிலே செயற்கை வைரம் உற்பத்தி செய்கிறவர்களும் இருக்கிறார்கள். தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்கள் கனம் முதலமைச்சர் அவர்களை சர்க்யூட் ஹவுசில் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** திருச்சியில் முதலமைச்சர் அவர்களை சர்க்யூட் ஹவுசில் சந்திக்கலாம் என்று முன்கூட்டியே அவர்களுக்கு அறிவித்திருந்தால் அந்த ஊர்வலம் நிறுத்தப்பட்டிருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முதலிலேயே சொன்னேன். கனம் அங்கத்தினர் எதிரிலேயேதான் இருக்கிறார். காதிலே விழவில்லையோ என்னவோ! சூப்பரின்டெண்டெண்டு ஆப் போலீஸ் இந்தப் பிரதிநிதிகளை 21-ம் தேதி மாலை சந்தித்து முதல் அமைச்சர் அவர்களுக்குப் 10 மணிக்கு வேறு கூட்டம் இருக்கிறது என்றும், 11 மணிக்கு முதலமைச்சர் அவர்களை சர்க்யூட் ஹவுசில் போய்ச் சந்திக்கும்படியும் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** அந்த ஊர்வலத்திலே கலந்து கொண்டவர்கள் போராட்டங்களிலே பழக்கப்பட்டவர்கள் அல்ல என்றும் எந்தக் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்ல என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப் போராட்டங்களிலேயோ அணிவகுப்பிலேயோ கலந்து பழக்கமற்றவர்களைப் போலீஸ் அதிகாரிகள் ஐந்தாறு மைல்களுக்குத் திசை திருப்பி விட்டது சரியா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் ஊர்வலத்தில் கலந்து பழக்கப்பட்டவர்களா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. போலீசார் அவர்களைத் திசை திருப்பி விட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. அவர்களை சர்க்யூட் ஹவுசில் போய்ச் சந்திக்கும்படி போலீசார் கேட்டுக் கொண்டார்கள். முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதோடு திருப்தியடையாமல் டெமான்ஸ்ட்ரேஷனும் நடத்தவேண்டுமென்று ஊர்வலத்திலே கலந்து கொண்டவர்கள் முடிவு செய்திருந்தால் அதற்குப் போலீசார் பொறுப்பு அல்ல. போலீசார் ஒழுங்கையும் பந்தோபஸ்தையும் நிலைநாட்டக் கடமைப்பட்டவர்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சர்க்யூட் ஹவுசில் சந்திக்க வந்த பிரதிநிதிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காரசாரமாகக்



29th March 1963]

கோபித்து அவர்கள் மீது கண்டபடி பாய்ந்தார் என்று திருச்சியில் சொல்லப்படுவது உண்மையா? அது உண்மையாக இருக்குமானால் அது இந்த அரசாங்கத்திற்கு நல்லதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிருக்கலாம். கனம் அங்கத்தினர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு இந்த மன்றத்திலே சொல்லலாம். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை. கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். பதினான்கு காரட் தங்கத்தில் நகைகள் செய்யலாம் என்பதை அவர்களே ஒத்துக் கொண்டார்கள். கனம் முதலமைச்சர் அவர்களுடன் பேச்சு வார்த்தை மிகவும் சுமுகமான முறையிலே நடந்தது என்பதை நான் தெரிந்துகொண்டேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் தாங்கள் தொழிலை மேற்கொண்டு நடத்தவேண்டுமென்றால் அரசாங்கம் ஆயிரம் ரூபாய் வரை கடன் உதவி கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படியானால் அந்தத் தொகையைக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஸ்டேட் எய்ட்டு இண்டஸ்ட்ரிஸ் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

**திரு. மு. கருணாநிதி :** இறந்து போன காங்கிரஸ் நண்பருடைய வீட்டுக்குச் சென்று முதலமைச்சர் அன்றைய தினம் அனுதாபம் தெரிவித்தாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர் காங்கிரஸ் நண்பரா, திராவிட முன்னேற்றக் கழக நண்பரா என்று எனக்குத் தெரியாது. அவர் ஆபரண மாளிகையில் ஒரு தொழிலாளியாக இருக்கலாம். அதற்கு மேலே முதலமைச்சர் அவர்கள் துக்கம் விசாரிக்கச் சென்றார்களா இல்லையா என்ற தகவல் என்னிடம் இல்லை.

## UNSTARRED QUESTIONS.

### *Radio Sub-division (Public Works Department)*

17. *Q.*—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Works be pleased to state:

(*a*) the functions of the Radio Sub-division working under the control of Public Works Department; and

(*b*) the number of the staff in their categories and their respective salaries?

*A.*—(*a*) The functions of the Radio Sub-division under the control of the Public Works Department are as follows:—

(1) Installation of Public Address System for High Personages like the President of India, Prime Minister, Governor, Chief Minister, Foreign Dignitaries and other Very Important Persons;

(2) Maintenance of Sound Reinforcement system (i) in the Legislative Assembly; (ii) in the Rajaji Hall; and (iii) in the Legislative Council;

[29th March 1963

(3) Maintenance of Cinema equipment in the District Publicity Offices of the Information and Publicity Department;

(4) Maintenance of Cinema Projectors and other Cinema equipment like generators, film strip projectors, audio-visual equipments, etc., in Government institutions and Government Departments like Medical, Health, Education, Agriculture, etc.;

(5) Installation and maintenance of radio sets in Adult Literary Schools and Lok Sahayak Sena Camps;

(6) Maintenance of radio sets in Government Institutions like those in the Legislators' Hostel, State Guest House, etc., film library, office and residence of the Director of Information and Publicity;

(7) Valuation and condemnation of electronic equipment in Government Departments, Cinema Projectors in schools and Government institutions as required by the Heads of Departments from time to time.

(8) Maintenance of radio sets of Municipalities and townships.

(9) Maintenance of radio sets in Government schools and Municipal schools;

(10) Casual servicing of the electronic equipment like those in the General Hospital, etc;

(11) Projection and Audio-Visual equipments in schools and Government institutions;

(12) Maintenance of Wire Broadcasting System in Municipalities;

(13) Maintenance of radio sets already installed and to be installed in Adult Literacy Schools under the Education Department;

(14) All residuary functions of the defunct State Broadcasting Branch;

(15) Maintenance of radio sets in Vaigai, Manimuthar, Sathanur and other project areas;

(16) Sanction and disbursement of refunds of money due by the State Broadcasting Department in respect of supply and Maintenance of radio sets prior to 1st September 1961; and

(17) Disbursement of arrears of salary and other emoluments due to the staff for the periods prior to 1st September 1961.

(b) The information is furnished below :—

| *Serial number and name of post.* | *Number.* | *Scale of pay.* |
|---|---|---|
| | | RS. |
| 1 Assistant Engineer | 1 | 350—650. |
| 2 Radio Supervisors | 18 | 125—5—150—10—300. |
| 3 Laboratory Attenders | 3 | 55—1—70. |
| 4 Fitter Mechanics | 1 | 110—3—140. |
| 5 Upper Division Clerk | 1 | 125—5—175. |
| 6 Lower Division Clerk | 1 | 90—4—110—3—140. |
| 7 Typist | 1 | 90—4—110—3—140 (Special pay Rs. 10). |
| 8 Peons | 2 | 50—1—60. |



29th March 1963]

(அ) பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் பணியாற்றுகிற ரேடியோ சப்-டிவிஷனின் அலுவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) இந்திய ஜனாதிபதி, இந்தியப் பிரதமர், கவர்னர். முதல் அமைச்சர், வெளிநாட்டுப் பிரமுகர்கள், மற்ற முக்கியஸ்தர்கள் போன்றவர்கட்கு ஒலிபெருக்கி ஏற்பாடுகள் செய்தல்.

(2) சட்டசபையில் ஒலிபெருக்கி அமைப்பைப் பராமரித்தல்.

(3) ராஜாஜி ஹாலில் ஒலிபெருக்கி அமைப்பைப் பராமரித்தல்.

(4) சட்டமன்றத்தில் ஒலிபெருக்கி அமைப்பைப் பராமரித்தல்.

(5) செய்தி–விளம்பரத் துறையைச் சேர்ந்த மாவட்ட விளம்பர அலுவலகங்களில் திரைப்பட யந்திரங்களைப் பராமரித்தல்.

(6) அரசாங்க நிறுவனங்களிலும், மருத்துவத் துறை, சுகாதாரத் துறை, கல்வித் துறை, விவசாயத் துறை போன்ற அரசாங்கத் துறைகளிலும் சினிமா ப்ரொஜெக்டர்களையும், ஜெனரேட்டர்கள், பிலிம் ஸ்ட்ரிப் ப்ரொஜெக்டர்கள், ஒலிப்படக் கருவிகள் போன்ற திரைப்பட யந்திரங்களையும் பராமரித்தல்.

(7) முதியோர் கல்விப் பள்ளிகளில் ரேடியோ செட்டுகளை வைத்துப் பராமரித்தல்.

(8) லோக சகாய சேனை முகாம்களில் ரேடியோ செட்டுகளை வைத்துப் பராமரித்தல்.

(9) சட்டப் பேரவை உறுப்பினர்களின் ஹாஸ்டல், அரசாங்க விருந்தினர் மாளிகை, பிலிம் லைப்ரரி, செய்தித்துறை நெறியாளர் அலுவலகத்திலும் அவரது வீட்டிலும் ரேடியோ செட்டுகளை வைத்துப் பராமரித்தல்.

(10) அந்தந்தத் துறைத் தலைவர்கள் அவ்வப்போது கேட்கிறபடி அரசாங்கத்துறைகளில் இருக்கும் மின்சாரக் கருவிகளையும், பள்ளிகளிலும் அரசாங்க நிறுவனங்களிலும் உள்ள சினிமா ப்ரொஜெக்டர்களையும் விலை மதிப்பிடுதல். அவை நாட்பட்டவையாயிருந்து கெட்டுப் போயிருந்தால், அவற்றை நிராகரித்து விடுதல்.

(11) முனிசிபாலிட்டிகளிலும், டவுன்ஷிப்புகளிலும் உள்ள ரேடியோ செட்டுகளைப் பராமரித்தல்.

(12) அரசாங்கப் பள்ளிகளிலும், முனிசிபல் பள்ளிகளிலும் உள்ள ரேடியோ செட்டுகளைப் பராமரித்தல்.

(13) அரசாங்க ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள எலெக்ட்ரானிக் கருவிகள் போன்றவற்றை எப்போதோ ஒரு முறை சர்விசிங் செய்தல்.

(14) பள்ளிகளிலும், அரசாங்க நிறுவனங்களிலும் ப்ரொஜெக்டர்களையும், ஒலிப்படக் கருவிகளையும் நிறுவுதல்.

(15) முனிசிபாலிட்டிகளில் ஒலிபரப்பு முறையைப் பராமரித்தல்.

(16) கல்வித் துறையில் முதியோர் கல்விப் பள்ளிகளில் ஏற்கெனவே நிறுவியுள்ள ரேடியோ செட்டுகளையும் இனிமேல் நிறுவப்போகும் செட்டுகளையும் பராமரித்து வருதல்.

(17) முன்பு பணியாற்றி வந்த அரசாங்க ஒலிபரப்புப் பிரிவினர் விட்டுச் சென்ற எஞ்சிய பணிகள் அனைத்தும்.

(18) வைகை, மணிமுத்தாறு, சாத்தனூர் மற்ற திட்டப் பகுதிகளில் இருக்கும் ரேடியோ செட்டுகளைப் பராமரித்து வருதல்.

(19) 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதிக்கு முன் ரேடியோ செட்டுகளை வழங்கியதற்காகவும், பராமரித்து வந்ததற்காகவும் அரசாங்க ஒலிபரப்புத் துறையினர் செலுத்த வேண்டிய தொகையினிமித்தம் திருப்பிச் செலுத்தவேண்டிய தொகைகளை அனுமதித்தலும் கொடுத்தலும்.

(20) 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதிக்கு முந்தியுள்ள கால அளவுகளுக்கு பணியாளர்களுக்கு சம்பளம், மற்ற ஊதியங்கள் ஆகியவற்றை பட்டுவாடா செய்தல்.

[29th March 1963

(இ) பணியாளர்களின் எண்ணிக்கையும் அவர்களுடைய சம்பள வீதமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும், பதவியின் பெயரும். | | எண்ணிக்கை. | சம்பள வீதம். |
|---|---|---|---|
| | | | ரூ. |
| 1. உதவி என்ஜினீர் | .. | 1 | 350—650. |
| 2. ரேடியோ சூப்பர்வைசர் | .. | 18 | 125—5—150—10—300. |
| 3. ஆராய்ச்சிச்சாலை அட்டெண்டர் | | 3 | 55—1—70. |
| 4. பிட்டர் மெக்கானிக் | .. | 1 | 110—3—140. |
| 5. மேல் பிரிவு எழுத்தர் | .. | 1 | 125—5—175. |
| 6. கீழ்ப் பிரிவு எழுத்தர் | .. | 1 | 90—4—110—3–140. |
| 7. டைப்பிஸ்ட் | .. | 1 | 90—4—110—3—140. (விசேஷ சம்பளம் ரூ. 10). |
| 8. கடைநிலை ஊழியர் | | 2 | 50—1—60. |

*Indian Labour Conference* (1962)

18. *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House, a statement showing the conclusions reached at the 20th Session of the Indian Labour Conference held at Delhi during August 1962, and the action proposed to be taken by the State Government in pursuance of those conclusions ?

*A.*—A statement[a] is placed on the table of the House.

சபையில் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

*Cement*

19. *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the demand made for allotment of cement for each quarter during 1962-63 for the State:

(*b*) the actual allotment made ; and

(*c*) the quantities of cement allotted for each quarter for the public consumption ?

*A.*—(*a*) The demand made for allotment of cement for each quarter during 1962-63 in respect of State quota is as follows :—

| *Periods.* | *Quantity in tons.* |
|---|---|
| April to June 1962 .. .. .. | 336,555 |
| July to September 1962 .. .. | 393,670 |
| October to December 1962 .. | 414,063 |
| January to March 1963 .. .. | 345,267 |

a Printed as Appendix III on pages 222–229.



29th March 1963]

(*b*) The allotments made are as follows :—

| *Periods.* | *Quantity in tons.* |
|---|---|
| April to June 1962 .. .. .. | 132,300 |
| July to September 1962 .. .. | 132,800 |
| October to December 1962 .. | 137,800 |
| January to March 1963 .. .. | 95,850 |

(*c*) The quantities allotted for each quarter for public consumption during 1962–63 is as follows :—

| *Periods.* | *Quantity in tons.* |
|---|---|
| April to June 1962 .. .. .. | 68,894 |
| July to September 1962 .. .. | 67,500 |
| October to December 1962 .. | 41,340 |
| January to March 1963 .. .. | 28,755 |

(அ) மாநிலக் கோட்டா சம்பந்தமாக, 1962–63-ல் ஒவ்வொரு காலாண்டுக்கும் சிமெண்ட் தேவை அளவு பின்வருமாறு :—

| காலம். | அளவு மெட்ரிக் டன்களில். |
|---|---|
| 1962 ஏப்ரல் முதல் ஜூன் வரை .. | 336,555 |
| 1962 ஜூலை முதல் செப்டம்பர் வரை .. | 393,670 |
| 1962 அக்டோபர் முதல் டிசம்பர் வரை .. | 414,063 |
| 1963 ஜனவரி முதல் மார்ச் வரை .. | 345,267 |

(இ) ஒதுக்கிய சிமெண்டின் அளவு :—

| காலம். | அளவு மெட்ரிக் டன்களில். |
|---|---|
| 1962 ஏப்ரல் முதல் ஜூன் வரை .. | 132,300 |
| 1962 ஜூலை முதல் செப்டம்பர் வரை .. | 132,800 |
| 1962 அக்டோபர் முதல் டிசம்பர் வரை | 137,800 |
| 1963 ஜனவரி முதல் மார்ச் வரை .. | 95,850 |

(உ) 1962–63-ல் பொதுமக்கள் உபயோகத்துக்காக ஒவ்வொரு காலாண்டிலும் ஒதுக்கிய அளவு :—

| காலம். | அளவு மெட்ரிக் டன்களில். |
|---|---|
| 1962 ஏப்ரல் முதல் ஜூன் வரை .. | 68,894 |
| 1962 ஜூலை முதல் செப்டம்பர் வரை .. | 67,500 |
| 1962 அக்டோபர் முதல் டிசம்பர் வரை .. | 41,340 |
| 1963 ஜனவரி முதல் மார்ச் வரை .. | 28,755 |

*Government Hospital, Thanjavur*

20 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவ மனையில் 1962 ஜனவரி முதல் அக்டோபர் முடிய 'ஜெனரல் வார்டில்' (General Ward) சேர்க்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

[29th March 1963

(இ) அவர்களில் குணமானவர்கள், உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ?

A.—(அ) & (இ) The particulars required are given below :—

Total number of patients admitted and died in General and Special Wards in the Government Raja Mirasdar Hospital, Thanjavur, during January to October 1962 :—

| General ward.— | | | Special ward.— | | |
|---|---|---|---|---|---|
| Total number of patients admitted. | Total number of patients. | | Total number of patients admitted. | Total number of patients. | |
| | Cured. | Died. | | Cured. | Died. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 31,061 | 30,113 | 948 | 152 | 151 | 1 |

(அ) & (இ) விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:—

தஞ்சாவூர் ராஜா மிராசுதார் அரசாங்க ஆஸ்பத்திரியில் 1962-ஆம் ஜனவரி யிலிருந்து அக்டோபர் வரையில் ஜெனரல் வார்டுகளிலும், ஸ்பெஷல் வார்டுகளிலும் சேர்க்கப்பட்டு இறந்துபோன நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை.

| ஜெனரல் வார்டு. | | | ஸ்பெஷல் வார்டு. | | |
|---|---|---|---|---|---|
| சேர்க்கப்பட்ட நோயாளி களின் மொத்த எண் ணிக்கை. | நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை. | | சேர்க்கப்பட்ட நோயாளி களின் மொத்த எண்ணிக்கை. | நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை. | |
| | குணம் அடைந்தவர்கள். | இறந்தவர்கள் | | குணம் அடைந்த வர்கள். | இறந்த வர்கள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 31,061 | 30,113 | 948 | 152 | 151 | 1 |

சிறுவர்கள் நீதிமன்றம், சென்னை

21—கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) சென்னையிலுள்ள சிறுவர்கள் குற்றவிசாரணை நீதி மன்றம் வாடகைக் கட்டிடத்திலிருப்பதாலும், அதைக் காலி செய்யுமாறு கட்டிட சொந்தக்காரர் வற்புறுத்துவதாலும், தனிக் கட்டிடம் ஒன்று தேவை யென்று சீப் பிரஸிடென்சி மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து அரசாங்கத்துக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா ?



29th March 1963]

(இ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

A.—(a) No.

இல்லை

(b) Does not arise.

வினா எழாது.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ANNOUNCEMENTS.

### (1) NOMINATION TO THE RULES COMMITTEE

MR. SPEAKER : Under Rule 229 (1) of the Madras Legislative Assembly Rule, I hereby nominate the following Members of the Madras Legislative Assembly to be Members of the Rules Committee. 2-00 p.m.

1. The Hon. Sri M. Bhaktavatsalam
2. The Hon Sri V. Ramaiah
3. Sri V. R. Nedunchezhian
4. Sri Saw. Ganesan
5. Sri T. L. Sasivarna Thevar
6. Sri K. R. Nallasivam
7. Sri P. Ramachandran
8. Sri K. Parthasarathy
9. Sri M. Kalyanasundaram
10. Sri M. V. Karivengadam
11. Sri K. Narayanaswami Pillai
12. Sri N. Ramachandra Reddi
13. Sri G. Rajaram
14. Sri R. Ponnappa Nadar

The Speaker is the ex-officio Chairman of the Committee.

### (2) THE ELECTION TO THE HOUSE COMMITTEE

MR. SPEAKER : I have to announce to the House that the following eleven members were duly nominated for the election of eleven members of the Madras Legislative Assembly to the House Committee for 1963-64.

1. Sri C. Venkidusamy Gounder
2. Sri A. Arumugam
3. Sri K. R. Sambandam
4. Sri S. Angamuthu Naicker
5. Sri K. B. Palani
6. Sri G. Gomathi Sankara Dikshithar

[29th March 1963

7. Sri A. S. Dakshinamoorthy Gounder
8. Srimathi A. Krishnaveni
9. Sri KR. RM. Kariamanicka Ambalam
10. Sri V. G. Balakrishnan
11. Sri A. G. Balakrishnan

As the number of candidates who were duly nominated is equal to the number of vacancies to be filled, viz., *Eleven*, I hereby declare them to have been duly elected to the House Committee.

Under Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules I hereby nominate (1) Sri P. Ramachandran, (2) Sri A. Duraiyarasan, (3) Sri A. K. Subbiah and (4) Sri V. Ramanathan to be members of the House Committeee.

The Deputy Speaker is the ex-officio Chairman of the House Committee.

### III. GOVERNMENT RESOLUTION

#### NOMINATION OF COUNCIL MEMBERS TO ASSOCIATE WITH THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move the following resolution—

"That this House recommends to the Legislative Council that they do nominate three members from the Council to associate with the Committee on Subordinate Legislation of this House for the financial year 1963–64 and communicate to this House the names of the Members so nominated."

MR. SPEAKER : The question is—

"That this House recommends to the Legislative Council that they do nominate three members from the Council to associate with the Committee on Subordinate Legislation of this House for the financial year 1963–64 and communicate to this House the names of Members so nominated."

The resolution was put and carried.

### IV.—GOVERNMENT BILLS

#### (1) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1963 (L.A. BILL NO. 8 OF 1963).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 2) Bill, 1963, (L.A. Bill No. 8 of 1963) be taken into consideration.'

MR. SPEAKER : The question is—

'That the Madras Appropriation (No. 2) Bill, 1963, (L.A Bill No. 8 of 1963) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.



29th March 1963] [Mr. Speaker]

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 2) Bill, 1963, (L.A. Bill No. 8 of 1963) be passed.'

MR. SPEAKER : The question is—

'That the Madras Appropriation (No. 2) Bill, 1963, (L.A. Bill No. 8 of 1963) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

#### (2) THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1963 (L.A. BILL NO. 9 OF 1963)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) be taken into consideration.'

MR. SPEAKER : Motion moved—

That the Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) be taken into consideration.'

* திரு. கே. மூக்கையா தேவர் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கும் மசோதாவில் என் தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் சமீபத்தில் நடந்த சில வேண்டாத சம்பவத்தைப் பற்றி இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இம்மாதம் 17-ம் தேதி காலையில் உரப்பனூர் கண்மாயில் போலீஸ் துப்பாக்கி பிரயோகம் செய்ததன் காரணமாக 3 பேர்கள் இறந்ததும், பலர் காயம் பட்டதும் அதற்குப் பின்னர் பல பேர்கள் மீது கேஸ்கள் போடப்பட்டு பக்கத்து கிராமங்கள் பாழடைந்திருக்கும் நிலையை எல்லோரும் அறிவார்கள். அந்நிலை இன்னும் நீடித்தவண்ணம் இருக்கிறது. இந்த் சம்பவம் நடந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் கடந்த 20 ஆண்டு காலமாக மீன் பிடிப்பது சம்பந்தமாக இந்த வெள்ளை வீசும் உரிமையை நிலைநாட்ட இரண்டு கட்சிக்காரர்கள் இடையே இரண்டு கிராமங்களுக்கு இடையே கோர்ட்டில் நெடுநாட்களாக தாவா இருந்தது. இந்த இருபது வருட காலத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் முரட்டுத்தனமும் கலவரமும் இல்லாது கழித்துக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று 17-ம் தேதி கலவரத்திற்கு தயாராகி விட்டார்கள். 2,000, 3,000 பேர்கள் ஆயுதங்களோடு வந்தார்கள். அதை அடக்கி அமைதியை நிலைநாட்ட போலீசார் கொண்டு வரப்பட்டார்கள். கட்டுக்கு அடங்காததால் தற்காப்புக்காக சுட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அது சுத்தத் தவறு. பொய் என்பதுதான் என் கருத்து.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் 'பொய்' என்ற வார்த்தையை உபயோகிக்கிறார்கள். அந்த வார்த்தையை உபயோகிக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர்:** மெம்பரானாலும் சரி அல்லது மந்திரியானாலும் சரி நேரடியாகப் பார்த்தது கிடையாது. இப்படிச் சொல்கிறார்கள். அதற்கு ஆஸ்பதம் இல்லை. அதற்கு ஆதாரம் இல்லை. வேண்டுமென்று சொல்லப்படுகிறது என்று சொல்லலாம். நல்ல முறையில் சொன்னால் நல்லது.

**திரு. கே. மூக்கையா தேவர்:** அது உண்மைக்கு புறம்பானது. அது என் சொந்தத் தொகுதி. அங்குள்ள மக்கள் அனைவரையும் எனக்குத் தெரியும். சுட்ட அன்று 10 மணிக்கு நேரில் போய் பார்த்து விட்டுத்தான் சொல்கிறேன். 20 ஆண்டுகளாக கோர்ட் மூலம் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு கேஸை நடத்துகிறார்கள் அவர்கள். ஒழுங்கிற்கும் நேர்மைக்கும் நீதிக்கும் கட்டுப்பட்ட மக்கள் அவர்கள். இது சம்பந்தமாக கோர்ட் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் என்ன கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்கிறேன். மீன் பிடிக்கும் உரிமை பக்கத்திலுள்ள கிராம மக்கள் அனைவருக்கும் உண்டு. மீன் பிடிக்கும் தேதி வெள்ளை வீசும் உரிமை அதை அடையாளம் காட்டும் உரிமை கொடுக்கப்படவேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது பக்கத்திலுள்ள கிராம மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு தேதியை குறிப்பிட்டு குறிப்பிட்ட தேதியில் வந்திருந்து வெள்ளை வீசும் உரிமையை நிலைநாட்டவேண்டுமென்று தீர்ப்பில் கண்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பை சபாநாயகர் அவர்களிடம் காட்டியிருக்கிறேன். அத்தீர்ப்புப்படி நடந்திருந்தால் இந்த விவகாரமே வந்திருக்காது. நேர்மாறாக ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்களுக்கு அங்குள்ள அதிகாரிகள் தீர்ப்பை தங்கள் சொந்த தீர்ப்பாக எடுத்துக் கொண்டு அதை நிலைநாட்ட அக்கறை காட்டி ஒருதலைப்பட்சமாக நடந்ததால்தான் இந்த அசம்பாவிதங்கள் நடந்திருக்கின்றன. எங்களை கலக்காமல் செய்கிறார்கள் ஒரு சிலரை ஆதரிக்கிறார்கள் என்றெல்லாம் 17-ம் தேதிக்கு முந்தின நாள் 4½ மணிக்கு அந்த ஊர் பிரசிடெண்ட் வக்கீல் மூலம் ஜில்லா டி.எஸ்.பி.-யைப் பார்த்து மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தும் அவர்கள் அதை அலட்சியப்படுத்திவிட்டார்கள். இடையில் உள்ள தூரம் 15 மைல்தான். வண்டி வாகன வசதியிருக்கிறது. அங்கு போய் நிறுத்தியிருக்கலாம். ஆக மீன் பிடிக்கும் விவகாரத்தை பெரிதாக்கி அதன் காரணமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்கிற அளவிற்கு நிலைமையைக் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. நேர்மாறாக இரவோடு இரவாக ஆயுதம் தாங்கிய போலீசை மேல் உரப்பனூருக்கு அனுப்பி பக்கத்து கிராமங்களுக்கு அனுப்பி வண்டியில் மைக் செட்டை வைத்து எல்லோரும் மீன் பிடிக்க வரவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். எங்களைக் கேட்காமல் செய்தது போல் ஆயுதம் தாங்கிய போலீசைக் கொண்டு எங்களை மிரட்டுகிறார்கள் என்று சொன்னதையும் டி.எஸ்.பி. கவனிக்கவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட வக்கீல் நேரடியாக ஸ்டேஷனுக்கு போய் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் சொல்லியிருக்கிறார்கள், சப் இன்ஸ்பெக்டரிடம் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் கவனிக்கவில்லை. எல்லா ஊர்க்காரர்களும் வந்து கூடியிருந்து அந்த நேரத்தில் மீன் பிடித்தால்தான் வெள்ளை வீசும்



உரிமைக்கு மதிப்பு கிடைக்கும் என்று மக்களை அங்கு போக வைக்க நினைத்தார்கள். அந்த மதிப்பை நிலைநாட்ட, கோர்ட் தீர்ப்பை நிலைநாட்ட போலீஸ் அதிக அக்கறைஎடுத்திருக்கிறார்கள். மேல் உரப்பனூர்காரர்கள் தடுப்பு உத்தரவு வாங்க முடியவில்லை. அவர்கள் ஊரிலேயே தங்கி விட்டார்கள். அவர்கள் மீன் பிடிக்க நாங்கள் வரமாட்டோம் என்று சொன்னபோது ஆயுதப் போலீசார் அவர்களை அடித்து மீன் பிடிக்க போகவேண்டுமென்று அடிப் பிரயோகம் செய்தார்கள். மைக் செட் உடைந்திருப்பதை பத்திரிக்கையில் படம் போட்டு வந்திருப்பதை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். மீன் பிடிக்கவரமாட்டோம் என்று சொன்னதற்காக அவர்கள் மீது தடிஅடிப் பிரயோகம் நடத்தியதால் அவர்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுடன் அரண்டு ஓடும் நிலை எற்பட்டது. மீன் பிடிக்க உத்தரவு கொடுத்து சின்ன உரப்பனூர்க்காரர்கள் மீன் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இடையில், போலீஸ் நிறுத்தப்பட்டிருக்கிறது. கரை மீது ஓடி வரும் ஜனங்கள் மீது நிதானமின்றி போலீஸ் கண்டபடி சுட்டு விட்டார்கள். சுட்ட இடத்திற்கும் மீன் பிடித்த இடத்திற்கும் இடையே ½ மைல் தூரம் இருக்கிறது. மீன் பிடிக்கும் இடத்தில் நடந்திருந்தால் கலவரத்திற்கு தயாராகி வருகிறார்கள் அதனால் நடந்தது என்று சொல்லலாம். ஆனால் சுட்ட இடத்திற்கும் மீன் பிடித்த இடத்திற்கும் ½ மைல் தூரம் இருக்கிறது. ஊருக்கும் அதற்கும் ¾ மைல் தூரம் இருக்கிறது. அதோடு சுடும்போது எந்தவிதமான எச்சரிக்கையும் சொல்லப்படவில்லை. 144 உத்தரவு போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 144 உத்தரவு போடவேயில்லை. பின்னால்தான் அது சரிகட்டி போடப்பட்டிருக்கிறது.

MR. SPEAKER: That is an aspersion on the court. Let the hon. Member please take care about what he is telling. The hon. Member is telling that order under section 144 has been promulgated afterwards and all that. He should be beware of this statement. It is clear by a contempt of court.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதை 'வித்ட்ரா' செய்ய வேண்டும்.

**திரு. கே. மூக்கையா தேவர்:** 'வித்ட்ரா' செய்து கொள்கிறேன். 144 போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படி போட்டு தடுத்திருந்தால் இந்தக் கூட்டம் கூட வேண்டிய அவசியமே இருந்திருக்காது. பின்னர், எச்சரிக்கை செய்யப்படவில்லை, கண்ணீர் புகை உபயோகிக்கப்படவில்லை. கூட்டத்தை தாக்குப் பிடிக்க முடியாமல் அதிகம் போலீஸ் கொண்டுவரப்பட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. மீன் பிடிக்கிற உள்வாயில் செத்திருந்தால் பரவாயில்லை. வேடிக்கை பார்க்க தூரத்தில் நின்ற ஒரு 10 வயது ஆசாரிப் பையன் சுடப்பட்டான். ஒரு பெண்ணும் சுடப்பட்டிருக்கிறாள். இஷ்டம்போல் போலீசார் சுட்டுத்தள்ளியிருக்கிறார்கள். தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. காயம் பட்ட அத்தனை பேர்களுக்கும் நெஞ்சில், முதுகில் அடிப்பட்டிருக்கிறதே தவிர இடுப்பிற்கு கீழ் யாருக்கும் காயம் இல்லை. அந்த

[திரு. கே. மூக்கையா தேவர்] [29th March 1963

அளவு செய்திருக்கிறார்கள். ஒரு தரப்பில் இருந்துகொண்டு செய்திருக்கிறார்கள். சுட்ட பிறகு அவர்கள் சொந்தக்காரர்களை தேடிப் பிடித்து கேஸ் போடுகிறார்கள். எதற்காக அப்படி கேஸ் போடவேண்டும். சாட்சிகள் இல்லாமல் செய்ய தலைமறை சரிகட்ட, இம்மாதிரி செய்கிறார்கள். இது பற்றி நல்ல முறையில் விவாதிக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்றார்கள். இருக்கிற தகவலை வைத்து பதில் சொல்கிறோம் என்று சொன்னார்கள். எங்களைப் போல் உள்ளவர்களுக்கு தகவல் வரும்போது அரசாங்க வசதி வாய்ப்பு இருக்கும்போது அவர்களுக்கு தகவல் வர இவ்வளவு நாளாகிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர் அவர்களுக்கு வந்தளவு எங்களுக்கும் தகவல் இருக்கிறது. ஆர்.டி.ஓ. என்கொயரி நடக்கிறது. அத்தகவல் வந்த பிறகு விவாதம் நடப்பது நல்லது என்று சொன்னேன். எனக்கு எவ்வளவு தகவல் கிடைக்கக் கூடுமோ அவ்வளவு தகவல் கிடைத்திருக்கிறது. கிடைக்கக்கூடிய தகவல் கிடைக்கவில்லை என்று கூறவில்லை. ஆர்.டி.ஓ. என்கொயரின் முடிவு தெரியவேண்டும் என்றுதான் சொன்னேன்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** அத்தகவல் கிடைக்காததினால் அவர்கள் அதிகம் பதில் சொல்லமுடியாத நிலை ஏற்பட்டது, எங்களுக்கும் சொல்லவேண்டியதை சொல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஆர்.டி.ஓ. விசாரணை நடக்கிறது. அது பற்றியும் எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. சாட்சியம் சொல்லக் கூடியவர்கள் அநேகமாக ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். வற்புறுத்தப்பட்டு உண்மையான சாட்சியம் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. அநேகர் தலைமறைவாக இருக்கிறார்கள். அவர்கள் பேரில் கேஸ் போடப்பட்டு அவர்கள் விரட்டப்படுகிறார்கள். கேஸ்கள் போடப்பட்டு சாட்சியங்களை வற்புறுத்தி வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆர்.டி.ஓ. விசாரணை சட்டப்படி நடக்கிறது. அந்த விசாரணை ஒழுங்காக நடக்கவில்லை என்று கனம் அங்கத்தினர் சொல்கிறாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆர்.டி.ஓ. மீது குற்றம் சாட்டுகிறார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The distinction is very very narrow. If the hon. Member says that the enquiry is not properly done and all such things, the allegation is serious. Then what is the use of expecting the results of the enquiry? Therefore, the hon. Member must give respect to the enquiry and afterwards it is left to him to agree or disagree with the findings of the enquiry. That is a different question. Now if the hon. Member says that the Revenue Divisional Officer is compelling witnesses to give different versions, that he is not doing good work and that he has failed to examine the concerned persons in the hospital, all these are allegations to show that he has not properly enquired into the matter.



29th March 1963]

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஏற்கெனவே அம்மாதிரி வற்புறுத்தப்படும் நிலைமை இருந்திருக்கிறது என்ற தகவலை வைத்துத்தான் சொல்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** ஆட்கள் இல்லை, வசதி இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, விசாரணையில் வற்புறுத்தி வேண்டுமென்றே ஸ்டேட்மெண்ட் வாங்குகிறார்கள் என்று சொல்லக் கூடாது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டப்படி ஆர்.டி.ஓ. விசாரணை நடத்துகிறார். அந்த ஆர்.டி.ஓ. பேரில் கனம் அங்கத்தினர் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அது வேறு விஷயம் அந்த ஆர்.டி.ஓ. பேரில் குற்றம் சாட்டப்படவில்லை என்றால், போலீசார் பெயரிலோ, அல்லது மற்றவர்கள் பெயரிலோ குற்றம் சாட்டி அங்கே சாட்சியம் கொடுக்கிறவர்கள் சரியாகக் கொடுக்க முடியவில்லை. அதற்காக அதிகாரிகள் குறுக்கே நிற்கிறார்கள் என்று சொன்னால் அதை அந்த ஆர்.டி.ஓ. இடமே அப்போதே தெரிவித்திருக்கலாம். அவரிடம் தெரிவித்தும் அவர் கவனிக்கவில்லை என்று சொல்ல வேண்டுமென்றால், என்குயரியினுடைய முடிவு ஏற்பட்ட பிறகுதான் அதெல்லாம் சொல்லலாம்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஆர். டி. ஓ. பற்றித் தனிப்பட்ட முறையில் நான் ஒன்றும் புகார் சொல்லவில்லை. ஆஸ்பத்திரியில் இருக்கிறவர்களைப் போய் பார்க்கக்கூட அனுமதிக்கப்படவில்லை என்றால் எப்படி சாட்சியம் சொல்வதற்கு முடியும். கிராமத்திலே ஆட்கள் கிடையாது. இடையிலே இருக்கும் அதிகாரிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் வைத்து உண்மையான சாட்சியத்தை எப்படி தவிர்க்கவேண்டுமென்று பார்க்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆர்.டி.ஓ. விசாரித்தபோது அவரிடம் இதையெல்லாம் சொல்லியிருக்கிறார்களா, கனம் அங்கத்தினருக்கு தெரியுமா ?

**திரு. கே. மூக்கையா தேவர் :** நான் இங்கே இல்லாததால். . .

MR. SPEAKER : Is any petition to the R.D.O. withheld or any witness threatened or prevented from appearing to give evidence before him?

**திரு. கே. மூக்கையா தேவர் :** விசாரித்தால்தான் தெரியும். எனக்கு வந்த ரிபோர்ட்டிலிருந்து சொல்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member cannot say that.

கனம் அங்கத்தினருக்கென்று ரிபோர்ட் தனியாக வருகிறதா என்ன ? கனம் அமைச்சர் அவர்கள் கேட்பது என்னவென்றால் அம்மாதிரி புகார்கள் அந்த ஆர்.டி.ஓ. இடம் கனம் அங்கத்தினர் கொடுக்கவில்லை என்றாலும், வக்கீலோ அல்லது வேறு யாராவது சம்பந்தப்பட்டவர் கொடுத்திருக்கிறாரா என்று கேட்கிறார்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** எனக்குத் தெரியவில்லை. அம்மாதிரி தடுக்கப்பட்டதாக கடிதங்கள் வந்திருப்பதை வைத்துத்தான் நான் சொல்கிறேன்.

[திரு. கே. மூக்கையா தேவர்] [29th March 1963

உண்மையான நிலை தெரியவேண்டுமானால், இதற்கு நீதி விசாரணை (ஜுடிஷியல் என்குயரி) வேண்டும். காரணம் என்னவென்றால் இருக்கும் அதிகாரிகள் ஒருதலைபட்சமாக இருந்திருக்கிறார்கள்: இதெல்லாம் ஒரு அற்ப விஷயம் . . 20 வருஷங்களாக இருந்த ஒரு சிறிய விவகாரத்தை, பெரிது படுத்தி அதை அடக்குவதற்கு, சுடவேண்டிய அவசியமில்லை. அதற்கு அவசியம் இல்லை என்று காட்டுவதற்காகத்தான் நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டோம். உண்மையான நிலையைத் தெரிந்துகொள்வதற்கு நீதி விசாரணை வைக்க அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே நமது நாட்டின் பிரதமர் பண்டித நேரு அவர்கள் ஒரு சமயம் பார்லிமெண்டில் பேசும்போது, "நமது சுதந்திர சர்க்காரில், அஹிம்சையை லட்சியமாகக் கொண்ட சர்க்காரில், அதுவும் இந்த நாகரீக காலத்தில் துப்பாக்கி கொண்டு ஜனங்களைச் சுடுவது தவறு, அப்படி செய்வது கண்டிக்கத் தக்கது, அதற்கு மீறி ஏதாவது நடக்குமானால் ஜுடிஷியல் என்குயரி வைக்க வேண்டும்" என்று உறுதி கூறி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில், இந்தச் சம்பவத்தைக் குறித்து நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து, நீதியை நிலை நாட்ட ஏன் நம்முடைய அரசாங்கம் தயங்குகிறது என்பது எனக்கு விளங்கவில்லை. இது பெரும் சந்தேகத்தை உண்டாக்குகிறது. அங்குள்ள ஜனங்களிடத்தில் பரவலாக ஒரு ஏமாற்றமும், ஏக்கமும், பயமும் பீதியும் இருந்து கொண்டிருக்கிறது. இனி அந்தப் பக்கத்தில் சகஜ நிலை ஏற்படுவதற்கு குறைந்தது 3, 4 வருஷங்கள் ஆகும். அப்படிப்பட்ட பாதிப்பு அங்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அதிகாரிகள் ஒருதலைப் பட்சமாகப் போய் காரியங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். எதிர் கட்சித் தொகுதியில் இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குவது, ஜனங்களை சுட்டுத்தள்ளுவது, வேட்டையாடும் வேட்டைப் பண்டங்களாக கருதுவது இன்றைய நிலைமையாக இருக்கிறது. எல்லையில் எதிரிகளைச் சுட வேண்டிய துப்பாக்கிகள் இங்கு ஏழைகளைச் சுட்டுத் தள்ளுகிறது. ஆகவேதான் இதையெல்லாம் விசாரிக்க வேண்டுமானால் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் ஒரு நீதி விசாரணை வைக்கவேண்டும். அவர்கள் அதிகமாக ஆத்திரத்தோடு இருக்கிறார்கள். இடையிலே நடந்தது தவறு என்றால் அதைக் கேட்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. அவசர நிலையைச் சொல்லி ஏழை மக்கள் மீது அவ்வாறு சொல்லுவது, பயமுறுத்துவது தவறு. இதற்கு உடனடியாக நீதி விசாரணை வேண்டும். "குதிரை தூக்கிப்போட்டதுமல்லாமல் குழியையும் பறித்ததாம்" என்று சொல்வது போல, சுட்டுக் கொன்றதுமல்லாமல் செத்துப்போன மூன்று பேர்களின் குடும்பத்தினரை—பெண்டு பிள்ளைகளை, கைது செய்து ஜெயிலுக்குக் கொண்டுபோய் கேஸ் போடுவதைப் பார்த்து உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். இதைப் பார்த்து ஜனங்களும் காட்டிலே ஓடித்திரிகிறார்கள். அம்மாதிரி கேஸ்களை வாபஸ் வாங்க வேண்டும். உண்மையிலேயே குற்றம் செய்தவர்களை தண்டிப்பதில்



29th March 1963] [திரு. கே. மூக்கையா தேவர்]

ஆட்சேபணை இல்லை. அங்குள்ள இரண்டு கட்சிக்காரர்களும் ஏற்கனவே தீர்ப்பை ஒத்துக்கொண்டு ஒரு அறிக்கையும் கொடுத்திருக்கிறார்கள். துணியை வீசுகிற உரிமையைப் பொறுத்த வரையில்கூட ஏதோ நடந்து விட்டது, பெரியவர்கள் பார்த்துச் சொன்னால், ஒத்துக்கொள்கிறோம் என்று இரண்டு கட்சிக்காரர்களும் சொல்கிறார்கள். இரண்டு பேரும் பாதிப்பு இல்லாமல் ஒத்துப் போகும் போது இடையிலே போலீசாரும், அங்குள்ள அதிகாரிகளும், சில தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்று அந்த அறிக்கையிலே இருந்து தெரிகிறது. அஹிம்சையை, சத்தியத்தை ஒரு நிலையாகக் கொண்டு ஆட்சி நடத்தும்போது இம்மாதிரி ஏழைகளைச் சுட்டது தவறு, தவறு செய்தவர் யார் என்று கண்டு பிடிப்பதற்கு, தயவு செய்து நீதி விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. டி. எல். சசிவர்ண தேவர்: கனம சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் சில கருத்துக்களை நானும் சொல்ல விரும்புகிறேன்.

எனது நண்பர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் பேசிய விஷயங்களைப்பற்றி நானும் சில கருத்துக்களை சபைமுன் வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. சில தினங்களுக்கு முன்னால் நான் அந்தக் கிராமத்திற்குச் சென்று இருந்தேன். மேல உரப்பனூர் கிராமத்திற்குச் சென்று இருந்தேன். கீழ உரப்பனூர் கிராமத்திற்கும் சென்றிருந்தேன். அங்குள்ள கிராம மக்களை நேரடியாக விசாரித்தேன். மேல உரப்பனூர் கிராமத்தில் இப்போது இருக்கக்கூடியவர்கள் பெண்களும், சிறிய சிறிய குழந்தைகளும், ஒரு சில கிழவர்களும்தான் வேறு எந்தவிதமான ஆட்களும் அங்கு இல்லை. போலீஸ் பாதுகாப்பு வைக்கப்பட்டிருக்கிறது. நான் கேள்விப்பட்ட வரையில் உண்மையில் மீன் பிடிக்கும் உரிமை இரண்டு கிராமத்திற்கும் பொதுவாகச் சேர்ந்தது. மீன் பிடிக்கக்கூடிய நேரத்தைக் குறிக்க, குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு சமிக்ஞை செய்வது வழக்கம். அந்த சமிக்ஞை செய்வதிலே ஏற்பட்ட தகராறுதான் இந்தத் தகராறு. மேல உரப்பனூர் கிராம வாசிகளைக் கலந்துகொள்ளாமல் இந்த ஏற்பாட்டை செய்து விட்டார்கள் என்று அறிந்த அந்தக் கிராம மக்கள் தங்களுக்குள்ள உரிமை பாதிக்கப்படுகிறது என்றுதான் முதல்நாள் அன்று காலை 4½ மணிக்கு சூபரிண்டெண்டெண்டு ஆஃப் போலீஸிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். "எங்களைக் கேட்காமல் தேதி நிர்ணயம் செய்து விட்டார்கள். எங்களைக் கேட்டிருந்தால் நாங்கள் ஆட்சேபணை செய்திருக்கமாட்டோம்" என்பதாகக் கூறியிருக்கிறார்கள். சூபரிண்டெண்டெண்டு ஆஃப் போலீஸ் அவர்கள் உடனே அந்தக் கிராமத்திற்குச் சென்று இருதரப்பாரையும் கூட்டிவைத்து அவர்களைக் கேட்டது வாஸ்தவமாய் இருந்தால், அல்லது இன்னொரு தேதியை அவர்களே நேரில் குறிப்பிட்டுச் சொல்லி இருந்தால் இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் அவசியமே ஏற்பட்டிருக்காது. இதைத்தான் கிராம மக்கள் சொல்கிறார்கள்.

[திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்] [29th March 1963

அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய இந்த சிறிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருந்தால் இந்தத் துர்பிக்ஷம் ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அந்த கிராமத்தாரை முன்பாகவே கலந்துகொள்ளாமல் ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். மேல உரப்பனூர் கிராமவாசிகள் ஒருவருமே அந்த கண்மாய்க்கு மீன் பிடிப்பதற்குப் போகவில்லை. அன்று இரவு போலீஸார் ஒரு மாட்டு வண்டியிலே ஒலிபெருக்கிக் கருவியை வைத்துக்கொண்டு அந்தக் கிராமத்திற்குள்ளே புகுந்து "மீன் பிடிக்க வாருங்கள்" என்று அழைத்திருக்கிறார்கள். அதைச் செய்ய வேண்டிய அவசியம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. அவர்கள் அவ்வாறு மறுத்த பிறகு சலசலப்புகள் ஏற்பட்டு லத்தி சார்ஜ் செய்ததினால் அந்தக் கலவரத்தில் பலவாறாக மக்கள் ஓட ஆரம்பித்திருக்கிறார்கள். ஓட ஆரம்பித்திருக்கும்போது நேரடியாக அதற்குள்ளே அங்கே மீன் பிடிக்கப்பட்டுவிட்டது. ஒரு சிலர் சப்தத்தோடு ஆரவாரம் செய்து மோத ஆரம்பித்திருக்கிறார்கள். சுடப்பட்ட இடத்தை நான் சமீபத்தில் பார்த்தேன். மீன் பிடிக்கும் இடத்திற்கும் சுடப்பட்ட இடத்திற்கும் சுமார் 3 பர்லாங் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கும் சுடப்பட்ட இடத்திற்கும் சற்றேறக்குறைய 6 பர்லாங் இருக்கிறது. கண்மாய்க்கும் மேல உரப்பனூருக்கும் 1 மைல் 1 பர்லாங் தூரம் இருக்கிறது. ஆகவே மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் இந்த கலகம் செய்தார்கள், அப்போது போலீஸார் சுடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று சொல்வது கொஞ்சம் கூட பொருந்தமில்லாதிருக்கிறது. இடையிலே நடந்த காரியங்கள்தான் இதற்குக் காரணம். அப்படிப்பட்ட சம்பவங்கள் தவிர்க்கப்பட வேண்டுமானால் போலீஸார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு இருந்தாலும் கூட
10-00 a.m. கூட்டம் பயந்து ஓடியிருக்கும். அதுதான் இல்லை. காலுக்குக் கீழே சுட்டிருந்தால் கூட, காயம் பட்டால் காலில்தான் படும். தலையில், நெஞ்சில், வயிற்றில் காயம் படும்படி இண்டிஸ்கிரிமினேட்டாகச் சுட்டிருக்கிறார்கள். இதைப் பார்த்தால் வேண்டுமென்றே சுட்டிருப்பதாகத் தெரிகிறது என்று தெரிவித்துக்கொள்ள இஷ்டப்படுகிறேன். வேறு முறையிலே அரசாங்கத்தின் தரப்பில் சொல்லவேண்டுமானால் சொல்லட்டும். இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் சம்பந்தப்பட்ட ஒரு சில கட்சிக்காரர்களின் செயலை அனுதாபத்தோடு கவனித்து அதிகாரிகள் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆர்.டி.ஓ. என்க்வொயரி பற்றி அமைச்சர் குறிப்பிட்டார்கள். நான் அங்கே போய் விசாரித்தேன். மேல உரப்பனூர் சம்பந்தப்பட்ட மட்டில் சாட்சியம் சொல்ல எல்லோருமே பயப்படுகிறார்கள். திரு. அய்யாக்கண்ணு தேவர் என்பவரும், திரு. வெள்ளைச்சாமி தேவர் என்பவரும் அந்த கிராமத்திலிருந்து கிளம்பி திருமங்கலம் சென்றார்கள். ஆர்.டி.ஓ.-வைச் சந்தித்துச் சாட்சியம் சொல்லச் சென்றார்கள். அவர்களை ஆர்.டி.ஓ.-வைச் சந்தித்துச் சாட்சியும் சொல்ல விடாமல், போலீஸ்காரர்கள் அவர்களை பயமுறுத்தி அனுப்பியிருக்கிறார்கள். நாம் ஆர்.டி.ஓ.-வைக் குற்றம் சொல்ல



29th March 1963] [திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்]

முடியாது. மேலும் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக இறந்து போனவர்கள் தவிர 10 பேர்கள் வரையில் இப்போது ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். ஆர்.டி.ஓ. அவர்கள் ஆஸ்பத்திரியில் உள்ளவர்களை அந்த சம்பவம் பற்றி விசாரிக்கலாம். அந்த முறையில் விசாரித்து வந்திருப்பார் என்று நினைக்கிறேன். அதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை. விசாரணை ரிப்போர்ட் வந்த பிறகுதான் தெரியும். ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தப்பட்ட மட்டில், அவர்கள் கலகம் செய்ய வந்தார்கள், அவர்களைத் துரத்தினோம், அதன் பிறகு அடித்தோம் என்று சொல்லுவதெல்லாம் சம்பந்தமில்லாத காயம். எனக்கு இதைப் பற்றி நேரடியாகத் தெரியும். நான் அங்குள்ள பெண்களை விசாரித்தேன். அங்குள்ள கிராம மக்களை விசாரித்தேன். கீழ உரப்பனூரிலிருந்து இதற்கென்று ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் கல்லை விட்டு எறிந்தார்கள். கீழ உரப்பனூர் ஆட்கள் கல்லை எறிந்தது வாஸ்தவம். அது இல்லை என்று நான் சொல்லவில்லை. பலாத்கார ஆயுதத்தைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள் என்று சொல்லுவது சுத்தப் பொய் (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பொய் என்று சொல்லாதீர்கள்) ஆமாம்; வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்—அது உண்மைக்குப் புறம்பானது. 23-ம் தேதியன்று சில போலீஸ்காரர்கள் ஜீப்பில் போயிருக்கிறார்கள். அந்த கிராமத்துப் பெண்கள் சொல்லுகிறார்கள்; 'மூத்தா நாள் சினிமா படம் எடுத்தார்கள் என்று சொன்னார்கள். எனக்கு என்ன என்று விளங்கவில்லை. 23-ம் தேதி அதிகாரிகளெல்லாம் கூடி, சிறு பையன்களை கண்மாய் கரை பக்கத்தில் உட்கார வைத்து, கையில் கம்புகளைக் கொடுத்து புஷ்-ஐ அடிக்கச் சொல்லி ஆங்காங்கு ஒரு போலீஸ்காரர் உட்கார்ந்து பார்த்திருக்கிறார்கள். அதை அப்படியே போட்டோ எடுத்திருக்கிறார்கள் . . .

**கனம் சபாநாயகர்**: செடியில் அடிக்கிற மாதிரி போட்டோவா?

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்**: ஆம். புஷ்ஷை அடிக்கிற மாதிரி போட்டோ எடுத்திருக்கிறார்கள். இன்னொன்று அவர்களோடு சுதந்திர அம்மாள் என்ற ஒரு அம்மாவைக் கூட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள். அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் மண்டியிட்டு உட்கார வைத்து, இரண்டு கைகளிலும் கம்பைக் கொடுத்து யாருக்கோ கொடுக்கிற மாதிரி, பாவனை செய்யச் சொல்லியிருக்கிறார்கள். 'ஏன்' என்று அந்த அம்மாள் கேட்டதற்கு 'சும்மா உட்கார்' என்று சொல்லியிருக்கிறார்கள். உடனே அதுவும் போட்டோ எடுக்கப்பட்டது. இன்னும் கிராம மக்களை குரூப் குரூப்பாக வைத்து வேறு போட்டோ எடுத்திருக்கிறார்கள். சிறு பையன் கையில், 15 வயது இருக்கக்கூடிய ஒரு பையன் கையில் கம்பைக் கொடுத்து பலமாக விட்டெறியச் சொல்லி அதை ஒரு போட்டோ எடுத்திருக்கிறார்கள். எதற்காக இந்த போட்டோக்களையெல்லாம் எடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் நடந்த சம்பவம் இது. அவர்கள் இதெல்லாம் போட்டோ எடுத்து சினிமாவில் காட்டப் போகிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருக்

றார்கள். துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தப்பட்ட மட்டில் இறந்தது ஒரு சிறு பையன். ஒரு சிறு பெண்ணும் காயப்பட்டிருக்கிறார். கலகம் செய்வதற்காகப் பையன்கள் போனார்கள் என்று சொன்னால் யாருமே அதை நம்பமாட்டார்கள். பையன்கள் வந்தார்கள் என்று ரெக்கார்டு செய்யத்தான் இந்த மாதிரி போட்டோ எடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதில் ஒரு ஆர்.டீ.ஓ. விசாரணை தீர்க்கமானது என்று அரசாங்கத்தில் கருதலாம். இந்த ஆர்.டீ.ஓ. விசாரணையில் எனக்கு நம்பிக்கையில்லை. சமீபத்தில் சம்பவத்தைப் பற்றிக்கூட நான் எது கேட்டாலும் குத்தலாக பதில் சொல்லுகிறார்கள் அமைச்சர் அவர்கள். அதற்கு நான் வருத்தப்படவில்லை—சமீபத்திலே நடந்த மதுரை சம்பவத்தைப் பார்த்தால், அதிலே போலீஸ்காரர் அடித்து ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிகிறது. அதைப் பற்றி ஆர்.டி.ஓ. விசாரித்தார். இந்த விசாரணை நடக்கும் போதே என்னிடம் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் வந்தார். என்னிடம் சொன்னார். சம்பவம் நடந்தது வாஸ்தவம்தான், ஆனால் அதைப் பற்றி ஜாஸ்தி கிளப்ப வேண்டாம் என்று என்னிடம் கேட்டுக் கொண்டார். இது எல்லோரும் தெரியும். இதைப்பற்றி ஆர்.டி.ஓ. விசாரித்தார். சம்பவம் நடந்த இடத்தில் 4-வது வகுப்பில் படிக்கக் கூடிய ஒரு குழந்தை இருந்திருக்கிறது, 85 வயது உள்ள கிழவி இருந்திருக்கிறாள், இன்னொரு பையன் இருந்திருக்கிறான். இவர்களையெல்லாம் ஆர்.டி.ஓ. விசாரிக்கவில்லை. ஆனால் ரிப்போர்ட் வந்திருப்பதாக அமைச்சர் கூறுகிறார். கண்ணால் பார்த்த சாட்சிகளை விசாரிக்காமல் கொடுத்திருக்கிற ரிப்போர்ட் எப்படி பரிபூர்ணமான ரிப்போர்ட்டாக இருக்க முடியும் என்று தெரியவில்லை. அதை உண்மையான ரிப்போர்ட்டாக எடுத்துக் கொள்ள முடியாது. துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான சம்பவமாக இருப்பதால் இந்த மாதிரி விசாரணையினால் பிரயோசனம் இல்லை. மற்ற காரியங்களில் கோ-ஆர்டினேஷன் இல்லாவிட்டாலும், இந்த மாதிரி விஷயங்களில் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளிடையேயும் ஒத்துழைப்பு இருக்கிறது. மேல உரப்பனூர் சம்பந்தப்பட்ட மட்டில் போலீஸ்காரர்களுடைய நடவடிக்கை சரியாக இருந்திருந்தால் இந்த மாதிரி அசம்பாவிதமே ஏற்பட்டிருக்காமல் தவிர்த்திருக்கலாம். நியாயமான முறையில் நீதிபதி விசாரணை நடத்தினால்தான் உண்மை சம்பவம் வெளிப்படும் என்று தெரிவித்துக்கொள்ள இஷ்டப்படுகிறேன்.

அடுத்தபடியாக நாட்டிலுள்ள நிலவரத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்று நாட்டிலுள்ள மக்களிடத்தில் பரவலாக ஒரு நோக்கம் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் வரி விதிப்பு அதிகமாக இருக்கிறது, வரிகளைக் கொடுக்க முடியாது என்ற நோக்கம் பரவலாக இருக்கிறது. இங்கே நாம் பரிபூர்ண விவாதம் செய்து வருகிறோம். கடந்த 16 தினங்களாகக் கோரிக்கைகளை நிறைவேற்றி கோடானுகோடி ரூபாய்களை அரசாங்கத்திற்கு அனுமதித்திருக்கிறோம். உலகத்தில் ஏழைக்கும் யாரும் பயப்பட



மாட்டார்கள், கோழைக்கும் யாரும் பயப்படமாட்டார்கள். இதை நாம் நிச்சயமாகப் பார்க்கிறோம். இந்திய நாடு உலக ரீதியாக உயர்ந்த நாடு. திட்டத்திற்காக கடன் கேட்காத, பிச்சை கேட்காத நாடுகளே உலகத்தில் இல்லை இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில். எல்லா நாடுகளிடமும் கேட்டு வாங்கி விட்டோம். பொருளாதாரத்தில் கீழ்மையான நாடு, வறுமையான நாடு என்று நாம் உலக ரீதியாக ஒப்புக்கொண்டு விட்டோம். கோழைத்தனம் சம்பந்தப்பட்ட மட்டில் சமீபத்தில் நடந்த எல்லைப் போராட்டம் குறித்து எடுத்துக்கொண்டால் நம் மாவீரர்கள், ஜவான்கள் தனித் தனியாக ஆங்காங்கு செய்துள்ள வீர சாகசங்களைப் பாராட்டிய போதிலும் நமக்கு பெருத்த ராணுவத் தோல்வி ஏற்பட்டது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த முறையில் கோழைத்தனத்தை உலக ரீதியாக ஒப்புக்கொண்டு விட்டோம். இப்போது நமது நாடு இரண்டு விதத்திலும் பின்தங்கியிருக்கிறது. இதில் எதை முதலில் சீர்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டால், நாட்டில் ஏற்பட்ட ராணுவத் தோல்வியைச் சீர்படுத்திக் கொள்ளவேண்டும். ராணுவ ரீதியாக நடவடிக்கைகளை எடுத்து, பாதுகாப்பை பலப்படுத்திக் கொண்டு, ஆபத்தை நீக்கிக் கொள்ளும் முறையில் ஈடுபட வேண்டும். இந்த நிலையில் உள்நாட்டுப் பிரச்னைகளில் அதிக கவனம் செலுத்தக் கூடாது. திட்டத்தையும் கைவிட மாட்டோம், அதே சமயத்தில் பாதுகாப்புச் செலவை ஜாஸ்தியாக்குவோம் என்று சொல்லுவது அவ்வளவு நியாயம் அல்ல. பரிபூர்ணமாகத் திட்டத்தை நிறுத்திவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. எதை எதைத் தவிர்க்க முடியுமோ அதையெல்லாம் தவிர்த்து, அந்தத் தொகைகளையெல்லாம் ராணுவத்திற்காகச் செலவு செய்ய வேண்டும். இரண்டையும் வைத்துக்கொண்டு மக்கள் மீது எக்கச்சக்கமான அளவுக்கு சுமைகளை ஏற்படுத்தினால் மக்கள் மிகவும் துன்பப்படுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தங்கக் கட்டுப்பாடு. இது சம்பந்தப்பட்ட மட்டில் நாட்டிலே மக்கள் பூராவும் அரசாங்கத்திற்கு விரோதமாக இருக்கிறார்கள். என்னதான் அமைச்சர் அவர்கள் அதற்கு சால்ஜாப்புகள் சொன்னாலும் மக்கள் இந்த ஆட்சிக்குச் சாதகமாக இல்லை, பரிபூர்ணமாக எதிர்க்கிறார்கள் என்று தங்கள் மூலமாக நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அது போகட்டும். தங்கக் கட்டுப்பாட்டினால் பரிபூர்ண நன்மை அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை. இன்றைய தினம் பார்த்தால் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் மக்களிடத்தில் தங்கமே இருக்கக் கூடாது, எல்லாத் தங்கமும் அரசாங்கத்திடம் வந்து விட வேண்டும் என்று சொல்லுகிறார். இன்றைய தினம் வெளியிலே தங்கம் கிடைக்காமல் இருக்கிறதா? 130 ரூபாய் கொடுத்தால் எத்தனை தங்கம் வேண்டுமானாலும் கிடைக்கும். அது தான் போகட்டும். கடத்தல் தீர்ந்து விட்டது என்று சொல்லு

*[திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்]* [29th March 1963

முடியுமா? 80 ரூபாய் இருந்தபோது ஸ்மக்ளிங் இருந்தது என்று சொன்னால் 135 ரூபாய் கிடைக்கும்போது, ஜாஸ்தியாகக் கிடைக்கும் போது கடத்தல் இல்லாமல் சும்மா இருந்து விடுவார்களா? . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் ஒன்று ரொம்பவும் கேட்டுக்கொள்கிறேன். தங்கம் இருக்கிற இடத்தைப் பற்றி தகவல் கிடைத்தால் அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** தங்கம் இருக்கிற இடத்தை நாம் பார்த்தால் சொல்லுவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. இன்னும் சொல்லுகிறார்கள் ...............

**கனம் சபாநாயகர் :** ஸ்வீப்பிங் ஸ்டேட்மெண்ட் கூடாது என்று தான் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** தங்கம் பூராவும் அரசாங்கத்திடம்தான் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். காலப் போக்கில் என்ன ஏற்படும் என்று மக்களிடத்தில் அதிக பீதி ஏற்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம் கதை எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சியை மாற்றுவதற்குக் காரணமாக இருந்தவர் ஒரு பொற்கொல்லர் தான். வஞ்சிப்பத்தன் காரணமாக . . .

**கனம் சபாநாயகர் :** வஞ்சிப் பத்தர் கதையைப் பற்றி விச்வகர்மாக்களே ஆட்சேபணை செய்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** சிலப்பதிகாரத்தில் வஞ்சிப்பத்தர் என்ற கதாபாத்திரமே இல்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது நம் டிராமாக்காரர்கள் உண்டாக்கியது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** வஞ்சிப்பத்தன் காரணமாகத் தான் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆட்சியே மாறியது. அதோடு இதற்குக் காரணமாக இருந்ததே சிலம்பு—அதாவது தங்கம் தான். காங்கிரஸ் ஆட்சி மாற்றத்திற்கு காரணம் ஆகப்போவது சிலம்பு போன்றும், பத்தர் போன்றும், பொற்கொல்லர் சமூகம் ஆகும்; அங்கே இவர்களுக்கு ஆபத்து இருக்கிறது என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

உப தேர்தல் வர இருக்கிறது. இங்கு கொழும்பு ப்ரபோசல் போல, நமது முதலமைச்சர் நாளுக்கு ஒரு ப்ரபோசல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். முன் ஜெயித்த கட்சிக்காரர்களே இருந்து விட்டுப் போகலாம் என்று. அன்று நேரு சொன்னார்கள் இந்த எமர்ஜென்ஸி 10 வருஷம் நீடிக்கும் என்று; அது இன்னும் நீடிக்கும் என்று சொல்லி, எலெக்ஷன் வேண்டாம், காங்கிரஸே ஆட்சியில் நிரந்தரமாக இருக்கலாம் என்பார்கள். ஆகவே, இந்தப் பேச்சுக்களையெல்லாம் விட்டு விட்டு, உபதேர்தலை நல்ல



29th March 1963] *[திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்]*

முறையிலே நடத்த வேண்டும். பேச்சு உரிமை பரிபூரணமாகக் கொடுக்க வேண்டும். பாதுகாப்பு சட்டம் இருக்கிறது. அதன் கீழ் எந்த காரணத்திற்காகவும் நடவடிக்கைகள் எடுத்து விடலாம். ஆகவே, தேர்தல் சம்பந்தப் பட்டவரை பரிபூரண சுதந்திரம் கொடுத்து அதை நடத்த வேண்டும்.

கடைசியாக ஒரு வேண்டுகோள் அமைச்சருக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர்களோடு சென்ற ஐந்து வருஷமாகப் பழகி இருக்கிறேன். அவர்கள் குணம் தெரியும். அவரை இந்த சபையின் ஜாம்பவான் என்று கூடச் சொல்லலாம். அவரிடம் சொல்லலாம் என்று சொல்லுகிறேன். சென்ற சில தினங்களாக அவர்கள் எங்களைக் குத்தலாகப் பேசுகிறார்கள். அப்படிப் பேசவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பரஸ்பர அபாண்டமாக இருந்தால், அது பற்றிக் கவலையில்லை. கனம் அங்கத்தினர்கள் என்னைப் பற்றிச் சொன்னால் பரவாயில்லை. ஆனால், அவர்கள் அரசாங்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, அபாண்டமாகக் குற்றம் சாட்டினால், திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதை குத்தலாகப் பேசியதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** அபாண்டம் ஒன்றுமில்லை உள்ளபடி நடந்ததைச் சொல்லவேண்டியிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** ஒரு சம்பவத்தையும் இரண்டுபேரும் ஒத்துக்கொள்ளவில்லையே.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** அரசாங்கம் என்று ஏற்பட்டால், நல்ல பதில்களைச் சொல்லத்தான் வேண்டும். ஆனால், உள்ளதைச் சொன்னால், அதற்கு கிண்டல் பண்ணினால், அது சரியாக இருக்காது என்பதை . . . .

**கனம் சபாநாயகர் :** கிண்டல் ஒன்றும் கிடையாது; அதை அப்படி சொல்ல முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் தப்பு என்று சொல்கிறார்கள், அவர்கள் சரி என்று சொல்கிறார்கள். அதைக் கிண்டல் பண்ணுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கடைசியாக ஒரு வேண்டுகோள் . . . .

**கனம் சபாநாயகர் :** என்ன வேண்டுகோள்?

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். பழைய முதுகளத்தூர் சம்பவம் சம்பந்தப்பட்ட கைதிகள் ஒரு சிலர் இன்னும் சிறையில் இருக்கிறார்கள். இன்றைக்கு முதுகளத்தூரில் இரண்டு சமூகத்தினரிடையேயும் சுமுகமான உறவு ஏற்பட்டு அவர்கள் நல்ல படியாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் இருப்பது 15, 16 கைதிகள் தான். ஆகவே, அமைச்சரவர்கள் கருணை கூர்ந்து அவர்களையும் விடுதலை

*[திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்]* [29th March 1963

செய்யவேண்டும், அதன் மூலம் அந்தப் பிராந்தியத்திலே இன்றைக்கு இருக்கும் சுமுகமான நிலைமை நீடித்து நிலவ உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The hon. Member asked for five minutes. Seven minutes are over now. The hon. Member has now extended the extension time (laughter).

*திரு. ஆர். வி. சுவாமிநாதன் :* கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன் பேசிய எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் திரு. மூக்கையா தேவரும் திரு. சசிவர்ணத் தேவரும் மதுரை ஜில்லாவில் உரப்பனூர் துப்பாக்கிப் பிரயோகம் பற்றிப் பேசினார்கள். அதைப் பற்றி நானும் ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். சில திங்களுக்கு முன்னால் கேள்விகள் எழுந்த போது கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் பதில் சொன்னார்கள். நான் அப்பொழுது சபையில் இல்லை. பத்திரிகைகளில் அவர் பதில்களைப் படித்துப் பார்த்தேன். அவர்களுக்குக் கிடைத்த இன்பர்மேஷனை வைத்து அவர்கள் சொன்னார்கள். அதற்கு மேல் அவர்களால் சொல்ல முடியாது. சம்பவம் எவ்வளவு தூரம் உண்மையாக விளக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய அவர்கள் மேலும் ஏராளமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். கொடுத்திருக்கிற தகவல்கள் சரியானபடி கொடுக்கவில்லை என்றுதான் சொல்லுவேன். ஜனங்களிடமும் அந்த அபிப்பிராயம் இருக்கிறது. அங்கே நடந்தது என்ன? ஒரு கிராமத்தில், கண்மாய் சம்பந்தமாக, இரண்டு சமூகத்தினர் இல்லை, ஒரே சமூகத்தினரிடையே, வெகுநாட்களாக, 20, 30 வருஷங்களாக இருந்த பூசல் காரணமாக எழுந்த ஒரு சம்பவம். அந்த மாதிரிச் சம்பவம் எவ்வளவோ தடவைகள் ஏற்பட்டிருக்கின்றன. இது புதிதல்ல. இந்த நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, மூன்று பேர்களைச் சுட்டுத்தள்ள வேண்டிய அவசியம் இருந்ததா? இந்த மாதிரி சம்பவம் அங்கே, அந்த சமூகத்தினரிடையே, அந்த கிராமத்தில் புதிதாக நடந்ததா? துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு, அதைச் சமாளிக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதையெல்லாம் அமைச்சரவர்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களிடம் நம்பிக்கை இருக்கிறது எனக்கு, ஜனங்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது. உண்மையிலேயே அதிகாரிகள் தவறு செய்து இருந்தால் அவர்களை ஷீல்ட் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இது ஒன்றும் அரசியல் விஷயமும் அல்ல. அங்கே பல சமூகத்தினரிடையே ஏற்பட்ட கலவரமா இது. ஒரே சமூகத்தினரிடையே, சொந்தக்காரர்களிடம் உள்ள மனத்தாங்கல் காரணமாக, வெகு நாட்களாக உள்ள பூசல் காரணமாக ஏற்பட்ட ஒரு கலவரம். அதைச் சமாளிக்க கண்ணீர் புகை, "டீர் காஸ்", உபயோகித்து இருக்கலாம். உடனடியாக துப்பாக்கி எடுத்து சுட்டு இருக்கிறார்களே அது அவசியமற்றதில்லையா? ஜனங்களிடையே உள்ள அபிப்பிராயம், இதை துப்பாக்கி இல்லாமலே போலீஸ்காரர்கள் சமா



29th March 1963] *[திரு. ஆர். வி. சுவாமிநாதன்]*

ளித்து இருக்க முடியும்; ஆனால், அவர்கள் அத்து மீறி, மிதமிஞ்சி நடந்து விட்டார்கள் என்றுதான் கருதுகிறார்கள். அந்த ஜில்லா சூப்பரின்டெண்டென்ட் ஆப் போலீஸ் சுலபமாகச் சமாளித்து இருக்க முடியும்; ஆனால், அவருக்கு திறமை இல்லாத காரணத்தினால், நிலைமை முற்றக் கூடிய அளவுக்கு விட்டுவிட்டு கடைசியில் தவறு செய்துவிட்டார்கள் என்ற அபிப்பிராயம் மக்களிடையே நிலவுகிறது. துரதிர்ஷ்டவசமாக நான் சில விஷயங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது, காங்கிரஸ்காரன் என்ற முறையில். ராமநாதபுரத்தில் நடைபெற்ற முதுகளத்தூர் கலவரத்தை ஞாபகப் படுத்திக் கொள்ளவேண்டும். அதைப் பற்றி எங்களுக்கெல்லாம் மறந்து போய் விட்டது. அங்கே அப்பொழுது நடந்தது, இரண்டு சமூகத்தினரிடையே, ஹரிஜனங்களுக்கும், தேவர்மார்களுக்கும். ஆண்டவன் கிருபையால், இன்றைக்கு அந்த இரு சமூகத்தினரும் நல்லவிதமாக இருக்கிறார்கள். ஜனங்களுக்கும் அதைப் பற்றியெல்லாம் மறந்து போய்விட்டது. காங்கிரஸ்காரர்களும் மறந்து விட்டார்கள். மற்றவர்களும் மறந்து விட்டார்கள். ஆனால், இன்னும் சில அதிகாரிகள் மட்டும் அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். எங்காவது ஒரு ஊரில் அந்த சமூகத்தினர் சம்பந்தப்பட்ட தகராறு என்றால், உடனே இவர்கள் முதுகளத்தூரில் கலவரம் செய்த சமூகத்தினரல்லவா என்று நினைக்கிறார்கள். அந்த எண்ணத்தை என் போன்றவர்களும்—நான் காங்கிரஸை பெரிது, என்று நினைப்பவன்—காங்கிரசுக்காக பல ஆண்டுகளாக உழைத்து வருபவன்—அதிகாரிகளிடமிருந்து நான் முன் கூறிய எண்ணத்தைப் போக்க முடியவில்லை என்பதை கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு உரப்பனூர் சம்மந்தமாக ஆர்.டி.ஓ. விசாரணை நடந்து வருகிறது. மற்ற அங்கத்தினர்கள் போல எனக்கு அதிகாரிகளிடம் அவநம்பிக்கை இல்லை. அதிகாரிகளிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பொறுத்து இருந்து பார்க்கலாம்; அதிகாரிகள் சரியாக விசாரணையை நடத்தவில்லையென்றால், அதைப் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம். இன்றைக்கு எனக்கு அவர்களிடமும், அவர்கள் ரிபோர்டிலும் நம்பிக்கை இருக்கிறது. நடக்கும் விசாரணை அது ஜுடிஷியல் என்க்வயரியோ அல்லது சாதாரணமானதோ, எப்படியும் விசாரணை நடக்கட்டும். அதில் தவறுகள் ஏற்பட்டால் அதைத் திருத்திக்கொள்ள, அதை எடுத்துக் காட்ட எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நியாயமாக ஜனங்களிடையே இருக்கும் அபிப்பிராயம் என்னவென்றால், இந்த மாதிரி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய சந்தர்ப்பமே தேவை இல்லை, சாதாரணமாகவே அதை சமாளித்து இருக்க முடியும் என்பதுதான். அது ஊர்ஜிதப்படுத்தப் பட்டால், அப்படிப் பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிகாரிகள் தவறு செய்தது இல்லையா, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தது இல்லையா, ஐ.சி.எஸ். அதிகாரிகளும், மற்ற போலீஸ் அதிகாரிகளும் குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வீட்டிற்கு

அனுப்பப்படவில்லையா? நம் காங்கிரஸ் அரசாங்கம் வந்த பிறகு அம்மாதிரி நடக்கவில்லையா? ஆகவே, இந்த சம்பவத்தில், மதுரை ஜில்லா அதிகாரிகள் தவறாக நடந்திருந்தால் தயவு தாட்சண்யம் இல்லாமல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அம்மாதிரி செய்தால் மக்கள் மத்தியிலே நல்ல அபிப்பிராயம் ஏற்படும். முன்பு நடந்த முதுகளத்தூர் பற்றிய சம்பவத்தை நாங்கள் மறந்துவிட்டோம். பொதுமக்களும் மறந்துவிட்டார்கள். மதுரை, ராமநாதபுரம் தேவர்மார்கள் சமூகத்தின் மத்தியில் மட்டும் ஏன் அரசாங்கம் இந்தமாதிரி நிலைமை ஏற்படும்படி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? எத்தனையோ சமூகத்தினரிடையே எத்தனையோ கலவரங்கள் நடைபெறுகின்றன. அங்கெல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. தேவர்மார்கள் என்றால் ஆடுமாடு மாதிரி சுட்டுக் கொல்லலாம் என்ற நிலைமையா? இந்த மாதிரி அபிப்பிராயம் நாட்டில் நிலவி வருகிறது. இந்த அபிப்பிராயத்தைப் போக்கவேண்டும். இதுபற்றி சரியான விசாரணை செய்யவேண்டும். காங்கிரஸ் அரசாங்கத்தின் பேரிலும், காங்கிரஸ் மந்திரி சபையின் பேரிலும் உள்ள 'இன்டரெஸ்டினால்' தான் இதைச் சொல்லுகிறேன். அவர்கள் மீது உள்ள அக்கறையினால் தான் இதைச் சொல்லுகிறேன். இந்த விஷயம் நன்றாக விசாரிக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும். காங்கிரஸ் அரசாங்கத்தில், அதுவும் திரு. காமராஜ் தலைமையில் நடக்கும் காங்கிரஸ் அரசாங்கத்தில், கனம் மந்திரி பக்தவத்சலம் அவர்களும் தகுந்த நடவடிக்கை எடுத்து, அதிகாரிகள் தவறு செய்திருந்தால் அவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்ற நீதியை, பெருமையை நிலைநாட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த விஷயத்திற்கே அதிக நேரம் எடுத்துக்கொண்டுவிட்டேன். விவசாயிகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எந்த வரி போட்டாலும் எது செய்தாலும், அது விவசாயிகளை பாதிக்கக்கூடியதாகத் தான் இருக்கிறது. விவசாயிகளுக்கு உற்பத்தி செய்வதிலே இப்பொழுது அதிக உற்சாகம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்வதற்கான செலவு மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்த செலவைக் குறைக்க வேண்டும். உற்பத்தியாகிற பொருள்களை விற்பதற்கு ஒரு மினிமம் பிரைஸ் காரண்டி இருக்கவேண்டும். மினிமம் பிரைஸ் காரண்டி இல்லாவிட்டால், அவர்கள் எப்படி உற்சாகத்துடன் உற்பத்தி செய்யமுடியும்? உற்பத்தி செய்த பொருள்களின் விலை குறைந்துபோய் விட்டது. அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலைக்கும் கீழே இப்பொழுது விலை இறங்கிவிட்டது. அந்த விலைக்கு வாங்குவதற்கும், விற்பதற்கும் ஆள் கிடையாது. இம்மாதிரி இருந்தால் விவசாயிகள் எப்படி வரி கொடுக்க முடியும்? அவசரத் தேவையை எப்படி சமாளிக்க முடியும்? மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. மற்ற ஜில்லாக்களிலும் இருக்கும் என்று நினைக்கிறேன். விவசாயிகள் உற்பத்திப் பொருள்களை விற்றுத்தான் வரி கட்டவேண்டும்.



அவர்கள் உற்பத்திப் பொருள்களை சரியான விலைக்கு விற்க முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் நிர்ணயித்துள்ள அந்த விலைக்குக்கூட வாங்குவதற்கு ஆள் இல்லை. அந்த நிலைமையை மாற்றவேண்டும். இதற்கு என்ன காரணம் என்று அரசாங்கம் கண்டுபிடித்தாக வேண்டும். இந்த நிலைமை நீடித்தால், இந்த வருஷமே உணவு உற்பத்தி பாதிக்கப்படலாம் என்பதை ஞாபகப்படுத்திக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ம. கமலநாதன்:** கனம் சபாநாயகர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதை கச்சேரி முடிந்து மங்களம் பாடும் கட்டம் என்று கூட சொல்லலாம். அந்த அளவில் இந்த மன்றத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து, அதன் மீது நடைபெற்ற பொது விவாதத்திலும் சரி, மான்யங்கள் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரபணைகளை ஆதரித்து சொன்ன கருத்துக்களையும், மான்யத்தை ஆதரித்து ஆளும் கட்சித் தோழர்கள் சொன்ன கருத்துக்களையும், எல்லா கருத்துக்களையும், நாங்கள் எங்கள் தொகுதிகளைப்பற்றி சொன்ன குறைகளையும், சில ஆலோசனைகளையும், வேறு சிலபல நல்ல கருத்துக்களையும் நாங்கள் சட்ட மன்றத்தில் எடுத்து வைத்தபோது, அவைகளையெல்லாம் அமைச்சர்கள் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால், சென்ற ஆண்டிலும், இதைப்போலத் தான் செய்தோம். முன்பு எடுத்துச் சொன்னது ஏதாவது இந்த ஆண்டிலே நடைபெற்றிருக்கிறதா என்று பார்த்தால், ஒன்றும் இல்லை. பொதுவாக இங்கு சொல்லுவதில் ஒன்றும் பலன் இல்லை என்ற அவநம்பிக்கையில் தான் நாங்கள் இருக்கிறோம். முன்பிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்போதிருந்த அமைச்சர் ராமநாதபுரம் ராஜா அவர்கள் இந்த மன்றத்திலே அங்கத்தினர்களால் சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி, பரிசீலனை செய்து, அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பார்கள் என்று கூட கேள்விப்பட்டேன். அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் நமது அமைச்சர்கள் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்கள் ஒன்றாவது ஏற்றுக் கொள்ளப்பட்டதா என்று பார்த்தால், எனக்கு தெரிந்தவரையில் ஒன்றுமே கிடையாது. அதற்கு மாறாக எங்கள் கட்சி உறுப்பினர்கள் சொல்லிய கருத்துகளுக்குப் பதில் சொல்லுகிற நேரத்தில், குறிப்பாக எங்கள் கழக உறுப்பினர்கள் திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. மதியழகன், திரு. புலவர் கோவிந்தன் ஆகியோர்களுக்கு பதில் சொல்லக்கூடிய நேரத்தில், கனம் நிதி அமைச்சர் அவர்கள், கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லுவதை நான் ஸீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். திரு. மதியழகன் அவர்கள் ஆவேசமாகப் பேசினார், உணர்ச்சியோடு பேசினார் என்று சொல்லி அவர் பேச்சுக்கு முற்றுப்புள்ளி

[திரு. ம. கமலநாதன்] [29th March 1963

வைத்துவிடுவார். புலவரா, அவர் மிகத் தெரிந்தவர் என்ற அளவிலே சொல்லி நிறுத்திவிடுவார். பேசும்போது அங்கத்தினர்கள் என்ன கருத்துக்களை சொன்னார்களோ அந்தக் கருத்துக்களுக்கும், அவர்கள் சொன்ன புள்ளிவிவரம் சரிதானா, இல்லையா என்று அந்த அளவிற்கும் மறுத்துப் பதில் சொல்லுவதில்லை.

கல்வி மான்யத்தின் மீது பேசுகையில் ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. கோசல்ராம் அவர்கள் கல்வி இலாகா இயக்குநரைப் பற்றி ஒரு சில குறைகளைச் சொன்னார்கள். எப்படி ஒரு போலீஸ் ஸ்டேஷனில் ஒரு போலீஸ்காரர் செய்த தவறை வெளியே காட்டிக் கொள்ள முடியாமல், சப் இன்ஸ்பெக்டர் டிபார்ட்மெண்டுக்காரரை காட்டிக்கொடுக்கக்கூடாது என்ற அளவுக்கு அந்த போலீஸ்காரருக்கு பாதுகாப்பு கொடுக்கிறாரோ, அதே போல கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி இலாகா இயக்குநருக்கு பாதுகாப்பு அளிக்கும் முறையிலே 'அவர்கள் வெளியே போவதில்லை, போவதில்லை என்று என்னிடம் சொல்லுகிறார்கள், பாதுகாப்பு நிதிக்கு கட்டாயமாக நிதி வசூலிக்கவேண்டாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்ற அளவுக்குப் பதில் சொன்னார்கள். நான் சில ஆதாரங்கள் வைத்திருக்கிறேன். தர்மபுரி கல்வி மாவட்டத்தில் சுமார் 3,000, 4,000 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். சென்ற மாதம் கல்வி இலாகா இயக்குநர் வருகிறார் என்ற காரணத்திற்காக அங்குள்ள அதிகாரிகள் அவர் வருகிற போகிற செலவுக்காக ஒரு ஆசிரியருக்கு ரூ. 5 என்றும், தேசிய பாதுகாப்பு நிதிக்காக ரூ. 5 என்றும் கொடுக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தி வசூலித்து, சுமார் ரூ. 30,000, 40,000 அங்கே சேர்த்து வைத்திருக்கிறார்கள். ஒரு வேளை அமைச்சர் சொல்லிவிட்டார் என்ற காரணத்தினாலோ, அல்லது கல்வி இலாகா இயக்குநர் அங்கு போகமாட்டார் என்று தெரிந்ததாலோ அவர்கள் அதைத் திருப்பிக் கொடுத்தால் நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்போம். இப்படியெல்லாம் நிலைமை இருக்கும்பொழுது, அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மன்றத்தில் கூறப்பட்ட கருத்துக்களின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் என்று நினைக்கிறேன். அமைச்சர் ராமையா அவர்கள் எங்கள் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். எனது தொகுதியிலே சுமார் 32 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் சிலபல மனுக்கள் கொடுக்கப்பட்டன. இங்கு ஏரி கட்டவேண்டுமென்று சொன்னால், எங்கே கட்டவேண்டுமென்று கேட்டு, அந்த இடம் இரண்டு மைல், மூன்று மைல் தூரத்தில் இருந்தால்கூட வெய்யிலாக இருந்தாலும், நடந்து சென்று இடத்தைப் பார்த்து அந்த இடத்தில் கட்டலாம், வாய்ப்பு இருக்கிறது, கட்டுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்ற அளவுக்குச் சொன்னார்கள். அவர் நல்ல நினைவு வைத்துக்கொள்ளக் கூடியவர். இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளிக்கையில் கூட



29th March 1963] [திரு. ம. கமலநாதன்]

சொன்னார் "கிருஷ்ணகிரி தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது பஸ் ரூட் போகாத ஒரு பாதையில் ஐந்து மைலுக்கு தார் போட்டிருப்பதைக் கண்டேன். அந்த ரூட்டில் பஸ் விடுங்கள் என்று சொன்னார்கள்" என்று அந்த அளவுக்கு அவர் நினைவு வைத்துக்கொண்டிருக்கிறார். அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா, மக்கள் கேட்டுக்கொண்ட ஒரு வேலைத் திட்டம் இதுவரையில் ஏதாவது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால்; இல்லை என்று தான் சொல்லவேண்டும். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் தங்கள் நெஞ்சின் மீது கையை வைத்துச் சொல்லட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பர்கூர் பஞ்சாயத்திலே பொது மக்கள் சௌகரியத்திற்காக ஒரு தீர்மானம் போடப்பட்டது. ஒரு சிறிய விஷயம் தான். எக்ஸ்பிரஸ் பஸ்ஸை பர்கூரில் நிறுத்தவேண்டும் என்று அந்த ஊரிலுள்ள மக்கள் அமைச்சர் அவர்கள் வந்தபொழுது முறையிட்டார்கள். பஞ்சாயத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பஞ்சாயத்து யூனியனிலும் தீர்மானம் போடப்பட்டது. பர்கூர் வியாபார ஸ்தலம். பர்கூரிலிருந்து அகில இந்தியா முழுதும் ஜவுளிகளை தூக்கிக்கொண்டு போய் வியாபாரம் செய்கிறார்கள். அங்குள்ளவர்கள் அடிக்கடி வெளியூருக்குச் செல்லுகிறார்கள். அது பெரிய வியாபார ஸ்தலம். பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் உள்ள இடம். அந்த இடத்தில் பஸ்ஸை நிறுத்தச் சொல்லவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டார்கள். அமைச்சரும் நிறுத்தச் சொல்லுகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் எக்ஸ்பிரஸ் பஸ் நிறுத்துவதற்கு சிலபல கண்டிஷன்கள் இருக்கின்றன. 25 மைல்கள் தூரத்தில் தான் நிறுத்தப்படும் என்று சொன்னார்கள். கவர்ன்மெண்டு ஸ்டேட் பஸ்ஸை எடுத்துக்கொண்டால் 10 மைல் தூரத்தில் நிற்கிறது. வாணியம்பாடிக்கும்—ஆம்பூருக்கும், ஆம்பூருக்கும்—திருப்பத்தூருக்கும் 10 மைல் தூரம்தான் இருக்கும். அங்கெல்லாம் பஸ் நிறுத்தப்படுகிறது. தனிப்பட்ட முதலாளிகள் நடத்தும் பஸ்களை எடுத்துக்கொண்டால்; கிருஷ்ணகிரி—சேலம் பஸ் அடுத்தாற்போல் ஏழாவது மைலில் உள்ள காவேரிப்பட்டணத்திலும் அதற்கடுத்த ஏழு மைலில் உள்ள காரமங்கலத்திலும் நிறுத்தப்படுகிறது. பொது மக்கள் விருப்பத்திற்கு இணங்க இதையும் அமைச்சர் அவர்கள் செய்திருக்கலாம். ஆனால்; அதை அவர் ஏன் செய்யவில்லை? எதிர்க்கட்சிக்காரரின் தொகுதியாக இருப்பதுதான் காரணமா? அமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது அந்தத் தொகுதி காங்கிரஸ்காரர் தொகுதி, காங்கிரஸ்காரருக்கு மீண்டும் கிடைக்கவேண்டுமென்பதற்காக அம்மாதிரி அப்பொழுது கூறினாரா? பிறகு எதிர்க்கட்சிக்காரர் கைக்கு இந்தத் தொகுதி போய்விட்டது என்ற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் கொடுத்த உறுதியை நிறைவேற்றவில்லையா? மக்கள் சொன்னதை செய்யவில்லை என்றால் நாங்கள் எதற்காக இங்கு வரவேண்டும்? எதற்காக இங்கு கருத்துக்களைச்

[திரு. ம. கமலநாதன்] [29th March 1963

சொல்லவேண்டும்? செவிடன் காதில் சங்கு ஊதுவது போன்ற அளவில் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தாகிவிட்டது, எதிர்க்கட்சியினரின் வாதத்தைக் கேட்டோம், கடைசியில் அப்ரோபிரியேஷன் பில்லை நிறைவேற்றி விட்டோம் என்ற அளவுக்கு இருந்துவிட்டால் போதுமா, குறைந்தது எங்களை எதிர்த்து போட்டி போட்ட காங்கிரஸ்காரர்களுக்கு ஓட்டு போட்டார்களே அவர்களுக்காவது செய்யுங்கள் என்று பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற ஒரு சில பல திட்டங்களைப் பற்றியும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதிய உணவுத் திட்டம், முதியோர் பென்ஷன் திட்டம், இவைகளைப் பலர் பாராட்டுகிறார்கள். உண்மையிலேயே இவைகளை, மற்ற மாநிலங்களை விட, முதன் முதலாக மேற்கொண்டதைப் பற்றிப் பாராட்டுகிறேன். இவைகள் வரவேற்கக்கூடிய திட்டங்கள்தான். ஆனால் சென்ற ஆண்டு கவர்னர் உரையின் மீது நிகழ்ந்த விவாதத்தில் திருமதி குழந்தையம்மாள் அவர்களும், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நிகழ்ந்த உரையின்போது கனம் உறுப்பினர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்களும் இந்தத் திட்டங்கள் சரிவர நடைபெறவில்லை என்று சொன்னார்கள். நாங்களும் இந்த மதிய உணவுத் திட்டம் சரிவர நடைபெறவில்லை என்று திட்டவட்டமாகச் சொன்னோம். இந்தத் திட்டங்கள் வரவேற்கவேண்டிய திட்டங்கள்தான் என்றாலும் அவை சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லி சில யோசனைகளையும் சொன்னோம். இந்த கேர் Care ஸ்தாபனத்தின் உதவி இல்லையானால் இந்த மதிய உணவுத் திட்டம் நிச்சயமாக நடக்க முடியாது, வெற்றி பெறாது. அப்படித்தான் இந்த முதியோர் பென்ஷன் திட்டமும். அமைச்சர் அவர்கள் ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக, பல மடங்கு செலவாகிறது. குறிப்பாகச் சொல்கிறேன், எங்கள் பகுதியில்—பாவம், பெயர் சொன்னால் அந்த மக்களும் பாதிக்கப்படுவார்கள் என்று நினைக்கிறேன்—ஒரு பஞ்சாயத்தில் லாண்டு ரெவின்யூவுக்கும் அதிகமாக அங்கு முதியோர் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. இதில் செல்வாக்கோ அல்லது வேறு யாருடைய சிபாரிசின் காரணமாகவோ அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்கப்படுகிறதா தெரியவில்லை. சென்னை மாகாணத்தில் இருக்கும் அத்தனை பஞ்சாயத்துக்களிலும் அந்த பஞ்சாயத்திலுள்ள முதியோர்கள் ஆதரவற்றவர்களா என்று தெரியவில்லை. ஆகவே இதைத் தீர பரிசீலனை செய்தால் அமைச்சர் ஒதுக்கிய தொகைகூட போதுமென்று ஆகிவிடும். ஆகவே இந்த முதியோர் பென்ஷன் கொடுப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் பல மானியங்கள் மீது பல கோடி ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறோம். நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களைப் பற்றியும் சற்று கவனித்துப் பார்க்கவேண்டும். ஒரே இடத்தில் ஒரே நிர்வாகத்திலே வேலை செய்யக்கூடியவர்களிடையே பாகுபாடு இருக்கிறது. இன்றையதினம் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொள்வோம். அங்கே லோயர் டிவிஷன் கிளார்க்குகளிலே



29th March 1963] [திரு. ம, கமலநாதன்]

இரண்டு பிரிவு, பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள், கவர்ன்மெண்டு ஊழியர்கள் என்று. அங்கு வித்தியாசம் சம்பள உயர்விலே இருக்கிறது. ரூ. 90—3—120 என்று பஞ்சாயத்து யூனியன் கிளார்க்குகளுக்கு கொடுக்கப்படுகிறது. அதே சமயத்திலே கவர்ன்மெண்டு ஊழியர்களுக்கு ரூ. 90—4—120 என்று இருக்கிறது. ஒரே யூனியனிலே ஒரே நிர்வாகத்தின் கீழ் ஒரே வேலையைச் செய்யக்கூடிய கிளார்க்குகளுக்குள் இந்த மாதிரியான வித்தியாசம் இருந்தால் அவர்களுக்குள் மனக்கசப்பு இருக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதே மாதிரி ஆசிரியர்களுக்கும் வித்தியாசம் இருப்பதைப் பார்க்கிறோம். அரசினர் நடத்தும் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 140 அடிப்படைச் சம்பளம். அதே நேரத்தில் மாவட்ட உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு ரூ. 225 அடிப்படைச் சம்பளம். ஏன் இந்த வித்தியாசம்? அந்த தலைமை ஆசிரியர்களிடையே உற்சாகம் இருக்குமா? அவர்கள் எப்படியாவது மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போகத்தானே ஆசைப்படுவார்கள்? ஆகவே இந்த அடிப்படையான வித்தியாசங்கள் நீக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, விவசாய விஸ்தரிப்பு அதிகாரிக்கும் இப்படித்தான். பீல்டுமென்களாக ப்ரமோஷன் செய்யப்பட்டவர்களுக்கு 150 ரூபாய் அடிப்படைச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. நேரடியாகத் தேந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இவர்கள் இருவருமே ஒரே மாதிரியான வேலையைச் செய்பவர்கள் தான். இன்னும் சொல்லப்போனால் ப்ரமோஷனில் வந்தவர்களுக்கு—பீல்டுமென்களாக இருந்து வந்தவர்களுக்கு—அதிகமான அனுபவம் இருக்கிறது. அவர்களுக்கும் இதே அடிப்படைச் சம்பளம் கொடுத்தால் நிர்வாகத்திலே ஒழுங்கான முறை ஏற்பட்டு நிர்வாக யந்திரம் நல்ல முறையில் செயல்படும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சுகாதார அமைச்சர் அவர்கள் இங்கே கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் சொன்னார்கள். கம்பவுண்டர்கள் ஆஸ்பத்திரிகளிலே இருப்பதில்லை என்பதற்குக் காரணம் கம்பவுண்டர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இப்போது சுமார் 250 பார்மஸிஸ்டுகள் பயிற்சி பெற்று வருகிறார்கள். வந்தவுடன் காலியாக இருக்குமிடமெல்லாம் பூர்த்தி செய்யப்படுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் சுமார் 250 பார்மஸிஸ்டுகள் பயிற்சி பெற்று வேலைக்குப் போகாமல் வேறு துறைகளுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். காரணமென்ன? ஒரு ஆண்டு பயிற்சி பெற்ற பார்மஸிஸ்டுக்கும் 90 ரூபாய்தான் அடிப்படைச் சம்பளம், இரண்டு ஆண்டுகள் பயிற்சியுடன் மூன்று மாதம் பிராக்டிகல் டிரெயினிங் பெற்ற பி. பார்மஸிஸ்டுக்கும் 90 ரூபாய்தான் அடிப்படை சம்பளம் என்றால் எந்த பார்மஸிஸ்டு பார்மஸிஸ்டாகப் பணியாற்ற வருவார்கள்? இந்த அடிப்படைச் சம்பள விகிதங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. ம. கமலநாதன்] [29th March 1963

எப்போதும் பேசும்போது பொதுவாக நான் ஒன்று சொல்வது உண்டு. சேலம் மாவட்டம் மற்ற மாவட்டங்களை விட பின் தங்கி இருக்கிறது. தென் சேலத்தை விட, வட சேலம் மிகமிக பின் தங்கி இருக்கிறது. மற்ற மாநிலங்களில் இருப்பவர்கள் இந்தப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் ஏன் மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டம் இப்படி பின்தங்கி இருக்கிறது, அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று கேட்கலாம். கல்வித் துறையில் சேலம் மாவட்டம் முன்னேறுவதற்குரிய முறையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருங்காலத்திலாவது அமைச்சர்கள் நாங்கள் சொல்லும் கருத்துக்களுக்கு செவிமடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கோசல்ராம்: மிஸ்டர் ஸ்பீக்கர், ஸார், அரசாங்கத்திற்கு இந்த நிதியை அப்ரோபிரியேட் appropriate பண்ணுவதற்காகக் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நினைக்கிறேன்.

டாக்சேஷன் இல்லாமல் எந்த அரசாங்கமும் நடக்க முடியாது. ஆகவே வரி எம்மாதிரி போடப்படவேண்டும், எம்மாதிரி வசூலிக்கப்படவேண்டும் என்பது தான் பிரச்சினை. வரியே வேண்டாமென்று சொல்லிக்கொண்டிருந்தால் அது ஜனநாயக நாட்டில் யாரும் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு சம்பிரதாயம். அதே சமயத்தில் மக்களிடமிருந்து வசூலிக்கிற வரியை சிக்கனமாகச் செலவிடவேண்டுமென்பது தான் அரசாங்கத்தில் பதவியில் இருக்கக்கூடியவர்கள் யோசிக்கவேண்டிய விஷயம். வருஷா வருஷம் சிக்கனத்தைக் கையாண்டால், குறிப்பாக இந்த நேரத்தில்--எமர்ஜென்ஸி காலத்தில்—அப்போது பிரிட்டிஷ் பார்லிமெண்டில், யுத்த காலத்தில் அவர்கள் போடாத டாக்ஸ் இருக்க முடியாது. அதே நேரத்தில் அதைச் சிக்கனமாக செலவழிப்பதற்காக பார்லிமெண்டில் ஒரு கொள்கையையும் கொண்டுவந்து, ஒரு கமிட்டியை —விஜிலென்ஸ் கமிட்டியை கூட்டி இருந்தார்கள். இப்போது அரசாங்கத்திற்கு ஊதாரித்தனமாக செலவிடும்படியான நிலைமை இருந்தால், அதைக் கவனிப்பதற்கு பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி இருக்கிறது. எஸ்டிமேட்ஸ் கமிட்டி இருக்கிறது. இவைகள் எல்லாம் போஸ்டு-மார்ட்டம் தான். அவைகள் அது சரி இல்லை, அது இப்படி, இது இப்படி என்று சொல்லி வருங்காலத்திலே--அதாவது பின்னாலே செய்யக்கூடிய விஷயங்களைப் பற்றித் தான் யோசனை சொல்கின்றன. ஒரு விஜிலென்ஸ் கமிட்டி இருக்குமானால் வசூலிக்கும் வரிப்பணம் மிகச் சிக்கனமாகச் செலவிட நல்ல முறையில் இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த அரசாங்கம் ஜனநாயகத்தில் மிக நம்பிக்கை கொண்ட அரசாங்கம். மகாத்மா காந்தியடிகள் சொன்னதை எல்லாம் சட்டமாக நிறைவேற்றிக்கொண்டு வருகிற அரசாங்கம். நாளுக்கு நாள் மக்களுடைய பிரதிநிதிகள் இடத்தில் இந்த அரசாங்கத்தில் பதவியில் இருப்பவர்கள் நம்பிக்கையிழந்து கொண்டே வருகிறார்கள். அது எப்படி என்றால் இதற்கு முன்னே



29th March 1963] [திரு. கே. டி. கோசல்ராம்]

தாலூகா ரீதியில், ஜில்லா ரீதியில், மாகாண ரீதியில் பல்வேறு கமிட்டிகள் செயல்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு தனிப்பட்டவர் ஒரு பஸ் ரூட்டு வாங்கவேண்டுமென்று சொன்னால் அதையெல்லாம் கவனிக்க அந்த கமிட்டிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த கமிட்டிகளிலே சட்டசபை அங்கத்தினர்கள், மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகித்தார்கள். ஆனால் இப்போது அதையெல்லாம் தனிப்பட்ட அதிகாரிகளிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் எங்கே அவர்கள் லஞ்சம் வாங்கிவிடுவார்களோ என்று நினைக்கின்றது. ஆனால் அவர்கள் அந்தவிதமான தவறு செய்தால், மக்களே ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை பாகுபடுத்திவிடுகிறார்கள். நிச்சயமாக நாம் பார்க்கிறோம். ஆனால், மக்கள் ஆட்சி என்று சொல்லக்கூடியவர்கள், மக்களிடத்திலே வோட்டு வாங்கி, அதன் மூலமாக அமைச்சர் பதவியில் இருக்கக்கூடியவர்கள் அம்மாதிரி நானமிஷியல் மீது நம்பிக்கை இழந்து வருவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ட்ரெயினிங் ஸ்கூலில் பிள்ளைகள் சேர வேண்டுமென்றால் 200 ரூபாய் கொடுத்தாலொழிய அட்மிஷன் கிடைக்காது என்று நிலை ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. அதுபற்றி நான்கைந்து கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். கல்வி மானியத்தின்மீது பேசியபோதும் பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள்—இதற்கு முன்னால் நானமிஷியல் கமிட்டி இருந்தது. அந்தக் கமிட்டியின் மூலமாக செலக்ஷன் நடந்து. அந்த செலக்ஷன் மூலமாக ஓரளவு தேசியப் பண்பும் இருந்தது. ஆனால், இன்றைய நிலை என்ன? பேசிக் ட்ரெயினிங் ஸ்கூல்கள், தேசியத்திற்குப் புறம்பாக, நாட்டுப் பிரிவினைப் பள்ளிக்கூடங்களாக மாறிக் கொண்டு வருவதையும் பார்க்கிறோம். ஹைஸ்கூல்களை நடத்துவதற்கு, முன்பு ஜில்லா போர்டில் ஒரு எஜுகேஷன் கௌன்சில் இருந்தது. அதன் மூலமாக மக்கள் பிரதிநிதிகள் எல்லா இடங்களிலும் போய் 'செக்' பண்ணிவந்தார்கள். இப்பொழுது யாரோ ஒரு அதிகாரி செய்யவேண்டியிருக்கிறது. கலெக்டருக்கு ஏராளமான வேலை இருக்கிறது. அவர் டெவலப்மெண்ட் வேலையைப் பார்ப்பதா? கலெக்டர் வேலையைப் பார்ப்பதா? அவருக்கு எத்தனை எத்தனையோ வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றோடு கூட இப்பொழுது நாம் கல்வியையும் பார்க்கச் சொல்கிறோம். எப்படிப் பார்க்க முடியும்? பொதுமக்களின் பிரதிநிதிகள் ஜில்லா போர்டில் இருந்தார்கள். அதில் கல்விக்காகத் தனிக் கமிட்டி இருந்தது. அந்தக் கமிட்டிக்குப் பல அதிகாரங்கள் இருந்தன. அதிலுள்ளவர்கள் பள்ளிக்கூடங்களை கவனித்து வந்தார்கள். அதையெல்லாம் ஒரு கலெக்டர் பார்ப்பதென்றால் அது எப்படி சாத்தியமாகும்? தேசப் பிரிவினை இயக்கத்தின் வாசனை பள்ளிக்கூடங்களில் வருவதாக சொல்லப்படுகிறதே, அதற்கெல்லாம் என்ன காரணம் என்று கண்டறியவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் மீது நம்பிக்கை வைக்காமல் அதிகாரிகள் மீதே இந்த அரசாங்கம் நம்பிக்கை வைத்துக்கொண்டிருப்பது நல்லதல்ல. காந்தியப் பண்பாட்டில் பிறந்த நாம், காந்தீயத்தின் மீது நம்பிக்கை கொண்ட நாம், மக்கள் பிரதிநிதிகள் மீது நம்பிக்கை

[திரு. கே. டி. கோசல்ராம்] [29th March 1963

வைக்காமல் இருப்பது நல்லதல்ல. மக்கள் தவறு செய்யலாம். மக்கள் பிரதிநிதியும் தவறு செய்யலாம். மந்திரியேகூட தவறு செய்யலாம். யாரோ ஒரு மந்திரி எங்கோ தவறு செய்கிறார் என்றால், அதற்காகக் காங்கிரஸை இராஜிநாமா செய்யவேண்டுமென்று சொன்னால் அது எவ்வளவு கேலிகூத்தோ யாரோ ஒரு சட்டசபை மெம்பர் தவறு செய்கிறார் என்றால் அதற்காகச் சட்டசபையையே கலைத்து விடவேண்டும் என்று சொன்னால் அது எவ்வளவு கேலிக் கூத்தோ, அதே மாதிரி தான் நானபிஷியல் கமிட்டி போட்டால் அதில் யாராவது தவறு செய்துவிடுவார்கள் என்று நினைப்பதும். நானபிஷியல் கமிட்டிகள் எல்லா ரீதியிலும் இயங்கி வந்தன. கனம் அமைச்சர் ஸ்ரீமான் பக்தவத்சலம் அவர்கள் ரொம்ப நாட்களுக்கு முன்னால் 'கல்விக்கு ஒரு கமிட்டி வைக்கவேண்டிய தவசியம்' என்று சொன்னார்கள். ஜில்லா ரீதியாக கமிட்டி இருப்பதும் அவசியம் என்று அவர்கள் சொன்னார்கள். டிரெயினிங் ஸ்கூலைப் பற்றி ஏகப்பட்ட சமாசாரம். எங்கு போனாலும் பணம் ப்ரைவேட் ஸ்கூலுக்கு போனாலும் பணம். சர்க்கார் ஸ்கூலுக்குப் போனாலும் பணம். அந்த நிலை ஏற்படக்கூடாது. எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியின் மூலமாகத் தான் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இன்ஜினியரிங் காலேஜ், மெடிகல் காலேஜ், இன்னும் சில ப்ரைவேட் ஸ்கூல்கள் ஆகியவற்றில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அக் கமிட்டிகளின் மூலமாக அட்மிஷன் இருப்பதால் கூடுமானவரையில் தவறு இல்லாமல் தடுக்க முடிகிறது. கடைசியாக 'கண்ட்ரோல்' அரசாங்கத்திற்கு இருக்கிறது என்றாலும், அது மட்டும் போதாது. நானபிஷியல் கமிட்டியாக இருந்தால் அவர்கள் பொது மக்களுக்குப் பயந்து ஆகவேண்டியிருக்கிறது என்பதையும் மனதிலே கொண்டு, இம்மாதிரி கமிட்டிகள் மூலமாகச் செயல்படுவது நலம் என்று நான் மீண்டும் மீண்டும் அமைச்சரவர்களிடத்தில் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

சேல்ஸ் டாக்ஸைப்பற்றி அமைச்சர் அவர்கள் பேசும்போது, "டாக்ஸ் எவேஷன் குறைந்திருக்கிறது" என்று சொன்னார்கள். சேல்ஸ் டாக்ஸில் மாத்திரம் எவேஷன் இல்லாமலிருந்து கண்காணிப்பாக வசூல் செய்துவிட்டால் வேறு டாக்சேஷனுக்கு அவசியம் இல்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** 'வருமானம் அதிகமாகி இருக்கிறது. எவேஷன் குறைந்திருக்கிறது' என்று தான் சொன்னேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் அமைச்சர் ஸ்ரீமான் வெங்கட்டராமன் அவர்கள் சொன்னதாக நான் குறிப்பிடவில்லை. கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** "எனக்குத் தெரிந்த வரையில் வருமான வரியிலே இருக்கும் அளவுக்கு சேல்ஸ் டாக்ஸிலே எவேஷன் இல்லை" என்று சொன்னேன்.



29th March 1963]

**திரு. கே. டி. கோசல்ராம்:** ரொம்ப சந்தோஷம். வருமான வரியில் இருக்கும் எவேஷன் சேல்ஸ் டாக்ஸில் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால், அது ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம்தான். ஆனால் வருமான வரியிலே நமக்குச் சம்பந்தம் இல்லை என்று ராஜ்ய சர்க்கார் சொல்லிவிட முடியாது. இன்கம்-டாக்ஸ் மத்திய சர்க்கார் வசூல் செய்து, அதில் 66 சத விகித அளவுக்கு ராஜ்ய சர்க்காருக்கு கொடுக்கிறார்கள். அதே போல், எக்ஸைஸ் டாக்ஸில் ஐந்திலொரு பங்கை ராஜ்ய சர்க்காருக்கு அவர்கள் கொடுக்கிறார்கள். மரண வரி என்று சொல்லக் கூடிய எஸ்டேட் ட்யூடியிலிருந்து ராஜ்ய சர்க்காருக்கு வருவாய் இருக்கிறது. நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் எந்த ஊரில் பேசினாலும், "பணக்காரர்கள் செத்துப் போனால் எனக்கு—பொது மக்களுக்கு— பங்கு இருக்கிறது" என்று சொல்வதுண்டு. மரண வரியிலிருந்து ராஜ்ய சர்க்காருக்கு 99 சதவிகித வருமானம் கிடைக்கிறது. மத்திய சர்க்கார் கலக்ஷன் ஏஜெண்டாக இருந்து வசூலித்து ராஜ்ய சர்க்காருக்கு இதில் 99 சத வீதம் தொகை கொடுக்கிறார்கள். இதெல்லாம் ஒழுங்காக வசூலிக்கப்படுகிறதா, எவேஷன் இல்லாமல் எப்படி தடுப்பது என்பதை சிந்தித்தால், மேலும் டாக்ஸ் போடவேண்டிய அவசியம் இருக்காது. டாக்ஸ் போடாமல் அரசாங்கத்தை நடத்த முடியாது என்று நான் முன்பே சொல்லிவிட்டேன். டாக்ஸ் போடத்தான் வேண்டும். ஆனால் போடுகிற டாக்ஸ் ஒழுங்காகக் கொடுக்கப்படுகிறதா, டிமிக்கி கொடுத்து ஏமாற்றப்படுகிறதா என்று அகில இந்திய ரீதியிலும், ராஜ்ய ரீதியிலும் கண்டு பிடிக்கக்கூடிய ஒரு 'ஸயண்டிபிக் மெதட்' ஒன்றைக் கண்டுபிடிக்க முடியாது என்று சொல்ல முடியாது. இதற்கென்று ஒரு கமிட்டி போட்டு, எப்படியெல்லாம் டாக்ஸ் கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள், அதை எப்படி வசூல் செய்ய முடியும் என்பதில் எல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்தினால், புதிய வரி போட வேண்டிய அவசியம் இருக்காது. ஏற்கெனவே போட்டிருக்கும் வரியைச் சரியான முறையில் வசூலிப்பதற்கு நாம் எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டியது அவசியம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கக் கட்டுப்பாடு கொண்டுவந்திருக்கிறார்கள். தினம் தினம் அதுபற்றி ஒரு குரல். இது ராஜ்ய சர்க்காரை மிகவும் பாதிக்கக் கூடிய ஒரு சமாசாரம். எங்கோ யாரோ ஒருவர் உளருகிறார் என்றாலும், அது ராஜ்ய சர்க்காரையும் பாதிக்கத்தான் செய்கிறது. தினந்தோறும் ஒரு உளறல், காலைப் பத்திரிகையைப் பார்த்தால் யாருடைய உளரலாவது இது பற்றி இருக்கும். தங்கம் கொடுக்கிறேன் என்று ஒரு நாள் சொல்வார். 'கிடையாது' என்று இன்னொரு நாள் சொல்வார். இந்த நிலை இப்படியே இருந்து கொண்டிருக்கக் கூடாது. ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் இல்லை என்று சொல்ல முடியாது. அவர்களுக்கும் இதிலே அதிகாரம் இருக்கிறது. ராஜ்ய சர்க்கார் நிலைமையை எடுத்துச்சொல்ல வேண்டும். ஒருவர் தினம் தினம் ஏதாவதொன்றைச் சொல்லிக் கொண்டே இருந்தால், நம்முடைய சர்க்காரின் எண்ணம் என்ன என்பதை எடுத்துச் சொல்லவேண்டும். இந்த மன்றத்திலும் பல முறை கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. 14

காரட் தங்கத்தை எல்லா இடங்களுக்கும் கொண்டு போகக்கூடிய அளவில் வைத்துக்கொண்டுதான் இந்தக் கண்ட்ரோலைக் கொண்டுவந்திருக்க வேண்டும். இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையெல்லாம் தேசியமயமாக்கும்போது என்ன செய்தோம்? ஒரே நாளில் டில்லியிலிருந்து எல்லா ராஜ்யங்களுக்கும் ஏரோப்ளேன் மூலம் தகவல் சொல்லி, இரவு 12 மணிக்கு எல்லா இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையும் நாம் கைப்பற்றிக் கொண்டோம். அதனால்தான் அது இன்றைக்கு ஒழுங்காக நடக்கிறது. இதிலே (தங்கக் கட்டுப்பாடு) மட்டும் ஏன் 'பங்கிள்' பண்ணியிருக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. யாரோ ஒருவர் செய்கிற காரியத்தினால் ஆளுங் கட்சிக்கும் இந்த சர்க்காருக்கும் கெட்ட பெயர் வருகிறது. இம்மாதிரி நிலைமை வரும்போது மத்திய சர்க்காருக்குச் சரியான முறையில் யோசனை சொல்லக்கூடிய அதிகாரம் நமக்கு இருக்கிறது. தவறான காரியம் என்று தெரியாமலே கூட இதைச் செய்திருக்கக் கூடும். ஜனநாயக அமைப்பில், மத்திய சர்க்கார் தவறு செய்தாலும், அதை நாம் எடுத்துக் காட்டலாம். அப்படிப்பட்ட தவறை எடுத்துக்காட்டினால்தான் அதை அவர்கள் திருத்திக்கொள்ள முடியும். மொரார்ஜி பாய் நாளுக்கு ஒன்று சொல்கிறார். '14 காரட் தங்கம் கொடுக்க முடியாது, இருக்கும் தங்கத்தை வைத்துக்கொண்டு நகை பண்ணிக்கொள்ளுங்கள்' என்று ஒரு நாள் சொல்கிறார். இன்னொரு நாள் என்ன சொல்கிறார் என்றால், 'தங்கம் வாங்குபவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு சங்கடம் இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியுமோ அப்படிப் பார்த்துக்கொள்ளப் பிரயத்தனம் செய்கிறோம்' என்று சொல்கிறார். ஜனங்களுக்கு இதில் ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் ஒரே 'கன்ஃப்யூஷன்.' தங்கக் கட்டுப்பாட்டினால் தமிழ்நாடுதான் மிகவும் பாதிக்கப்பட்ட மாநிலமாக இருக்கிறது. 14 காரட் தங்கம் பாங்குகளின் மூலமாகவோ அல்லது வேறு ஏஜென்சிகள் மூலமாகவோ கிடைக்க உடனடியாக ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய எல்லாப் பிரயத்தனங்களையும் நம்முடைய ராஜ்ய சர்க்காரும் செய்ய வேண்டும். 14 காரட் தங்கம் கிடைத்தால்தான் இந்தப் பிரச்னை தீரும்; இதைத்தவிர வேறு முறையில் ஒன்றும் செய்ய முடியாது. 'ஆல்டர்னேடிவ் ஜாப்' எங்கிருந்து கொடுக்க முடியும்? எத்தனை பேருக்குக் கொடுத்துவிடமுடியும்? யார் யாருக்கு கொடுக்க முடிந்தது? எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் இதுவரை பதிந்து கொண்டவர்களுக்கே வேலை கொடுக்க முடியவில்லை. தங்க வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு என்ன வேலையை எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் கொடுத்துவிட முடியும்? பி.ஏ., எம்.ஏ., படித்தவர்களுக்கே வேலை கிடைக்காதபோது, இப்படிப்பட்டவர்களுக்கு என்ன வேலையை எக்ஸ்சேஞ்ச் கண்டுபிடித்துவிட முடியும்? துக்ளக் ராஜ்யத்திலே கூட முடியாது. எந்த சர்க்காரும் இஷ்டம் போல் வேலை கொடுத்துவிட முடியாது. பல விதிகளின் கீழ்தான் அலுவலகங்கள் இயங்க முடியும். 'வேலை கொடு' என்றால், கூலி வேலைதான் கொடுக்க முடியும். தங்க வேலை செய்தவர்களைக் கல் உடைக்கச் சொல்வதா? அல்லது மண்வெட்டி பிடித்து மண் வெட்டச் சொல்வதா? இப்படிப்பட்ட வேலை கொடுத்தால் ஒரு





நாள் செய்துவிட்டு மறு நாள் வேலையே வேண்டாம் என்று வீட்டுக்குப் போய்விடுவார்கள். பிறகு இவர்களுக்கு என்ன வேலை கொடுப்பது? குமஸ்தா வேலை கொடுப்பதென்றால், அதற்குப் படித்திருக்கவேண்டும். ஆல்டர்னேடிவ் ஜாப் கொடுப்பதைவிட 14 காரட் தங்கம் சாதாரணமாகக் கிடைக்க வழி செய்தால் போதும், பஞ்சாயத்தில் ஒரு ரூபாய் கட்டிவிட்டு பொற்கொல்லர் சாதாரணமாக லைசென்ஸ் பெற்றுக்கொள்வதற்கு எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்துவிடவேண்டும். சாதாரணமாக 14 காரட் தங்க நகைகளை அவர்கள் செய்யலாம் என்பதற்கு தீவிரமான முயற்சிகளை நமது சர்க்காரும் எடுத்துக் கொள்ளவேண்டும். இதிலே நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் மிக மிகக் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், யாரோ ஒருவர் எங்கோ ஒன்றைச் சொல்லிக் குழப்புகிறார். ரொம்ப 'ஸிம்பிள்' ஆக முடித்துவிடக் கூடிய காரியத்தை ஒரேயடியாகக் குழப்பிவிடுகிறார்கள். ஏதோ ஒரு நல்ல காரியம் என்றால், அதனால் பல பேர்கள் பாதிக்கப்படத்தான் செய்வார்கள் என்றாலும், கட்டாயமாக பாதிக்கப்படத்தான் வேண்டுமா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். தங்கக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில், இது பாதிக்கப்பட்டாகவேண்டிய காரியமல்ல. பாதிக்கப்படாமலேயே செய்ய முடியும். பெரிய கூக்குரல், பெரிய ஊர்வலம் எல்லாம் இருக்கிறது. திமிங்கலங்கள் எங்கோ உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மேலும் சாப்பிடத்தான் 'அரேஞ்' பண்ணுகிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் இருக்கும் பொற்கொல்லர்களுடைய நிலைமை என்ன என்பதை அங்கிருக்கும் மொரார்ஜி பாய் அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய கடமை இந்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகமாக உண்டு. அதுவும் கனம் முதலமைச்சர் அவர்கள் தனக்குள்ள செல்வாக்கு அத்தனையும் இந்த விஷயத்தில் உபயோகப்படுத்தி, உடனடியாக பொற்கொல்லர்களுக்கு 14 காரட் தங்கம் கிடைக்க வகைசெய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசாங்கம் அதிகாரிகளை நம்பியே ஆட்சியை நடத்தவேண்டுமென்ற எண்ணத்தை விட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் பிரசிடெண்ட் ஆக இருந்த காலத்தில் இந்த அரசாங்கத்தில் எத்தனை எத்தனை 'நான்-அபிஷியல்' கமிட்டிகள் பணியாற்றி வந்தனவோ அந்த முறையிலே இப்போதும் 'நான்-அபிஷியல்' கமிட்டிகளை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. மா. இராசாங்கம்:** மதிப்புக்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்ன நேரத்தில், அமைச்சர் அவர்கள் அவற்றுக்கெல்லாம் பதில் சொல்லும்போது 'கவனிக்கிறோம்' என்ற முறையில் பதில் சொல்லி விட்டார்கள். ஒரு வேளை நேரம் இல்லாத காரணத்தினால்தானோ என்னவோ, சில தனிப்பட்ட கேள்விகளுக்கும் பதில் சொல்லாமல் 'அத்தனையும்

[மா. இராசாங்கம்] [29th March 1963

கவனிக்கிறோம்' என்று சொல்லி அவைகளை எல்லாம் நழுவ விட்டு விட்டார்களோ என்று தோன்றுகிறது. தேசிய வருமானத்தில் பாதிக்கு மேல் தருகிற விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் கொடுக்கக் கூடிய புள்ளி விவரங்களைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் நடைமுறை நிலவரங்களைப் பற்றி எனக்கு ஓரளவு நன்றாகத் தெரியும். அரசாங்கம் விவசாயிகளின் பேரில் வரி விதித்ததன் காரணமாக விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆனால் பஸ்ஸுக்கு வரி விதித்த போது இந்த வரி ஏழைகளைப் பாதிக்காமல் இருக்க வேண்டுமென்று நாங்கள் சொன்ன நேரத்தில், 'பாதிப்பதற்கு முன்பே ஞாபகம் ஊட்டுகின்றீர்களே' என்று சொன்னார்கள். ஆனால் இப்போது விவசாயிகள் அதிக வரி விதிப்பதின் காரணமாகப் பாதிக்கப்பட்டுதான் இருக்கிறார்கள். முன்பு பஸ் தொழிலுக்கு வரி போட்டார்கள். முதலாளிகள் எதற்கும் ரப்பர் போல் வளைந்து கொடுப்பது போல் இருந்து வரி பாதிக்காத வகையில் தப்ப வழியிருக்கிறது. அவர்களுக்கு முன்பு கிடைத்த லாபமே இன்றும் கிடைக்க வழி இருக்கிறது. நெல் விலை வீழ்ச்சியைப்பற்றி இந்த மன்றத்திலே சில நாட்களுக்கு முன் பேசும்போது, எல்லோரும் ஒரே வகையான கருத்தைத் தான் சொன்னார்கள். அன்று எது எதிர்க்கட்சி, எது ஆளும் கட்சி என்று கண்டுபிடிக்க முடியாத நிலைமை இருந்தது. விலைவாசி இறங்க வேண்டியதுதான். உணவுப் பொருள்களின் விலை இறங்கும் அதே சமயத்தில் விவசாயிகள் பயன்படுத்தும் உபகாணப் பொருள்களின் விலைகளுக்கும் இறங்க வேண்டும் ஆனால் அவற்றின் விலைகள் அதிகரிக்கின்றனவே தவிர, குறையவில்லை அந்த நிலைமையில் அவர்களுக்கு மேலும் வரி விதித்தால் எப்படி அவர்களால் தாங்கிக் கொள்ள முடியும்? ஆனால், பஸ் முதலாளிகளுக்கு அதிக வரியை விதித்தவுடன், உடனே டிக்கட் கட்டணத்தை அவர்கள் ஏற்றிவிட்டார்கள். ஆனால் விவசாயிகளுடைய நிலைமை அப்படி இல்லை. விவசாயிகளுடைய நிலைமையைப் பற்றி இன்று யாரும் வாய் விட்டுச் சொல்லவில்லையாயினும் உள்ளத்திலே அதிருப்தியுடன்தான் இருக்கிறார்கள். பிற தொழில் ஈடுபட்டிருக்கிறவர்களைப் போல் விவசாயிகள் தங்கள் மீது ஏற்பட்டிருக்கிற சுமையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடிவதில்லை. முன்பெல்லாம், 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இன்று உழுதுண்டு வாழ்வோர் வாழத் தெரியாதவர்கள் என்ற முறையிலே அவர்கள் எல்லாம் பிற தொழில்களை நாடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் எல்லோரும் வேறு தொழில்களை நாடிச் சென்று விட்டால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும்.

விவசாயிகளின் தலையிலே இன்றையதினம் பெரிய பேரிடி விழுந்திருக்கிறது. மூன்று தினங்களுக்கு முன்பு கேரள சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது அமைச்சர் ஒருவர், 'மேல் பெரியாற்றிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூடத் தமிழகத்திற்குக் கொடுக்க முடியாது' என்று கூறியிருக்கிறார். கேரள எல்லையோரப் பகுதிகளில் இருந்து வருகின்ற என் போன்றவர்



29th March 1963] [திரு. மா. இராசாங்கம்]

களுக்கு அது பெருத்த கவலையைத் தந்திருக்கிறது. அந்த நிலைமைகளைப் பற்றி எனக்கு விளக்கிச் சொல்ல நேரம் இல்லை. இருந்தாலும் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டின் தென் பகுதிகளான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் அணைகட்டுவதற்கு ஆறுகளும் இல்லை, அதற்கான சாத்தியக்கூறுகளும் இல்லை. மைசூரில் உற்பத்தியாகும் காவிரி ஆற்று நீரைப் தமிழகத்திற்கு வர சாத்தியக்கூறு இல்லை என்று அந்தக் காலத்தில் நினைத்திருந்தால் தஞ்சை மாவட்டத்திற்குக் காவிரி ஆற்று நீர் வந்து சேர்ந்திருக்க முடியுமா? ஆகவே, தண்ணீர் எங்கிருந்தாலும் அது நல்ல முறையில் எல்லோருக்கும் பயன்படக்கூடிய வழிவகைகளைக் காண வேண்டும். சோஷலிச சமுதாயத்திற்காகப் பாடுபடுவதாக அரசாங்கம் கூறிவருகிறது. ஆனால் தமிழகத்தில் கூட தெற்கை தேய விடுகிறது, வடக்கை வாழ விடுகிறது. நான் பொறாமை காரணமாக அப்படிச் சொல்லவில்லை. அரசாங்கத்தில் செல்வாக்குப் படைத்தவர்கள், 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற முறைப்படி சிலபல திட்டங்களை, சிலபல குறிப்பிட்ட இடங்களுக்கு கொண்டு போகக் கூடிய திறமையைக் கொண்டிருக்கிறார்கள். பாம்பிக்குளத் திட்டத்திற்காக பம்பையாறு, மேல் பெரியாறு, இடுக்கியாறு, கிரியாறு ஆகிய திட்டங்கள் எல்லாம் கைவிடப்பட்டன. பாம்பிக்குளத் திட்டத்திற்காக அந்தத் திட்டங்கள் எல்லாம் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டு விட்டன என்று கூட நான் சொல்வேன்.

ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாவதற்குத்தான் வழி இருக்கிறதே தவிர, ஏழைகள் முன்னேறுவதற்கு வழி இல்லை. நன்றாக வளமான பகுதிகள் மேலும் வளம்பெற வழி இருக்கிறதே தவிர, வளமற்ற பகுதிகள் வளம் பெற வழி வகுக்கப்படவில்லை. நான் இதைப் பொறாமையின் காரணமாகச் சொல்லவில்லை, சோஷலிச சமுதாயத்திலே பாகுபாடு வேண்டாமென்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது எமர்ஜன்சியின் காரணமாக, நாடு பூராவும் ஒரே நிலையில் இருக்கிறதென்று கருதப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட நேரத்தில் கேரளத்துத் தண்ணீரைப் பெற நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய முயற்சி வழக்கமான முறையில் எடுத்துக் கொள்ளப்படுகிற முயற்சியாக இருக்கிறதே தவிர, சிறப்பான முயற்சியாக எடுத்துக் கொள்ளவில்லை என்பது நன்றாகத் தெரியும். நீங்களும் அதைப் பற்றி நன்றாக அறிந்திருக்கிறீர்கள். மேல் பெரியாறு திட்டத்தை வைத்து விட்டு ஓரளவு நாம் எல்லோருக்குமே வருத்தம் தரக்கூடியதுதான். இருந்தாலும் அதிலே எடுத்திருக்கக் கூடிய முயற்சி குறைவாகத்தான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தைப் பற்றிச் சொல்லும் போது பெருமையாகக் கூடச் சொல்வார்கள்.

Tamilnad is called a "no problem state."

"பிரச்சனையே இல்லை" என்று சொல்லுகிறார்கள். இங்கு பிரச்னைகள் அப்படி இல்லாமலா இருக்கின்றன? பிரச்னைகள் ஏராளமாக இருக்கின்றன. பயத்தின் காரணமாக இந்தப் பிரச்னைகளையெல்லாம் விட்டு விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். இவைகளையெல்லாம் துணிச்சலாகச் செய்தால்தான் உண்மையிலேயே உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

காட்டு இலாகா மானியத்தின் போது நேரம் இல்லாத காரணத்தாலோ அல்லது பசியின் காரணமாகவோ எல்லோரும் ஒருமுகமாகப் பேசாமலே விட்டு விட்டார்கள். இஞ்சினியரிங்கை டெக்னிகல் டிப்பார்ட்மெண்டாக வைத்திருக்கிறார்கள். வைத்திய முறையும் அப்படியே இருக்கிறது அதே போன்று பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டையும் டெக்னிகல் டிப்பார்ட்மெண்டாக ஆக்க வேண்டும். முன்பெல்லாம் பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டில், தானாக வளர்ந்த மரங்களைப் பாதுகாத்து வந்தார்கள். இப்போதோ இன்னின்ன மரங்களை இன்ன இன்ன இடத்தில், இப்படி இப்படி நட்டு அவற்றை வளர்க்க வேண்டுமென்ற முறையில் பாரஸ்ட் இலாகா பணியாற்றி வருகிறது. ஆகவே, அதை டெக்னிகல் டிப்பார்ட்மெண்டாக மாற்றவேண்டும். அந்த அலுவலகத்தில் பணியாற்றுகின்றவர்கள் இதை எடுத்துச் சொல்ல முடியாமல் வாய் மூடி இருக்கின்ற காரணத்தினால்தான் நான் இதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அன்று அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'பாரஸ்ட் இலாகா அதிகாரிகளுக்குத் துப்பாக்கி கொடுப்பதை நிறுத்தி விட்டோம்' என்று சொன்னார்கள். காட்டுப் பகுதியில் போகின்ற அந்த அதிகாரிகளுக்குக் கட்டாயம் துப்பாக்கி இருந்துதான் ஆகவேண்டும். இதுவரை துப்பாக்கிகள் மட்டும் இருந்து குண்டுகள் இல்லாத நிலைமை இருந்து வந்தது. இப்போது துப்பாக்கியே இல்லையென்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அவர்களிடம் துப்பாக்கி இருந்தால்தான் அவர்கள் காட்டுப்பகுதியில் எப்போது வேண்டுமானாலும் போய்வர தைரியமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

(திரு. செ. சீனிவாசன் தலைமை)

11-00 a.m. 3,000 அடிக்குமேல் 4,000 அடி வரைதான் ஏலக்காய் விளையும். அதற்கு மேல் உள்ள இடங்களில் ஏலக்காயை தவிர வேறு எந்தப் பயிரையும் விளைவிக்கக் கூடாது என்ற அரசாங்கக் கருத்து இருக்கிறது. இது தவறான கருத்து, 4,000 அடிக்கு மேல் போகும் போது அங்கு ஏலக்காய் விளையாது. தேயிலை காப்பி போன்றவை தான் விளையும். இவைகள் லீஸ்-க்கு கொடுக்கப்படுகிறது. ஆகவே மற்ற பயிர்களை வைத்து வளர்த்து வருமானத்தைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் சற்று சட்ட திட்டங்களை தளர்த்தி அவர்களுக்கு வழிவகை செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு மாகாண சந்திப்பு இடங்களிலும் இண்டர் ஸ்டேட் ரோடுகள் போடப் பட்டிருக்கின்றன. கேரளாவையும் தமிழகத்தையும் இணைக்கும் பெரியாறு பகுதியில் இண்டர் ஸ்டேட்



ரோடு போடவில்லை. கேரளாவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து நுழையும்போது அவர்கள் போட்டிருக்கிறார்கள் நல்ல ரோட்டை. ஆனால் தமிழ் நாட்டிலிருந்து கேரளாவிற்கு போய் சேரும் குமுளிப் பகுதியில் ரோடு சரியாகப் போடப்படவில்லை. அது மிகவும் மோசமான ரோடாகயிருக்கிறது. அங்கு வெளிநாட்டுக்காரர்கள், பிற மாநிலத்தவர்கள் வருகிறார்கள். பிற மாநிலங்களிலிருந்து ஏராளமானவர்கள் பக்தி காரணமாக ஐயப்பன் கோவிலுக்கு வருகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், மற்ற மாநிலங்கள் ஒன்றையொன்று சந்திக்கிற இடத்தில் இண்டர் ஸ்டேட் ரோடை, அகலமாக, வசதியாக போட்டிருக்கிறார்கள். இங்கே ஏன் போடவில்லை என்ற வினாவை வருகிறவர்கள் கேட்கிறார்கள். ஆகவே இதையும் கவனித்து இதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு பேச சந்தர்ப்பம் நல்கியவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து என் தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கடந்த வாரம் சபை முதல்வர் அவர்கள் வால்பாறை டவுன்ஷிப் மசோதாவைக் கொண்டு வந்து பிரேரேபித்தார்கள். அதை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அப்போது நான் சபைக்கு வாராததால் இன்று அது விஷயமாக என் மனப்பூர்வமான நன்றியை அங்குள்ள மக்கள் சார்பாகவும் என் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பிரதேசத்தில் ஏறக்குறைய 75,000 மக்கள் வசிக்கிறார்கள். அது ஒரு தொழில் பிரதேசம். அங்குள்ள பஞ்சாயத்திற்கு ஆண்டுகள் ஏறக்குறைய 4 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. 15 அங்கத்தினர்களைக் கொண்டு அந்த பஞ்சாயத்து நடந்து வந்தது. அங்கு 1½ ஆண்டுகளாக நடக்கும் பல ஊழல்கள் சரியாகக் கவனிப்பதில்லை என்று முதல் அமைச்சர் அவர்களிடமும் நிதி அமைச்சர் அவர்களிடமும் எடுத்துக் கூறி என் கோரிக்கைக்கு அரசாங்கம் இவ்வளவுதூரம் செவி சாய்த்ததற்கு மறுபடியும் என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ஏரியா அபிவிருத்தி அடையாத ஒரு பகுதி. இன்னும் அப்படியே இருக்கிறது. மிகச் சிரமப்பட்டு அங்கு ஒரு டெப்டி தாசில்தார் நிறுவினோம். அது ஒரு பஸ் ஸ்டாண்டில் இருக்கிறது. அங்கு டெப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ்கும் இடமில்லை. அங்கிருந்து 40 மைல் வந்துதான் நான் வாங்குகிற சம்பளத்தைக் கூட வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு டெப்டி தாசில்தார் ஆபீஸ் ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் ஒரு கஜானா இவை மிக மிகத் தேவை. நெருக்கடி காரணமாக இவற்றை தவிர்த்திருப்பதாகச் சொல்வார்கள். ஆனால் இதை ஒரு ஸ்பெஷல்கேஸாக எடுத்து இந்த ஆபீஸ்களை அந்த ஏரியாவிற்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த பஞ்சாயத்தில் ஒரு ஹைஸ்கூல், ஒரு மிடில் ஸ்கூல் நடக்கிறது. நாலு லட்சம் வருமானம் இருந்தும் இந்த ஹைஸ்கூல், மிடில் ஸ்கூல், எலிமெண்டரி ஸ்கூல் இவற்றிற்காக செலவு செய்து ஒரு அபிவிருத்தியும் செய்ய முடியவில்லை. ஆகவே இந்த மிடில்

ஸ்கூலையும், ஹைஸ்கூலையும் சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர் இந்த டவுன்ஷிப் கமிட்டியால் பொது மக்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். ஒரு பெண் மெம்பருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும். அங்கு தொழிலாளர்கள், முதலாளிகள்தான் பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டும். அங்கு 90 சத விகிதம் ஹரிஜனங்கள் இருப்பதால் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் சந்தோஷத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. க. கோமதிசங்கர தீக்ஷிதர்** : அன்புமிக்க தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கல் மசோதாவை ஆதரித்து நான் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நெருக்கடியான இந்த நேரத்தில் நமது திட்டங்கள் நல்லமுறையில் நிறைவேற்றப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ள இந்த நிதி ஒதுக்கல் விஷயத்தில் அந்தந்த இலாகாக்கள் நல்லமுறையில் மக்கள் ஒத்துழைப்பின்பேரில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இது மிகவும் பயன்படுகிறது. என் தொகுதியைப் பொறுத்தவரையில், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வசிக்கிற விக்ரமசிங்கபுரம் மேஜர் பஞ்சாயத்து ஏரியாவில் குடிதண்ணீர் மிகவும் அவசியமாக இருக்கிறது. இது பல ஆண்டுகளாக அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்குக் கூட உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அது பயன் அடையும்படி செய்ய இந்த நிதி ஒதுக்கீட்டில் அந்த குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றும்படிக் கேட்டுக் கொள்கிறேன். தாம்பரபர்ணி பிரதேசம், பாபநாசம் அணைக்கட்டு, மணிமுத்தாறு அணைக்கட்டு இவை அடங்கிய தொகுதி என் தொகுதி. அங்கு நீர்பாசன விஷயமாக நன்கு கவனிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான விவசாயிகள் தங்கள் விவசாயத்தை லட்சிய அளவிற்கு தக்கபடி விஞ்ஞான முறையில் விவசாயத்தை நன்கு செய்து வருகிறார்கள். நல்ல உரம், நல்ல விதை, பூச்சி மருந்து இவைகளை அவர்கள் நல்ல முறையில் பெறுகிறார்கள். அதோடு உற்பத்தியையும் அதிகமான முறையில் கொண்டு வருவதைக் கவனிக்கலாம். பாபநாசம் அணைக்கட்டு மின்சாரத்திற்காகவே அமைக்கப்பட்டிருப்பதால், மழை இல்லாத சமயத்தில் தண்ணீர் கிடைக்க, அங்குள்ள சேர்வை ஆற்றில் ஒரு அணை கட்டினால் தாம்பரபரணி இரிகேஷனுக்கு அது மிகவும் பயன்படும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தாம்ரபர்ணி உற்பத்தியாகும் இடத்தில் வாணதீர்த்தம் என்று இருக்கிறது. தமிழ் நாட்டு மக்கள் அங்கு சென்று நீராடுகிறார்கள். அது அக்ஸ்தியர்கூடம் என்று அழைக்கப்படுகிறது. அங்கு ரோடு வசதி இன்னும் அமைக்கப்படவில்லை. அதையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதி விவசாயிகள் நிரம்பிய தொகுதி. அங்குள்ள மக்களுக்கு தொழில் மனப்பான்மை ஏற்படவேண்டுமென்பதற்காக அம்பாசமுத்திரம் தாலுகாவில் ஒரு இன்டஸ்டிரியல் இன்ஸ்டிட்யூட் அல்லது தொழில் பேட்டை அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டு



மென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பஞ்சாயத்து கவுன்சில் மேற்பார்வையில் கல்விச் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கௌன்ஸில் அக்கல்விச்சாலைகளை திறமையாக நடத்தி வருகிறார்கள். மத்திய உணவுத் திட்டம் ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி கற்க மிகவும் உதவியாக இருக்கிறது. கல்வி வசதி பெறாத ஏழைக் குழந்தைகளே அங்கு இல்லை என்று கூடச் சொல்லலாம். இன்று ரிடயரான ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் டீச்சேர்ஸ், செகண்டரி ஸ்கூல் டீச்சேர்ஸ் இவர்கள் நிலை மோசமாக இருக்கிறது. அவர்களுக்குப் பென்ஷன் மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. அவர்களுடைய பென்ஷன் இப்போது கொடுக்கப்படும் 'ஓல்ட் ஏஜ்' பென்ஷன் அளவுக்கு உயர்த்தினால் மிகவும் நன்றாக இருக்கும்.

இதே மாதிரி இந்த அரசாங்கம் மக்களுக்குச் செய்து வருகிற நல்ல காரியங்களை எல்லாம் மனதில் கொண்டு இந்தத் திட்டங்கள் வெற்றிப்பெறுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை அவர்கள் அளந்து வருகிறார்கள்.

ஹோம் கார்டு என்ற ஊர்க் காவல் படையை எல்லா பஞ்சாயத்துகளிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏ.சி.சி., என்.சி.சி. பயிற்சி அளித்து அதன் மூலமாக நம்முடைய பாதுகாப்பில் மக்களுக்கு இருக்கக் கூடிய ஆர்வம் இந்த ஊர்க் காவல் படை திறம்பட அமைப்பதின் மூலமாக அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன். ஊர்ப் பாதுகாப்பு, கிராமங்களின் பாதுகாப்பு ஆகியவைகளை நாமே பார்த்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் இப்போது இந்த நெருக்கடியின் நிலையிலே மக்களுக்கு ஏற்படவேண்டும். அதற்குத் தகுந்த முறையில் ஊர்க்காவல் படையை நன்கு அமைக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பு சட்டப்பூர்வமாக நிறைவேறிவிட்டது. ஆனாலும் இன்னும் அறியாத நிலையினால், ஏழை ஹரிஜனங்களுக்கிடையே கிராமத்திற்குச் சென்றால், அரசியல் காரணத்தினாலோ அல்லது மற்ற காரணங்களினாலோ பிளவு ஏற்படுகின்றன. தெரியாத்தனமாக ஒற்றுமைக்குப் புறம்பாக சண்டை சச்சரவுகள் செய்து, அதன் மூலம் விவகாரங்களில் ஈடுபடுகிறார்கள். அதை நீக்கி ஹரிஜனங்கள் இடையே ஒற்றுமை நிலவுவதற்கு வேண்டிய பிரசாரத்தை ஹரிஜன இலாகா மூலம் அதிகமாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்றுக் கேட்டுக்கொண்டு இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். ஜெய் ஹிந்த்.

* **திரு. மு. பொ. வடிவேல்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்ட மன்றம் ஏறத்தாழ ஓராண்டு காலமாக நல்ல திறமையான சபாநாயகர் தலைமையில் நல்லமுறையில், ஜனநாயகப் பண்பிற்கேற்ப, சட்ட மன்றத்தின் மரபுக்கேற்ப செயல்

பட்டு வருகிறது. ஆனால் கடந்த சில நாட்களாக நடந்த சில சம்பவங்களைப் பார்க்கும்போது எங்கே இந்த சட்ட மன்றத்தின் மரபுகள் கெட்டுவிடுமோ என்று சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன. எதிர் தரப்பிலிருந்து நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் உதாசீனமாக, அலட்சியமாக, பதில் அளிக்கிறார்கள். அமைச்சர்கள் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, புருவத்தை நெறிப்பதும், கோபமாகப் பார்ப்பதும் தவறு என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்றையதினம் இந்த மன்றத்திலே நண்பர் மதியழகன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அப்போது கனம் நிதி அமைச்சர் அவர்கள் "இவர் குதர்க்கமாகக் கேள்வி கேட்கிறார், ஆகவே அதற்குப் பதில் சொல்ல முடியாது" என்று புருவத்தை நெளிந்து விட்டு அமைச்சர் அவர்கள் உட்கார்ந்து விட்டார்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் இன்னும் நடிப்பதற்குக் கற்றுக்கொள்ளவில்லை. புருவத்தை உயர்த்தும் ஆற்றல் எனக்கு இல்லை.

**திரு. மு. பொ. வடிவேல்:** அமைச்சர் அவர்கள் மீது குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. கோபமாகப் பதில் அளிக்கிறார் கனம் நிதி அமைச்சர் என்று தான் சொன்னேன். நிதி அமைச்சர் அவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர். அவர்களுக்கு எங்களுக்கு ஒத்த பிள்ளைகள் இருக்கக்கூடும். தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்று சொல்வார்கள். அந்த அளவில் தகப்பனார் ஸ்தானத்திலுள்ளவர்கள். அவர்களுக்கு கோபம் வரலாமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அங்கத்தினர் அவர்கள் பழைய நூல்களை வாசித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். கோபம் வராமல் இருப்பதற்கு ஒரு அளவு உண்டு, பொறுமைக்கும் ஒரு அளவு உண்டு.

**Mr. CHAIRMAN (Sri C. Srinivasan):** Th hon. Member is requested not to make any charge against any hon. Member of this House and also against any Hon. Minister.

**திரு. மு. பொ. வடிவேல்:** தயவு செய்து தமிழில் சொல்லுங்கள்.

**கனம் தலைவர் (திரு. செ. சீனிவாசன்):** சபையிலே பேசும்போது எந்த மெம்பரைக் குறித்தும் தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது. சொல்ல வேண்டிய கருத்தை நல்ல முறையில் தெரிவித்தால் போதும்.

**திரு. மு. பொ. வடிவேல்:** நான் என்ன கூறுகிறேன் என்றால், மற்ற மாநிலங்களில், பல சட்டசபைகளில் கலாட்டாக்கள் நடந்திருக்கின்றன. இருபது பேர்கள் ஒரே சமயத்தில் எழுந்து நின்று கொண்டு சட்டசபையை நடத்த முடியாத அளவுக்கு தடை செய்து



**கனம் தலைவர் (திரு. செ. சீனிவாசன்):** மற்ற சட்டசபைகளில் கலாட்டா நடந்தால் இங்கும் நடக்கவேண்டுமென்று அதை 'பிரீசிடெண்ட்' ஆகக் கொள்ள வேண்டாம், நாம் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

**திரு. மு. பொ. வடிவேல்:** நானும் அதைத்தான் சொல்லி வந்தேன். தயவு செய்து என்னைப் பேச அனுமதியுங்கள் என்றுக் கேட்டுக்கொள்கிறேன். அம்மாதிரியாக இந்த சபையில் எந்த அசம்பாவிதமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் இதை வற்புறுத்திச் சொல்லுகிறேன் என்றால் ஒரு வேளை இருப்பது மாதிரி மற்றொரு வேளை இருக்காது. நாங்கள் ஒன்று சொல்ல, மற்றவர்கள் இன்னொன்று சொல்ல, அதனால் இந்தச் சபையின் நிலைமைகள் மாறிவிடக்கூடாது. இந்த மன்றத்தின் மரபு கெட்டுவிடக்கூடாது என்பதிலே நாங்கள் பொறுப்புணர்ச்சியோடும் சற்று அடக்கத்தோடும் இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் எதிர்க் கட்சியாக இருக்கிற நாங்கள் கொடுக்கும் கேள்விகளுக்கு நல்ல முறையில் சிரித்துக்கொண்டு பதில் அளிக்கவேண்டும். சிரிப்பது உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது என்று மருத்துவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். மனிதர்களாகப் பிறந்தவர்கள் மட்டும்தான் சிரிக்க முடியும். விலங்கினங்கள் சிரிப்பதில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சிரித்துக்கொண்டு பதில் அளிக்கலாம், சிரித்தால் எங்களை அலட்சியமாகக் கருதுகிறார்கள் என்று பரிகாச சிரிப்பாக எடுத்துக்கொண்டால் என்ன செய்வது.

**திரு. மு. கருணாநிதி:** அவர் குறிப்பிட்டது புன்னகை.

**திரு. மு. பொ. வடிவேல்:** பொன் நகையை விட, புன்னகை சிறந்தது என்று சொல்வார்கள். இந்த அமைச்சர் அவையிலே இரண்டே இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் யாரும் சிரித்துக் கொண்டு பேசுவதில்லை. அது அவர்களுடைய சுவபாவமாக இருக்குமானால் அதை மாற்றிக் கொள்ளவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த மாமன்றத்திலே எத்தனையோ முறை பாலாற்றுப் பிரச்னையைப் பற்றி எடுத்துச் சொல்லி ஆகிவிட்டது. அந்தப் பிரச்னை தீர்ந்து போன விஷயமாகக் கருதப்பட்டு வருகிறது. அதனால் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல் நிதி அமைச்சர் அவர்கள் சார்ந்துள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலும் பயன்படக் கூடிய காரணத்தினால் மீண்டும் மைசூர் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி பாலாற்றுப் பிரச்னையை தீர்க்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மத்திய சர்க்காருடன் தொடர்பு கொள்ளும்போது மதறாஸ் என்றும் மற்ற சமயங்களில் தமிழ் நாடு என்றும் பெயர் வைத்து அழைக்கிறார்கள். முழுவதுமாக தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று விரும்பிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

*[திரு. மு. பொ. வடிவேல்]* [29th March 1963

இப்போது ஹரிஜன நல இலாகாவை எடுத்துக் கொண்டு பார்த்தால் அந்த இலாகாவுக்கு ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முதல் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒரு பக்கம் சேரிகளை ஒழித்துக்கொண்டிருக்கிறோம். மறு பக்கம் புதிய சேரிகள் உற்பத்தி ஆகிக்கொண்டிருக்கின்றன. அந்த நிலைமையைத் தடுக்க வேண்டும். அவர்கள் குடியிருக்கிற இடத்திலே வீடு கட்டி கொடுக்கவேண்டும். அவ்வாறு செய்தால் நலமாக இருக்கும். அவர்களுக்கு இப்போது வீடு கட்டிக் கொடுக்காவிட்டாலும், இருக்கிற இடத்திலிருந்தாவது அப்புறப்படுத்தாமல் அவர்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்கவேண்டும். வாணியம்பாடித் தொகுதியில் கோணமேடு, காமராஜர்புரம் என்று இரண்டு சேரிகள் இருக்கின்றன. ஒன்று தனிப்பட்ட நபருக்கும், இன்னொன்று முனிசிபாலிடிக்கும் சொந்தமான இடம். காமராஜர் புரம் என்று பெயர் இருந்தாலும் கூட அங்கு இருக்கும் ஹரிஜனங்களை காலி செய்துவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் காமராஜர் பெயரை வைத்திருக்கும் காரணத்திற்காகவாவது தயவு செய்து அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவில்லையாயினும், குடியிருக்கும் இடத்தையாவது அவர்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் விஷயத்தில் முதல் அமைச்சர் அவர்கள் தலையிட வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட மாணவர்கள் தங்கள் படிப்புக்கு உதவித் தொகை வேண்டுமென்று விண்ணப்பங்கள் அனுப்புகிறார்கள். அந்த விண்ணப்பங்களிலே சிறு குறைகள் இருந்தாலும் கூட நிராகரிக்கப்பட்டு விடுவதாகச் சொல்லப்படுகிறது. வன்னியன் என்பதற்கு பதிலாக வன்னியர் என்றோ, துளுவன் என்பதற்கு பதிலாக துளுவர் என்றோ, கள்ளன் என்பதற்கு பதிலாக கள்ளர் என்றோ, பள்ளன் பறையன் என்பதற்கு பதிலாக பள்ளர் பறையர் என்றோ அந்த மனுவிலே எழுதி விட்டால் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. அந்தக் காரணத்தைக் கொண்டு மனுக்களை நிராகரிக்காமல் இருப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஹரிஜன இலாகா என்று பெயர் இருக்கிறதே தவிர முழுப் பணமும் அவர்களுக்கு மட்டுமே செலவழிக்கப்படுவதில்லை. பிற்பட்ட இனத்தவர்கள் நன்மைக்காகக் கூட ஹரிஜன இலாகாவின் மூலமாகத்தான் பணம் செலவழிக்கப்படுகிறது. பின் ஏன் அதற்கு ஹரிஜன இலாகா என பெயர் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். ஹரிஜனங்களுக்கு மட்டும் பயன் படக் கூடிய வகையில் ஒரு இலாகாவை அமைத்து விட்டு, மற்றவர்களை, பிற்பட்ட வகுப்பினர்களை இருப்பவன் இல்லாதவன் என்ற முறையில் இரண்டே சாதியினராகத்தான் பிரிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். வேளாளன் என்ற சமூகத்தில் எத்தனையோ பேர் இல்லாதவர்கள் இருக்கிறார்கள். டாக்டர் சுப்பராயன் அவர்கள் வேளாளர் என்ற காரணத்தால் அந்த வகுப்பை பிற்பட்ட இனத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றுசொல்லப்படுகிறது. அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆகவே,



29th March 1963] *[திரு. மு. பொ. வடிவேல்]*

இருப்பவன், இல்லாதவன் என்று வைத்து, இல்லாதவர்களுக்கு மட்டும் சலுகைகள் அளிக்கவேண்டுமென்ற அளவுக்கு தனி இலாகாவை மாற்றி அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றுகிற ஜீப் டிரைவர்களுடைய நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. வெளியில் சாதாரணமாக மாதத்திற்கு 15 நாட்கள் வேலை செய்யக் கூடிய லாரி டிரைவர்களுக்கு 120 ரூபாய், 150 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. பஞ்சாயத்து யூனியன் டிரைவர்கள் கடினமான பாதைகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ஒரு நாள் கூட ஓய்வு கிடையாது. ஞாயிற்றுக்கிழமை கூட அவர்கள் வேலை செய்கிறார்கள். குறைந்த பட்சம் 70 ரூபாய் என்று இருப்பதை மாற்றி அதிகப்படியான சம்பளம் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

அதைப் போலவே பஞ்சாயத்து யூனியன்களிலே வேலை செய்யும் ஊழியர்களைப் பொறுத்தவரையில் இரண்டு யூனியன் தலைவர்கள் ஒன்றாகக் கலந்து இன்ன ஊழியரை இந்த யூனியனிலிருந்து அந்த யூனியனுக்கு மாற்றலாம், அதே மாதிரி இன்ன ஊழியரை அந்த யூனியனிலிருந்து இந்த யூனியனுக்கு மாற்றலாம் என்று முடிவு செய்து கலெக்டரிடம் விண்ணப்பம் கொடுத்தால் அதைப் பற்றி கவனிக்க இந்த அரசாங்கம் உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இரண்டு யூனியன் தலைவர்கள் அந்தந்த யூனியன்களுக்குப் பரிமாறிக்கொள்ளவேண்டுமென்று கேட்கிற நேரத்தில் கலெக்டர் அவர்கள் இத்தகைய கோரிக்கையை சில இடங்களில் கவனிப்பதில்லை. ஆகையால் அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் செயல்பட, கமிஷனர்களுக்கு ஏராளமான அலுவல்கள் குவிந்திருப்பதால் அவர்களுக்கு உதவி கமிஷனர்களை நியமனம் செய்யவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் சொல்லிக் கொள்ளுகிறேன்.

காட்டிலாகா பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஆலங்காயம் பஞ்சாயத்துக்கு மேற்கொண்டு செல்லும் பாதை—கில்மன் பாதை—காடுகளாகவும் அதைச் சுற்றி ஏராளமான கிராம மக்கள் வசிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. அந்தப் பகுதிக்குப் போகவேண்டுமென்றால் காட்டிலாகா அதிகாரிகள் கேட் போட்டிருக்கிறார்கள். அப்படி கேட் போட்டிருக்கிற காரணத்தினால் போக்குவரத்து வசதிகள் தடைபடுகிறது. அவர்கள் வண்டியில் சென்றால் ஏதாவது காட்டிலாகா சாமான்கள் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டியது தான். ஆனால் இரவு நேரத்தில் பிரசவ விடுதிக்கு வரும் எந்த வண்டியையும் விட முடியாது என்று சொல்லி பொழுது விடியும் வரையில் வைத்து விடுகிறார்கள். மருத்துவத்திற்காக வந்த முஸ்லீம் தாய்மார்கள் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு அங்கேயே மாண்ட [illegible] செய்தியை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு

[திரு. மு. பொ. வடிவேல்] [29th March 1963

வர விரும்புகிறேன். இதைப் பற்றி காட்டிலாகா அதிகாரிகளுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பி வைத்தால் நலமாக இருக்கும். வண்டியில் வந்தால் வண்டியை சோதனை செய்து கொள்ளட்டும். இரவு நேரத்தில் வந்த காரணத்தினால் விட மாட்டோம் என்று பிரசவ கேஸ்களைக் கூட நிறுத்தி விட்டால் இது எந்த நிலைமையில் கொண்டு போய் விடும் என்று அமைச்சரவை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதியில் 20,000, 30,000 பேர்களுக்கு மேல் மக்கள் வசிக்கிறார்கள். போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. மலை ஜாதியினருக்கு உண்மையில் இந்த அரசாங்கம் நன்மை செய்யவேண்டுமென்றால் இரண்டு புடவைகளும் இரண்டு மாடுகளும் கொடுத்துப் பயன் இல்லை. அவர்கள் நாகரீக மக்களாக இருக்கவேண்டுமென்றால் அவர்களுக்குப் போக்குவரத்து வசதி இருக்கவேண்டும். அங்கே போக்குவரத்து தடை செய்யப்படுகிறது. அந்த ரோடை நாஷனல் ஹைவேஸுக்கு ஒப்படைத்து பஸ் ரூட்டை அந்த கில்மன் பாதையில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மதிப்பிற்குரிய பட்ட மன்றத் தலைவர் அவர்களே பொதுவாக நம் சட்ட மன்றத்தில் 1952-வது ஆண்டிலிருந்து இன்று வரையில் ஓரே கட்சி சரியான எதிர் கட்சியாகத் தகுந்த முறையிலே அமைந்து வந்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல முடியும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

1952-ல் எதிர் கட்சியாக விளங்கியது பல கட்சிகள் சேர்ந்த கூட்டு அமைப்பாக இருந்தது. அதற்குப் பிறகு 1957-ல் இருந்த எதிர் கட்சிகளும் தனித்தனி குழுவாகத்தான் இருந்து வந்தன. 1962-லிருந்து பணியாற்றி வருகிற திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று தான் சரியான ஒரு எதிர் கட்சியாக தகுதியானதாக அமைந்து பணியாற்றி வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. சரியான எதிர் கட்சியாக மாத்திரமல்லாமல் மிகச் சிறந்த முறையில் கண்ணியத்தோடு பணியாற்றி வருகிற ஒரு எதிர் கட்சி என்று சொன்னால் கூட அது மிகையாகாது. பல அங்கத்தினர்கள் சென்ற தடவை நாங்கள் இந்த விவாதத்திலே கலந்துகொள்ள முடியாது. சிறையிலிருந்த நேரத்தில் பேசியிருந்ததை நான் படித்துப் பார்த்தேன். அவர்கள் எதிர் கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதற்குக் கொடுத்த தத்துவத்தைப் படித்துப் பார்த்தேன். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், 50 பேர்கள் கொண்ட ஒரு எதிர் கட்சி, வேறு எந்த கட்சியிடத்தில் இருந்தாலும் கூட, சட்ட மன்றம் இவ்வளவு அமைதியாக நடந்து வராது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். அதிலேயும் குறிப்பாக ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அவர்களுக்குள்ளே கலகம் செய்து கொள்ளுபவர்கள், குழப்பம் செய்து கொள்ளுபவர்கள் என்றும் இன்னும் சில வார்த்தைகளைக் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள்.



29th March 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

நான் இந்தச் சபை நடக்கிற இந்தத் தொடர் கூட்டத்தில் பூராவாக கவனித்துப் பார்க்கிறேன், எந்த அங்கத்தினர் குழப்பம் செய்துகொள்ளுபவர்கள் என்று எங்கள்பேரில் குற்றம் சாட்டியிருக்கிறாரோ அதே அங்கத்தினர் எங்களையெல்லாம்விடச் சற்றுக் கடுமையாக, ஆளும் கட்சியை, காங்கிரஸ் கட்சியை, அவருக்கு பேச சந்தர்ப்பம் வருகிற நேரத்திலெல்லாம் தாக்கிக்கொண்டுதான் வந்திருக்கிறார். நான் இதைக் குறிப்பிடக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் இங்கே பேசுகிற நேரத்தில், அவர்களெல்லாம் இப்படிப் பேசவேண்டுமென்பதற்காகத்தானோ என்னவோ, என எண்ணுகிறேன். அமைச்சர்கள். என்னுடைய அருமை நண்பர் வடிவேலு அவர்கள் குறிப்பிட்டது போல, நாங்கள் எந்தக் கேள்வி கேட்டாலும், 'தெரிந்துகொண்டு பேசுங்கள்', 'புரிந்துகொண்டு சொல்லுங்கள்' 'சரியாகப் படித்துவிட்டுக் கேளுங்கள்' என்பதைப் பல்லவியாக வைத்திருக்கிறார்கள். எந்தக் கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்ல ஆரம்பித்தவுடனேயே, அந்தக் காலத்தில் பிள்ளையார் சுழி போடுகிற மாதிரி, இப்போது அமைச்சர் அவர்கள் 'சரியாகத் தெரிந்துகொண்டு சொல்லுங்கள்' என்று சொல்லுகிறார். நாங்கள் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் இன்னும் இருக்கிறோம் என்றால் அது அமைச்சருடைய குற்றமாகத்தான் இருக்க முடியும் என்று நிச்சயமாக என்னால் சொல்ல முடியும். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு கூட எங்களுக்குப் புரிய வைக்கிற அளவுக்குச் சொல்ல முடியவில்லை என்றால் இதைப்பற்றி வேறு என்ன சொல்லுவது என்று புரியவில்லை. தயவு செய்து என்ன சொல்லுகிறோம் என்று கவனிக்க வேண்டுமேயல்லாது, எப்படிச் சொல்லுகிறோம் என்பதை தயவு செய்து பார்க்கக்கூடாது. சட்ட மன்றத்தில் பேசிக்கொண்டிருப்பதால் மாத்திரம் பிரச்னைகள் தீர்ந்து விடாது. சில சமயங்களில் பல தமாஷ்கள் கூட நடக்கிறது. பேசக் கூடியவர்களைப் புரிந்து கொண்டு பதில் சொல்ல வேண்டும். இந்தச் சட்ட மன்றத்தில் எதிர் கட்சியில் வந்திருக்கிற என்னைப் போன்ற பலர் புதிதாக வந்திருக்கிற காரணத்தினால், அமைச்சர்களாக இருக்கிறவர்கள் சிலர் பல ஆண்டு காலம் தொடர்ந்து இருக்கிற காரணத்தினால் அவர்கள் எங்களைப் போன்றவர்களுக்கு இப்படித்தான் சொல்வது என்று ஒரு புது முறையை வைத்திருக்கிறார்களோ என்னவோ புரியவில்லை. அவர்களுக்குச் சொல்லுகிறேன், சொல்லுகிற விஷயங்களில் சில சமயங்களில் முறை கூட சரியாக இல்லாமல் இருக்கலாம், வகை கூட சரியாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் அமைச்சர்கள் அந்த முறையில் சொல்லுகிறார்கள் என்றால் எங்களைப் போலத்தான் அவர்களும் இருக்கிறார்கள் என்று நிச்சயமாகக் கூறக் கூடும். அடுத்து சட்ட சபையிலே சொல்லப்பட்டுள்ள கேள்வி பதிலைப் பார்த்தேன். எங்கெங்கு என்னென்ன மாதிரி பதில் சொல்லியிருக்கிறார்கள்? ஏதாவது பொருத்தமான பதிலாக இருக்கிறதா? ஏதோ நாங்கள் சொல்லுவதற்கு எழுந்து ஏதாவது சொல்லவேண்டும் என்பதற்காக சொல்லப்படுகிறது. அது தான் முறையா? அதுதான் முறையான சரியான பதிலா?

குடும்பத்தில் புருஷன் பெண்டாட்டி சம்பாஷணை மாதிரி, நாங்கள் ஒன்று சொல்ல அமைச்சர்கள் ஒன்று சொல்ல கேள்விக்கு ஏற்ற பதிலாக இல்லை என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் கனம் அங்கத்தினர் வடிவேலு அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த சட்ட சபையில் வந்து நாங்கள் 50 பேர்கள் சட்டசபை கவுரவத்தை உயர்த்த வேண்டுமென்பதிலே அதிக அக்கறை செலுத்திவருகிறோம். அது மாத்திரமல்ல, எங்களை அரசியலிலே ஆளாக்கி வளர்த்த அறிஞர் அண்ணா இன்னமும் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள தலைவர், இன்னும் கட்டுப்பாடோடு, கடமை தவறாமல் கண்ணியமாகப் பணியாற்றிவர வேண்டுமென்று போதித்து வருகிற நல்ல தலைவரிடத்தில் நாங்கள் முறையாக பயிற்சி பெற்றிருக்கிறோம். ஆகையால் சொல்லுகிறேன், ஆத்திரப்பட்டுப் பேசினாலும், புரியாதவர்கள், தெரியாதவர்கள் என்று சொன்னாலும், அதைப்பற்றி கவலைப்படாமல் எங்களுடைய பணிகளை எங்களுடைய கடமைகளை இந்த சட்ட மன்றத்தில் ஆற்றி வருகிறோம். சட்ட மன்றத்தில் இருக்கிறவர்களுக்கு, எங்களுக்கு வேண்டுமானால் பார்லிமெண்டரி முறை தெரியவில்லை என்று சொல்லலாமே தவிர, வெளியிலே உள்ளவர்கள் இத்தனை ஆண்டு காலம் இல்லாத அளவு நம் சட்ட சபை மிகவும் நல்ல முறையில் நடந்து வருகிறது, பேசுகிறவர்கள் அத்தனை பேர்களும் நன்றாகப் பேசுகிறார்கள், எதிர் கட்சியில் இருக்கிறவர்கள் நன்றாகப் பேசுகிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட குறைகளை எடுத்துச் சொல்லுகிற முறையில் தைரியத்தோடு பேசுகிறார்கள் என்று பேசிவருகிறார்கள். இந்தச் சட்ட சபையிலேயே இதற்கு முன்னால் நடந்த நடவடிக்கைகளை எடுத்துப் படித்ததிலிருந்து, பேசியிருப்பதைப் பார்த்ததிலிருந்துகூட தெரியவருகிறது. இப்போது ஆளும் கட்சி செய்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டும் தன்மைக்கு, கண்டித்துப் பேசும் அளவுக்கு ஆளும் கட்சிக்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் எங்களைப் பின்பற்றுகிறார்கள். எங்களோடு சேர வேண்டியவர்கள்தான் என்று பொருள். ஓட்டுப் போடுகிற நேரத்தில் வேண்டுமானால் அந்தக் கட்சியோடு ஓட்டுப் போட்டு விட்டு, பேசுகிற நேரத்தில் எங்களோடு சேர்ந்து பேசுகிறார்கள் என்று கூறத்தக்க அளவுக்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்பது தெரியும்.

11 0 எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சில கருத்துக்களைச் சொல்லுகிறார்கள் என்றால், அதைத் தவறாக எடுத்துக் கொள்ள முடியாது. உதாரணமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரி, ஒரு போராட்டத்தை நடத்தினோம். விலைவாசிகளைக் குறைக்க வேண்டும் என்பது ஒரு கட்சிப் போராட்டம் மட்டுமன்று. உண்மையிலே அது ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்களை சார்ந்தது மட்டுமல்லாமல், எங்களுக்கு மட்டுமல்லாமல், எல்லோருக்கும் பொதுவான பிரச்னை. ஆளும் கட்சிக்காரர்கள் வெளியிலே இல்லாததால், அவர்கள் அதைச் செய்ய முடியாது. அன்றைக்கு வெள்ளைக்காரனோடு அவனை விரட்ட காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்தினார்கள். ஆட்சியிலிருப்பதால் அவர்களே



இன்றைக்கு இந்தப் போராட்டத்தையும் நடத்த முடியாது. மக்களின் சார்பில் நாங்கள்தான் அந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும், அதனால் நடத்தினோம். அது எவ்விதத்திலும் ஒவ்வாதது அல்ல. விலைவாசிகளைக் குறைக்க வேண்டும் என்று ஆளும் கட்சிக்காரர்களும் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. அதிலேயும், மத்திய சர்க்கார் வரியினால், நம் மாநில சர்க்கார் பாதிக்கப்படவில்லை என்று சொல்லிவிட முடியாது. உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விலைவாசிக் கட்டுப்பாடு இல்லாததனால், மத்திய சர்க்காரில் பட்ஜெட்டை அங்கே சபையில் படித்தவுடனேயே, இங்கே பல சாமான்கள் விலை ஏறிவிட்டன, பல சாமான்கள் பதுங்கி விட்டன. அவைகளைக் கண்டு பிடிக்க இந்த சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருந்தது? பெட்ரோல் விலை ஏறப் போகிறது என்று தெரிந்த அன்றைய தினமே, பெட்ரோல் விலை ஏறிவிட்டது. மண்ணெண்ணெய் சென்னையில் சில நாட்களுக்குக் கிடைக்கவே இல்லை. பிற்பாடு அதிக விலைக்கு விற்கப்பட்டது. அப்படி விலை ஏறுவதாக இருந்தாலும், ஒரு குறிப்பிட்ட மாதம், தேதியிலிருந்து என்று இல்லாமல், மார்ச்சிலிருந்து, ஏப்ரலிலிருந்து என்று இல்லாமல், பட்ஜெட் வெளியான அன்றைக்கே இங்கே விலை ஏறிவிட்டது. இது சம்மந்தமாக பல வழக்குகள் பல மாநிலங்களில் கண்டு பிடிக்கப்பட்டு, 01 வழக்குகள் ஆக்ராவில் கண்டு பிடிக்கப்பட்டு இருப்பதாக பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆனால் நம் சர்க்காரால், நம் தமிழ் நாட்டில் இதுவரை இப்படிப்பட்ட வழக்குகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறதா, எவ்வளவு கண்டு பிடிக்கப்பட்டு இருக்கிறது. இதை யோசிக்க வேண்டும். ஒன்றுமே நடக்கவில்லையா? ஒருக்கால் பிடிக்காததற்குக் காரணம் பதுக்கல்காரர்களுக்கும், இந்த சர்க்காருக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதோ என்று சந்தேகப்படும்படிதான் இருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். அதில் தவறு என்ன? எனவேதான், இப்படிக் கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்த பிரச்சினைகளைப் பார்க்காமல் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள், என்று பெரு நோக்கத்தோடு அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார், பதுக்கல்காரர்களும், சர்க்காரும் சேர்ந்திருக்கிறது என்று மெம்பர் சொன்னார்கள். அது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The hon. Member may continue his speech.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அடுத்து, எல்லா கடைகளுக்கு முன்பும் விலைப் பட்டியல்கள் எழுதி வைக்கப்பட வேண்டும் என்று கேள்வி நேரத்தின்போது கேட்டதற்கு வேளாண்மை அமைச்சர் அது தேவை இல்லை என்றார்கள். ஆளும் கட்சி அங்கத்தினர்களும் அது அவசியம் என்று சொன்னார்கள். அந்த போர்டு

கள் தமிழிலே வைக்கப்படுவது நல்லது. என்ன பொருள்கள் எவ்வளவு இருக்கின்றன, பொருள்களின் விலை என்ன என்ற பட்டியல் இருந்தால் நல்லதாக இருக்கும். அப்படிப்பட்ட பலகைகளை தமிழில் எழுதி வைக்க வேண்டும். சமீபத்திலே ஒரு ஓட்டலிலே கூட ஒரு தகராறு ஏற்பட்டது. அப்படிப் பட்ட பட்டியல் தமிழிலே இல்லாததால் வெளியூர் ஆள் ஒருவர் சாமான் என்ன விலை என்று தெரியாமல் சாப்பிட்டுவிட்டு, பிறகு அவன் ரயிலுக்குக் கடன் வாங்கிக் கொண்டு போகும் நிலை ஏற்பட்டது. சாமான் விலைகள் தெரிந்தால் நல்லதாக இருக்கும். ஓட்டல்களில் தமிழிலேயே போர்டுகள் வைக்க முன்வரவேண்டும்.

கூட்டுறவு முறையைப் பற்றி நான் சிறை மானியத்தின் போது சொன்னேன். கோயம்புத்தூரில் வேண்டிய ஒருவர் கூட்டுறவு சங்கத் தலைவராக இருப்பதால் சரக்கு காண்டிராக்ட், ஒப்பந்தம் மூலம் இல்லாமல் சாமான்களில் சிலவற்றை மட்டும் அவருக்கு கொடுத்தார்கள். அதைப் பற்றி பதில் சொல்லும் போது அமைச்சர் குறிப்பிட்டார்கள், அவருடைய விலை டெண்டர் விலையை விட குறைவு என்று. நிச்சயமாகச் சொல்லுகிறேன் அது சரியல்ல. அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று. அப்புடிப்பட்ட தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுக்கக் கூடாது. அவரும் ஓபன் டெண்டரில் கலந்து கொள்ளட்டும். அப்படி ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தில் கொடுத்திருப்பது சரியாகாது. அதைத் தயவு செய்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நிர்வாகத்தைப் பொருத்த வரை, அமைச்சர் சொன்னார்கள் வெள்ளைக்காரன் அமைத்த அமைப்பு முறையே நடைபெறுகிறது என்று. வெள்ளைக்காரன் ஏற்படுத்தியதில் பல மாற்றங்கள் செய்திருக்கிறோம். வெள்ளைக்காரன் அமைப்பில் இருந்த மாவட்ட மன்றம் இன்று இல்லை. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களாகப் போட்டு இருக்கிறோம். அவ்வளவுக்கும் அதிகமாக அதிகாரிகள் இன்றைக்கு இருக்கிறார்கள். இருந்தும் தாமதம் ஏற்படுகிறது. அப்பொழுது கலெக்டரைப் பார்ப்பதற்கும், இப்பொழுது பார்ப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் கலெக்டரைப் பார்ப்பது கடினம். இப்பொழுது அமைச்சரவர்களும் மற்றவர்களும் கலெக்டர்களை சாதாரணமாகப் பார்க்கலாம் என்று சொல்லுவதால், கலெக்டர் தானே பரவாயில்லை இப்பொழுதே பேசலாம் என்ற அளவுக்கு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், கலெக்டரிலிருந்து தலையாரிவரை ஒவ்வொருவராக பேப்பர்களைப் பார்த்து அனுப்பும் முறையில் இருப்பதால், தாமதம் மட்டுமல்ல செலவும் அதிகமாக ஏற்படுகிறது. அந்த அமைப்பு முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது போலவே, நமது எஸ்டிமேட் கமிட்டி தங்கள் ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே பஸ் போக்குவரத்தைப் பொறுத்த வரை உச்ச வரம்பு கட்ட வேண்டும் என்று



ஒரு சிபாரிசு செய்திருக்கிறார்கள். சபையிலே நாம் எவ்வளவோ பேசுகிறோம். அவைகளை எல்லாம் உடனடியாகக் கவனிக்க முடியா விட்டாலும், நம்மால் நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டி சிபாரிசு செய்திருப்பதையாவது பரிசீலனை செய்து அமுலாக்க வேண்டும்.

முன்பு எம்.எல்.ஏ.-க்களுக்கு கார் வசதி கொடுக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது இல்லை. எம்.பி. க்களுக்கு இருக்கிறது. ஆனால் எம்.எல்.ஏ.-க்களுக்கு சின்ன கார் இல்லாததால் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. எம்.பி.-க்கள் மாதிரி அல்ல இவர்கள் தங்கள் தொகுதியில், தூங்கி எழுந்திருந்தால், பலர் வருகிறார்கள். குடும்பத் தகராறு முதல், கிராம பிரச்சினை வரை எல்லாவற்றையும் கேட்டு தீர்க்க வேண்டியிருக்கிறது. வந்தவர்களை வீட்டில் உட்காருங்கள் என்று சொல்லக் கூட அவர்களிடம் வசதியில்லை. வீட்டுத் தகராறு, வயல் தகராறு, வரப்புத் தகராறு, வாய்க்கால் தகராறு என்று எவ்வளவோ பிரச்சினைகள். அவற்றைக் கவனிக்க வில்லையென்றால், அவர்கள் "இதற்குத்தானா ஓட்டுப் போட்டோம்" என்று வருத்தப் படுகிறார்கள். ஆகவே, எம்.எல்.ஏ.-க்கள் பல இடங்களுக்கும் தங்கள் தொகுதியில் போய் வர சௌகரியமாக இருக்க ஒரு சின்ன கார் வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். முன்பு இருந்த முறையை திரும்பவும் கொடுக்க வேண்டும் என்று தான் கேட்டுக்கொள்ளுகிறேன். (குறுக்கீடு) இனாமாக இல்லை; விலைக்குத்தான். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பொற்கொல்லர்கள் பிரச்னையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி முடிக்கிறேன். பொதுவாக, பொற்கொல்லர்கள் பிரச்னை கவனிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே தவிர, என்ன நிவாரணம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி கேள்வி கேட்கப்படுகின்ற நேரத்திலும் சரி, வேறு பல நேரங்களிலும் சரி, தெளிவுபடுத்தப்படவில்லை. 'உங்களுக்கு இருக்கிற அக்கறையைவிட எங்களுக்கு ஜாஸ்தி அக்கறை இருக்கிறது நீங்கள் இதைப்பற்றிச் சொல்லாமல் இருந்தாலே நல்லதாக இருக்கும் என்றெல்லாம் பதில் சொல்லப்படுகிறதே தவிர, சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன? இந்த ஊரில் இவ்வளவு பேர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. அவர்களுக்கு தயவு செய்து நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பொற்கொல்லர்கள் பற்றி சொல்லும்போது, சிலர் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால், பத்திரிகை செய்தியை வைத்துக்கொண்டு சொல்லக்கூடாது என்று பதில் தரப்படுகிறது. அவரவர்கள் ஊரிலே தானே சாவார்கள். இதற்காக பட்டணத்திற்கு வந்து மந்திரிகள் வீட்டிற்கு முன்னால் சாவார்களா? எவ்வளவோ பொற்கொல்லர்கள் பிணங்கள் விழுந்திருக்கின்றன. எங்கள் மாவட்டத்திலே கூட நேற்று ஒருவர் இறந்திருக்கிறார். இது அங்கு

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [29th March 1963

வந்திருந்த அமைச்சர்களுக்குத் தெரியும். எங்கள் கண் முன்னால் தான் சாகவேண்டும் என்று எப்படி சொல்ல முடியும்? எவ்வளவோ பொற்கொல்லர்கள் எங்கள் மாவட்டத்தில் பிச்சை எடுக்கிறார்கள். திருச்சி, கோவை மாவட்டங்களில் தான் பொற் கொல்லர்கள், செயற்கை வைரக் கல் தொழிலாளர்கள் எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு அதிகமாக இருக்கிறார்கள். செயற்கை வைர தொழிலாளர்கள் தளம் வாங்கி, சாணைபிடித்து பட்டை தீட்டி, கடைக்கு கொண்டு வந்து கொடுக்கிறார்கள். கல் சாணை பிடிப்பது கிராமப்புறங்களிலுள்ள தொழிலாளிகளுக்கு ஒரு குடிசைத் தொழிலாக இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் ஆண்கள், பெண்கள், எல்லோரும் சேர்ந்து வேலை செய்வார்கள். பெண்கள் தளத்தை அரக்கில் பதித்துக்கொடுக்கிறார்கள். கல் பட்டரை தொழில் குடிசைத் தொழிலாக இருந்துவருகிறது. என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 5,000, 6,000 பேர்கள் இருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் 75,000, 80,000 பேர்கள் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நல்ல நகை செய்பவர்கள் பொற்கொல்லர்கள் திருச்சி, கோவை மாவட்டத்தில் தான் இருக் கிறார்கள். இன்றைக்கு 100-க்கு 85 பேர்கள், 90 பேர்கள் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். செயற்கை வைரத் தொழிலாளர்கள் திருச்சி, கோவையில் தான் அதிகம். பட்டை தீட்டுகின்ற, சாணை பிடிக்கின்ற ஏழைத் தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். அந்தக் கல்லை மறுபடியும் சுத்தமில்லாத தங்கத்தில் வைக்க முடியாது என்ற காரணத்தினால் அவர்களும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே, சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது சாதாரண பிரச்னை அல்ல. பொற்கொல்லர்கள் பிரச்னை பெரிய பிரச்னை. எனவே அரசாங்கம் இது பற்றி உடன டியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாய்மார்கள் யுத்த நிதிக்காக பொருள் கேட்ட நேரத்தில் தாலியைக் கழற்றிக் கொடுத்தார்கள். கனம் அங்கத்தினர் ஒருவர் கூட 'நாங்கள் இவ்வளவு கொடுத்தோம்' என்று சொன் னார். தங்கக் கட்டுப்பாடு வந்த பிறகு இப்பொழுதுபோய் கேட்டால் ஒருவர் கூட கொடுக்கமாட்டார்கள். 10, 15 வருஷங் களாக போட்டுக்கொண்டிருந்தவர்கள், வேறு பின்னால் செய்து கொள்ளலாம் என்று நம்பி கொடுத்தார்கள். அவர்களை மோசம் செய்யக்கூடாது. தயவு செய்து அவர்களுக்காகவாவது நிச்சயம் வழிவகை செய்ய வேண்டும். வட நாட்டிலிருக்கும் தாலிக்கும், தமிழ் நாட்டிலிருக்கும் தாலிக்கும் வித்தியாசம் இருக்கிறது. தமிழ் நாட்டில் பல தினுசான தாலிகள் இருக்கின்றன. நாமம் போட்ட தாலி, விபூதி பூசிக்கொள்கிறவர்களுக்கு வேறு மாதிரி யான தாலி என்றெல்லாம் இருக்கிறது. வட நாட்டில் தாலி கூட் இல்லை. கூரை போன்று செய்து தொங்கவிட்டுக்கொண்டிருப் பார்கள். நம்முடைய பகுதியிலே செயினில் போட்டுக்கொண் டிருக்கும் முதப்பைக் கூட மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றிக்கொண்டிருப்பார்கள். எனவே, தாலி செய்வதற்கு



29th March 1963] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

மட்டுமாவது நல்ல தங்கத்தை அனுமதிக்க வேண்டிய நடவடிக்கை களை எடுத்துக்கொள்ளவேண்டும். தாலி 14 காரட் தங்கத்தில் செய்யக் கூடும் என்று பதில் சொல்லுவார்கள் அமைச்சர் அவர்கள். 14 காரட்டில் செய்து போட்டுக்கொண்டால் புண் வந்துவிடுகிறது. கையில் வாட்சுக்கு சைன் செய்து போட்டுக்கொண்டால் வெய்யில் வந்தால் புண் வந்துவிடுகிறது. குளிர் காலத்தில் வருவதில்லை. தயவு செய்து, தாய்மார்களுக்கு, தங்க நகைகளையெல்லாம் கழற்றிக் கொடுத்தவர்களுக்கு, மறுபடியும் செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் கொடுத்தவர்களுக்கு, வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தங்கக் கட்டுப்பாடு வந்த பிறகு ஒரு நகையும் வெளியில் வரவில்லை என்பது தெரிந்த விஷயம் தான். அம்மாதிரி கழற்றிக் கொடுத்த தாய்மார்களுக்கு நிச்சயம் சலுகை அளிக்கவேண்டும், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலாவது விதிவிலக்கு அளித்து அவர்கள் நகைகள் செய்து கொள்வதற்கு அனுமதி வாங்கித்தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. ஏ. பி. பாலகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின்மீது எனது கருத்துக்களை சிலவற்றைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். தங்கக் கட்டுப்பாடு விஷயமாக இப்பொழுது மக்கள் மத்தியிலே பிரச்னையைக் கிளப்பி வருகிற தலை வர் அவர்கள் முன்பு இதே சென்னை ராஜ்யத்தில் முதல் அமைச்ச ராக இருந்த பொழுது மதுவிலக்கைக் கொண்டுவந்தார்கள் அப்படி மதுவிலக்கைக் கொண்டுவந்தபொழுது, அதன் காரணமாக பல லட்சக்கணக்கான பனை மரம் ஏறுகின்ற தொழிலாளர்கள் வேலை இழந்து நின்றார்கள். அம்மாதிரி நிலையிலே இவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கவேண்டும் என்று சொன்ன பொழுது, பல கோடிக் கணக்கான குடும்பங்கள் மதுவிலக்கு காரணமாக சுபிட்ச மடையும் என்றும் இவர்கள் நல் வாழ்வு 'வாழ்வதற்காக ஒரு சில லட்சம் குடும்பங்கள் நாட்டிற்காக தியாகம் செய்யவேண்டும் என்ற கருத்துத் தான் தேசபற்றுள்ள அனைவர் உள்ளங்களிலும் ஏற்பட்டது. அப்பொழுது வேலை இழந்த மரமேறிகள் செத்து மடிந்துவிடவில்லை. அவர்கள் அந்தத் தொழிலுக்கு ஒரு முழுக்கு போட்டுவிட்டு, ஒவ்வொருவரும் தனித்தனியே வேறு தொழிலில் ஈடுபட்டு, அவர்கள் மேம்பாடு அடைந்துள்ளார்கள் என்பதை இந்த மன்றத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஒரு சில கோடி பேர்கள் சுபிட்சமான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற காரணத் திற்காக, அப்பொழுது மரமேறிகள் வேலையை இழந்து தியாகம் செய்தார்கள். அதன் மூலம் தேசத்திற்கு சேவை செய்தார்கள். இப்பொழுது நம் நாட்டின் மீது சீனாக்காரர்கள் படை எடுத் திருக்கிறார்கள். இந்த நாட்டிற்கு மாபெரும் ஆபத்து ஏற்பட் டிருக்கிறது. நாட்டைப் பாதுகாப்பது அவசியம். இந்த நிலை மையில் அன்னிய நாட்டு செலவாணி வேண்டும் என்பதற்காக தங்கத்தை நாட்டிற்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று சொல்லு கிற காரணத்தினால், ஒரு சிலருக்கு வேலை வாய்ப்பு அற்றிருக்கிற நிலைமையை நாம் நன்றாக அறிவோம். அப்பொழுது இந்த

[திரு. ஏ. பி. பாலகன்] [29th March 1963

மரமேறிகள் சர்க்காரால் இவ்வளவு உதவி செய்யப்படவில்லை ஆனால், இன்றைய சர்க்கார் தேவையான உதவி செய்ய முன் வந்திருக்கிறது. தங்கக் கட்டுப்பாட்டினால் வேலையிழந்தவர்களுக்கு தகுந்த உதவி செய்யத் தயார் என்று சர்க்கார் கூறியிருக்கிறார்கள். நாட்டின் மீது உள்ளபடியே பற்றுள்ளவர்களாக இருந்தால், நாட்டில் இதை ஒரு பிரச்னையாகக் கிளப்பி, நாட்டிற்கு கேடு வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க மாட்டார்கள். நாட்டுப் பற்றுள்ளவர்கள் செய்யக்கூடிய காரியம் என்று இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இப்பொழுதுள்ள சூழ்நிலையில், 1,000; 1,000 வருஷ காலமாக ஊதி; ஊதி; மார்புக்கும்; லங்ஙூக்கும்; கெடுதல் ஏற்பட்டு செத்த பொற்கொல்லர்களுக்கு இப்பொழுது நல்ல எதிர்காலம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் மற்ற தொழில்களில் ஈடுபட்டு, அவர்கள் குடும்பத்தை செம்மையாக நடத்தி, நல்ல முறையில் வாழ்க்கை நடத்தக்கூடிய ஒரு வாய்ப்பு சீனாக்காரர்கள் படை எடுப்பின் நிமித்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையை மனதில் நிலைநிறுத்தி, இதை ஒரு பிரச்னையாகக் கொள்ளாமல் இருப்பது தான் உண்மையான தேச பக்தர்கள் செய்யக்கூடிய காரியம்.

விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற கருத்தோடு, அவர்களுக்கு பல உதவிகள் செய்தாலும்கூட, அதிகமான உற்பத்தி பெருகவேண்டும் என்று சொன்னால், இந்த உதவி நிச்சயம் விவசாயிகளுக்குப் போதாது. ஏனென்றால், பல ஆண்டுகளாக அன்னியர்களுக்கு அடிமையாக இருந்த காரணத்தினால், விவசாயிகள் அலட்சியப் படுத்தப்பட்டார்கள். அவர்கள் சக்தி இழந்து நிற்கின்றார்கள். இந்த நிலைமையில் அவர்கள் தங்கள் காலிலேயே நின்று விவசாய உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுவது நிச்சயமாக நடக்காத காரியம். ஆகவே, சர்க்கார் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக அவர்களுக்கு உதவி செய்கிறார்களோ, அவ்வளவுக்கு நிச்சயம் உற்பத்தி பெருகும் என்றதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இருந்தாலும், இம்மாதிரி உதவிகள் செய்கிறபொழுது அந்த உதவிகள் அனைத்தையுமே விவசாயிகள் அடைய முடியவில்லை. அதில் பல தொல்லைகள், கஷ்டங்கள் இருக்கின்றன. கிராம அதிகாரிகளிடம் சென்று அத்தாட்சி பெறுவதென்றால், அதில் காலதாமதம் ஆகின்றது. இவைகளை எல்லாம் தவிர்க்க, ஆங்காங்கு கிராமங்களில் இருக்கிற பஞ்சாயத்து போர்டுகள் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற சாகுபடி நிலங்கள், விவசாய நிலங்களை யார் சாகுபடி செய்தார்கள் என்ற கணக்கு விபரங்களை எடுத்து பஞ்சாயத்து போர்டுகள் வைத்துக்கொள்ளுவதற்கும் உதவியாக ஒரு சிறிய அதிகாரியை ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஏற்படுத்தினால், சாகுபடி செய்கிறவர்களுக்கு வேண்டிய சர்டிபிகேட் கொடுப்பதற்கும், இந்த நிலம் இன்னாரிடம் இருக்கிறது என்பதற்கும் ஒரு அத்தாட்சி வருஷத்திற்கு ஒரு முறை கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கும், கஷ்டம் மறைந்துவிடும் என்று



29th March 1963] [திரு. ஏ. பி. பாலகன்]

சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்துக்கள் மூலமே இந்த முறைகளை செய்வது வரவேற்கதக்கது. விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளிலிருந்து விடுபடக்கூடிய ஒரு நிலை உருவாக முடியும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி திருநெல்வேலி ஜில்லா, அம்பாசமுத்திரம் தாலூகா, கடயம் தொகுதி. மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து கடனாநதி, ராமநதி என்று இரண்டு நதிகள் வருகின்றன. கடனாநதிக்கு 89 லட்சம் ரூபாய் செலவிலும், ராமநதிக்கு சுமார் 18 லட்சம் ரூபாய் செலவிலும் இரண்டு நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால் ராமநதித் தண்ணீரை பூராவாக பயன்படுத்தி நீர்த்தேக்கம் கட்டுவதற்கு அப்போது தீர்மானிக்கப்படவில்லை. சிறிய அணையாக கட்டவே தீர்மானித்தது. என்னுடைய தொகுதி மிகவும் வாட்சியான தொகுதி. சுமார் 60 சதவிகித பகுதி நீர்ப்பாசன வசதியற்ற பகுதி. மழையை நம்பி விவசாயம் செய்யக்கூடிய பகுதி. இது விஷயமாக சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லாவிற்கு வருகை தந்த கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் அந்த இடங்களைப் பார்வையிட்டார்கள். அவர்கள் வந்த சமயத்தில் என்னுடைய தொகுதி மக்கள் அனைவரும் இந்த ராமநதியில் அதிகமான தண்ணீர் இருக்கிறது. அந்த நீரைப் பூராவும் பயன்படுத்தி அதிக செலவில் விரிவு படுத்தி பெரிய நீர்த்தேக்கமாக ராமநதியில் கட்டித்தர வேண்டுமென்றும், அங்கிருந்து என்னுடைய தொகுதியில் உள்ள சுமார் 25 பஞ்சாயத்துக்கள் அடங்கிய பிற்போக்கான பகுதிக்கு ஒரு கால்வாய் வெட்டி நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டுமென்றும் அமைச்சர் அவர்களிடம் கூறினார்கள். அதே சமயத்தில் கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் ஸ்ரீமான் ராமய்யா அவர்களும் ஸ்ரீவைகுண்டத்தில் விவாதம் நடத்திய போது பிரதம இஞ்சினீயரையும் கலந்துகொண்டு, ராமநதியில் அதிகமாக தண்ணீர் இருக்கிறது என்றும் மேற்படி நதியில் பெரிய நீர்த்தேக்கம் கூடுதல் ரூபாயில் கட்ட வேண்டியதுதான் என்றும் அதன் மூலம் கடையம் தொகுதிக்கு, பாதிக்கப்பட்ட பகுதிக்கு ஒரு வாய்க்கால் வெட்டிக்கொடுக்கவேண்டியது அவசியந்தான் என்றும், நீர்த்தேக்கம் விஷயமாய் மறுபரிசீலனை ( Re-estimate ) செய்ய விரைவில் நடவடிக்கை எடுத்து நீர்தேக்கம் கட்டும் வேலைகளையும் மூன்றாவது ஐந்தாண்டு திட்டம் முடிவதற்குள் கட்டிமுடித்துவிட வேண்டும் என்றும் சொன்னார்கள். அது மிகவும் பாராட்டக்கூடிய விஷயமாகும். இது குறித்து என்னுடைய தொகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்து ஆரவாரம் செய்தார்கள். அவர்களுடைய சந்தோஷத்தை நான் கனம் உதவி சபாநாயகர் மூலம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் இந்த கடனாநதியில் அணை கட்ட 83 லட்சம் ரூபாய் செலவில் எஸ்டிமேட் போடப்பட்டிருந்தாலும்கூட இதிலிருந்து மிகவும் அதிகமாக சர்பிளஸ் வாட்டர் அதாவது மிகுதியாக. மரு

[திரு. ஏ. பி. பாலகன்] [29th March 1963

கால் விழுகிறது. ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து அனாவசியமாக தண்ணீர் சமுத்திரத்தில் போய் விழுகிறது. 89 லட்சம் ரூபாய் என்பதை ரீ-எஸ்டிமேட் செய்து இன்னும் அதிகமான தண்ணீரை தேக்கக்கூடிய ஒரு பெரிய அணைக்கட்டு கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்த கடனாநதியையும், ராமநதியையும் ஒன்றாக இணைத்து பெரிய நீர்த்தேக்கமாக அமைத்தால், அம்பாசமுத்திரம் தாலூகாவில் இருக்கும் மணிமுத்தாறு, பாபநாசம் நீர்த்தேக்கங்களைவிட மிகப் பெரிய நீர்த்தேக்கமாக கட்டி பல்லாயிரக்கணக்கான தரிசு நிலங்களுக்கு புதிய நீர்ப்பாசனம் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது வேஸ்டாக போகக்கூடிய தண்ணீரை எல்லாம் பயன்படுத்திக்கொள்ள நல்ல வாய்ப்பு கடயம் தொகுதியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கூறியதில் எதையாவது செய்து, அல்லது முடியாவிட்டால் இந்த ராமநதி நீர்த்தேக்கத்தையாவது அதிக ரூபாய் செலவில் பெரிய தாகக்கட்டி, கிராமப்பகுதிக்கு புதிய வாய்க்காலும் வெட்டி மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவடையும் முன்பு, அதன் இறுதிக்கட்டம் வருவதற்குள் வேலையை முடித்துத்தர வேண்டுமென்று சர்க்காரை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் கடந்த சட்டமன்ற கூட்டத்தில் என்னுடைய தொகுதியில் இரும்புத் தாதுக்கள் கிடைப்பதாக தெரிவித்தேன். சமீபத்தில் திருநெல்வேலிக்கு கனம் பொதுப்பணித்துறை அமைச்சரும், விவசாயத்துறை அமைச்சரும் வருகை தந்தபோது அங்கு இரும்புக்கனிகள் கிடைக்கிற பூமிக்கு அடியில் கிடைக்கிற பகுதியை எனது கடையம் தொகுதியில் நேரில் பார்வையிட்டார்கள். அவர்கள் அங்கு வருகை செய்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் அவர்கள் அங்கு விஜயம் செய்த பிற்பாடு, இவர்கள் இரும்புக்கனிகளை பார்வை செய்த இடத்திலிருந்து சுமார் 15 மைலுக்கு அப்பால் எனது தொகுதியில் உள்ள சில பகுதிகளில் இரும்பு தாதுகளை பார்வை செய்தேன். நான் அவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு வந்து மெட்ராஸ் ஸிடியிலுள்ள ஜியாலஜிஸ்டுகளிடம் கொடுத்து சோதனைச் செய்யச் சொல்லி இருக்கின்றேன். அவர்கள் பரிசோதித்துக் கூறுவதாக சொல்லியிருக்கிறார்கள். இரும்பு கனிகளில் மாக்னெடிக் பவர் அதாவது காந்தம் இழுக்கக்கூடிய சக்தியுள்ள இரும்பு, காந்தம் இழுக்காத இரும்பு என்று இரண்டு விதமான இரும்புகள் இருப்பதாகக் கூறினார்கள். தொழிலமைச்சர் அவர்களிடமும் இதைப்பற்றி கூறினேன். அவர்கள் பதில் சொன்னார்கள். டில்லியிலிருந்து நிபுணர்களை வரவழைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன் பாலகன் தொகுதிக்கு என்றார்கள். (குறுக்கீடு) கடயம் தொகுதிக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் கடயம் தொகுதியில் பரவலாக 20, 25 மைல் சுற்றளவிற்கு இரும்புத் தாது கிடைக்கிறது என்று



29th March 1963] [திரு. ஏ. பி. பாலகன்]

நிச்சயமாக நம்புகிறோம். சக்தியுள்ள இரும்பாக இருக்கலாம் என்றும் நிச்சயமாக நம்புகிறேன். ஆகவே நிபுணர் குழுவை அனுப்பி நன்றாக பரிசீலனை செய்யவேண்டும். அதன் மூலம் தென் பகுதிக்கு கனரக தொழிற்சாலை இல்லை என்று பொதுமக்கள் மத்தியிலே எண்ணம் நிலவிக்கொண்டு வருகிறதே அதைத் தவிர்த்து இம்மாதிரியான சோதனைகளைச் செய்து ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம்: கனம் சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே நடைபெறுகிற இந்த விவாதத்தில் நானும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று ஆசைப்படுகிறேன்.

கடந்த 1-ம் தேதி முதல் இன்றையவரைக்கும் சர்க்கார் சமர்ப்பித்த பல மானியங்களையும் இன்றையதினம் நிறைவேற்ற அங்கீகாரம் அளிக்கின்ற வகையில் இங்கே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவை உறுப்பினர்கள் மத்தியிலே வைத்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு உறுப்பினர்களும் அவர்களுடைய கருத்துக்களையும், குறைகளையும் மற்றவைகளையும் பற்றி எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்த பிரச்சினைகளை அமைச்சர் அவர்கள் நன்றாக கூர்ந்து கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றார்கள் என்று சொன்னால், ஏதோ பேசிவிட்டுப் போகலாம் என்று அர்த்தமல்ல. இங்கே நாங்கள் அமைச்சர்கள் முகத்தைப் பார்க்கவும், அவர்கள் எங்களுடைய முகத்தைப் பார்க்கவும் என்பதற்காக நாங்கள் இங்கே வரவில்லை. உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிப் புறங்களில் இருக்கின்ற குறைகளையும், அங்குள்ள நிலைமைகளையும் எடுத்துச் சொல்லவும், அவைகளை இந்த ஆட்சியை நடத்துகிற சர்க்கார் செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கையிலேதான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த முறையிலே நாங்கள் சொல்லுகிறோம். அவைகளை எல்லாம் நிறைவேற்றித்தர வேண்டும். கடந்த ஒரு ஆண்டுகாலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் எங்கள் அண்ணா அவர்கள் வளர்த்து விட்ட பணியில், அருமையான கொள்கையில் தவறாமல் நாங்கள் இங்கு எதிர்க்கட்சியாக நடந்துகொண்டிருக்கிறோம். இங்கே ஒவ்வொரு மானியக் கோரிக்கையில் எங்களுடைய தலைவரும் சரி, துணைத்தலைவரும் சரி சுட்டிக்காட்டிய கருத்துக்களை எல்லாம் இந்த சர்க்கார் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள் ஆகும் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நோக்கில் பொதுமக்கள் சில விஷயங்களைச் சொல்லுகிறார்கள். பொதுமக்கள் இந்த சர்க்கார் அலுவலகங்களிலே சில தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தாலும், அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொன்

[திரு. சோ. ஆறுமுகம்] [29th March 1963

12-00 noon. னாலும் நீண்ட நாட்களாக அதற்கான பதிலுக்காக எதிர்பார்க்கக் கூடிய நிலைமைதான் இருக்கிறது. பொதுமக்கள் தங்களுடைய குறைகளைக் குறித்து சர்க்கார் அலுவலகங்களுக்குக் கடிதங்கள் எழுதினால், நீண்ட நாட்களாக அவர்கள் பதிலை எதிர்பார்க்க வேண்டிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை நீடித்துக்கொண்டுதான் இருக்கவேண்டுமா? ஜனநாயகம் என்று நாம் பேசுகின்ற நேரத்தில், மக்கள் தங்களுடைய குறைகளை ஆட்சியாளர்களிடத்தில் எடுத்துச் சொல்கிறார்கள் என்றால் அவர்களுடைய குறைகளைப் போக்குவார்கள் என்ற நம்பிக்கையில் தான் சொல்கிறார்களே தவிர, குறைகளை விண்ணப்பமாக அனுப்பி விட்ட பிறகு, அவற்றைப் பெட்டியிலே போட்டு முடக்கிவிடுவார்கள் என்ற எண்ணத்தில் அனுப்புவது இல்லை. பொது மக்களால் அனுப்பப்படும் குறைகளை, விண்ணப்பங்களை அவ்வப்போது உடனுக்குடன் கவனிக்க வேண்டும். குறைந்தது, மூன்று மாதங்களுக்குள்ளாகவாவது விண்ணப்பங்களுக்குத் தக்க பதில் அளித்தால்தான் என்ன முடிவு என்று தெரிந்து, அதற்கு மேற்பட்ட காரியத்தை நடைமுறையில் செயல்படுத்த முடியும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தாலுக்கா ஆபீசுக்கோ கலெக்டராபீசுக்கோ செல்கிறோம் அப்படிப்பட்ட நேரங்களில், தனிப்பட்ட யாராவது அங்கு சென்று, அங்குள்ள அலுவலகர்களை அணுக முடிகிறதா என்றால் நிச்சயமாக முடியவில்லை. ப்யூனைப் பார்த்தால், 'அதிகாரி இப்பொழுது ஏதோ வேலையாக இருக்கிறார்' என்று சொல்வார். அதைக் கேட்டு, கொஞ்ச நேரம் உட்கார்ந்து பார்த்துவிட்டு, ஏதோ அலுவலகத்திற்குச் சென்றோம், பார்த்தோம் என்கிற திருப்தியோடு திரும்பவேண்டியிருக்கிறது. அதிகாரியைப் பார்த்து, உண்டு, இல்லை என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை நம்முடைய நாட்டில் நீடித்துக்கொண்டிருக்குமானால், சாதாரண மக்களுக்கு ஒரு நல்ல வழி ஏற்படாது. ஆகவே, ஒவ்வொரு தாலுக்கா ஆபீசிலும், ஒவ்வொரு கலெக்டர் ஆபீசிலும் என்க்வையரி ஆபீஸ் வைத்துக்கொண்டு, சட்ட மன்ற அலுவலகத்தில் எப்படி என்க்வையரி ஆபீஸ் இருக்கிறதோ அது போல வைத்துக்கொண்டு, வருகிறவர்களுடைய பிரச்சினையை விசாரித்துத் தகவல் தெரிந்துகொள்ளக்கூடிய அமைப்பை கட்டாயமாக ஏற்படுத்தவேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன்.

நம்முடைய நாட்டில் தொழிற்சாலைகளையும், நீர்ப்பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றக்கூடியவைகளை நிறைவேற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இனி நிறைவேற்றுவதற்கில்லை என்றும் சொல்கிறார்கள். ஏன் இல்லை? இந்த நாட்டில் எத்தனை தொழிற்சாலைகளை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்? எந்த அளவுக்குத் தொழில் வளம் ஏற்பட்டிருக்கிறது? தொழிற்சாலைகளின் மூலம் எந்த அளவுக்கு இந்த சர்க்காருக்கு நல்ல வருவாய் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம்? இன்னும் இல்லையே. தமிழகம் தொழில் வளத்தில் மிகவும் பின்தங்கியிருக்கிறது. மற்ற



29th March 1963] [திரு. சோ. ஆறுமுகம்]

மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் நேரத்தில் எல்லாத் தொழில் வளங்களிலும் நாம் குறைந்தவர்களாகத்தான் இருக்கிறோம். குறைந்த தொகையைத்தான் நாம் மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொண்டு வருகிறோமே தவிர, அதிகமான தொகையை நாம் பெறவில்லை. இங்கே இன்னும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. அவைகளெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும். சேலத்தில் திருமணிமுத்தாறு திட்டம் பரிசீலனையில் இருந்தது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அதைப் பரிசீலனை செய்வதாகக் கேள்விப்பட்டோம். அது கைவிடப்பட்டதோ அல்லது பரிசீலனை செய்யப்படவில்லையோ நமக்குத் தெரியவில்லை. ஆனால், நான் இந்த சர்க்காரை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வேன். எங்களுடைய சேலம் மாவட்டம் மிகவும் பஞ்சப் பிரதேசமாகக் காட்சியளிக்கிறது. சேலம் தாலுக்கா, ராசிபுரம் தாலுக்கா, நாமக்கல் தாலுக்கா, திருச்செங்கோடு தாலுக்கா போன்ற பகுதிகளுக்குச் சென்று பார்த்தால், அங்கே மக்கள் வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அங்கே மக்கள் எப்படி வாழ முடியும் என்ற நிலைமை இருக்கிறது. சேலம் மாவட்டத்தில் திருமணிமுத்தாறு திட்டத்தை அடுத்த ஆண்டிலாவது இந்த சர்க்கார் பரிசீலனை செய்து, அந்தத் திருமணிமுத்தாற்றில் தண்ணீர் கொண்டுவரும் பணியை எடுத்துக் கொண்டால் அந்தப் பகுதி மக்கள் வாழ்வதற்கும், நல்ல நீர்ப்பாசன வசதி செய்துகொடுப்பதற்கும் நல்லதோர் வகை ஏற்படும். அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், சாதாரண மக்களும் அப்பொழுதுதான் நல்வாழ்வு வாழ முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

லஞ்ச ஊழல்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த லஞ்ச ஊழல்களைத் தடுக்கவேண்டும் என்று எல்லோரும் எண்ணுகிறோம். எங்கே லஞ்ச ஊழல் ஏற்படுகிறது? பெரிய அதிகாரிகளிடத்திலா என்றால் அங்கு இல்லை. சாதாரணமாக, குறைந்த சம்பளம் வாங்குபவர்களிடத்தில்தான் இப்படிப்பட்ட லஞ்ச ஊழல்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்றால் அவர்கள்மீது குற்றம் இல்லை. இதை நான் பகிரங்கமாகச் சொல்வேன். கடைநிலை ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு, அவர்கள் குடும்பத்தை எவ்வாறு நடத்த முடியும்? அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவேதான் இப்படிப்பட்ட சாதாரண கடைநிலை ஊழியர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கல்வித் தரம் உயரவேண்டுமென்று எண்ணுகிறோம். கல்வித் தரம் உயர வேண்டுமானால், ஆரம்ப, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுடைய சம்பளத்தை நிச்சயமாக இந்தச் சர்க்கார் உயர்த்த வேண்டும். தொண்ணூறு ரூபாய், எண்பது ரூபாய் வாங்கிக் கொண்டு அவர்கள் எப்படி தங்களுடைய குடும்பத்தைக்

[திரு. சோ. ஆறுமுகம்] [29th March 1963

பாற்ற முடியும் என்று இந்த சர்க்கார் நினைத்துக்கொண்டிருக்கிறது? சட்ட மன்ற உறுப்பினர் நாளொன்றுக்கு 15 ரூபாய் அலவன்ஸ் வாங்குகிறார்கள். அதுகூட அவர்களுக்குப் போதாது என்கிற நிலையில், வீட்டிலிருந்து சிலர் பணம் வரவழைக்க வேண்டியிருக்கிறது. எண்பது ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு ஆசிரியர், மனைவி மக்களைக் காப்பாற்றி, வீட்டு வாடகை முதலியவற்றைக் கொடுத்து, அவர் எப்படி அந்தத் தொழிலைச் செம்மையாக நடத்த வழிவகை ஏற்படும்? ஆகவே, இப்படிப்பட்ட ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மானேஜ்மென்டார் நடத்தும் பள்ளிகளையெல்லாம் சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டும். தனியாரிடமே அவற்றை விட்டுவைப்பது அவ்வளவு நல்லதல்ல என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவின் மீது நடைபெறும் இந்த விவாதத்தில் இரண்டே இரண்டு அம்சங்களை மட்டும் உங்கள் மூலமாக இந்தச் சபையின் முன்னால் வைக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

கனம் உறுப்பினர் திரு. சசிவர்ணத் தேவர் அவர்களும் எங்களுடைய கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர்கள் திரு. கமலநாதன், திரு. வடிவேல், திரு. தர்மலிங்கம் முதலிய பல நண்பர்களும் குறிப்பிட்ட ஒரு விவரத்தைப் பற்றி மிகப் புகழ் மிகுந்த பத்திரிகையும் நல்ல பாரம்பரியத்தை கொண்டதுமான ஆங்கில தினசரியான 'மெயில்' பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிற இரண்டு மூன்று வாசகங்களை உங்களது அனுமதியின் பேரில் இந்தச் சபையில் படித்து என்னுடைய உரையைத் துவங்கலாம் என்று நான் கருதுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : Is the hon. Member going to read extracts from newspapers?

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir.

MR. DEPUTY SPEAKER : I think it is not allowed. I don't think it is relevant.

SRI K. A. MATHIALAGAN : Only a few lines, Sir, I want to read.

"It is no use putting the blame on the Opposition. The Opposition in Parliament as well as in State Legislatures has long been labouring under a growing sense of frustration, which Ministerial reluctance to answer queries has done nothing to mitigate. This also accounts for public apathy to issues of grave importance. The impression is gaining strength that reluctance to answer the Opposition's queries springs from anxiety to conceal things. The Government does not seem to be aware that refusal to accept the Opposition's challenges gravely damages its own case and that the people are likely to conclude that such refusal amounts to a plea of guilty to any allegations that may be made. But the people's confidence in the integrity of official and public life is being steadily eroded. The disorderly scenes in legislatures, however deplorable, reflect the anger and frustration of a growing section of people, and it is in the Government's power, as it is in the Government's interest, to ensure that they do not occur."
என்று 'மெயில்' பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



29th March 1963] [Sri K. A. Mathialagan]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு precedent ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கவலையால்தான் நான் சொல்கிறேன். பத்திரிகையை படிக்கக் கூடாது என்பது ஒன்று. பத்திரிகையிலிருந்து குறிப்பிடலாம். ஒரு பத்திரிகையின் தலையங்கத்தில் அந்தப் பத்திரிகையின் கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஏதோ ஒரு பத்திரிகையின் கருத்துக்களை, அந்தப் பத்திரிகையில் வந்ததை அப்படியே எடுத்து இந்த மன்றத்தில் கனம் அங்கத்தினர் படிப்பது நல்லதல்ல என்று தான் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

MR. DEPUTY SPEAKER : I have already stated that it is not relevant.

**திரு. கே. ஏ. மதியழகன் :** எதிர்க்கட்சியினர் இந்த மன்றத்திலே எழுப்புகின்ற வினாக்களுக்கு, பிரச்னைகளுக்கு விளக்கமான பதிலை ஆளும் கட்சியினர்—அமைச்சர்கள் அளிக்காமல் வெறும் கோபதாபத்தைப் பிரதிபலிக்கிற முறையில் நடந்து கொள்வது ஆளும் கட்சியினருக்கே நன்மையளிக்காது என்ற முறையிலே அந்தப் பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது. அந்தப் பத்திரிகையை நான் பாராட்டுகிற நேரத்திலே மிகவும் தாழ்மையாகவும், பணிவுடனும் கேட்டுக் கொள்வேன். இன்றைக்கு இருக்கிற ....

SRI K. T. KOSALRAM : On a point of order, Sir, கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக பார்லிமெண்டரி சம்பிரதாயத்தில் ஒரு பத்திரிகையினுடைய எடிடோரியலைப் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை என்பது என்னுடைய கருத்து. ஆகவே, கனம் மதியழகன் அவர்கள் இந்தச் சபையிலே ஒரு பத்திரிகையின் எடிடோரியலைப் படித்ததை 'புரொசீடிங்ஸ்'-ல் இருந்து எடுத்துவிட நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member, Sri K. A. Mathialagan was referring to the manner in which the question and answers were dealt within the House and in support of his contention, he has read an extract from the editorial of the newspaper I do not think there is anything improper and therefore it need not be expunged from the proceedings.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I submit, Sir, the point raised by the hon. Member, Sri K. T. Kosalram may be examined.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அந்த வகையில் நம்முடைய அமைச்சர்கள், குறிப்பாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சிலவற்றைச் சொன்னார்கள். குத்தலாகச் சொல்கிறார்கள், வேறுமாதிரியாகச் சொல்கிறார்கள் என்றாலும், ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன். இந்த மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் 50 பேரோடு வந்திருக்கிறது. இந்தியாவிலுள்ள மாகாணங்களிலேயே மிகப் பெரிய கட்சியாக—எதிர்க் கட்சி என்றுகூடச் சொல்லமாட்டேன்—மாற்றுக் கட்சியாக, நாளையதினம் இந்த அரசாங்கத்தை ஏற்று நடத்த வேண்டிய கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திடம் காட்டவேண்டிய மரியாதையைக் காட்டுங்கள் என்று தான் நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய மாபெரும் கட்சியின் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு நல்ல வகையிலே பதிலளிக்க வேண்டும், எங்களுடைய உணர்வுகளை மதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இவ்வளவும் சொல்லுகிறேன். என்னைப் பொறுத்தவரையில் கனம் நிதியமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உருவத்தால் 50 பேர்களே தவிர, உள்ளத்தால் ஒருவரே, திராவிட முன்னேற்றக் கழகம் முதல் முதல் துவங்கிய நேரத்தில், அப்போது நான் சட்டக்கல்லூரி மாணவனாக இருந்த நேரத்தில், என்னுடைய நோட்டுப் புத்தகங்களிலேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளே வகுக்கப்பட்டது. என்னுடைய தலைவருடைய அரும்பெரும் நம்பிக்கையைப் பெற்றவன் நான். 'மதியழகனுக்குக் கொள்கை தான் மூச்சு' என்ற பாராட்டை நான் என்னுடைய தலைவரிடமிருந்து பெற்றிருக்கிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களுக்குத் திட்டவட்டமான பதிலை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அரசாங்க பஸ் போக்குவரத்து நிர்வாகத்தின் நடைமுறைகளை ஆராயத் தனி குழு ஒன்று நியமிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது கனம் வெங்கட்டராமன் அவர்கள் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பார்த்து, 'பஸ் டிரான்ஸ்போர்ட்டைப் பற்றி ஒன்றும் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள்' என்று டியூடோரியல் காலேஜ் பேராசிரியரைப் போல் பதில் சொன்னார்கள். அந்தத் துறையிலே இந்த நாட்டு எஜமானர்களின் பணம் ஐந்து கோடி அளவுக்கு மூலதனமாக இடப்பட்டிருக்கிறது என்பதைக் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் உணர்ந்து கவலைப்பட்டிருக்க வேண்டும். அதே போன்று 'ஸ்டீல் ரோலிங் மில்' ஏன் ஏற்படுத்தப்படவில்லை என்று நான் கேட்டதற்கு, 'காரியதரிசியைக் கேட்டால் பதில் சொல்லுவார்கள்' என்று பதில் சொன்னார்கள். 'பட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கு விலை இத்தனை பணம்' என்று பதில் சொல்வது போல் நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் கூற



கிறார்கள். இந்தச் சபைக்கு உரிமை இருக்கிறது, கடமைகள் இருக்கின்றன. அந்தக் கடமைகளை நிறைவேற்ற நல்ல நிலைமைகளை உருவாக்கக் கூடிய வகையில் இந்த மன்றத்தின் விவாதங்களைச் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

உரப்பனூர் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். நண்பர் ஆர். வி. சாமிநாதன் அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும் அந்த நிலைமைகளைப் பற்றி நல்ல வகையிலே எடுத்துரைத்தார்கள். உரப்பனூரில் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்த்திருக்கலாம். அதற்கு வாய்ப்பு இருந்தது. உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். மூன்று மாதங்களுக்கு முன்பு அதே மதுரையில் சிந்தாமணி என்ற ஊரில் தகராறு வந்தது. அந்தத் தகராறை வளரவொட்டாமல் தடுப்பதற்காக இரண்டு கட்சிகளைச் சேர்ந்தவர்களிலும் 15, 20 பேர்களைக் கைதிகளாகப் பிடித்தார்கள். மதுரைப் போலீஸ் அதிகாரிகள் அந்த நடவடிக்கையை அப்போது எடுத்திருக்கிறார்கள். அவன்யாபுரம் என்ற ஊரில் தேவர் குலத்திற்கும் ஹரிஜனங்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. அப்போதும் இரு தரப்பிலிருந்தும் பாதுகாப்புக் கைதிகளாகப் பிடித்து வைத்தார்கள். உறுப்பினர் பேசியது வரலாறு என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறேன். இவ்வளவு தகராறு பிடித்த இடத்தில் ஏன் முன்னாலேயே அவர்களைப் பாதுகாப்புக் கைதிகளாகப் பிடித்து வைக்கவில்லை? ஏன் 144 சட்டத்தைக் கொஞ்சம் முன்னதாகவே போட்டிருக்கக் கூடாது? எஸ்.ஏ.பி.-க்களை வைத்து முன்னரேயே இதைத் தடுத்திருக்கலாம். இன்றைக்கு சிவகாசியிலே எஸ்.ஏ.பி. இருக்கிறார்கள்; முதுகளத்தூரிலே இருக்கிறார்கள்; கமுதியிலே இருக்கிறார்கள், திருப்பரங்குன்றத்திலே இருக்கிறார்கள். மதுரையிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள இந்த இடத்தில் ஏன் இந்த விசேஷ போலீஸ் படையினரைப் போட்டிருக்கக் கூடாது? இவர்களுக்காக 15,000 ரூபாய் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே புதிதாக ஒதுக்கியிருக்கிறோம். இதை நீங்கள் செய்திருக்கலாம்; 144-ஐ போட்டிருக்கலாம். இந்தக் காரியங்களையெல்லாம் செய்யப் போலீசார் நிச்சயமாகத் தவறி இருக்கிறார்கள். போலீசார் முதலில் ஏன் கண்ணீர்ப் புகையை உபயோகித்திருக்கக்கூடாது? இதற்கு முன்பு சென்னை நகரத்தில் கண்ணீர்ப் புகையை உபயோகித்துத் தவிர்க்கவில்லையா? மூன்று உயிர்களைப் பலி வாங்கி விட்டார்களே, என்று கேட்டால், அமைச்சர் அவர்கள் 'நூறு உயிர்களைக் காப்பாற்ற மூன்று உயிர்களைப் பலியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது' என்று சொன்னார்கள். அது ஒரு நல்ல போலீஸ் ராஜ்யத்திற்கு வேண்டுமானால் அது நல்ல சித்தாந்தமாக இருக்கலாம். க்ஷேமநல சர்க்காருக்கு அது ஒரு நல்ல சித்தாந்தம் அல்ல. போலீஸ் மானியத்திலே சொன்னதுபோல் போலீஸ்காரர்கள் காரியத்தைச் செய்து முடித்து விட்டு அது சரியென்று பின்னால் வாதிக்கிறார்கள். அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று மன்ற அங்கத்தினர்களான திரு. மாதவன் அவர்களும்,

திரு. மூக்கையாத் தேவர் அவர்களும் கேட்ட நேரத்தில், 'அதைப் பற்றி விசாரிக்க இந்த இலாகாவே போதும்' என்று மந்திரியவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இந்த மாதிரி நிலைமை ஒன்றைப் பற்றி விசாரிக்க முன்பு தூத்துக்குடியிலே வேறு ஜில்லா கலெக்டர்களைப் போட்டார்கள். ஆனால் இன்றையதினம் அந்தப் பகுதியிலுள்ள கலெக்டரையே போட்டிருக்கிறார்கள். 'சுதேசமித்திரன்' இதைப் பற்றிய தலையங்கள் எழுதியிருக்கிறது, 'முரசொலி' எழுதவில்லை, 'திராவிட நாடு' எழுதவில்லை. 'பொதுமக்களுக்கு அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது, அந்த அவநம்பிக்கையை நீக்குங்கள்' என்று 80 வருஷமாக நடந்து வரக்கூடிய 'சுதேசமித்திரன்' பத்திரிகை தலையங்கமாக எழுதியிருக்கிறது. மூன்று உயிர்கள் பாதிக்கப்பட்ட பிரச்னை இது. இந்த விஷயத்திலே நீதிபதி விசாரணையை மேற்கொண்டிருக்க வேண்டும். இந்த வகையிலே இந்த அரசாங்கம் தவறி இருக்கிறது என்பதை மிகமிக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினத்தில், உரிமைக்கு மட்டுமல்ல, உடமைக்கு மட்டுமல்ல, உயிருக்கும்கூட இந்த ஆட்சியிலே பாதுகாப்பு இல்லையென்ற பயங்கரமான பீதி மக்களிடத்திலே நிலவுகிறது. அந்த வகைக்கு இந்தச் சம்பவங்கள் வழி கோலுகிறது. இதை நிவர்த்திப்பதற்கான காரியங்களைச் சர்க்கார் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் மற்ற மாகாணங்களில் எல்லாம் இருக்கிற அமைச்சர்களை எல்லாம்விட 'சீனியர் மோஸ்ட்' அமைச்சராவார்கள். ஒரு பெரும் தலைவரின் பின்னாலே அணிவகுத்து நிற்கும் நாங்கள், இன்றைக்கு இல்லாவிட்டாலும் மறுநாள் நீங்கள் இருக்கும் இடத்திலே அமரப் போகிறோம் என்ற முறையிலே பொறுப்புணர்ச்சியோடு நடக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்புக்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கீடு மசோதா இம்மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டு, மானியக் கோரிக்கைகள் பலவும் நிறைவேற்றப்பட்டு இறுதியாக நிதி ஒதுக்கீடு மசோதா இம் மன்றத்தினுடைய ஆய்வுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஒன்றைக் குறிப்பிட நான் விரும்புகிறேன். மானியக் கோரிக்கைகளிலே விவாதங்கள் நடைபெறுகின்றன. அத்தகைய நிலையில் போதுமான அளவுக்கு அவகாசமும் நாட்களும் இல்லாத வகையில் இருந்து கொண்டு வருகிறது. அடுத்த ஆண்டில் இருந்தாவது இந்த நிலையிலே சில மாறுதல்கள் ஏற்படவேண்டுமென்பதை அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நாட்டிலே உள்ள பல்வேறு தொகுதிகளுடைய பிரச்னைகள், ஆங்காங்கு செய்யப்பட வேண்டிய செயல்கள் என்னென்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தெரிவிக்கப்படக்கூடிய வாய்ப்பும், இந்த மன்றத்திலே தெரிவிக்கப்படுவதன் மூலம் அதிகாரிகளும் உணர்ந்து கொள்ளும் வாய்ப்பும், அவற்றின் மீது எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் சீரிய முறையிலே அமைவதற்கான வாய்ப்பும் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வதன் மூலமாகத்தான் ஏற்படுகிறது. குறிப்பாக, மாவட்ட நிர்வாகம், காவல் துறை, கல்வி, மருத்துவம், பொதுநலத் துறை, விவசாயம்; கூட்டுறவு; தொழில்கள்; சமுதாய நல வளர்ச்சித் திட்டம்; நீர்ப்பாசனம், பொதுப்பணிகள், அரிசன நலத் துறை தாழ்த்தப்பட்டோர் பிரச்னை ஆகிய இந்தத் துறைகளில் எல்லா உறுப்பினர்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இங்கே எடுத்து வைத்தால்தான் அமைச்சர்களுக்கு நேரடியாகத் தெரிகிற வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த மன்றத்தில் எடுத்து வைப்பதன் மூலம் இருக்கிற குறைபாடுகளையும், நிறைபாடுகளையும் அறிந்து அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்க அதிகாரிகள் முன்வருகிறார்கள். நேரம் அதிகப்படியாக ஒதுக்கப்படாததின் காரணமாக ஐந்தாறு நிமிடங்களில் தங்கள் தொகுதிப் பிரச்னைகளை சொல்லித் தீர வேண்டிய நெருக்கடிக்கு உறுப்பினர்கள் ஆளாகிறார்கள். குறைந்தது பத்து நிமிடங்களுக்கு குறையாமல் நேரம் ஒதுக்கித் தரவும் விரும்புகிற அத்தனை பேர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்கவும் வாய்ப்பு அளிக்க வேண்டும். தாங்கள் எடுத்து வைக்கிற கருத்துக்களை ஆராய்ந்து பதில் உரைக்கும் முறையில் அமைச்சர்களுக்காவது போதுமான நேரம் அமைந்திருக்கிறதா என்றால் எல்லா உறுப்பினர்களும் தங்கள் தங்கள் பிரச்னைகளுக்குத் தக்க பதில்களை எதிர்பார்த்திருந்தாலும் நேரம் இல்லாததால் பின்னால் கவனிக்கலாம் என்ற முறையில் முடிக்க வேண்டிய நெருக்கடி ஏற்படுகிறது. காரணம், பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி என்ற செயல் முறையை வகுக்கும் குழுவினர் இவ்வளவு நாட்கள்தான் இந்த சட்டமன்றம் நடக்கும் என்று குறிப்பிட்டு, அதில் எவ்வளவு நேரம் எதெதற்கு ஒதுக்கலாம் என்ற அளவிற்கு நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டு நேரம் ஒதுக்கப்படுகிறது. அதிகப்படியான நாட்கள் விவாதத்திற்கு ஒதுக்கப்படும் முறையை ஏற்றுக் கொண்டால்தான் எல்லா உறுப்பினர்களும் தாங்கள் எடுத்துச் சொல்ல விரும்பும் பிரச்னைகளை எடுத்து வைக்க வாய்ப்பும் வசதியும் ஏற்படும். ஆண்டுக்கு ஆண்டு 4 மணி நேரம் அல்லது எட்டு மணி நேரம் குறைந்து வருகிற வரலாற்றைத்தான் நாம் பார்க்கிறோம். சென்ற ஆண்டு விவாதத்திற்கு 64 மணி நேரம் ஒதுக்கப்பட்டதென்றால் இந்த ஆண்டு 60 மணி நேரம் மட்டும் ஒதுக்கவேண்டிய அளவிற்கு நான்கு மணி நேரம் குறைந்திருக்கிறது. உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிப் பிரச்னைகளை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறும்போதுதான் அமைச்சர்கள் உன்னிப்பாக அத்தொகுதிகளின் [illegible]

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [29th March 1963

அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே அந்த வாய்ப்பு
வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அமைச்சரவையை
கேட்டுக் கொள்கிறேன். இம்மன்றத்தின் பணிகளைப் பற்றியும்,
இதன் மரபுகளைப் பற்றியும் பல உறுப்பினர்கள் நல்லமுறையில்
எடுத்துத் தெரிவித்தார்கள். தமிழக சட்டமன்றம் நல்ல பேரையும்
புகழையும் ஏற்படுத்துகிற அளவிற்கு பல்லாண்டுக் காலமாக பாடு
பட்டு வருகிறது என்பதை நாங்கள் நன்கு உணர்வோம். அந்த
மரபுகளை காப்பாற்றவேண்டுமென்ற அக்கறை ஆளும் கட்சியினர்,
எதிர்க்கட்சியினர் இவ்விரு சாராருக்கும் உண்டு. ஒவ்வொரு
உறுப்பினரும் அந்த மரபு கெடாதவகையில், ஜனநாயகம்
சீராக, செம்மையாக நடைபெறவேண்டும் என்று விரும்பு
கிறார்கள். அப்படி நடத்திச் செல்ல வேண்டுமென்ற முறையில்
தான் இந்த மன்றத்தில் பணியாற்றுகிறார்கள். அந்த நல்ல மரபு
கள் இன்னும் நல்ல முறையில் வளர வேண்டுமென்பதில் யாருக்கும்
கருத்து வேறுபாடு இருப்பதற்கு நியாயமில்லை. இந்த மன்றத்தில்
வந்திருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் தங்கள் அறிவு,
ஆற்றலுக்கு ஏற்றவகையில் தங்களால் அறிந்து கொள்ள முடிந்த,
தெரிந்து கொள்ள முடிந்த கருத்துக்களை இங்கு எடுத்து வைக்க
வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். முழுதும், முற்றும் அறிந்து
தெரிந்து இங்கு எடுத்து வைக்கிற வாய்ப்பு வசதிகளை உறுப்பினர்
கள் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. அப்படி முழுதும்,
முற்றும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு. அமைச்சரவைக்குத்
தான் இருக்கிறது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேர்
களுக்கும் அந்த வாய்ப்பு வசதி இருக்கிறது என்று சொல்ல
முடியாது. அமைச்சரவைக்குத்தான் அத்தகைய வாய்ப்பு இருக்
கிறது. கடைசியாக வந்திருக்கிற புள்ளிவிவரங்களைத் தேடிப்
பிடிக்கவேண்டுமென்றால் நூலகத்திற்குப் போய் 56-ம் ஆண்டு
புள்ளிவிவரம், 57-ம் ஆண்டு புள்ளிவிவரம், 60-ம் ஆண்டு புள்ளி
விவரம் என்று தேடிப் பார்க்கவேண்டியிருக்கிறதே தவிர, பத்துப்
பதினைந்து புத்தகங்களை ஐந்து மணி நேரம் தேடிப் பார்த்து
கடைசியாக இரண்டு பக்கங்களிலிருந்து 56-57-ம் ஆண்டு புள்ளி
விவரத்தை திரட்டவேண்டிய நிலைதான் உறுப்பினர்களுக்கு
அமைந்திருக்கிறது. அப்படித் தேடிச் சொல்லும்போது அதில்
சில விளக்கங்கள் இல்லாமல் இருக்கலாம். உண்மையோடும்,
உணர்ச்சியோடும் கருத்துக்களை உறுப்பினர்கள் எடுத்து வைக்க
லாம். அப்படி எடுத்து வைக்கும்போது என்னென்ன வகையில்
அவை இருக்கின்றன என்று சொல்லவேண்டிய பொறுப்பு அமைச்
சரவைக்குத்தான் இருக்கிறது. ஆக, உறுப்பினர்கள் எல்லா
வற்றையும் அறிந்து கொண்டுதான், முழுதும்
தெரிந்து கொண்டு தான் பேச வேண்டுமென்று
எதிர்பார்ப்பது அவ்வளவு சரியல்ல. அவர்களுக்கு தெரிந்
ததை அவர்கள் சொல்கிறார்கள். பத்திரிகைகளில் வருகிற புள்ளி
விவரங்களை வைத்துக்கொண்டும், தாங்கள் அறிந்து எடுத்த புள்ளி
விவரங்களையும் கொண்டு இங்கு தங்கள் கருத்துக்களை எடுத்து
வைக்கிறார்கள். பத்திரிகைகளில் உள்ள புள்ளிவிவரங்களை



29th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

எடுத்துச் சொன்னால் பத்திரிகையில் வருவதை நம்புவதற்கில்லை
என்று சொல்லப்படுகிறது. வேறு புள்ளி விவரங்கள் சொன்னால்
அது சரி அல்ல என்று சொல்லப்படுகிறது. அப்படி சரியாக
இல்லையென்றால் அது சரி அல்ல என்று எடுத்துச் சொல்லும்
கடமை அமைச்சரவைக்கு இருக்கிறது. அப்படி அறிந்த, தெரிந்த
புள்ளிவிவரங்களை வைத்துக் கூறும்போது அது குற்றத்திற்குரியது
என்றோ அல்லது கேலிக்குரியது என்றோ அல்லது இழித்துச்
சொல்வதற்குரியது என்றோ எடுத்துக் கொள்ளக் கூடாது.
பொறுப்பு வாய்ந்த, கடமையை உணர்ந்திருக்கிற அமைச்சர்கள்
நல்ல விளக்கங்கள் தந்து, உறுப்பினர்களுக்கு ஏற்படுகிற ஐயப்
பாடுகளைப் போக்கி, அறியாத வினாக்களுக்கு தக்க விடைகளை
கொடுக்கும் அளவிற்கு கனிவான முறையில் விடைகள் கூற
வேண்டும். இந்த அமைச்சரவையிடத்தில் எதிர்கட்சியினர்
அத்தனைபேர்களுக்கும் சிறந்த மரியாதையும் மதிப்பும் இருக்கிறது.
இந்த சட்டமன்றத்தின் மாபைக் காப்பாற்ற வேண்டுமென்ற
ஆர்வம் எல்லா எதிர்கட்சிகளுக்கும், எல்லா எதிர்கட்சி உறுப்பினர்
களுக்கும் உண்டு. சில பிரச்னைகளில் சூழ்நிலைக்கு ஆளாகி,
உணர்ச்சிவசப்பட்டு பேசினால் தக்க பரிகாரம் கிடைக்கும் என்ற
முறையில் எடுத்துச் சொல்பவர்களும் இருப்பார்கள். விடை
கொடுக்கும் பொறுப்பு அமைச்சர்களுக்கு இருக்கிறது. அப்போது
நிலைமையை அறிந்து, அவர்கள் விளக்கம் தருகிற அளவிற்கு
விடைகள் அளித்து, தவறு இருந்தால் சுட்டிக் காட்டித் திருத்து
வதற்கும் முயலவேண்டும். நல்ல முறையில் எடுத்துச் சொன்னால்
பல உறுப்பினர்களின் மனம் புண்படவேண்டிய அவசியம் ஏற்
படாது. ஆண்டுதோறும் பல்வேறு துறைகளுக்கு கோடிக்கணக்
கான ரூபாய் ஒதுக்கி செலவு செய்யும்போது அதை திறம்படவும்,
சிக்கனமாகவும் செலவழிக்கும் முறையை மேற்கொள்ளவேண்டிய
வர்களாக இருக்கிறோம். அதை எல்லா உறுப்பினர்களும் வாய்ப்பு
ஏற்படும்போது வற்புறுத்தி வருகிறார்கள். வரி இல்லாமல் ஒரு
ஆட்சி நடைபெறும் என்று சொல்வதற்கு இல்லை. எந்த அமைப்
பாக இருந்தாலும் வரி என்று இல்லாவிட்டாலும் சந்தா அல்லது
கட்டணம் என்ற பெயரில் வசூல் செய்து அந்த அமைப்பை
நடத்திச் செல்லும் முறையைப் பார்க்கிறோம். ஒரு ஆட்சி நடத்த
வரிப் பணம் வேண்டியதுதான். வரி மூலம் ஆட்சி நடத்துவது
என்றிருக்க அதோடு வருமானத்தையும் பெருக்கிக் கொள்ள
வேண்டும். வருமானம் வருவதற்கான வாய்ப்புக் கூறுகளை அதிக
மாக்கி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும்.
எந்தெந்தத் தொழிலை ஏற்றுக் கொண்டால், எந்தெந்த நிலையங்களை
ஏற்றுக் கொண்டால், எந்தெந்த சாதனைகளை ஏற்றுக் கொண்டால்
வருமானம் அதிகரிக்கும் என்று பார்க்க வேண்டும். அரசுக்கு
பணம் தேவைப்படுகிறது என்றால் வரி மூலமாகத்தான் பெற
வேண்டும் என்ற முறை இல்லாமல் வருமானத் துறையைப்
பெருக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக் கூறுகளைப் பெருக்கினால்
புது வரிகள் போடவேண்டிய அவசியமே ஏற்படாது. போட்டிருக்
கிற விற்பனை வரியை முறையாக, கட்டுப்பாட்டோடு, அழுத்தத்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [29th March 1963

திருத்தமாக கண்டிப்பாக வசூலிப்பதற்கான முயற்சிகளை எடுத்தால் சிறு சிறு புது வரிகளைப் போட்டு மக்களை வாட்டவேண்டிய அவசியம் ஏற்படாது, என்று உறுப்பினர்கள் எடுத்து தெரிவித்தார்கள். நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட சில நிர்வாக அமைப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதில் ஏதாவது மாற்றம் செய்ய முடியுமா என்று பார்த்து மாற்றம் செய்து விரிவாக பணிகளை ஆற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டும். காலத்தாழ்வு என்பது ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்து கொண்டு போகிறதே தவிர மக்களின் முறையீடுகளை, குறைபாடுகளை விரைவில் தீர்ப்பதற்கான வழிவகை ஏற்படவில்லை. ரெட்டேப்பிஸம், சிகப்பு நாடா முறை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையைத்தான் காண்கிறோம். சில முறையீடுகள், விண்ணப்பங்கள் இவற்றிக்கு இரண்டு, மூன்று, நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர் கூட பதில் வராத நிலைதான் இருக்கிறது. அத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டுமென்றால், நிர்வாகம் திறமையாகவும், சிக்கனமாகவும் நடைபெற வேண்டுமென்றால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதற்குபோதிய அனுபவம் கொண்டவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அதன் மூலமாகவாவது ஆராய்ந்து அம்முறைகளை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டிய முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

உரப்பனூர் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி அந்தத்
1.2-30 p.m. தொகுதியிலிருந்து வருகின்ற உறுப்பினர்கள் இந்த மன்றத்தின் முன் அவர்களுடைய கருத்தை எடுத்து வைத்தார்கள். அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி எடுத்துச் சொல்லும்போது அது தவிர்க்கப்பட்டிருக்கலாம். தவிர்ப்பதற்கான முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கலாம் என்ற கருத்தை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆர்.டி.ஓ. விசாரணை முடிந்த பிறகு அந்த அறிக்கை இந்த அவையின் முன் சமர்ப்பிக்கப்படுகிற போது முழுத் தகவல்களும் கிடைக்கும் என்று நினைக்கிறேன். இருந்த போதிலும் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, எவ்வளவு போலீஸார்கள் அங்கே போய் இருந்தார்கள் என்று கேட்டபோது, இரண்டு செக்ஷன் போலீஸார் அங்கு சென்றிருந்தார்கள் என்று பதில் கூறினார்கள். அந்தப் பகுதியில் 20 ஆண்டு காலமாக மீன் பிடிப்பதிலே தகராறுகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆண்டுதோறும் மாச்சரியங்கள் மூலம் அடிதடிக் கலவரங்கள் ஏற்படலாம் என்ற நிலைமை கூட இருந்தது என்று கூறுகிறார்கள். இந்த ஆண்டு மாச்சரியம் அதிகமாக வளரும் அளவுக்கு இரண்டு பகுதியினர் இடத்திலும் மாச்சரியம் வளர்ந்து, இரண்டு ஊரைச் சேர்ந்தவர்களும் மோதிக்கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டதாக, இந்த நிகழ்ச்சி நடைபெறும் இரண்டு நாட்களுக்கு முன்பே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. கலவரம் வளரக்கூடும் என்று அறிந்த போலீஸார் முன்கூட்டியே சென்றார்கள் என்று சொல்லப்படுகிறது. இரண்டு செக்ஷன் போலீஸார் அந்த இடத்திற்குச் சென்றதாகச்



29th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

சொல்லப்படுகிறது. அதிலே எத்தனை பேர் இருக்கக்கூடும் என்று கேட்டபோது கனம் அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள். நான் விசாரித்த வரை ஒரு செக்ஷனுக்கு எவ்வளவு போலீஸார் இருப்பார்கள் என்று நான் தெரிந்து கொண்டது, 10 கான்ஸ்டபிள்கள், ஒரு ஹெட் கான்ஸ்டபிள் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் என்பதாகும். சில சமயங்களில் செக்ஷன் பெரியதாக இருக்குமானால் 25 கான்ஸ்டபிள்கள், 2 ஹெட் கான்ஸ்டபிள்கள், ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ஆகியவர்களைக் கொண்டதாக இருக்குமென்று தெரிகிறது. அங்கே போனது பெரிய அளவு செக்ஷன் என்று எடுத்துக்கொண்டாலும் 50 போலீஸார் தான் அங்கு சென்று இருக்கிறார்கள். ஏற்பட்டிருக்கும் கலவரத்தின் அளவையும், ஏற்பட்டிருக்கும் மாச்சரியத்தையும், முன்னால் ஏற்பட்டிருக்கும் நிலைமைகளையும் பார்க்கும்பொழுது, மாச்சரியம் இந்த ஆண்டு அதிகமாக ஆகக்கூடும் என்று எதிர் பார்க்கும் நிலைமையில் முன் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்ட முயற்சி சரிதானா என்பதை அமைச்சர் அவை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த முறையில் எடுக்கப்பட வேண்டிய அத்தகைய நடவடிக்கைகள் முன் கூட்டியே எடுக்கப்படுமானால், இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தவிர்த்துக்கூட இருக்கலாம் என்று எடுத்துச் சொல்கிறார்கள். அந்தத் தொகுதியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் கண்ணீர்ப் புகை விடுவதன் மூலம் கூடிய கூட்டத்தைக் கலைத்திருக்கலாம், அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்று எடுத்துக் கூறினார்கள். தடியடிப் பிரயோகம் மூலமாக, கூடியிருக்கின்றக் கூட்டத்தை கலைக்கும் முயற்சியும் போதுமான அளவு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொல்லப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம் செய்து, மூன்று உயிர்கள் பலி ஆக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தாமல் தவிர்த்து இருக்கலாம் என்ற கருத்தினையும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது ஆர். டி. ஓ. அது பற்றி விசாரணை செய்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாநில மக்களுடைய அத்தனை பேருடைய கவனத்தையும் கவரும் அளவுக்கு உணர்ச்சியைத் தூண்டும் அளவுக்கு, அமைந்துள்ள இந்தப் பிரச்னையில் ஆர். டி. ஓ. விசாரணைக்குப் பதிலாக நீதிபதி விசாரணையை ஏற்பாடு செய்திருந்தால் அதிலே யாருக்கும் ஐயப்பாடோ, வேறு பல எண்ணங்களோ ஏற்பட இடமிருக்காது. ஆர். டி. ஓ. அரசாங்க நிர்வாகத்தின் கீழ் இருப்பவர், துப்பாக்கிப் பிரயோகத்தைச் செய்தவர்கள். அரசினர் நிர்வாகத்திலிருக்கும் போலீஸார், இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் நிலையில் இருப்பவர்கள் அமைச்சர் அவை ஆக்வே நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்ட ஆர். டி. ஓ. செய்த விசாரணை மூலம் தயார் செய்த அறிக்கை சரியாக இருக்குமா என்ற ஐயப்பாடு ஏற்படுவது இயற்கை. அதிகாரிகள் எவ்வளவுதான் நேர்மையாக, நாணயமாக, நீதியாக நடந்து கொண்டாலும்கூட, ஐயப்பாடு ஏற்பட வழி இருக்கிறது. ஆகவே இந்த நிர்வாகத்திலுள்ள ஆர். டி. ஓ. விசாரணைக்குப் பதிலாக நீதிபதி விசாரணை மேற்கொண்டிருந்தால்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [29th March 1963

இந்த ஐயப்பாடுகளுக்கோ, வேறு பல எண்ணங்களுக்கோ இடமில்லாமல் இருந்திருக்கும். இதை மந்திரி சபை செய்யத் தவறியது உள்ளபடியே வருந்தத்தக்கது.

விலைவாசி உயர்வைப் பற்றிப் பலர் தங்கள் தங்கள் கருத்தை எடுத்துக் கூறினார்கள். விலைவாசி உயர்ந்துகொண்டே இருக்கும் தன்மையைப் பார்க்கிறோம். அவ்வாறு விலைவாசிகள் உயர்வதற்கு என்ன காரணம் என்று பெரிய நிபுணர்கள் கண்டறிந்து பல காரணங்களைச் சொல்லி வருகிறார்கள். பதுக்கல் காரணமாக இருக்கலாம், கள்ளச் சந்தை காரணமாக இருக்கலாம், இடைத்தரகர்கள் லாபத்திற்கு வரம்பு கட்டாமல் இருப்பது காரணமாக இருக்கலாம், அடிப்படை விலைக்கு வரம்பு கட்டவில்லை என்பதும் காரணமாக இருக்கலாம் என்று பல காரணங்களைக் கூறுகிறார்கள். இந்த அரசினர் ஒன்றுபட்ட முயற்சியை எடுத்து, வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பண்டங்கள், பொருள்கள், உழவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள், உழவர்களின் உற்பத்திச் செலவை குறைப்பதற்கு வழிவகைகள் ஆகியவற்றில் கண்டிப்பான நடவடிக்கை எடுத்து விலைவாசியைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அந்த முயற்சிக்குக் குந்தகமாக இருப்பவர்கள் கடுமையான தண்டனைக்கு ஆளாவார்கள் என்றும் அறிவிக்கவேண்டும். இந்தப் பிரச்னை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகிறது. ஒளவையார் சொல்லும்போது ஒரு வரியிலே வாழ்த்தினார்—'வரப்புயர' என்று.

"வரப்பு உயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயர குடி உயரும்
குடி உயரக் கோன் உயருவான்"

என்ற கருத்தில் அவ்வாறு சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய இன்றைய நிலைமையைப் பார்க்கும்போது, இந்தியப் பேரரசானாலும், மாநில அரசானாலும்—

"வரி உயர விலை உயரும்,
விலை உயர வறுமை உயரும்,
"வறுமை உயர வாட்டம் உயரும்"

என்ற நிலைமையைத்தான் காணவேண்டியதாக இருக்கிறது. நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நிலைமையை சீர்படுத்த, செம்மை படுத்த அரசினர்தான் கட்டுப்பாடுகளைச் செய்யவேண்டிய பொறுப்பும், அதிகாரமும், உரிமையும் படைத்தவர்கள். மந்திரிகளிடம்தான் அத்தகைய உரிமையும், அதிகாரமும் இருக்கின்றன. ஆகவே எந்தெந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அவற்றை எல்லாம் எடுத்து உணவுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளில் அரசினர் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்கக் கட்டுப்பாடுபற்றி பல உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்தினை எடுத்துக் குறிப்பிட்டார்கள். தங்கக் கட்டுப்பாட்டின் நோக்கம் எந்த அளவுக்கு நிறைவேற வேண்டுமோ, அந்த



29th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அளவுக்கு நிறைவேறி இருக்கிறதா என்பதிலே நாட்டு மக்கள் ஐயப்பாடு கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாட்டில் 4,000 கோடி ரூபாய்க்கு மேல் பெருமானமுள்ள தங்கம் இருப்பதாகப் பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. இந்திய பாராளுமன்ற நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் அரசாங்கத்திலே 18 கோடி ரூபாய்க்குதான் தங்கம் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அந்நிய நாட்டிலிருந்து கடன் வசதி பெற வேண்டுமென்றால் 500 கோடி ரூபாய் அளவுக்குப் பெறுமானமுள்ள தங்கம் இருந்தால்தான் அவர்கள் உதவியைப் பெற முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். தங்கப் பாத்திரங்கள் விற்பனை மூலமோ சர்க்காருக்குச் சேர்ந்தது 7 கோடி ரூபாய் அளவுதான். ஆகவே தங்கக் கட்டுப்பாட்டின் நோக்கம், நிறைவேற்றப்பட வேண்டிய அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆனால் தங்கக் கட்டுப்பாடு வேறு பல தொல்லைகளை, பல கஷ்டங்களை ஏற்படுத்தியிருக்கும் நிலைமையைக் காண்கிறோம். தொழிலைச் செய்து கொண்டிருந்தவர்களுக்குத் திடீரென்று தொழில் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நகைகள் செய்வதற்குக் கொடுக்கவேண்டிய பொதுமக்கள், அவர்கள் நகைகள் செய்வதற்குப் பொற்கொல்லர்களிடம் கொடுத்தால்தான் பொற்கொல்லர்கள் தொழில் செய்ய முடியும். தொழில் செய்தால்தான் கூலி கிடைக்கும். கூலி கிடைத்தால்தான் வாழ்க்கை நடத்த முடியும். ஆனால் அதற்கான வாய்ப்பு இப்போது இல்லை. 22 காரட் தங்க நகைகளை அழிக்கவேண்டுமென்றோ அல்லது மாற்றவேண்டுமென்றோ மக்கள் முன்வருவதில்லை. மக்களுக்கு மன மாற்றம் ஏற்படுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு அதற்குப்பிறகு, தங்கக் கட்டுப்பாடு சட்டம் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். 22 காரட் நகைகளை யாரும் அழிக்க முன்வராதபோது பொற்கொல்லர்களுக்கு வேலை இல்லை என்ற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே வாழ்க்கையை ஈடேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மாற்றத்தை மெல்ல மெல்லக் கொண்டுவந்திருந்தால் சில பல சிக்கல்களைத் தவிர்த்திருக்கலாம். திடீரென்று இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டதால் எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அரசினர் சில பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அரசினர் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு 500 ரூபாய் கடனைக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். அது வரவேற்கத்தக்க, மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான். ஆனால் அம்முயற்சி எந்த அளவு பயன்படக் கூடியதாக இருக்கும் என்பது கண்டறிய வேண்டியது ஒன்று. தங்கக் கட்டுப்பாடுச் சட்டம் வருவதற்கு முழு முதற் காரணம் இந்தியப் பேரரசு. இந்தச் சட்டத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சரி செய்வதோ, சலுகைகள் செய்வதோ வேலையிழந்த பொற்கொல்லர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுப்பதோ, அதற்கான சட்டங்கள் இயற்றுவதோ ஆகிய பொறுப்புகள் இந்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜியிடத்தில் இருக்கிறன. இந்த அரசினர் மக்கள் குறைபாடுகளை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [29th March 1963

நேரடியாக அறிந்திருக்கிறார்கள். மக்களிடத்திலிருந்து அரசினருக்கு மகஜர்கள் வந்துள்ளன. இந்த மன்றத்திலுள்ள ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும், அத்தனை பேர்களும் மக்கள் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கட்சி வேறுபாடு ஏதுமில்லாமல் இந்தத் துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் எல்லோரும் ஒருமித்து முதல் அமைச்சரிடத்திலும், நிதி அமைச்சரிடத்திலும், மற்ற அமைச்சர்களிடத்திலும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பொறுப்புகள் இந்தியப் பேரரசிடம் இருக்கின்றன. இங்கே நேரில் நிலைமையை உணர்ந்து இந்த அரசினர் இந்திய அரசினருக்கு என்ன சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். இப்போது தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தினால் ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களுக்கு என்னென்ன வழிவகைகளை இந்தியப் பேரரசுக்கு எடுத்துச் சொன்னார்கள், அதற்கு அவர்கள் என்ன பதில் சொல்லியிருக்கிறார்கள் என்று நிதி அமைச்சர் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். நாட்டின் நிலைமையை நேரடியாக உணர்ந்த காரணத்தினால் பொற்கொல்லர்களுடைய இன்னல்களைப் போக்க என்னென்ன சிபாரிசுகளை இந்த அரசினர் செய்தார்கள், அந்த சிபாரிசுகளுக்குள் எதனை ஒதுக்கி விட்டார்கள், எதனை ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லப்பட்ட சிபாரிசுகள் என்னென்ன, ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்ட சிபாரிசுகள் என்னென்ன, ஒப்புக்கொண்ட சிபாரிசுகள் என்னென்ன என்று நிதி அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மற்றும் ஒரு பிரச்னையை மட்டும் குறிப்பிட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஊழியர்களைப் பொறுத்தவரையில், தாற்காலிகமான ஊழியர்கள் என்று சில பல துறைகளில் எடுத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் சில பல பணிகளை முடிக்க வேண்டுமென்பதற்காகத் தாற்காலிகமாக ஊழியர்களை வைத்து, அத்தகைய வேலைகள் முடிந்த பிறகு அவர்களை வேலையிலிருந்து எடுக்க அவசியம் ஏற்படக் கூடும். ஆனால் சில துறைகளில் தாற்காலிகமாக 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம், 25 ஆண்டு காலம், தாற்காலிகமாக ஊழியர்கள் என்ற பெயரிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள். 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் ஊழியம் செய்கிற நிலைமை ஏற்பட்டபோது, தாற்காலிகமான தொழில் அல்ல, நிரந்தரமாக இருக்கிற தொழில் என்று 15 ஆண்டு வேலை செய்கின்றதிலிருந்து அறிந்து கொள்ளலாம். நான்கு மாத காலம், 6 மாத காலம் அல்லது 1 ஆண்டு காலம் வேலைக்கு வைத்துக் கொண்டு வேலை முடிந்த பிறகு வேலையை விட்டு போகின்றதை தாற்காலிகத் தொழில் என்று அமைக்கலாமே தவிர, 10 ஆண்டு 15 ஆண்டு தொடர்ந்து பணி புரிகின்றவர்களைத் தாற்காலிக ஊழியர்கள் பட்டியலில் சேர்ப்பது நல்லதல்ல. அவர்களை நிரந்தர ஊழியர்களாக துறையில் ஏற்றுக் கொண்டு, நிரந்தர ஊழியர்களுக்குக் கொடுப்பது போன்று சம்பளம், அவர்களுக்குக் கொடுப்பது போன்ற படிகள், அவர்



29th March 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

களுக்குக் கொடுப்பது போன்ற சலுகைகள், வசதிகள் கொடுக்கும் முறையை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் தாற்காலிகத்தின் பேரால் பணிபுரிகின்றவர்கள் இருந்து வருகின்றார்கள். இந்த நிலைமையை மாற்றுதல் வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளப் பட்டியல் போடுவதைக் காட்டி அந்த அடிப்படையில் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று ஊராட்சி மன்றத் துறையினரும் தனியார் ஸ்தாபனங்களில் வேலை செய்கிறவர்களும் கேட்கிற அத்தகைய நிலைமை இருக்கிறது. இந்த அளவுக்கு சம்பளம் பட்டியல் மாற்றப்பட்டிருக்கிறது, பஞ்சப்படி மாற்றப்பட்டிருக்கிறது என்றால் மற்றவர்களும் அதைப் பற்றி ஆலோசனை செய்கிறார்கள். இந்திய அரசிலே உள்ள ஊழியர்களுக்கு எந்த அடிப்படையில் சம்பளமும் மற்ற படிகளும் கொடுக்கப்படுகின்றனவோ அதே அடிப்படையில் தங்களுக்கும் தர வேண்டும் என்று மாநில அரசில் இருக்கின்றவர்கள் எதிர்பார்க்கிறார்கள். சம்பளப்பட்டியலில் மாற்றம் இருக்கும்போது அரசினரிடையே ஒத்துழைப்பு வேண்டும். இந்தியப் பேரரசும், மாநில அரசும் ஒன்றுகூடி எந்த அளவு ஏற்றலாம் என்று ஆராய்ந்து ஒரே சீராக ஏற்றம் செய்து, நிதி வசதி இல்லாமலிருந்தால் மான்யமாக இந்திய அரசாங்கம் வழங்கி இந்தக் குறைபாட்டை நீக்க முயற்சிக்கவேண்டும். அதற்கான சிபாரிசுகளை இந்த அரசாங்கம் கூறிக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு, நிர்வாக அமைப்பை செம்மையாக ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஏற்றுக் கொள்ளும் செலவினங்கள் அதிகமாக இருக்கும் என்று பெயர் நிலை நாட்டப்பட்டு வருகிறது. ஆகையால் சிக்கனமாக, திறமையாக செலவழிக்கிற முயற்சிகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டு, முதலில் எடுத்துச் சொன்ன மாதிரி இந்த மன்றத்தில் விவாதத்திற்கு அதிகமான நாட்களையும், நேரத்தையும் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய விவாதம் இந்த ஆண்டிலே இன்று முடிவாகிறது. முதலிலே பொது விவாதம் நடைபெற்று, அதற்கப்புறம் ஒவ்வொரு மான்யக் கோரிக்கையாக எடுத்துக்கொண்டு விவாதம் நடந்தது. பல மான்யங்கள் விவாதிக்கப்பட்டன. பழைமையான, அனுபவமுள்ள அங்கத்தினர்கள் நேற்று பாராட்டுதல்கூடத் தெரிவித்தார்கள். இந்த ஆண்டிலே தான் எல்லா மான்யங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு, கில்லட்டின் பிரயோகம் செய்வதற்கு அவசியம் இல்லாமலே நேற்று ஒரு மணிக்கு எல்லா மான்யங்களும் நிறைவேற்றப்பட்டன என்று குறிப்பிட்டதை கனம் அங்கத்தினர்கள் கவனத்திருப்பார்கள். அப்படி விவாதம் நடைபெற்றதிலே கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் போதிய அவகாசம் இல்லை என்று சொன்னார்கள். சென்ற ஆண்டிலே 64 மணி நேரம் இருந்தது, இந்த ஆண்டு 4 மணி நேரம் குறைந்து விட்டது என்று சொன்னார்கள். அந்த

[திரு. எம்.பக்தவத்சலம்] [29th March 1963

மாதிரி 4 மணி நேரம் குறையவில்லை என்று உடனேயே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சில நாட்களிலே கேள்வி நேரத்திலே ½ மணி எடுத்துக் கொண்டு, 1½ மணிக்கு மேல், சாப்பாட்டைக்கூட கவனிக்காமல் 2 மணி, 2½ மணிகூட ஒரு நாள் ஆயிற்று (திரு. மு. கருணாநிதி: ஓவர்டைம்) ஓவர்டையம் யார் கொடுப்பது? அந்தமாதிரி 2 மணிக்கு பின்னால்கூட அமைச்சர் விடை அளிக்க வேண்டியிருக்கிறது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல அமைச்சர்கூட தங்கள் விடையைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆகையால், 64 மணி நேரத்துக்குக் குறையவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். இதைவிட அதிக நேரம் ஒதுக்க வேண்டுமென்றால், அது வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுகிற தேதியைப் பொருத்ததாக இருக்கிறது. அது தயாரிக்கப்படவேண்டும். கூடிய வரையில் எல்லாத் தகவல்களையும் பெற்றுத் தயாரிக்க வேண்டும். பிப்ரவரி மாதக் கடைசியில்தான் சமர்ப்பிக்க முடிகிறது. அதற்கு 15 நாள் முன் சமர்ப்பிப்பது என்பது கடஷ்மாக இருக்கிறது. சமர்ப்பித்த பின் 31-ம் தேதிக்குள், மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் அப்ரோப்ரியேஷன் மசோதா உட்பட நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது. அதற்குள் நாட்களை ஒதுக்குகிறோம். பிஸினெஸ் அட்வைஸரி கமிட்டியில் வைத்து நாட்களை வைக்கிறோம். எந்த எந்த மான்யத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். எந்த எந்த மான்யத்திற்கு எவ்வளவு நேரம் என்று எல்லோரையும் கலந்து நிர்ணயிக்கப்படுகிறது. இதுவும் போதாது என்றால், பிற்பகலில் வைத்துக் கொள்ளலாம். கனம் அங்கத்தினர்கள் அந்த மாதிரி வருவதாக இருந்தால் பிற்பகலில்கூட சபைக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம். இன்னொரு ஏற்பாட்டையும் கூட செய்துகொள்ள வைத்துக்கொள்ளுவது என்ற முறை கூட இருந்தது. சாப்பாட்டுக்குப் பிறகு 8 மணிக்கு வந்து 10 மணி, 11 மணி வரையில் சபைக் கூட்டம் நடக்கும் வழக்கம் இருந்தது. வேண்டுமென்றால் அவ்வாறு கூட 7 அல்லது 8 மணிக்கு சாப்பிட்டு விட்டு வந்து கூட்டம் வைத்துக் கொள்ளலாம் அல்லது இங்கேயே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யலாம். அவ்வாறு இரவுக் காலத்தில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் பற்றிச் சொல்லுவார்கள், அவர்கள் நடவடிக்கைகளை இரவு நேரங்களில் நடத்துகிறார்கள் என்று சொல்லுவார்கள். அவ்வாறு நாமும் வைத்துக்கொள்ளலாம்.

நான் பொது விவாதத்திலே விடை அளிக்கும்போது சொன்னேன், எதிர்க் கட்சி அங்க்த்தினர்கள் தாங்கள் எதிர்க் கட்சி என்ற உணர்ச்சியோடு சீரிய வ்கையில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள், அவர்கள் போக்கைப் பாராட்டுகிறேன் என்று சொன்னேன். ஆனால் கனம் அங்கத்தினர் திரு. மதியழகனும் கோபித்துக் கொள்ளக் கூடாது, அவர்கள் எதிர்க்கட்சி என்று சொல்லக் கூடாது என்று சொன்னார்கள். நான் விளக்கிக் கூறுகிறேன்; எதிர்க் கட்சியே மாற்றுக் கட்சி. எதிர்க் கட்சியே ஆளும் கட்சியாக வரலாம். எதிர்க் கட்சி என்று சொல்லுவதால் எப்போதும் எதிர்க் கட்சி என்று கருத்துக் கொள்ள வேண்டியதில்லை.



29th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

கனம் மதியழகன் அவர்கள் கூறியது போல, 'நாம் ஒரு காலத்தில், சீக்கிரத்தில், நாளைக்கே, அந்த ஸ்தானத்தில், அமைச்சர் அமர்ந்திருக்கிற ஸ்தானத்தில் உட்காரக் கூடும்' என்ற நம்பிக்கையோடு தான் அவர்கள் இயங்க வேண்டும். அதை நான் ரொம்ப விரும்புகிறேன். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாங்கள் விரும்புகிறோம். அந்தப் பொறுப்பு உணர்ச்சியோடு அவர்கள் பணியாற்ற வேண்டும். 'நாமும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளக் கூடும், அப்போது எதிர்க் கட்சியாக இருக்கக் கூடியவர்கள் இப்போது சொல்லுவதற்கும் அப்போது சொல்வதற்கும் இருக்கக் கூடிய முரண்பாட்டை எடுத்துக் காட்ட இடமிருக்க கூடாது' என்ற தீர்க்க தரிசனத்தோடு எதிர்க் கட்சிகள் விளங்கவேண்டும். அது தான் சிறந்த கட்சி. எதிர் கட்சிகளுக்கு ஜனநாயகத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் அத்தைய முறை பல நாடுகளில் இயங்குகின்றன. அம்மாதிரி இயங்கினாலொழிய நல்லதல்ல. நல்லதல்ல என்று சொன்னால், 'அம்மாதிரி இல்லையா' என்று உடனே குற்றச்சாட்டு வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர், தொட்டால் சிணுங்கி என்று சொல்வார்களே—இலையைத் தொட்டால், கை பட்டால் அது சிணுங்கிக் கொள்ளும் தன்மை—அது போல இருக்கிறார்கள், மறுபடியும் சொல்லுகிறேன். தவறுதலாகச் சொல்வதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கனம் அங்கத்தினர் மதியழகன் "மதி நிறைந்த வார்த்தைகளைச் சொன்னார்கள்' என்று தவறுதலாகச் சொல்லவில்லை, அதை உணர்ந்தே சொன்னேன். நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நடவடிக்கைகளை அவர்கள் பார்க்க வேண்டும் என்பதுதான்; எப்படிப் பேச்சுக்கள், குற்றச் சாட்டுகள் பிரயோகிக்கப் படுகிறது என்று பார்க்க வேண்டும். கனம் தொழில் அமைச்சர் "புரிந்து கொள்ளவில்லை" என்று சொன்னால், அதை ஒரு மரியாதைக் குறைவாகப் பேசியதாகக் கருதக் கூடாது. அதையே ஆங்கிலத்தில் " The Hon. Member has not understand the position " என்று சொன்னால், அது தவறாகப் படாது. தமிழிலே அந்த முறையில் பேசப் பழகிக் கொள்ள வேண்டும். ஆங்கில சொற்களுக்கு சரியான தமிழ்ச் சொல் எது என்று பார்க்க வேண்டும். எவ்வளவோ சொல்லுகிறோம். அதிலெல்லாம் மரியாதைக் குறைவாகப் பேசுகிறோமா என்று பார்க்க வேண்டும். இன்று காலையில் கூடச் சொன்னேன். "நான் சொன்னது காதில் விழவில்லை போல் தோன்றுகிறது" என்று அங்கத்தினர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொன்னேன். அந்த மாதிரி சொல்வதைத் தவறு என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அமைச்சர் அவையில் மிகுந்த மரியாதை இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்றுக்கொள்ளுகிறேன். எதிர்க் கட்சி அங்கத்தினர்களைக் குறித்து இடித்துச் சொல்ல வேண்டும் என்ற எண்ணம் சிறிதும் கிடையாது. குற்றம் சாட்டினால் குறையாகச் சொன்னால்

மற்ற அங்கத்தினர்களுக்கும் அந்த முறையில்தான் சொல்லு கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் சிலர் அந்த முறையிலே நடந்து கொள்ளவில்லை. சாதாரணமாக விடை அளிக்கும்போது மரியாதைக் குறைவாக அலட்சியமாக சொன்னார்கள் என்கிறார்கள். எதற்காகச் சொல் கிறேன் என்றால் அது சரியல்ல என்பதை எடுத்துக் காட்டவே. சில உதாரணங்களும் சொல்லுகிறேன். இன்று நடைபெற்றதையே எடுத்துக் கொண்டாலும் அமைச்சர்கள் பொறுமையாக இருக் கிறார்கள். "அஸினைன் பேஷன்ஸ்" என்று சொல்வார்களே அது எங்களிடம் இருக்கிறது. நாங்கள் "திக் ஸ்கின்ட்". அதோடு தான் இயங்குகிறோம். பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் பக்குவப்படுத்தப் பட்டவர்கள் நாங்கள். அப்படி இல்லை யென்றால், ஓடி விட வேண்டி இருக்கும். பொறுத்துத்தான் செய்கிறோம். கனம் மதியழகன் குறிப்பிட்டது போல இன்று நடைபெற்றதுதான் ஸ்கூல் பைனலில் செலக்ஷன் பரீட்சையை எடுத்தது பற்றி கேள்வி. அங்கத்தினர் இது நிரந்தரமாக எடுக்கப் பட்டு விட்டதா என்பதற்கு, இன்னும் எடுக்கப்படவில்லை என்று சொன்னேன். அவர்கள் கேட்பது என்ன ? "ஹிந்தியில் பரீட்சை இல்லை என்று சொல்லி விட்டு, இப்பொழுது பரீட்சை வேண்டும் என்று சொல்வது போல, செலக்ஷன் எப்பொழுது வரும்" . . (குறுக்கீடு) " When did you stop beating your mother. " என்பது போலத்தான்.

SRI K. A. MATHIALAGAN : Sir, I am sorry. I have got a copy of it. ஹிந்தி பரீட்சையை மீண்டும் கொண்டு வருகிறார்கள்; செலக்ஷன் இல்லை என்று இருக்கிறது; செலக்ஷன் பரீட்சை கொண்டு வருவார்களா என்று கேட்டேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் சொன்னதை 'பாரப் ரேஸ்' செய்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** எப்போது கொண்டு வருவார்கள் என்று கேட்டதாகச் சொன்னீர்கள். அவர்கள் கேட்டது . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இரண்டும் ஒன்று தான். அம் மாதிரிக் கேட்பது முறையா ? அதற்கு விடையளிக்க வேண்டி இருக்கிறது. அதை அவமரியாதையாக எடுத்துக் கொள்வதா ?

இன்று பேசிய எதிர்க் கட்சி கொரடா திரு. தர்மலிங்கம் சொன்னார், பதுக்கல்காரர்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு இருப்பதாக சிலர் சொல்லுகிறார்கள் என்று. சிலர் சொல்லுகிறார் கள் என்று யாரைப்பற்றி வேண்மானாலும், எதுவேண்டுமானா லும் சொல்லலாமா ? கேட்டுக் கொண்டு தான் இருந்தேன். பின்னால் இருக்கும் அங்கத்தினர் ஏதோ கேட்டார்கள். அதுதான் " அஸினைன் பேஷன்ஸ் ".

இன்றைக்கு கனம் அங்கத்தினர், எதிர்க்கட்சி அங்கத்தினர் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டார்கள், கேட்டார்கள், முதல் அமைச்சர் பொற்கொல்லர் ஒருவரை அடித்தாரா என்று, இதற்கு



எனக்கு கோபம் வரவில்லை. சிரிக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் சொன்னார்கள். ஏற்றுக் கொள்கிறேன். (கனம் திரு. கு. காமராஜ்: பொய்தானே, இதற்கெல்லாம் எதற்கு கோபப் பட வேண்டும் ?)

**திரு. மு. கருணாநிதி :** "பொய்" என்பதை சபையில் உபயோ கிக்கக் கூடாது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர் உட்கார்ந்து கொண்டு தான் சொல்கிறார்.

**கனம் திரு. கு. காமராஜ் :** பொய் என்று சொல்கிறார்கள். எதைப் பொய் என்று சொல்கிறார்கள், சொல்லுங்கள். கேள்விப் பட்ட வார்த்தை பொய். அங்கத்தினர் சொல்லுகிறார்களே அது உண்மை கலப்பில்லாத வார்த்தை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முதல் அமைச்சர் அடித்தாரா என்று கேட்டார்.

**திரு. எம். எஸ். மணி :** பத்திரிகையில் வந்ததைச் சொன்னேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகையில் வந்ததை வைத் துக் கொண்டு சொல்வது முறையா ? பத்திரிகையில் வந்தது என்று சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது. அதுதான் முறையா ?

**திரு. எம். எஸ். மணி :** ஸார்; ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் அது பற்றி ஒரு கமிட்டி அமைத்தால், திருச்சியிலுள்ள . . . .

MR. SPEAKER : There is no point of order.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அதைப் பற்றிப் பின்னால் பேசலாம். மறுபடியும் குறிப்பிட்ட கேள்விக்கு நான் தகவல் கிடையாது என்று சொன்னேன். கோபித்துக் கொள்ளவில்லை. ஆனால், எங்களிடம் வந்திருக்கும் தகவலில், இறந்து போனவர் உடல் நிலை சரியாக இல்லை, அவர் மனைவி " நீ தாங்க மாட்டாய் போக வேண்டாம் " என்று சொன் னாள்; ஆனால் அவர் "எல்லோரும் போகச் சொல்லுகிறார்கள்" என்று சொல்லவே, " ஆட்டோ ரிக்ஷாவில் போ " என்று அவள் சொன்னதையும் அவர் கேட்கவில்லை ; கேட்க விடவில்லை மற்றவர் கள். அவர்களும் போனார்கள். முதல் அமைச்சரிடம் வந்தவர்கள் சிலர் சுமுகமாகப் பேசி விட்டு, " தங்கத்தைக் கொடுத்தால் 14 காரட்டில் செய்கிறோம் " என்று சொல்லி, சில நிமிஷங்கள் பேசி விட்டுச் சென்றார்கள். இப்பொழுது கமிட்டி போட வேண்டு மென்று சொன்னால், அதில் எதிர்க் கட்சி அங்கத்தினரின் பொறுப்பு உணர்ச்சி தெரிகிறதா என்று கேட்கிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஏதாவது கேள்வி கேட்டால், நான் தவறாகப் பதில் சொல்வதாகச் சொன்னார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தியினுடைய கேள்வியின் தன்மை எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கே தெரியும். (திரு. மு. கருணாநிதி :

அது இன்ஸினிவேஷன்) இதில் என்ன இன்ஸினிவேஷன் இருக்கிறது. (திரு. மு. கருணாநிதி: பிரித்தாளும் சூழ்ச்சி) எதையோ நினைத்துக்கொண்டு இதை இன்ஸினிவேஷன் என்கிறீர்கள். இன்ஸினிவேஷன் என்பதற்கு அர்த்தத்தை டிக்ஷனரியில் பாருங்கள். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றேன். "ஏற்றுக்கொள்கிறோம்" என்றால் சம்மதம். ஆனால்,
1-00 p.m. இரண்டு முறை கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கனம் முதல் அமைச்சர் பற்றி அவர் ஏதோ பேசியதாகவோ, நடந்துகொண்டதாகவோ சொன்னார். எதை வேண்டுமானாலும் சொல்லக் கூடாது. எவ்வளவு குற்றம் சாட்டினாலும், குறை கூறினாலும், தனிப்பட்ட வகையிலே ஒருவரைப்பற்றி சொல்லக் கூடாது. அவர்கள் சொன்னதையெல்லாம் திருப்பிச் சொல்ல நான் தயாராக இல்லை. திருப்பிச் சொல்லுவதற்கு எனக்கு வாய் கூசுகிறது. அப்படிச் சொல்லுவது கண்யமானது அல்ல என்று நான் நினைக்கிறேன். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. இரண்டு முறை கனம் அங்கத்தினர் அவர்கள் முதல் அமைச்சரைப் பற்றி தனிப்பட்ட முறையிலே குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதை கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அங்கத்தினர் எல்லோரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அவ்வாறெல்லாம் நடக்கிறபொழுது கூட நாங்கள் கூடுமானவரையில் பொறுமையாகத்தான் இருக்கிறோம். இன்று காலையிலே கேள்வி நேரத்தின் போது கூட குறிப்பிட்டேன். கனம் அங்கத்தினர் சசிவர்ணத்தேவர் அவர்கள் கேட்டபொழுது, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் கண்யமாக நடந்துகொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டேன். இவ்வளவு சொல்லுகிறார்கள். தவறுதலாக இருந்தால், பதில் கண்டிப்பாகச் சொல்ல வேண்டும். சிரித்து நடிப்பதற்கு எனக்குத்தெரியாது. நடிக்கிற திறன் ரொம்ப முக்கியம். கவிஞர்களே சொல்லியிருக்கிறார்கள். உலகமே ஒரு நாடக மேடை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை யெல்லாம் இன்னும் நாங்கள் கற்றுக்கொள்ளவில்லை. இனிமேல் எங்கே கற்றுக்கொள்ளப் போகிறோம்? கோபத்தை அடக்கிக்கொண்டு சிரித்த முகத்தோடு பதில் சொல்லவேண்டும் என்றால், அதற்கெல்லாம் ஒரு வரம்பு இருக்கிறது. குறள் ஆசிரியரே சொல்லியிருக்கிறார். மொத்தத்தில் இந்த அமைச்சர் அவையைப் பற்றி ஏதோ கொஞ்சம் பேச வேண்டும் என்று திட்டமாக வந்து சொன்னார்கள். அது சரி. எல்லோரும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அமைச்சர் அவையைப்பற்றி குறை சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் யாரையும் குறைத்துக் கூறவேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. எதிர்க் கட்சியினர்களுக்கும் தெரியும், பல அங்கத்தினர்களுக்கும் தெரியும். எதிர்க்கட்சியினர் 'நாங்கள் சொல்லுவதை ஒன்றும் கேட்பதில்லை' என்று பொதுவாக குறை கூறினார்கள். அம்மாதிரி குறை கூறுவது நியாயம் இல்லை. எதிர்க் கட்சியினரின் தொகுதியாக இருப்பதினால் அங்கு ஒன்றும் செய்வதில்லை என்று சொல்லுவதிலும் நியாயம் இல்லை. எத்தனையோ செய்திருக்கிறோம். எதிர்க்கட்சியினர் இது வேண்டும், அது வேண்டும், இந்தக் குறை இருக்கிறது, அந்தக் குறை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதில் எல்லாம் கவனம் செலுத்து



கிறோம். மேலும் ஒன்று நான் கூற விரும்புகிறேன். எதிர்க் கட்சி அங்கத்தினர் ஒருவர் சொன்னார். "எங்கள் தொகுதிக்கு இது வேண்டும் என்று சொன்னால், நாங்கள் எதிர்க்கட்சியினராக இருப்பதால், செய்ய மாட்டேன் என்கிறார்கள். காங்கிரஸ் கட்சிக்கும் வோட்டுப் போட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்காகவாவது செய்யக்கூடாதா?' என்று கேட்டார்கள். அந்தக் குறுகிய நோக்கம் எங்களுக்குக் கிடையாது. இந்தக் கட்சி, அந்தக்கட்சி என்பது இல்லை. எல்லோருக்கும் நாங்கள் செய்வோம். அதுமாத்திரம் அல்ல. எங்களுக்குத் தெரியாதா? 1962-ம் ஆண்டில் நடந்த தேர்தலில் காங்கிரஸுக்கு அதிக வோட்டுகள் கிடைக்கவில்லையென்றால், எப்பொழுதும் அதற்காக தத்தம் பண்ணிவிடுகிறதா? எப்பொழுதும் எதிர்க்கட்சிக்குத் தான் வோட்டுப் போடுவார்கள் என்று நினைத்துவிடுவதா? கட்சி நன்மையை உத்தேசித்து கூட நாங்கள் அப்படிச் செய்வதில்லை. கட்சி ரீதியில் செய்வதில்லை. மக்கள் நன்மையைத் தான் கருத வேண்டும். எந்தக் கட்சி பிராந்திய மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் செய்கிறோம். கட்சி சுயநலத்தில் பார்த்தால்கூட அப்படிப் பாரபட்சம் காட்ட முடியாது. நான் ஒன்று சொல்லுகிறேன். ஒரு முறை எதிர்க்கட்சிக்கு வோட்டுப் போட்டு விட்டால் எப்பொழுதுமே எதிர்க்கட்சிக்குத் தான் வோட்டுப் போடுவார்களா? அடுத்த தேர்தல் வருகிறது. மாறுதல் வருவதைப் பார்க்கிறோம். அங்கத்தினர்கள் சொல்லுவது எல்லாவற்றையும் எப்படிச் செய்ய முடியும்? நாங்கள் புறக்கணிக்கிறோம் என்று சொன்னால் ஒத்துக்கொள்ள முடியாது. யாரையும் புறக்கணிக்கவில்லை. இயன்ற அளவுக்குச் செய்கிறோம். எதிர்க்கட்சியினர் கூறுவதை எல்லாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? செய்ய முடியும்? கவனிக்கிறோம் என்று சொல்லுகிறோம். கவனிப்பு இல்லாமல் எப்படி செய்ய முடியும்? கவனிப்பது என்பது முதல் அடி. குற்றச்சாட்டு கூறினால் கவனிக்கிறோம் என்று சொல்லுகிறோம், பரிசீலனை செய்கிறோம். எங்கள் பக்கத்தில் இருக்கிற காங்கிரஸ் கட்சி அங்கத்தினரே குறை இருக்கிறது என்று சொன்னார்கள் என்று, ஒருவிதமான திருப்தியோடு எதிர்க்கட்சி அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். எங்கள் கட்சியிலிருந்தும் கூட அவ்வாறு குறிப்பிட்டார்கள் என்று எதிர்க்கட்சியினரே சொல்லுகிறபொழுது, எந்தக் கட்சியினராக இருந்தாலும் அவர் சொன்னதை பரிசீலனை செய்கிறோம் என்பதைத்தான் உணர்த்துகிறது. எது செய்யக்கூடியதோ அதைச் செய்யவேண்டும், பொதுவாக மக்களுக்கு உள்ள குறைகளை நீக்கி அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எந்த அளவுக்கு பெருக்க முடியுமோ அந்த வகையிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்.

இப்பொழுது உரப்பனூர் துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். அதைப் பற்றி முதலில் கனம் அங்கத்தினர் திரு. மூக்கையா தேவர் பேசினார். பின்னால் சசிவர்ணத் தேவர் அவர்களும், அதற்குப் பின்னாலே கனம் அங்கத்தினர் சுவாமிநாதன் அவர்களும் பேசினார்கள். பின்னால் எதிர்க்

கட்சித் தலைவர் அவர்களும் பேசினார்கள். கனம் அங்கத்தினர் மதியழகன் அவர்களும் பேசினார்கள். நான் முன்பே விளக்கியிருக்கிறேன். அதற்கு மேலே என்னிடம் இன்னும் தகவல் வரவில்லை. ஆர்.டி.ஓ. விசாரணை முடிந்துவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. இன்னும் ரிபோர்ட்டு வரவில்லை. ரிப்போர்ட் இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிவதற்கு முன்பு வந்தால், அதைத் தெரிவிக்கக் கூடும் என்று சொன்னேன். அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆர்.டி.ஓ. ரிபோர்ட்டை எதிர்பார்க்கலாம் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், ஒன்று நான் சொல்ல விரும்புகிறேன். கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர் ஒருவர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினரே சொன்னார்களே, அவர்களே குறை சொன்னார்களே, அவர்களே குற்றம் சொல்லுகிறார்களே என்று குறிப்பிட்டார்கள். இதில் கட்சி ஒன்றுமில்லை என்பது இதிலிருந்தே எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்குத் தெரியும். கனம் மூக்கையா தேவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கட்சி ஒன்றும் இல்லை. இங்கு எதிர்க்கட்சியிலிருந்து பேசும்பொழுது, எதிர்க்கட்சிக்கு விரோதமாக ஏதோ போலீசார் சூட்சி செய்திருக்கிறார்கள், சதி செய்திருக்கிறார்கள், அரசாங்கம் அதை ஆதரித்தது என்று அவர்கள் வாதத்திற்காக எதிர்க்கட்சியில் உட்கார்ந்துகொண்டு, அல்லது ஆளுகின்ற கட்சியின் மீதோ அல்லது மந்திரிசபையின் மீதோ வெறுப்பு உணர்ச்சி காரணமாக அவர்கள் அந்த மாதிரி சொல்லியிருக்கலாமே தவிர, அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தத் தகராறு ஏற்பட்டது ஒரு சொந்த விவகாரம் பற்றியது. காங்கிரஸ் கட்சி, சுதந்திராக் கட்சி, பார்வேர்டு பிளாக், திராவிட முன்னேற்றக் கழகம் என்று அப்படி கட்சி ரீதியிலே ஒன்றும் இல்லை. இன்னும் கேட்டால், இதிலே காங்கிரஸ்காரருக்குள்ளேயே ஒருவருக்கொருவர் தகராறு இருக்கிறது. 1957-ம் ஆண்டு தேர்தலில் ஒரு காங்கிரஸ் நண்பர் நின்றார். 1962-ம் ஆண்டு தேர்தலில் மற்றொருவர் காங்கிரஸ் அபேட்சகராக நின்றார். இருவரும் தோல்வி உற்றவர்கள். அவர்களுக்குள்ளேயே இப்பொழுது தகராறு இருக்கிறது. இது பல பேர்களுக்கு, மதுரை பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தெரியும். திரு. மூக்கையா தேவர் அவர்களுக்குத் தெரியும். திரு. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியும். அவர்களுக்குள்ளேயே தகராறு இருக்கிறது. அவர்களெல்லாம் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். திரு. மூக்கையா தேவர் தன்னுடைய தொகுதி என்ற பொறுப்பு உணர்ச்சியோடு அவர்கள் அப்படி பேசுகிறார்களா? இவர்கள் கட்சி அங்கு இல்லை. இவர்களுக்கு பொறுப்பு உணர்ச்சி இருக்கிறது. அதனால் அவர்கள் மீது ஒரு குற்றம் சாட்ட விரும்புகிறேன். அன்று சம்பவம் நடந்தபொழுது, '10 மணிக்கு நான் அங்கே இருந்தேன்' என்று அவர்களே இன்று கூறினார்கள். அப்படியிருந்தால் இவர்கள் இந்த சம்பவத்தைத் தவிர்த்திருக்கலாம். போலீசாருக்கு ஒரு வரம்பு இருக்கிறது. ஓரளவுக்குத் தான் அவர்கள் தவிர்க்க முடியும். அம்மாதிரி தவிர்ப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் போலீசார் எடுத்துக்கொண்டார்கள். திரு. மூக்கையா தேவர் அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தொகுதி பிரதிநிதி. அவர்களுக்கு அங்கே செல்வாக்கு இருக்கிறது என்று



நான் நினைக்கிறேன். அவர்கள் கத்தி, வேல், கம்பு, அறிவாள் கல் இவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு 1,000 பேர்கள் வந்திருக்கிறார்கள் என்றால், உடனே போய் அவர்களை முன்னதாகப் பார்த்து 'இதெல்லாம் செய்யவேண்டாம், ஆயுதம் வேண்டாம்' சும்மா வந்தால் வாருங்கள் ஆயுதம், கல், வேண்டாம்' என்று சொல்லியிருக்கலாம். கல் வந்ததுபற்றி அவர்களே ஒப்புக்கொண்டார்கள். திரு. சசிவர்ணத்தேவர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இதையெல்லாம் பார்த்து அவர்கள் தவிர்த்திருக்க வேண்டும். ஒரு சட்டமன்றப் பிரதிநிதி மக்களோடு ஒரு தொடர்பு கொண்டு அவர்களுக்கு வேண்டிய நல்ல புத்திமதி சொல்லுகிற மாதிரி, போலீசார் சொன்னால் கேட்கமாட்டார்கள். போலீசார் மீது எப்பொழுதும் சந்தேகம். போலீசார் ஒன்றும் முன்னதாகத் தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்வது தவறு. நான் முன்பே குறிப்பிட்டேன். கேள்விக்கு விடை அளித்தபோதே குறிப்பிட்டேன். "கோர்ட்டு உத்தரவு இருக்கிறது. கோர்ட்டு உத்தரவுப்படி அவர்கள் நடக்க இருக்கிறார்கள். நீங்கள் தகராறு செய்யவேண்டாம்" என்று 15-ம் தேதியன்று இருசாராரையும் கூட்டி 'நீங்கள் தகராறு செய்யவேண்டாம்' என்று இரு சாராரையும் போலீசார் இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஒப்புக்கொண்ட பிறகு அதை மீறி அவர்கள் வந்திருக்கிறார்கள். போலீஸ் தடுப்பு நடவடிக்கை ஒன்றும் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லுவது சரியல்ல. ஆனால், பின்னால் மறுபடியும் தகராறு வருகிறது என்று ஏற்பட்ட பிறகு 16-ம் தேதி அந்தத் தடை உத்தரவு போடப்பட்டது. ஆனால், தடை உத்தரவைப் பின்னால் போட்டு ரிக்கார்டு பண்ணியிருக்கிறார்கள் என்று சொல்வது ரொம்பத் தவறு. அப்படி அதிகாரிகளைப் பற்றித் தகவல் இல்லாமல், யாரோ சொல்லுகிறார்கள் என்று எதையோ நினைத்துக்கொண்டு தடை உத்தரவு போட்டதைப் பின்னால் போட்டிருக்கிறார்கள் என்று திரு. சசிவர்ணத்தேவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர் சொல்லுவது முறையல்ல என்ற அளவோடு சொல்லி நிறுத்திக் கொள்கிறேன். எனக்கு வந்த தகவல் என்னவென்றால், அவர்கள் கோர்ட்டு உத்தரவுக்கு மேல் அப்பீல் ஒன்றும் நடக்கவில்லை. கோர்ட்டு உத்தரவுப்படி உரிமை பெற்றவர் வெள்ளைக்கொடி காண்பிப்பதாக இருந்தது. மறுபடி ஒரு தகவல். அந்த உத்தரவு மாறிவிட்டது, அந்த உத்தரவு அப்பீல் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற ஒரு செய்தி பரப்பப்பட்டு, அந்தச் செய்தியினால் ஒரு குழப்பம் ஏற்பட்டது. அதற்கு மேலே போலீசார் அம்மாதிரி ஒன்றும் மாறவில்லை, முன்னால், போட்ட உத்தரவு இருக்கிறது என்பதை விளக்கும் வகையிலே பிரகடனம் செய்தார்களே தவிர, போகாதவர்களை 'நீங்கள் வந்து மீன் பிடியுங்கள்' என்று அவர்கள் கூறியிருப்பதாக என்னிடம் தகவல் இல்லை. அப்படி அவர்கள் வந்தபோது 17-ம் தேதி காலையில் நாலரை மணிக்கு ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் உத்திரவுப்படி மாஜிஸ்டிரேட் போலீஸ் அதிகாரிகள், டெபுடி சூபரின்டெண்டெண்ட் எல்லோரும் போய் இருந்தார்கள். எல்லோரும் அமைதியைப் பாதுகாப்பதற்காகத்தான் போனார்கள். திரு. சசிவர்ணத்தேவர் அவர்

கள் மீன் பிடிக்கிற இடத்திற்கும் துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்திற்கும் அரை மைல் தூரம் இருந்தது என்று சொன்னார்கள். உண்மைதான். அதற்குக் காரணம் அவர்கள் எதிர்நோக்கி வந்தார்கள். ஆயுதங்களோடு வேல், கம்பு, அறிவாள், கல் . . . (திரு. மூக்கையா தேவர் அவர்கள் குறுக்கிட்டார்கள்). கல் என்றால் பரவாயில்லை என்று கனம் அங்கத்தினர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் சொல்கிறார்கள். அது கல்லானாலும், அது வெறும் மண்ணாங்கட்டிதான் என்று சொல்கிறார்கள். நல்லவேளையாக பூச்செண்டோடு ஓடி வந்தார்கள் என்று சொல்லவில்லை. அப்படி எதிர் நோக்கி வந்தவர்களைப் போலீசார் தடுத்தார்கள். அந்த பக்கத்திற்கு இரண்டு கம்பெனிகள் அனுப்பப்பட்டன. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல போலீசார், அதிகாரிகள் எல்லோரும் சேர்த்து 54 பேர்கள் இருந்தார்கள். ஆயிரம்பேர்கள் கலவரம் செய்தார்கள் என்றால் அந்தக் கலவரத்தைத் தடுக்க ஆயிரம் போலீசாரை அனுப்புவது இல்லை. நம்முடைய மாகாணத்தில் மொத்த போலீஸ் strength எவ்வளவு இருக்கிறது?

கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்வது பற்றிக் குறிப்பிட்டார்கள். அதுவும் செய்யப்படுகிறது. அதையும் மீறி கலவரம் செய்தார்களானால் போலீசார் சுடுகிறார்கள். முதலில் லத்திசார்ஜ் செய்யவேண்டும். பிறகு புகைப் பிரயோகம் செய்யவேண்டும். லத்திசார்ஜ் செய்தார்கள். எந்த அளவுக்குச் செய்யவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்தார்கள். அதற்கு மேல் சுடுவதில் கூட 12 ரவுண்டுகள் சுட்டார்கள். சுட்ட முதல் ரவுண்டிலேயே உயிர்ச்சேதம் ஏற்படுவது இல்லை. கடைசியில்தான் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. மற்ற விஷயங்களெல்லாம் ஆர்.டி.ஓ. அவர்களுடைய விசாரணையில் இருக்கின்றன. இதற்கு நீதிபதியினுடைய விசாரணை வேண்டுமென்று அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். சிற்சில சமயங்களில் நீதி விசாரணை செய்வதற்கு நீதிபதிகளைப் போடுகிறோம். குற்றமாக எதை வேண்டுமானாலும் சொல்லலாம். ஒரு சப் மாஜிஸ்டிரேட் அதிகாரம் உள்ள அதிகாரி 144 உத்தரவு போட்டால் கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள் சொல்கிறார்கள், "பின்னால்கூட இப்படி ரெக்கார்டு பண்ணுகிறார்கள்" என்று. அப்படிச் சொல்லும்போது நீதிபதியாக இருந்தால் என்ன? வேறு யாராக இருந்தால் தான் என்ன? சில இடங்களில் நீதிபதிகளைப் போடுகிறோம். விதிகளின்படி, சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆர்.டி.ஓ.-விடமிருந்து அறிக்கை வந்த பிறகு பரிசீலனை செய்து யார் பேரில் தவறு இருந்தாலும், அதிகாரிகள் பேரில் தவறு இருந்தாலும், அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளச் சற்றும் தயங்காது என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் சசிவர்ணத்தேவர் அவர்கள் மொத்த அடிப்படையையே எடுத்துச் சொன்னார்கள். நமக்குத் திட்டம், பாதுகாப்பு இரண்டும் முக்கியமானது. திட்டத்தைக் குறைத்துவிடலாம், பாதுகாப்புதான் முக்கியமானது என்று அவர்கள் சொன்



னார்கள். ஒருகாலும் அதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளாது. திட்டமும் பாதுகாப்புக்கு உகந்ததே. பாதுகாப்பு என்றால் ஆள் சேர்த்து அனுப்புவது என்று அர்த்தமல்ல. திட்டத்தையும் பாதுகாப்பையும் சீரான முறையிலே அமைக்க வேண்டுமென்ற வகையிலே நாம் இப்போது கவனம் செலுத்தி வருகிறோம்.

தங்கக் கட்டுப்பாட்டைப்பற்றி கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மதியழகன் அவர்கள் எல்லோரும் சொன்னார்கள். தங்கக் கட்டுப்பாடு விஷயத்தைப் பற்றி முன்பே நான் கூறினேன். ஏராளமான தங்கம் கள்ளத்தனமாகப் பதுக்கப்படுகிறது. சர்க்கார் அதைத் தடுக்கவேண்டும். அதனால் அன்னியச் செலவாணி பாதிக்கப்படுகிறது. அதுவும் இந்த நெருக்கடி நிலையிலே பெரிதும் பாதகத்தை விளைவிக்கிறது. அதை தவிர்க்கவேண்டுமென்பதுதான் அடிப்படை. தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அதிலே அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. கனம் சசிவர்ண தேவர் அவர்கள் எல்லோரும் எதிர்க்கிறார்கள் என்று சொன்னார்கள். அது அவர்கள் கணக்கு. அதை ஒரு வியாஜியமாக வைத்து அரசாங்கத்தைக் குறை கூறலாம் என்றால் குறை கூறலாம். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் "பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க மத்திய அரசாங்கம் என்னென்ன வகையில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்" என்று கேட்டார்கள். முன்பே நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுக்கு மத்திய நிதியமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தைப் பற்றி இந்த மன்றத்திலே குறிப்பிட்டேன். அதற்குப் பிறகு நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் மத்திய நிதி மந்திரியைப் பார்த்துவிட்டு வந்த பிறகு எவ்வாறெல்லாம் அவர்களுக்கு உதவியளிக்க முற்பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றியும் எழுதியிருக்கிறார்கள். பொற்கொல்லர்களுக்கு நிவாரணம் அளிப்பது ஒன்று. தொழில் வாய்ப்புக் கொடுப்பது மற்றொன்று. மேலும் 14 காரட்டு தங்கத்தில் நகை செய்வதற்கு 14 காரட்டில் தங்கம் கொடுக்கச் செய்வது பற்றியும் மத்திய நிதி மந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு 14 காரட் தங்கம் கொடுப்பதற்கு உதவிகரமாக அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள், என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டேன். பாதுகாப்புக் கொடுத்து அவர்களுடைய குறைகளை போக்குவதற்கு கலந்து ஆலோசிக்கிறோம்.

இந்த உப தேர்தலைப்பற்றிக் கனம் அங்கத்தினர் திரு. சசிவர்ணத் தேவர் அவர்கள் சொன்னார்கள். முதல் அமைச்சர் கூறிய யோசனையை ஏற்றுக்கொள்வதானால் ஏற்றுக்கொள்ளட்டும். வேண்டாமென்றால் வேண்டாம். அதிலே நிர்ப்பந்தம் இல்லை. அதிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு சுமுகமான முறையில் தேர்தல் இல்லாமல் நடந்தால் நல்லது என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே ஒன்றும் வற்புறுத்துதல் இல்லை. தேர்தல் கமிஷன் உப தேர்தலை நடத்தலாம் என்று முடிவு செய்த பிறகு தேர்தலை நடத்தலாம். அதிலே போட்டி வந்தாலும்கூட

[திரு. எம். பக்தவத்சலம்] [29th March 1963

அனாவசியமான கசப்பு ஏற்படவேண்டிய அவசியமில்லை. தேர்தல் நடந்தால் உரிமை உண்டா என்று கேட்டார்கள். பேசுவதற்கு உரிமை உண்டு. ஆனால் அதற்கும் ஒரு வரம்பு இருக்கிறது என்பதை உணரவேண்டும். உரிமை இருக்கிறது என்பதற்காகத் தேர்தல் நேரத்தில் எதை வேண்டுமானாலும் பேசினால் அதைப் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. உப தேர்தலை நடத்தினால் பாதுகாப்பு விதிகள் பிரச்சாரத்திற்கு இடையூறாக இருக்கும் என்று சொன்னார்கள். நியாயமான பேச்சு உரிமைக்கு எந்தவிதத்திலும் பாதகம் ஏற்படாது. அதற்கு மத்திய அரசாங்கமும் உறுதி கூறி இருக்கிறது.

விலைவாசி குறைவுபற்றியும், அதிகரித்திருப்பதைப்பற்றியும் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். விலைவாசி குறையவில்லை என்று சொன்னார்கள். ஆனால் விலைவாசி ஓரளவு குறைந்துதான் இருக்கின்றது அதெல்லாம் அப்போதைக்கப்போது கண்காணிக்கப் பட்டுத்தான் வருகிறது. சில இடங்களில் விலை குறையாமல் இருக்கிறது. அதற்காக கண்ட்ரோல் வேண்டுமென்று யாரும் சொல்ல மாட்டார்கள் என்று நம்புகிறேன். கண்ட்ரோல் பல தொல்லைகளை அளிக்கிறது. கண்ட்ரோல் இல்லாமல் எவ்வளவு தூரம் இந்தப் பிரச்சினையை சமாளிக்க முடியுமோ அந்த அளவு கூட்டுறவு முறைகளைப் பயன்படுத்திக்கொண்டு இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்.

மற்றபடி முதியோர் பென்ஷன் திட்டம்பற்றிப் பேசும்போது எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் 'ஆழம் தெரியாமல் காலை விட்டு விட்டார்கள்' என்று சொன்னார்கள். ஆழம் தெரியவேண்டிய அவசியமில்லை. ஆழம் என்ன இருந்தாலும் விழுந்துதான் ஆகவேண்டும். முதியோர்கள் அவதிப்படுகிறார்கள், நிர்க்கதியாக இருக்கிறார்கள், திக்கற்றவர்ளாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக ஆகும் செலவுபற்றி நாங்கள் அஞ்சவில்லை. அதிலே ஒன்றும் நான் ஏமாந்துவிடவில்லை. என்னுடைய நோக்கம் அந்தத் திட்டம் நல்லமுறையில் நடக்கவேண்டுமென்பதுதான். கனம் அங்கத்தினர் அவர்களுடைய குறைபாடு நாங்கள் கொஞ்சம் தாராளமாகக் கொடுக்கிறோம் என்பது. சில இடங்களில் ரொம்பக் கண்டிப்பு இருக்கிற காரணத்தால் தகுதி இருப்பவர்களுக்குக் கூட கிடைப்பது இல்லை என்று சொன்னார்கள். இது எல்லாம் பாதுகாக்கப்பட தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்கள் "மக்கள் பிரதிநிதிகளிடம் இந்த அரசாங்கத்துக்கு நம்பிக்கை இல்லை" என்று சொன்னார்கள். அரசாங்கத்துக்கு நம்பிக்கை இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன. மக்களுக்கு நம்பிக்கை இருந்தால் அதற்கு விரோதமாக அரசாங்கம் ஒருபோதும் போக முடியாது.



29th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்பது, ஏதோ சில பணிகளை நிறைவேற்றுவதிலோ, தேர்ந்தெடுப்பதிலோ, கமிட்டி போடுவதிலோ, அட்மிஷன் செய்வதிலோதான் என்று சொன்னால் அது சரியல்ல. உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை போட்டால்தான் மக்கள் பிரதிநிதிகளிடம் நம்பிக்கை இருக்கிறது என்று அர்த்தமல்ல. சிலவற்றில் உத்தியோகப்பற்றற்றவர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் கோரப்படுகின்றன. ஆயினும் அனுபவத்தால் ஏற்பட்ட விளைவினால் அதிகாரிகளே அந்தக் காரியங்களைக் கவனிக்கட்டும் என்று செய்திருக்கிறோம். அதிகாரிகள் தவறு செய்தால்—அங்கத்தினர் தவறாக—எடுத்துக்கொள்ளக் கூடாது; குத்தலாகப் பேசுகிறேன் என்று சொல்லக்கூடாது; எந்த உறுப்பினர்கள்மீதும் நான் குற்றம் சாட்டவில்லை—உடனடியாக தவிர்க்க முடியும்; பரிகாரம் காண முடியும். அம்மாதிரி விஷயங்களிலெல்லாம் உத்தியோகப் பற்றற்றவர்கள் செய்தால் சுலபமாக சமாளிக்க முடியாது. இது ஒரு அடிப்படையான கருத்து. அந்தக் கருத்தை வைத்துக்கொண்டு உத்தியோகப் பற்றற்றவர்கள்; மக்கள் பிரதிநிதிகள்; இவர்களுடைய சேவை; உதவி கோரப்படுவதில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

கனம் அங்கத்தினர் திரு. வடிவேலு அவர்கள் "ஹரிஜன நல இலாகா என்று எதற்காக இருக்கவேண்டும்? யாராயிருந்தாலும், இருப்பவன், இல்லாதவன் என்று இரண்டு வகையிலே நாம் கவனம் செலுத்தவேண்டும்" என்று சொன்னார்கள். பின்னால் சொன்ன கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், பொதுவாக, எந்த நிலையில் இருந்தாலும், எந்த அந்தஸ்தில் உள்ளவனாக இருந்தாலும், எந்த ஜாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், 'இருப்பவன், இல்லாதவன்' என்று எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது வேறு விஷயம். ஆனால், ஹரிஜனங்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் நீண்ட நாட்களாகத் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்து வருகிறார்கள், அவதிப்பட்டுக்கொண்டிருந்தார்கள், அவர்களை உயர்த்தவேண்டும் என்பதற்காக ஒரு தனி இலாகா இருக்கிறது. ஹரிஜனங்களுக்கென்று இந்த இலாகா இருக்கவேண்டாமென்று சொல்வது நல்லதல்ல. (திரு. மு. பொ. வடிவேல்: வேண்டாம் என்று சொல்லவில்லை) 'வேண்டாமென்று சொல்லவில்லை' என்று இப்பொழுது சொல்லலாம். ஆனால், 'ஹரிஜன நல இலாகா எதற்காக? இருப்பவன், இல்லாதவன் என்று பார்த்துச் செய்யவேண்டும்' என்று சொன்னார்கள். அப்படியென்றால், மற்ற ஜாதியிலே இருக்கிறவர்களுக்கும் சேர்த்துப் பொதுவாகச் செய்யுங்கள் என்று சொன்னதாகத்தானே எடுத்துக்கொள்ள வேண்டும்?

திரு. மு. கருணாநிதி: கனம் மன்றத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. வடிவேலு அவர்கள் 'ஹரிஜன நல இலாகா என்ற பெயர் வைத்துக்கொண்டு, அதிலே பின்தங்கியவர்களையும் சேர்த்து, மொத்தப் பணத்தை அவர்களுக்கும் சேர்த்துச் செலவழிப்பதால் ஹரிஜனங்களுக்குப் போதுமான பணம் போய்ச் சேருவதில்லை.

ஹரிஜனங்களுக்குப் போதுமான பணம் போய்ச் சேர வேண்டுமானால், ஹரிஜனங்களுக்கென்றே தனி இலாகா இருக்க வேண்டும்' என்றுதான் குறிப்பிட்டார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் திரு. வடிவேல் அவர்கள் பேசும்போது அப்படிச் சொல்லவில்லை. இப்பொழுது வேண்டுமானால் திருத்திக் கொள்ளலாம். இப்பொழுதாவது திருத்திக்கொள்வதுபற்றி மகிழ்ச்சி.

**கனம் சபாநாயகர்:** பின்தங்கியவர்களுக்கும் ஒரு தனி இலாகா வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்கிறாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்கள், 'ஹரிஜன இலாகா என்று வைத்துக்கொண்டு, வேறு பிற்போக்கான சமூகத்தினர்களையும் அதில் சேர்த்துக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது' என்றும் சொன்னார்கள். அதற்கு நான் சமாதானம் கூறுகிறேன். ஹரிஜனங்களை நாம் எப்போதுமே தனித்து வைத்திருப்பது சரியல்ல. பாக்வர்டு கம்யூனிட்டீஸ், மோஸ்ட் பாக்வர்டு கம்யூனிடீஸ் என்று சொல்லக்கூடிய ஏறக்குறைய பிற்போக்காக இருக்கும் வேறு சமூகத்தினரையும் இதிலே சேர்த்து, அவர்களுடைய நலன்களும் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஹரிஜனங்களுக்கென்று வீடுகள் கட்டினாலும், பின்தங்கியவர்களுக்கும் இரண்டு வீடுகள் இருக்கட்டும் என்று சொல்கிறோம். ஹரிஜனங்களாகவே இருந்து கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் கூடாது என்பதற்காக நாம் அதைச் செய்கிறோம். 'ஹரிஜன நல இலாகா என்று வைத்துவிட்டு பிற்போக்கான நிலையில் உள்ளவர்களையும் அதில் சேர்த்திருக்கிறீர்களே, இருப்பவன், இல்லாதவன் என்று பார்த்துச் செய்யுங்கள்' என்று சொன்னால் என்ன அர்த்தம் இருப்பவன், இல்லாதவன் என்று பார்த்தால் எல்லா ஜாதிகளிலும் தான் இருக்கிறார்கள். (திரு. மு. பொ. வடிவேல்: அவர்களுக்கென்றே தனி இலாகா இருக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன்.) ஹரிஜன நல இலாகா இருக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் திரு. வடிவேல் அவர்கள் இப்பொழுது ஏற்றுக்கொள்ளுகிறார்கள். (திரு. மு. கருணாநிதி: எப்பொழுதும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.)

'அடுத்தபடியாக, மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலை, மத்திய வரிகள் மூலம் அக்கிரமமாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லப்பட்டது. மத்திய வரியைப் பொறுத்த வரையில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். 'அட்வான்ஸ் கலெக்ஷன் ஆஃப் டாக்ஸ்' என்று இருக்கிறது. என்றைக்கு வரி போட்டாலும், அன்றிலிருந்தே வரி வசூலிக்கலாம். இல்லாவிட்டால் பதுக்கல் ஏற்படும். ஆகவேதான் மண்ணெண்ணெய்க்குச் சில சமயங்களில் விலை ஏற்றுகிறார்கள். அம்மாதிரி விலை ஏற்றுகிற நிலைமை ஏற்பட்டால், அதுவும் நியாயமில்லாத அளவுக்கு விலை ஏற்றப்படுகிறதா என்பதை இந்த அரசாங்கத்தின் ஸிவில் சப்ளைஸ் இலாகா கவனித்துக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



மேலும் நான் கனம் அங்கத்தினர்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட மற்ற விஷயங்களிலும் மேலும் கவனம் செலுத்துவோம் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். திருச்சியில் இறந்த திருப்பதிசாமி என்பவர் முன்பே நோயினால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும், அவருடைய மனைவி அவரை ஊர்வலத்திற்குப் போக வேண்டாம் என்று சொல்லித் தடுத்தும் அவர் போனதால் இறக்க நேர்ந்தது என்றும் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் தகவல் அவருக்கு யாரிடமிருந்து வந்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சர்க்காருக்கு வரும் தகவல் யாரிடமிருந்து வந்தது என்று நாங்கள் சொல்வோம் என்று கனம் அங்கத்தினர் எதிர்பார்க்கக் கூடாது.

**Mr. SPEAKER:** The short-notice question on the subject is already over.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** முதல் அமைச்சர் அவர்கள் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்த இடம் வேறு. ஹக்கிம் என்பவர் தாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இடம் வேறு.

**கனம் சபாநாயகர்:** தாக்கியதாக ஒத்துக்கொள்ளப்பட்டதா?

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அந்த இடம் வேறு; இந்த இடம் வேறு. தில்லைநகரில் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

**கனம் திரு. கு. காமராஜ்:** கனம் சபாநாயகர் அவர்களே, நானே இதற்குப் பதில் சொல்லி விடுகிறேன். ஏனென்றால், அது பெரிய புளுகு. புளுகில் கைத்தேர்ந்தவர்கள், அதைக் கலையாகக் கற்றவர்கள், தேர்தல் காலத்தில் அதைத் திறமையாக உபயோகப்படுத்தக்கூடியவர்கள் அவர்கள். உப-தேர்தல் வந்துவிட்டது. அதற்கு ஏதாவது கதை கட்ட வேண்டும், கயிறு திரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கட்டுப்பாடாகச் செய்யப்பட்ட பொய்ப் பிரசாரம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

(கனம் அங்கத்தினர்கள் திரு. மு. கருணாநிதி, திரு. அ. பெ. தர்மலிங்கம், திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்கள்.)

**திரு. மு கருணாநிதி:** 'பொய்ப் பிரசாரம்' என்று சொல்லப்பட்ட வார்த்தைகள் வாபஸ் வாங்கப்படவேண்டும்.

**கனம் திரு. கு. காமராஜ்:** தவறாகச் சொன்னால் அதை நான் வாபஸ் வாங்கிக் கொள்ளுவதற்கு பயப்படப் போவதில்லை. ஆனால், நான் எந்த அர்த்தத்தில் சொன்னேன் என்றால், கட்டுப்பாடாகப் பிரச்சாரம் செய்வதற்காகப் பத்திரிகையில் ஏற்பாடு

[திரு. கு. காமராஜ்] [29th March 1963

பண்ணப்படுவதைப் பொய்ப் பிரசாரம் என்று குறிப்பிட்டேனே தவிர, இங்கே பேசினதைப்பற்றி நான் பேசவில்லை. கனம் அங்கத்தினர் இங்கே பேசும்போது பொய் சொன்னார் என்று நான் சொன்னால் அப்போது கேட்கலாம். நான் அப்படிச் சொல்லவில்லை. நான் சொல்லும்போது என்ன சொன்னேன்? 'அதிலே உண்மை இல்லை' என்று நான் சொன்னேன். பிரகாசமாக ஏற்பாடு செய்யப்படுவது பொய்ப் பிரசாரம் என்று சொன்னேன், இரண்டையும் பிரித்துவிட வேண்டும், ஒன்றோடொன்று சேர்த்துக் குழப்ப வேண்டாம்.

தில்லைநகரில் நடந்தது என்ன? "கன்னத்தில் அடித்தார்கள் என்று யாரோ இரண்டுபேர் சொன்னார்கள், கேட்டார்கள்" என்று கதை கட்டுவதும், கயிறு திரிப்பதும் சரியல்ல, அது உண்மைக்கு மாறுபட்டது. அதோடு மட்டுமல்ல, சர்க்யூட் ஹவுசிலே வந்து பேசினதுபோது, ஒருவர் இறந்து போனதாகச் சொன்னதற்குப் பிறகும் அவர்களோடு உட்கார்ந்து விவாதம் பண்ணிக் கொண்டிருந்ததாகச் சொல்வதும் முழுக்க முழுக்கப் பொய். அதாவது உண்மைக்குப் புறம்பானது.

Sri V. KRISHNAMOORTHI : On a point of Order, Sir.

Mr. SPEAKER : The Hon. Chief Minister is not alleging that any hon. Member of this House is uttering falsehood. He says that what is found in the papers is false. What is found in the papers cannot be made the subject matter of a point of order.

கனம் திரு. கு. காமராஜ் : அங்கு வந்து என்னுடன் உட்கார்ந்து விவாதம் பண்ணினவர்கள் அவர்களுடைய குறையைச் சொன்னார்கள், "என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஒரு குறிப்பு (நோட்) கொண்டு வாருங்கள். அதைப் பார்த்துப் பரிசீலனை செய்கிறேன்" என்று நான் சொல்லி அனுப்பினேன். அதோடு அவர்கள் திரும்பிப் போனார்கள்.

அப்படியிருக்கும்போது, "ஒருவர் இறந்து போனதாகச் சொல்லியபிறகும் தாறுமாறாக நடந்து கொண்டார், கடுமையாக நடந்து கொண்டார்" என்ற வார்த்தைகள் சொல்வது சரியாகாது. அது உண்மைக்கு மாறுபட்டது என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். இதை விளக்கச் சந்தர்ப்பம் ஏற்படுத்தியதற்காக நண்பருக்கு நன்றி.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகின்றேன். முதல் அமைச்சர் அவர்கள் முதலில், "இங்கே உறுப்பினர்கள் எடுத்துக் கூறியது பொய்ப் பிரசாரம்" என்று கூறினார்கள். நாங்கள் அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு விளக்கத்தை வேறு திசைக்குத் திருப்பினார். அதை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன்.



29th March 1963]

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல என்பது என்னுடைய தீர்ப்பு. ஆகவே, ஒழுங்குப் பிரச்சனையைத் தள்ளிவிடுகிறேன்.

Mr. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) be passed."

Mr. SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963) be passed."

The motion was put and carried and the Bill was passed.

### (3) THE INDUSTRIAL DISPUTES (MADRAS AMENDMENT) BILL, 1963 (L.A. BILL NO. 7 OF 1963).

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963), be taken into consideration.

Under section 2 (n) (vi) of the Industrial Disputes Act, 1947, (Central Act [IV of 1947), the appropriate Government can declare only those industries specified in the First Schedule to the Act as public utility services. The leather and the oxygen and acetylene industries have not been included in that Schedule. The Government have received representations requesting that the leather industry may be declared as public utility service under the said Act. The process of leather tanning consists of various stages stretched over a period of thirty days and if the processes at one stage were to be interrupted even for a few hours the skins and hides would get demaged, and consequently the threat of strikes with little or no notice to the managements should be eleminated. It has also been represented that the oxygen and acetylene industry is vital for the defence and economy of the country and that any sudden interruption in the production and distribution of their products will seriously dislocate important industries and institutions. It is, therefore, considered that the First Schedule to the Industrial Disputes Act, 1947, should be amended to include the leather and the oxygen and acetylene industries so as to enable the Government to declare the said industries as public utility services. Legislation is therefore necessary to give effect to the decision. The concurrence of the Government of India to the said Bill has also been obtained.

MR. SPEAKER: The question is—

'That the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963, (L.A. Bill No. 7 of 1963) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963), be passed.'

MR. SPEAKER: The question is—

'That the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963), be passed.'

The motion was put and carried and the Bill was passed.

1-31 p. MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

144. *Notification issued with G.O. Ms. No. 3827, Home, dated 13th November 1962 amending the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, published with Home Department Notification S.R.O. No. A–291 of 1960, dated the 18th August 1960, at pages 3–121 of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the 14th September 1960, as subsequently amended [Laid on the table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

### B. Reports, Notifications and other papers.

*103. *The Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963).*

*104. *The Madras Appropriation (No. 2) Bill, 1963 (L.A. Bill No. 8 of 1963).*

*105. *The Madras Appropriation (No. 3) Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963).*

* Circulated to Members on 28th March



## APPENDIX I

[*Vide* answer to Starred Question No. 423 on page 107.]

In Madras City necessary action is being taken to prevent the manufacture and sale of adulterated food stuffs under the provisions of the Prevention of Food Adulteration Act, 1954. Though the Act extends throughout the State, only 249 Local Bodies are sending samples now under this Act. In view of the limited facilities available in the Government Analyst's Laboratory, large scale sampling throughout the State could not be undertaken. However with the existing facilities, the maximum number of samples which could be possibly analysed is being received from the local bodies. The total number of samples taken during the year 1961, was 19,986 as against 16,757 during 1955. The percentage of adulterated samples was 25 per cent during the year 1961, as against 28 per cent during the year 1960. Statements showing the particulars regarding the number of food samples found adulterated and number of cases convicted in the districts and in the Madras City during the years 1960, 1961 and 1962 (till March) are appended.

2. The Prevention of Food Adulteration Act provides for severe and deterrent punishments including imprisonment of offenders, which tend to produce desired effects on the offenders. The fines imposed in cases under the Act in the districts during the year 1961 were fairly heavy. In over 60 cases, sentences of imprisonment for varying terms up to two years were imposed, and in 50 cases punishments with both imprisonment and fines were inflicted. The total amount of fines imposed in the districts for cases under the Act during the years 1957 to 1961 is furnished below:—

Fines imposed.

| Year. | (RS. IN LAKHS.) |
|---|---|
| 1957–58 ... ... ... ... | 3·86 |
| 1958–59 ... ... ... ... | 2·60 |
| 1959–60 ... ... ... ... | 1·13 |
| 1960–61 ... ... ... ... | 4·76 |

3. Due to slender financial position, minor Panchayats and villages find it difficult to pay the annual contribution towards the cost of analysis of samples taken under the Prevention of Food Adulteration Act and they are therefore unwilling to work the Act. In the circumstances, the Act is inoperative in large areas covered by such small local bodies. This is an unsatisfactory situation which stands in the way of vigorous enforcement of the Prevention of Food Adulteration Act in the State.

4. Government have already issued, in G.O. (Ms.) No. 1752, Health, dated 18th July 1961 necessary Rules under Section 24 of the Prevention of Food Adulteration Act which include, among other items, provision for licensing of trades in food articles under the Act. The active implementation of the above rules relating to licensing of trades is expected to help greatly towards effective enforcement of the provision of the Prevention of Food Adulteration Act in checking adulteration of food articles. Besides, Government have also under consideration a proposal for the appointment of District Health Officers as Special Food Inspectors in the districts under the Act for the purpose of sampling from wholesalers and at the sources of manufacture of food articles to check adulteration at these sources. It may be mentioned in this connection, that sampling from big merchants, wholesalers at source of manufacture is at present meagre.

5. There are two laboratories in this State which are engaged in the analysis of food samples taken under the Act, (1) Government Analyst Laboratory at the King Institute, Guindy and (2) Public Analyst Laboratory attached to the Madras Corporation. The former Laboratory undertakes analysis of samples received from all the areas in the State except Madras City and the latter, analysis of the samples taken in Madras City.

6. As large scale sampling throughout the State is very essential for the successful eradication of adulteration of the food stuff which requires extended laboratory facilities, Government have already under consideration, necessary proposals for the establishment of a fully equipped State Food Laboratory at Madras and for the provision of facilities for analysis of food in the proposed Principal Laboratory at Coimbatore, on the basis of the recommendations of the Expert Committee constituted under the Chairmanship of late Dr. U. Krishna Rao.

7. Government of India have since constituted a Sub-Committee to review the working of the Prevention of Food Adulteration Act in the States and to make suggestions towards intensifying the working of anti-adulteration measures; such measures as may be recommended by the above committee will also be considered and adopted.





STATEMENT SHOWING THE PARTICULARS REGARDING THE NUMBER OF FOOD SAMPLES FOUND ADULTERATED AND NUMBER OF CASES CONVICTED IN THE DISTRICTS OTHER THAN MADRAS CITY.

| Nature of articles. | 1960. | | 1961. | | 1962 (Up to 31st March 1962). | |
|---|---|---|---|---|---|---|
| | Number of samples found adulterated. | Number of cases convicted. | Number of samples found adulterated. | Number of cases convicted. | Number of samples found adulterated. | Number of cases convicted. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| Milk .. .. | 2,529 | 2,135 | 2,200 | 1,495 | 248 | 15 |
| Butter .. .. | 98 | 63 | 78 | 44 | 8 | .. |
| Ghee .. .. | 70 | 58 | 53 | 31 | 8 | 1 |
| Gingelly Oil .. .. | 179 | 129 | 97 | 58 | 7 | .. |
| Groundnut Oil .. .. | 32 | 24 | 31 | 16 | .. | .. |
| Cocoanut Oil .. .. | 9 | 8 | 7 | 6 | .. | .. |
| Coffee .. .. | 37 | 27 | 34 | 15 | 2 | .. |
| Tea .. .. | 33 | 26 | 22 | 7 | 1 | .. |
| Turmaric .. .. | 31 | 22 | 23 | 7 | .. | .. |
| Dhall and flours .. .. | 22 | 22 | 41 | 16 | 9 | 1 |
| Sweets .. .. | 1 | 1 | 1 | 1 | .. | .. |
| Honey .. .. | 3 | 2 | 2 | 1 | .. | .. |
| Miscellaneous .. .. | 39 | 35 | 46 | 25 | 4 | 1 |
| Total .. | 3,083 | 2,552 | 2,635 | 1,722 | 287 | 17 |

STATEMENT SHOWING THE PARTICULARS REGARDING THE NUMBER OF CASES FOUND ADULTERATED AND NUMBER OF CASES CONVICTED IN THE MADRAS CITY.

| Nature of articles. | 1960. | | 1961. | | 1962 (Up to 31st March 1962). | |
|---|---|---|---|---|---|---|
| | Number of samples found adulterated. | Number of cases convicted. | Number of samples found adulterated. | Number of cases convicted. | Number of samples found adulterated. | Number of cases convicted. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| Milk .. | 1,906 | 478 | 1,391 | 314 | 340 | .. |
| Butter .. | 78 | 24 | 51 | 19 | 9 | .. |
| Ghee .. | 75 | 13 | 45 | 3 | 21 | .. |
| Gingelly Oil .. | 93 | 28 | 67 | 33 | 15 | .. |
| Groundnut Oil .. | 20 | 7 | 11 | 2 | 2 | .. |
| Coconut Oil .. | 10 | 5 | 5 | 2 | 1 | .. |
| Coffee powder .. | 21 | 8 | 14 | 3 | 5 | .. |
| Tea .. | 5 | 1 | 6 | .. | | .. |
| Ghee Substitutes .. | 1 | .. | .. | .. | 1 | .. |
| Thoovar Dhall .. | 34 | 4 | 33 | 9 | 10 | .. |
| Turmeric .. | 21 | 10 | 12 | 1 | 3 | .. |
| Arrow root .. | 7 | 1 | 4 | 2 | .. | .. |
| Honey .. | .. | .. | 2 | .. | 1 | .. |
| Maida .. | 1 | .. | 1 | 1 | .. | .. |
| Chillies powder .. | 1 | 1 | 5 | .. | 4 | .. |
| Lozenges .. | 1 | .. | .. | .. | .. | .. |
| Food colour .. | .. | .. | 1 | 1 | .. | .. |
| Chicory .. | .. | .. | .. | .. | 1 | .. |
| Saffaron powder .. | .. | .. | .. | .. | 1 | .. |
| Total .. | 2,274 | 580 | 1,648 | 390 | 415 | .. |





*107-ம பக்கத்திலுள்ள 423 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.*

*சென்னை நகரில் கலப்பட உணவுப் பொருள்கள் தயாரிப்பதையும் விற்பதையும் தடைசெய்யும் பொருட்டு உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பது குறித்த 1954-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டம் மாநிலம் முழுவதிலும் அமுலில் இருக்கிறது. எனினும் இதன்கீழ் தற்பொழுது 249 ஸ்தல ஸ்தாபனங்கள் மட்டுமே சாம்பிள்களை அனுப்புகின்றன. அரசாங்க பாகுபாட்டு ஆராய்ச்சிச் சாலையில்* (Govt. Analysts' Laboratory) *போதிய வசதிகள் இன்மையால் மாநில முழுவதிலும் மாதிரிகளைப் பெருவாரியாகப் பரிசோதனை செய்வதை மேற்கொள்ள முடியவில்லை. எனினும், தற்பொழுது இருக்கும் வசதிகளைக்கொண்டு பகுப்பாராய்ச்சிப் பரிசோதனை செய்யக்கூடிய அதிகபட்ச சாம்பிள்கள் ஸ்தல ஸ்தாபனங்களிடமிருந்து வரவழைக்கப்படுகின்றன. 1961-ம் ஆண்டில் பரிசோதனை செய்யப்பட்ட மொத்த சாம்பிள்களின் எண்ணிக்கை 19,986 ஆகும். 1955-ம் ஆண்டில் 16,757 சாம்பிள்களைத்தான் பரிசோதனை செய்தார்கள். 1961-ம் ஆண்டில் கலப்படம் செய்யப்பட்ட மாதிரிகளின் சத விகும் 25 சத வீதமாக இருந்தது. 1960-ம் ஆண்டில் 28 சத விதமாக இருந்தது. 1960, 1961, 1962 (மார்ச் வரை) ஆண்டுகளில் சென்னை நகரில் கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட உணவுப் பொருள்களின் மாதிரிகள், மாவட்டங்களிலும் சென்னை நகரிலும் குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவை சம்பந்தமான விவரங்கள் அடங்கிய அறிக்கைகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.*

*2. உணவுப் பொருள்களைக் கலப்படம் செய்வதைத் தடைசெய்வது குறித்த சட்டத்தில், கலப்படம் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்க ஷரத்துக்கள் உள்ளன. அதில் குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை விதிக்கும் ஷரத்தும் அடங்கியுள்ளது. இச் சட்டத்தின்கீழ் மாவட்டங்களில் 1961-ம் ஆண்டு விதிக்கப்பட்ட அபராதங்கள் சற்று அதிகமாகவே இருந்தன. அறுபது வழக்குகளில் இரண்டு ஆண்டுக்காலம் வரையுள்ள பல்வேறு கால அளவுகளுக்குச் சிறைத் தண்டனைகளும், 50 வழக்குகளில் சிறைத் தண்டனைகளும் அபராத தண்டனைகளும் விதிக்கப்பட்டன. 1957–1961 ஆண்டுகளில் மாவட்டங்களில் இச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட அபராதங்களின் மொத்தத் தொகையாவது—*

| ஆண்டு | விதித்த அபராதங்கள் (ரூ. லட்சத்தில்). |
|---|---|
| 1957-1958 .. .. .. .. .. .. .. | 3·86 |
| 1958-1959 .. .. .. .. .. .. .. | 2·60 |
| 1959-1960 .. .. .. .. .. .. .. | 1·13 |
| 1960-1961 .. .. .. .. .. .. .. | 4·76 |

3. நிதி நிலைமை மோசமாக இருப்பதன் காரணமாக சிறு பஞ்சாயத்துக்களும் கிராமங்களும் சாம்பிள்கள் பிரஸ்தாப சட்டத்தின்கீழ்ப் பாகுபாட்டுப் பரிசோதனை செய்யப்படுவதற்குப் பிடிக்கும் வருடாந்தரத் தொகை செலுத்த இயலாத நிலையில் உள்ளன. எனவே, அவை இச்சட்டத்தை அமுல்படுத்த முன்வரவில்லை. இது போன்ற காரணங்களால் இச்சட்டம் மேற்கூறிய ஸ்தல ஸ்தாபனங்கள் நிறைந்த பெரும்பகுதிகளில் அமுல் படுத்தப்படவேயில்லை. இந்தச் சூழ்நிலை, இம்மாநிலத்தில் பிரஸ்தாப சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறது.

4. சுகாதாரத் துறையில் 18-7-1961-ல் வெளியான 1752-ம் எண் அரசாங்க ஆணையில் அரசாங்கத்தார் ஷை சட்டத்தின் 24-வது பிரிவின்கீழ் அவசியமான விதிகளை ஏற்கெனவே வெளியிட்டுள்ளனர். அவ்விதிகளில் மற்ற ஷரத்துக்களுடன், உணவுப் பொருள்களை விற்பனை செய்வதற்கு இச்சட்டத்தின்கீழ் லைசென்ஸ் பெற வேண்டும் என்ற ஷரத்தும் அடங்கியுள்ளது. உணவுப் பொருள்களின் விற்பனைக்கு லைசென்ஸ் வாங்கவேண்டுமென்ற விதிகளைத் தீவிரமாக அமுல்படுத்துவது, உணவுப்பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுக்கும் பொருட்டு அச்சட்டத்தை அமுல்படுத்துவதற்குப் பெரிதும் உதவும். அதோடுகூட, அரசாங்கத்தார் மாவட்டச் சுகாதார அதிகாரிகளை விசேஷ உணவு இன்ஸ்பெக்டர்களாக மாவட்டங்களில் நியமிக்கவும் ஆலோசித்து வருகிறார்கள். இவர்கள் மொத்த வியாபாரிகள் உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் இடங்களிலேயே மாதிரிகளைப்பெற்று உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுப்பார்கள். பெரிய வியாபாரிகள், மொத்த வியாபாரிகள் ஆகியோர் தயாரிக்கும் இடங்களிலேயே உணவு மாதிரிகளைப் பரிசோதனை செய்வது இப்பொழுது மிகக் குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறவேண்டும்.

5. தற்பொழுது (1) கிண்டி கிங் இன்ஸ்ட்டியூட்டில் பாகுபாட்டு ஆராய்ச்சிச்சாலை ஒன்றும், (2) சென்னை மாநகராட்சியுடன் இணைந்துள்ள பொது பாகுபாட்டு ஆராய்ச்சிசாலையொன்றுமாக இரண்டு பெரிய ஆராய்ச்சிச்சாலைகள்தான் இம்மாநிலத்தில் உணவு மாதிரிகளைப் பரிசோதனை செய்யும் பணிகளைப் புரிகின்றன. கிண்டி ஆராய்ச்சிச்சாலையில் சென்னை நகர் நீங்கலாக இம்மாநிலத்திலுள்ள மற்றப்பகுதிகளிலிருந்து பெறப்படும் உணவு மாதிரிகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. சென்னை மாநகராட்சி ஆராய்ச் சிச் சாலையில் சென்னை நகரில் இருந்து பெறும் உணவு பொருட்கள் பரிசோதனை செய்யப்படுகின்றன.

6. உணவுக் கலப்பட முறையை அறவே ஒழிக்க வேண்டுமானால் மாநில முழுவதும் உணவுப் பொருள்களின் மாதிரிகள் பெருவாரியான அளவில் பரிசோதனை செய்யப்படுவது அவசியமாகிறது. இதற்கு விஸ்தரிக்கப்பட்ட ஆராய்ச்சிச்சாலையில் வசதிகள் வேண்டியுள்ளன. காலஞ்சென்ற டாக்டர் யு. கிருஷ்ணராவ் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட நிபுணர்குழுவின் சிபாரிசுகளின்





அடிப்படையில் சகலவித யந்திர சாதனங்களும் பொருத்தப்பெற்ற அரசாங்க உணவு ஆராய்ச்சிச்சாலை ஒன்றைச் சென்னையில் அமைக்கவும், கோயம்புத்தூரில் அமைக்க உத்தேசித்துள்ள முக்கிய ஆராய்ச்சிச்சாலையில் உணவுப் பரிசோதனைக்காக வசதிகளை ஏற்படுத்தவும் அரசினர் ஏற்கெனவே ஆலோசித்து வருகின்றனர்.

7. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பது குறித்த சட்டம் பயன்படுவதைப் பரிசீலனை செய்யும் பொருட்டும், உணவுக் கலப்படத்தைத் தடுக்கும் முறைகளைத் தீவிரப்படுத்த ஆலோசனைகள் வழங்கும் பொருட்டும், இந்திய அரசாங்கத்தார் ஒரு துணைக்குழுவை அமைத்துள்ளனர். அக்குழு சிபாரிசு செய்யக்கூடிய முறைகளும் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

[29th March 1963

சென்னை நகர் [illegible] [illegible] கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உணவு சாம்பிள்களையும் குற்றஸ்தாபனை செய்யப் பட்ட வழக்குகளையும் காட்டுகின்ற அட்டவணை.

| உணவுப் பொருள்களின் பெயர். | 1960. | | 1961. | | 1962 (31-3-62 வரை). | |
|---|---|---|---|---|---|---|
| | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பால் | 2,529 | 2,135 | 2,200 | 1,495 | 248 | 15 |
| வெண்ணெய் | 98 | 63 | 78 | 44 | 8 | .. |
| நெய் | 70 | 58 | 53 | 31 | 8 | .. |
| நல்லெண்ணெய் | 179 | 129 | 97 | 58 | 7 | .. |
| கடலை எண்ணெய் | 32 | 24 | 31 | 16 | .. | .. |
| தேங்காய் எண்ணெய் | 9 | 8 | 7 | 6 | .. | .. |
| காபி | 37 | 27 | 34 | 15 | 2 | .. |
| தேயிலை | 33 | 26 | 22 | 7 | 1 | .. |
| மஞ்சள் | 31 | 22 | 23 | 7 | .. | .. |
| பருப்பு, மாவு | 22 | 22 | 41 | 16 | 9 | 1 |
| மிட்டாய்கள் | 1 | 1 | 1 | 1 | .. | .. |
| தேன் | 3 | 2 | 2 | 1 | .. | .. |
| பலவகை | 39 | 35 | 46 | 25 | 4 | 1 |
| மொத்தம் | 3,083 | 2,552 | 2,635 | 1,722 | 287 | 17 |



29th March 1963]

சென்னை நகரில் கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உணவு சாம்பிள்களையும் குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளையும் காட்டுகிற அட்டவணை.

| உணவுப் பொருள்களின் பெயர். | 1960. | | 1961. | | 1962 (31-3-1962 வரை). | |
|---|---|---|---|---|---|---|
| | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | கலப்படம் செய்யப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | குற்றஸ்தாபனை செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| பால் | 1,906 | 478 | 1,391 | 314 | 340 | .. |
| வெண்ணெய் | 78 | 24 | 51 | 19 | 9 | .. |
| நெய் | 75 | 13 | 45 | 3 | 21 | .. |
| நல்லெண்ணெய் | 93 | 28 | 67 | 33 | 15 | .. |
| கடலை எண்ணெய் | 20 | 7 | 11 | 2 | 2 | .. |
| தேங்காய் எண்ணெய் | 10 | 5 | 5 | 2 | 1 | .. |
| காப்பித்தூள் | 21 | 8 | 14 | 3 | 5 | .. |
| தேயிலை | 5 | 1 | 6 | .. | 1 | .. |
| நெய்க்குப் பதிலான பொருள்கள். | 1 | .. | .. | .. | 1 | .. |
| துவரம் பருப்பு | 34 | 4 | 33 | 9 | 10 | .. |
| மஞ்சள் | 21 | 10 | 12 | 1 | 3 | .. |
| ஆரோரூட் | 7 | 1 | 4 | 2 | .. | .. |
| தேன் | .. | .. | 2 | .. | .. | .. |
| மைதா | 1 | .. | 1 | 1 | .. | .. |
| மிளகாய்ப் பொடி | 1 | 1 | 5 | .. | 4 | .. |
| மிட்டாய் | 1 | .. | .. | .. | .. | .. |
| உணவுப் பொருட்களுக்கு ஊட்டும் நிறம். | .. | .. | 1 | 1 | .. | .. |
| சிக்கரி | .. | .. | .. | .. | 1 | .. |
| மஞ்சள் தூள் | .. | .. | .. | .. | 1 | .. |
| மொத்தம் | 2,274 | 580 | 1,648 | 390 | 415 | .. |

[29th March 1963

## APPENDIX II.

(Vide answer to Starred Question No. 424 on page 107).

The adulteration of food and food poisoning in hotels take place in the following ways :—

(i) Through procurement of cheap adulterated raw materials, careless storing of food and exposing them to insects or rodent pests;

(ii) Storage in utensils without proper covers or lids;

(iii) Insanitary handling of food through employment of cheap labour which has no sense of cleanliness and personal hygiene;

(iv) Use of utensils not kept properly tinned or which are not in proper repair, for preparing and storing of food.

(v) Inadequate cleaning and sterilisation of plates and vessels in which food is served;

(vi) Use of poisonous chemicals, synthetic flavours, colours, sweeteners, etc., for processing food and reprocessing of unsold left overs and stale food of the previous day with intention for resale.

2. The action taken and proposed to be taken towards maintenance of hygienic conditions and prevention of adulteration of foodstuffs in hotels and other catering establishments are furnished hereunder.

(i) In 1950, Government constituted a Committee to go into the question of sanitation of Hotels and other catering establishments and to make recommendations for improving the existing conditions. The Hotel Sanitation Committee, among other recommendations, recommended necessary amendments to the Madras Public Health Act providing effective control over the catering establishments with the object of preventing the food prepared or sold from the premises, being a source of infection. In pursuance of the above recommendation Government have amended the Madras Public Health Act, with the provision of new Sections under "Food Control". The issue of necessary rules, under the above amended provision of the Madras Public Health Act, is now being examined by Government. The above rules provide specifications for the construction of hotel buildings, prohibition of over-crowding in hotels, and adoption of all measures towards maintenance of proper sanitation in the hotel, viz., provision of adequate light and wholesome water, use of properly tinned vessels, maintenance of the store room and kitchen in perfect hygienic condition, etc., etc.

(ii) Necessary instructions have also been issued by the Public Health Department to the health staff in the State for frequent inspection of the hotels and other catering establishments in their areas and to enforce the existing provisions regarding "food control" more vigorously with a view to ensure the maintenance the hotels in good sanitation and to prevent adulteration of food stuffs and incidence of food poisoning cases.



29th March 1963]

(iii) The Madras Catering Establishment Act provides necessary regulations for the employment of healthy workers in the hotels. Every person before his employment and once in every year subsequently should be medically examined. Any worker who is found on medical examination to have developed signs and symptoms of a communicable disease, shall cease to work immediately. It is also incumbent on the part of every hotel keeper to report to the Health Officer or his representative when any of his workers is suffering from infectious diseases and such employee should not be allowed to work in the catering establishments till he is completely cured of such disease and pronounced free from infection and could rejoin duty. Also, under the provisions of this Act, every hotel-keeper is required to provide uniforms to the employees.

(iv) Besides taking action under the legal provisions, persuasion and education by non-official agencies, it is felt, will have the desired effect in improving the state of hygiene and cleanliness in the hotels and other catering establishments. Government have therefore commended the formation of non-official committees in Selected Municipal towns as an experimental measure. The Committee shall have the powers of entry, enquiry and inspection of all places where food articles are prepared, stored or exposed for sale with the objective of improving the hotel sanitary standard, through persuasive means.

3. In Madras City food samples are being taken regularly from all the parts of the city including hotels and examined for adulteration at the Public Analyst Laboratory under the Corporation of Madras. Efforts are intensified as and when food poisoning cases come to notice. On such occasions more samples are taken from the suspected sources. In addition to this, regular raids on food establishments are carried out and the licensees of establishments are prosecuted for offences under the Act.

*107-ம் பக்கத்திலுள்ள 424 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.*

**பதில்—**

ஹோட்டல்களில் அடியிற்கண்ட வகைகளில் உணவுக் கலப்படம் செய்யப்படுகிறது; உணவில் விஷம் கலக்கிறது :—

(i) கலப்படம் செய்யப்பட்ட, விலை மலிவான மூலப் பொருள்களை வாங்குவது, உணவைக் கவனமின்றி சேர்த்து வைப்பது, உணவுப் பண்டங்களைப் பூச்சி, ஈ முதலியவை அணுகுமாறு கவனமின்றி வைத்திருப்பது.

(ii) தகுந்த மேல்மூடி இல்லாத ஏனங்களில் உணவுப் பண்டங்களை சேமித்து வைப்பது.

(iii) சுத்தம், சுகாதாரம் இன்னதென்றே தெரியாத, உடல் சுகாதாரத்தைப் பேணுத, குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களை அமர்த்துவதன் மூலம் உணவை சுகாதாரமற்ற முறையில் கையாளுவது.

(iv) உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கும், சேமிப்பதற்கும், ஈயம் பூசப்படாத அல்லது நல்ல நிலையில் இல்லாத ஏனங்களைப் பயன்படுத்துவது.

(v) உணவு வைக்கிற ஏனங்களையும், தட்டுகளையும் போதிய அளவு சுத்தம் செய்யாதிருப்பதும், கொதிக்கும் நீரில் போட்டு கிருமி நீக்கம் செய்யாதிருப்பதும்.

(vi) உணவு தயாரிப்பதற்கும், விலை போகாமல் எஞ்சியுள்ள உணவுப் பண்டங்களை மீண்டும் தயாரிப்பதற்கு விஷமுள்ள ரசாயனப் பொருள்களையும் செயற்கை மணங்களையும், நிறங்களையும், இனிப்புப் பொருள்களையும் பயன்படுத்துவது.

2. ஹோட்டல்களிலும் அவை போன்ற மற்ற நிறுவனங்களிலும் சுகாதார முறைகளைப் பராமரிப்பதும், உணவுப் பண்ட கலப்படத்தைத் தடுப்பதற்கும், எடுத்துள்ள, எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) 1950-ல் அரசினர் குழு ஒன்றை நியமித்தனர். ஹோட்டல்களிலும் அவை போன்ற நிறுவனங்களிலும் சுகாதார நிலையை ஆராயவும், இப்போதுள்ள நிலையைச் சீர்ப்படுத்துவதற்கும் இக் குழு நியமிக்கப்பட்டது. ஹோட்டல் சுகாதாரக் குழு மற்ற சிபாரிசுகளுடன் கூட, அடியிற்கண்ட வாறும் சிபாரிசு செய்தது:—

ஹோட்டல்களில் நல்ல கட்டுப்பாடு இருக்கும் பொருட்டு, சென்னைப் பொதுச் சுகாதாரச் சட்டத்தைத் திருத்த வேண்டும். ஹோட்டல்களில் தயாரிக்கப்படும் அல்லது விற்கப்படும் உணவால் கெடுதி ஏதும் ஏற்படாது செய்யவே இவ்வாறு செய்ய வேண்டும். மேற்கண்ட சிபாரிசுகளுக்கேற்ப, சென்னைப் பொது சுகாதாரச் சட்டத்தை திருத்தியுள்ளனர்; "உணவுக் கட்டுப்பாடு" என்பதன் கீழ்ப் புதிய பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளனர். சென்னைப் பொது சுகாதாரச் சட்டத்தின் திருத்தப்பட்ட ஷரத்துக்களின்கீழ் அவசியமான விதிகள் இயற்றுவது குறித்து அரசினர் ஆலோசித்து வருகின்றனர். அடியிற்கண்டவற்றிற்காக விவரக் குறிப்புகளை ஏற்படுத்த அவ்விதிகள் உத்தேசிக்கின்றன. ஹோட்டல் கட்டிடம் கட்டுதல், ஹோட்டல்களில் உரிய அளவுக்குமேல் ஏராளமானவர்கள் சேருவதைத் தடுத்தல், ஹோட்டலில் சரியானபடி சுகாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல், போதுமான அளவு வெளிச்சம், நல்ல தண்ணீர் வசதி, தகுந்த முறையில் ஈயம் பூசிய ஏனங்களைப் பயன்படுத்துதல், சாமான் கிடங்கு, சமையலறை ஆகியவற்றை நல்ல முறையில் வைத்திருத்தல் ஆகியவை அந்த நடவடிக்கைகளாகும்.

(ii) தத்தம் பகுதிகளிலுள்ள ஹோட்டல்களையும் அவை போன்ற மற்ற நிறுவனங்களையும் அடிக்கடி பார்வையிடுவதற்காகவும், "உணவுக் கட்டுப்பாடு" விஷயமாய் இப்போதுள்ள ஷரத்துக்களைத் தீவிரமாக முறைப்படுத்துவதற்கும் இம்மாநில சுகாதாரப் பணியாளர்களுக்கு, பொதுச் சுகாதாரத் துறையினர் அவசியமான ஆணைகள் பிறப்பித்துள்ளனர். ஹோட்டல்களை நல்ல சுகாதார நிலையில் பராமரித்து வரும்படி செய்வதற்கும், உணவுப் பண்டங்கள் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கும், விஷ உணவு தடுப்புக்கும் இந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.





(iii) ஹோட்டல்களில் தேகாரோக்கியம் உள்ள திடமான வேலையாட்களை அமர்த்திக்கொள்வதற்கு அவசியமான ரெகுலேஷன்கள் சென்னை ஹோட்டல் நிறுவனங்கள் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன. ஒருவரை வேலையில் அமர்த்திக்கொள்வதற்கு முன்னரும், வேலைக்கமர்த்திக்கொள்ளப்பட்ட பின்னர் ஆண்டிற்கொரு முறையும் அவரை மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும். அவ்வாறு மருத்துவப் பரிசோதனை செய்ததில் யாதொரு வேலையாள், தொத்திக் கொள்ளத்தக்க நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தால், அவரை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும். தம்மிடம் வேலை செய்பவர் எவரேனும் தொத்து நோயால் அவதிப்படுவதாகத் தெரியவந்தால், அவரை வேலைக்கு வைத்துள்ள ஹோட்டல் முதலாளி, அவ்விஷயத்தைச் சுகாதார அதிகாரிக்கு, அல்லது அவரது பிரதிநிதிக்குத் தெரிவிக்க வேண்டும். அந்த நோயாளி, நோயிலிருந்து பூரண குணமடைந்து, மீண்டும் வேலை செய்ய லாயக்குள்ளவர் என சுகாதார அதிகாரியால் அறிவிக்கப்படும் வரை அவரை வேலை செய்ய அனுமதிக்கக் கூடாது. மேலும், ஹோட்டல் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் ஷரத்துக்களின் கீழ்த் தம்முடைய வேலையாட்களுக்கு உடுப்பு வழங்க வேண்டும்.

(iv) ஹோட்டல்களிலும், அவை போன்ற இதர நிறுவனங்களிலும், சுகாதாரத்தையும், சுத்தத்தையும் அபிவிருத்தி செய்ய, சட்டநடவடிக்கைகளுடன் கூட, தனிப்பட்ட ஏஜன்ஸிகள், சுகாதாரப் பிரசாரம் செய்வதும் விரும்பும் பலனளிக்கும் எனத் தெரிகிறது. எனவே தேர்ந்தெடுத்த சில முனிசிபல் நகரங்களிலே, பரீட்சார்த்த முறையிலே, அரசாங்கச் சார்பற்ற கமிட்டி ஒன்றை இதற்கென அமைக்க வேண்டுமென அரசினர் கூறியுள்ளனர். உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்படுகிற, வைத்திருக்கப்படுகிற அல்லது விற்பதற்குக் காட்டி வைக்கப்படுகிற இடங்களில் பிரவேசித்து பார்வையிடவும், விசாரணை செய்யவும் இக் கமிட்டிக்கு அதிகாரம் உண்டு. ஹோட்டல்களில் உள்ள சுகாதாரத்தை இணக்கமான முறையில் அபிவிருத்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

3 சென்னை நகரிலே ஹோட்டல்கள் உட்பட எல்லா இடங்களிலிருந்தும் உணவு மாதிரிப் பண்டங்கள் எடுக்கப்படுகின்றன. இவ்வாறு எடுத்த பண்டங்கள் கலப்படப் பண்டங்களா எனப் பார்ப்பதற்காக அவை சென்னை மாநகராட்சியின் கீழுள்ள பொதுப் பாகுபாட்டு ஆய்வுக் கூடத்தில் சோதிக்கப்படுகின்றன. உணவுப் பண்டங்களில் விஷங்கலந்திருப்பது தெரியவந்தால், உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உணவு விஷம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் இடங்களிலிருந்து அதிக அளவு மாதிரிப் பண்டங்கள் எடுக்கப்படுகின்றன. இவற்றுடன் கூட, உணவுப் பணியாளர்கள் அவ்வப்போது திடீரென ஹோட்டல்களுக்குச் சென்று சோதனையிடுகின்றனர். இச் சட்டத்தின் கீழ் ஹோட்டல்கள் குற்றம் செய்திருந்தால், அந்த ஹோட்டல் லைசென்ஸ்தாரர்களின் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படுகிறது.

# APPENDIX III.

[*Vide* Answer to Unstarred Question No. 18 on page 132.]

## CONCLUSIONS OF THE 20th SESSION OF THE INDIAN LABOUR CONFERENCE.

| *Decisions.* (1) | *Action taken or proposed to be taken.* (2) |
|---|---|
| *Item* 1.—*Action taken on the main conclusions of the previous session.* | |
| The statement of action taken was noted subject to the following :— | |
| (i) *Provident Fund Schemes.*—It was clarified by the Chairman that the question of enhancement of rates of contribution in respect of industries other than the four mentioned in the Statement, would be gone into by similar technical committees. This would also cover the textiles and cement industries. He further mentioned that the notifications regarding the enhancement of rates of contribution to the Coal Mines Provident Fund would be issued shortly. | No action is required by State Government. |
| (ii) *Abolition of Contract Labour*— | |
| (*a*) Several complaints were made that the principles regarding the abolition of contract labour, agreed to at the 19th Session of the Indian Labour Conference, were not being observed. The Conference reiterated that the principles already agreed to at its 19th Session should be strictly adhered to by all the parties. It was also agreed that reports on the progress of abolition of contract labour should be obtained periodically both in respect of the private and the public sector. | Copies of the conclusions Nos. 1, 3 and 4 of the 19th Session of the Indian Labour Conference on the Abolition of Contract Labour System have been communicated to Inspectors of Factories in this State and they have been instructed to advise the managements of factories to implement the recommendations. The Inspectors of Factories have been instructed to send quarterly reports relating to the progress made about abolition of contract labour system in Public and Private Sector undertakings. |
| (*b*) It was urged that legislative action might be necessary. The Chairman stated that a Draft Bill incorporating the principles of the Supreme Court judgment would be drawn up and circulated to all the parties concerned as early as possible. | No action is required by State Government. |
| (*c*) Some of the workers' representatives pointed out that the information regarding action taken on tripartite conclusions, was in many cases inadequate because many State Governments had not sent their replies. It was urged that the State Governments should be more prompt in furnishing the requisite information. | There has been no complaint in this regard from Workers' Organisations as far as this STATE is concerned. |
| *Item* 2 (i).—*Review of the working of the Code of Discipline in Industry.* | |
| (i) In the course of discussion on the subject there were frequent references to cases of refusal by the employers to (*a*) recognise unions and (*b*) agree to refer disputes to arbitration. It was agreed that a full note summarising the points and suggestions made in the conference in this regard should be prepared and circulated to all concerned. | No action is required by State Government. |
| (ii) The Conference also reiterated the position that recognition was one of the basic ingredients of the Code, and failure to accord recognition to unions which satisfied the criteria for such recognition as laid down in the Code, should be considered a serious violation of the Code. | Do. |
| (iii) As regards arbitrations, it was agreed that readiness to refer disputes to arbitration was an important requirement of the Code. Whenever conciliation fails arbitration will be the next normal step, except in cases where the employer feels that for some reasons he would prefer adjudication, such reasons being creation of new rights having wide repurcussions or those involving large financial stakes. However, the reasons for refusal to agree to arbitration must be fully explained by the party concerned in each case, and the matter brought up for consideration by the Implementation Machinery concerned. | Necessary instructions have already been issued to the Labour Officers to persuade parties to agree to arbitration wherever settlement is not possible and to indicate the reasons for either party refusing to agree to arbitration.<br>A copy of the conclusion has also been communicated to Labour Officers for their information. |
| (iv) To assist employers and trade unions, Central and State Governments would constitute in consultation with the Central Employers and Workers' Organisations, panels of arbitrators and make the list of names available to the parties. Government would also set a ceiling on the fees which could be charged by the arbitrator, per case and per day. | A panel of arbitrators has already been prepared and published by this Government. The panel is further being brought up to date.<br>As regards ceiling on the fees to be paid to Arbitrators, the Government have decided that no ceiling need be fixed in view of provision in Madras Industrial disputes rules regarding fixation of fees for arbitrations. |
| (v) Minor disputes might be referred to a single person for arbitration. In cases which were more complicated, each party would nominate one arbitrator, and the two arbitrators could select an umpire, if necessary. Whenever necessary the services of the Presiding Officers of Industrial Tribunals might be made available for purposes of arbitration. | The suggestion has been accepted.<br>The Labour Courts and Industrial Tribunals have already been included in the panel of Arbitrators.<br>A copy of this conclusion has been communicated to Central Organisations for their information. |

| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
|---|---|
| ***Item* 2 (ii).—*Work-stoppages for reasons other than industrial disputes.*** | |
| There was a brief discussion on the subject. The Chairman expressed the view that labour organisations should discourage such work-stoppages. | No action is required by State Government. |
| ***Item* 2 (iii).—*Rights of recognised unions under the Code of Discipline vis-a-vis unrecognised unions.*** | |
| 1. It was agreed that unions granted recognition under the Code of Discipline should, for the present, enjoy the following rights :— | |
| (i) to raise issues and enter into collective agreements with employers on general questions concerning the terms of employment and conditions of service of workers in an establishment, or, in the case of a Representative Union, in an industry in a local area ; | |
| (ii) to collect membership fees/subscriptions payable by members to the union within the premises of the undertaking ; | The suggestions have been agreed to.<br>A copy of the conclusions of the Indian Labour Conference has been communicated to the recognised unions and managements concerned and also to the Central Organisation of employers and Trade Unions (besides the Labour Officers for their information and guidance). |
| (iii) to put up or cause to put up a notice board on the premises of the undertaking in which its members are employed and affix or cause to be affixed thereon notices relating to meetings, statements of accounts of its income and expenditure and other announcements which are not abusive, indecent or inflamatory or subversive of discipline or otherwise contrary to the Code ; | |
| (iv) for the purpose of prevention or settlement of an industrial dispute. | |



| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
|---|---|
| (a) to hold discussions with the employees who are members of the union at a suitable place or places within premises of office/factory/establishment as mutually agreed upon ; | |
| (b) to meet and discuss with an employer or any person appointed by him for the purpose, the grievance of its members employed in the undertaking ; | |
| (c) to inspect, by prior arrangements, in an undertaking, any place where any member of the union is employed. | |
| (v) to nominate its representatives on the Grievance Committee constituted under the Grievance Procedure in an establishment ; | |
| (vi) to nominate its representatives on Joint Management Councils ; and | |
| (vii) to nominate its representatives on non-statutory bi-partite committees, e.g., production committees, welfare committees, canteen committees, house allotment committees, etc., set up by managements. | |
| 2. The rights referred to above would be without prejudice to the privileges being enjoyed by the recognised unions, at present either by agreement or by usage. | |
| 3. The question of grant of special casual leave to office bearers and release of employees to work as full time union functionaries was briefly discussed. It was, however, decided to defer these questions for full consideration at a future tripartite meeting. The organisations agreed to send full information regarding the existing practices on the subject of rights and privilege of recognised unions.<br>4. The question of rights and privileges of non-recognised unions was deferred for future consideration because of differences of opinion. | No action is required by State Government. |

| *Decisions.* (1) | *Action taken or proposed to be taken.* (2) |
|---|---|
| ***Item 2 (iv).—Amendment of the Code of Discipline by imposing restrictions on hunger strike.*** | |
| (i) The conference reiterated the view that hunger strikes should be avoided by all means. It was not, however, considered necessary to amend the Code for the purposes of banning hunger strikes. The workers' representatives also agreed to discourage hunger strikes as a means of settling disputes. It was urged that in extreme cases when the workers have exhausted all other means of redress, a strike would be preferable to a hunger strike.<br><br>(ii) The Central and State Governments should take all possible steps to ensure that workers and unions may not be compelled to resort to hunger strike out of sheer desperation.<br><br>(iii) The Chairman announced that the Central and State Governments were of the view that hunger strikes should be completely ignored. | A copy of these conclusions has been communicated to all Labour Officers with instructions to bring this to the notice of the workers' organisations in their area and also to take all possible steps to ensure that workers and unions are not compelled to resort to hunger strike out of sheer desperation. |
| ***Item 2 (v).—Clarification of clause 2 (iii) of the Model Principles for reference of disputes to adjudication.*** | |
| While referring disputes to adjudication under clause 2 (iii) of the Model Principles, Government should not determine the date from which the award of the tribunal should be operative. | The suggestion has been accepted. |
| ***Item 2 (vi).—Additional measures for protection against victimisation and reference of case of victimisation to arbitration.*** | |
| The subject was partly covered during the general discussion and it was agreed that it should be further considered at the next meeting of the Standing Labour Committee. | No action is required by State Government. |
| ***Item 3.—Amendment of Labour Legislation.*** | |
| (i) Sections 79 and 80 of the Factories Act, 1948, to provide for the rate of payment for the period of leave according to the wages of normal post held and for grant of leave according to exigencies of work in a factory.<br><br>(ii). Section 2 (00) of the Industrial Disputes Act so as to change the definition of the term 'retrenchment'.<br><br>(iii). Section 25 FFF of the Industrial Disputes Act so as to provide for payment of full compensation in the case of closure of an undertaking on account of expiry of leave, licence or exhaustion of reserves.<br><br>(iv). Section 10 (*b*) of the Indian Trade Unions Act, 1926, so as to empower the Registrars to cancel the registration of a trade union, the executive of which has been found to have violated its registered rules.<br><br>(v). Section 33 of the Industrial Disputes Act, 1947, to empower Tribunals to adjudicate upon the application made by employers to dismiss a workman.<br><br>It was decided that these items should be considered at the next session of the Standing Labour Committee. | Do. |
| ***Item 4.—Representation of the Public Sector on Indian Labour Conference and other Tripartite Committees.*** | |
| (i) The principle of participation by the representatives of the public sector undertakings in tripartite conferences and committees was agreed to. These representatives would, however, form part of the Government delegation for the present.<br><br>(ii) The conclusions of conferences and committees would apply equally to the Public Sector including the employing Ministries. | Copy has been communicated to the Departments of Secretariat (except Public, Law and Finance) for issuing instructions on the decision of the Indian Labour Conference to the Heads of Departments in charge of industrial undertakings for information. |

| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
|---|---|
| *Item 5.—Recording of conclusions of tripartite conferences and committees.* The existing practice of drawing up only the conclusions of tripartite meetings should continue. It was also agreed that the conclusions of such meetings should be drawn up by drafting committees, as at present. | The suggestion has been accepted. |
| *Item 6.—Question of permitting observers to attend the Indian Labour Conference and other tripartite bodies.* It was agreed that requests for permission to attend as observers or visitors should be considered on merit, and permission given wherever possible, subject to availability of space and other facilities. | The suggestion has been accepted and the Commissioner of Labour has been informed accordingly. |
| PART II—SUPPLEMENTARY. | |
| *Item 1 (i).—Appointment of a Tripartite Committee to report on Wage Trends during First and Second Plan periods.* It was decided that the report of the Mahalanobis Committee should be awaited before considering the question of appointment of the proposed tripartite committee. | No action is required by State Government. |
| *Item 1 (ii).—Publication of New Series of Consumer price Index numbers for Industrial workers.* It was agreed that the subject would be placed before the next session of the Standing Labour Committee. | Do. |
| *Item 2.—Social Security-Review of the working of the Employees' State Insurance Scheme.* *Item 3.—Workers Education—Question of allowing some time-off to the workers attending unit-level classes.* *Item 4.—Definition of natural wastage or separation as contained in the recommendations on rationalisation adopted by the 15th Session of the Indian Labour Conference held in 1957.* The subjects were postponed for consideration at the forthcoming session of the Standing Labour Committee. | Do. |



| Decisions. (1) | Action taken or proposed to be taken. (2) |
|---|---|
| *Item 5.—Organisation of Consumers' Co-operatives in the Industrial Sector.* The proposals made in the memorandum on the subject were accepted .. | In G.O. Ms. No. 6054, Industries, Labour and Co-operation (Co-operation), dated 10th December 1962, this Government have sanctioned a scheme for the organisation of Consumers' Co-operative Stores for Industrial and Plantation Labour, i.e., establishments having 250 or more employees each. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 30th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: Questions 438, 443, 445, 448, 452 and 454 have been postponed since the concerned Hon. Minister is indisposed.

### வரட்டாற்றில் அணைக்கட்டுதல் (தானிப்பாடி)

*439 கேள்வி—**திரு. ஏ. ஆறுமுகம்:** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தானிப்பாடியின் தென் பகுதியில் ஓடும் வறட்டாற்றில் புதிய அணை கட்டும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

**கனம் திரு. பூ. கக்கன்:** இத்தகைய திட்டம் எதுவும் ஆலோசனையில் இல்லை.

**திரு. ஏ. ஆறுமுகம்:** இந்த வறட்டாற்றில் ஏதாவது உடைபட்டிருந்து உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் வேலை எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறதா? ஆம் என்றால் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது.

**கனம் திரு. பூ. கக்கன்:** கீரனூறு அணைக்கட்டிற்காக, சின்னயம் பட்டியில் 42,700 ரூபாய் செலவு செய்யலாம் என்றிருக்கிறது. பொன்னை அணைக்கட்டில் சீர்திருத்தம் செய்ய 95,000 ரூபாய் செலவு செய்யலாம் என்றிருக்கிறது. இது கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவருடைய ரிப்போர்ட் வந்த பிறகு தான் பார்க்கவேண்டும்.

### சட்டக் கல்லூரி போலீஸ் நிலையம்

440* கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Law College-க்கு எதிர்ப்புறம் இருந்த போலீஸ் ஸ்டேஷன் எங்கே மாற்றப்பட்டது?

(இ) அதனால் அரசாங்கத்துக்கு உண்டான செலவு எவ்வளவு?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** (அ) சட்டக் கல்லூரி போலீஸ் நிலையம் உயர் நீதி மன்ற வளவிற்குள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

(இ) சட்டக் கல்லூரி போலீஸ் நிலயத்துக்குப் புதுக்கட்டிடம் கட்டுவதற்காகவும் மேற்படி நிலயத்தைச் சேர்ந்த இரு சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஜாகை வசதிக்காகவும் ரூ. 77,000 செலவு செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

(a) The Law College Police Station has been shifted to a new building in the High Court compound.

(b) An expenditure of Rs. 77,000 has been sanctioned by Government on construction of new buildings to house the Law College Police Station and to provide quarters for two Sub-Inspectors attached to it.

[30th March 1963

**திரு. இராம. அரங்கண்ணல் :** நகரின் முக்கியமான இடத்தில் அந்த போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. எவ்வளவோ வசதியாக இருந்தது. அதை விட்டு ஹைகோர்ட்டுக்குள் மாற்ற வேண்டிய அவசியம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இன்னும் அதிக வசதியாக இருக்க வேண்டுமென்று ஹைகோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருப்பது அவ்வளவு தகுதி அல்ல. காதி எம்போரியத்திற்கும் ஒரு கட்டிடம் கட்டுவதற்கு, அது தகுதியான இடம் என்று கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### பஞ்சாயத்து யூனியனிலுள்ள சிப்பந்திகள்

***441** கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் வேலை பார்க்கும் சர்க்கார் சிப்பந்திகளுக்கு (1) சர்வீஸ் ரெகுலரைசேஷன், (2) ஊதிய உயர்வு. (3) பிற்கால சேமிப்பு நிதி இவைகளை அமுலுக்குக் கொண்டு வராததின் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்து யூனியன்களில் நிர்வாகத் துறையில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்கள் ஏற்கனவே முறைப்படி நியமிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களாவர். அவர்களுக்கு ஆண்டுதோறும் சம்பள உயர்வுகள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் பிராவிடெண்ட் பண்டு திட்டத்திற்கும் தொகை செலுத்தி வருகிறார்கள்.

பஞ்சாயத்து யூனியன்களில் குமாஸ்தா முதலிய வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்கள் முறைப்படி வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் அல்லவா. ஏனென்றால், அவர்களுடைய உத்தியோகங்கள் சம்பந்தமாகச் சிறிப்பு விதிகள் இன்னும் வெளியாகவில்லை. இந்த விதிகள் விரைவில் வெளியாகும். என்றாலும், ஆண்டுதோறும் அவர்களுக்குச் சம்பள உயர்வு தருவதற்கு ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மற்ற அரசாங்க இலாக்களிலிருந்து வேலைக்கு எடுத்துக்கொண்ட பணியாளர்கள் பிராவிடெண்ட் பண்டு திட்டத்திற்கு ஏற்கனவே தொகை செலுத்தி வருகிறார்கள். பழைய ஜில்லா போர்டுகளிலிருந்து வேலைக்கு எடுத்துக் கொண்டவர்களையும் இந்த பிராவிடெண்ட் பண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதைக் குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

The Government staff in the Panchayat Unions *on the executive side* are already regular Government servants, are eligible for annual increments, and are contributing to the Provident Fund Scheme.

The Government staff in the Panchayat Unions *on the ministerial side* have not been regularly appointed pending the issue of special rules for the posts. These rules will be issued shortly. However, orders have already been issued permitting them to draw their annual increments. Those of this staff recruited from other Government departments are already contributing to the Provident Fund Scheme. The question of admitting those recruited from the former District Boards also to the Provident Fund Scheme is under consideration.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அமுல் நடத்தும் தேதி எப்போதிருந்து?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விதிகள் பிரகடனப்படுத்தப்பட்ட பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கும் பஞ்சாயத்து யூனியன் ஸ்டாப் என்று சொல்லப்படும் குமாஸ்தாக்களுக்கும் உள்ள சம்பளத்தை ஒன்றுபோல் உயர்த்த விதிகள் மாற்றியமைக்கப்படுமா ?



30th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் வட்டாரவளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேலை செய்கிறவர்கள் அவர்கள் டெக்னிக்கல் ஆபீசர்கள் என்று கருதக் கூடியவர்கள். மானேஜர், அக்கவுண்டண்ட், யூ.டி.சி. இவர்கள் டெக்னிகல் ஸ்டாப் அல்ல. மினிஸ்டிரியல் ஸ்டாஃப்புக்கு ஒரேமாதிரி சம்பளம் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஒப்புக் கொள்ளமுடியாது.

**திரு. ம. கமலநாதன் :** நான் கேட்பது குமாஸ்தாக்களைப்பற்றியது. அவர்கள் அடிப்படைச் சம்பளம் 90—4—120 என்றிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் போர்டிலிருந்து பஞ்சாயதது யூனியனுக்கு வந்தவர்களுக்கு 90—3—120 என்று இருக்கிறது. இந்த 3 ரூபாய் க்ரேடை 4 ரூபாயாக உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதுபற்றிய விதிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. விதிகள் நிர்ணயிக்கப்பட்டபிறகு அப்பிரச்னைகள் எல்லாம் பின்னால் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கே. பொன்னையா :** பிற்கால சேமிப்பு நிதி சேமிப்பவர்களுக்கு அவர்கள் மனைவி அல்லது பேரண்ட்ஸ் யாராவது சீக்காக இருந்தால்தான் கடன் வாங்க முடிகிறது. ஆகவே, சொத்து வாங்கவும், கடன் கொடுக்க விதிகளில் திருத்தம் செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி சொத்து வாங்க கடன் கொடுப்பது என்றால் பிராவிடண்ட் பண்டு சேமிப்பை அதோடு நிறுத்திவிடுவதாகும். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது.

### கல்லூரி மாணவர்களுக்கு N. C. C. பயிற்சி

***442** கேள்வி—**திரு. சி. கரு. சிமைச்சாமி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாநிலத்திலுள்ள மொத்தக் கல்லூரிகள் எத்தனை ?

(இ) எத்தனை மாணவ—மாணவிகள் N.C.C. பயிற்சி பெறுகிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Seventy-nine.

(*b*) In Colleges (inclusive of Polytechnics and Industrial Training Institutes)

Boys—34,965.

Girls—1,716.

**திரு. மூ. சண்முகம் :** சில உயர்நிலைப் பள்ளிகளில் என்.சி.சி. பயிற்சிக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தும் இரண்டு ஆண்டுகளாகத் துவக்கப்படாமல் இருக்கிறது. சில உயர்நிலைப் பள்ளிகளில் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ட்ரூப் அமைக்க அனுமதி கொடுத்திருந்தும் மேற்கொண்டு ட்ருப்ஸ் பார்ம் செய்ய அனுமதி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாக கொடுக்க அரசாங்கம் கவனிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அனுமதி கொடுக்கப்பட்ட பள்ளிகளில் துவங்கப்படவில்லை என்றால் இதில் கட்டாயம் ஒன்றுமில்லை. பள்ளிகள் கோரி அனுமதி கொடுக்கப்படவில்லை என்றால், இந்த அளவு அனுமதிப்பது என்று விதிகள் இருக்கின்றன. இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து வேண்டியது செய்து வருகிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அடுத்த கல்வி ஆண்டிலிருந்து எல்லா கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி அளிக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அப்படியானால் அவர்களுடைய உபயோகத்திற்குப் போதுமான அளவு துப்பாக்கிகள் கிடைக்க அரசாங்கம் வகை செய்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்ன முடிவு அரசாங்கம் செய்திருக்கிறதோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

[30th March 1963

**திரு. ஏ. ஆறுமுகம் :** என்.சி.சி. பயிற்சியை மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் கட்டாயமாக கொண்டு வர அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, என்.சி.சி. பயிற்சி பெறும்போது அரக்கோணத்தில் ஒருவர் மீது குண்டு பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு கவலைக்கிடமான நிலையில் இருந்தார். அம்மாதிரி தவறு இழைப்பவருக்கு அரசாங்கம் ஏதாவது தண்டனை கொடுக்குமா ? அந்த மாணவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கெல்லாம் விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கல்லூரிகளில் படிக்கும் எல்லா ஆண் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. மாணவர்களின் உடல் வலிமையும், பட்டாளத்தில் சேர்ந்து பணியாற்றுவதற்கு உண்டான தெம்பையும் கவனித்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறதா ? அல்லது எல்லா மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்கும் காரணத்தால் சில மெலிந்த மாணவர்கள் பயிற்சியிலே ஈடுபட்டு இருந்தாலும், பிற்காலத்தில் அவர்கள் உபயோகப்பட மாட்டார்கள் என்று அரசாங்கம் கருதவில்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தப் பயிற்சியை கல்லூரிகளில் இப்போது கட்டாயமாகக் கொடுக்க முன்வந்திருப்பது அவர்களை ராணுவத்தில் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற நோக்கத்திற்காக இல்லை. ஆனால் இவர்கள் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர்கள் உடல்நலத்தை பார்த்து தான் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். உடல் தகுதி அற்றவர்கள் என்று ஏற்பட்டால் அவர்களைக் கட்டாயப் படுத்த மாட்டார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, முன்பு எல்லாம் உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற என்.சி.சி. மாணவர்கள் ஏதாவது ஒரு கிராமத்தில் அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது அப்படியில்லை. அவர்களை மறுபடியும் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்த அரசாங்கத்திற்கு யோசனை உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது திட்டக் குழுவினால் அமைக்கப்பட்ட திட்டம். அதன் கீழ் நடவடிக்கைகள் அப்போதைக்கப்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாணவர்கள் இந்த அனுபவத்தையும் பெறவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது நிறுத்தப்படவில்லை.

### *"Navalar Natramizh Vachagam"*

* 444 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether a Tamil Reader called "Navalar Natramizh Vachagam" (நாவலர் நற்றமிழ் வாசகம்), written by Pulavar Maruthavanam and Elango, has been deleted from the list of approved Text-books; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.



30th March 1963]

### *Pension (Government employees)*

* 446 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to simplify the procedure in determining the pensions of Government employees in order to avoid delay in sanctioning the same; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A paper[a] is placed on the Table of the House.

### மத்திய சிறைச்சாலைகள்

* 447 கேள்வி—**திரு. முனு. ஆதி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, திருச்சி, மதுரை, கோவை, வேலூர் ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைச்சாலைகளிலுள்ள கைதிகளின் பராமரிப்பிற்காக வெவ்வேறு இனங்களில் தமிழக அரசு செலவிடும் தொகை எவ்வளவு ?

(இ) இச்சிறைச்சாலைகளில் நடைபெறும் சிறுகைத்தொழில்கள் மூலம் நமது மாநில அரசிற்கு கிடைக்கும் வருவாய் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[b] is placed on the table of the House.

### சவுக்கு முந்திரி வளர்ப்பு தென்னாற்காடு மாவட்டம்

* 449 கேள்வி—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு ஜில்லாவில் விறகுக்கான சவுக்கு, முந்திரி முதலிய மரங்களை அதிகமாக வளர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சவுக்கு.—மூன்றாவது திட்டக் காலத்தில் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 140 ஏக்கர் வீதம் 700 ஏக்கர் நிலத்தில் சவுக்கு மரம் நடப்படும். 1961–63 ஆண்டுகளில் 280 ஏக்கர் நிலத்தில் சவுக்கு நடப்பட்டது. 1963–64ல் 140 ஏக்கர் நிலத்தில் சவுக்கு நட உத்தேசித்துள்ளோம்.

முந்திரி : இரண்டாவது திட்டக் காலத்தில் 14,452 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிடப்பட்டது. மூன்றாவது திட்டக்காலத்தில் 1,000 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிடப்படும். மூன்றாவது திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளில் 853 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிடப்பட்டது. 1963–64ல் 200 ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிரிட உத்தேசித்துள்ளோம்.

**திரு. மூ. ஷண்முகம் :** கனம் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் மலட்டாற்றின் படுகையில் அராசங்கம் சவுக்கு மரங்களை சுமார் 5, 6, ஆண்டுகளுக்கு முன்பு வைத்து அவைகளுக்கு அழிவு ஏற்பட்டிருக்கின்றன. மறுபடியும் இரண்டாண்டுகளுக்கு முன்பு வைத்த சவுக்கு மரங்கள் நிலை கூட மோசமாக இருக்கின்றன என்பதை அராசங்கம் அறியுமா? அப்படி இருந்தால் அதைத் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர் சொல்கிற விஷயத்தைப் பற்றி நான் இப்போது உடனடியாகப் பதில் சொல்வதற்கு இல்லை என்றாலும், படுகை நிலங்களில் சவுக்கு மரங்கள் வைப்பது விறகுக்கு

a Printed as Appendix I on pages 330-333.

b Printed as Appendix II on page 334.

மாத்திரம் அல்ல, நிலத்தினுடைய வளத்தைப் பாதுகாப்பதற்காகவும் அவ்வாறு செய்கிறோம். அவர்கள் குறிப்பிடுவதை என்னிடம் விவரமாகச் சொன்னால் அதைக் கவனிக்கலாம்.

**திரு. பி. வி. சீராமுலு :** கனம் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் விறகுப் பஞ்சம் ஏற்பட்டு இருப்பதன் காரணமாக, மேலை நாடுகளில் எரி வாய்வு நிலயம் அமைத்திருப்பது போல, இந்த மாநிலத்திலும் எரி வாய்வு நிலயம் அமைக்கும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்தக் கேள்விக்கும் மூல கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**ஏலககாய் தோட்டம் கொல்லிமலை**

*450 கேள்வி—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் கொல்லி மலைப் பகுதியில் உள்ள ஏலக்காய் தோட்டத்தை விஸ்தரிக்கத் திட்டமுண்டா ?

(இ) ஆமெனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(a) No.

(b) Does not arise.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** இந்த மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் ஏலக்காய் பயிரிடப்படுகிறது ? அவ்வாறு பயிரிடப்படும் நிலங்களின் விஸ்தீரணம் என்ன என அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எனக்குத் தெரிந்த மட்டும் அதிகமாக ஏலக்காய் உற்பத்தியாவது மதுரை ஜில்லாவில்தான். இதர மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில இடங்களிலும்தான் பயிரிடப்படுகிறது. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் பெரியகல்வராயன் மலைப்பகுதியிலும், கொல்லி மலைப்பகுதியிலும் சிறிதளவு பயிரிடப்படுகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், கேரள மாகாணத்திலுள்ள தேவிகுளம், பீர்மேடு மலைப்பகுதிகளில் எல்க்காய் தோட்டங்கள் வைத்து இருப்பவர்களில் பெரும்பகுதி மக்கள் நமது மாகாணத்தில் வசிக்கும் மக்களாக இருப்பதால் அந்த ஏலக்காய் தோட்டத்துக்குச் சொந்தமாக இருப்பவர்களுக்கு அந்த மாநிலத்தில் போதிய ஆதரவும், பாதுகாப்பும் கொடுக்கப்படாத காரணத்தால் தேவிகுளம் பீர்மேடு பகுதிகளை மீண்டும் நமது மாநிலத்தோடு சேர்க்க நமது சர்க்கார் யோசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தக் கேள்வி ஏலக்காய் தோட்ட விஸ்தரிப்பு பற்றியது. தேவிகுளம், பீர்மேடு பற்றிய விஷயம் இந்தக் கேள்வியில் வரவில்லை.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் தலைவர் அவர்களே, கொல்லி மலையில் இப்போது விவசாயிகள் நல்ல முறையில் ஏலக்காய் உற்பத்தி செய்து வருகிறார்கள். மேலும் அங்கு அதை அதிகமாக விஸதரிப்பதற்கு விவசாயிகளுக்கு " அட்வைஸ் " செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பொதுவாகவே நமது மாநிலத்தில் ஏலக்காய்த் தோட்டங்களை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்து ஒரு திட்டம் கையில் வைத்திருக்கிறது. அதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ருபாய் 9,21,945 அளவுக்கு செலவழிப்பதற்குத் திட்ட



மிட்டிருக்கிறது. 800 ஏக்கர் நிலத்தை எடுத்து ஓரளவுக்குக் குத்தகைக்குக் கொடுத்து உத்தி செய்தால் நல்லது என்று ஸ்டான்டிங் பைனான்ஸ் கமிட்டி அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். கொல்லிமலை, கல்லிராயன் மலைப்பகுதிகளில் மேலும் ஏதாவது செய்ய முடியும் என்றால் செய்யலாம்.

**திரு. எஸ். எஸ். மணி :** ஸார். நமது மாநிலததிலே வசிக்கக் கூடியவர்கள், கேரளப் பகுதியும் ஏல விவசாயம் செய்கின்றவர்கள். விவசாய வருமான வரி (அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ்) கேரள சர்க்காருக்கு கொடுக்கிறார்கள். அது போல் நமது மாநில சர்க்காருக்கு விவசாய வருமான வரி கொடுக்கிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நம்முடைய மாநில சர்க்காருக்குச் கொடுக்க வேண்டிய வரியைக் கொடுத்து தான் தீரவேண்டும்.

**திரு. கே. பொன்னுசாமி :** கனம் தலைவர் அவர்களே, இப்போது ஏலக்காய் அன்னியச் செலாவணியை சம்பாத்தித்துக் கொடுக்கக் கூடிய ஒரு முக்கியமான பொருள். அது 3,000, 4,000 அடிக்கு மேல் தான் நன்றாக வளர கூடும். ஆனைமலைப் பிரதேசத்தில் பாரஸ்டை அழிக்காமல், புஷ்களை கிளியர் செய்து, அடி வெட்டு வெட்டி தாராளமாக ஏலக்காய் பயிர் செய்யலாம். இதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** 800 ஏக்கர் பாரஸ்ட் நிலத்தை ஏலம் பயிரிடுவதற்குக் கொடுத்து, லாங் டர்ம் (நீண்ட கால) (ஷார்ட் டர்ம்) குறுகியகால லோன்கள் கொடுத்து, ஏலக்காய் உற்பத்தியை இந்த மாநிலத்தில் விஸ்தரிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று நான் முன்பே சொன்னேன். டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சரிடமிருந்து ரிபோர்ட் வருவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ச. பொன்னுசாமி :** இந்த நெருக்கடி சமயத்தில் ஏலக்காயை அதிகமாக ஏற்றுமதி செய்வதன் மூலம் நம்முடைய அன்னியச் செலாவணியை மிச்சப் படுத்தலாம் என்பதற்காக தனியாக ஒரு சர்வே கமிட்டி போட்டு மொத்தம் எத்தனை ஏக்கர்களில் அதிகமாக ஏலம் வெள்ளாமை செய்யலாம் என்று கண்டறிவது பற்றி மத்திய சர்க்காரை அணுகி பணம் கேட்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்கத்தின் தகவல்படி அந்த யோசனை இப்போதில்லை. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. எ. ஆறுமுகம் :** ஏலக்காய் 3,000 அடிக்குமேல் பயிராகக் கூடிய ஒரு பயிர் என்று சொன்னார்கள். ஜவ்வாது மலையில் ஏலக்காய் பயிரிட சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஜவ்வாது மலையில் ஏலக்காய் வளரக்கூடிய பகுதி இருந்தால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** தலைவர் அவர்களே, கொல்லி மலையில் தனிப்பட்டவர்கள் ஏலம் பயிர் செய்ய முன் வந்தால் அவர்களுக்குக் காட்டிலாக்காவிற்குச் சம்பந்தப்பட்ட நிலங்களை குத்தகைக்கு விட அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதுதான் நான் சொன்னேன் இந்த மாதிரி சில இடங்களை லீஸுக்கோ அல்லது ஜாரி செய்தோ கொடுக்க கூடிய நிலமாக இருந்தால் கொடுத்து, அதற்குப் பிறகு லாங் டர்ம் லோன், ஷார்ட் டர்ம் லோன் எல்லாம் கொடுத்து ஏலக்காய் உற்பத்தி செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறது என்றுதான் நான் முன்பு சொன்னேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், போடிநாயக்கனூர் பகுதி மக்கள் பெரும்பாலும் தேவிகுளம், பீர்மேடு பகுதியில் பயிர்த் தொழில் செய்து கொண்டிருப்பதால் அந்தப் பகுதியை மீண்டும் நம் மாநிலத்தோடு

[30th March 1963

சேர்க்க முயற்சித்தால் அண்மையில் நடக்கவிருக்கும் உப தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஆதரவு கிடைக்கும். ஆகையால் அந்த மாதிரி சேர்ப்பதற்கு முயற்சி செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பீர்மேடு தேவிகுளம் பிரச்னை ஏற்கனவே தீர்க்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லுவதைப் பார்த்தால் இன்னும் குழப்பம் தான் ஏற்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஏலக்காய் அபிவிருத்தித் திட்டம் எந்தெந்தப் பகுதிகளில் செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி சடைய கவுண்டன் ஜாகிர், குரும்பைகவுண்டன் ஜாகிர் பகுதிகளில் இப்போது பயிரிடுகிறார்கள். அந்த இடத்திலேயும் இதை நல்ல முறையில் பயிர் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**திரு. கனம். பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் பல இடங்களைப் பற்றிப் பார்க்கும்போது இதையும் பார்க்கலாம்.

**திரு. ச. பொன்னுசாமி :** ஸார், நம் மாகாணத்திலாவது மொத்தம் எவ்வளவு நிலம் ஏலக்காய் சாகுபடி செய்ய வசதியுள்ளதாக இருக்கிறது என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? அதையாவது கணக்கிட்டு அந்த ரிப்போர்ட்டை மேஜையின்மீது வைக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு பூ. கக்கன் :** பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் தனிப்பட்டவர்கள் இப்போது ஏலக்காய் சாகுபடி செய்து வருகிறார்கள். கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் எத்தனை ஏக்கர்களில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது என்று தெரிவிக்கலாம்.

### புதிய கைத்தொழில்கள் (தஞ்சை மாவட்டம்)

* 451 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 3-வது திட்டத்தில் புதிய தொழில்கள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) உண்டென்றால் அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes.

(*a*) & (*b*) The following industries are proposed in Thanjavur district during the Third Five-Year Plan :—

Small Scale Industries.

1. Model Foundry, Thanjavur.
2. Tool Room Shop, Thanjavur.

Industrial Estates—

Industrial Estate at Kumbakonam.

Large and Medium Industries—

1. Paper Mill in private sector.
2. A Co-operative Spinning Mill at Mayuram.
3. A Spinning Mill in Thanjavur in private sector.
4. Two large scale Mechanized Units for the manufacture of Salt and Marine Chemicals in private sector.



30th March 1963]

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், காகிதத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ? அப்படி ஆரம்பிக்கப்படுவது, திருத்துறைபூண்டி தாலூகாவில் மரங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கு ஆரம்பிக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதை ப்ரைவேட் செக்டாரில் வைக்கிறார்கள். எங்கு வைப்பது என்று அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** தஞ்சை மாவட்டம் சென்னை மாகாணத்தில் தொழில் துறையில் எத்தனை எண்ணிக்கையில் இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கடராமன் :** அந்தவிதமான எண்ணிக்கையே இல்லை.

**திரு. வி. ராமனுஜன் :** திருச்சி மாவட்டத்தில் பட்டவாய்த்தலையில் தனியார் துறையில் ஆரம்பிக்க இருக்கிற காகிதத் தொழிற்சாலை எந்த நிலையில் உள்ளது ? விரைவில் ஆரம்பிக்க அரசாங்கம் ஊக்குவிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put.

**திருமதி. டி. என். அனந்தநாயகி :** தஞ்சையில் சர்க்கரை மில்கள் ஆரம்பிக்க லைசென்ஸுகளைக் கொடுத்தோம். ஆனால் அவைகள் ஆரம்பிக்கப்படவே இல்லை. அவர்கள் லைசென்ஸுகளைத் திருப்பிக் கொடுத்து விட்டார்களா ? இல்லையென்றால் இனிமேலாவது ஆரம்பிப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டு மில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டன. ஒரு மில் வேலை செய்துகொண்டிருக்கிறது. மற்றொரு மில் வைக்க வசதி ஏற்படவில்லை. இன்னும் லைசென்ஸ் கான்ஸல் ஆகவில்லை. அந்த நிலையில்தான் இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தஞ்சை மாவட்டத்திலே சிறந்த இசை வாணர்கள் இருக்கிறார்கள் என்று கனம் அமைச்சருக்குத் தெரியும். அவர்கள் போற்றி வளர்க்கும் இசை நுணுக்கக் கருவிகளைச் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது ஒரு கூட்டுறவு சொஸைட்டி செய்துகொண்டிருக்கிறது.

**திரு. மூ. சண்முகம்:** விழுப்புரம் பகுதியிலுள்ள கைமுறை காகிதத் தொழிற்சாலையில் இது வரையில் செய்யப்பட்ட காகிதங்கள் விற்பனை செய்ய அனுமதி கிடைக்காத காரணத்தினால் விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அவர்களுக்கு அனுமதி கொடுத்து விற்பனை செய்ய அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தஞ்சை ஜில்லா சம்பந்தமாக, தொழில் துறை பற்றிக் கேட்டால் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** கும்பகோணத்தில் பித்தளைப் பாத்திரங்கள் செய்யக் கூடிய தொழிலைச் செய்வதற்குப் புதிதாக மனுக்கள் ஏதாவது வந்திருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போதே நமது சர்க்கார் ஒரு ப்ரெஸ் மெட்டல் ஷாப் வைத்திருக்கிறார்கள். அதைத் தவிர தனியார் துறையில் வேலை நடந்துகொண்டிருக்கிறது. தனியார் துறையில் இருக்கிறவர்கள் தங்களுக்கு வேண்டிய தகடுகளை சர்க்கார் தொழிற்சாலையில் கொடுத்து வெட்டி வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

[30th March 1963

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வல்லம் பகுதியில் கண்ணாடி கிடைப்பதாகச் சொல்லப்படுகிறதே; அதை வைத்து அங்கே ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அங்கு கண்ணாடி கிடைக்கவில்லை. ரொம்ப நாள் முன்பு நானும் சிறு பையனாக இருக்கும்போது அதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன், வல்லம் கண்ணாடி என்று. ஆனால் அங்கு கண்ணாடி கிடைக்கவில்லை. அந்தக் காலத்தில் கண்ணாடி செய்ய கூடிய தேர்ச்சி இல்லாத காலத்தில், அங்கே கிடைத்த கூராங்கல்லை எடுத்து நன்றாகத் தேய்த்து கண்ணாடி மாதிரி உபயோகப்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** தஞ்சை மாவட்டத்தில் பட்டுக் கோட்டை பகுதியில் காயர் இண்டஸ்ட்ரி ஆரம்பிப்பதற்கு எல்லா மூலப் பொருள்களும் இருக்கின்றன. ஆகையால் அங்கு அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் ஆவன செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்கார் முயற்சி இன்னும் பலிக்கவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தஞ்சை மாவட்டத்தின் ஒரு பகுதி கடலோரத்தில் இருக்கிறது. அங்கு கிடைக்கிற உப்பை ஏராளமாக எடுத்து அதிலிருந்து கிடைக்கிற உப பொருள்களை உற்பத்தி செய்ய ஏதாவது எண்ணம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டு பெரிய தொழிற்சாலைகள் வர இருக்கின்றன என்று இதிலே பதில் சொன்னேன். மத்திய சர்க்காரிலிருந்து லைசென்ஸும் வழங்கி விட்டார்கள் ஒரு கம்பெனிக்கு. " மரைன் கெமிக்கல்ஸ், ப்ரொமைட் " போன்ற பண்டங்கள் செய்ய இப்போது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கோ. சி. மணி :** அந்தக் கம்பெனி எந்த இடத்தில் உருவாக்கப் படும் என்று அறியலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வேதாரண்யத்தில்.

**திரு. சி. பொன்னுசாமி :** அதிகப்படியாக கிராம மக்கள் இருப்பதால் கிராமங்களில் ஆங்காங்கு கிடைக்கக்கூடிய ரா-மெட்டீரியல்களை எடுத்து என்னென்ன தொழில்கள் செய்யலாம் என்பதற்கு உத்தியோகஸ்தர்கள் பிரசாரம் சரியாகச் செய்யவில்லை. ஆகையால் மக்களுக்குத் தெரியவில்லை என்று தெரிகிறது. பஞ்சாயத்து யூனியன் மூலமாகப் பிரசாரம் செய்ய தகுந்த ஏற்பாடு செய்ய சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனியாக கேள்வி போடவேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், தஞ்சை மாவட்டத்திலே நெல் விவசாயம் அதிகமாக இருப்பதாலும், வைக்கோல்கள் ஏராளமாகக் கிடைப்பதாலும் வைக்கோலை வைத்து ஏதாவது தொழில் செய்ய அரசாங்கத்தில் முயற்சி செய்திருக்கிறார்களா ? அல்லது ஆராய்ச்சியாவது செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அரசாங்கத்தார் முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தனியார் துறையில் அந்த முயற்சி செய்து ஸ்ட்டரா போர்ட்ஸ் முதலியன செய்யலாமா என்று ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து வேதாரண்யத்தில் ரசாயன பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது. நீண்ட கடற்கரை பிரதேசமான பட்டுக்கோட்டையில் அந்த மாதிரி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?



30th March 1963]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தொழிற்சாலையை எந்த இடத்தில் அமைப்பது, எந்தத் தொழிற்சாலையை அமைப்பது என்பதெல்லாம் தொழிற்சாலையை வைக்கிறவர்கள் பார்த்து, கட்டுபடியாகக் கூடியதாக இருக்குமா, லாபமாக இருக்குமா என்று பார்த்துச் செய்யவேண்டியிருக்கிறது. கை இருக்கிறது என்று வடை சுட முடியாது. இங்கே நிலம் இருக்கிறது என்று ஒரு தொழிற்சாலையை வைக்க முடியாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** அந்த மாவட்டத்தில் மீன் அதிகமாகக் கிடைக்கிறது. அதைப் பதப்படுத்தி, கருவாடாக அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்ப அந்த தொழிலை ஆரம்பிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எனது சக அமைச்சருக்கு மீனைப் பற்றிக் கேள்வி போட்டால் அவருக்குத் தெரியும். எனக்குத் தெரியாது.

### தீ அணைக்கும் படை

*453 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விபத்து நேரங்களைத் தவிர்த்து மற்ற நேரங்களில் தீயணைக்கும் படையினரை ஏதாவது அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இல்லை.

**திரு. சி. ம. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, போலீஸ் இலாகாவினருக்கு வழங்கப்படும் அத்தனை சலுகைகளையும் இந்த பையர் சர்வீஸ் 9—0 a.m.
பணியாளர்களுக்கு வழங்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது வேறு விஷயம் தனிக் கேள்வி போடவேண்டும்.

### கோயில்களில் நுழைய அனுமதி

*455 கேள்வி—**திரு. முனு. ஆதி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு துவக்கத்தில் உள்ளபடி, எத்தனை தமிழக இந்துக் கோயில்கள், பிறபட்ட வகுப்பு மக்களும் நுழையத்தக்கனவாக மாற்றப்பட்டன ?

(இ) 1962 நவம்பர் முடிய பிறபட்ட வகுப்பினர் நுழைய அனுமதியாத இந்துக் கோயில்கள், தமிழகத்தில் இன்னும் எத்தனை உள்ளன ?

(உ) இது பற்றி அரசாங்கம் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Under the Madras Temple Entry Authorisation Act, 1947, all Hindu temples are thrown open to all Hindus irrespective of the caste or sect to which they belong.

(இ) & (உ) During September 1962, one Harijan was reported to have been prevented from entering into Sri Karunya Ammal temple at Kanakankurichi, Tiruchirappalli district. The case has been booked under Madras Temple Entry Authorization Act, 1947, but it has ended in acquittal. If any specific case of prevention of Hindus from entering into any Hindu temple because of their community or sect is brought to notice, necessary action will be taken in the matter under the provisions of the Act.

[30th March 1963

**திரு. ஆ. துரை அரசன்:** பட்டுக்கோட்டை தாலுகா ஒரத்தநாடு பகுதியில் ஒரு கோவிலில் பழங்குடி சமூகத்தினர் நுழையக் கூடாது என்று தடுக்கப்பட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, முன்பு திருச்செந்தூர் கோவிலில் ஒரு சம்பவம் நடந்தது சர்க்காருக்கு நினைவு இருக்கலாம். அந்த கோவிலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நுழைய அனுமதி இருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லா ஹிந்துக்களுக்கும் நுழைய அனுமதி இருக்கிறது.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் தலைவர் அவர்களே, மக்களிடத்தில் கடவுள் நம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டாம் என்று கூறும் ஒரு கூட்டத்தினர் இருப்பதால்தான் இந்த தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாகக் கோவில்களுக்குப் போவதில்லை என்ற கருத்து இருக்கிறதே. அது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஜனநாயகம் ஏற்பட்ட பிறகு, மக்களிடம் சென்று வோட்டுக் கேட்கும் நிலை இருக்கிறது. ஆகவே கோவிலுக்குப் போக வேண்டாம், கடவுள் இல்லை என்று சொல்வார் யாரும் இல்லை. (சிரிப்பு).

**திரு. செ. கோ. விஸ்வநாதன் :** ஸார், தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்று அரசாங்கத்தார் வெளியிட இருந்த வால் போஸ்டர்களை வெளியிடாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது வேறு விஷயம் : அது பற்றி கனம் ஹரிஜன இலாகா அமைச்சருக்குக் கேள்வி போட வேண்டும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, தேர்தலில் கலந்து கொள்வதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திராவிட முன்னேற்றக் கழகம் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கோட்பாடு உடையவர்களாக இருந்து வருகிறோம் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்கு மேல் தேர்தலினால் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும் (சிரிப்பு).

**திருமதி டி. என். அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, மனித குலம் தோன்றிய நாளாக "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று மக்கள் நம்பி வந்திருக்கிறார்கள். 15 ஆண்டுகளுக்கு முன் இவர்கள் இந்த தத்துவத்தை கண்டுபிடித்தார்கள் என்பதை சர்க்கார் ஏற்றுக் கொள்கிறதா? மக்கள் கடவுள் நம்பிக்கையை விட்டு விட்டால், அதைப் பரப்ப தக்க நடவடிக்கை சர்க்கார் எடுப்பார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த உப கேள்வி கேட்கும் அங்கத்தினரும், முன்னால் கேள்வி கேட்ட அங்கத்தினரும் கலந்து பேசி இதைத் தீர்த்துக் கொள்ளலாம். (சிரிப்பு.)

**திரு. முனு. ஆதி :** கனம் தலைவர் அவர்களே, திருச்செந்தூரில் கனம் அமைச்சர் ஒருவருக்கு இலையைத் தூக்கி எறிந்தார்கள்; அவருக்கே அந்தக் கதி என்றால், ஹரிஜன மக்களுக்கு அங்கே என்ன நிலை இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "அமைச்சருக்கே அந்த நிலை" என்றால், அமைச்சருக்கு என்று தனியாக ஒரு சலுகையும் காட்டப் படுவதில்லை என்றுதான் தெரிகிறது. ஆகவே நான் கூறுவேன், கோவில்களில்தான் உண்மையான சோஷலிஸம் அமல் படுத்தப்பட்டு வருகிறது என்று.



30th March 1963]

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் ஆண்டவனை வேண்டியவர்கள் எத்தனை பேர் தோற்றவர்கள். தோற்ற பின்னால் பக்தி ஏற்பட்டவர்களாக இருக்கிறார்களா என்று கனம் அமைச்சர் அறிவிப்பாரா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த ஆராய்ச்சியை கனம் அங்கத்தினர் செய்து, சொன்னால், மற்றவர்கள் அதைக் கவனித்து பயன் அடையலாம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் தலைவர் அவர்களே, காங்கிரஸ் அபேட்சகர்கள் தேர்தல் நேரத்தில் ஆண்டவனை துணைக்கு அழைத்த காரணத்தினால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதிகமாக ஜெயித்தார்கள் என்பதும் காங்கிரசு 50-க்கும் மேலான இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதும் கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திராவிட முன்னேற்றக் கழகத்தினரில் சிலர் கோவிலுக்குப் போவது எனக்குத் தெரியும். அவ்வளவு தான் நான் சொல்லுவது.

**திரு. எஸ். ராமசாமி :** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் கோவிலுக்குப் போகலாம் என்றால், அறநிலையப் பாதுகாப்பு இலாகாவில் உள்ள கோவில்களுக்கு மட்டுமா அல்லது எல்லாக் கோவில்களுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பப்ளிக் டெம்பிள் என்று கருதப் படுகிற எல்லா ஆலயங்களிலும் ஹிந்துக்களாக உள்ளவர்கள், ஹரிஜனங்களாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும், அனுமதிக்கப்பட வேண்டும். தடை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்குச் சட்டம் இருக்கிறது. அது குற்றமாகக் கருதப்படும்.

**திரு. ஆ. துரை அரசன் :** தலைவர் அவர்களே, நெற்றியில் திருநீறு பூசுபவர்களும் கோவிலுக்குச் செல்பவர்களும்தான் பக்தர்கள் என்று கனம் அமைச்சர் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நானே திருநீறு பூசுவது இல்லை. அந்தக் கேள்விக்கு அவசியம் இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** ஆளும் கட்சி கடவுள் நம்பிக்கையில்லாத ஒரு பெரியாரின் சேர்க்கையால் வெற்றி பெற்று இருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது கனம் அங்கத்தினருடைய கருத்தாக இருந்தால், வைத்துக்கொள்ளலாம்.

**திரு. கோ. சி. மணி :** கனம் தலைவர் அவர்களே, கோவிலில்தான் சோஷலிசம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். . . . . . .

**கனம் சபாநாயகர் :** எப்பொழுது குறிப்பிட்டார்?

**ஒரு கனம் அங்கத்தினர் :** கனம் அமைச்சர் இதற்கு முன்னால் சொன்னார்.

**திரு. கோ. சி. மணி :** ஒரு கனம் அமைச்சர் அவர்களுக்கு, திருச்செந்தூர் கோவிலில் இலையைத் தூக்கி எறிந்தது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இலையைத் தூக்கி எறிந்தார்கள் என்பது முற்றிலும் தவறு. யாராக இருந்தாலும், கனம் அமைச்சரானாலும் சரி, வேறு ஏழை எளியவர்களாக இருந்தாலும் சரி, ஒரேமாதிரித் தான் கருதப்படுகிறார்கள் என்று குறிப்பிட்டேன்.

[30th March 1963

**திரு. இராம. அரங்கண்ணல் :** தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட அரசினர் எடுக்கும் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருகிறோம். அர்ச்சகர்களுக்கு பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறதே, அங்கே எவ்வளவு தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்களும் அர்ச்சகர்களாக வேண்டுமென்றால், அதை நான் விரும்ப மாட்டேன். குறிப்பிட்ட தகுதி உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த வேலையை ஹரிஜனங்கள் செய்ய வேண்டும் என்பதில்லை ; அது கஷ்டமான வேலை ; வருமானம் இல்லை. அவர்கள் படித்து நல்ல உத்தியோகங்களைப் பார்க்க வேண்டும் அதை விட்டு, கோவில் கர்ப்பகிருகத்தில், புகையில் வேலை செய்ய பயிற்சி கொடுக்கிறேன் என்று நான் சொல்லத் தயாராக இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** தமிழ் நாட்டில் தேர்தலில் தோற்றவர்கள், பின்னால் வடநாட்டுப் புண்ணிய க்ஷேத்திரங்களில் பாவ மன்னிப்புக் கோருகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றியெல்லாம். எனக்குத் தெரியாது.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது தான் எதிர்க் கட்சி அங்கத்தினர் தேர்தல் பிரசாரம் பற்றிப் பேசினார். ஆண்டவன் இல்லை என்று ஒரு கூட்டமானது பிரசாரம் செய்துவருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆண்டவன் இருக்கிறாரா , இல்லையா என்று கனம் அங்கத்தினர்கள் கவலைப்பட வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

**திருமதி. டி. என். அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில்களுக்குப் போக வேண்டும் என்று அற நிலையப் பாதுகாப்பு இலாகாவினர் செய்வது மட்டுமின்றி, நல்ல சமுதாய பிரசாரகர்களை அழைத்து, அவர்களைக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களிடையே கோவில் செல்லும் பழக்கத்தை அதிகரிக்க சமூகப் பிரசாரம் நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்காக " கான்வஸ் " செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

### சுரங்க மின்சாரத் திட்டம்

* 456 கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மேட்டூர் சுரங்க மின்சார திட்டத்தைப் போல் வேறெங்காவது சுரங்க மின்சார திட்டம் அமைக்க வசதி உள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : None, among the schemes so far investigated.

### ஆசிரியர்களுக்குச் சீருடை

* 457 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர்கள், ஒரே நிறமுள்ள உடைகள் அணியவேண்டுமென்று, உத்திரவிட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால் எப்பொழுதிலிருந்து அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.



30th March 1963]

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய தோற்றம் பொலிவு உள்ளதாக இருக்க, காலிலே செருப்பு அல்லது பூட்ஸ், இடையிலே வால் கோவணம் (சிரிப்பு) மேனிக்குக் கோட்டு, தலைக்கு தலைப்பாய் என்று போட்டுக்கொண்டு தோற்றப் பொலிவுடன் ஆசிரியர்கள் செல்லுமாறு உத்தரவு இடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருடைய வருணனைதான் தோற்றப் பொலிவு என்று ஏற்றுக்கொள்ள முடியாது. ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஒரே விதமான உடையை அனுஷ்டிக்க வேண்டும் என்பது நல்லதுதான். எதிர்க் கட்சித் தலைவரும் ஆசிரியர்கள் அந்தந்த பள்ளிக்கூடங்களில் ஏற்றுக்கொண்டிருக்கிற ஒரே மாதிரியான உடை அணிவது நல்லது என்று சொன்னார். நானும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டேன். கிராமங்களில்கூட சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்து, ஆசிரியர்களும், ஆசிரியைகளும் ஒரே மாதிரியான உடையை அணியும் காட்சியைக் கண்டு இருப்பார்கள்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் குங்குமப் பொட்டையும், விபூதியையும் சேர்க்கவில்லையா ?

**திருமதி டி. என். அனந்தநாயகி :** பள்ளிகளில் விழாக் காலங்களிலே யாவது ஆசிரியர்மார்கள் ஒரே மாதிரி உடை அணியும் ஒரு பழக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தந்த ஸ்தலத்தில் உள்ளவர்கள் இதிலெல்லாம் கவனம் செலுத்தி அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கத்திலிருந்து இம்மாதிரி உத்தரவு போடுவதாக இப்பொழுதில்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாணவர்களுக்கு சீருடை வழங்கும் திட்டம் இருப்பதுபோல், ஏழை ஆசிரியர்களுக்கும் இனமாக சீருடை வழங்கும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாணவர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்ச்சிகளை நானே பார்த்திருக்கிறேன். ஆசிரியர்களும் சீருடை அணிந்து வருவதை நான் பார்த்திருக்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** ஆசிரியர்கள் ஒரேமாதிரியான உடை அணிய வேண்டும் என்று வற்புறுத்தப்படாவிட்டாலும், அப்படிப்பட்ட உடை அணிந்தால் மாநிலம் முழுவதும் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது ஆலோசனை கூறுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டு வருகிறது. நானும் அதை வற்புறுத்தி வருகிறேன். பல பள்ளிகளில் அம்மாதிரி ஆசிரியர்களும், ஆசிரியைகளும் ஒரே மாதிரி உடை அணிந்து வருகிறார்கள். ஆகவே, இது மேலும் பரவும் என்று தான் எதிர்பார்க்கிறேன்.

**திரு ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** ஆசிரியர்கள் தோற்றப் பொலிவுடன் விளங்கினால், பயிலுகின்ற மாணவர்களுக்கு மானசீகமான முறையில் ஒருவிதமான நல்ல பயிற்சியும், ஒரு அச்சமும் ஏற்பட்டு, ஒரு பண்பு வளருவதை நாம் கண்டிருக்கிறோம். ஆகையால் இதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்தால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர்களுக்கு தோற்றப் பொலிவு வேண்டியதுதான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட வருணனையின்படித்தான் தோற்றப் பொலிவு ஏற்படும் என்பதைத்தான் நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

### ரயில்வே என்ற பிரிவின்கீழ் மானியம் (சென்னை மாநிலம்.)

* 458 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :

(அ) " ரயில்வே " என்கிற பிரிவின் மூலம் மத்திய அரசினிடமிருந்து மாநில அரசுக்குக் கிடைக்கும் மானியம் ஏதேனும் உண்டா ?

[30th March 1963

(இ) 1960, 1961, 1962 ஆண்டுகளில் அப்படிக் கிடைத்த தொகை எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம், கிடைக்கிறது. ரயில்வேக்கள் பெறும் வருமானம் அரசியல் அமைப்பின் 269-வது பிரிவின் கீழ் மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கத்தக்க வரவினங்களின் பட்டியலில் அடங்காவிட்டாலும், ரயில்வேக்கள் மாநிலங்களுக்கு மானியமாக வழங்குவதற்கென்று இந்திய அரசாங்கத்துக்கு 12½ கோடி ரூபாய் செலுத்துகின்றன. இந்த மானியம், 1961-ல் ரத்து செய்யப்பட்ட ரெயில்வே பிரயாணிக் கட்டணங்கள் சட்டப்படி விதிக்கும் வரிக்குப் பதிலாகக் கொடுக்கப்படும். மூன்ருவது நிதிக் கமிஷனின் சிபாரிசுப்படி இந்த மானியத்தில் தமிழ் நாட்டின் பங்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 81 லட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| | | ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| (ஆ) | 1959—60 .. .. | 84·43 |
| | 1960—61 .. .. | 89·77 |
| | 1961—62 .. .. | 81·37 |

(*a*) Yes, Sir. Though the amount earned by the Railways is not included in the list of items mentioned under Article 269 of the Constitution, which are assignable to the States, the Railways pay a sum of Rs. 12.50 crores to the Government of India for distribution to the States as a grant-in-aid. The grant is intended to replace the tax on Railway Passenger Fares Act which was repealed in 1961. On the basis of the recommendation of the Third Finance Commission, the share of Madras State has been fixed as Rs. 81 lakhs per annum.

| | | Rs. IN. LAKHS |
|---|---|---|
| (b) | 1959–60 ... ... ... ... | 84·43 |
| | 1960–61 ... ... ... ... | 89·77 |
| | 1961–62 ... ... ... ... | 81·37 |

**திரு. இராம. அரங்கண்ணல் :** பெரிய வருமானம் உள்ள இந்தத் துறையை நம்முடைய மாநில அரசாங்கமே ஏற்று மத்திய அரசு விரும்பினால் அவர்களுக்கு மான்யம் கொடுக்கும் அளவுக்கு அரசியல் அமைப்பைத் திருத்துமாறு இந்த அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரயில்வேயைப் பொறுத்த மட்டில் மத்திய அரசிடம் அது இருப்பதுதான் பொருத்தம். அதை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை இந்த அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசாங்கத்திலை பிரித்துக் கொடுக்கப்படுகிற இந்த நிதி எந்த அடிப்படையிலே, எந்த விகிதாசாரத்தில் பிரித்துக் கொடுக்கப்படுகிறது ? மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலா, அல்லது ரயில்வேத் துறையின் வருமானத்தின் அடிப்படையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது பைனான்ஸ் கமிஷன் செய்த சிபார்சு. இதற்கு மேலே பைனான்ஸ் கமிஷன் எந்த அடிப்படையிலே இவ்வாறு முடிவு செய்திருக்கிறது என்பதற்கு தனிக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

**திரு. ம. கமலநாதன் :** தமிழ் நாட்டிற்குக் கிடைக்கிற பங்குத் தொகையை மாவட்ட ரீதியில் பிரித்துக் கொடுக்கப்படுகிறதா ? அப்படி கொடுக்கப்பட்டால், எந்த வகையில் அந்தத் தொகை செலவழிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது உத்தரவு போட்டிருக்கிறதா ?



30th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாவட்ட ரீதியிலே பிரித்துக் கொடுப்பது என்ற முறை இல்லை. பொதுவாக அரசாங்கத்தின் வருமானத்தோடு அது சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆயிரக்கணக்கான ரயில்வே கேட்டுகள் தமிழகத்தில் ஆள்கள் இல்லாமல் இருக்கின்றன. அதனால் ஆபத்து அதிகமாக இருக்கிறது. அத்தகைய கேட்டுகளுக்கு ஆள்போட்டால், மத்திய அரசாங்கம் அந்த ஆள்களுக்கான ஆகிற செலவில் 50 சத விகிதம் கொடுக்கிறதாகக் கூறியிருக்கிருர்களா ? அப்படியிருந்தால், தமிழ் நாட்டு அரசாங்கம் அதற்கு வேண்டிய ஆட்களை நியமித்து, அந்தத் தொகையையும் மத்திய அரசாங்கத்திலிடமிருந்து வசூலிக்க முயற்சிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது வரையில் ஆள்கள் இல்லாத லெவல் கிராஸிங்களுக்கு ஆள்கள் வேண்டியதுதான் என்பதை மத்திய அரசாங்கம் உணருகிறது. அந்தச் செலவை யார் ஏற்றுக் கொள்கிறது, எவ்வாறு பகிர்ந்து கொள்ளுவது என்ற பிரச்சனைகளெல்லாம் மத்திய அரசாங்கத்திற்கும், இந்த அரசாங்கத்திற்கும் இடையே பேச்சு வார்த்தையிலே இருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பல ரயில்வே கேட்கள் அதிக நேரம் சாத்திவைக்கப்படுகிற காரணத்தினலே, அவைகளை மாற்றி அமைக்கவேண்டும் என்று சர்க்காருக்குத் தெரிவித்தாலும், அந்தத் துறை மத்திய சர்க்காரைச் சேர்ந்தது என்று சொல்லப்பட்டு அந்தக் காரியம் தாமதப்பட்டு வருகிறது. இந்த சர்க்காராவது அதைக் எடுத்துச் செய்வதற்கோ அல்லது மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்வதற்கோ முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரெயில்வே லெவல் கிராஸிங்களில் மேம்பாலங்கள் கட்டிவிட்டால் வண்டிகள் நிற்க வேண்டிய அவசியம் இருக்காது. ஏராளமாக மேம்பாலங்கள் கட்ட வேண்டியிருக்கும். இப்பொழுது சென்னை நகரத்தில் மட்டும் சில மேம்பாலங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் சேலம், மதுரை போன்ற முக்கியமான இடங்களிலும் மேம்பாலங்கள் கட்டுவது எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாதிரி மேம்பாலங்கள் கட்ட வேண்டிய இடங்கள் இருக்கின்றன. ஆனால், இப்பொழுது எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுவது என்றால், இந்த மாநில ஆட்சிக்கும் செலவு எட்டும். இப்பொழுது இருக்கிற நெருக்கடி நேரத்தில் வெளி ஊர்களில் ஒன்றும் மேம்பாலங்கள் எடுத்துக்கொள்வதற்கில்லை என்று நிறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** தமிழகத்தில் மேலும் பல புதிய ரயில்வே பாதைகள் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய சர்க்காரை கேட்டுக்கொண்டிருக்கிறோமே ? அது எந்த நிலையில் இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பல ரயில்வே லைன்கள் கோரப்படுகின்றன. ஆனால் ஒரு பிரையாரிடி லிஸ்டு போட்டு சில ரயில்வே லைன்களை இப்பொழுது எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறே அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். சேலம்-பங்களூர், மானமதுரை, விருதுநகர், தூத்துக்குடி இந்த லைன்களையெல்லாம் அவர்களே எடுத்துக்கொண்டிருக்கிருர்கள். மேலும் சில லைன்களை எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களுடைய வருவாய் நிலையைப் பொறுத்தும் அவர்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது.

**திரு. கோ. சி. மணி :** மாயூரம் ஜங்ஷன் பக்கத்திலும், கும்பகோணம் ஸ்டேஷன் பக்கத்திலும் உள்ள கேட்டுகளுக்கு மேம்பாலங்கள் கட்டவேண்டும் என்ற யோசனையின் பேரில் மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள் ?

MR. SPEAKER : The hon. Member is going to ' Overbridge '. The question refers to Railways (Laughter).

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது எடுத்துக்கொள்வதற்கில்லை என்று முன்பே குறிப்பிட்டேன்.

[30th March 1963

**திரு. ம. கமலநாதன் :** சென்ற ஆண்டில் சேலத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 'ரயில்வே நிதி ரூபாய் 25 லட்சம் நமது மாவட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள் அதை எப்படிச் செலவு செய்வது' என்பதற்கு ஆலோசனையை கவுன்சிலில் கேட்டார்கள். அப்படியென்றால், இந்த நிதி எங்கிருந்து வந்தது என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற நிதி சேலத்திலிருந்து வந்திருக்கிறது.

**திரு. மு. பொ. வடிவேல் :** ரயில்வே ஸ்டேஷன் கட்டிடங்கள் மத்திய சர்க்காருக்கு சொந்தமானவை. அதற்காக உள் ஆட்சி மன்றங்களுக்கு ஏதேனும் வரி தரப்படுகின்றதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரயில்வே நிலையங்களின் கட்டிடங்கள் மத்திய ஆட்சியின் கீழ் வருவதுதான். வரி கொடுப்பது பற்றி சட்டம் இருக்கிறது. சட்டப்படி வரி போடுவதற்கு இடம் இருந்தால் வரி போடலாம். பஞ்சாயத்து யூனியன்கள் வரி விதிக்க விரும்பினால் சட்டத்தைப் பார்த்துச் செய்யவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** வண்டலூர் வரையில் விஸ்தரிக்கப்பட்ட மின்சார ரயில் விழுப்புரம் வரையில் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ? இந்த ஆண்டில் பூர்த்தியாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது இப்பொழுது நிறைவேற்றப் பட்டுத் தான் வருகிறது. ஆனால், இதை சீக்கிரம் நிறைவேற்றுவதிலே சில இன்னல்கள், இடையூறுகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் சமாளித்து சீக்கிரம் இதைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற வகையிலே தான் ரயில்வே மந்திரியாலயமும் இதிலே கவனம் செலுத்தி வருகிறது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** நெருக்கடி காலத்தில் புதிய பாலங்களை கட்டுவதுதான் கஷ்டம் என்று கூறினார்கள். பழைய மேம் பாலங்களை, பேஸின் பிரிட்ஜ் போன்ற பழைய பாலங்களை புதுப்பிப்பது பற்றி அரசாங்கம் ரயில்வே மந்திரியாலயத்தோடு பேச்சுவார்த்தை நடத்துமா ?

**கனம் திரு. எம். பக்தவதசலம் :** பழைய மேம் பாலங்களை புதுப்பிப்பும் கட்டிட வேலைதான். அதனால், அதையும் உடனடியாக எடுத்துக் கொள்வதற்கில்லை.

**திரு. எம். தண்டாயுதபாணி :** ஜில்லா போர்டு பகுதிகளில் உள்ள ரயில்வே லைன்கள் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட ரயில்வே செஸ் பூரணமாக வந்துவிட்டதா ? அப்படியென்றால், தஞ்சை ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எவ்வளவு இந்த மாநில ஆட்சிக்குக் கிடைக்க வேண்டுமென்பது கலந்து பேசி முடிவு செய்யப்பட்ட விஷயம். அந்தப் பணம் இருக்கிறது. அது கிடைத்தது என்றே சொல்லலாம். தஞ்சைக்கு எவ்வளவு பணம் இருக்கிறது என்பது பற்றி தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், புதிய ரயில் பாதைகள் போடுவதற்கு என்னென்ன புதிய திட்டங்கள் நம்முடைய மாநில சர்க்காரிடம் இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே சொன்னேன், அவைகளுக்கு விவரங்கள் வேண்டியிருக்கிறதென்று. இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** ஸார், தஞ்சை ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் போன்ற கூட்டத்தில் தஞ்சை ஜில்லாவிற்குரிய ரயில்வே செஸ் தொகையை செலவு செய்வதற்காக ஒரு எஸ்டிமேட் தயார் செய்யப் பட்டு சர்க்காருக்கு அனுப்பப்பட்டதா ?



30th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :**—இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

### நரிக் குறவர்கள்

* 459 கேள்வி.—**திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள குருவிக்காரரின் (நரிக்குறவர்) ஜனத் தொகை எவ்வளவு ?

(இ) அவர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) இந்த மாநிலத்தில் உள்ள நரிக் குறவர்கள் சம்பந்தமாக தனி ஜனத்தொகைக் கணக்கு கிடைக்கவில்லை.

(இ) வாக்களிக்க முடியாது என்கிற தகுதியின்மை சாதிமத அடிப் படையில் இல்லை. தேவையான தகுதிகள் பெற்றுள்ள ஒவ்வொரு இந் தியப் பிரஜையும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்துகொள்ள உரிமை பெற்றவராவார்.

(*a*) Separate population figures for Narikuravars in the State are not available.

(*b*) There are no disqualifications for voting based on caste or tribe and every citizen of India possessing the requisite qualifications is entitled to be registered on the electoral roll.

**திரு. ஏ. ஆறுமுகம் :** ஸார், நாட்டிற்கு சுதந்திரம் வந்த பிறகு, எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற அடிப்படையில் இருப்பதால், இந்த நரிக்குறவர்கள் இன்னும் நாடோடிகளாக இருக்கிற நிலைமையை மாற்றி அமைத்து அவர்களையும் வாழ வைப்பதற்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்களும் இப்போதே மன்னர்கள் தான். நாடோடிகள் அல்ல. முன்பு எல்லாம் அவர்கள் ஊர் ஊராகப் போவார்கள். எந்த ஊரில் குழந்தை பிறக்கிறதோ அந்த ஊரின் பெயரை அந்தக் குழந்தைக்கு வைப்பார்கள். நானே பார்த்திருக்கிறேன். சிற்சில இடங்களில் காலனிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு காலனிக்குப் போயிருந்தேன். வடாற்காடு மாவட்டத் திலே கூட ஆங்காங்கு காலனிகள் அமைக்கப்பட்டு அவர்கள் விவசாயத்தில் ஈடுபட முற்பட்டிருக்கிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, நரிக்குற வர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அவர்களுக்குத் தனிப் பகுதிகள் ஒதுக்கப்பட்டு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருகிற திட்டம் அரசினருக்கு உண்டா ? அது எந்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக் கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது மாவட்ட ரீதியாக கவனிக்கப் பட்டு வருகிறது. கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து 3,650 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் அவர்கள் இருப்பார்கள். சிதரிக் கிடப்பார்கள். இது மாவட்ட ரீதியில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

**திரு. எஸ். பொன்னுசாமி :** கனம் தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் பறவை பிடிப்பதிலே நிபுணர்கள் என்று சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் பறவைகள் தானியங்களை அடித்துக் கொண்டு போகிறதே அதைத் தடுப்பதற்கு இந்த நரிக்குறவர்களை உபயோகித்துக் கொள்ளக்கூடிய திட்டம் ஏதாவது வகுக்க சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது ஒவ்வொரு ஜாதிக்காரரும் அந்தந்த ஜாதியினரின் தொழிலில் ஈடுபட்டு இருக்க வேண்டும் என்று சொல்லும் பிற்போக்கான கருத்து. இந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

[30th March 1963

**திருமதி. டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, நரிக்குறவர்கள் பழைய நாடோடி வாழ்வைத்தான் வாழ வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களைக் கஷ்டப்படுத்தி ஒரு இடத்தில் உட்கார வைத்து அவதிக்கு ஆளாக்காமல் அவர்கள் சுவை தெரிந்த பிறகு, நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது கூட முற்போக்கு கருத்து அல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நானே பார்த்திருக்கிறேன். சில இடங்களில், சமீபத்தில் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பு நான் ஒரு காலனிக்குப் போயிருந்தேன். அவர்கள் மகிழ்ச்சியோடு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறோம், பயன் அடைந்து வருகிறோம், வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி வீடுகளை எல்லாம் காட்டினார்கள். அவர்கள் நாடோடிகளாக இருக்காமல் ஒரு இடத்திலிருந்து தொழிலில் ஈடுபட்டு வாழ விரும்புகிறார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :**—தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே, திருவரம்பூரில் கட்டப்பட்டிருக்கிற குறவர்கள் காலனி இப்போது கட்டுகிற தொழில் காலனியால் காலி செய்யப்படுகிறது என்பது உண்மையா? அப்படியானால் அவர்களுக்கு வேறு இடத்தில் வீடு கட்டிக்கொடுக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காலி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் காலி செய்யப்பட்டு வேறு இடத்தில் அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நரிக் குறவர்கள் தங்குவதற்கு இடமும், செய்வதற்கு தொழிலும் கிடைக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் நிரந்தரமாக அவர்கள் வாசம் செய்வார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி நான் முன்பே கூறி இருக்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள், மலை ஜாதி மக்கள் என்ற பிரிவுகளில் எந்த பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ? இவர்களுக்குக் கல்வி வசதி போன்ற வசதிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவர்கள் மிக பிற்போக்கான சமூகம் என்றுதான் கருதப்படுவார்கள். இவர்களுக்கு வேண்டிய கல்வி வசதிகள் செய்து கொடுக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸார், இந்த நரிக்குறவர்கள் என்ற பெயர் அவ்வளவு அழகாக இல்லை. உடனே இந்த நரியை ஓட்டிவிட்டு குறவர்கள் என்று மட்டும் வைத்துக்கொள்ள அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவர்களுக்குக் குருவிக்காரர்கள் என்றும் பெயர் இருக்கிறது. அதைவிட நரிக்குறவர்கள் என்ற பெயர் மேலான பெயராக அவர்களே கருதுவதாக நான் நினைக்கிறேன்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** ஸார், இப்போது குருவிக்காரர்கள் ஆண்களும், பெண்களும் நம்மைப் போலவே உடை உடுக்க ஆசைப்படுகிறார்கள். அவர்களுக்கு அம்மாதிரி உடுக்க சௌகரியமில்லாத காரணத்தால், அவர்களுக்கு புடவை, வேட்டி வாங்கிக்கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்களுக்குக் காலனி அமைக்கப்பட்ட பிறகு அவர்கள் நரிக்குறவர்களாக தோன்றுவது இல்லை. அங்கத்தினர் எவ்வாறு விரும்புகிறாரோ அதே மாதிரிதான் காட்சி அளிப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், நரிக்குறவர்களிலே படித்துப் பட்டம் பெற்று உத்தியோகம் வகிக்கக்கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா ? இருந்தால் அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னிடம் அந்த தகவல் இல்லை.



30th March 1963]

**திரு. ம. கமலநாதன் :** நரிக்குறவர்களில் பணக்காரர்கள் இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. பிச்சைக்காரர்கள்கூட பெரிய பணக்காரர்களாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

**திருமதி. டி. என். அனந்தநாயகி :** தங்கக்கட்டுப்பாடு வந்தபிறகு நரிக்குறத்திகள் விற்கிற மணிகளுக்கு அதிகமான மோகம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே மணிகளை அழகாக பின்னக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாக அவர்கள் இருப்பதால், அவர்களுக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்களுக்குத் தொழிற்சாலை வேண்டியதில்லை. அவர்களது தொழிலுக்கு வேண்டுமானால் நல்ல எதிர் காலம் இருக்கலாம்.

### ஊராட்சிக் கூட்டு மன்றக் கட்டிடம் (ஆவுடையார் கோயில்)

* 460 கேள்வி—**திரு. ஆ. துரை அரசன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தாலுகா ஆவுடையார் கோவில் கூட்டுமன்றப் புதிய கட்டிடத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) மேற்படி கட்டிடத்திற்கு பழுது ஏற்பட்டு வேறு இடத்திற்கு அலுவலகம் மாற்றப்பட்டது உண்மையா ?

(உ) ஆமென்றால், கண்ட்ராக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ரூபாய் 26,703.36 ந.பை.

(இ) ஆம்.

(உ) வட்டார அலுவலகக் கட்டடம் 1961 ஏப்ரல் மாதம் கட்டப்பட்டது. கட்டிடம் பூர்த்தியான பிறகு அந்தப் பார்வையிடும் கால அளவு ஏற்கனவே முடிந்து விட்டதால், கண்ட்ராக்டரின் மீது நடவடிக்கை எடுப்பது அவசியமில்லை என்று கருதப்பட்டது.

(a) Rs 26,703·36 n.P.

(b) Yes.

(c) The Block Office Building was constructed in April 1961. No action against the contractor was considered necessary as the period of observation was already over.

**திரு. ஆ. துரை அரசன் :** கனம் தலைவர் அவர்களே, அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது அரசினருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது வட்டார வளர்ச்சியாக்கப்பட்டது. அதற்கு அப்புறம் பஞ்சாயத்து யூனியனாக ஆக்கப்பட்டது. பஞ்சாயத்து யூனியனாக ஆக்கப்பட்ட பிறகு பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கட்டிடம் பல இடங்களில் கட்டப்பட்டு வருகிறது. இங்கு அது கட்டப்படவில்லை. பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு வாடகைக் கட்டிடம் எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்னால் அடை மழை பெய்தது. அப்போது அந்தக் கட்டிடம் பழுது பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவே பஞ்சாயத்து அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலகம் இரண்டையும் இணைத்து இருப்பதால் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அந்த அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது.

**திரு. எஸ். ராமசாமி :** பஞ்சாயத்து யூனியன் கட்டிடம் மட்டுமல்ல. இதுபோன்ற அரசாங்க சம்பந்தப்பட்ட எல்லாக் கட்டிட வேலைகளும் கட்டி முடிந்த இரண்டு வருஷங்களுக்குள் கெட்டுவிடுவதால் இதைச் செய்கின்ற

கண்ட்ராக்டர்களிடத்தில் இத்தனை வருஷத்திற்குள்ளாக இந்தக் கட்டடத்திற்கு பழுது ஏற்பட்டால் அவரிடத்தில் அதற்கான நஷ்ட ஈட்டை வசூலிக்கும் நிலைமையை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக எல்லாக் கட்டடங்களும் அவ்வாறு பழுது பார்க்கவேண்டிய நிலை உடனடியாக ஏற்படுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு விதிகள் இருக்கின்றன. கண்டிராக்டர் செய்வதில் தவறு ஏற்பட்டால் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. வீ. ராமநாதன் :** ஸார், நாட்டிலே உள்ள நெருக்கடி நிலை காரணமாக புதிதாக கட்டப்பட இருக்கிற பஞ்சாயத்து யூனியன் கூட்டுமன்ற கட்டடங்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்படுகின்றனதா ? அந்த முறையில் குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் பஞ்சாயத்து யூனியன் கட்டடம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது பார்த்துச் செய்யப்படும். இனி தொடங்க வேண்டிய கட்டடங்கள் இப்போதைய நெருக்கடி நிலையை ஒட்டி நிறுத்தப்பட்டுத்தான் இருக்கின்றன.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, ஆவுடையார்கோயில் பஞ்சாயத்து யூனியன் கட்டடம் மழை வந்த நேரத்தில் பழுது பார்க்கப்பட்டது என்று சொன்னார்கள். கட்டடம் கட்டி எவ்வளவு நாட்களில் பழுது ஏற்பட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 1961-ம் ஆண்டு கட்டியது. அதற்கப்புறம் அடைமழை பெய்தது. பழுது பார்க்க வேண்டிய நிலை பின்னால் ஏற்பட்டது என்று சொன்னேன்.

### அரசாங்க பாடப் புத்தகக் குழு

* கேள்வி. 461.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க பாடப்புத்தகக் குழு (**Government Text-book Committee**) அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களை மீண்டும் தணிக்கை செய்ய அரசாங்கத்திற்கு என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பாடப் புத்தகக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள் சிலவற்றில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே இவ்விஷயமாக அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### *Approved text-books*

* 462 Q.—SRI A. K. SUBBIAH (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to place on the Table of the House a list of books ordered to be deleted from the approved list of text-books, for reasons of National Integration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The approval of the book "Nalum Irandum" has been cancelled by the Director of Public Instruction.

9-30 a.m. **திரு. ஆ. கு. சுப்பையா :** அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களைத் தணிக்கை செய்யும்போது, அவற்றில் ஆட்சேபகரமான விஷயங்கள் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். யார் எழுதிய புத்தகம் அவ்வாறு இருந்தது ? அந்தப் புத்தகத்தின் பெயர் என்ன ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "நாலும் இரண்டும்" என்ற புத்தகத்திற்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று நான் சொன்னேன். மற்ற விவரங்களுக்கு எல்லாம் தனியாகக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

### *Co-operative Printing Presses*

* 462-A. Q.—K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the steps taken for setting up Co-operative Printing Presses at Ramanathapuram and Kanyakumari?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ராமநாதபுரம் ஜில்லா காரைக்குடியில் ஒரு கூட்டுறவு அச்சகம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சகத்தைப் பதிவு செய்வதற்கு கூட்டுறவு பதிவாளர் சிவகங்கை கூட்டுறவு துணைப் பதிவளாருக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்.

கன்னியாகுமரி ஜில்லாவில் தக்கலையில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதி ஒரு கூட்டுறவு அச்சகம் தொடங்கப்பட்டுள்ளது.

### *Labour contract societies*

* 462-B. Q.—SRI K. NARAYANASWAMI PILLAI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to organize Labour Contract Societies in the district to solve the unemployment problem?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இம்மாநிலத்தில் தற்சமயம் எழுபத்தியொன்று ஆரம்பக் கூட்டுறவு தொழில் ஒப்பந்த சங்கங்களும், கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு ஜில்லா கூட்டுறவு தொழில் ஒப்பந்த சங்கமும் இருக்கின்றன. வாய்ப்பும், தொழிலாளர்களின் ஆதரவும் எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் ஆரம்ப சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

### நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கம் (ராஜபாளையம்)

* 462-C. கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ராஜபாளையம் துரைச்சாமிபுரம், நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில், ஊழல்கள், மோசடிகள் இருப்பதாக சர்க்காருக்கு புகார் வந்ததா ?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) ஆம்.

(இ) இந்த புகார் மனு விசாரிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்தப் புகார் இரண்டு வருஷ காலமாக இருந்துகொண்டிருக்கிறது. எப்பொழுது விசாரணை முடிவடையும் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** விதிகளின்படி தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்ற எதுவும் இந்த சமயத்தில் நான் சொல்வதற்கில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கூட்டுறவு சங்கங்களைப்பற்றிப் பல புகார்கள் இப்படி வருகின்றன. வளரவேண்டிய இயக்கம் இப்படி நடந்து

வருகிறது. ஒரு தடவை டைரக்டராக இருந்தவர் அடுத்த தடவையும் வரலாமா வரக்கூடாதா என்பதைப்பற்றி ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப் படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** இதற்குக் கமிட்டி தேவை இல்லை. இரண்டு வருஷங்களுக்கு முன்பே அசெம்பிளியில் அதற்காகச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் விதிகள் தயாரிக்கப்படுகின்றன. அதுவும் கூடிய சீக்கிரம் வந்துவிடும்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கூட்டுறவு இலாகாவில் வருகிற புகார்களைத் தாமதப்படுத்திப் பரிசீலிப்பதால், புகார்களின் வேகம் குன்றிந்து போய்விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட புகார்களை ஓராண்டுக்குள்ளேயே அவசரமாக இன்வெஸ்டிகேஷன் செய்து, முடிவைத் தெரிவிக்க அரசாங் கம் முயற்சி எடுக்குமா ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தப் போன்ற முயற்சிகள்தான் இப்பொழுது தீவிரமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

*Admission in Colleges*

* 462-*D*. *Q*.—SRI A. ARUMUGAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) how many students sought admission in the Pre-University Classes in the year 1962–63;

(*b*) how many of them were admitted;

(*c*) whether the Government propose to open more Arts and Science colleges in 1963–64 to cope with the increasing number of students seeking admission for Pre-University classes; and

(*d*) if so, whether an Arts and Science College will be started at Tiruvannamalai under the public sector?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The particulars are not readily available. The time and labour involved in collecting the particulars from each and every college will not be commensurate with the result that may be achieved.

(*b*) 22,243 students were admitted in the Pre-University classes in all the colleges in Madras State during 1962–63.

(*c*) & (*d*) The Government propose to open one Arts College in 1963–64 and this will be opened under their management at Kumbakonam for women.

*Government Officials (transfer)*

* 462-E *Q*.—SRI A. ARUMUGAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is a rule which requires that no Government Officers should be retained in a particular station for more than three years;

(*b*) whether such rule applies to City Magistrates; and

(*c*) how many City Magistrates have been retained in the same court for more than three years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.



(*c*) Two Presidency Magistrates have been retained in the same court for more than three years.

*Rise in prices of certain commodities*

* 462-F *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government are aware of the undue rise in the prices of certain commodities after the publication of the Central Government's Budget; and

(*b*) what steps have been taken to check this rise in prices?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement [a] showing the prices of certain commodities before and after the Central Government's Budget is placed on the Table of the House. The prices of certain articles like kerosene, firewood, petrol, diesel oil, cigarettes and a few other luxury articles like cars have increased after the publication of the Central Budget.

(*b*) The rise in prices is not such as to warrant action at this stage. The Government would however keep a watch over the situation.

**திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, பிப்ரவரி மாதத்தைவிட மார்ச் மாதத்தில் விலை ஏறியிருப்பதாகப் பட்டியலில் காணப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன ? விலை ஏற்றத்தைத் தடுக்க, பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விலை வாசியைப் பற்றி ஒரு மாதத் திய புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்புச் சட்டத் தின்கீழோ, வேறு சட்டத்தின்கீழோ நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு விலை உயரவில்லை என்றுதான் நான் கூறினேன்.

*Madras Pay Commission*

* 462-G *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that some of the accepted recommendations of the Madras Pay Commission have not yet been implemented;

(*b*) if so, the reasons for this abnormal delay;

(*c*) what are those recommendations; and

(*d*) when the final orders are likely to be issued?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) As far as Government are aware, all the recommendations of the Pay Commission accepted by Government have been implemented.

(*b*) to (*d*) The questions do not arise.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

---

a Prited as Appendix III on pages 335.

[30th March 1963

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CALLING ATTENTION TO THE THEFT, DACOITY, ETC., AT TINDIVANAM.

**திரு. ஆ. தங்கவேலு:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனத்தில் இம்மாதம் 6-ம் தேதியும் 12-ந்தேதியும் நடந்த திருட்டும் கூட்டுக்கொள்ளையும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* THE HON. SRI ,M. BHAKTAVATSALAM: Mr. Speaker Sir, I would like to make the following statement under rule 41 of the Assembly Rules :—

9-30 a.m. At 11-30 a.m. on 8th March 1963, Sri V. R. Sethumadeva Chettiar of Tindivanam, reported at the Police station that on the night of 6th March somebody committed theft of hardware articles such as iron pipes and locks to the value of Rs. 350 from his shop in the Bazaar street. This was registered as Crime No. 35 of 1963 under sections 457 and 380, Indian Penal Code. Accused K. D. Arumugam, son of Angappa Mudaliar, Viyasarpadi, Madras G-3 Police line, was arrested and the properties recovered in Pallavaram station Crime No. 180 of 1963 under sections 54 and 550, Criminal Procedure Code, on the 10th. Case is under investigation.

On 13th March 1963, a report was received at 2-30 a.m. from one Pakkirisamy, Kaliamman Koil street, Tindivanam at the station that three persons entered the house of Ragava Mudaliar on the night of 12th March for committing theft. The inmates woke up and when they tried to catch them, they escaped. This was registered as Crime No. 40 of 1963 under section 457, Indian Penal Code, and is under investigation.

There is no serious situation in Tindivanam town. Intensive patrolling both day and night is being made and there is no crime in the bazaar area since 6th.

## III.—STATEMENT *re*: GRANT OF ENHANCED REBATE FOR HANDLOOM CLOTH BY KERALA GOVERNMENT.

MR. SPEAKER: The Hon. Minister for Industries will make a statement under rule 82 of the Assembly Rules.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, I would like to make the following statement under rule 82 of the Assembly Rules :—

It was stated by the Leader of the Opposition in this House that the Kerala Government has given a rebate of 15 nP. while in this State only 10 nP. were given as rebate during the Sales Promotion Campaign in March 1963 undertaken for clearance of stocks. In reply I stated that it may not be so. I have now ascertained the correct facts which are as follows :—

The Government of India normally allow an additional rebate of 5 nP. for two weeks in the year. This was availed of in



30th March 1963] [Sri R. Venkataraman]

this State for Deepavali week and for Pongal week. In Kerala they availed themselves of this additional rebate for the Onam week and one week in March every year.

When the special additional rebate of 5 nP. for clearance of accumulated stocks was sanctioned in March this year, the Kerala Government gave rebate at 10 nP. for 1st and 2nd March 1963 and at the rate of 15 nP. (adding the normal additional rebate for one week) for the period 3rd to 11th March and thereafter they, again, granted rebate at the rate 10 nP. upto 15th March 1963.

As in this State additional rebate of 5 nP. for two weeks have already been availed of during Deepavali and Pongal weeks, rebate at 10 nP. (ordinary 5 plus special additional rebate of 5 nP.) alone was granted from 1st March 1963, but it has been continued up to 31st March 1963, i.e., for two weeks longer than in Kerala to help clear accumulated stocks.

This is only to correct the record.

## IV.—ANNOUNCEMENTS.

### (1) NOMINATION TO THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER: Under rule 193 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following members to be Members of the Business Advisory Committee :—

1. Sri K. Parthasarathy.
2. The Hon. Sri M. Bhaktavatsalam.
3. The Hon. Sri V. Ramaiah.
4. The Hon. Sri P. Kakkan.
5. Sri P. Ramachandran.
6. Sri V. R. Nedunchezhiyan.
7. Sri Saw. Ganesan.
8. Sri M. Kalyanasundaram.
9. Sri K. R. Nallasivam.
10. Sri T. P. Elumalai.

The Speaker is the ex-officio Chairman of the Committee.

### (2) NOMINATION TO THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER: Under rule 201 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Assembly to be members of the Committee on Subordinate Legislation for the year 1963-64 :—

1. Sri K. Parthasarathy.
2. Srimathi T. N. Anandanayaki.
3. Sri V. Sankaran.

[Mr. Speaker.] [30th March 1963

4. Sri N. Shanmugasundaram.
5. Sri C. Srinivasan.
6. Sri G. Venkataraman.
7. Srimathi A. Suares.
8. Sri M. V. Karivengadam.
9. Sri S. Madhavan.
10. Sri K. Mookiah Thevar.

Under rule 202 of the said rules, I nominate Sri K. Parthasarathy, Deputy Speaker, to be the Chairman of the Committee.

(3) NOMINATION TO THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

MR. SPEAKER : Under rule 214 (1) of the Madras Legislative Assembly Rules, I hereby nominate the following Members of the Assembly to be members of the Committee on Government Assurances for the year 1963–64 :—

1. Sri A. Kunjan Nadar.
2. Srimathi P. K. R. Lakshmikantham.
3 Sri A. S. Dakshinamoorthy Gounder.
4 Sri N. Sountharapandian.
5 Sri A. Arumugam.
6 Sri Rama Arangannal.
7 Sri A. Raghava Reddi.

Under rule 215 (1) of the said rules, I nominate Sri A. Kunjan Nadar to be the Chairman of the Committee.

(4) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1963. (L.A. BILL NO. 8 OF 1963).

(5) THE MADRAS APPROPRIATION (NO. 3 ) BILL, 1963 (L.A. BILL NO. 9 OF 1963)

MR. SPEAKER : I have also to announce that the following two Bills have been passed by the Legislative Council without any recommendation :—

1. The Madras Appropriation (No. 2) Bill, 1963 (L.A. Bill No. 8 of 1963).
2. The Madras Appropriation (No. 3), Bill, 1963 (L.A. Bill No. 9 of 1963).

## V.—PRESENTATION OF REPORTS.

(1) REPORT OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I present to the House the Fourth Report (Third Assembly) of the Committee on Subordinate Legislation.



30th March 1963]

(2) REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES (DINA THANTHI CASE).

SRI K. PARTHASARATHY : Mr. Speaker, Sir, I present to the House the Report of the Committee of Privileges on the ' Dina Thanthi Case '.

(3) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI T. M. NALLASAMY : Mr. Speaker, Sir, I present to the House for Report of the Committee on Estimates on Jails and other allied Departments.

(4) REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI RAMA ARANGANNAL : Mr. Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Government Assurances, I present to the House the Second Report (Third Assembly) of the Committee on Government Assurances.

## VI.—NON-OFFICIAL BUSINESS.

### *Bills.*

(1) THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) SECOND AMENDMENT BILL, 1962 (L.A. BILL NO. 19 OF 1962.)

SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, I move—

' That the Madras Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1962 (L.A. Bill No. 19 of 1962), be taken into consideration '.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் முக்கிய நோக்கம், குடியிருப்புக்காக அல்லாமல் தொழில்களுக்காக விடப்படுகிற வாடகைக் கட்டடங்களுக்கு வாடகை 400 ரூபாய்க்கு மேல் இருக்குமானால் அரசாங்கம் லீஸ் அண்டு ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்திலிருந்து விதி விலக்குத் தரவேண்டுமென்பதற்காகத்தான், 1960–க்கு முன்பு, அரசாங்கம் விருப்பப்பட்டால் குடியிருப்புக் கட்டடங்களுக்கு விதி விலக்கு கொடுக்கலாம் என்று இருந்தது. 1960–ம் ஆண்டில் இந்தச் சட்டத்தைப் புனராலோசனை செய்து திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது செக்ஷன் 30–ல் மூன்று விதமான கட்டடங்களுக்கு விதிவிலக்குத் தந்து, கட்டடச் சொந்தக்காரர்களுக்கு உற்சாகத்தைத் தரவேண்டுமென்ற காரணத்தாலே 1960–க்குப் பிறகு கட்டப்பட்ட கட்டடங்களில் குடியிருப்புக் கட்டடங்களுக்கு 250 ரூபாய் வாடகையும், தொழில் நிறுவனங்கள் இருக்கும் கட்டடங்களுக்கு 400 ரூபாய் வாடகையும் இருந்தால், அந்தக் கட்டடங்களுக்கு விதி விலக்கு தரப்பட்டது. இப்போது நடைமுறையில் பல தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. குடியிருப்புக் கட்டடங்களில் மொத்தமாக ஒருவரிடமிருந்து 250 ரூபாய் வாடகை வருவதாக இருந்தால் விதிவிலக்கு கொடுக்கலாம். சில வீடுகளில் 10, 20 ரூபாய் வாடகை கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மொத்தத்தில் அந்த வீட்டிலிருந்து 250 ரூபாய் வரை வாடகை வரும். அந்த மாதிரி வீடுகளுக்கு விதிவிலக்குக் கொடுப்பதன் காரணமாக பல சிறு குடித்தனக்காரர்கள் காலி செய்யப்படும்படியான நிலைமை இருக்கிறது. ஆகவே, 250 ரூபாய் வாடகையும் ஒரே ஒரு குடித்தனக்காரர் கொடுத்தால்தான் அதற்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். அதை அரசாங்கம் அப்போதே எடுத்துக்கொள்ளாமல் பின்னாலே யோசித்துப் பார்த்து, தொல்லைகள் இருக்கிறதென்ற காரணத்தினாலே திருத்தி அமைத்திருக்கிறார்கள். அந்த முறையில் தொழில் நிறு-

வனங்கள் இருக்கும் இடங்களைப் பொறுத்த வரையிலும் தொல்லைகள் ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு ஹோட்டல் தொழிலை எடுத்துக் கொண்டால், அந்தக் கட்டடத்திற்கு 401 ரூபாய் வாடகை கொடுத்தால், 'ஆயிரம் ரூபாய் வாடகை கொடுத்தால் கொடு, இல்லாவிட்டால் காலி செய்' என்று கூறுகிறார்கள். அதைத் தடுக்க முடியாத அளவுக்கு அவர்களுக்கு இப்போது ரெண்ட் கண்ட்ரோல் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கேட்கிற வாடகை நியாயமாய் இருக்கிறதா ? ஃபேர் ரெண்ட் கண்ட்ரோல் கோர்ட்டுக்குப் போகலாம் என்றால் அதற்குக்கூட வழி இல்லாமல் 401 ரூபாய் வாடகை கொடுத்தால் அந்தக் கட்டடத்திற்கு இந்தச் சட்டம் அமல் நடத்தப்படமாட்டாது. இதை முன்னிட்டுத்தான் சில ஹோட்டல் தொழிலாளர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். திடீரென்று ஹோட்டலை மூடிவிட்டால் முதலாளிகளைக் காட்டிலும் தொழிலாளர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். நடைமுறையில் இருக்கின்ற கஷ்டத்தைப் போக்குவதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய திருத்த மசோதாவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமோ, என்னவோ தெரியாது. நடைமுறையில் இருக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லவேண்டுமென்ற காரணத்தினால்தான் இதை எடுத்துச் சொல்கிறேன். முன்னர், பல குடித்தனக்காரர்களிடமிருந்து மொத்தம் 250 ரூபாய் வாடகை வரக் கூடிய வீடுகளுக்கு விதிவிலக்கை நீக்கி ஒரே குடித்தனக்காரரிடமிருந்து 250 ரூபாய் வாடகை வாங்குவதாக இருக்க வேண்டுமென்று அரசாங்கம் மாற்ற முன்வந்ததற்காக சென்னை மக்கள் அத்தனைபேரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறோம். பெரிய மனதோடு அதே மாதிரி இப்போதும் தொழில் நிறுவனங்கள் இருக்கும் கட்டடங்களைப் பொறுத்த வரையில் நான் கொடுத்திருக்கும் திருத்தத்தின்படி அந்தச் சட்டத்தைத் திருத்த முயற்சித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக அரசாங்கமானது, நான்-அபிஷியல் திருத்தங்களை ஏற்றுக் கொள்வதில்லை. இதை வைத்துக்கொண்டு அரசாங்கமே ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தாலும் ஏற்றுக்கொள்ளத் தயார். எந்த மாவாக இருந்தாலும் பணியாரம் வேக வேண்டும். இதை மனத்தில் வைத்து அரசாங்கமே ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். 1960-ல் தான் சில திருத்தங்களைக் கொண்டுவந்தோம். மீண்டும் அதற்குள் திருத்தங்களைக் கொண்டுவருவதா என்று யோசிப்பார்களானால், முக்கியமாக எஸன்ஷியல் இண்டஸ்ட்ரிசுக்காவது விதி விலக்கு கொடுக்க முயற்சித்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும். நானூறு ரூபாய்க்கு மேல் வாடகை கொடுத்து ஹோட்டல் தொழில் மட்டுமல்லாமல் பல இடங்களில் சிறு தொழில்களை நடத்தி வருகிறார்கள். அவர்களை எல்லாம் காலி செய்ய வேண்டுமென்று சொன்ன காரணத்தினால், அவர்கள் கோர்ட்டில் மனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். பல மனுக்கள் பைசலாகாமல் நின்றுகொண்டிருக்கின்றன. தொழிலாளர் நன்மையைக் கருதியாவது, 400 ரூபாய்க்கு மேல் வாடகை வரும் கட்டடங்களுக்கு விதி விலக்குக் கொடுக்காமல், சட்டத்திற்கு உட்பட்டு வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிக்கும் வகையில் இதனை சட்டத்திற்கு உட்பட்டதாகச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு இந்தத் திருத்த மசோதாவை நான் சபையின் முன் கொண்டு வருகிறேன்.

MR. SPEAKER: May I know whether anybody seconds the motion? If not, it will fall through.

SRI R. V. SWAMINATHAN: Mr. Speaker, I second it.

SRI K. A. MATHIALAGAN: I suggest, Sir, that it may be accepted.



MR. SPEAKER: Motion moved—

"That the Madras Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1962 (L.A. Bill No. 19 of 1962) be taken into consideration."

MR. SPEAKER: Does any hon. Member want to speak on the Bill? The Hon. Minister for Finance may reply.

*கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த மசோதாவை ரொம்பப் பரிசீலனை செய்து இந்த மன்றத்திலே சமர்ப்பித்தார்கள். அவர் வழக்கறிஞர். வழக்கறிஞர் என்று சொல்வதற்காகக் கோபித்துக்கொள்ளக் கூடாது. இந்த மசோதாவை ஆமோதிப்பதற்குப் பல பேர் நான், நீ என்று வந்தார்கள். முக்கியமாக நான் பாராட்டுவது கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்களைத்தான். அவர்கள் உடனடியாக எழுந்து இந்த மசோதாவை ஆமோதித்தார்கள். ஆனால், இம்மாதிரித் திருத்த மசோதாக்களை எல்லாம் அரசாங்கம் கொண்டுவர வேண்டுமே தவிர, தனிப்பட்ட நபர் கொண்டுவருவதைச் சாதாரணமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களே உணர்ந்து குறிப்பிட்டார். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இதே மன்றத்திலே சென்ற ஏப்ரல் மாதத்தில்தான் நாம் ஒரு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினோம். அது கழிந்து இன்னும் ஒரு வருடம் கூட ஆகவில்லை. அப்போது எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் ஓரளவு குடியிருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும், அதனால் பாதகம் ஏற்படுகிறது என்று விதிவிலக்கு அளித்திருக்கிறோம். மேலும் ஒரு ஆண்டுக்குள்ளாக வேறு வேறு புதிய புதிய திருத்தங்களைக் கொண்டுவருவது ஒரு சட்டத்திற்கு நல்லதல்ல. இந்தச் சட்டம் தற்காலிகமான சட்டம் என்று அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஹோட்டல் போன்ற தொழில் வைத்திருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். ரூபாய் 400-க்கு மேற்பட்டவர்களுக்குத்தான் இந்தச் சங்கடங்கள் இருக்கலாம். இருந்தாலும் உடனடியாகத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், வேறு சில சங்கடங்கள் ஏற்படலாம். முன்பு ஆரம்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டன. எல்லாவற்றையும் பரிசீலனை செய்துதான் ஏப்ரல் மாதம் நிறைவேற்றிய சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்திருக்கிறோம். மேலும் கவனிக்க வேண்டுமென்றால் அதை அரசாங்கத்திற்கு விட்டுவிட வேண்டும். அரசாங்கம்கூட உடனடியாக ஒரு திருத்தத்தைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்க வேண்டாமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அரசாங்கம் பரிசீலனை செய்து ஏதாவது செய்ய வேண்டுமா என்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். ஆக, கனம் அங்கத்தினர் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு இதைத் தயாரித்திருப்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன் என்றாலும், மற்றவர்கள் இதை ஆதரிக்கிறார்கள் என்றாலும் இந்த மசோதாவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் இதை வற்புறுத்த வேண்டாம், வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் இந்தக் கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் செய்ய வேண்டியதை பின்னால் செய்யும் என்று அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு நான் என் திருத்த மசோதாவை வற்புறுத்தாமல் விட்டுவிடுகிறேன்.

MR. SPEAKER: So the hon. Lady Member has given up her supporters.

The motion was, by leave, withdrawn.

[30th March 1963

(2) THE MADRAS UNIVERSITY (AMENDMENT BILL, 1962, (L.A. BILL NO. 20 OF 1962).

SRI RAMA ARANGANNAL: Mr. Speaker, Sir, I move—

"That the Madras University (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 20 of 1962) be taken into consideration."

**திரு. மு. கருணாநிதி:** திரு. அரங்கண்ணல் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இம்மசோதாவை நான் வழிமொழிகிறேன்.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras University (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 20 of 1962) be taken into consideration."

**திரு. இராம. அரங்கண்ணல்:** இத் திருத்த மசோதாவைக் கொண்டுவருவதற்கான நோக்கங்களை நான் இதிலே குறிப்பிட்டிருக்கிறேன். இத்திருத்த மசோதாவை நான் கொடுத்திருப்பதற்குக் காரணம் இன்றையதினம் ஜனநாயக உணர்வை வளர்க்க வேண்டும் என்பதிலும், அந்த உணர்வைக் கட்டிக் காக்க வேண்டும் என்பதிலும், அந்த ஜனநாயக உணர்வு எதிர்கால பரம்பரைக்கு நல்ல முறையில் நீடிக்க வேண்டும் என்பதிலும் நம் சபை முதல்வர் அவர்களும், அவரைப் போன்ற வயது முதிர்ந்த அரசியல் வாதிகளும் இன்றையதினம் மிகமிகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றையதினம் சென்னைப் பல்கலைக் கழக சட்டத்தை எடுத்துப் பார்த்தால், அங்கு சட்டமன்ற அங்கத்தினர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த முறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், நாம் யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று சாதாரண சட்டமன்றத்தில் பல நிலைக் குழுக்களுக்கும் நாம் பிரதிநிதித்துவம் வழங்க ஒரு முறையான, செம்மையான கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறோம். விகிதாசாரப் பிரதிநிதித்துவ ஒற்றை மாற்று வோட்டு முறை மூலம் நாம் குழுக்களுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறோம். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும் எதிர்க் கட்சியைச்சார்ந்தவர்களும் கூடி அமர்ந்து பேசி அதற்கான சில முடிவுகளை சில சமயங்களில் சமரசம் செய்து கொள்கிறார்கள். சென்னை பல்கலைக் கழக சட்டத்தில் இந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், வழங்கப்படவில்லை. செனட்டுக்குப் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களுக்கு ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், சட்டமன்றத்தில் இருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டியவர்களுக்கு அந்த ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் வழங்கப்படவில்லை. ஜனநாயகத்தில் இந்த ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் முறை இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதைச் சபை முதல்வர் அவர்களுக்கும், ஆளும் கட்சியினருக்கும் நான் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே. எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வரும் முறையில் இந்தச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் என் கோரிக்கை. இது சாதாரண கோரிக்கை. இது சபை முதல்வர் அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய கோரிக்கை. நம் இந்திய உப-கண்டத்தில் சென்னை பல்கலைக் கழகம் ஒன்றில்தான் இந்த ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லையே தவிர, அருகில் உள்ள ஆந்திரா பல்கலைக்கழகத்திலும் சரி, கேரளா பல்கலைக் கழகத்திலும் சரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் சரி, எங்கும் இந்த ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இத்தனை நாளும் இப்படி வழங்காமல், வேறு ஏதோ காரணத்தால் வைத்துக் கொண்டிருந்தாலும் இனிமேலாவது இந்த முறையைத் திருத்துவதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இம்மசோதாவை நான் கொண்டு வரக் காரணம் கடந்த முறை செனட் தேர்தல் நடந்தபோது என் கட்சியைத் சார்ந்த தலைவர்களும், உறுப்பினர்களும் சிறையில் இருந்தார்கள். அந்நேரத்தில் செனட் உறுப்பினர் தேர்வு வந்தது.



30th March 1963] [திரு. இராம. அரங்கண்ணல்]

அப்படி வந்த நேரத்தில் வெளியில் இருந்த நான் ஆளும் கட்சிக் கொறடா அவர்களையும், மதிப்பிற்குரிய சபை முதல்வர் அவர்களையும் பார்த்து எங்களுக்கு வழக்கம்போல் ஏதாவது தருவதற்கு உத்தேசம் உண்டா என்று கேட்டேன். ஏனெனில் ப்ரபோர்ஷனல் ரெப்ரசென்டேஷன்படி நிலைக்குழுக்களுக்கு நாம் அங்கத்தினர்களை எடுத்து நல்லதொரு முறையை ஏற்படுத்தி அமுல் படுத்திவருகிறோம். அப்போது முடிவு எடுப்பதற்கான போதிய அவகாசம் இல்லை என்று முதல்வர் கூறினார்கள். அதனால் எங்கள் கட்சியைச் சார்ந்த யாரும் செனட்டில் அமர வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதன் பிறகு நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்த நேரத்தில் அவர்கள் மிகமிகப் பெருந்தன்மையோடு இப்போது வேண்டுமானால்கூட பிரதிநிதித்துவம் தர நான் தயாராயிருக்கிறேன் என்று சொன்னார்கள். அவர்கள் கண்ணிய உணர்ச்சியையும், ஜனநாயக உணர்வையும் யாருமே பாராட்டுவார்கள். அந்த ஜனநாயக உணர்வு வளர வேண்டுமென்பதற்காகவே இத்திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். சாதாரணமாக நான்-அபிஷியல் மசோதாக்களை ஏற்றுக்கொள்வதில்லை என்ற பரம்பரை இருக்கிறது என்று சொன்னார்கள். நாம் நல்ல மரபுகளை உண்டாக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். எதிர்க் கட்சியினர் நல்ல காரியங்களைச் சொன்னால், நல்ல கருத்துக்களைச் சொன்னால், அவற்றை ஒப்புக்கொள்கிற தன்மை தமிழக மாநில ஆளும் கட்சியினருக்கு உண்டு என்பதை நாம் நிரூபித்து இந்திய உபகண்டத்திற்கு எடுத்துக் காட்ட வேண்டும். அதற்கு முதல்வர் அவர்கள் எடுத்துக் காட்டாக இருக்கலாம். இது இங்குள்ள அத்தனை பேர்களுக்கும் உரிமை அளிக்கும் மசோதா. இன்றையதினம் எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் ஒரு காலத்தில் ஆளும் கட்சியாக வரலாம். இன்று ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அப்போது எதிர்க்கட்சியாக வரும்போது அக்கட்சிக்குக்கூட நாளையதினம் பாதுகாப்பு தரும் இம்மசோதா. ஆகவே, இம்மசோதாவை ஏற்றுக்கொள்ளுமாறு சபையைக் கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை வழங்க நான் விரும்புகிறேன். இந்த மன்றத்திலிருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் வேறுபாடு இருக்கிறது. அந்த முறை ஒரே முறையாக இம்மன்றத்திலுள்ள எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய முறையாக இருந்தால் அது நன்றாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இந்தத் திருத்த மசோதா இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இந்த மன்றத்திலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய முறை ஒற்றை மாற்று வோட்டு முறையாக இருப்பதால் இம்மன்றத்தில் உள்ள அரசியல் கட்சியினர் அத்தனை பேர்களும் அதில் ஈடுபட்டு தங்கள் தங்கள் கருத்துக்களை செனட் மன்றத்தில் எடுத்து வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த மன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இம்மன்ற உறுப்பினர்களைக்கொண்டு செயல்படுகிற—பல செயல்களை உருவாக்குவதற்கு அமைக்கப்படுகிற—குழுக்களுக்கு நாம் ஒற்றை மாற்று வோட்டு முறையை வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் எந்தக் குழு அமைக்கப்பட்டாலும், அது மதிப்பீட்டுக் குழுவாயிருந்தாலும் சரி, பொதுக் கணக்குக் குழுவாயிருந்தாலும் சரி அல்லது எந்தக் குழுவாக இருந்தாலும், அம்முறை கடைப்பிடிக்கப்பட்டால், எல்லா அரசியல் கட்சிகளுக்கும் அதில் இடம் பெற வாய்ப்பு இருக்கிறது. அம்முறை நல்ல மரபை, கண்ணியத்தை நிலைநாட்ட வாய்ப்பளிக்கிறது. அந்த முறையிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கூட இரு தரப்பினரையும் அனுப்பி வைக்கக்கூடிய நிலைமை இருந்தது. சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அவ்வாறு அனுப்பி வைக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் சட்டத்தில் இருக்கும் குறைபாடு. என்ன காரணத்தினாலோ குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்கும் வகையில் இந்தத் திருத்த மசோதாவைக் கனம்

அங்கத்தினர் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் கொண்டுவந்துள்ளார்கள். இதிலே ஆளும் கட்சியினருக்குக் கருத்து வேறுபாடோ, மாறுபாடோ, முரண்பாடோ இருக்க வழியில்லை. ஆளும் கட்சியினர் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதிலும் ஐயப்பாடு இல்லை. மற்றைய பல குழுக்களுக்குத்
10-00 a.m. தேர்ந்தெடுக்கும் வகையிலே இதுவும் அமைக்கப்பட வேண்டும். எதிர்க் கட்சியினர் கொண்டுவரும் எல்லாவற்றையும் மறுத்துவிட வேண்டும் என்ற மரபு நிலவாமல், நல்லவைகளாக இருந்தால் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதிலே தகராறுக்கோ, மாச்சரியங்களுக்கோ இடம் இல்லாத காரணத்தால், எதிர்க்கட்சிக்கும் மதிப்பளித்தோம், அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தை ஏற்றுக்கொண்டோம் என்ற முறையில் இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றப்படுமானால், இந்த அவையின் கண்ணியமும், இந்த அவையின் மரபும் மிக நல்ல முறையில் காப்பாற்றப்படுவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும். கருத்து வேறுபாடு எள்ளளவும் இல்லாத அடிப்படையிலுள்ள இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சபை முதல்வர் அவர்களையும், மன்ற கனம் உறுப்பினர்களையும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஜனநாயக மரபைக் காப்பாற்றுவதற்காக **Proportional Representation** வேண்டுமென்று இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்ததாக திரு. அரங்கண்ணல் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இருக்கின்ற முறை ஜனநாயக முறையைக் காப்பாற்றத்தான் வந்தது. இதற்கு முன்னாலே **Single Transferable Vote** அமைப்பு இருந்தது. எதிர்க் கட்சியில் இருக்கிறவர்கள் அவர்களாக சிறையில் மாட்டிக்கொண்டால் நாம் என்ன செய்வது ? அவர்கள் அதைப்புரிந்து கொள்ள வேண்டும். இதுவரை இருந்த முறையே இருந்து வரட்டும். எப்போதும் போல் அந்தந்தக் கட்சிக்கு ஒருவர் இருவராகக் கொடுத்துவந்த முறையிலேயே இருப்பதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன். ஜனநாயக முறையை இவர்கள்தான் காப்பாற்றப்போவது மாதிரி இந்த முறையை மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் இங்கு வெளியிலே இல்லாத காரணத்தால்தான் இந்த நிலைமை ஏற்பட்டதே தவிர வேறு இல்லை. ஆகவே ஏற்கனவே உள்ள முறையை மாற்றி அமைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த முறையிலே ஏற்பட்டிருக்கின்றவைகளுக்கும், சிறைக்கு நாங்கள் சென்றதற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. அப்போதும் வெளியிலே சில பேர் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட்டுவிட்டால்கூட மற்ற அரசியல் கட்சியினர் இங்கு இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சில பேர் இங்கு சிறைக்குச் செல்லாமல் இருந்தார்கள். இந்த முறைக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. எல்லா வகையிலும் ஒரே முறை கையாளப்பட வேண்டுமென்ற காரணமாகத்தான் இந்த மசோதாவை வற்புறுத்துகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, தனிப்பட்ட உறுப்பினர்கள் கொண்டுவருகிற மசோதாவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது இல்லை என்ற கருத்து இந்த அரசாங்கத்திடம் இல்லை. அவ்வாறு எப்போதும் நினைக்கவில்லை. நான் குறிப்பிட்டதெல்லாம், குறிப்பிட்ட சட்டங்களுக்கு அப்போதைக்கப்போது துண்டு துண்டாகத் திருத்தம் கொண்டுவருவது நல்லதல்ல என்பதுதான். தனிப்பட்ட உறுப்பினர்களால் மசோதா கொண்டுவரப்பட்டு, இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது. அதிலே இருதார தடைச் சட்டம் ஒன்று. அது தனிப்பட்ட ஒருவரால் கொண்டுவரப்பட்டது. இந்த மன்றம் அதைச் சட்டமாக்கியது. மேல் சபையில் இருக்கும் உறுப்பினர், எதிர்க் கட்சியைச் சார்ந்தவரால் **Preservation of Open Spaces Act** கொண்டுவரப்பட்டு இந்த மன்றத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இரண்டு பார்லிமெண்ட் சபையிலும் தனிப்பட்டோர் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் சட்டம்



கொண்டுவரவே கூடாது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். தனிப்பட்ட உறுப்பினர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் சட்ட விஷயத்தில் கவனம் செலுத்தி மசோதா தயாரிப்பதற்குத் தடையாக ஒரு கருத்து ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிடுகிறேன். இரண்டாவதாக கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் கொண்டுவந்த திருத்த மசோதாவிலே உள்ளடங்கி இருக்கும் கருத்துக்களுக்கு ஆட்சேபனை இல்லை. மேலும் இப்போது இருக்கிற மாறுபாடு **Distributive Voting System** என்றாலும் காங்கிரஸ் கட்சியே இதிலே வரவேண்டுமென்ற எண்ணமும் இல்லை. வேறு கட்சிகளும் வரலாம். அவ்வாறு **Distributive Voting** முறையிலும் வேறு கட்சியினர்களுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கூறியது போல சட்டமன்றக் கூட்டம் நடக்காத நிலையில் **Notification** வந்தது. குறிப்பிட்ட தேதிக்குள் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் தேதிவரை காத்திருக்க முடியாது. வெளியூர்களில் இருக்கிறவர்களுக்கெல்லாம் அனுப்பி கையெழுத்து வாங்கி அனுப்ப வேண்டும். அதற்கு முன்பு யாரும் வந்து நாங்கள் எதிர்க் கட்சியில் வருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று என்னிடமும் தெரிவிக்கவில்லை. முதல் அமைச்சர் அவர்களிடமும் தெரிவிக்கவில்லை. அந்த நிலையிலே எல்லாம் காங்கிரஸ் கட்சி அங்கத்தினராகப் போடப்பட்டனர். கனம் அங்கத்தினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் என்னிடம் வந்து இதைப்பற்றிக் கேட்டார்கள். அவர்கள் வந்தது **bitlate**. ஆகையால்தான் மாற்றி அமைக்க அவகாசம் இல்லை, சந்தர்ப்பம் இல்லை என்று தெரிவித்தேன். ஆனால் திருத்த மசோதாவில் உள்ள கருத்துக்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்ன பிறகு ஏன் திருத்த மசோதாவை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கேட்கலாம். யூனிவர்சிடி சட்டத்தைப் பொறுத்த மட்டில் துண்டு துண்டாகத் திருத்துவது நல்லதல்ல என்று ஒரு கருத்து இருக்கிறது. இந்த அரசாங்கமே சென்னை யூனிவர்சிடி சட்டத்தைத் திருத்துவது பற்றி பரிசீலனை செய்திருக்கிறது. பல திருத்தங்கள் கொண்டுவருவது பற்றி ஒரு கமிட்டி ஆராய்ந்து வருகிறது. சில திருத்தங்கள் **draft** செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாக நெருக்கடி நிலை வந்துவிட்டது. அதையொட்டி வேறு சில அவசர வேலைகள் வந்த காரணத்தால் கவனம் சிதற வேண்டாமென்ற நிலையில் நிறுத்தி வைத்திருக்கிறோம். இன்றைய பத்திரிகையில் கூடக் கவனித்து இருப்பீர்கள். நேற்று செனட் சபையிலே கூட யூனிவர்சிடி சட்டத்தைத் திருத்துவது பற்றிப் பரிசீலனை செய்வதற்காக செனட் குழு அமைக்க வேண்டுமென்ற பிரேரபணை வந்தபோது **Vice-Chancellor** அவர்கள் "அரசாங்கத்தையே திருத்தச் சொல்லலாம். யூனிவர்சிடி சட்டத்தை குழு திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள இருக்கிறோம். ஆகவே, செனட் குழு வேண்டாம்" என்று தெரிவித்ததை அங்கத்தினர்கள் பத்திரிகையில் படித்திருப்பார்கள். அப்படித் திருத்தத்தைச் செய்கிறபோது கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்து பரிசீலனை செய்யப்பட்டு அதிலே இடமளிக்க முடியுமா என்பதையும் பார்க்கலாம். மறுபடியும் இந்த மாதிரி தேர்தல் வந்தால் அப்போது காங்கிரஸ் கட்சியில் இல்லாதவர்கள், எதிர் கட்சியில் உள்ளவர்கள், இப்படிப்பட்டவர்களுக்கும் இடம் அளிப்பது பற்றி கவனிக்கப்படும். அப்போது காங்கிரஸ் கட்சி குறுக்கே நிற்காது என்று சொல்லி கனம் அங்கத்தினர் அவர்கள் இப்போது இந்த மசோதாவை வற்புறுத்த வேண்டாமென்றும், வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் குறிப்பாக விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சியிலே இருக்கிற அருமைச் சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஜனநாயகத்தைப்பற்றி நான் கொஞ்சம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

**MR. SPEAKER :** The hon. Member cannot make a speech. He must say whether he is pressing the motion or withdrawing it.

[30th March 1963

**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் மிகவும் தெளிவுதரத்தக்க வகையிலே, நம்பிக்கை தரத்தக்க வகையிலே இருக்கின்றன. எதிர் காலத்திலே, கூடிய விரைவிலே, இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள்ளாக அமைச்சரவர்கள் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அத்தகைய உறுதி மொழி அவர்கள் தருவார்களென்ற நம்பிக்கையில், கூடிய விரைவில் திருத்த மசோதாவை கொண்டுவருவார்கள் என்ற நம்பிக்கையில், அவர்கள் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து என்னுடைய திருத்த மசோதாவை நான் வற்புறுத்தவில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதை என்னுடைய அஷ்யூரன்ஸாகக் கனம் அங்கத்தினர்கள் கருதக் கூடாது. எனக்கு அதைப் பற்றி ஆட்சேபம் இல்லை. தாமதித்துக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் இல்லை. இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் இது முடியாது. இதிலே சென்னை யூனிவர்சிடியாரும் சில கருத்துக்களைத் தெரிவிக்கப்போகிறார்கள். அரசாங்கத்திலே முன்பு பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் எடுத்துத் தொகுத்து மசோதா கொண்டுவருவதற்கு நாள் ஆகும். எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டுவருவதற்குக் கவனம் செலுத்துகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**The motion was, by leave, withdrawn.**

## RESOLUTIONS.

### (1) CONSTITUTION OF A TAMIL POPULARISATION BOARD.

* SRI M. S. SELVARAJAN : Sir, I move the following resolution :—

"This House recommends to the Government to constitute a special Tamil Popularisation Board to popularise Tamil Language in non-Tamil speaking areas specially in places like Delhi, Calcutta and Bombay on the lines of the Hindi Prachar Sabha in Madras.".

கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ் மொழி பரப்பப்படுவதற்கு அல்லது அதனுடைய வளத்தையும், செழுமையையும் உணரச் செய்வதற்கு ஒரு குழு, ஒரு கமிட்டி, ஸ்பெஷலாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து என்னுடைய தீர்மானத்தில் தொனித்தாலும் கூட, அந்தக் கருத்து இன்றைய தினம் நாடு ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய நல்ல ஒரு முடிவுக்கு மாறுதலானதாக இருக்கும், இருக்க வேண்டும் என்ற கருத்தோடு கொண்டுவரப்பட்டது அல்ல. இந்தி பிரச்சார சபா அமைப்பு போல இந்தத் தமிழ் வளர்ச்சி நிறுவனம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுடைய தீர்மானத்தில் வாசகத்தில் காணப்பட்டாலும் கூட, இந்தி பிரச்சார சபா அரசாங்கத்தினுடைய உதவிகளைப் பெற்று, தனிப்பட்ட முறையிலே ஒரு குழுவினால் இயக்கப்படுகிறது என்பதை நான் உணர்ந்தேதான் இருக்கிறேன். அது மாத்திரமல்லாமல் இந்தி பிரச்சார சபாவில் இருக்கக் கூடிய நடைமுறைகளைப் பார்த்தால் ஹிந்தி பிரச்சார சபா என்ற பெயரிடப்பட்டிருந்தாலும் கூட, தமிழ் பாஷையும் கூட இந்தியோடேயே சேர்த்து, இரண்டுக்கும் இருக்கக் கூடிய தொடர்புகளை, இணைப்பு-பிணைப்புகளையும் சேர்த்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு உகந்த முறையிலே இதைப் பரவச் செய்வது என்ற கருத்து இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். அந்தக் கருத்தை நானும் ஏற்றுக்கொண்டு, அந்தக் கருத்தின் அடிப்படையில் 'தமிழ் வளர்ச்சி நிறுவனம்' என்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



30th March 1963] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

கடந்த சில வருஷங்களுக்கு முன்பு இந்த ராஜ்ய அரசாங்கமே கூட தமிழ் டெவலப்மெண்ட் கவுன்ஸில் என்ற ஒன்றை நிறுவவேண்டுமென்ற ஒரு கருத்தை வைத்திருந்தது உண்டு. அதற்கு உரிய முயற்சிகள் ஏற்பாடுகள் எல்லாம் கூடச் செய்து கொண்டிருந்தது உண்டு. அந்த அளவுக்கு அதை விளம்பரமாக்க அல்லது பாப்புலரைஸாக்க என்ன ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்று எனக்குப் பூர்ணமாக விவரங்கள் கிடைக்கவில்லை. இதைப் பற்றி விவரம் கிடைத்தால் கூட, அரசாங்கத்திற்குக் கிடைக்குமானால் கூட, அவர்கள் கொடுத்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன். நான் அறிகிறேன், இந்த தேசம் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய வட்டார மொழிகளில், தேசீய மொழிகளில் நாம் வணங்கும் தமிழ் மொழியும் ஒன்று. தமிழ் மொழி எல்லா செழுமைகளையும் கொண்டிருந்தாலும் கூட, தொன்மையைக் கொண்டிருந்தாலும் கூட, இனிமையைக் கொண்டிருந்தாலும் கூட, அதனுடைய முதுமையைப் போற்றினாலும் கூட, தமிழ் இந்த தேசம் முழுமைக்கும் ஒரு பொது மொழியாக, தேச முழுமைக்கும் இந்தியை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில், தமிழ் மொழியை ஏற்றுக்கொள்ளக் கூடும், தமிழ் தேசம் முழுமைக்கும் ஒரு பொது மொழியாகக் கூடும் என்ற திண்ணமான எண்ணத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரவில்லை. இந்தி மொழி இன்றைய தினம் இருக்கக்கூடிய வடிவத்திலே, இன்றைய தினம் இருக்கக் கூடிய அமைப்பிலேயே தான் தேச முழுமையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இந்தியை தேசத்தின் பொது மொழியாகச் சிபாரிசு செய்த குழுவினரோ, தேசத்தின் பெரும் தலைவர்களோ, கூட்டுக் கூட்டங்களோகூட அத்தகைய எண்ணத்தைச் சொல்லவில்லை. நான் நம்புகிறேன், காலம் வரலாம். இன்னும் எதிர் காலத்தில் நாம் எதிர்பார்த்த இந்தி மொழியின் இலட்சணம் பூர்ணப் பொலிவுடன் இருக்கலாம். எல்லா பாஷைகளிலும் உள்ள வளங்கள், உவமைச் சிறப்புக்கள், இலக்கண நயங்கள், இலக்கிய நயங்கள், எல்லாம் அதற்குக் கிடைக்கச் செய்து, அவைகளையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொள்ளும் வடிவத்தில், அத்தகைய உருவத்தோடு தேசம் முழுமையும் ஏற்றுக்கொள்ளும் நிலைமையை, பக்குவமான நிலைமையை எதிர் காலத்தில் அது பெற வேண்டும். அது தேச முழுமைக்கும் ஏற்ற காலமாக இருக்கலாம். தேச ஒருமைப்பாட்டுக்கு உறுதுணை செய்யும் நல்ல காலமாக இருக்கும் அந்தக் காலம். அதிலும் இந்தி மொழியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சிபாரிசு செய்ததன் எண்ணமாக இருக்கும் அது என்று நான் நினைக்கிறேன். நான் நினைக்கிறேன்—அந்த லட்சியம் ஈடேற வேண்டுமானால் தமிழ் மொழி மாத்திரமல்லாமல், தமிழ் நாகரீகம், தமிழ் பண்பு, தமிழ் நயம், இதுபோல ஒவ்வொரு பாஷையிலும் இருக்கக் கூடிய நயங்களும் எல்லா வகைகளிலும் பெறப்பட்டு, தேச முழுவதிலும் ஆங்காங்கு உணரக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவேண்டுமென்பது என்னுடைய ஆசை. அந்த லட்சியம் ஈடேற தமிழ் பாஷையைப் பொறுத்த மட்டில் பல வருஷங்களாக முயற்சிகள் எடுத்து வந்திருப்பதை நான் உணருகிறேன். ராஜ்ய அரசாங்கம் உறுதுணையாக சர்வகலாசாலைகளுக்கு, உஸ்மானியா சர்வகலாசாலை, டில்லி சர்வகலாசாலை, கல்கத்தா சர்வகலாசாலை, கேரளா இங்கெல்லாம் இருக்கிற சென்னை வகுப்புக்கு, விசேஷ அமைப்புக்கு, உதவி செய்வதைக் கூட நாம் பார்க்கிறோம். அதற்கு உரிய க்ராண்டுகள் வழங்கப்படுகின்றன என்பதை நாம் அறிகிறோம். க்ராண்டு வழங்கும் முறைகளில், எனக்குத் தெரிந்த அளவில், கொடுத்து வருகிற உதவிகளெல்லாம் யாரோ சில படித்தவர்களுக்கு மாத்திரம் உதவக் கூடியதாக இருக்கலாம். மற்ற பாஷைகளைப் பேசக் கூடிய சாதாரணமானவர்களுக்குக் கூட, பாமர மக்களுக்குக் கூட, பயனுள்ளதாக, பாஷையைப்புரிந்து கொள்ளக் கூடிய, ஒருமைப் பாட்டை, உணரக் கூடிய அளவுக்குப் பிரசாரம் செய்து அவர்களுக்குச் சந்தர்ப்பத்தை கொடுக்கவேண்டியது அவசியம் என்று கூட நான் கருதுகிறேன். அந்த நிலைமையில்தான் இன்றைய தினம் இருக்கக்கூடிய யூனிவர்சிட்டிகளுக்கு ராஜ்ய அரசாங்கம் உதவிக்கொண்டிருந்தாலும் கூட இன்னும் கூட ஆங்காங்கு இருக்கக் கூடிய தமிழ் சங்கங்கள், இன்றைய தினம் எல்லா பெரிய நகரங்களிலும் பார்க்கிறோம், பம்பாயில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், பூனாவில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், கல்கத்தாவில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், டில்லியில் இருக்கக் கூடிய தமிழ் சங்கம், இவை

போன்றவைகளுக்கெல்லாம் பொது மக்கள் உதவி ஒரு பக்கம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் அரசாங்கம் எந்த அளவு உதவ வேண்டுமோ அந்த உதவி இதுவரையில் செய்திருந்தாலும் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும். நான் நினைக்கிறேன், இன்றைய தினம் இருக்கக் கூடிய அந்த யூனிவர்சிட்டிகள், தமிழ் சங்கங்கள், இவற்றிலே ஆங்காங்கே இருக்கக் கூடிய தமிழ் மக்களுக்கு உதவிகரமான முறையில் தமிழ் மொழிக்கும் அவர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்பு விட்டுப் போகாமல் இருக்கக் கூடிய அளவுக்குச் சேவை செய்து வருகின்றன, அந்த முறையில் பயனுள்ளதாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். நம் எண்ணமும் அது தான் என்று நம்புகிறேன். சாதாரண மக்களுக்குக் கூட, மற்ற மொழி பேசுகிறவர்கள், தமிழ் மொழியில் இருக்கக் கூடிய மொழி ஒருமைப்பாடு, இலக்கிய ஒருமைப்பாடு போன்றவைகளை உணரும் நிலைமையை உண்டு பண்ணி விட்டால் வித்தியாசங்கள் கூட மறைந்து போகலாம்; எதிர்காலம் நல்ல காலமாக இருக்கலாம் என்று கருதுகிறேன். அவர்களுக்கு இன்றைய தினம் நம் தமிழ் பாஷையில இருக்கக் கூடிய சில பாடங்களை, பால பாடம் போன்றவைகளை எல்லா மொழிகளிலும் ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஹிந்தியில் **History of Tamil Literature** என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அதிலே ஒரு குறிப்பிட்ட வாசகம் கண்டது. வள்ளுவர் காலம் 10-வது நூற்றாண்டு என்ற அந்தப் புத்தகத்தில் அம்மாதிரி குறிப்பு உடைய வாசகம் இருந்தது என்று காணக் கண்டது. தமிழர்கள் பற்றிய குறிப்புகள், தமிழர்கள் வளர்ச்சி இவைகள் போன்ற விஷயங்களைப் பற்றி சரிவர காரியங்களைச் செய்ய முறையாக, பழுதில்லாத நிலையில் பார்க்க ஒரு கண்காணிப்பு அவசியம் என்று நான் கருதுகிறேன். இன்றைய தினம் குறிப்பாக வட இந்தியா முழுவதிலும் பரந்து கிடந்து பணி செய்து கிடக்கும் சங்கங்களைத் தொகுத்துச் சேர்த்து ஒன்றாக வைக்கும் பண்பாடு இன்றையதினம் இல்லை. நான் விரும்புகிற இந்த அமைப்பு இவற்றையெல்லாம் வகுத்து, தொகுத்துச் செய்யக் கூடிய அளவுக்கு, பரப்பக் கூடிய அளவுக்கு ஆலோசனை சொல்லக் கூடிய நல்ல பணியைச் செய்து இந்த உதவியைப் பரவலாகச் செய்துகொடுத்து, பாஷையில் விற்பன்னர்களாக இருக்கிறவர்கள் மாத்திரம் என்று இல்லாமல் சாதாரண மக்கள் தமிழர் பண்புகளை, தமிழர் நற்குணங்களை பெரும்பாலும் உணர்வதைப் போல, தென்னிந்தியாவில் மற்ற மொழிகளைப் பேசுகிற மாதிரி நான் விரும்புகிற இந்த அமைப்பு இருந்தால் வழிகாட்டியாக இருக்கலாம் மற்ற பாஷையினருக்குக் கூட என்று கருதுகிறேன். இன்றையதினம் காலையிலே பத்திரிகையில் பார்த்தபோது, கேரளாவிலே மலையாள மொழியை மற்ற இந்திய மொழிகளுடனும் அன்னிய மொழிகளுடனும் நெருங்கிய உறவு கொள்ளச் செய்வதற்காக கேரள அகாடமி கவனம் செலுத்தி வருகிறது; இரு மொழி அகராதிகளுக்கும், மற்ற மொழிகளில் உள்ள புத்தகங்களை மலையாளத்தில் மொழி பெயர்க்க ஊக்கம் தர இந்த திட்டம் நோக்கமாக கொண்டிருக்கிறது என்றும் படித்தேன். அவர்கள் நோக்கம், தமிழ்-மலையாளம், கன்னடம்-மலையாளம், தெலுங்கு-மலையாளம், பிரெஞ்சு-மலையாளம், ஜெர்மன்-மலையாளம் என்று இருமொழி அகராதிகளை வளர்ச்சி செய்வது; இதற்கு அகாடமி நிதி உதவி அளிக்கும் என்று பத்திரிகையில் பார்த்தேன். தமிழ் மொழியையும் கூட உலக மொழிகளுடன் இணைக்கும் முயற்சி எடுக்கப்பட வேண்டியது அவசியமும், அவசரமும் கூட. தமிழின் அருமை பெருமைகளை ஒரு சிலர் மட்டுமன்றி, மற்றவர்களும் புரிந்து கொள்ளும் முறையிலே தமிழ்ச் சங்கங்களில் மற்றவர்களும் சேர்ந்து புரிந்து கொள்ளும் வகையிலே ஒரு நல்ல சூழ்நிலையை உண்டாக்கி, அதற்கு உதவிகரமாக ஒரு அமைப்புத் தேவை என்று கருதுகிறேன். அது எந்தப் பெயரில் அமைக்கப்பட்டாலும் பரவாயில்லை. அத்தகைய எண்ணம் ஒன்று நாட்டிலே பரவலாக வளருவது ஒரு நல்ல எதிர்காலம் வளருவதற்கு, துவேஷம் இல்லாமல் தேசத்தின் ஒற்றுமைக்கு பாதை வகுப்பதாகும். அந்த நிலை உண்டாவதற்கு எல்லா மொழிகளும் தங்கள் தங்கள் பங்கை, தங்கள் தங்கள் கலாச்சாரப் பங்கைக் கொடுப்பது அவசியம் என்று கருதுகிறேன். அதே போன்று மற்ற தேசங்களில் நடந்து வருகிறது. உதாரணமாக ரஷ்யாவில் பல மொழிகள் பேசக் கூடிய பிரதேசங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். பல மொழிகள் இருந்தாலும் அங்கே ஒரு செட்டில்மெண்ட் ஸிஸ்டம் இருப்பதை





காண்கிறோம். ஆங்காங்கே அத்தகைய பல பாஷைகளைப் பல ஆண்டுக் காலமாக பலப்பல பகுதிகளில் பல்வேறு நாகரிகம் கொண்ட மக்கள் கொண்டிருந்தாலும், அவற்றையெல்லாம் தொகுத்து கடினமான திட்டங்கள் துணைகொண்டு சாதித்து இருக்கிறார்கள். ஜனநாயகம் வளரும் நம் நாட்டில், அறிஞர்கள் ஒரு சிலர் மட்டும் சேர்ந்து தேசத்தின் ஒற்றுமையை விதியை நிர்ணயம் செய்து விடுவது என்பதினால் மானசீகமான ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்தலாம். ஆனால், மக்கள் பல்வேறு பகுதிகளில் இந்த ஒருமைப்பாட்டை உணர்ந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை வளரும் முறையில் செய்வது மட்டுமல்ல, அதை ஊன்றிப் பார்த்து எந்தக் கறுப்பும் அதைத் தீண்டாமல், எந்தத் தீமையும் அத்தகைய சக்தியை அடித்து, குலைத்து ஊறு செய்யாமல் நல்ல எண்ணத்தோடு ஒரு அமைப்பு முறை இயங்க வேண்டுவது அவசியம் என்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

சில பகுதிகளில் சில முயற்சிகள் நடக்கின்றன. பல முறை இந்த மன்றத்திலேயே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. துளசிதாசருக்கும் கம்பருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் பற்றிச் சொல்கிறார்கள். அத்தகைய புராண இதிகாசத்தை, பண்பை எடுத்துக் காட்டுகிறோம். பாரதியாரும், வள்ளுவரும், கம்பரும், இளங்கோவும், ஜீவனுள்ள சாஞ்சீவி படைப்புகள். அவை முக்கு முக்காகப் பரவவேண்டும். அந்தப் படைப்புகளெல்லாம், நிலையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இலக்கணத்தில், இலக்கியத்தில் உள்ள ஒருமைப்பாடுகளை அப்படிப்பட்ட அமைப்பின் மூலம் சுலபமாக இங்கும், எங்கும் இணைக்கும் நிலையை உண்டு பண்ணவே இந்தத் தீர்மானம். எனக்கு அரசாங்கத்திலிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் கிடைக்கக்கூடிய ஒட்டு வார்த்தைகள் அனுசரணைகளாக இருக்கும். அப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம், இந்த தேசம் ஒருமைப்பாட்டை அடையக்கிடைக்குமானால், அதிலேயே என் தீர்மானத்தை நிறைவேற்றிய மகிழ்ச்சி அடைவேன். இதை நிறைவேற்ற முழு முயற்சி எடுக்க வேண்டும். இந்தத் தீர்மானத்தில் உள்ள நல்ல கருத்துக்களை ஏற்று, அரசாங்கம் ஒரு நல்ல அமைப்புபற்றி சிந்திப்பது நல்லது. இதை சபை ஏற்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

The resolution was duly seconded.

*** திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தமிழ் மொழி பிரசாரக் குழு வேறு மாநிலங்களிலும் அமைக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தில் இந்திபிரசார சபை என்ற பெயரில் நடைபெறும் நிறுவனம் இந்தியை தமிழகத்தில் திணிக்க வேண்டும் என்று நடைபெறும் முயற்சிக்கு ஆதரவாக நடைபெறுவதுபோல் இல்லாமல், தமிழை வேறு மாநிலங்களில் பரப்ப வேண்டும் என்று சொல்லப்படுகிற கருத்து வேறு மாநிலங்களின் மக்கள் மீது தமிழைத் திணிக்க வேண்டும் என்கிற தீய நோக்கோடு அல்ல என்பதை நாம் உணரவேண்டும். திரு. நண்பர் செல்வராஜன் எடுத்துக் காட்டியதுபோல, தமிழிலேயே நிறைய இலக்கியங்கள் உண்டு. சொல் வளம் உண்டு. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றி மூத்த குடியினரின் மொழி தமிழ் மொழி. இலக்கியச் செறிவும், பண்பாட்டுச் செறிவும் மிக்க மொழி ஆகும் தமிழ் மொழி. மக்களை வாழ்வித்த மொழி, நல்ல பண்பாட்டை உலகத்திற்கு அறிவித்த மொழி தமிழ் மொழி ஆகும். அப்படிப்பட்ட மொழி நிலவும் பகுதிகளிலும், தமிழகத்திலேயும் மட்டுமல்லாமல், அண்டை நாடுகளிலும், மாநிலங்களிலும், அந்த மொழியைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கோடு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு இலக்கியத்தை, துளசிதாஸ் இராமாயணம் ஒன்றை மட்டும் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்திக்கு இந்த துணைக்கண்டம் பூராவும் பிரச்சாரசபைகள் இருக்கும் போது, வளையாபதியும், சீவக சிந்தாமணியும், குண்டலகேசியும், மணிமேகலையும், சிலப்பதிகாரமும், அகமும், புறமும், கலித் தொகையும் இன்னோரன்ன பிறவும் இலக்கிய வளம் பெற்றிருக்கிற நம் தமிழை, அனைத்துக்கும் மேலாக திருக்குறளைப் பெற்றிருக்கும் தமிழை பரப்பும் பிரசார சங்கங்கள் வேறு மாநிலங்களில் இல்லாதது பெரும் குறை. அந்தக்

குறையைச் சுட்டிக்காட்டுவது இந்தத் தீர்மானத்தின் முக்கிய நோக்கம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் நம்முடைய தமிழகத்தில் இந்தியினுடைய தன்மையை, வளத்தை, அந்த மொழியில் ஆர்வத்தை தமிழரும் பெறவேண்டும் என்று இந்தி பிரச்சாரசபை பணிகளில் தமிழர்களும் ஈடுபடுகிறார்கள். ஆனால், வேறு எந்த மாநிலங்களிலும்
10-30 a.m. தமிழை வளர்த்துக் கொள்வோர்கள் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. நம் மாநிலத்திலிருந்து பிழைப்பிற்காக, வேலைக்காக, பம்பாய், கல்கத்தா ஆமதாபாத், டெல்லி போன்ற இடங்களிலே நம் மாநிலத் தமிழர்கள் ஆங்காங்கே தங்களுக்கு இருக்கக் கூடிய தமிழ் ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்ளவென்று அந்த தமிழ் சங்கங்களை உருவாக்கி இருக்கிறார்கள், பிரசாரம் செய்யும் சங்கங்களாக உருவாக்கிப் பணிபுரியவில்லை. இன்னும் குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்லவேண்டுமானால் நான் கொஞ்சம் சினிமா துறையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அதுபற்றி யாரும் தவறாகக் கொள்ளமாட்டார்கள் என்று நம்பிக்கையோடு கூறுகிறேன். இந்திப் படங்களை தமிழ் நாட்டில் எல்லோரும் பார்கிறார்கள். இந்தி படித்தவர்கள் அல்லது இந்தி மொழியை உணர்ந்தவர்கள்தான் அந்தப் படங்களை பார்க்கிறார்கள் என்று இல்லாமல் இந்தித் திரைத் துறையிலே நல்ல நடிகர்கள் நடித்த படமாக இருந்தால், இந்தியில் நல்ல இசைவாணர்கள், பாடகர்கள் இசை அமைத்த படங்களாக இருந்தால், தமிழகத்தில் தமிழர்கள் அந்தப் படங்களை ஆர்வத்தோடு சென்று பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் படங்கள், தமிழ் நடிகர்கள் நடித்த படங்கள் இந்தி வழங்குகின்ற பகுதிகளில் அல்லது வேறு மாநிலங்களில் நடக்கின்றனவா என்றால், பம்பாய், ஆமதாபாத் போன்ற தமிழர்கள் இருக்கின்ற இடங்களில் ஒரு நாள் காலைக் காட்சியாகவோ அல்லது ஒரு வாரக் காட்சியாகவோ தான் அந்தப் படங்கள் வெளியிடப்படுகின்றன. தமிழ் நடிகர்கள், உயர்ந்த நடிகர்கள், நட்சத்திர மதிப்புப் பெற்றிருக்கிற நடிகர்கள் நடித்த படங்கள் இந்தி மொழி பேசப்படுகிற பிராந்தியங்களில் ஓடுவதற்கு வழி வகை செய்யப்பட்டிராத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையிலே மாற்றம் காணவேண்டும். இந்த அரசினர் சிபார்சு செய்தாவது தமிழ் நாட்டில் வெற்றிகரமாக ஓடுகிற தமிழ் படங்கள், நட்சத்திர மதிப்பு பெற்றிருக்கிற நடிகர்கள் நடித்திருக்கிற தமிழ் படங்கள் அந்தப் பகுதிகளில் வேறு மாநிலங்களில் ஓடுவதற்கும், அந்த வகையிலே தமிழ் ஒலியையும், ஒலியில் கிளம்புகின்ற வீரத்தையும், அதனால் கிடைக்கின்ற கனிவையும் தமிழ் இனிமையையும் மற்றவர்கள் உணர்கின்ற அளவுக்கு அந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற காரியத்தில் ஈடுபடலாம். இப்படிப் பல கோணங்களில் தமிழைப் பிரசாரம் செய்வதற்காக நல்ல பல நிறுவனங்களை வேறு மாநிலங்களில் அமைக்கவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம் என்ற அளவிலே நம்முடைய நண்பர் திரு. செல்வராஜன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்து, இதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று ஆளும் கட்சியினரைக் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற, தீர்மானம், மற்ற மாநிலங்களிலே தமிழைப் பாராட்டி, உணர்ந்து அனுபவிக்கக்கூடிய வகையிலே இந்த அரசாங்கம் அதற்கென்று ஒரு தனிக் குழு அமைக்கவேண்டும் என்பதுதான். அதைத்தான் அவர் முக்கியமாக குறிப்பிட்டிருக்கிறார். இந்திக்காக இந்தி பிரசார சபா சென்னையில் எவ்வாறு பணி புரிகின்றதோ அதே வகையிலே டெல்லி, கல்கத்தா பம்பாய் போன்ற நகரங்களில் தமிழுக்காக ஒரு அமைப்பை அமைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அதை ஆதரித்துப் பேசினார்கள். ஒன்று முதலிலேயே கூற விரும்புகிறேன். இந்தி பிரசார சபையின் பணியைப் பொறுத்த மட்டில், கனம் அங்கத்தினர் அவர்களை இந்திப் பிரசார சபையின் சார்பாக அழைக்கிறேன். அவரே அந்த இந்தி பிரசார சபைக்கு வந்து, வேறு முன்னதாக இருக்கிற கருத்துக்களை மறந்து, கொஞ்சம் தள்ளிவைத்துவிட்டு, அங்கே நடைபெறுகிற வேலைகளைக் கொஞ்சம் தெரிந்துகொள்ளவேண்டும். வேண்டுமானால், நானும் அவர்களோடு அப்போது இருக்கிறேன். இந்தியைத்



திணிக்கிறது என்பது அல்ல. இந்தி பிரசாரசபை என்று போட்டிருக்கிறார்கள். அவர்கள் மகத்தான பணி புரிகின்றார்கள். பலபேர்கள் தமிழகத்தில் கட்டாயம் இல்லாமல் இந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. கனம் அங்கத்தினர் திரு. செல்வராஜன் என்ன கருத்தோடு இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தாரோ அந்த வேலையைத்தான் இந்தி பிரசார சபை இப்பொழுது செய்துகொண்டிருக்கிறது. இந்தி பிரசார சபை வெளியிடுகிற பத்திரிகைகளைப் பார்த்திருக்கலாம். இந்தியிலே தமிழ் இலக்கியத்தை, தமிழின் அருமை பெருமையை விளக்கும் அத்தனை நல்ல கட்டுரைகள் எல்லாம் வந்திருக்கின்றன, தமிழ் வரலாறெல்லாம் இந்தியில் வந்திருக்கிறது. அவ்வாறு வட நாட்டில் உள்ளவர்கள், இந்தியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழின் அருமை பெருமையை நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற வகையிலே தக்ஷிணபாரத இந்தி பிரசார சபா அக்கறை செலுத்துகிறது. பிரசாரம் செய்கிறது. தெலுங்கிலும் அக்கறை செலுத்துகிறது. மலையாளத்திலும் அக்கறை செலுத்துகிறது. கன்னடத்திலும் அக்கறை செலுத்துகிறது. தமிழுக்காக வட நாட்டிலும் அவர்கள் பிரசாரம் செய்துவருகிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். (திரு. ஆர். வி. சுவாமிநாதன் குறுக்கீடு) பல மொழிகளிலும் வந்திருக்கிறது. இந்தியிலும் வந்திருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏதோ டெல்லியில் இருக்கிற தமிழர்கள் தாங்கள் தாங்களாகவே தமிழை அனுபவிக்கவேண்டுமென்பதற்காக குழுக்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அது மட்டும் போதாது என்று சொன்னார்கள். ஆனால், நான் ஒன்று கூற விரும்புகிறேன். டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில் நான் கவனித்ததிலே, அங்கு இருக்கிறவர்களுக்கு இங்கு நமக்கு இருக்கிற தமிழ் ஆர்வத்தைவிட அதிகமாக இருக்கிறது, அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், அதிகமாக அனுபவித்து வருகிறார்கள் தமிழை. ஆனால், இந்தியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் கூட தமிழைப் புறக்கணிப்பதில்லை. தமிழை அனுபவிக்க முற்படுகிறார்கள். சில இடங்களில் நான் கவனித்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு உதயபூருக்குப் போயிருந்தேன். அது ராஜஸ்தானில் இருக்கிறது. அசல் இந்தி பேசப்படுகிற மாநிலம் அது. அந்த நகரத்திற்குப் போயிருந்தேன். நான் ஒரு கலைப் பள்ளியைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் என்னை அழைத்துச் சென்றிருந்தார்கள். எனக்காக பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதிலே பரத நாட்டியம் நடைபெற்றது. அந்த பரத நாட்டியத்திலே தமிழ் பாட்டு பாடப்பட்டது வட நாட்டிலே. அங்கே உள்ள குழந்தைகள் ஆடினார்கள், அழகாக ஆடினார்கள். தமிழ் பாட்டு சொல்லிக்கொடுப்பதற்கு தமிழ் நாட்டில் அடையாற்றிலிருந்து தேர்ச்சிப் பெற்ற ஆசிரியரை தமிழரை அழைத்து சென்று அந்தக் குழந்தைகளுக்கு அழகாக தமிழ்ப்பாட்டு கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அழகாக தமிழில் பாடினார்கள். நல்ல உச்சரிப்பு. தமிழில் பாடி நடனம் ஆடினார்கள். அதைப் பார்த்தேன் இதையெல்லாம் கனம் அங்கத்தினர் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். டெல்லியில் ஒரு சபை இப்பொழுது இருக்கிறது. தமிழ் பேசுகிறவர்களுக்கு இந்தியிலே அக்கறை ஏற்படவேண்டும், அவர்கள் இந்தியிலே அக்கறை செலுத்தவேண்டும், இந்தியை அனுபவிக்க முற்படவேண்டும், அதே மாதிரி இந்தி பேசுகிறவர்கள் தமிழை நன்றாக அனுபவிக்கவேண்டும் உணர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு குழு இருக்கிறது. நானே அந்தக் குழுவில் பேசினேன். நான் தமிழிலே பேசினேன். இந்தியிலே பாண்டித்தியம் பெற்றவர்கள் தமிழைப்பற்றி பேசினார்கள். அவர்கள் இந்தியிலே பேசினார்கள். சில பேர்கள் இந்தியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் தமிழிலே நன்றாக பேசக் கூடியவர்கள் இப்பொழுது இருக்கிறார்கள்.

அதோடு, படத்தைப்பற்றிச் சொன்னார்கள், தமிழ் படம் ஏதோ காலையில்தான் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். படத்தைப் பற்றி எனக்கு ஆசை இருக்கிறது, அதை எப்படி செய்யவேண்டுமென்ற ஆசை எனக்கு இருக்கிறது. ஆனால் அதை நிறைவேற்றக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லை. அந்த ஆற்றல் எதிர்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் இதில் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்பவர்

கள். எந்தப் படமாக இருந்தாலும், இந்திப் படமாக இருந்தாலும், நல்ல படமாக இருந்தால் பார்க்கிறார்கள். ஆங்கிலப் படத்தையும் பார்க்கிறார்கள். அம்மாதிரி இந்திப் படத்தைப் பார்ப்பதில்லை. தமிழ் படம் எந்தப் படமாக இருந்தாலும், தமிழ் படத்தைப் பார்க்கிறார்கள். ஆங்கிலப் படத்தை அதிகமாகப் பார்க்கிறார்கள் என்றால், அதிலே தரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, ஆங்கிலப் படத்தின் தரத்தின் அளவிற்கு தமிழ்ப் படத்தின் ரத்தையும் உயர்த்த வேண்டும். ஆங்கிலப் படத்தின் தரம் உயர்ந்திருக் கிறது, அந்த அளவு தரத்தை தமிழ் படம் எட்டவில்லை என்று சொன்னால் னம் அங்கத்தினர்கள் என் மீது கோபித்துக்கொள்ளக் கூடாது. அந்தத் தரத்தை தமிழ் படத்திலும் எட்டுவதற்கு முயற்சிக்கவேண்டும், முயற்சிக் கப்பட்டு வருகிறது. நான் ஒரு தமிழ் படத்தை தமிழ் நாட்டில் பார்க்க வில்லை. டெல்லியில் பார்த்தேன். மாலை வேளையில் பார்த்தேன், அன்று ஒன்றும் வேலை இல்லாமல் இருந்தது. தமிழ் படம் பார்ப்பதற்கு ரொம்ப ஆசைதான். அந்தப் படத்தை நான் பார்த்தேன் டெல்லியில். அம் மாதிரி படங்கள் வட நாட்டில், இந்தி பேசப்படுகிற, தமிழ் பேசப்படாதப் பிராந்தியங்களில் அதிகமாக காட்டப்பட வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அது எப்பேர்ப்பட்ட படம் அங்கு போகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. படம் அங்கே போனால் பார்க்கக் கூடிய படமாக இருக்கவேண்டும். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது.

படம் நல்ல படமாக இருக்கவேண்டும், சிறந்த நடிகர்கள் நடிக்கிற படமாக இருக்கவேண்டும். சில சமயத்தில் சிறந்த நடிகர்கள் நடிக்கின்ற படங்கள் கூட வெற்றிகரமாக ஓடுவதில்லை. படத்தினுடைய (தீமை) 'Theme' பொறுத்திருக்கிறது, நடிகர்களைப் பொறுத்திருக்கிறது, பட அமைப்பைப் பொறுத்திருக்கிறது. மூன்றும் சேர்ந்து நன்றாக அமைய வேண்டும். தமிழ் நாட்டு மக்கள் நல்ல ரசிகர்கள். சிறந்த ரசிகர்கள். மற்ற மாநிலங்களிலும் மக்கள் அப்படியேதான் இருப்பார்கள் என்றுதான் கொள்ளவேண்டும். ஆகவே, அவர்கள் தாய் மொழியில் இருக்கிற படம் இல்லாமல், வேறு மொழியில் உள்ள படமாக இருந்தால், தமிழ் படமாக இருந்தால் கூட, நல்ல படமாக எடுக்கவேண்டும். நாம் இதெற்க் கென்றாவது, மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் பார்ப்பதற்கு என்றாவது தகுந்த முறையில் கதை எழுதி, நல்ல நட்சத்திரங்களைப் போட்டு சிறப்பான முறையில் படம் எடுக்க வேண்டும். அதற்குத்தான் முயற்சி செய்ய வேண்டும். நான் சொல்லலாமே தவிர, அதை நிறைவேற்றக்கூடிய வர்கள் இங்கே எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அடுத்த மாநிலங்களுக்குத் தேவையான படங்களை நாங்கள் தயாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் தணிக்கை அதிகாரிகளுடன் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். தமிழ்ப் படங்களில் இருக்கிற காட்சியோடு இந் திப் படங்களில் இருக்கிற காட்சியை ஒப்பிட்டு இந்தி படத்திலே தரக்குறை வான காட்சிகளை அனுமதிக்கிறீர்களே, அதே சென்சார் போர்டுதானே தமிழ்ப் படங்களில் அதுமாதிரியான காட்சி வந்தால் ஏன் அனுமதிக்கிற தில்லை என்று தணிக்கை அதிகாரிகளைக் கேட்டேன். அதற்கு தணிக்கை அதிகாரி, அந்தக் கலாச்சாரம் வேறு, இந்தக் கலாச்சாரம் வேறு என்று சொன்னார்கள். அமைச்சர் குறிப்பிடுகிறபடி பார்த்தால் தரக்குறைவான படங்களை எடுத்துத்தான் அனுப்ப வேண்டியிருக்கும் என்று வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி இல்லை. ஆங்கில நாட்டு— மேல் நாட்டு கலாச்சாரத்திற்கும் இந்த நாட்டு கலாச்சாரத்திற்கும் வித்தி யாசம் இருக்கிறது. இருந்தாலும் நல்ல ஆங்கிலப் படங்களை இங்கே ஏராளவு கூட்டம் கூடி அனுபவிக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு இங்கே இங்கிலாந்திலிருந்து ஒரு நாடகக் குழு வந்து இங்கே நாடகம் நடத்தினார்கள். "ஹாம்லெட்" நடத்தினார்கள். அதிலே "கோஸ்ட்" (Ghost) வருகிறது. இங்கெல்லாம் பகுத்தறிவுள்ளவர்கள் கோஸ்டுகளை





நம்பாதவர்கள். அங்கும் நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். அது வேறு விஷயம். ஷேக்ஸ்பியர்—உலக கவி—அவர்கள் இயற்றிய நாடகம். சிறப் பாக நடத்தினார்கள். நல்ல கூட்டம் கூடியது. அண்ணாமலை மன்றமே கொள்ளவில்லை. சிறந்த முறையில் நடத்தினார்கள். அதைப் பார்த்து இங்குள்ள மக்களெல்லாம் ரசித்தார்கள். இங்குள்ளவர்கள் கூட நல்ல தரமுள்ள படமாக இருந்தால் அதை ரசிப்பார்கள். அதற்குக் கொஞ்சம் பிரத்தியேகமாக ஆற்றல் உள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும். நாம் போய் அது நல்ல படம் என்று திணிக்க முடியாது. இந்தி பிரச்சார சபா இந்தியைத் திணிக்கவில்லை என்று சொன்னேன். நல்ல படமாக இருந்தால் நாம் மட்டும் அனுபவித்தால் போதாது. நம்முடைய தமிழ் கலையின் அருமையை மற்றவர்கள் உணரச் செய்யவேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். படங்கள் மூலமாக மட்டும் நாம் ஏற்றுக் கொள்ளச் செய்ய முடியாது.

இப்போது சாதாரணமாக டில்லியிலே ஒரு சிறந்த பள்ளி இருக்கிறது. பல பள்ளிகளை நம் தமிழ் நாட்டிலிருந்து போனவர்கள் அக்கறையோடு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நல்ல சிறந்த ஸ்தாபனங்கள் அவைகள். தமிழர்கள் மட்டுமில்லாமல் வேறு மொழி பேசுகிறவர்களும் அங்கு இருக் கிறார்கள். அந்தப் பள்ளிகளுக்கு நாம் உதவி அளித்திருக்கிறோம். பம்பாயில் ஒரு சிறந்த பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு உதவி அளித் திருக்கிறோம். நாக்பூரில் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கும் உதவி அளித் திருக்கிறோம். அதோடு நான் முன்பு இந்த மன்றத்தில் குறிப்பிட்டது போல பல பல்கலைக்கழகங்களுக்கு உதவி அளித்திருக்கிறோம். அதே மாதிரி மாஸ்கோ, ஆக்ஸ்போர்டு போன்ற நாடுகளிலும் தமிழ் கற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அங்கேயெல்லாம் கூட தமிழ் பரப்பப் பட்டு வருகிறது என்று பார்க்கும்போது நாம் எல்லோரும் பெருமை அடை கிறோம். அதில் மேலும் மேலும் அக்கறை செலுத்துவோம். ஆனால் தமிழை மற்ற மாநிலங்களில் பாபுலரைஸ் செய்வதற்காக ஒரு குழு என்றால், நான் ஒன்று சொல்வேன்—தப்பிதமாக எடுத்துக்கொள்ளக் கூடாது ; கோபித்துக் கொள்ளக் கூடாது ; இதுதான் சிறந்த கருத்து, தமிழை எங்கெல்லாம் பாபுலரைஸ் செய்வதென்றால் தமிழ் பேசாத இடங் களில் அல்ல—இப்போது ஒரு நிலை, கேவலமான நிலை என்னவென்றால் நம்மிடையே பாபுலரைஸ் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எதிர் கட் சித். துணைத்தலைவர் அவர்கள் கூறினார்களே, சிறந்த இலக்கியங்கள் என்று. அவைகளை இங்கே எத்தனை பேர்கள் படித்திருப்பார்கள் ? அவை களை எத்தனை பேர்கள் படிக்க முன் வருகிறார்கள் ? எத்தனை பேர்கள் கல்லூரிகளில் வைத்ததில் படித்திருக்கிறார்கள் ? இங்கேயே படிக்கவில்லை. இங்கேயே தமிழின் அருமையை மாணவர்களெல்லாம்—நாம் இல்லை என் றாலும்—மாணவர்களெல்லாம் உணர்ந்து பயனடையவில்லை. ஆகையினால் வெளி மாநிலங்களில் அக்கறை செலுத்த வேண்டாமென்று சொல்லவில்லை. அக்கறை செலுத்தப்பட்டுதான் வருகிறது. மேலும் அக் கறை செலுத்தப்படும். ஆனால் அங்கத்தினர்—இந்தத் தீர்மானத்தை பிரே ரேபித்த அங்கத்தினர்—கூறியபடி இதற்கென்று ஒரு போர்டு தேவை யில்லை.

தமிழ் டெவலப்மெண்ட் கவுன்சில் பற்றி குறிப்பிட்டார்கள். இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பீரோ ஆப் தமிழ் பப்ளிகேஷன்ஸ் என்று இருக்கிறது. புத்தகங்கள் வெளியிட்டு பணியாற்றிக் கொண்டு வருகிறது. தமிழ் டெவலப்மெண்ட் அண்ட் ரிசர்ச் கவுன்சில் என்று வேறு ஒன்று இருக் கிறது. இவையெல்லாம் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. கல்கத்தாவில் தமிழ் சங்கம் ஒன்று சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. சில மாதங் களுக்கு முன்பு அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே வந்து ஒரு விழாவில் கலந்து கொண்டபோது அந்தச் சங்கத்தின் சார்பாக ஒரு யோசனை கூறினார்கள். "கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமிழுக்கு ஒரு சேர் (Chair) அமைக்க வேண்டும். அதற்காக உங்கள் அரசாங்கம் உதவி அளிக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அப்போதே சொன்னேன், அப்படி பல்கலைக்கழகம் முன் வந்தால் வேண்டிய உதவிகளை அளிக்க நாங்கள் முன்வருவோம் என்று. அவ்வாறு மேலும் மேலும் உதவிகள் அளிக்கப்

பட்டு வருகின்றன. அதற்கென்று ஒரு தனி குழு அமைக்கவேண்டியது இல்லை. அதுவும் தமிழ் பாபுலரைசேஷன் போர்டு என்றால் நாமே பறைசாற்றுவதுபோல் இருக்கும். நாம்தான் படிக்கவில்லை என்றால் நீங்களாவது படியுங்கள் என்று சொல்வதுபோல இருக்கும். அரசாங்கம் இதுகுறித்து நல்லமுறையில் அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். தமிழுக்கு நல்லமுறையிலே மேலும் மேலும் ஊக்கம் அளிக்கிறோம். ஆகையால் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI M. S. SELVARAJAN : Mr. Speaker, Sir, I am convinced by the Hon. Minister's reply. So I do not press my resolution.

The resolution was, by leave, withdrawn.

(2) EFFECTIVE IMPLEMENTATION OF PROHIBITION.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தீர்மானத்தை நான் பிரேரேபிப்பதற்கு முன்னால் என்னுடைய தீர்மானத்திற்கே ஒரு பெரிய ஆபத்து வந்திருக்கிறது. இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற தாளில் ஆங்கிலத்தில் அந்தத் தீர்மானம் சரியாகவும், அதுவே தமிழிலே நேர்மாறான கருத்தைத் தெரிவிப்பதாகவும் இருக்கிறது. கனம் சபாநாயகர் மூலமாக . . . . .

MR. SPEAKER : What is the difficulty with the hon. Member, Sri K. A. Mathialagan? Let him read the Tamil version of the resolution.

SRI K. A. MATHIALAGAN : I will read the English version, Sir.

MR. SPEAKER : I have read the English version. Let the hon. Member, Sri K. A. Mathialagan read the Tamil version of the resolution.

SRI K. A. MATHIALAGAN : The first part reads that this House approves the stand taken by the Government with regard to ' Prohibition. ' I agree with the Hon. Minister's policy. But the second part of the resolution has not been translated properly. In this connection, I submit, Sir, that this resolution should be split into two parts. So far as the first part is concerned it is correct. The second part of the resolution is not correct. So the Department may kindly be asked to translate it correctly.

MR. SPEAKER : I presume that the Hon. Member, Sri K. A. Mathialagan wants that vigorous steps be taken to effectively implement the same.

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir. It is all right in English.

" மதுவிலக்கு குறித்தும் அதைத் தீவிரமாக அமலாக்குதல் குறித்தும் அரசினர் மேற்கொண்டுள்ள நிலையை இச்சபை அங்கீகரிக்கிறது " என்று இருக்கிறது. எப்படி இருக்க வேண்டுமென்றால் " மது விலக்கு குறித்து சர்க்கார் கொள்கையை இந்தச் சபை அங்கீகரிக்கிறது. ஆனால் செவ்வையான முறையில் அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது " என்று இருக்கவேண்டும். " மதுவிலக்கு குறித்தும் அதைத் தீவிரமாக அமலாக்குதல் குறித்தும் சர்க்கார் மேற்





கொண்டுள்ள நிலையை இந்தச் சபை' அங்கீகரிக்கிறது " என்ற கருத்தை நான் ஒத்துக்கொள்ளவில்லை. " மதுவிலக்கை அரசாங்கம் தீவிரமாக அமலாக்குவதில் தவறு இருக்கிறது " என்பதைத் தெரிவிக்கும் முறையில் அந்தக் கருத்தோடுதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. செவ்வையான முறையில் அமலாக்குவதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது என்ற தீர்மானத்தை சட்டமன்ற துறையினர் தமிழில் திருத்திக்கொள்ள வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை பிரேரேபிக்கிறேன்.

MR. SPEAKER : In that case, the hon. Member, Sri K. A. Mathialagan, may move his English resolution.

SRI K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I move—

' That this House approves the stand taken by the Government with regard to Prohibition and urges that vigorous steps be taken to effectively implement the same.'

The resolution was duly seconded.

MR. SPEAKER : The resolution is before the House for discussion.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தில் நான் அதிகமாக ஒன்றும் பேசப்போவதில்லை. இந்தத் தீர்மானம் இரண்டு மாதங்களுக்கு முன்னரேயே மதுவிலக்கு குறித்து பரபரப்பான விவாதம் இருந்த நேரத்தில் கொடுக்கப்பட்ட ஒரு தீர்மானம். அந்த நிலையில் அப்போது வந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தபோது ஒரு அதிகாரபூர்வமற்ற நாளை சட்டமன்றத்தில் உத்தியோக அலுவல்களை கவனிப்பதற்கு மட்டும் எடுத்துக்கொண்டதால் அப்போது கொண்டு வர முடியவில்லை. அப்போதே வந்திருக்க வேண்டிய இந்தத் தீர்மானம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது நான் முக்கியமாக இரண்டு மூன்று விஷயங்களை மாத்திரம் குறிப்பிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

மதுவிலக்கு சம்பந்தமாக வழக்குமன்றங்கள், சிறைச்சாலைகள், போலீஸ் ஸ்டேஷன்கள் இவைகளெல்லாம் இன்றைக்கு நிரம்பி வழிகின்றன. இதை அமல்படுத்துவதிலிருக்கும் கோளாறினால் இலட்சக்கணக்கான வழக்குகள் இருக்கின்றன என்றெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள் அடிக்கடி புள்ளிவிவரங்கள் கொடுக்கிறார்கள். மதுவிலக்குத் திட்டத்தைத் தீவிரப்படுத்தவேண்டும் என்பதைப்பற்றித் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டிய கட்டத்தில் இன்றைக்கு நாம் நிறுத்தப்பட்டிருக்கிறோம். பாண்டிச்சேரியும், காரைக்காலும் நம்முடைய மாநிலத்தையொட்டியிருக்கும் காரணத்தால் பல வகை மது பானங்கள், புட்டிகள் வருகின்றன என்று சொல்லப்பட்டது. காரைக்காலிலிருந்து தஞ்சை மாவட்டப் பகுதிகளுக்கும், பாண்டிச்சேரியிலிருந்து கடலூர் போன்ற தென்னாற்காடு மாவட்டப் பகுதிகளுக்கும் மது வகைகள் வரக்கூடிய நிலையைப்பற்றி மத்திய சர்க்காருக்கு நமது சர்க்கார் வற்புறுத்தி எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ' மது விலக்குத் திட்டத்தை அமல்படுத்துவதில் தீவிரமாக இல்லை ' என்று தீர்மானம் வற்புறுத்தினாலும், வேறொரு விவகாரத்தில் தீவிரமாகத்தான் இந்தச் சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்குள்ள கனம் உறுப்பினர் ஒருவர் எடுத்துச் சொன்னது போல, பணக்காரர்களும், பங்களாக்களில் இருப்பவர்களும் தவறு செய்வார்களானால், அப்படிப்பட்டவர்களைப் பிடிக்க அவ்வளவாக முயற்சிகள் எடுக்கப்படுவதில்லை. ஆனால், ஏழை எளியவர்கள், பதவிக் குறைவானவர்கள், வறுமையாக இருக்கிறவர்கள் மத்தியில் இந்தச் சட்டத்தின்

பெயரைச் சொல்லி பல அக்கிரமமான செயல்கள் நடைபெற்று வருகின்றன என்று இந்த மன்றத்தில் பல நேரங்களில் நாங்கள் சொல்லியிருக்கிறோம். உதாரணம் ஒன்று சொல்வேன். முன்பும் சொல்லியிருக்கிறேன். நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஆயிரம் விளக்குத் தொகுதியில் மங்களபுரம், ஜகன்னாதபுரம் பகுதிகளிலும், கனம் நண்பர் திரு. கருணாநிதி அவர்களுடைய இல்லத்திற்குப் பின்னாலே கூட, இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு, இரவு 12 மணி, ஒரு மணிக்குக் கூட போலீஸ்காரர்கள் நிரபராதிகளாக இருப்பவர்களுடைய குடிசைப் பகுதிகளில் புகுந்து, கதவுகளைத் தட்டி, அட்டூழியங்கள் செய்வதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்துவிடுகிறது. இதை யாருமே மறுப்பதற்கில்லை. பணக்காரர்களை இந்தச் சட்டம் அஞ்ச வைப்பதில்லை. ஆனால், ஏழை எளிய நிரபராதிகள் வசிக்கும் குடிசைப் பகுதிகளில், இரவு 11மணிக்குக் கூட, எங்கே வேண்டுமானாலும் போகலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற அளவுக்கு அதிகாரத்தைக் கொடுக்க இந்தச் சட்டம் பயன்படுகிறது. சோதனை செய்யப் போகிறவர்கள் மந்திரிமார்களல்ல. இந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு இருக்கிறவர்கள் தவறாகப் பயன்படுத்துவதற்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். "வெள்ளைக்காரனுக்கு அவனுடைய வீடு 'காஸல்' போன்றது, அங்கு அத்துமீறி காரியங்கள் நடக்கக்கூடாது, அந்த வீட்டுக்குரியவன்தான் அங்கே ராஜா" என்று ஒரு வாசகம் உண்டு. ஆனால், அந்த நிலைமை நம்முடைய நாட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டு ஏழை மக்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய உரிமை இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதிலுள்ள கோளாறு காரணமாகப் பாதிக்கப்படுகிறது. அவர்களைப் பொறுத்த வரையில் இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. நான் நேற்றே சொன்னேன், உரிமைக்கும் உடைமைக்கும் உயிருக்கும் கூட பாதுகாப்பு இல்லாத ஒரு நிலைமை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது என்று. ஆனால் இப்பொழுது மானத்திற்குக்கூடப் பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன். வேறு காரணங்களைச் சொல்லிக்கொண்டு, இரவு 12 மணிக்குக்கூட பெண்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில், அவர்களிடம் அட்டூழியமாக நடந்து கொள்ளக்கூடிய நிலைமையில், தவறாக நடந்து கொள்ளக்கூடிய நிலைமையில் அதிகார இயந்திரம் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துகிறது. வெள்ளைக்காரனுக்கு உள்ளது போல் அந்த அளவுக்கு தனி மனிதனுக்குள்ள அடிப்படை உரிமை நம் நாட்டில் இருக்கிறதா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். மது விலக்குச் சட்டத்தை நல்ல வகையில் சீராக அமைக்க எல்லாக் கட்சிகளினுடைய ஆதரவும் இந்த சர்க்காருக்கு இருக்கிறது. இந்தத் தத்துவம் உண்மையிலேயே மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியது என்பதில் சந்தேகம் இல்லை. வேறு பல மாநிலங்களில் காணப்படும் ஊசலாட்டமும், பலவீனப்படுத்தும் முயற்சியும் நல்ல வேளையாக நம்முடைய மாநிலத்தில் இல்லாமல், இந்தக் கொள்கையைத் திடமாகக் கடைபிடிக்கவேண்டும் என்ற கருத்து இருப்பதை உண்மையிலேயே நாம் பாராட்டுகிறோம். என்றாலும், ஏழை எளிய வாயில்லாப் பூச்சிகளைக் கொடுமைப் படுத்தும் அக்கிரமமான இயந்திரமாக மாறாத முறையில் மது விலக்குத் திட்டத்தை மேலும் மேலும் தீவிரமாக அமல்படுத்தவேண்டும் என்கிற காலகட்டத்தை நாம் அடைந்துவிட்டோம். இதை நல்ல முறையில் அமல்படுத்தும் வகையில் சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை கண்டிப்பாக அமைக்கவேண்டுமென்கிற கோரிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுசொல்லி, இந்தத் தீர்மானத்தை நான் முன் மொழிகின்றேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மது விலக்குச் சட்டத்தை பாரத நாட்டில் எந்தப் பகுதியிலும் கொண்டுவராமல் இருந்த போதே, முன்னோடி மாகாணமாக இந்த மாகாணம்தான் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது. தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் ஏற்படுத்திய நிர்மாணத் திட்டங்களில் முக்கியமானதாக இந்த மதுவிலக்குத் திட்டம் கருதப்பட்டது. கள்ளுக்கடை, சாராயக் கடைகளை எடுப்பதில் இந்த மாநில சர்க்கார் அக்கறை எடுத்து, அக்டோபர் மாதம் 1-ம் தேதி 1937-ல்



பரீட்சார்த்தமாக சேலம் ஜில்லாவில் கொண்டு வந்தது. அதன் பிறகு, மூன்று ஜில்லாக்களில் கொண்டு வந்தது. அதையடுத்து, எட்டு ஜில்லாக்களில் கொண்டு வந்தது. கடைசியாக, மாநிலத்தில் எல்லா ஜில்லாக்களிலும் மது விலக்குத் திட்டத்தைக் கொண்டுவந்து, அது சிறப்பாக நடைபெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

மதுவிலக்குத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்தவேண்டும் என்று மதிப்பிற்குரிய திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். மிகத் தீவிரமாக நம்முடைய மாகாண அரசாங்கம் நல்ல முறையில் மதுவிலக்குத் திட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்பதற்காக 1958-ம் வருஷத்தில் சட்டத்தைத் திருத்தி, அதிக அக்கறை எடுத்து வருகிறது என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குக்கிராமங்களில் ஒரு சில ஏழைகளை பணம் படைத்தவர்கள் தூண்டி, அவர்களைப் பக்கத்துணையாக வைத்துக்கொண்டு சாராயம் காய்ச்சுவதற்கு முற்பட்டார்கள். அதைத் தடுப்பதற்காக அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டது. எங்கே அம்மாதிரி சாராயங்கள் காய்ச்சுவதாகத் தெரிந்தாலும், வியாபாரம் செய்வதாகத் தெரிந்தாலும், அப்பேர்ப்பட்டவர்கள் மீது கேஸ் போட்டு, ஜாமீனில் கூட விடக்கூடாது என்று அரசாங்கம் திட்டம் வகுத்திருக்கிறது. அது மட்டுமல்ல. முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் 5,000 ரூபாய் வரைக்கும் அபராதம் போடலாம் என்றும், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ரூபாய் 1,000 வரையில் அபராதம் போடலாம் என்றும் சட்டத்தின் மூலமாக அதற்குத் தக்க ஏற்பாடு செய்து, அதைத் தீவிரமாக அமுல் படுத்தியும் வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதோடு மட்டுமல்ல. கரும்பிலிருந்து வரும் மொலாஸஸைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு சில இடங்களில் திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கு எத்தனித்துக்கொண்டு வருகிறார்கள். லைசன்ஸ் பெற்றுத்தான் மொலாஸஸ் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். இதைக் கொண்டு கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுகிறவர்களைப் பொறுத்தவரையில் கண்ணுங்கருத்துமாகக் கவனிக்க வேண்டுமென்று அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்து வருகிறது. லைசென்ஸ் மூலமாகத்தான் அதைக் கொடுத்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திடீர் திடீர் என்று கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் போலீஸ் அதிகாரிகள் வேகமாக ஓடும் வாகனங்களில் சென்று, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களை விரட்டிப் பிடிப்பதற்கும் தக்க ஏற்பாடு செய்து இருக்கிறோம். இம்மாதிரி 'ரெய்டுகள்' மூலமும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் பிடிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஏதாவதொரு இடத்தில் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டால் அல்லது விற்பனை செய்யப்பட்டால், அதுபற்றி ரகசியத் தகவலைப் போலீசாருக்கு தெரிவிக்கும்போது, அதை போலீசார் யாரிடத்திலும் சொல்லக் கூடாது என்ற முறையைக் கடைப் பிடித்து, அப்படி ரகசியத் தகவல் கொடுத்து, மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவி செய்கிறவர்களுக்கு சன்மானம், வெகுமதி (ரிவார்டு) கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மேலும் எந்தக் கிராமமாவது மது விலக்குத் திட்டத்தை நடத்துவதில் நல்ல முறையில் ஒத்துழைத்து, அந்தக் கிராமத்தில் குடிகாரர்களே இல்லை, திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவர்களே இல்லை என்று தெரிய வந்தால், அந்தக் கிராமத்திற்கு வாசகசாலையும், ரேடியோவும் ஏற்படுத்தும் நிலைமையை உண்டாக்கி, மதுவிலக்குத் திட்டத்தைச் சிறப்பாக அமல் நடத்துவதற்கு இந்த அரசாங்கம் பாடுபட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

[திரு. பூ. கக்கன்] [30th March 1963

இன்னும் சில இடங்களில் ஃப்ரெஞ்ச் பாலிஷுக்கு லைசென்ஸ் வாங்கிக்கொண்டு, அவற்றைத் தவறாக உபயோகப்படுத்தினால் அதைக் கண்டுபிடித்து, எந்தவிதமான குற்றமும் நடக்காதபடி கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மதுவிலக்குத் திட்டத்திற்கு நம்முடைய மாநிலத்தில் ஜனங்களுடைய ஒத்துழைப்பு நல்ல முறையில் இருக்கிறது. ஒரு சில இடத்தில் ஒத்துழைப்பு இல்லை என்பதற்காக, "பரிபூரணமாக ஒத்துழைப்பு கிடையாது, திட்டம் வெற்றிபெறவில்லை" என்று சொல்லக்கூடாது. நம்முடைய மாநிலத்தில் முன்பு இருந்த நிலையையும் இப்பொழுதிருக்கும் நிலைமையையும் நாம் பார்க்க வேண்டும். அதுவும், ஏழை எளிய பாட்டாளி மக்களிடையே இந்தத் திட்டத்தின் மூலம் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். கிராமத்தில் கள்ளுக்கடை இருந்தபோது, குடித்துவிட்டு தாய்மார்களை அடித்துத் துன்புறுத்திய நிலைமையும் அப்பொழுது இருந்தது என்பது பல கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்ததே. எவ்வளவோ சிரமங்கள் அப்பொழுது இருந்தன.

11-00 a.m. அந்த நிலைமை இப்போது இல்லை. இப்போது நிம்மதியாக வாழ்கிறார்கள். அப்போது அடி வாங்கிக்கொண்டிருந்த தாய்மார்கள் இப்போது நிம்மதியாக வாழ்கிறார்கள். பொருளாதார நிலைமையில் பார்த்தாலும் அவர்களுடைய நிலைமை சீர்பட்டிருக்கிறது. முன்பு சம்பாதிக்கின்ற பணத்தை கள்ளைக் குடித்துவிட்டு, கறி தின்றுவிட்டு குடும்பத்தைப் பட்டினி போட்டுக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அவர்களுடைய குடும்பம் பட்டினி கிடக்கக்கூடிய நிலைமையில் இல்லை. இன்றைக்கு தாய்மார்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். இதையெல்லாம் வைத்து மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம். ஏதோ 50 கேஸ், 100 கேஸ் போட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் மதுவிலக்குத் திட்டம் நல்ல முறையிலே நடைபெறவில்லை என்று சொல்வது சரியல்ல. அரசாங்கம் நல்ல முறையிலே அதிக அக்கறை எடுத்து இந்தத் திட்டத்தைச் சிறப்பான முறையிலே நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது. ஒரு சில இடங்களில் போலீஸ்காரர்கள் அவர்கள் பக்கம் சேர்ந்து விடாமல் இருக்க வேண்டுமென்பதைக் கண்காணிப்பதற்காகத்தான் சி.ஐ.டி. போலீசார் இருக்கிறார்கள். மேலும் "ப்ரொஹிபிஷன் இன்டலிஜென்ஸ் ப்யூரோ" ஏற்படுத்தியிருக்கிறோம். போலீசார் கவனிக்காமல் இருந்தால் அவர்களைக் கவனிக்கும்படி தூண்டுவதற்காக இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மதிப்புக்குரிய மதியழகன் அவர்கள் பேசும்போது, "உரிமைக்கும், உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பு இல்லை" என்ற வார்த்தைகளைச் சொன்னார்கள். நம்முடைய அரசாங்கம் எப்போதும் மக்களுடைய உரிமைகளுக்கும், உடமைகளுக்கும், உயிருக்கும் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள் ஏழைகளாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும் குற்றவாளிகளே. பணக்காரர்களால் தூண்டிவிடப்பட்டு ஏழைகள் திருட்டுச் சாராயம் காய்ச்சினாலும் அதுவும் தவறுதான். எங்கே திருட்டுச் சாராயம் காய்ச்சப்படுவதாகச் செய்தி வருகிறதோ அங்கு போலீசார் "ரெய்டு" செய்து நடவடிக்கை எடுக்கிறார்கள். அப்படி ரெய்டு செய்வதன் காரணமாக ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏழைகள் வாழ்கின்ற பகுதிகளில் மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டாமென்று நாங்கள் யாரும் கூறவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, சந்தேகிக்கப்படுகிற இடங்களுக்குப் போலீசார் செல்வது முறையாக இருந்தாலும், அவர்கள் செல்லுகின்ற நேரத்தில் ஏழை மக்கள் வாழும் குடிசைகளில் இருக்கும் பானை சட்டிகளை எல்லாம் போட்டு உடைக்கும் வகையிலே நடந்துகொள்வதுதான் மோசமாக இருக்கிறது. சாராயம் காய்ச்சப்பட்ட பானையைக்கூடக் கோர்ட்டுக்குக்



30th March 1963] [திரு. மு. கருணாநிதி]

கொண்டுபோக வேண்டியவர்கள் அவர்கள். ஆகவே, ஏழைகளுடைய வீட்டில் இருக்கக் கூடிய பானை சட்டிகளை எல்லாம் எடுத்து வெளியில் எறிந்து தொல்லைக்குட்படுத்த வேண்டாமென்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ஏழைகளை மட்டுமல்லாது, பணக்காரர்களையும் கட்டுப்படுத்தும், பணக்காரர்கள் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இந்த வகையில் இதுவரை பணக்காரர்கள் மீது எத்தனை வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தை இந்த மன்றத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** பணக்காரர்கள் ஏழைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன்:** மதிப்புக்குரிய கருணாநிதி அவர்கள் போலீஸ்காரர்கள் குடிசைகளில் போய், பானை சட்டிகளைப் போட்டு உடைக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாம் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். நல்ல முறையில் நீதி நிர்வாகம் நடப்பதற்காக போலீஸ்காரர்கள் பாடுபட்டு வருகிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே போய் ஏழைகளைக் கெடுக்கவேண்டுமென்று நினைப்பார்களா? அந்த மாதிரி எண்ணம் அவர்களுக்கு வருமா? போலீஸ்காரர்களுக்கு மேலே சப் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். டிபுடி சூப்பரின்டெண்டண்டு இருக்கிறார். அவர்கள் தவறாக அப்படி நடந்தால் வேலை போய்விடுமென்று அவர்களுக்குத் தெரியாதா? ஆகவே, ஒருக்காலும் அவர்கள் அப்படிச் செய்ய முன்வர மாட்டார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாதத்திற்கு இத்தனை வழக்குகளைப் பிடிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தம் போலீஸ்காரர்களுக்கு இருப்பதன் காரணமாக, மாத முடிவில் முன்பு குற்றம் செய்தவர்கள் யார் யாரோ அவர்கள் வீட்டிற்குச் சென்று அனாவசியமாகத் தொல்லைகளைக்கொடுத்து வழக்குப் போடும் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன் :** மாதத்தில் இத்தனை கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்ற காரணத்தால் ஏழைகள் வீட்டுச் சட்டிப்பானைகளை உடைப்பதற்காகப் போவார்களா? ஒருக்காலும் போக மாட்டார்கள். அவர்களும் நம்மைப்போல மனிதர்கள்தான். அவர்களுக்கு நல்ல உள்ளம் இருக்கிறது. அவர்கள் வீணாக ஏழைகளின் குடிசைகளுக்குப் போய் தொந்தரவு செய்யமாட்டார்கள். அவர்கள் ஏழைகளை வீணாக தொந்தரவு செய்கிறார்கள் என்று கற்பனை பண்ணி அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏழைகளாக இருந்தாலும், பணக்காரர்களாக இருந்தாலும் உண்மையிலேயே குற்றவாளிகளாக இருந்தால் தீவிர நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு வருகிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** Is the Hon. Member Sri K. A. Mathialagan pressing his resolution?

**Sri K. A. MATHIALAGAN :** Yes, Sir.

**Mr. SPEAKER :** The resolution is very dubious. Anyhow I will put it to vote.

The question is :—

"That this House approves the stand taken by the Government with regard to Prohibition and urges that in vigerous steps be taken to effectively implement the same."

The resolution was put and lost.

## V.—GOVERNMENT MOTION.

### DISCUSSION ON THE EDUCATIONAL PATTERN

**Mr. SPEAKER**: We shall now take up the Government motion.

**திரு. இரா. நெடுஞ்செழியன்**: "ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் ஸார்", மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எந்த மசோதாவாக இருந்தாலும், தீர்மானமாக இருந்தாலும் முதலிலே இந்த மன்றத்திலே விவாதித்து விட்ட பிறகுதான் மேலவைக்குச் சென்று அவர்கள் விவாதித்து முடிவெடுப்பது என்ற முறையைக் கடைப்பிடித்து வந்திருக்கிறோம். இந்த மன்றம் தன்னுடைய கருத்தை அறிவித்த பிறகு மேலவையினுடைய கருத்தைப்பெற வேண்டுமென்ற முறை கடைப் பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் புதிய கல்வி முறை பற்றிய குறிப்பைப் பொறுத்த மட்டில் முதலிலே மேலவையிலே விவாதித்து முடிவு செய்து பிறகு இந்த மன்றத்திலே விவாதித்து முடிவு எடுக்க வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். இந்த முறை அவ்வளவு சரியான முறை அல்ல. எந்தப் பிரச்னையாக இருந்தாலும், எந்தத் தீர்மானமாக இருந்தாலும், எந்த மசோதாவாக இருந்தாலும் இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்ட பிறகு தான் மேலவையின் கருத்தை அறியும் முறையைக் கையாண்டு வருகிறோம். ஆகவே, இந்த மன்றத்தின் உரிமையைக் காப்பற்றுகின்ற வகையில் அந்த முறை இப்போது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இதை ஒழுங்குப் பிரச்னையாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தின் உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் பற்றி நான் விளக்க விரும்புகிறேன். எந்தப் பார்லிமெண்டு சபைகளிலும் கையாளப்படுகிற முறை மசோதாவாக இருந்தாலும், தீர்மானமாக இருந்தாலும் சட்டசபையிலே விவாதிக்கப்பட்ட பிறகுதான் மேல் மன்றத்திற்குப் போக வேண்டுமென்பதல்ல. "ஃபினான்ஷியல் பில்" ஆக இருந்தால்தான், நிதியைப் பற்றிய மசோதாக்கள்தான் முதலிலே இந்த மன்றத்திற்கு வரவேண்டும். மற்றப்படி நம்முடைய மேல் மன்றத்திலேயே எத்தனையோ மசோதாக்கள் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு நிறைவேற்றப்பட்ட பிறகு, இந்த மன்றத்திற்கு வந்து நிறைவேறியிருக்கின்றன. இந்த மன்றத்திலும் தொடங்காலம், மேல் மன்றத்திலும் தொடங்கலாம். விவாதத்திற்கு எத்தனையோ திருஷ்டாந்தங்களைக் கூறலாம். "Precedent" கூறலாம். இந்த முறை பார்லிமெண்ட் சபைகளிலும் கையாளப்படுகிறது.

அங்கு கொண்டு வந்து பிரேரேபித்து,விவாதிக்கப்பட்டு, சட்டமாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பிறகுதான் இந்த மன்றத்திற்கு வந்தது. அதற்குப் பிறகு இங்கு பரிசீலனை செய்து நிறைவேறியது. ஆகவே இதில் ஒழுங்குப் பிரேரபணை ஒன்றும் இல்லை. அதனால் இந்த மன்றத்தின் உரிமை பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**Mr. SPEAKER**: I will give my ruling on Monday the 1st April 1962.

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM**: Sir, I move :—

"That the Educational Pattern as enunciated in the note placed on the Table of the House on the 25th March 1963 be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, கல்விக்கொள்கையை பற்றி, கல்விமுறைப் பற்றிய விவாதம் இப்போது நடைபெற வேண்டியிருக்கிறது. 25-ம் தேதி இம்மன்றத்தில் இது சமர்ப்பிக்கப்பட்டபோது இங்குதான் முதலில் சமர்ப்பித்தேன்; மூன்று மணிக்கு மேல்தான் மேல் சபையில் இது சமர்ப்பிக்கப்பட்டது. இதுபற்றி விவாதிக்க கோருவதற்கு முன் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், புதிதாக ஒரு கல்வித் திட்டத்தை நான் உருவாக்கி இந்த



மன்றத்தில் சமர்பித்திருக்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம். கல்வித் திட்டம் நீண்ட காலமாக இருக்கிறது. தொன்றுதொட்டு, கல்வி மக்களின் நல்வாழ்விற்கு அவசியம் என்று உணரப்பட்டு வந்திருக்கிறது. கல்விக்கு பெயர் போன நாடு நம் நாடு. இங்கு சிறந்த வரலாறுகள் இருக்கின்றன. பண்டைக்காலத்தில், இரண்டாயிரம் ஆண்டுகள் அல்ல, அதற்கு முன்பு "Vedic times" என்று சொல்வார்கள், அதற்காக கனம் அங்கத்தினர்கள் வருத்தப்படக்கூடாது, "Vedic times" ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு, அப்போதும் உயர்ந்த கல்வி பெற வேண்டுமென்ற கருத்து தமிழ் நாட்டு மக்களுக்கும், பாரத நாட்டு மக்களுக்கும் இருந்திருக்கிறது. அந்தக் காலம் தொட்டே இந்த நாடு ஒன்று. இமயம் முதல் குமரி வரை இந்நாடு ஒரு நாடு என்று உணரப்பட்டு வந்திருக்கிறது. பண்டைக்காலம் தொட்டு இங்கிருந்து அறிஞர்கள், புலவர்கள் இமயம் வரை சென்று அங்குள்ள மக்களோடு தொடர்பு கொண்டு தங்கள் கவித்தன்மையை மற்ற மாநிலங்களில் நிலைநாட்டியிருக்கிறார்கள். சங்கரர், ராமானுஜர், அதற்கு முன்பு ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்றவர்கள், இந்தியா பூராவும் சுற்றி தங்கள் அறிவை மற்றவர்கள் பாராட்டும்படிச் செய்திருக்கிறார்கள். ஆதி சங்கரர் கேரளா நாட்டில் உதித்தவர், அவர் வட நாட்டிற்குச் சென்றார். அங்கு தத்துவ ஞானத்தைப் பற்றி ஒரு விவாதம் நடந்தது. அங்கு ஒரு மேதாவி இருந்தார். அவர் பெயர் மண்டன மிஸ்ரர். அவருக்கும் ஆதி சங்கருக்கும் விவாதம் நடந்தது. சவால் விடும் வகையில் விவாதம் நடந்தது.

அக்காலத்தில் அறிஞர்கள் திக் விஜயம் செய்து வந்தார்கள். அப்போது இவர்களுக்கு மத்தியஸ்தம் கூற இவர்களைப் போன்று சம அறிவு பெற்றவர்களால்தான் கூற முடியும். அப்படி ஆதி சங்கருக்கும், மண்டன மிஸ்ரருக்கும் நடந்த விவாதத்தில் மத்தியஸ்தம் கூற மண்டனமிஸ்ரரின் மனைவியையே தேர்ந்தெடுக்கவேண்டி வந்தது. இதிலிருந்து அன்றும் பெண்கள் உயர்ந்த அறிவு படைத்தவர்களாக இருந்தார்கள், அவர்களிடம் மதிப்பு இருந்தது, அவர்கள் மீது நம்பிக்கை இருந்தது, அவர்கள் உயர்ந்த அந்தஸ்து பெற்றிருந்தார்கள் என்று தெரிய வருகிறது. விவாதம் நடந்து முடிவில் ஆதி சங்காருக்கு சாதகமாக தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அதற்காக மண்டனமிஸ்ரர் கோபித்துக்கொள்ளவில்லை. பின்னர் அவர், ஆதி சங்கருக்கு சீடராகப் போய் விட்டார் என்று வரலாறு கூறுகிறது. ஆக, பண்டைக்காலத்தில் நம் நாட்டில் உயர்ந்த கல்வி இருந்தது. உயர்ந்த அறிவு பெறவேண்டுமென்று வேதங்களும், உபநிஷத்துக்களும் வற்புறுத்தி வந்தன. பின்னால் குறள் ஆசிரியர் போன்றவர்களும் வற்புறுத்தியிருப்பது எல்லோருக்கும் தெரியும். இன்று உயர்ந்த அறிவு இல்லை என்று நான் சொல்ல வில்லை. வள்ளுவர், கம்பர், ஔவை, ஆண்டாள் இவர்கள் உயர்ந்த அறிவைப் பெற்றிருந்தார்கள், அது மட்டும் போதும் என்று சொல்வதற்கில்லை, அவர்கள் பெற்ற அறிவை நன்கு உணர்ந்து நாம் அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இன்று உலகில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம், வளர்ந்து வருகின்ற முன்னேற்றம், விஞ்ஞான முறையில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் இவற்றிற்கு ஏற்றவாறு நாம் நம்மை பக்குவப்படுத்திக்கொள்ளவில்லை என்றால் அதற்கு நாம் காரணம் இல்லை. நம் குழந்தைகளையாவது பக்குவப்படுத்தி வைக்க வேண்டும். குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு நாம் தடையாக இருக்கிறோம் என்ற பெயருக்கு இடம் கொடுக்கக் கூடாது. இன்னும் நாம் அதிக அறிவைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். பண்டைக் காலத்தில் அவர்கள் ஒரு மொழியோடு திருப்தி அடையவில்லை. இதற்காக வேறு கருத்து உள்ளவர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. கம்பன் ஒரு ஒப்புயர்வற்ற காவியத்தை அளித்திருக்கிறான். அதற்கு முன்பு ஏற்பட்டது, வால்மீகி ராமாயணம் என்ற பெயர்பெற்ற காவியம், அந்தக் காவியத்தை கம்பன் காப்பி அடிக்கவில்லை. அதை மொழி பெயர்க்கவில்லை, லிட்டரி டிரான்ஸ்லேஷன் அல்ல, ப்ரீ டிரான்ஸ்லேஷன் அல்ல. அடாப்ட் செய்திருக்கிறார். மேதாவிலாசம் பொருந்தியவன் கம்பன். கம்பன் வால்மீகி ராமாயணத்தை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டின் இயற்கை அழகு, தமிழ் நாட்டின் உயர்ந்த பண்பாடு இதையெல்லாம் மனதில் வைத்து ஒப்புயர்வற்ற காவியத்தை அளித்திருக்கிறான். தொன்றுதொட்டு மாறுதல்கள்

[ திரு. எம். பக்தவத்சலம் ] [30th March 1963

ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. மாறுதல்கள் அதிகமாகக்கூடாது, முக்கியமாக கல்வித்துறையில் கூடாது. அதாவது அடிக்கடி மாறுதல் கூடாது. பண்டைக் காலத்தில் கம்பன் எந்தப் பள்ளியில் படித்தான், எந்தப் பாடத்தைப் படித்தான், வேறு எந்த மொழிகளைக் கற்றுக்கொண்டான், எப்படி இத்தகைய புலமையைப் பெற்றான் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வதற்குரிய ஆற்றல் உள்ளவர்கள் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. கம்பன் படித்தது போதும் என்று சொல்வதற்கில்லை, மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன, அதைத் தவிர்க்க முடியாது. நாம் மாணவர்களாக இருந்த காலத்திலிருந்து பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்னேற்றத்திற்கு ஒரு சிறந்த சின்னம் மாறுதல். ஆனால் அடிக்கடி மாறுதல், ஆண்டுதோறும் மாறுதல் என்று இருக்கக்கூடாது. இப்போது இத் தீர்மானமே ஒரு மாறுதல்தானே என்று சொல்லலாம். நான் மறுபடியும் ஒரு மாறுதல் செய்கிறேன் என்று சொல்லலாம். நான் மாறுதல் செய்யவேண்டுமென்று இதைக் கொண்டு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல மாறுதல்கள் ஏற்பட்டன, அதன் விளைவாக ஒரு முடிவற்ற நிலை இருக்கிறது. நிரந்தரமான நிலை இல்லை. அது வேறு துறைகளிலும் கூடாது, அதுவும் கல்வித் துறையில் அது கூடவே கூடாது. முடிவற்ற தன்மையை மேலும் நீடிக்கக்கூடாது என்று இந்த பொறுப்பை ஏற்றதும் இதுபற்றி பூர்வாங்கமாக ஆராய்ந்து, யார் யாரிடம் கலந்து ஆலோசிக்க வேண்டுமோ, அவர்களைக் கலந்து ஆலோசித்து அடுத்த கல்வி ஆண்டிலிருந்து அமுல் நடத்தக் கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களை, தலைமை ஆசிரியர்களை, கல்லூரி முதல்வர்களை, பல்கலைக் கழக வைஸ் சான்சலர்களை, மற்றபடி பள்ளிகூடங்கள், கல்லூரி நடத்துகிறவர்களை, எல்லோரையும் கலந்து பல பிரச்னைகளைப் பற்றி ஆராய்ந்து, அவர்கள் என்ன கருத்துக்கள் கொண்டிருக்கிறார்கள், என்ன வழி காட்டுகிறார்கள், என்ன யோசனைகள் கூறுகிறார்கள் என்றெல்லாம் தெரிந்து கொண்டு கடைசியில் இந்த மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அரசாங்கம் அமைத்தது. அது தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல. அக்குழுவில் ஆராய்ந்து, கலந்து பேசி இங்கு இத்திட்டம் சமர்பிக்கப்பட்டிருக்கிறது. நாம் எல்லோருடைய கருத்துக்களையும் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தக் குழு எப்படி யோசித்தது என்றப் பிரச்னையில் இறங்கவில்லை. சில சமயங்களில் நல்லெண்ணத்தோடு சில காரியங்களைச் செய்தாலும் பயனில்லாமல் போய் விடுகிறது. அதைக் குறையாகக் கூறவில்லை. நேற்று ஒரு கருத்து இருக்கலாம், இன்று ஒரு கருத்து இருக்கலாம், யாருக்கும் சுதந்திரம் உண்டு. மேலும் சிந்திக்கலாம். ஒரே கருத்துதான் எப்போதும் இருக்கவேண்டுமென்பதில்லை. இப்போதுள்ள நிலைமை என்னவென்றால், உயர் நிலைப் பள்ளியைப் பொறுத்த வரையில் 11 ஸ்டாண்டர்டு ஆக இருந்தது போன ஆண்டிலே 10 ஸ்டாண்டர்டு ஆகக் குறைக்கப்பட்டது. 10 ஸ்டாண்டர்டு ஆகக் குறைக்கப்பட்டதினால் 7, 8-ம் வகுப்பு பாடங்களை ஒன்றாக அமைத்து பாடப் புத்தகங்கள் வகுக்கப்பட்டன. ஆனால் அது மாணவர்களால் கிரகிக்கக்கூடிய அளவில் இல்லை. பல பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் கூட என்னிடம் வந்து சொன்னார்கள். இந்த வகுப்பு தான் மாணவர்களுக்கு அடிக்கல் நாட்டக் கூடிய ஒரு அஸ்திவாரம். இந்தப் படிப்பு தான் மேல் படிப்புக்கு உபயோகப்படக் கூடியது, வேறு துறையில் வாழ்க்கையை நடத்திக்கொள்வதற்கு உபயோகப்படக் கூடிய படிப்பு. இதை கணக்கு போட்டு பிரயோசனம் இல்லை. அந்த சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டது என்றால், அவர்கள் தவறுதலாகச் செய்து விட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அந்த சூழ்நிலையைக் கூற விரும்புகிறேன். இப்போது பி. யூ. சி. என்று இருக்கிறது. அந்த பி. யூ. சி. கோர்ஸை ஹைஸ்கூலில் கொண்டு வந்து விடலாம் என்ற கருத்தை செகண்டரி எஜுகேஷன் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. அந்த முறை வேறு சில மாகாணங்களிலே இருக்கிறது. மஹாராஷ்டிரம், குஜராத், பஞ்சாப், ஆகிய இடங்களில் ஹையர் செகண்டரி படிப்பை ஹைஸ்கூலில் வைத்தார்கள். மறுபடியும் ஹையர் செகண்டரி படிப்பை கல்லூரியில் வைத்து விடலாமா என்று இப்போது யோசித்துக் கொண்டு வருகிறார்கள். உயர்நிலைப் பள்ளிக்குக்கொண்டு வந்து விட்டால், மாணவர்கள் நேராக பி. [illegible]



30th March 1963] [ திரு. எம். பக்தவத்சலம் ]

க்குப் போகலாம். அந்தக் கருத்து அப்போது இருந்தது, அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது முடிவு செய்யப்படவில்லை. அதை ஏற்றுக்கொள்ளலாம் என்பது ஒரு கருத்து, வேண்டாமென்று ஒரு கருத்து நிலவுகிறது. அதைப்பற்றி இனிதான் முடிவு செய்யவேண்டும். அதையொட்டி நான் ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டத்திலேயும் அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஹையர் செகண்டரி கோர்ஸ் உயர்நிலைப் பள்ளியில் இருக்கும் என்ற எண்ணத்தோடு, ஹைஸ்கூலில் 10 ஸ்டாண்டர்டு ஆக குறைக்கப்பட்டது. சென்ற ஆண்டிலே தான் அது அமுலுக்கு வந்தது. இன்னும் 11-வது ஸ்டாண்டர்டு போடவில்லை. இப்போது ஏகோபித்த அபிப்பிராயம், ஆசிரியர்களின் அபிப்பிராயம் எல்லாம் 10 ஸ்டாண்டர்டு ஆகக் குறைப்பது நல்லதல்ல, 11 ஸ்டாண்டர்டு ஆக இருக்கவேண்டும் என்பது தான். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மட்டுமல்ல, கல்லூரியில் இருப்பவர்கள் கூட, பல்கலைக் கழகத்தினர் கூட 11 ஸ்டாண்டர்டு இருக்கவேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். இதை இப்போதே முடிவு செய்யவேண்டும். இன்னும் ஓராண்டு வரையில் விட்டு விட்டால் சிக்கல்கள் ஏற்பட்டுவிடும். நான் சமர்ப்பிக்க விரும்புவது 11 ஸ்டாண்டர்டு ஆகத்தான் இருக்கவேண்டும், உடனடியாக 10 ஸ்டாண்டர்டு என்று இருப்பதை 11 ஆக மாற்றிவிட வேண்டும் என்பதுதான். அதே மாதிரி ஹையர் செகண்டரி இருக்கவேண்டுமா, இல்லையா, என்பது இன்னும் முடிவு இல்லாத ஒன்றாக இருக்கிறது. சென்ற மந்திரி சபையில் அதைப்பற்றி யோசிக்கப்பட்டது. பின்னால் பார்த்து முடிவு செய்யலாம் என்று அப்படியே விட்டு வைக்கப்பட்டது. ஹையர் செகண்டரி கோர்ஸை ஹைஸ்கூலில் வைப்பதால் சில சங்கடங்கள் குறுக்கே நிற்கின்றன. அதை நாம் ஏன் அவசரப்பட்டு செய்ய வேண்டுமென்ற காரணத்தினால்தான் அதிலே இது வரையில் ஒரு முடிவற்ற நிலைமை இருந்தது. இதையும் நாம் தான் இப்போது முடிவு செய்தாகவேண்டும். இப்போது நம் நாட்டில் 1,800 உயர் நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. இவ்வளவு பள்ளிகளிலும் உடனடியாக ஹையர் செகண்டரியைக் கொண்டு வந்தால், இப்போது யூனிவர்சிடியில் பி. யூ. சி.-க்கு என்ன லபோரடரிகள் இருக்கின்றனவோ, அந்த லபோரடரிகள் எல்லாம் இங்கும் அமைத்தாக வேண்டும். உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் ஒரு பகுதியினர்தான் கல்லூரிப் படிப்புக்குச் செல்கிறார்கள். ஹையர் செகண்டரி படிப்பை கல்லூரியில் படித்துக்கொள்ளலாம் என்ற வகையில், கல்லூரி படிக்காத மாணவர்கள் தலையிலும் ஏன் ஹையர் செகண்டரி படிப்பை சுமத்தவேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டது. குறைந்த பட்ச படிப்பு உயர்நிலைப் பள்ளி படிப்பு என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.. இதிலே போய் எதற்கு ஹையர் செகண்டரி பள்ளியை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் எந்த முடிவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. இப்போது பி. யூ. சி. படிப்பு ஓராண்டு இருப்பதைக் கூட போதாது. முன்பு போல இரண்டாண்டாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதுவும் முடிவற்ற நிலைமையில்தான் இருந்தது. அதையும் நாம் தான் இப்போது முடிவு செய்யவேண்டும். ஹையர் செகண்டரியை உயர்நிலைப்பள்ளியில் வைத்துக்கொள்வது என்றால் கல்லூரியில் எத்தனை ஆண்டாக வைப்பது. இப்போது ஒரு ஆண்டாக இருக்கிறது. கல்லூரி நடத்துகிறவர்களுக்கு இது கவலையைத் தருகிறது. முன்பு எல்லாம் பி. ஏ. டிகிரி, பி. எஸ்ஸி. டிகிரி ஆகியவைகளுக்கு இரண்டாண்டு காலமாக இருந்தது, ஹானர்ஸ் டிகிரிக்கு மூன்றாண்டு காலமாக இருந்தது. இப்போது பி.ஏ.பி.எஸ்ஸி., எல்லாவற்றிற்கும் மூன்றாண்டு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாண்டு படிப்பைக் குறைக்கக் கூடாது. அதற்கு மேல் எம். எஸ்ஸி. படிக்கலாம் என்பது அபிப்பிராயம். [illegible]ணம் அங்கத்தினர்கள் இதை ஏற்றுக்கொள்வார்கள் என நினைக்கிறேன். 'ஹ்யூமானிடீஸ்' ஆக இருந்தாலும், ஸயன்ஸ் ஆக இருந்தாலும் கடைசியாக டிக்கிரி வாங்கக்கூடிய படிப்பு மூன்று ஆண்டுதான். ஹைஸ்கூல் படிப்பு 11 ஆண்டுகள், கல்லூரிப் படிப்பு நான்கு ஆண்டுகள், ஆக 15 ஆண்டுகளில் பட்ட படிப்பு முடியும். பி.யூ.சி. இரண்டாண்டாக வைக்க வேண்டுமென்று சொன்னால், மொத்தம் 16 ஆண்டுகள் ஆகிவிடும். 15 ஆண்டுகள் நியாயம், குறையக் கூடாது. ஹையர் செகண்டரியை உயர்நிலைப் பள்ளியிலே வைத்துவிட்டால் ஏற்படக்கூடிய மிச்சம் ஒரு ஆண்டுதான்.

[ திரு. எம். பக்தவத்சலம் ] [30th March 1963

பி.யூ.சி. பொறுத்த வரையில் சில கஷ்டங்கள் இருப்பதை யுனிவர்சிடி கவனித்து வருகிறது. சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று முற்பட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் படிப்பு முறையின்படி உயர்நிலைப் பள்ளியில் 11 ஸ்டாண்டர்டுகள். முன்பு இருந்தது ஆரம்பப் படிப்பு. வேறு, அதற்குமேல் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வேறு. ஆரம்பப் படிப்பு பாஸ் செய்துவிட்டுப் பின் "First Form"-ல் போய்ச் சேர வேண்டுமென்றால் பரீட்சை வைத்துத்தான் சேர்த்துக்கொள்வார்கள். ஆனால், இப்போது 'இன்டகிரேடட்' அதாவது இணைக்கப்பட்ட கோர்ஸாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றிலிருந்து 11-வது ஸ்டாண்டர்டு வரை ஒரு 'இன்டகிரேடட்'
11-30 a.m. கோர்ஸ் ஆகும். 8-வது ஸ்டாண்டர்டிலே இப்போது பப்ளிக் எக்ஸாமினேஷன் கிடையாது. ஆனால், 8-வது படித்தவர்கள் ஜூனியர் டெக்னிக்கல் ஸ்கூலுக்குப் போகலாம். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு படித்தவர்கள் பாலிடெக்னிக்குகளுக்குப் போகலாம். 8-வது வகுப்பு படித்தவர்கள் டெக்னிகல் ஸ்கூலுக்குப் போகலாம். ஆனால் பெரும்பாலான மக்கள் விரும்புவது உயர்நிலைப் படிப்பு பூர்த்தியாக வேண்டும் என்பதுதான். கல்லூரிப் படிப்பு வேண்டாம் என்றாலும் செகண்டரி படிப்பு நிச்சயம் வேண்டுமென்றுதான் பெரும்பாலான மக்கள் விரும்புகிறார்கள். சாதாரணமாக பாலிடெக்னிக்குகளுக்கு போக உயர்நிலைப் பள்ளிப் படிப்பு வேண்டும். ஆக, முதல் 5 வகுப்புகள் ப்ரைமரி, அதற்குப் பிறகு 8-வது வகுப்பு வரை அப்பர் ப்ரைமரி, அதற்குப் பிறகு 11-வது வகுப்பு வரை செகண்டரி. அதற்குப் பிறகு கல்லூரிப் படிப்பு. கல்லூரிப் படிப்பிலே பி.யூ.சி ஒன்று, டிகிரி கோர்ஸ் ஒன்று. இதுதான் கல்வி அமைப்பு முறை.

அதற்குப் பிறகு மொழியைப் பற்றிப் பார்க்கும்போது, த்ரீ லாங்குவேஜ் ஃபார்முலா. இது முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம். இந்த மாநிலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம். மற்ற மாநிலங்களோடு கலந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம். தென் மண்டல மாநிலங்களோடு கலந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட விஷயம். முதல் பார்ட், அதாவது பார்ட் 1—முதல் மொழி, பிராந்திய மொழி அல்லது தாய் மொழி. இதில் மாறுதல் இல்லை. மூன்றாவது பார்ட்டில் ஆங்கிலம். அதிலும் ஒன்றும் மாறுதல் இல்லை. ஆனால், முதல் பார்ட்டில் பிராந்திய மொழி அல்லது தாய் மொழி என்று போட்டிருக்கிறோம். தாய் மொழி தமிழ் மொழியாகத்தான் பெரும்பாலும் இருக்கும். தாய் மொழி வேறு மொழியாகவும் இருக்கலாம். இங்கே பெரும்பாலும் தமிழர்கள் இருந்தாலும், வேறு மொழி பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். தாய் மொழி என்றே போடலாம். ஆனால் ஒருவருக்கு தாய் மொழி தெலுங்காக இருக்கிறது. அவர் தமிழே வேண்டுமென்று கேட்கலாம். ஆகையால்தான் தாய்மொழி அல்லது பிராந்திய மொழி என்று போட்டிருக்கிறோம். பார்ட் 3-ல் ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத இதர மொழி. ஆங்கிலம்தான் பெரும்பாலும் விரும்புகிறார்கள். ஆங்கிலம் என்றே போட்டிருக்கலாம். ஆனால், ஒருவருக்கு ஃப்ரெஞ்ச் வேண்டியிருக்கலாம். இப்போது புதுச்சேரி பாரத நாட்டோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஃப்ரெஞ்ச் கலை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு ஆங்கிலம் வேண்டாம், ஃப்ரெஞ்சு வேண்டுமென்று கேட்கலாம். அந்த மாதிரி ஒரு பாஷை வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் போதிய அளவு இருந்தால் அவர்கள் அந்தப் பாஷையை எடுத்துக்கொள்ளலாம். ஆனால் பொதுவாக ஆங்கிலம் படிக்க வேண்டும் என்ற அவசியத்தை எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். நாங்கள்கூட இப்போது 3-வது வகுப்பிலிருந்து சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தென் மண்டலத்திலுள்ள எல்லா கல்வி அமைச்சர்களும், அரசாங்க காரியதரிசிகளும் எல்லா அதிகாரிகளும் சேர்ந்து பேசிய பிறகு ஏகோபித்த அபிப்பிராயம் இது. கீழேயிருந்து போக வேண்டுமென்பதுதான் எல்லோருடைய அபிப்பிராயமும். முதலில் 5-வது ஸ்டாண்டர்டிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பது என்று இருந்தது. சென்ற ஆண்டு 4-வது ஸ்டாண்டர்டிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தோம். இந்த ஆண்டு 3-வது ஸ்டாண்டர்டிலிருந்து சொல்லிக் கொடுக்க ஏற்பாடு. மேலும் இதை மாற்ற வேண்டாம். 3-வது வகுப்பிலிருந்து இருந்தால் போதும் என்பது எல்லோருடைய ஏகோபித்த அபிப்பிராயம். இரண்டாவது பார்ட்டில்



30th March 1963] [ திரு. எம். பக்தவத்சலம் ]

ஹிந்தி அல்லது வேறு இன்டியன் லாங்குவேஜ் என்று போட்டிருக்கிறோம். ஹிந்தியைப் பொறுத்த மட்டில், எதிலேயுமே கட்டாயம் கூடாது என்பது என் எண்ணம். கட்டாயம் இருந்தால் ரீ-ஆக்ஷன் வருகிறது. ஆனால் ஓரளவுக்கு கட்டாயம் தவிர்க்க முடியாது. பள்ளிக்கூடம் வருவதைப் பொறுத்த வரையில், அட்டெண்டன்ஸ் கட்டாயப்படுத்த வேண்டியிருக்கிறது. கட்டாயம் வேண்டாமென்றால், அவர்கள் இஷ்டப்படி வந்தால் வரட்டும், வராவிட்டால் போகட்டும் என்றால், மாணவர்கள் எப்படிப் பலன் அடைய முடியும்? ஆகையால் கட்டாயம் என்பது முற்றிலும் தவிர்க்க முடியாது. இயன்ற அளவுக்குக் கட்டாயம் தளர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் நல்ல ரீ-ஆக்ஷன் உண்டாகிறது. அது நாம் அறிந்தது. நம்முடைய அனுபவமும் அதுதான். அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஹிந்தி அல்லது வேறு இந்திய மொழி என்று வைத்திருக்கிறோம். நான் முன்பே இந்த மன்றத்தில் தெரிவித்தது போல மாணவர்கள் பெரும்பாலும் ஹிந்தி மொழியைத்தான் கற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆனால் இதற்கு முன்பு பரீட்சை இருந்தது. பரீட்சை இருந்தாலும் எலிஜிபிலிட்டிக்கு, கல்லூரிப் படிப்பு எலிஜிபிலிட்டிக்கு, கல்லூரிப் படிப்புக்கு தகுதி பெற்றவர்கள் என்று தேர்ந்தெடுக்கப்படுவதில், இந்த மார்க்கை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று இருந்தது. நான் இதைப் பற்றி என்னுடைய சுற்றுப் பிரயாணத்தின் போதும், மற்ற சமயங்களிலும் தலைமை ஆசிரியர்களைக் கலந்து பேசியபோது ஒன்று தெரிவிக்கப்பட்டது. ஹிந்திக்கு பரீட்சை என்று வைக்கிறார்கள். பப்ளிக் எக்ஸாமினேஷனில் ஹிந்திக்கு பரீட்சை வைக்கிறார்கள். ஆனால் இது எலிஜிபிலிட்டிக்கு சேர்த்துக் கொள்ளுவது கிடையாது. ஆனால் ஹிந்தி வகுப்பிற்கு வரவேண்டுமென்று இருந்தது. ஹிந்தி படிப்பது மாணவர்களுக்கு நல்லது என்று நான் கூற விரும்புகிறேன். அதைப் பெரும்பாலோர் உணருகிறார்கள். ஆனால் இதிலே கட்டாயம் இல்லாமல் அவர்களாகவே உணர்ந்து கற்றுக்கொள்ளவேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து. பரீட்சை என்று ஏற்படுத்தி விட்டு, என்ன வாங்கினாலும் சரி, வெறும் பேப்பரைக் கொடுத்தாலும் சரி, ஸைஃபர் வாங்கினாலும் சரி பாதகம் இல்லை என்று சொன்னால், அந்தப் பரீட்சை பற்றியே ஒரு அலட்சியம் மாணவர்களிடத்தில் ஏற்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. பரீட்சை இருந்தால் ஏதாவது ஒரு பர்ப்பஸ் இருக்கவேண்டும். பரீட்சை எழுதினால் அனுகூலம் உண்டு. எவ்வளவு மார்க் வாங்கினால் என்ன, கணக்குக்கு எடுப்பதில்லை என்று சொன்னால், மாணவர்களுக்கு படிக்கவேண்டுமென்ற பிரியம் இருக்கிறது, ஆனால் படிக்கவேண்டுமென்ற தூண்டுதல் இல்லை. பரீட்சையில் இதனால் பிரயோசனம் ஒன்றும் இல்லை என்று சொன்னால் பரீட்சை பற்றியே ஒரு அலட்சிய மனப்பான்மை ஏற்படுகிறது. அது நல்லதல்ல என்று பல தலைமை ஆசிரியர்கள் சொன்னார்கள். எனக்கு அது சரி என்று புலப்பட்டது. அதனால் தான் சொன்னேன், பரீட்சை இருந்தால் ஏதாவது பர்ப்பஸ் இருக்கவேண்டும் என்று. பர்ப்பஸ் இருந்தால் பரீட்சை இருக்க வேண்டும். பரீட்சையைத் தவிர்ப்பதல்ல. பரீட்சையே வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் பரீட்சை இருந்தால், பர்ப்பஸ் இல்லாமல் வேண்டாம். அது தான். இந்த ஆண்டிலே அதைப் பற்றி கலந்து பேசுவதற்கு அவகாசம் இல்லை. ஒரு பர்ப்பஸும் இல்லாத பரீட்சை வேண்டாம் என்று இப்போது நடைபெற்ற பரீட்சையில் ஹிந்தி பரீட்சை வேண்டாமென்று சொன்னேன். குறைந்தது இவ்வளவு மார்க் வாங்க வேண்டுமென்று இருந்தால், அப்போது பரீட்சையைப் பற்றி நான் ஆட்சேபிக்க மாட்டேன். இதைப் பற்றி கலந்து பேசித் தீர்க்கவேண்டும். இந்த ஆண்டில் அந்த முறையில் பர்ப்பஸ் இல்லாத, பரீட்சையை வைத்தால் பணம் வீணாக விரயமாகப் போகிறது. ஏதாவது எழுதிக் கொடுங்கள் என்று சொல்லி, ஒரு பரீட்சையை வைத்தால் பணம் வீணாக விரயமாகப் போகிறது. ஆகையால் இந்த ஆண்டுக்கு இந்தப் பரீட்சை வேண்டாம் என்று சொன்னோம். ஏதோ மத்திய அரசாங்கத்தில் சொல்லி விட்டார்கள், அதற்கு நான் அடிபணிந்து விட்டேன் என்று நினைத்துக்கொள்ளலாம். மத்திய அரசாங்கம் ஒன்றும் சொல்லவில்லை. மத்திய அரசாங்கம் ஒன்றும் எங்களுக்கு உத்தரவு போடவில்லை. அந்த மாதிரி உத்தரவு போட மாட்டார்கள்; போட வேண்டிய நிமித்தமும் இல்லை. ஆகையால் இந்த ஆண்டுக்கு ஹிந்தி பரீட்சை வேண்டாம் என்று சொன்னேன். ஆனால் எனக்கு

பின்னால் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட சில ஸ்காலர்ஷிப்புகளை மத்திய அரசாங்கம் வழங்குகிறது, பிற்போக்கு சமூக ஸ்காலர்ஷிப் அல்ல நான் சொல்லுவது. ஹிந்தி பரீட்சையில் மார்க் வாங்குவதைப் பார்த்து சில ஸ்காலர்ஷிப்புகளை மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. சில மாணவர்கள் அப்படி நல்ல மார்க் வாங்குகிறவர்கள் இருந்தால், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஸ்காலர்ஷிப் போகிறதே என்று குறிப்பிடப்பட்டது. தமிழ்நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய ஸ்காலர்ஷிப் போகிறதே என்று குறிப்பிடப் பட்டது. அதைப் பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன். ஆலோசனைக் குழுவில் அதைப் பற்றி யோசித்தோம். குறைந்த பட்ச மார்க் போட்டால், நாம் கூட அஃபிஷயல் லாங்குவேஜ் கமிஷனுக்கே தெரிவித்திருக்கிறோம், அப்படி போட்டால் அது மாணவர்களுக்கு ஒரு பாதகத்தை அளிக்கும் இந்த மாநிலத்தில் உள்ள மாணவர்களுக்கு ஹிந்தியில் படித்து, குறைந்த பட்ச மார்க் வாங்கவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு பாதகம் ஏற்படுகிறது, அவர்கள் முன்னுக்கு வருவதில் பாதகம் ஏற்படும், அவர்கள் ஹிந்தியில் படித்துத் தேருகின்ற நிலையில் இப்போது இல்லை, மாணவர்களுக்கு பாதகம் ஏற்படக் கூடாது என்ற கருத்தை அஃபிஷயல் லாங்குவேஜ் கமிஷனுக்குத் தெரிவித்திருக்கிறோம். அதை மனதில் வைத்துக் கொண்டு தான் இந்த ஃபார்முலா—இந்த ஏற்பாடு. பர்ப்பஸ் இல்லாமல் இருந்தால் பிரயோசனம் இல்லை. பர்ப்பஸோடு தான் இருக்கவேண்டும். மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வருவதாக இருந்தால் அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது. ஆகையால் இந்தப் பரீட்சையை வைக்கலாம், வேறு பரீட்சைகளில், வேறு பாடங்களில் குறைந்த மார்க் இருந்தால் மாடரேஷன் என்று இருக்கிறது—ஸ்கூல் ஃபைனல் பரீட்சையில் இருக்கிறது, மற்ற பரீட்சைகளிலும் இருக்கிறது—அந்த மாதிரி ஏற்பட்டால் ஹிந்தியில் மார்க் வாங்கியிருந்தால் அதையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. படிக்கிறவர்கள் படிக்கட்டும். தொந்தரவு எதும் இடையாது. படிக்காதவர்கள் படிக்கவேண்டியதில்லை. பரீட்சை இல்லை என்றால் படிக்கிறவர்களுக்குக் கூட தூண்டுதல் இல்லாமல் போகிறது. முன்னே எடுத்தார்கள், இப்போது வைத்து விட்டார்கள் என்றால், பரீட்சை என்பதில் ஒரு ஆத்திரமோ, ப்ரெஜுடிஸோ, தவறான கருத்தோ ஏற்பட்டுச் சொல்லுவது மாதிரி இருக்கிறதே தவிர, வேறு இல்லை. ஹிந்தி வேண்டாத மாணவனுக்கு இல்லை என்று சொன்னதும், வைத்திருக்கிற பரீட்சையும் ஒன்று தான். வேண்டுமென்றால் படிக்கட்டும். வேண்டாம் என்றால்—நான் சொல்ல மாட்டேன்—படிப்பது நல்லது, அப்படி படிக்கவில்லை என்றால் அவர்களுக்கு அதனால் பாதகம் இல்லை. ஆனால் படிக்கிறவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் என்னை விட்டு இன்னொருவன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று சொல்லுவது நல்லதல்ல. இன்றைக்கு முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்று இருக்கிறது. ஒருவன் இரண்டாவது வகுப்பில் பாஸ் பண்ணுகிறான். இன்னொருவன் முதல் வகுப்பில் பாஸ் பண்ணுகிறான். இரண்டாவது வகுப்பின் பாஸ் பண்ணியவன், அவன் ஏன் முதல் வகுப்பில் பாஸ் பண்ணினான், அவன் ஏன் அதிக மார்க் வாங்கினான் என்று சொல்ல முடியுமா? இங்கே வீட்டில் செல்லப் பிள்ளையாக ஒரு குழந்தை இருந்து அதோடு இன்னொரு குழந்தையும் படித்துக்கொண்டிருக்கும்போது, செல்லப் பிள்ளையாக இருக்கக் கூடிய குழந்தை பாஸ் செய்யத் தவறி விட்டால், இன்னொரு குழந்தையும் அதே வகுப்பில் இருக்கவேண்டுமென்று சொல்லுவார்கள். அந்த மாதிரி நான் கேட்டிருக்கிறேன். அந்த முறையில் நான் சொல்ல மாட்டேன். அக்கறையோடு படிக்கிறவர்கள் பயன் படுத்திக்கொள்ளட்டும். மாடரேஷனுக்கு உதவும். படிக்காதவர்கள் படிக்க வேண்டாம். அவர்களைத் தொந்தரவு படுத்தவில்லை. அந்த முறையில் தான் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, முன்பு இல்லை என்று சொன்னதற்கும், இப்போது இருப்பதற்கும் மாறுதல் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது சோஷியல் ஸ்டடீஸ் என்பதை ஹிஸ்டரி, ஜாக்கிரபி என்று பிரித்திருக்கிறோம். முன்பு அது இருந்ததுதான். இதிலே ஹிஸ்டரியும் கவனிக்கப்படவில்லை. ஜாக்கிரபியும் கவனிக்கப்படவில்லை. அதைப் பிரித்து இந்த ஆண்டிலேயே அமுலாக்க வேண்டும் என்று இருக்கிறோம். முன்னே விஞ்ஞானம், சரித்திரம் படிக்க வேண்டுமென்றால், அதற்கு வசதி [illegible]





இப்பொழுது ஆப்ஷனலாக ஒரு ஜாபிதா போட்டிருக்கிறோம். ஏதாவது இரண்டை எலக்டிவ் சப்ஜெட்டுகளாக எடுத்துக் கொள்ளலாம். அதற்கு மார்க்கு உண்டு. அது பின்னால் கல்லூரி படிப்புக்கும், டெக்னிகல் படிப்புக்கும் உபயோகமாக இருக்கும். இதெல்லாம் ஒரு ஸ்கெலிடன்தான். இதைப் பொதுவாக அங்கீகரித்தால், பின்னால் அவசியப்படுகிற சிறிய மாறுதல்களை செய்து கொள்ளலாம். கரிகுலமும் அப்படித்தான். ஹிந்திக்கு வைத்திருப்பது போல, ஹிஸ்டரி, ஜாக்கிரபிக்கும் பரீட்சை உண்டு. அது மாடரேஷனுக்காக உபயோகப்படும். அதில் எலிஜிபிலிடி வேண்டாம் என்பது கருத்து. ஸம்ஸ்கிருதமும் அப்படித்தான். கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் இன்றைக்கு ஸம்ஸ்கிருதம் படிக்கிறார்கள். ஆனால், ஹிந்தி படிப்பவர்கள்தான் அதிகம். ஸம்ஸ்கிருதத்தை எலக்டிவ் சப்ஜெட்டுகளில், சேர்த்து, அதை அராபி, உருது போல கிளாஸிகல் மொழியாக சேர்த்திருக்கிறோம். ஆப்ஷனலில் ஒன்றாகவும் எடுத்துக் கொள்ளலாம். இதெல்லாம் புதிய மாறுதல் இல்லை. முன்பு இருந்ததுதான். ஆனால், கொஞ்ச நாளாக இல்லை; இப்பொழுது சேர்ந்திருக்கிறது.

அடுத்தது, போதனாமொழி. அதிலே கூட உயர்நிலைப் பள்ளி வரை இப்பொழுது இருக்கும் நடைமுறை வகையில் தாய்மொழியில்தான் சொல்லிக்கொடுக்க வேண்டும். ஆனால், வேறு மொழி பேசுகிறவர்களும் இருக்கிறார்கள். சில நேரங்களில், சந்தர்ப்பங்களில் வேறு மொழியில் போதிக்க வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட இடங்களிலே, மாவட்டத் தலைநகரங்களில் ஆங்கில மீடியம் வைக்கப்பட வேண்டுமென்று கோரி, அது கவனிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையில் தாய்மொழிதான் போதனாமொழியாக இருக்கும் என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஆங்கிலமும் சில இடங்களில் இருக்கும். பலர் தங்கள் பிள்ளைகளை அம்மாதிரி பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். ஆகவே, ஆங்கிலத்தைத் தொடர்ந்து போதனா மொழியாக சில இடங்களில் வைக்க வேண்டியிருக்கிறது. ஆனால், ஒரு வித்தியாசம். ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கும் பாடம் மிகவும் எலிமென்டரி. சுலபமாகச் சொல்லிக் கொடுக்கலாம். ஆனால், பொதுவாக தமிழிலேதான் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அமுலில் இருக்கிறது.

கல்லூரிப் படிப்பை பொறுத்த மட்டில், அறிவு வளர்ச்சிதான் முக்கியம். நம் மாணவ, மாணவிகள் உயர்ந்த அறிவு வளர்ச்சி அடைய வேண்டும். அறிவு பெறுவது ஒன்று; மொழியிலே பாண்டித்தியம் பெறுவது மற்றொன்று. எங்கெங்கே, என்ன என்ன அறிவு இருக்கிறதோ, அவைகளை எல்லாம் மாணவர்கள் அடைய வேண்டும். சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து ஸ்காலர்ஷிப் வாங்கி, இந்தியாவில் சில பாடங்களை படிக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் வருகிறார்கள். ஹோவர்டு சர்வகலாசாலையிலிருந்து இளம் தம்பதிகள் வந்தார்கள். ஒரு வாரத்திற்கு முன் என்னை சந்தித்தார்கள். அவர்களை நான் கேட்டேன்; நீங்கள் என்ன பாடம் சொல்லி கொடுக்கிறீர்கள் என்று. இந்தியன் ஹிஸ்டரி, இந்தியன் பாலிடிக்ஸ் சொல்லிக் கொடுக்கிறோம் என்றார்கள். அவர்களுக்கு நம் கல்வி முறை, திட்டம் எல்லாம் நன்றாகத் தெரியும். இந்தத் திட்டத்தைப் பற்றிக்கூட, நன்றாகத் தெரியும். ஹிந்தியைப் பற்றிச் சொன்னேன். இதை ஏன் ஆட்சேபிக்கிறார்கள் என்று கேட்டார்கள். சிலர் வேறு வேறு கருத்தோடு ஆட்சேபிக்கிறார்கள் என்றேன். மாணவர்கள் அறிவு எங்கெங்கே இருக்கிறதோ, அதை பெற வேண்டும். இன்றைக்கு நம் சட்டம், ஹிண்டு லா இருக்கிறது. பெரும்பாலோருக்கு அதுதான் சட்டம். அந்தச் சட்டத்திற்கு உட்பட்டிருக்கிறோம். அதில் பாண்டித்தியம் பெற வேண்டுமென்றால், பழைய சட்டங்களை நிறைய படிக்க வேண்டும். அதற்குப் பிறகு கேஸ் லா இருக்கலாம். ஆனால், ஹிண்டு லாதான் முதலில் இருப்பது. ஆகவே, அறிவு பெற வேண்டுமென்பது ஒன்று. மொழியில் பாண்டித்தியம் பெற வேண்டுமென்பது மற்றொன்று. தமிழ் மொழியிலே நாம் பெருமை கொள்வது மட்டும் போதாது. மற்றவர்களும் அதை அனுபவிக்க வேண்டும். அதுதான் அரசாங்கத்தின் அவா. நல்ல இலக்கியங்களைச் சுவைத்து, அனுபவிக்க பிள்ளைகளை பழக்க வேண்டும்.

சென்னை நகரத்தில் வடக்குப் பக்கத்தில் தமிழ் கல்லூரி ஒன்று இருக்கிறது. பல அங்கத்தினர்களுக்குத் தெரியுமோ, என்னவோ, கல்லூரி விழாவிலே நான் கலந்து கொண்டேன். அப்பொழுது சொன்னேன், இன்னும் யாராவது அப்படிப்பட்ட கல்லூரி அமைப்பதானால், அரசாங்கம் அதற்கு வேண்டிய ஆதரவு அளிக்கும் என்று. என்னுடைய அவா, பி.எஸ்.ஸி. யில் மட்டும் தமிழ் இருந்தால் போதாது. மாணவர்கள் எம்.ஏ.-க்கும் அதிகமாக வர வேண்டும். தமிழ் இலக்கியத்தைச் சுவைக்க வேண்டும். அப்பொழுதுதான் பல உயர்ந்த கருத்துக்களையும், விஷயங்களையும் உணர முடியும். மாணவர்களே முன் வர வில்லை என்பதுதான் குறை. அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பாடம் சொல்லிக் கொடுப்பவர்களும், திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். யாருக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறோமோ, அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளுவது என்றாலே, தவறு என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். (ஒரு குரல்: இதை எல்லாம் சொல்ல வில்லை) நேற்று கற்ற பாடம். நாம் சொல்லி கொடுக்கிறோம் என்றால், சொல்லி கொடுப்பதை கேட்டவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பதுதான் முக்கியம். சொல்லுகிறவனுக்கும் ஆற்றல் வேண்டும். அவர்களும் தமிழிலே சொல்லிக் கொடுக்கக் கூடிய ஆற்றல் பெற வேண்டும். கல்லூரி படிப்பு பொறுத்த வரை, ஒருவிதமான புத்தகத்தை மட்டும் படித்தால் போதாது. கல்லூரி படிப்பு என்றால், இன்றைக்கு ஒரு புத்தகம் வரும். நாளைக்கு மற்றொரு புத்தகம் வருகிறது. அந்தப் புத்தகம் பழசாகிவிடுகிறது. ஆராய்ச்சி நடக்கிறது. நடந்து கொண்டே இருக்கிறது. எகனமிக்ஸில் கூட எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. நாளுக்கு நாள் மாறுபட்டுக் கொண்டே இருக்கிறது. இங்கிலாந்தில், அமெரிக்காவில் அது ஆட்சியாளர்களுக்கு எவ்வளவோ கவலை கொடுக்கிறது. நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்கு தீர்வு காண போதிய ஆற்றலும், அறிவும் அவர்கள் பெற வேண்டும். நிறைய படிக்க வேண்டும். (குறுக்கீடு) நிறைய இல்லை என்ற குற்றச்சாட்டிற்குப் பின்னால் வருகிறேன். கல்லூரி மாணவர்கள் ஜர்னலும் நிறைய படிக்க வேண்டும். ஜர்னலும் நிறைய இல்லை. ஒன்று, இரண்டு படிக்கிறோம், அது போதாது. இதெல்லாம் ஒரு காலத்தில் வந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. தமிழ் ஆட்சி மொழியாக வந்திருக்கிறது, தமிழ் போதனை மொழியாக ஆகும், ஆகவேண்டியதுதான் என்று சொன்னோம். அந்த நிலைமை இருக்கிறது, அது வரும். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை வந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். 1963-64-ம் ஆண்டிலிருந்து தமிழை போதனை மொழியாகக் கொண்டு வருகிறோம் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது என்று சொன்னார்கள். அது பற்றி கூட நான் விளக்க விரும்புகிறேன். எந்த சூழ்நிலையில் அப்பொழுது இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது ஹையர் செகண்டரி கோர்ஸ் உயர் நிலைப்பள்ளியில் இருப்பதா, அல்லது கல்லூரியில் இருப்பதா என்று நிச்சயம் தெரியவில்லை. ஹையர் செகண்டரி கோர்ஸ் உயர் நிலைப் பள்ளியில் ஒரு பாகமாக இருக்கும், உயர்நிலைப் பள்ளியில் தாய் மொழியில் பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது, ஹையர் செகண்டரி கோர்ஸிலும் அப்படியே தமிழிலேயே படித்துவிடலாம் என்ற கருத்து இருந்தது. ஹையர் செகண்டரி கோர்ஸை உயர் நிலைப் பள்ளியில் வைப்பது இப்பொழுது சாத்தியமில்லை. அப்பொழுது அம்மாதிரி வைக்கலாம் என்று நம்பி, அங்கே தமிழிலே சொல்லிக்கொடுக்கலாம், அப்படியே அங்கிருந்து கல்லூரியிலும் தமிழை போதனை மொழியாகப் புகுத்திவிடலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது சம்பந்தமாக ஜி.ஓ.-வில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் படிக்க விரும்புகிறேன்.

'It will be open to private colleges to continue to provide English medium of instruction in the B.A. Degree Course even after this change over is effected; but no grant will be payable by the State Government in respect of such courses.'

கல்லூரியில் ஆங்கிலத்தை போதனை மொழியாக வைத்துக்கொள்ளலாம், கல்லூரியில் அம்மாதிரி வைத்துக்கொண்டால் அங்கீகரிக்க மாட்டோம்



என்று சொல்லவில்லை, பணம் கொடுக்க மாட்டோம் என்று சொன்னோம். அப்படிச் சொல்லுவது முறையா என்ற சர்ச்சையில் நான் போக விரும்பவில்லை. அம்மாதிரி கல்லூரிகளுக்கு அங்கீகாரம் கொடுக்க மாட்டோம், "ரெகக்னைஸ்" பண்ண மாட்டோம் என்று சொல்லவில்லை, ஆங்கிலத்தை போதனை மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்று தான் சொன்னோம். அது மாத்திரமல்ல. மந்திரிசபை இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் என்று கேட்டார்கள். ஹையர் செகண்டரி கோர்ஸ் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கல்லூரியில் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒன்றும் நடத்த முடியவில்லை. அடுத்த ஆண்டுக்காக புதியதாக சர்க்கார் 3 கல்லூரிகளில் தமிழை போதனை மொழியாக வைப்பதற்கு, அடிஷனலாக ஒரு செக்ஷன் வைப்பதற்கு இப்பொழுது அனுமதி கேட்டிருக்கிறோம். யுனிவர்ஸிடி வைஸ்-சான்ஸலரோடும் கலந்து பேசினோம். அவர்கள் முன்பு சொன்னார்கள், அம்மாதிரி வைப்பது என்றால் ஆசிரியர்கள் வேண்டும், அதிக செலவாகிறது, இதெல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஹியுமானிடீஸில் தான் தமிழை போதனை மொழியாக வைப்பது என்பது திட்டம். குறைந்தபட்சம் 15 பேர்கள் இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது மீண்டும் ஆலோசித்து 10 பேர்கள் இருந்தால் கூட போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஹையர் செகண்டரி கோர்ஸ் இருக்கும், அதை ஒட்டி கல்லூரியிலேயும் தமிழை போதனை மொழியாக வைத்துவிடலாம் என்று கருதப்பட்டது. இன்றைக்கு ஹையர் செகண்டரி கோர்ஸ் இல்லை என்பது மாத்திரமல்ல. புத்தகங்கள் போடுவதில் இயன்ற அளவுக்கு நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். 62 புத்தகங்கள் இதுவரையிலே வந்திருக்கின்றன. முதலில் 45 புத்தகங்கள் வந்தன. இந்த ஆண்டில் 10 வந்தன, அதற்குப் பிறகு 8 வந்தன, இன்னொரு 10 வரும். இதெல்லாம் இந்த ஆண்டில் வந்ததுதான். சில ஆண்டுகளாக இந்த முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. "பியூரோ ஆப் டமில் பப்ளிகேஷன்ஸ்" இயங்கிக் கொண்டு வருகிறது. இதில் ஒன்றும் உத்தரவு போட்டுவிட முடியாது. டெண்டர் கோட்டு புஸ்தகங்களை வரவழைத்துவிட முடியாது. புஸ்தகங்களை விற்பதற்கு டெண்டர் கோரலாம், அச்சடிப்பதற்கு டெண்டர் கோரலாம். புத்தகங்கள் நல்ல முறையில் எழுதப்படவேண்டும். ஹிஸ்டரி, எகனமிக்ஸ், மற்ற பாடங்களில் இவற்றிற்கெல்லாம் இவ்வளவு புஸ்தகங்கள் வேண்டும் என்று டெண்டர் கோரி புஸ்தகங்கள் பெற முடியாது. கல்வி மாத்திரம் அல்ல, உயர்ந்த கல்வி அளிக்கக்கூடிய வகையிலே ஒரு ஆயிரம் புஸ்தகங்கள் வேண்டும். ஆயிரம் புஸ்தகங்களை உடனடியாகப் போட்டுவிட முடியாது. 1,000 சினிமா கதை கூட அப்படி அவசரமாக எழுத முடியாது. 2, 3 மாதங்களில் எழுதிவிட முடியாது. சினிமா கதையாக இருந்தால் கூட, நல்ல கதையாகத் தான் இருக்கவேண்டும். இல்லையென்றால், யார் பாராட்டுவார்கள்? அது ரொம்பக் கஷ்டம். விஞ்ஞானம், சரித்திரம், எகனமிக்ஸ் போன்ற பாடங்களில் புஸ்தகங்கள் எழுதவேண்டுமென்றால் ரொம்பக் கஷ்டம். ஆராய்ந்து அறிந்து எழுதவேண்டும். காப்பி அடிப்பதில் பிரயோசனம் இல்லை. வெறுமனே டிரான்ஸ்லேட் பண்ணுவதில் பிரயோசனம் இல்லை. ஆசிரியர்கள் கற்று, உணர்ந்து அம்மாதிரி நல்ல புஸ்தகங்களை அளிக்கவேண்டும். நாளைக்கு ஒரு புஸ்தகம் வருகிறது. அதைவிட மாறுதல் ஏற்படுகிறது. ஆராய்ச்சி நடக்கிறது. ஆராய்ச்சியின் விளைவு தான் மாறுதல். இந்தப் புஸ்தகம் பழையதாகப் போய் விடுகிறது. இம்மாதிரி சங்கடம் இருக்கிறது. மாணவர்கள் உயர்ந்த அறிவு பெறுவது எவ்வாறு என்பதைச் சிந்திக்க வேண்டும். "பியூரோ ஆப் டமில் பப்ளிக்கேஷன்ஸ்"-ல் "ஸெல் ஆப் ஆதர்ஸ்" என்று 50 பேர்களை அழைத்து, யுனிவர்ஸிடியோடு கலந்து ஆலோசித்து அங்கிருக்கிற பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, பல பல விஷயங்களைப்பற்றி பாடம் எழுதுவது, குறிப்பு எழுதுவது என்று இப்பொழுது ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

ஏப்ரல் மாதம் 10-ம் தேதி காலையில் "ஸெல் ஆப் ஆதர்ஸ்" தொடங்கப்படப் பேகிறது. 50 பேர்கள் வேண்டும் என்று கேட்டதற்கு 58 பேர்கள் கொடுத்திருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சென்ற முறை அவ்வாறு நடந்தது. இப்பொழுது சென்னையில் நடக்கப்போகிறது. அப்படியெல்லாம்.

முயற்சி நடந்து கொண்டு வருகிறது. குற்றம் சாட்டிப் பயன் இல்லை. ஏன் ஆயிரம் புத்தகங்களை எழுதக் கூடாதா என்று கேட்பதில் பயன் இல்லை. ஆயிரம் போதாது, இரண்டாயிரம் வேண்டும். அவசரப்பட்டு எழுதுவதில் பிரயோசனம் இல்லை. சிறந்த அளவுக்கு எல்லோருக்கும் ஊக்குவிக்க வேண்டும். மற்றவர்களும் ஒத்துழைக்க வேண்டும். யுனிவர்ஸிடியும் ஒத்துழைக்கிறது. மேலும் பல புஸ்தகங்கள் வர வேண்டும் என்ற ஆவல் எனக்கும் இருக்கிறது. பொது அறிவை அளிக்கக் கூடிய புத்தகங்கள், குறிப்பிட்ட பாடங்களில் அறிவை வளர்க்கக் கூடிய புத்தகங்கள் வர வேண்டும். விஞ்ஞானம், ஹிஸ்டரி, எகனமிக்ஸ், ஸோஷியாலஜி எல்லாவற்றையும் பற்றி இப்பொழுது புத்தகங்கள் எழுதப்பட்டு வருகிறது.

மற்றொன்று குறிப்பிட விரும்புகிறேன். மேலும் உயர்ந்த படிப்பு படிக்க வேண்டும். எத்தனையோ பேர்கள் எம்.எஸ்.ஸி. படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். மத்திய அரசாங்கப் பரீட்சைக்குப் போக விரும்புகிறார்கள். இப்பொழுது இந்தியிலும் அந்தப் பரீட்சை நடக்க இருக்கிறது என்று சர்ச்சை இருக்கிறது. அதிலே நான் புக விரும்பவில்லை. ஆங்கிலமும் இருக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். ஆங்கிலமும் இருக்கும். தமிழ் நாட்டு நிலைமை வேறு என்பதை உணர வேண்டும். பாரத நாட்டின் ஒரு பாகம் இது. பாரத நாட்டில் பல மொழிகள் பேசப்படுகின்றன. மத்திய ஆட்சி ஒன்று இருக்கிறது. அந்த ஆட்சியில் நமக்கும் பங்கு உண்டு, நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம்முடைய மாணவர்கள் அங்கு இருக்கும் உத்தியோகங்களில் உரிய பங்கு மட்டுமல்ல, உரிய பங்குக்கு மேலும் கூட, பங்கு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற நிலையும் இருக்கிறது. நம்முடைய மொழியில் மத்திய சர்க்கார் பரீட்சையை வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை என்று மத்திய அரசின் கல்வி அமைச்சர் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்கள். ஆகையினாலே, இப்பொழுது நாம் ஏதோ படிக்கிறோம். தமிழை நன்றாக படிக்க வேண்டும். எம்.ஏ. ரொம்பப் பேர்கள் படிக்க வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு அப்புறம் ஒரு கவலை இருக்கிறது. தமிழ் போதனா மொழியாக வரவேண்டும் என்பதிலே வேண்டிய அக்கறையையும், ஊக்கத்தையும் காட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம். இதிலே தமிழ்தான் படிக்க வேண்டும், ஆங்கிலம் படிக்கவேண்டியதில்லை என்று சொல்லுவதற்இல்லை. அப்பொழுது போட்ட உத்தரவு 1963–64-ம் ஆண்டிலிருந்து கல்லூரியில் தமிழைப் போதனா மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்பது. இப்பொழுதே அந்த உத்தரவைப் போட்டு விட வேண்டும் என்றால் அது நல்லது இல்லை. அதோடு நாட்டிலே இருக்கக் கூடிய ஒரு ஒருமைப்பாடு உணர்ச்சிக்கு நாம் குந்தகம் விளைவிக்கக் கூடாது மேலும் அந்த உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்று நாம் கருத்துக் கொண்டவர்களாக இருக்கிறோம். ஒரு மாநிலத்திற்கு ஒரு மாநிலம் தொடர்பு இல்லை. ஒரு யுனிவர்ஸிடிக்கு ஒரு யுனிவர்ஸிடி தொடர்பு இல்லை. ஒரு மொழி அங்கு இல்லை, படித்துவிட்ட அந்த மொழி அங்கு இல்லை, இந்த போதனா மொழி அங்கு இல்லை என்றால், எப்படி நாம் கற்க முடியும், எப்படி நாம் மேலும் யுனிவர்ஸிடியோடு தொடர்பு கொள்ள முடியும் என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப பார்க்க வேண்டியிருக்கிறது. எப்படி நாம் தொடர்பு கொள்ள முடியும் என்பதை எல்லாம் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுதே அந்த நிலைமை இருக்க வேண்டுமென்றால் இருக்காது. அதற்குக் கொஞ்சம் காலம் ஆகும். கொஞ்சம் பொறுமையோடு இருக்க வேண்டும், நம்பிக்கையோடு இருக்கவேண்டும். ஒரு காலத்தில் அந்த நிலைமை வரும். மற்றவர்களும் அதில் தொடர்பு கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படலாம். மற்ற நாட்டில் ஏற்பட்டிருக்கிறதே என்று எடுத்துக்காட்டலாம். அந்த நிலை இங்கு இன்னும் வரவில்லை. அதை மறுப்பதற்கில்லை, அதை உணராமல் இருப்பதற்கும் இல்லை.

தமிழ் நாட்டில் படித்துத் தேர்ந்தவர்கள் நல்ல புத்திசாலிகள் தான், கூர்மையான புத்தி உள்ளவர்கள். ஆற்றல் உள்ளவர்கள். இவர்கள் நாடெங்கிலும் போற்றப்படுகிறார்கள். நாட்டிற்கு அப்பாலும் போற்றப்படுகிறார்கள். இவர்கள் இன்னொரு இடத்தில் வேலையில் அமர்வது



என்றால்—மத்திய அரசாங்கத்தின் பரீட்சை இருக்கட்டும், சர்க்கார் பரீட்சை இருக்கட்டும்— அதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். டெல்லியில் 20,000 தமிழர்கள் பல்வேறு உத்தியோகங்களில் இருக்கிறார்கள். பம்பாய், கல்கத்தா, ஆமதாபாத், ஜெய்ப்பூர் எங்கு பார்த்தாலும் தமிழர்கள் உத்தியோகங்களில் இருப்பதைப் பார்க்கலாம். எங்கு போனாலும் அங்கு நம்முடைய தமிழர்கள் வந்து சந்திக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அங்கு உத்தியோகத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு பாதகம் விளைவிக்கக் கூடிய வகையில் நாம் எதையும் செய்யலாமா என்பதை யோசிக்க வேண்டும். பொதுவாக மாணவர்களும், பெற்றோர்களும் உயர்ந்த அறிவு பெற வேண்டுமென்று அக்கறை கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த அறிவு பெறுவதற்கு நாம் குறுக்கே நிற்கக் கூடாது என்பதை மட்டும் நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் வகையிலே கல்வியைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இருக்காது என்று நான் நம்புகிறேன். அம்மாதிரி எண்ணம் இருக்கக் கூடாது. கல்வித் துறையை அரசியலுக்கு பயன்படுத்திக் கொள்வது என்று நாம் அப்படிச் சொன்னாலும் தமிழ் நாட்டு மக்கள் கேட்கமாட்டார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். பொதுமக்கள், பெற்றோர்கள், பள்ளிக்கூட மாணவ, மாணவிகள் யாரும் இதனாலே ஏமாறமாட்டார்கள். உயர்ந்த படிப்பு வேண்டும். தமிழிலே மிகுந்த ஆர்வம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது, அதற்கு வேண்டியதை இந்த அரசாங்கம் செய்து கொண்டு வருகிறது, மேலும் செய்யும் என்று மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. மக்கள் இதனால் ஏமாற மாட்டார்கள் என்பதை நான் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு மேலே நான் இந்த மன்றத்தின் காலத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நான் மறுபடியும் விடையளிக்கும்பொழுது, வேறு ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால், சொல்லுகிறேன் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. B. PALANI : Sir, I move—

*Add* at the end of the following :—

" and on such consideration the House while approving the Educational Pattern enunciated in the note is also of the opinion that History and Geography should also be subjects for examination."

The amendment was duly seconded.

SRI K. A. MATHIALAGAN : Sir, I move—

*Add* at the end of the following :—

" and on such consideration the House is of opinion that as originally envisaged the English medium in Humanities be replaced by Tamil medium in all colleges by 1963-64." 12-00 noon

திரு. இராம. அரங்கண்ணல் : அதை நான் வழிமொழிகிறேன்.

SRI M. KARUNANIDHI : Sir, I move—

*Add* at the end of the following :—

" and on such consideration this House recommends, that there shall be no Public Examination in Part II, viz., ' Hindi or any other Indian language not included in part I ' for S.S.L.C."

திரு. எஸ். முருகையன் : நான் அதை வழிமொழிகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

* **புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்வி முறை பற்றிய குறிப்பை இந்தச் சபை முன் கொண்டு வந்து பேசுகின்ற நேரத்தில் தமிழ் நாட்டிலே பழைய காலத்தில் இருந்த ஒரு நிலைமையைப் பற்றி குறிப்பிட்டார்கள். தமிழ் நாடு தமிழ் அறிவோடு இருந்தது என்ற ஒரு நிலை ஏற்படுகிற வகையிலே அவர்கள் கூறினார்கள் என்று நான் நினைக்கிறேன். பழைய தமிழகம் கிழக்கே சீனப் பேரரசோடும் மேற்கே ரோமானியப் பேரரசோடும் வாணிபம் புரிந்து வந்தது. அவ்வளவு பரந்த நாடுகளோடு வாணிபம் புரிந்தது என்றால் அந்த நாட்டு மொழிகளை இந்த நாட்டு மக்கள் கற்காமல் இருந்திருக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து இந்த நாட்டில் பிறந்த தமிழ்ப் புலவர் ஒருவர் வட நாட்டில் இந்தியில் வாதித்து வென்றார் என்ற ஒரு நிகழ்ச்சியை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே தமிழர்கள் குறுகிய நோக்கத்தோடு இருந்தவர்கள் அல்ல. வள்ளுவர் தம்முடைய திருக்குறளில்—

"யாமெய்யாக் கண்டவற்றுளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் அல்ல பிற"

என்று கூறி இருக்கிறார். அதுமட்டுமல்லாமல்—

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்றும் சொல்லியிருக்கிறார். ஆக அந்த நிலையிலே அவர் பல நூல்களைக் கற்றிருக்க வேண்டும். "யாமெய்யாக் கண்டவற்றுளில்லை" என்பதிலிருந்து அவர் பல நூல்களை கற்றிருந்தார் என்பது தெரிகிறது. ஆகவே பழைய காலத்தில் தமிழ் மக்கள் குறுகிய அறிவோடு இருந்து வந்தார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட குறுகிய நோக்கம் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படிக் கூறவில்லை. நான் சொன்னேன், கம்பனே சமஸ்கிருதம் கற்றுணர்ந்து கம்ப ராமாயணம் என்ற காவியத்தை இயற்றியிருக்கிறான் என்று. பண்டைக் காலத்தில் மற்ற மொழிகளைக் கற்றிருந்தார்கள் என்று தான் சொன்னேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் தமிழர்கள் பரந்த எண்ணத்தோடு இருந்த காலத்தில் தமிழை வளர்க்கவும் செய்தார்கள். தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வளர்ந்த மொழியாக இருந்தது. தொல்காப்பிய இலக்கணம் வகுக்கும் நேரத்தில் பிறமொழிச் சொற்களை, பிறமொழிக் கருத்துக்களைச் சேர்ப்பது பற்றி விதி வகுத்திருந்தார்கள். "கடிசொல் இல்லை காலத்துப் படினே" "வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே" என்ற இவை போலும் விதிகளை தொல்காப்பியத்தில் காணலாம். அப்படி தமிழ் மொழியை வளமாக்க வேண்டுமென்பதற்காக வட மொழிச் சொற்களை ஏற்றுக்கொள்கிற நேரத்தில் எப்படி ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற விதியைத் தொல்காப்பியர் கூறியிருக்கிறார். ஆகவே தமிழர்கள் குறுகிய நோக்கோடு இல்லை. நல்ல விதிகளை வகுத்து பிற மொழிச் சொற்களை தமிழ் மயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தையும் ஈண்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இந்தக் கல்வி முறை பற்றிய குறிப்பில் பேசுகின்ற நேரத்தில், நான், சென்ற ஆண்டு கல்விமானியத்தின் மீது பேசும்போது இந்த அமைச்சரவை, ஒரே கொள்கையைச் சார்ந்தவர்கள் 15 ஆண்டு காலமாக இருந்தும் கல்வித் துறையில் அடிக்கடி மாற்றத் தச் செய்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறினேன். அப்படி சொல்கிற நேரத்தில் அமைச்சரவை மாறுகிற நேரத்தில், அமைச்சர்கள் வீடுகளை மாற்றுகிற மாதிரி கல்வித் திட்டத்தை மாற்றுகிறார்கள் என்று கூறினேன். என் குற்றச்சாட்டுக்கு, அமைச்சர்கள்



பதிலளித்த நேரத்தில், "வீடு மாற்றுவது என்றால் லேசாக ஆகிவிட்டதா என்ன, வீடு கிடைக்க வேண்டாமா, சாமான்களைக் கொண்டு செல்ல வேண்டாமா" என்று நான் கூறிய உவமையை எடுத்துப் பேசிவிட்டுச் சென்றாரே ஒழிய நான் சாட்டிய குற்றச்சாட்டை. . . . . . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது நான் ஒன்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்போது ஒரு மாறுதலும் வேண்டாம், அப்படியே இருக்கட்டுமென்று கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் சொல்கிறாரா, அப்படி சொல்வதாயிருந்தால் அதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்போது இருக்கிற கொள்கையைப் பற்றிக் கூறவில்லை. அரசாங்கம் கல்வி முறை பற்றிய ஒரு வெள்ளை அறிக்கையைத் தயாரித்து அந்த அரசாங்கம் தயாரித்த வெள்ளை அறிக்கையை இந்த மன்றமும் இந்த மன்றத்தால் அமைக்கப்பட்ட குழுவும் ஆராய்ந்து, பிறகு அந்த குழு ஒரு அறிக்கையைத் தர, அந்த அறிக்கையை இந்த மன்றத்தில், இந்த மன்றத்தின் அங்கத்தினர்கள் அத்தனைபேரும் மறுமுறையும் ஆராய்ந்து, இப்போது கல்வி அமைச்சராக இருக்கிறவர் உட்பட ஆராய்ந்து எடுத்த முடிவு இப்போது மாற்றப்படுகிறது என்பதைத்தான் நான் இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இப்போது இருக்கிற திட்டத்திலாவது மாற்றம் இல்லாமலிருக்குமா? இந்த பத்து, பதினைந்து ஆண்டுகளில் கல்வித் துறையில் எப்படி எப்படிப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். வார்தா கல்வி முறை, ஆதாரக் கல்வி, ஒரு வேளைப் பள்ளி, மறுவேளைக்குலக்கல்வி, ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலம், மூன்றும் வகுப்பில் ஆங்கிலம், பத்து வருடப் பள்ளிப் படிப்பு, பதினொரு வருடப் பள்ளிப் படிப்பு, சாதாரண தமிழ், சிறப்புத் தமிழ், மூன்றாண்டுப் பட்டப் படிப்பு, நான்காண்டுப் பட்டப் படிப்பு, பள்ளியில் பதினோராம் வகுப்பு, கல்லூரியில் புகுமுக வகுப்பு, கட்டாய இந்தி, விருப்பப்பாட இந்தி, இந்தியில் தேர்வு, இந்தியில் தேர்வு இல்லை, 9 மணிக்குக் கல்லூரி, 10 மணிக்குக் கல்லூரி—என் இப்படிப்பட்ட தடுமாற்றங்கள் இந்த பத்து பதினைந்து ஆண்டுகளாக உண்டாகியிருக்கின்றன என்பதற்கு இந்த அமைச்சரவை மன்றத்தில் சொல்ல வேண்டாமா? அமைச்சர்கள் தங்களுக்குள் இருக்கும் போராட்டத்தில் அருமை மாணவர்களை அலைக்கழிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அமைச்சர்களுக்குள் ஏதோ போராட்டம் என்று சொன்னார்கள். அதை விளக்கினால் நன்றாக இருக்கும்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் அமைச்சர்களுக்குள் போராட்டம் வந்தது என்று குறிப்பிடுவது நல்லதல்ல.

**புலவர் கா. கோவிந்தன் :** சென்ற அமைச்சரவை கொடுத்த திட்டத்தை இந்த அமைச்சரவை மாற்றுகிறது என்பதற்கு ஆதாரம் காட்டுகிறேன். பழைய முறையில் கல்வி ஆண்டின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை பார்ப்போமானால், ஆரம்பக் கல்வி 3 ஆண்டு; உயர் ஆரம்பக் கல்வி 3 ஆண்டு; இடைநிலைக் கல்வி 3 ஆண்டு; இண்டர்மீடியட் 2 ஆண்டு; பட்டப்படிப்பு 2 ஆண்டு; ஆக மொத்தம் 15 ஆண்டுகள். வெள்ளை அறிக்கையில் பார்த்தால் ஆரம்பக் கல்வி 7 ஆண்டு; உயர் இடைநிலைக் கல்வி 4 ஆண்டு; பட்டப்படிப்பு 3 ஆண்டு; ஆக மொத்தம் 14 ஆண்டுகள். இதிலே செயல்பட்டது, ஆரம்பக்கல்வி 7 ஆண்டு; உயர் இடை நிலை 3 ஆண்டு; பி.யூ.சி. 1 ஆண்டு; பட்டப் படிப்பு 3 ஆண்டு; ஆக மொத்தம் 14 ஆண்டுகள். அதை இந்த மன்றம் ஏற்றுக் கொண்டதே, அது என்னவாயிற்று? அது ஏன் மாற்றப்பட்டிருக்கிறது.

இப்போது வருவது எப்படி இருக்கிறதென்றால் ஆரம்பக் கல்வி 5 ஆண்டு; உயர் ஆரம்பக் கல்வி 3 ஆண்டு; உயர் நிலைக் கல்வி 3 ஆண்டு; பி. யூ. சி. 1 ஆண்டு; பட்டப்படிப்பு 3 ஆண்டு; ஆக 15 ஆண்டுகள். அப்படி ஒரு ஆண்டு கூடுவதற்குக் காரணம்—அப்போதிலிருந்த கல்வி

அமைச்சர் விளக்கமாக கூறி இருக்கிறார். அந்த விளக்கத்தை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். அந்த அறிக்கைக்குப் பதிலளிக்கும் நேரத்தில், 1957, நவம்பர் 6-ம் தேதி பேசிய பேச்சு—

"வட இந்தியாவில் பள்ளிக்கூடப் படிப்பு 10 வருஷம், நம் ராஜ்யத்தில் 11 வருஷம். இந்த சிபார்சைப் பார்க்கும் போது 10 வருஷம் என்பதை 11 வருஷமாக பண்ணிக்கொள்ள வேண்டும். 11 வருஷம் என்பதை 12 வருஷம் என்று நீடித்துக் கொள்ள வேண்டும். இப்படி ஒரு வருடம் நீடிப்பதன் மூலமாக இப்போது சர்வகலாசாலையில் பூர்வாங்க படிப்பு என்று வைத்திருக்கிறார்கள், அதற்கு அவசியம் இல்லாமல் இந்தப் பள்ளிக் கூடங்களில் 11 அல்லது 12 வருஷம் படித்து முடிந்தவுடன் நேரடியாக டிகிரி படிப்பிற்குச் செல்லக் கூடிய முறையில் இந்தப் பள்ளிக்கூடப் படிப்பு அமைய வேண்டுமென்பது சிபார்சு. இதைப் பற்றி ஆலோசனை செய்து பார்த்து நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய படிப்பை 11 வருஷத்தை 12 வருஷமாக நீடிக்க வேண்டுமோ என்பதைப் பற்றித் தான் முக்கியமாக பரிசீலனை செய்ய வேண்டும். அதை நல்ல முறையில் நன்கு விவாதித்து, ஆராய்ந்து பார்த்து கடைசியில் ஒரு முடிவாக 11 வருஷம் இருந்தால் போதும் என்ற தீர்மானமான முடிவை இந்தக் கமிட்டி செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முறையில்தான் வெள்ளை அறிக்கையிலும் கண்டிருந்தது. இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது, வட இந்தியாவிலுள்ள குழந்தைகள் 11 வருஷம் படித்து இந்தத் தகுதியைப் பெறக்கூடிய திறமை, அறிவு அவர்களுக்கு இருக்குமானால், நம் குழந்தைகளுக்கு இந்த 11 வருஷம் படித்து தகுதியடைய திறமையும் அறிவும் இல்லையா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியிருந்தது. அப்படி யோசித்துப் பார்த்ததில், நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம், தென் இந்தியாவில் உள்ள குழந்தைகள் புத்திசாலிகள், அறிவுக் கூர்மை பெற்றவர்கள் என்று. அப்படிப்பட்டவர்களுக்கு 12 வருஷம் வேண்டும், மற்றவர்களுக்கு 11 வருஷம் போதும் என்று சொல்லும்போது அது வாதத்திற்கு உகந்ததல்ல என்பதை உணர்ந்துதான் இந்தக் கமிட்டி 11 வருஷமாக இருந்தால் போதும் என்று சிபாரிசு செய்தது."

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 11 வருஷம் இப்போது ஒரு ஆண்டு கூடியிருக்கிறது. இந்த நிலையில் இன்னொன்று பார்க்க வேண்டும். நம்முடைய நாட்டில் இருக்கின்ற மாணவர்கள் ஒரு ஆண்டு கூடுதலாகப் படித்து விட்டு, வட நாட்டில் இருக்கிற மாணவர்கள் ஒரு ஆண்டு குறைத்துப் படித்து விட்டு உத்தியோகத்துக்குச் சென்றால், நம்முடைய மாணவர்கள் உத்தியோகத்தை விட்டு ஒரு ஆண்டு முன்னரே வர வேண்டிய நிலை இருக்கிறது என்பதையும் உணர்தல் வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் கருத்தை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றிய திருத்தம் ஒன்றும் வரவில்லை. 11 ஆண்டுகள் வேண்டாம், 10 ஆண்டுகள் போதும் என்று குறிப்பிடுகிறாரா என்று திட்டவட்டமாக தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன்:** இந்த மன்றத்திலே முன்பிருந்த அமைச்சரவை அளித்த திட்டத்தை ஏன் மாற்றுகிறார்கள் என்பதற்கு எங்களுக்கு விளக்கமளிக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து திட்டத்தை மாற்றுவதற்குரிய காரணத்தை இந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற காரணங்கள் எல்லாம் ஏன் அப்போது பரிசீலிக்கப்பட வில்லை? இதே அமைச்சர் அந்த அமைச்சரவையிலும் இருந்தார்களே? அவர்கள் 11 ஆண்டு திட்டத்தை மாற்றுவதற்கு இப்போது கூறும் காரணம் அப்போது ஏன் அவர்களுக்குத் தெரியாமல் போயிற்று? இந்தக் குறைகளை இவரால் அப்போது காண முடியவில்லையா?





"இந்த நிலையில், 1962–63-ம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டத்தை அரசினர் வகுக்க வேண்டியிருக்கையில், புதிய திட்டத்தால் ஏற்படும் சில பிரச்னைகள் கவனத்துக்கு வந்தன. இம்மாற்றங்களைச் செய்ய வேண்டுமென முதலில் தீர்மானித்த காலத்தில் இப்பிரச்னைகள் இவ்வாறு உருவெடுக்குமென முன்கூட்டியே உணரப்படவில்லை."

என்று குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். ஏன் உணரப்படவில்லை? வேறு எங்கிருந்தாவது மந்திரிகள் வந்து சேர்ந்தார்களா?

"இம்மாநிலத்தில் ஏராளமான உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையுமே மேல் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதானால், 10 ஆண்டுகளோ அதற்கு மேலோ ஆகும்.

உயர்நிலைப் பள்ளிகள் 11-வது ஸ்டாண்டர்டு ஏற்படுத்த ஏகப்பட்ட செலவாகும். பட்ட மேற்படிப்பு தகுதியுள்ள ஆசிரியர்களையே நியமிக்க வேண்டிவரும்.

உயர் இடைநிலைப் படிப்புக்குச் சாதனமும் தகுந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பதில் உள்ள வரையறை.

உயர்நிலைப் படிப்பு ஒரு மொழியில் கற்றிருக்க கல்லூரிப் படிப்பை வேறொரு மொழியில் கற்க வேண்டிய பிரச்னை. கல்லூரி புகுமுக வகுப்பில் ஓராண்டுக்குள் இதற்குத் தயாராக வேண்டியிருக்கிறது."

இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் அப்போது எப்படி உணராமல் போய்விட்டார்கள் என்பதுதான் இப்போது கேட்கின்ற கேள்வி. இன்னொன்றும் கூறப்பட்டிருக்கிறது.

"... இச்சீரமைப்பின் விளைவாக விரும்பாத கல்விச் சபைகளும் ஆசிரியர் சங்கங்களும் பள்ளிகளில் படிக்கும் காலம் 11 ஆண்டிலிருந்து 10 ஆண்டாகக் குறைந்து விடுவது குறித்தும், இதனால் முதிராத நிலையிலேயே மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்க வேண்டிய நிலை குறித்தும் ஆட்சேபம் தெரிவித்தன. எட்டு ஆண்டு ஆரம்பக் கல்வியை 7 ஆண்டு ஆரம்பக் கல்வியாக சுருக்கியதன் விளைவாக பாடத் திட்டம் அதிகமாகியிருப்பதாகவும், சிறு வயதிலேயே மாணவர்கள் இவற்றையெல்லாம் புரிந்து கொள்வது கடினமென்றும் அவர்கள் கூறினர்."

இதிலே ஏற்பட்டிருக்கின்ற நிலைகளை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். எட்டு ஆண்டுப் படிப்பை ஏழு ஆண்டுப் படிப்பாக மாற்றியமைக்கும் போது பாடத் திட்டத்தை அதற்கேற்றவாறு எப்படி அமைக்க வேண்டுமோ அப்படி அமைக்காமல், எட்டாவது வகுப்புப் பாடத்தை அப்படியே 7-வது வகுப்புக்கு வைத்து, 7-வது வகுப்புப் பாடத்தை அப்படியே 6-வது வகுப்புக்கு என்ற நிலைமையில் வைத்து விட்ட காரணத்தால்தான் மாணவர்களுக்குத் தாங்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன்:** கல்வித் திட்டத்தைப் பற்றி விளக்குவதற்குக் கூடுமான அளவு காலம் கொடுத்தால் கருத்துக்களை எடுத்துக் கூற முடியும். குறுகிய காலத்திலே விளக்க முடியாது என்பதால் இப்போது உட்கார்ந்து விடுவதுதான் நல்லது.

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்களைப் போன்றே இந்த விவாதத்தில் பங்கு கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அநேக அங்கத்தினர்களுக்கும் இருக்கிறது. ஆகவே, சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக இன்னும் இரண்டு நிமிஷத்திற்குள்ளாகச் சொல்லிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[30th March 1963

**புலவர் கா. கோவிந்தன் :** அடுத்து மூன்று மொழிக் கொள்கையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். மூன்று மொழிக் கொள்கை இந்த நாட்டுக்குத் தேவையா என்பதைத்தான் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். "எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் நடைமுறை நிகழ்ச்சியை மனத்தில் வைத்து எப்படிப்பட்ட நிலை இருக்க வேண்டுமென்று எண்ணிப் பார்த்து முடிவு செய்ய வேண்டும்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே கேள்வியைத்தான் நானும் கேட்கிறேன். நம் மாணவர்களுக்கு மூன்று மொழி தேவைதானா? ஒன்று இந்தி வேண்டுமென்று சொன்னால், ஆங்கிலம் தேவை இல்லை, இந்தி மட்டும் இருக்கட்டும் என்று சொல்லட்டும். ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லக் காரணம் இந்தியாவோடு நிற்காமல் மேலும் பல நாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமை இருப்பதுதான். மேலும் பல நாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமையில், இந்தியாவுக்கு பொது மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளக்கூடாதா என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உலகம் பூராவுக்கும் ஏற்ற மொழி ஆங்கிலம் என்ற நிலையில் ஆங்கிலம் தேவை என்று வற்புறுத்தப்படுகிற நிலையில் இந்த நாட்டில் மட்டும் ஏன் அந்த மொழியை வைத்துக்கொள்ளக்கூடாது? இதை அரசியல் கண் கொண்டு பார்க்கவேண்டாம். வெள்ளைக்காரன் மொழி என்ற காரணத்திற்காக ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது. ஆங்கிலத்தைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஆங்கிலத்தைப் பொது மொழியாக வைத்துவிட்டால் நமக்கு இரண்டு மொழி போதுமானது. தமிழ், ஆங்கிலம் இரண்டையும் மாணவர்கள் படித்தால் போதும். இந்தி படிக்கவேண்டுமென்று கட்டாயம் அவசியமில்லை. இதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அமைச்சர் அவர்கள் இந்தி கட்டாயம் இல்லை; அதில் மார்க்கு வாங்கவேண்டும் என்பதுகூட இல்லை என என்னென்னவோ சொன்னார்கள். தெருவிலே போகிற மாயக்காரன் குழந்தையிடம் மருந்து தடவிய மிட்டாயைக் கொடுத்து காதிலே இருக்கின்ற கடுக்கனைக் கழட்டிக் கொண்டு போகின்றவனைப் போல, அமைச்சர் அவர்கள், "இந்தியிலே எடுக்கக்கூடிய மார்க் மற்றப் பாடங்களில் எடுக்கவேண்டிய மார்க்குகளுக்கு ஈடுகட்டும்" என்று சொல்லுகிறார்கள். இந்த நிலை இந்தியை நுழைப்பதாகத்தான் அர்த்தம். இது தகுமா?

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சொன்ன உவமை இந்தச் சபையின் கவுரவத்திற்கு உகந்ததாக இல்லையென்று சொல்லிக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** அடுத்து பயிற்சி மொழியைப் பற்றி ஒரு சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். தமிழ்ப்பயிற்சி மொழியாக இருக்கும் கல்லூரிக்கு மாணவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். நான் ஏற்கெனவே ஒரு முறை சொல்லியிருக்கிறேன்—ஒரு இடத்தில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்ற நிலையை வைத்துவிட்டு இன்னொரு இடத்தில் தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டத்தை வைத்திருப்பதன் காரணமாகத்தான் மாணவர்கள் வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள், 10 மாணவர்கள்தான் வந்தார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? படிப்பு என்பது இன்றோடு முடியக் கூடிய ஒன்றல்ல. மாணவர்கள் துணிந்து தமிழை எடுத்து படிக்கவும் முடியாத சூழ்நிலை நிலவுகிறது. இந்த அரசை நம்பி எதையும் செய்ய முடிவதில்லை. இன்று கடைப்பிடிக்கப்படுகிற திட்டம் மறுநாள் இருப்பதில்லை அந்த பயம் இயல்பாகவே மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றிக்கூட முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் ஒன்றைக் கூறியிருக்கிறார்கள். அதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"பயிற்சி மொழியாகத் தமிழ் எடுத்துப் படித்தவர்களுக்கு தான் உத்தியோகத்திற்கு எடுப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்போகிறோம் என்றால், தானாகவே இதற்கு முக்கியத்துவம் வந்துவிடும்." ஆகவே, நம்முடைய தமிழ் மொழியை உயர் நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் அமைச்சர் அவர்களுக்கு இருக்குமானால், ஒரு பாதுகாப்பை, உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டும்



30th March 1963] [புலவர் கா. கோவிந்தன்]

அப்படி பாதுகாப்பும் கொடுக்காமல், கேலியும் செய்கின்ற நிலைமையிலே அமைச்சர் இருந்தால், மாணவர்கள் எப்படி முன் வருவார்கள்? ஆகவே, இந்த அமைச்சரவை ஏற்கனவே திட்டமிட்டபடி ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருப்பதை மாற்றி தமிழ்தான் பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்ற கொள்கையை நிலைநாட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். அதே நேரத்தில் பயிற்சி மொழியாக ஆங்கிலம் இருப்பதை அகற்றவேண்டுமென்று சொன்னாலும், மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை சொல்லிக்கொடுக்கும் பாடத் திட்டத்தை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆங்கில அறிவு வளரத்தான் வேண்டும். அதிலே எங்களுக்கோ எங்களுடைய இயக்கத்திற்கோ எந்தவிதமான கொள்கை வேறுபாடும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சமூக பாடத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். வரலாறு, நிலநூல் இரண்டும், ஒன்றாக இருந்ததை இரண்டாகப்பிரித்தது வரவேற்கத்தக்கது. நண்பர் பழனி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கும் வகையில் அந்தப் பாடங்களிலே தேர்வு இருக்கவேண்டும். தேர்வு இல்லையென்றால் மாணவர்கள் அந்தப் பாடங்களை விரும்பிப் படிக்க மாட்டார்கள். "ஜெனரல் மாத்தமாடிக்ஸ்"ம் வரவேற்கத்தக்கது. சிறப்புப் பாடம் அத்தனையையும் படிக்க மாணவர்களால் முடியாது. ஒன்றை மட்டும் படித்தால் போதும். புகுமுக வகுப்பை—11-வது வகுப்பைப் பள்ளிகளில் வைப்பதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட கஷ்டம் அவர்களுக்கு இருக்கும் நிலைமையில் விருப்பப் பாடமாக அவ்வளவு பாடத்தையும் எடுத்துப் படிக்க முடியாது. குறிப்பாக, சில பாடங்களை மட்டும் படித்தால் போதும்.

கடைசியாக ஒரு கருத்தை இந்த இடத்தில் கூற விரும்புகிறேன். ஆரம்பக்கல்வியைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆரம்பக் கல்வியைப் பற்றிய வெள்ளை அறிக்கை வந்தபோது, ஒரு உண்மை தெரிந்தது. ஒன்றாவது வகுப்பில் நுழைகின்ற மாணவன் ஐந்தாவது வகுப்புவரை போகக் கூடிய நிலை இல்லை. மூன்றில் இரண்டு பகுதி மாணவர்கள் அடியோடு நின்றுவிடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஐந்தாவது வகுப்பில் படிக்கத் தக்க வயதுடைய மாணவர்கள் 3,60,000 இருந்தால், ஐந்தாம் வகுப்பிலும் அதற்கு மேலே உள்ள வகுப்பிலும் படிக்கும் மாணவர்கள் 150,000 பேர்தான். ஆகவே, 2,10,000 பேர்தான் ஐந்தாம் வகுப்பிற்குப் பிற்பட்ட வகுப்புகளிலேயே நின்று விடுகிறார்கள். டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமையில் இயங்கிய எலிமெண்டரி எஜுகேஷன் ரிபார்ம்ஸ் கமிட்டி அறிக்கையிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாணவர்கள் ஐந்தாவது படித்து முடிக்கவேண்டிய நேரத்தில் ஐந்தாம் வகுப்புக்குக் கீழே நின்றுவிடுவதால் அரசாங்கப்பணமும் வீணாகிறது. அவர்கள் வயதும் வீணாகிறது என்று அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். சிறப்பாக அவர்களுக்கு நல்ல முறையிலே பாடம் சொல்லிக் கொடுக்கப்படாமைதான் இதற்குக் காரணம் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. அதை எப்படிப் போக்க முடியும்? ஆசிரியர் மாணவர் விகிதாசாரத்தை பற்றி என்னென்னமோ பேசுகிறார்கள். ஒரு பள்ளியில் 30 மாணவர்கள் இருந்தால் அந்த 30 பேரில் 10 பேர் ஒன்றாவது வகுப்பு, 10 பேர் இரண்டாவது வகுப்பு, 10 பேர் மூன்றாவது வகுப்பில் படிக்கிறார்கள். புராணத்திலே சிவனுக்கு உபதேசம் செய்த முருகனுக்கு ஆறுமுகம் தேவைப்பட்டது. தட்சிணாமூர்த்தி கடவுளால் (நான் நம்முடைய ஈரோட்டுப் பெரியாரைக் குறிப்பிடவில்லை) நான்கு மாணவர்களுக்குத்தான் உபதேசம் செய்ய முடிந்தது.

இந் நிலையில் மூன்று வகுப்புக்களுக்கும் சேர்ந்து ஒரு ஆசிரியர் வைத்து எப்படி பாடம்சொல்லிக்கொடுக்க முடியும், வீட்டில் வளர்க்க முடியாத பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்புவது தவிர வேறு ஒரு பலனும் இல்லை. ஆகவே நான் சொல்வது, ஒரு வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கவேண்டும். வேண்டுமானால் 30, 40 மாணவர்களைப் போடுங்கள். ஒரு ஆசிரியருக்கு பல வகுப்பு மாணவர்கள் என்ற நிலை இருந்தால் அங்கு ஒரு வகுப்பில் பத்து பிள்ளைகள் இருந்தால்கூட நிச்சயமாக கல்வித் தரம் வளராது என்று கூறி அந்நிலையை உண்டாக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[30th March 1963

**திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கையைப் பற்றி ஒருசில கருத்துக்களை நான் சமர்ப்பிக்கிறேன். கல்வி மிக மிக முக்கியமானது. அதுகுறித்து கருத்து வேறுபாடு இருக்க முடியாது. "Men may come and men may go but I go on for ever." என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. அதற்கேற்ப கல்வி வளர்ந்து கொண்டே வருகிறது. எந்த சமுதாயம் எப்படி வந்தபோதிலும் கல்வியின் தரம் காலத்திற்கேற்றவாறு பெருகி வருகிறது. அதை உத்தேசித்துத்தான் கல்வியில் ஒரு திருப்பத்தை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். கல்வித்தரம் உயரவேண்டுமென்றால் அதை ஆணித்தரமாக படித்தால்தான் தரம் உயரும். ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையுமா என்று சொல்வார்கள். பசுமரத்தில் அடித்த ஆணி என்று சொல்வதுபோல், நன்கு படித்தால்தான் அம்மொழியில் உள்ள குணங்களைப் பெறமுடியும். தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் தேர்வுக்கு மார்க் வைத்து விட்டு இந்தியில் மார்க் வாங்கினால் அதை மாடரேஷனுக்கு எடுத்துக்கொள்ளலாம், இந்தியை எழுதினாலும் எழுதாவிட்டாலும் பரவாயில்லை என்ற தர்மசங்கடமான நிலை இருக்கக் கூடாது. இந்தியை எடுத்துக்கொண்டாலும், அதில் இவ்வளவு மார்க்ஸ் இருக்க வேண்டும், 15, 20 மார்க்ஸ் இருக்கவேண்டும் என்று வைத்தால்தான் அதைப் படிக்க மாணவனுக்கு அக்கறை ஏற்படும். "கற்க கசடறக் கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற மூதுரைக்கேற்ப நாம் கற்பதை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். பேசிக் கல்வி முறை, நான் பேசிக் முறை இவ்விரண்டையும் இணைக்கும் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள், அதை வரவேற்கிறேன். அதனால் இன்றுள்ள பல சிக்கல்கள் தீரும். ஜப்பானில் இந்த முறையை வைத்திருக்கிறார்கள். 8 ஸ்டான்டேர்ட்வரை பொது அறிவு பெற்று அதற்குமேல் அவரவர்களுக்கு எதில் தேர்ச்சி இருக்கிறதோ அத்துறையில் அறிவு வளர்ச்சி பெறும் முறையில் இருக்கிறது ஜப்பான் தேசத்து முறை. இங்கும் அதேபோல் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். இன்று கல்லூரிகளில், பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ், தர்ட் கிளாஸ் என்று மூன்று வகுப்புகளில் தேர்வு கொடுக்கிறார்கள். ஆனால் நாட்டில் பர்ஸ்ட் கிளாஸ் செகண்ட் கிளாஸ், என்று இரண்டு கிளாஸ்கள்தான் இருக்கின்றன. எதற்கும் பர்ஸ்ட் அண்ட் செகண்ட் கிளாஸ்தான் தேவைப்படுகிறது. முதலில் பர்ஸ்ட் கிளாஸ் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள். பின்னர் செகண்ட் கிளாஸ் இருக்கிறதா என்று பார்க்கிறார்கள்.

முன்வருகிறவர்களுக்கு சர்க்கார் ஆதரவு கொடுத்து அப்படி புத்தகங்கள் எழுதக் கூடியவர்களுக்கு உற்சாக மூட்டவேண்டும். கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசும்போது சீக்கிரத்தில் தமிழில் கொண்டு வரவேண்டும், ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்டார்கள். "slow nl steady wins the race" என்று கூறுவார்கள். அதேபோன்று ன்றை அடையவேண்டுமென்றால் அதற்கான பக்குவம், அதற்கான பாடப் த்தகங்கள், அதற்கான ஒரு 'social atmosphere' எல்லாவற்றையும் தயாரித்துக் கொண்ட பிறகுதான் கொண்டு வரவேண்டும். தமிழில் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றால் அதற்கான புத்தங்களும் இல்லை, ஆசிரியர்களுக்கும் சொல்லிக்கொடுக்க முடியவில்லை. ஆகவே அவசரப்பட்டு செய்யாமல் நம் சர்க்கார் ஒவ்வொன்றையும் ஆற அமற யோசித்து கொண்டு வருகிறார்கள். அவசரப்பட்டு தமிழைக் கொண்டு வந்தால், போதிய வசதிகள் இல்லாவிடில் மாணவர்கள் படித்து தேர்வு பெறமுடியாது. அப்படி யோசித்துக்கொண்டு வந்தும், அதில் ஏதாவது இடைஞ்சல்கள் இருந்தால் அதை மாற்றியமைக்க சிறிது கூடத் தயங்காது ஜனநாயக அடிப்படையில் செயல் புரிந்து வருகிறது நம் அரசாங்கம். ஆகவே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததை எதிர்க்கவேண்டுமென்ற முறையில் எதிர்கட்சி உறுப்பினர்கள் பேசுவார்களானால் மாணவர் சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறியவர்களாவார்கள் என குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்றாம் கிளாஸ் என்று உதவாக்கரையாகக் கொடுத்து விட்டு அவர்கள் வேறு வேலை கிடைக்காமல் ஆசிரியர் வேலைக்கு வருகிறார்கள். நல்ல திறமையான ஆசிரியர்கள் வேண்டுமென்று கூறும்போது இவர்கள்தான்



30th March 1963] [திரு. கி. இரா. சம்பந்தம்]

வருகிறார்கள். ஆகவே, இந்த தேர்ட் கிளாஸ் என்பதை எடுத்து விட்டு பர்ஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ் என்று இரு பிரிவுகளாகத்தான் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காம்பட்டீட்டிவ் எக்ஸாமினேஷன்களில் தேர்ட் கிளாஸில் பாஸ் செய்தவர்கள் பங்கு பெற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இரண்டு கிளாஸ் என்றிருந்தால் இவர்களும் அவற்றில் பங்கு பெற வாய்ப்பு ஏற்படும். ஆகவே இதில் ஒரு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கட்டாய தேசீய மாணவர் படைப் பயிற்சி இப்போது மாணவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்றிருப்பதை வரவேற்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கும் இந்த கட்டாய தேசீய மாணவர் படைப் பயிற்சி அளிக்கவேண்டும். டயரக்டரால் அல்லது சர்க்காரால் பொறுக்கியெடுக்கப்பட்ட ஒரு சில பள்ளிகளில் இப்பயிற்சி இப்போது கொடுக்கப்படுகிறது. ஆனால் கல்லூரிகளில் எல்லா மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. தற்போதைய நெருக்கடி நிலையை உத்தேசித்தாவது பள்ளி மாணவர்களுக்கும் தற்காப்பு செய்து கொள்ளக்கூடிய முறையிலாவது, அவர்களுக்கும் உற்சாகம் ஊட்டக்கூடிய அளவில் இந்தப் பயிற்சி கொடுக்கப்படவேண்டும். அடுத்தப்படியாக, லோயர் கிரேட் என்றிருந்தது. அதைப்படிப்படியாக மாற்றி ஹையர் கிரேடாக கொண்டு வந்து விட்டார்கள். செகன்டரி கிரேட் படித்தவர்களைக் கூட 1, 2 வகுப்புகளில் வேலை செய்தால், அவர்களுக்கு ஹையர் கிரேட் சம்பளம்தான் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட குழப்பமான நிலைக்கு தீர்வு காண இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அவர்களுக்கு குறிப்பிட்ட காலத்தைக் கொடுத்து அதற்குள் செகன்டரி கிரேட்டுக்கு க்வாலிபை செய்து கொள்ளவேண்டுமென்று சட்டத்தைத் திருத்தவேண்டும். கல்வியில் உள்ள கஷ்டங்கள், நடைமுறைக்கு அவை வரும்போதுதான் தெரிய வருகிறது. தமிழை கல்லூரியில் வைக்கவேண்டுமென்று அவசரப்பட்டுக் கொண்டு வந்தோம். அப்படி வந்த பிறகு உள்ள நிலைமையைப் பார்க்கும்போது அதற்கான பாடப் புத்தகங்கள் இல்லை, விஞ்ஞானத் துறையில் தேர்ச்சி பெறவில்லை என்பதைக் காண்கிறோம். ஆக்ஸிஜன் என்று சொன்னால் அதை ஜப்பானில் அவர்கள் மொழியில் எழுதுகிறார்கள். இங்கு தமிழில் அதை "பிராண வாயு" என்று எழுதுகிறார்கள். ஆகவே தமிழில் எழுதும்போது ஆக்ஸிஜன் என்று எழுதிப் படித்து வந்தால் கல்லூரிக்குப் போகும்போது—விஞ்ஞானத் துறையில் உலகில் பேசப்படுகிற 12-30
வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும்—மாணவர்கள் நன்கு அதைக் p.m.
கற்று தேர்ச்சி அடைய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே அந்த முறையில் பாடப் புத்தகங்கள் எழுத முன்பு "ஆப்ஷனல்" சப்ஜட்டுகள் இருந்தன. நான் கூட ஃபிஸிக்ஸ் "ஆப்ஷனல்" சப்ஜட்டாக எடுத்துப் படித்தேன். அவரவர்களுக்கு எதெதிலே திறமை இருக்கிறதோ அதை "ஆப்ஷனல்" சப்ஜட்டாக எடுத்துப் படித்து அதிலே பாண்டித்தியம் பெறுவதற்கு வாய்ப்பு இருந்தது. அதைத் திரும்பவும் கொண்டு வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இன்றைக்கு ஏழாவது வரையிலும் ஆரம்பப் பள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஏழாவது ஸ்டாண்டர்டில், அதாவது இ.எஸ்.எல்.ஸி–ல் பரீட்சை இருந்து வந்தது. இது இப்போது இருக்கிறதா, இல்லையா ? என்று தெளிவாகக் கூறப்படவில்லை. எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை இருக்கிறது. ஆனால் ஏழாவது ஸ்டாண்டர்டு முடிந்த உடனே பரீட்சை இருக்கிறதா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தில் வாய்ப்பு கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, நமக்கு முன்னால் இப்போது கல்விப் பிரச்னை விவாதத்திற்கு வந்திருக்கிறது. இந்த நாட்டில் கல்விப் பிரச்னையானது "காண்ட்ரவர்ஷியல்" சப்ஜட் என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட சர்ச்சைக்குட்பட்ட பிரச்னையாக இது இருந்துகொண்டிருக்கிறது. நமக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர், சுமார் 10, 12 வருடங்களாக இந்த நாட்டிலே எத்தனையோ மாறுதல்கள், சீர்திருத்தங்கள், செய்ய வேண்டுமென்று நினைத்தோம். அந்த மாதிரியே பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று அவரவர்கள் இஷ்டம் போல் கை வைத்தார்கள். கல்வித் திட்டத்தில் ஏதாவது ஒரு சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால் அது நம்முடைய வருங்காலச் சந்ததியை பாதிக்கக் கூடியதாக இருப்பதினால்

நிதானமாகக் காரியங்களைச் செய்யவேண்டும். இந்த நோக்கத்தோடு இதை அணுக வேண்டியது மிகவும் முக்கியம். மற்ற விஷயங்களைப் போன்று அவசரப்பட்டுச் செய்யக்கூடிய காரியம் அல்ல இது. இது பற்றி பெரிய சர்ச்சை இருந்து வந்தது. இப்போது இதற்கு ஒரு முடிவு கட்டி முற்றுப்புள்ளி வைப்பதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். அநேக விஷயங்களில், நாட்டுக்கு ரொம்ப தீங்கு விளைவிக்கக் கூடிய விஷயங்களில், சர்ச்சைக்கான விஷயங்கள் பலவற்றில் அவர்கள் பெரும் பாலும் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அது போல இதிலே ஒரு முடிவு ஏற்பட்டுவிடும் என்று நம்புகிறேன். குறைந்த பட்சம் 10, 15 வருடங்களுக்குக்காவது இதிலே வேறு யாராவது கை வைக்க மாட்டார்கள் என்ற அளவுக்கு கல்வித்துறையை பொறுத்தவரையில் ஒரே லயனிலே ஒரு திட்டத்தைக் கொடுப்பார்கள் என்று நினைத்தேன். அதற்காக கல்வி அமைச்சர் அவர்கள் நமக்கு முன்னால் "ஒயிட் பேப்பர்" ஒன்றை சமர்ப்பிக்கப் போகிறார்கள் என்றும் நினைத்தேன். அது இல்லாமல் "நோட் ஆன் எஜுகேஷனல் பேட்டர்ன்" என்று போட்டு ஒன்றை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

வெள்ளை அறிக்கைக்கும், நோட்டுக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா என்பது எனக்குத் தெரியவில்லை. "நோட்" என்று இருப்பதனால் இதிலே மறுபடியும் கை வைப்பார்களோ என்று தோன்றுகிறது. "இன்னும் கொஞ்சம் யோசனை இருந்தால் சொல்லுங்கள்" என்று சொல்வதைப் பார்த்தால் இந்தத் திட்டம் சாதாரண பொது மக்களுக்கு எல்லாம் திருப்தி அளிக்க கூடிய நல்ல அறிக்கையாக இல்லை என்று..........

**கனம் திரு. பக்தவத்சலம்:** ஒன்றும் வித்தியாசம் இல்லை என்று இப்பொழுதே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** ஒன்றும் வித்தியாசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். "ஒயிட் பேப்பராக" இருந்திருந்தால் எல்லோருக்கும் மன ஆறுதலாக இருந்திருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சமர்ப்பித்திருக்கிற காகிதம் வெள்ளைக் காகிதம் தான். (சிரிப்பு).

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** வெள்ளையிலே கொஞ்சம் கருப்பு இருக்கிறது. (சிரிப்பு).

இந்தத் திட்டப் பிரகாரம் பழைய திட்டத்திற்குத்தான் பெரும்பாலும் போகிறோம். ரொம்ப நாட்களுக்கு முன்பு 11 வருஷ கல்வித் திட்டமாகத் தான் இருந்தது. அதற்குத்தான் இப்போது போகிறோம். 11 வருஷமாக இருந்த கல்வி திட்டம் பிறகு 10 வருஷமாக ஆக்கப்பட்டது. இப்போது தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். ஒரு சிலர் தமிழ் தமிழ் என்று சொல்லிக்கொண்டு, தாங்கள் தான் தமிழுக்கு பாடுபடுகிறோம், மற்றவர்களுக்குக் கொஞ்சம்கூட அக்கறை இல்லை என்று நாட்டிலே பெரிய பிரச்சாரம் செய்கிறார்கள். தமிழைக் காப்பதற்கு இவர்கள்தான் பிறந்த மாதிரி சில பேர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியிலும் இருக்கிறார்கள். மற்ற கட்சியிலும் இருக்கிறார்கள். நான் ஒரு கட்சியைப்பற்றி சொன்னதாக யாரும் நினைத்துக்கொள்ளவேண்டாம். அவ்வாறு ரொம்ப பேர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்களும் தமிழர்கள்தான், எங்களுக்கும் தமிழில் அக்கறை உண்டு. நமது கல்வி அமைச்சர் அவர்கள் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி எங்களுக்குச் சந்தோஷம். எல்லோருக்கும் அது மன ஆறுதலைக் கொடுக்கும். ஆனால் இப்போது நாட்டிலே, இன்றைக்கு இருக்கும் நிலைமையில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் நம்முடைய கல்வித்தரம் எவ்வளவு தூரம் கீழே போய்விடும் என்பதை நாம் யோசிக்கவேண்டும். நம்முடைய மாநிலத்திற்கும், மற்ற மாநிலத்திற்கும் கல்வித்தரத்தில் வித்தியாசம் இருந்தது. நம்முடைய மாநிலத்தில் 11 வருஷக் கல்வித்திட்டம் இருந்தது. ஆனால் மற்ற



மாநிலங்களில் 10 வருஷக் கல்வித் திட்டம் தான் இருந்தது. நம்முடைய மாநிலத்திலிருந்து வட நாட்டிற்கு உத்தியோகத்திற்குச் செல்கிறவர்களுக்கு ஸ்டாண்டர்டு அதிகமாக இருந்தது என்பதையும் கேள்விப்பட்டிருக்கிறோம். காரணம் 11 வருஷ கல்வி அடிப்படை அவர்களுக்கு இருந்திருக்கிறது. மற்ற மாநிலங்களை விட நம்முடைய மாநிலத்தில் ஸ்டாண்டர்டு—பேசுவதிலும் சரி, எழுதுவதிலும் சரி, அறிவிலும் சரி—அதிகமாக இருந்ததோடு அவர்களுக்கு ஒரு மதிப்பு இருந்து வந்தது என்று சொல்வார்கள். அந்தத் தரம் இப்போது குறைந்து விட்டது. இப்போதெல்லாம் மாணவர்கள் உத்தியோகத்திற்கு அப்ளிகேஷன் எடுத்துக்கொண்டு வருகிறார்கள், "சிபாரிசு செய்யுங்கள்" என்று சொல்லி என்னிடம் கூட வருகிறார்கள். அவ்வாறு வருபவர்களை அப்ளிகேஷன் எழுதிக்கொண்டு வரும்படிச் சொன்னால், ஆங்கிலத்தில் அவர்கள் எழுதி வருவதைப் பார்த்தால், அதைப்பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை. தமிழிலாவது எழுதிக்கொடுக்கும்படிச் சொன்னால், ஒரே தனித் தமிழ் மாதிரி எழுதி விடுகிறார்கள். ஆகவே எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு வந்த ஒரு மாணவன், தமிழும் சரியாகப் படிக்காமல், ஆங்கிலமும் சரியாகப்படிக்காமல், இருப்பதைத்தான் பார்க்கிறோம். இப்போதுள்ள மாணவர்கள், பத்து வருஷப் படிப்புத் தேறிவருகிற மாணவர்கள், சரியானபடி படிக்காமல், திறமை இல்லாமலும், சக்தி இல்லாமலும், இருக்கும் நிலைமை இருக்கிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஸ்டாண்டர்டு ரொம்பவும் குறைந்துபோய் இருக்கிறது. பி.யூ.சி. என்று இருப்பது எதற்கு என்றே எனக்குத் தெரியவில்லை. பி.யூ.சி. படித்து விட்டு ஆர்ட் காலேஜுக்குப் போனாலும் கூட அதே ஸ்டாண்டர்டு தான் இருக்கிறது. ஏற்கனவே 10 வருஷமாக இருந்ததை, இந்த திட்டத்தில் 11 வருஷமாகப் போட்டிருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன்.

இப்போது 11 வருஷம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பும், 4 வருஷம் கல்லூரிப் படிப்புமாக மொத்தம் 15 வருஷப் படிப்பு என்று போட்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் 10 வருஷம் உயர்நிலைப் படிப்பும், 4 வருஷம் கல்லூரிப் படிப்பும் சேர்ந்து மொத்தம் 14 வருஷப் படிப்பு என்று இருக்கிறது. இதில் என்ன சங்கடம் என்றால், ஐ.ஏ.எஸ். போன்ற அகில இந்திய காம்படேடிவ் பரீட்சைகளுக்கு 25 வயது என்று வைத்திருக்கிறார்கள். எனவே 14 வருஷப் படிப்பு என்றால் இத்தகைய பரீட்சை எழுத சௌகர்யமாக இருக்கும். 15 வருஷம் என்று இப்போது நாம் வைப்பதினால் நமக்கு ஒரு வருஷம் அதிகமாகிவிடுகிறது. இது சென்டிரல் சர்க்கார் விஷயம் என்றாலும்கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அகில இந்திய பரிட்சைகளை 25 வயது என்று இருப்பதை, 26 வயது என்று ஆக்குவதற்கு தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்களுக்கு ஒரு வருஷம் கூடக் கிடைத்தாலும் பரவாயில்லை. 25 வயதை 26 வயதாக உயர்த்தும்படியாக மத்திய சர்க்காரிடம் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். மற்ற மாநிலத்தவர்களுக்கு ஒரு வருஷம் கூடுதலாகக் கிடைக்கிறது என்று சொல்லலாம். அதாவது பரவாயில்லை. 25 வயது என்றிருந்தால் நம் மாநில மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் என்பதை உத்தேசித்து ஒரு வருஷம் மேலும் அவசியமாக இருக்கிறது.

இந்த 11 வருஷ உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து, ஒரு வருஷம் பி.யூ.சி.படித்தபிறகு, பி.ஏ. வகுப்பில் 3 வருஷம் படிக்க வேண்டுமென்பது இப்போதையத் திட்டம். பி.யூ.சி.-ல் ஒரு வருஷத்தில் என்ன படித்துவிட முடியும்? எஸ்.எஸ்.எல்.சி.-ல் படித்ததைவிட அதிகமாக பி.யூ.சி.-ல் ஏதாவது விசேஷமாகப் படிக்கிறார்களா என்றால், இல்லை. நான் அதிகாரிகளைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. மாணவர்களின் திறமை அப்படி இருக்கிறது. என்னுடைய யோசனை என்னவென்றால் பழைய மாதிரி, இரண்டு வருஷம் இண்டர்மீடியட் படிப்பு என்றும், அதற்குப் பிறகு இரண்டு வருஷம் பி.ஏ. படிப்பு என்றும் வைத்துவிடுவது நல்லது. எஸ்.எஸ்.எல்.சி. படித்ததற்குப் பிறகு இரண்டு வருஷம் இண்டர்மீடியட் படித்தால், அதற்குமேல் படிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போனாலும், அந்த இரண்டு வருஷப் படிப்பு அவர்களுக்கு உதவியாக இருக்கும். பழைய இண்டர்மீடியட் படித்த ஒரு மாணவனுடைய திறமையையும்,

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [30th March 1963

இப்போது பி.யூ.சி. படிக்கும் ஒரு மாணவனுடைய் திறமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ரொம்பவும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டு வருஷ இண்டர்மீடியட் பட்ப்பு, இரண்டு வருஷப் பட்டப் படிப்பு என்றிருந்தால் சௌகர்யமாக இருக்கும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கொடுக்கப்பட்டிருப்பது வெள்ளை அறிக்கை அல்ல (ஒயிட் பேப்பர்), குறிப்பு (நோட்) தான் " இன்னும் யோசனைகளைச் சொல்லுங்கள் " என்கிருர்கள். ஆகவே என்னுடைய யோசனையைச் சொல்கிறேன், நான் காலேஜ் படிப்புப் படிக்கவில்லை. ஹைஸ் ஸ்கூல் படிப்பு தான் படித்திருக்கிறேன், என்றாலும் என்னுடைய பொது அறிவு பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை. தயவுசெய்து இண்டர்மீடியட் இரண்டு வருஷம், பி.ஏ. இரண்டு வருஷம் என்று வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இதை உடனடியாக ஒத்துக்கொள்ளாவிட்டாலும், இதிலே தொடர்ந்து அதிக அக்கறை செலுத்த வேண்டும். இந்த நாட்டில் விழிப்பு ஏற்பட்ட பிறகு, மக்கள் அத்தனைபேரும் படிக்கவேண்டுமென்று நினைக்கிருர்கள். ஏழை, எளிய, பிச்சைக்காரர்கள் கூட தங்களுடைய பிள்ளைகளை எப்படியாவது படிக்க வைக்க வேண்டுமென்று நினைக்கிருர்கள். அந்த மாதிரி உணர்ச்சி நாட்டு மக்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கிறது. படித்த பிறகு அதற்கு மேல் ஒரு மாணவன் தேர்டு ஃபாரத்தோடு நிறுத்திவிடலாம்; அல்லது ஃபோர்த் ஃபாரத்தோடு நிறுத்திவிடலாம்; ஃபிஃப்த் ஃபாரத்தோடு நிறுத்தி விடலாம்; எஸ்.எஸ்.எல்.ஸி. வரை போக முடியாத நிலையில் இருக்கலாம். அந்தமாதிரியான கஷ்டம் இருக்கும்போது எந்த இடத்தில் நிறுத்தினாலும் அந்த மாணவனுக்கு உபயோகமாக இருக்கும்.

இப்போது தேர்டு ஸ்டாண்டர்டிலிருந்து ஆங்கிலம் இருக்கலாம் என்று சொல்லி யிருக்கிருர்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். வருகிற காலத்தில் நமது சந்ததிகள் அமைச்சர் பக்தவத்சலத்திற்கு கோவில் கட்டி வாழ்த்துவார்கள். ஏன் என்ருல் அவர்களுக்கு இதன் மூலமாக ஒரு முக்கிய சந்தர்ப்பத்தை அளித்திருக்கிருர்கள். ஒரு விவசாயி தன் பிள்ளையைப் படிக்க வைக்கிருன் என்று வைத்துக் கொள்வோம். அப்படி படிக்க வைக்கும்போது அவனை 8-வது வகுப்பு வரையில் படிக்க வைத்துவிட்டு அதற்கு மேல் படிக்க வைக்க முடியாமல் நிறுத்திவிடலாம். ஆனல் 3-வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரையில் அவன் ஆங்கிலம் படித்தான் என்ருல், அதற்கு மேல் அவன் அக்ரிகல்சுரல் ஸ்கூலில் சேர்ந்து ஃபார்மிங் படிக்கலாம். அப்படிப் படிக்கும்போது அங்கே வரக்கூடிய சொற்ப ஆங்கில வார்த்தைகளைப் புரிந்துகொள்ளக் கூடிய திறமை ஏற்படும். தேர்டு ஃபார்ம் வரையில் 3-வது வகுப்பிலிருந்து 5 வருஷம் ஆங்கிலம் படித்ததால், அக்ரிகல்சுரல் ஸ்கூலில் படித்துவிட்டு அவன் விவசாயத்தைப் பார்க்க சந்தர்ப்பம் இருக்கிறது. அல்லது ஏதாவது ஒரு தொழில் கல்விக்குப் போகலாம். அந்த மாதிரி வசதி இருக்கிறது 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதால். நமக்குத் தெரியும், "தமிழ் தான் வேண்டும், ஆங்கிலமே வேண்டாம் " என்று சொன்னவர்கள் தமிழ் மீடியம் பள்ளிக்கு அவர்களுடைய குழந்தைகளை அனுப்பவே மாட்டார்கள். அவர்களுடைய குழந்தைகளை கான்வெண்டுக்குத்தான் அனுப்புவார்கள். ஆங்கிலம் தவிர வேறு சொல்லிக் கொடுக்க வேண்டாம் என்று ஏற்பாடு செய்வார்கள். நான் யாரும் தனிப்பட்டவர்களைச் சொல்லவில்லை. இதைப் பற்றி யாரும் தவருக எண்ணக் கூடாது. எனக்கு அந்த மாதிரி ரொம்பப் பேர்களைத் தெரியும். ஆனல் நான் அவர்களுடைய பெயரைச் சொல்லத் தயாராயில்லை. ஆகையால் 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பது ரொம்பவும் வரவேற்கத் தக்கது.

முக்கியமாக, கல்வி விஷயத்திலே ரொம்பவும், அப்போதைக்கப்போது ஆங்காங்கு கை வைக்கிறது என்று இல்லாமல் சரியான முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இன்றைக்கு எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் இருக்கிறது. தலைமை அதிகாரியாக டைரக்டர் ஆஃப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் இருக்கிருர். அவர்களுக்கு உதவியாக ஒரு ஸ்டாச்சுட்டரி போர்டு—எஜுகேஷனல் போர்டு—வைத்தால் நன்ருக இருக்கும். இன்றைக்கு யூனிவர்ஸிட்டி செனெட்



30th March 1963] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

இருக்கிறது. அந்த மாடல் படி—அது அட்டானமஸ் பாடியாக இருக்கிறது—அந்த மாதிரி இல்லாவிட்டாலும், கவர்ன்மெண்ட் கண்ட்ரோலில் ஒரு பாடி வைக்கலாம். அதற்கு டைரக்டர் ஒரு முக்கிய அதிகாரியாக இருக்கலாம்; அல்லது சேர்மனுக இருக்கலாம்; அல்லது ஒரு முக்கிய மெம்பராக இருக்கலாம்; அல்லது கல்வி மந்திரியே சேர்மனுக இருக்கலாம். அந்த முறையில் அமைத்து நிர்வாகத்தைச் செய்தால் யாரும் நினைத்தவர்கள் கை வைக்காமல் கண்ட்ரோல் செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்ருல் அட்மினிஸ்ட்ரேஷனிலே இப்போது சீர்திருத்தம் செய்கிருேம். நம்முடைய இந்த அமைப்பை மேலும் மேலும் யாரும் கை வைக்காமல் 10—15 வருஷத்துக்கு கல்வி விஷயத்தில் யாரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று இருந்தால்தான் நிரந்தரமான முறையில், ஒழுங்கான முறையில், நம்பிக்கையான முறையில் மாணவர்கள் என்னதான் படிக்கப்போகிருர்கள் என்ற நம்பிக்கையோடு இருக்கலாம். இன்றைக்கு ஒரு மாணவன் தேர்டு ஃபாரம் படிக்கிருன் என்ருல் அவனுக்கு ஃபோர்த் ஃபாரத்தில் என்ன சொல்லிக் கொடுக்கப் போகிருர்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது; ஃபிஃப்த் ஃபாரத்தில் என்ன சொல்லிக் கொடுக்கப் போகிருர்கள் என்று சந்தேகம் இருக்கிறது. அதற்கு மேல் காலேஜ் போனல் அங்கே என்ன சொல்லிக் கொடுக்கப் போகிருர்கள் என்று சந்தேகம் இருக்கிறது. அந்த மாதிரி இருக்கக் கூடாது. யாரும் குறைந்தது 10—15 வருஷத்திற்குக் கை வைக்காமல் செய்துவிடவேண்டும்.

இப்போது என்ன சொல்லி யிருக்கிருர்கள்? பார்ட் 1-ல் ரீஜனல் லாங்குவேஜ் தமிழ்தான் நம் நாட்டிலே இருக்கிறது. பார்ட் 2-ல் ரொம்பப் பேர்கள் என்ன செய்கிருர்கள் என்ருல் ஹிந்தி கற்றுக்கொண்டிருக்கிருர்கள். பார்ட் 3-ல் இங்கிலீஷ். சிலர் சொல்லுகிருர்கள் இங்கிலீஷும் தமிழும் போதும், மற்ருெரு பாஷை தேவையில்லை என்று சொல்லுகிருர்கள். எதிர் கட்சி நண்பர்கள்—அதுவும் திராவிட நாடு என்று பகற் கனவு கண்டுகொண்டிருக்கிருர்களே, அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன். அவர்கள் என்ன நினைக்கிருர்கள் என்ருல், திராவிட நாடு என்ருல் மலையாளம், ஆந்திரம், கன்னடம், தமிழ்நாடு எல்லாம் சேர வேண்டும் என்று நினைக்கிருர்கள். அப்படி திராவிட நாடு வந்தால் அதிலே தெலுங்குக்கு முக்கியத்துவம் இருக்க வேண்டும், கன்னடத்துக்கு முக்கியத்துவம் இருக்க வேண்டும், மலையாளத்துக்கு முக்கியத்துவம் இருக்க வேண்டும், தமிழுக்கு முக்கியத்துவம் இருக்க வேண்டும். அப்போது எப்படி ஆகும்? ஒரு பாஷைக்கு மேல் இன்னொரு பாஷை படிக்கத் தானே வேண்டும்? அவர்களுடைய பகற் கனவு நினைவானலும் அப்போது இன்னொரு பாஷையைப் படிக்கத்தானே வேண்டும்? மேல் நாடுகளிலே—நான் சில தேசங்களுக்குச் சென்றபோது பார்த்திருக்கிறேன்—ஸ்காண்டிநேவியன் கண்ட்ரீஸில், யூரோப்பியன் கண்ட்ரீஸில், அங்கே உள்ளவர்கள்ளுக்கு அவர்களுடைய பாஷைதான் தெரியும்—ஆங்கிலம் தெரியாது. சாதாரணமாக ஒரு ஆஃபீஸிலே போனல் அங்கே உள்ள பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு அந்த தேச பாஷைதான் தெரியும். ஆனல் சாதாரணமாக ஒரு ஆஃபீஸிலே போனல் அங்கு இருக்கக் கூடிய டைப்பிஸ்டுகளும், க்ளார்க்குகளும் அதிகமாக இங்கிலீஷ் பேசுகிருர்கள். ஆண்பிள்ளைகள், பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களைப் பார்த்தால் ஃபின்லந்தில் ஃபின்னிஷ் தவிர வேறு தெரியாது. ஃப்ரான்ஸில் உள்ள மினிஸ்டர்ஸ், மற்ற ஆஃபீஸர்ஸுக்கு ஃப்ரெஞ்ச்தான் தெரியும். ஆனல் அவர்கள் வீட்டிலுள்ள பெண்களும், குழந்தைகளும் இங்கிலீஷ் பேசுகிருர்கள். ஏன் இப்படி இவர்கள் மட்டும் இங்கிலீஷ் பேசுகிருர்கள் என்று கேட்டால் அவர்கள் செகண்ட் லாங்குவேஜ் வொர்ல்ட் லாங்குவேஜ் எடுத்தே தீருகிருர்கள். இங்கே முக்கியமாக உத்தியோகத்திற்கு நம் பாஷை போதும் என்று நினைக்கிருர்கள். உலகத்தில் உள்ள அந்நிய நாட்டு ஃபாரின் டிபார்ட்மெண்ட்டில் சேவை செய்ய வேண்டுமென்ருல் இதர பாஷைகள் அவசியம் வேண்டும். ஆகையால்தான் இங்கிலீஷ் ஆர் எனி அதர் ஃபாரின் லாங்குவேஜ் என்று சொல்லி இருக்கிருர்கள். அதிலே ஃப்ரெஞ்ச் படிக்கலாம். ஃப்ரெஞ்ச் படித்தால் ஃப்ரான்ஸ் நாடில் ஃபாரின் சர்வீஸுக்குப் போகலாம். இந்த முறையிலே இப்போது என்னுடைய ஆசை—நான் நம்முடைய கல்வி மந்திரிக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்

துக்கொள்ள விரும்புகிறேன்—என்னுடைய யோசனையை பிரமாதமாக ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. இப்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது இந்தத் திட்டம்தான் என்று சொல்லி விடவேண்டும். இதை ஊர்ஜிதம் செய்துவிட்டு, அடுத்த 10—15 வருஷத்திற்கு இந்தத் திட்டம்தான் இருக்க வேண்டும் என்ற முறையில் ஊர்ஜிதம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மறுபடியும் அமைச்சர் அவர்களைப் பாராட்டி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எஸ். மாதவன் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இந்த நாட்டிலே வெள்ளைக்காரன் வெளியேறியதிலிருந்து காங்கிரஸ் கட்சியே ஆண்ட போதிலும், ஆண்டுக்கு ஒரு கொள்கை, அமைச்சரவைக்கு ஒரு கொள்கை என்று இந்தக் கல்விக் கொள்கை மாற்றப்பட்டு வருகிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அதை உணர்ந்த காரணத்தினாலோ என்னவோ நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள், அவருடைய தொடக்க உரையிலே அதைப் பற்றி நீண்ட விளக்கம் கொடுத்து, எதுவும் மாற்றம் செய்யப் போவதில்லை என்று சொன்னார்கள். மாறுதல் செய்யத்தான் போகிறார்கள் என்பது நாமெல்லோரும் அறிந்த செய்தியாகும். நாங்கள் சொல்லிக்கொள்வதெல்லாம் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னால் நிபுணர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசாங்கம் பின்பற்றி வந்திருக்கிறது. அப்படிப் பின்பற்றி வந்தாலும் அமைச்சரவை மாறும் போது கல்விக் கொள்கை மாறக் காரணம் என்ன என்றால், அமைச்சர்களுக்குள் ஏற்பட்ட போராட்டம் என்று சொல்லுவதைவிடக் கொள்கையிலே நிலையான கொள்கை இந்த ஆட்சிக்கு இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். அப்படி அவர்களுக்கு நிலையான கொள்கை இல்லை என்ற காரணத்ினால் பாதிக்கப்படுகிறவர்கள், இந்த நாட்டிலே உள்ள மக்கள் சமுதாயத்தினர். இன்றைக்குள்ள சமுதாயத்தினர் மட்டுமல்ல, எதிர்காலத்தில் வரப்போகிற சமுதாயத்தினரும் கல்விக் கொள்கையால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணரவேண்டும். எதிர்க் கட்சி என்ற முறையில் நாங்கள் சுட்டிக் காட்டித்தான் தீரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தக் கொள்கை கூட, நோட் என்றாலும் சரி, வொயிட் பேப்பர் என்றாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, இன்றைக்கு இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த அமைச்சரவை ஏற்றுக்கொள்ளும் கொள்கை தொடர்ந்து இது அமுலாக்கப்படும் என்பதற்கு என்ன உறுதி இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதைத்தான் எதிர் கட்சிகள் சுட்டிக் காண்பிக்க ஆசைப்படுகின்றன. கொள்கைகளை மாற்றும் வேளையில், கொள்கைகளை நன்றாகச் சிந்தித்து, ஆலோசித்து மாற்றம் வந்திருக்குமானால் இந்த மாதிரி அடிக்கடி மாற்றம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இதிலே கல்வித் துறையில் யார் இருக்கிறார்கள், கல்வி அமைச்சராக யார் இருக்கிறார்கள் என்று அவர்களைப் பொறுத்து கல்விக் கொள்கை மாறுகிறது என்று ஒரு நிலை. அதற்கு அடுத்து இதை அமலாக்குகிறார்களே அதிகாரிகள் அவர்கள் மாறுவதற்கு ஏற்றவாறு பல மாறுதல்கள். இப்போது மூன்றாவது ஒரு நிலை, மத்திய சர்க்காரும் இதில் தலையிடலாம். இந்தக் கொள்கையைப் பொறுத்த வரையில் மாநிலங்களுக்கு முழு அதிகாரம் வேண்டுமென்று கல்வி அமைச்சர் வற்புறுத்தி வந்திருக்கிறார் என்றால் அதற்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் சொல்லக்கூடிய ஒவ்வொரு நேரத்திலும் மத்திய சர்க்காரில், டில்லி பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சர் இவர்கள் கொள்கையை மறுக்காத நாளே கிடையாது. ஒவ்வொரு நாளும் கல்வியைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்காருக்கு ஒரு கண்ட்ரோல் வேண்டும், மத்திய சர்க்கார் இவர்கள் கொள்கையில் தலையிட வாய்ப்புத் தரவேண்டும், மத்திய சர்க்கார் இந்தக் கொள்கைகளை வகுக்கவேண்டுமென்ற நிலையை மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறிவருவதைப் பார்க்கிறோம்.

இந்தக் கல்விக் கொள்கையிலே அமைச்சரைப் பொறுத்த வரையில், தனக்கென ஒரு தனிக் கொள்கையை அவர் வகுத்துக் கொள்ள முடியவில்லை. டெல்லியில் என்ன மாறுதல்கள் வேண்டும் என்கிறார்களோ,



அதற்குத் தக்கபடி இங்கே இவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இது எதிர் காலச் சந்ததிக்கு உகந்ததா? ஒரு நிரந்தரமான "லாங்குவேஜ் பாலிஸி" வேண்டாமா? மொழிக் கொள்கை பற்றி கல்வி அமைச்சர் விரிவாகப் பேசினார்கள். அவர்களும் மொழிக் கொள்கையில் இக்கட்டான அரசியல் சூழ்நிலை இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வார்கள். இரண்டு மொழியா, மூன்று மொழியா, இந்தி வேண்டுமா, வேண்டாமா, இதிலெல்லாம் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதை அமைச்சர் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள். இந்தி மொழிக்கு பரீட்சை வேண்டாம் என்றார்கள். திரும்பவும் பரீட்சை வேண்டும் என்கிறார்கள். இது எந்த அளவுக்குப் பொருந்தும், பொருத்தமானது என்று யோசிக்க வேண்டும். அவர்கள் இங்கே பரீட்சை வேண்டாம் என்று சொல்கிறார்கள். உடனே டெல்லி பாராளுமன்றத்திலே மத்திய அமைச்சர் தன் முழக்கத்தை ஆரம்பித்து விட்டார். இந்தி மொழிப் பரீட்சை வேண்டாம் என்பது தவறு. அதை எப்படி சென்னை மாநிலத்தில் எடுத்தார்கள் என்று அவர்கள் கேட்டார்கள் அவர்கள் அங்கே அப்படிக் கூறியதற்குப் பின்னால், நம் கல்வி அமைச்சர் இந்த மாறுதலுக்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இன்னொரு அமைச்சர் அந்தக் கொள்கையை எதிர்த்துப் பேசுகிறார். ஆகவே, இந்த அமைச்சர் அவையிலேயே அது பற்றி சர்ச்சை இருக்கிறது தெரிகிறது. இந்திப் பரீட்சை வேண்டுமா, வேண்டாமா என்கிற போது, அதில் நம் அமைச்சர்கள் முடிவு, டெல்லி பாராளு மன்றத்திலே டெல்லி அமைச்சர் என்ன சொல்லுகிறாரோ அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இந்தி மொழி எல்லா மாநிலங்களிலும் கட்டாய மொழியாக இருக்க வேண்டும் என்று டெல்லி சர்க்கார் மாநில சர்க்காருக்கு யோசனை கூறுகிறது. மாநில சர்க்காரின் பதில் என்ன? இந்தி வேண்டாம் என்று நம் மாநில சர்க்கார் ஆணித்தரமாக பதில் சொன்னதா? கட்டாய பாடமாக வேண்டாம் என்கிறார்கள். ஆகவே, இதிலும் மாநில சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. டெல்லியின் கொள்கை நிச்சயம் இந்தி மொழி கட்டாயப் பாடமாக இருக்கவேண்டும் என்பது. அதை எதிர்த்து வேண்டாம் என்று சொல்ல மாநில சர்க்கார் பயப்படுகிறது. ஆகவே, கொள்கையில் அரசியல் சிக்கல் இருக்கிறது. இந்தி மொழி சம்மந்தப்பட்டவரை ஒரு திட்டவட்டமான பாலிசியை வகுக்க நம் மாநில சர்க்கார் தயங்குகிறது. அதையும் அமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இந்தி ஒரு பொது மொழி அல்லவா, அதனால் அதில் தேர்வு இருக்கவேண்டாமா என்கிற கருத்து இருக்கிறது. இந்தி ஒன்றுதான் பொது மொழி என்று சொல்வதற்கில்லை என்று இங்கிருந்து சொன்னால், அதை இந்தி வெறியர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஆகையால், இந்திதான் பொது மொழி என்று திட்டவட்டமான ஒரு முடிவு எடுத்து இருக்கிறார்கள். ஆனால் இந்தி தேர்வு பற்றி ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். இந்தியில் பரீட்சை வேண்டாம் என்று இங்கே அமைச்சர் கூறினார்கள். வேறொரு காரணத்திற்காக அவர்கள் வாய் மூடுவதற்கு முன்னால், டெல்லியில் இந்தியில் தான் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகள் அமையவேண்டும் என்று சொல்லி விட்டார்கள். அதே முறையில் அகில இந்திய சர்வீஸ்களுக்கு மொழி, எக்சாமினேஷன் லாங்க்வேஜ் ஆக இந்தி இருக்க வேண்டும் என்ற கொள்கையை மத்திய அரசு வற்புறுத்திவிட்டது இதன் விளைவு என்ன? அமைச்சரே அதை மறைமுகமாக குறிப்பிட்டார்கள். நம் மாணவர்கள் அகில இந்தியாவிலும் வேலை வாய்ப்புகள் பெறவேண்டும். ஆகையால் அகில இந்திய சர்வீஸ்களில்..........

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் அப்படிக்கூறவில்லை, அங்கத்தினர் கேட்கவில்லைபோல் இருக்கிறது. அகில இந்திய சர்வீஸ்களில் பங்கு பெறு ஆங்கிலம் வேண்டும், ஆங்கிலத்தின் மூலம் அதைப் பெறலாம் என்று சொன்னேன். கனம் அங்கத்தினர் ஆலோசனை குறிப்பாக ஏதாவது சொன்னால் நல்லது.

**திரு. எஸ். மாதவன் :** இந்தி மொழி நம் மாநிலத்தில் கட்டாய பாடமாக இருக்கவேண்டுமென்று அவர்கள் மாநில சர்க்காருக்கு சொல்லி விட்டார்கள்..........

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி இந்த அரசாங்கத்திற்கு ஒன்றும் வரவில்லை.

**திரு. எஸ். மாதவன் :** டெல்லி பாராளு மன்றத்திலே பேசிய அவர்கள் ......

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டெல்லி பாராளு மன்றத்திலே சொல்லுகிறதை, பாராளுமன்ற அங்கத்தினர்கள் பேசலாம்.

**திரு. எஸ். மாதவன் :** இந்த இந்தி மொழி பரீட்சை மொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு ஆட்சி மன்றம் சொல்லுகிறது. அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஆதரிக்கிறதா? அரசாங்கத்தின் கொள்கை திட்டவட்டமாக இல்லாதவரை, எங்களுடைய கொள்கை பற்றிக் கேட்பதில் பிரயோசனம் இல்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சொல்ல வேண்டாம் என்றால், சொல்ல வேண்டாம். அரசாங்கத்தின் கொள்கை புரியவில்லை என்றால், அதற்கு நான் பொறுப்பு இல்லை.

**திரு. எஸ். மாதவன் :** தெளிவாகக் கருத்துக்கள் கூறப்படவில்லை. அகில இந்திய பரீட்சைகள் நடத்தக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது..................

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அகில இந்தியப் பரீட்சைகள் சம்மந்தப் பட்ட மட்டில், ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும். அது பற்றிய கால வரம்பைத் தள்ளிப் போடவேண்டும் என்று வற்புறுத்தி இருக்கிறோம். ஆகவே, நாம் ஆங்கிலத்தின் மூலம் பயன் பெறலாம்.

**திரு. எஸ். மாதவன் :** மாநிலக் கொள்கை டெல்லியில் உட்கார்ந்திருப் பவர்களைப் பொறுத்து இருக்கிறது. நம் சர்க்கார் சொல்கிறார்கள் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று எதிர் பார்க்கிறார்கள் .....

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒத்துக் கொண்டு இருக்கிறார்கள். இனி ஒத்துக்கொள்ளப் போகும் விஷயம் அல்ல. நமது ப்ரைம் மினிஸ்டரே ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் என்று உறுதி கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். மாதவன் :** ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கும் ஆனால், பரீட்சை மொழியாக இருக்குமா என்பதில்..............

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆட்சி மொழி என்றால், நிச்சயமாக, கட்டாயமாக பரீட்சை மொழியாகவும் தான் இருக்கும்.

**திரு. எஸ். மாதவன் :** எப்படியும் தொடர்ந்து ஆங்கிலம் இருக்கும் என்ற உறுதியைக் கொடுத்தால், மட்டற்ற மகிழ்ச்சி அடைவேன். பயிற்சி மொழி பிரச்சினை சம்மந்தமாக, காங்கிரஸ் கட்சியிலேயே குழப்பம்—போராட்டம் என்றால் கோபம் வருகிறது, அதற்காகச் சொல்லுகிறேன்—இருக்கிறது. பயிற்சி மொழியில் ஒரு திட்டவட்டமான கொள்கை இருந்தால், ஒரு காலகட்ட வரையறை இருக்கவேண்டும். பயிற்சி மொழி இந்த காலத்திற்குள் கொண்டு வரவேண்டும் என்பதுதான் நியதி. தெளிவான கொள்கை இருக்குமானால், ஒரு காலகட்டம் வரையறுக்கப்படவேண்டும். அப்படிச் செய்து, பிறகு அதை அதிகரிக்கலாமா வேண்டாமா என் பதைப் பின்னால் யோசிக்கலாம். காலவரையறைக்குள் முடியாவிட்டால்
1-00 p.m. சில ஆண்டுகளுக்கு அதைத் தள்ளிப் போடலாம். 1963-64-ம் ஆண்டுக்குள் கல்லூரிகளில் தமிழை போதனா மொழியாகக் கொண்டுவரக்கூடிய கொள்கையை அன்று ஒத்துக்கொண்டோம் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு அம்மாதிரி காலகட்டமே இல்லாமல் அதை மாற்றப்போகிறோம் என்று சொல்லிவிட்டு தப்பித்துக்கொள்வது என்றால், இந்த ஆட்சி சாமர்த்திய மாக தேர்தலை உத்தேசித்துத்தான் அப்படித் தப்பித்துக்கொள்கிறது என்று சொல்லுவதில் என்ன தப்பு இருக்க முடியும்? பயிற்சி மொழியைப்பற்றி தெளிவாக கொள்கையைச் சொல்லி விட வேண்டும். அமைச்சர் அவர்கள் இங்கு பதில் அளிக்கும்பொழுது, தமிழில் ஆர்வம் இல்லை, தமிழ்





பயிற்சிக்கு மாணவர்கள் வரவில்லை கல்லூரிகளிலே என்று சொல்லுகிறார்கள். நான் அவர்களைக் கேட்கிறேன். தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு என்ன ஆதரவு இந்த அரசாங்கம் தந்திருக்கிறது. சொல்லுவார்கள் அவர்கள், கன்செஷன் கொடுத்திருக்கிறோம், ஸ்காலர்சிப் கொடுத்திருக்கிறோம் என்று. அது மட்டும் போதுமா? எதிர் காலத்தில் இந்த மாநிலத்தில் அவர்கள் ஆட்சியில் பங்கு பெற இந்த அரசாங்கம் உத்தியோகத்தில் பங்கு பெற, அவர்களுக்கு என்ன உறுதியை செய்து தந்திருக்கிறது? அம்மாதிரி உறுதி செய்துதர வேண்டும். ஏற்கனவே கல்வி அமைச்சராக இருந்தவர்கள் அந்த உறுதியைத் தந்தார்கள், அப்படிப்பட்ட மாணவர்களுக்கு, அவர்களுக்கு தமிழிலே உண்மையாக ஆர்வம் இருந்தது. அந்த அமைச்சர் அவையில் இருந்த அமைச்சர் இந்த சட்டமன்றத்தில் பேசுகிறபொழுது தமிழிலே படித்தவர்களுக்கு, தமிழை பயிற்சி மொழியாகக் கொண்டு படித்தவர் களுக்கு முதல் இடம் அரசாங்கத்தில் தர வேண்டும் என்பதை அவர்கள் தெளிவாக கூறியிருக்கிறார்கள் என்றால், இந்த அரசாங்கம் அதை ஒத்துக் கொள்கிறதா? என் இந்த அரசாங்கம் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறது? அதை ஒத்துக்கொள்ளுகிறதா? அதை ஒத்துக்கொண்டால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம். அந்தக் கருத்தை திட்டவட்டமாக ஒத்துக் கொள்கிறோம் என்று இந்த அரசாங்கம் கூறவேண்டும். அப்படி இல்லாமல், ஏற்கனவே கல்வி அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்றால், தேர்தலைக் காரணமாக வைத்துத் தான் அம்மாதிரி தப்பித்துக்கொள்கிறார்கள் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தேர்தலைக் காரணமாக வைத்து ஏதோ ஒரு கொள்கையை அனுசரிக்கிறோம் என்றால் அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது கனம் அங்கத்தினர் இதிலிருந்து ஒத்துக்கொள்ளுவது எனக்கு புலப் படுகிறது. மக்கள் அபிப்பிராயத்தை உணர்ந்து மக்கள் தேவையை உணர்ந்து, திட்டத்தை உருவாக்குகிறோம், திட்டத்தை மாற்றுகிறோம் என்பதை கனம் அங்கத்தினர் உணர்ந்திருக்கிறார்கள், அதுவரையில் எனக்கு திருப்தி.

**திரு. எஸ். மாதவன் :** பயிற்சி மொழியில் மாற்றம் ஏற்படுத்துவதிலே, எந்தக் காலத்தில் மாற்றம் ஏற்படுத்தலாம் கல்லூரியிலே என்பதிலே நாங்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறோம். நான் கேட்கிறேன். இந்த அரசாங்கம் வகுத்த திட்டத்தை மாற்றும் பொழுது என்ன காரணத்தை வைத்து மாற்றுகிறார்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். ஒரு காலகட்டத்தில் தமிழ் வரவேண்டுமென்று சொல்லிவிட்டால் அதிலிருந்து மாற்றுவதற்கு என்ன நிலை ஏற்பட்டுவிட்டது? அதற்காக நீங்கள் முயற்சி எடுத்தீர்களா? 1963-64-ல் வேண்டாம், இன்னும் சில ஆண்டுகள் கழித்து 1965-66-ல் கொண்டு வருவோம், நிச்சயம் கொண்டு வருவோம் என்ற உறுதியை அமைச்சர் அவை கொடுக்க தவறியதற்கு என்ன காரணம்? ஏற்கனவே இருந்த அமைச்சர் அவை கொடுத்த உறுதியை மக்கள் நம்பினார்கள். இந்த அமைச்சர் அவை 'நாங்கள் அந்தத் திட்டத்தைக் கைவிடமாட்டோம்' என்று சொல்லுகிறார்களே ஒழிய, இந்த ஆண்டுக்குள்ளே நிச்சயம் கொண்டுவருவோம் என்று சொல்லவில்லை என்று கூறிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்று கல்விக் குழுவினால் தொகுக்கப்பட்டு, கல்வி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திற்கு முன்பு வழங்கப்பட்டுள்ள கல்வி அறிக்கையை நான் கிராமத்திலே வாழ்கிற பெருங்குடி மக்கள் சார்பாகவும், மாணவ மாணவிகள் சார்பாகவும், மன நிறைந்த ஒரு நிலையில் இருந்து வரவேற்கிறேன். இப்படி வழங்கப்பட்டுள்ள இந்த அறிக்கையை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று தாழ்மையுடன் கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு நளச் சக்கரவர்த்திக்கு ஏழரை நாட்டுச் சனியன் பிடித்தது என்று ஒரு வரலாறு உண்டு. அதுபோல நம்முடைய நாட்டு கல்வி முறைக்கும் ஒரு ஏழரை நாட்டுச் சனிதான் பிடித்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அப்படிப் பிடித்துள்ள சனி வருகிற 1—4—1963-ஒடு விலகி, கல்வித் திட்டத்திற்கு நல்ல காலம் வரப்போகிறது என்பதை உணர்கிறோம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஆன் எ பாயின்டு ஆப் இன்பர்மேஷன், ஸார், சனி திசை பிடித்திருக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் சொன்னார். இம்மாதிரி சனி திசை பிடித்ததற்கு யார் காரணம்?

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** இப்பொழுது நான் பேச ஆரம்பித்திருக்கிறேன். சொல்லுகிறேன், நல்ல காலம் வருவதற்கு ஒரு அறிகுறியாக இந்த மாபெரும் அறிக்கை விளங்குகிறது என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நளனுக்கு ஏழரை நாட்டுச் சனியன் பிடித்திருந்ததினால்தான், அவன் நகரத்தை விட்டான், நாட்டையும் விட்டான், மக்களையும் விட்டான், தன்னுடைய நல்ல மனைவியையும் கூட பாழ் மண்டபத்தில் தனியாக விட்டு பிரியக்கூடிய நிலைமையில் இருந்தான். அப்பொழுது அவனுடைய மனம் எவ்வாறு இருந்தது என்பதை புகழேந்திப் புலவர் நளவெண்பாவில் அழகாகச் சொல்லுகிறார்,

"போய் ஒருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டு ஏகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோல் ஆயிற்றே காதல்
மடவாளை நீத்தான் மனம்."

என்று அழகாகச் சொல்லுகிறார். ஏழரை நாட்டுச் சனியன் பிடித்த காரணத்தினாலே பாழ் மண்டபத்தில் தன்னுடைய காதலியை விட்டுவிட்டு பிரியவேண்டுமென்று நினைத்து அந்த நிலையிலே வெளியிலே வருவானும். மறுபடியும் மனைவியை நினைத்து உள்ளே செல்வானும். அவனுடைய மனம் ஒரு நிலையில் இல்லாமல் அவனை அலைக்கழித்தது என்று கூறுகிறார். தயிர் சிலுப்பும்போது—பெண்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. நாங்களே தயிர் சிலுப்புவதாக வைத்துக்கொள்வோம். தயிர் சிலுப்பும்போது கை முன்வைக்கும் பின்னுக்கும் செல்லக்கூடிய இயல்பு ஏற்படுகிறது. அந்த வகையிலே இருந்தது அவனுடைய மனம். அதைப் போல நம்முடைய நாட்டுக் கல்வியைப் பிடித்த ஏழரை நாட்டுச் சனியன், அதற்குக் காரணம், காலக் கோளாறுதான். வேறு யார்பேரிலும் குறை சொல்லி புண்ணியம் இல்லை. அவர் நல்லவரா, இவர் நல்லவரா என்று சொல்லவே முடியாது. புறநானூறில் கூட,

"ஆளிய வருவார்க்கும் ஆளிய
சென்றார்க்கும், இடை நின்ற காலம்
போல் இருள் இவர்"

என்று அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் இதை அறிந்திருப்பார். இடைப்பட்ட காலத்தில் இப்படி எல்லாம் ஒரு குழப்பம் வருவது இயற்கை. பத்து, பன்னிரண்டு ஆண்டுகளாக நாம் அனுபவித்தோம். இப்பொழுது அனுபவபூர்வமாக நாம் தெரிந்துகொண்டுள்ள உண்மை சூழ்நிலையிலே இந்தத் திட்டத்தை உருவாக்கி நமது கல்வி அமைச்சர் அவர்கள் இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள் ஆகையினாலே இதை நாம்..........

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கோசார ரீதியாக சனி எந்த ராசியில் இருக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் சொல்லமுடியுமா?

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** எனக்கும் ஜோஸ்யம் தெரியும். ஏழரை நாட்டுச் சனியன் நல்ல காலம் இருந்தால் நல்ல இடத்திற்கு வந்துவிடுகிறது. எங்கள் பக்கத்தில் நாங்கள் சாதாரணமாக பேசிக்கொள்ளுவது வழக்கம். "போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோடு" என்று சொல்வது வழக்கம். அம்மாதிரி அழகாக பூ





மணத்தோடு இந்த அறிக்கை வந்திருப்பதை நான் உள்ளபடியே மனமார பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சுவாமிநாதன் சொன்ன அழகான கருத்துக்களை கனம் கல்வி அமைச்சர் ஆய்ந்து பார்க்க வேண்டும். பழைய இரண்டு வருட இன்டர்மீடியட் படிப்பைக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் சொன்னது எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. அதையும் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்கும், அம்மாதிரி செய்ய வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

பொதுவாக கல்வி விஷயத்திலே பார்க்கும்பொழுது, மூன்று விதமான நிலைகள் இருக்கின்றன என்று எனக்குப் புலப்படுகிறது. ஒன்று வகுப்புகள் இயங்குகின்ற முறை, இரண்டாவது பாட திட்டம், மூன்றாவது மொழியைப் பற்றிய ஒரு நிலைமை. வகுப்புகள் இயங்குகின்ற ஒரு நிலையைப் பற்றி நாம் பார்ப்போமானால், பழைய காலத்து முறை, அதாவது முதலில் ஒன்றும் வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரையில், பிறகு I, II, III பாரம். பிறகு IV, V, VI பாரம் ஆக மொத்தம் 11 வருடை படிப்பு முறை இப்பொழுது அமுலாக்கப்பட இருக்கிறது. முன்பு பாரம் என்று சொன்னோம். இப்பொழுது வேண்டுமானால் ஸ்டாண்டர்டு, வகுப்பு என்று சொல்லலாம். அதே முறை இப்பொழுது அமுலாக்கப்படப் போகிறது. இடையிலே அதிலே ஒரு மாறுதல் ஏற்பட்டது. அதன் காரணமாக ஒரு ஆண்டு சுருக்கிக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த ஒரு ஆண்டு சேர்த்துக்கொள்கிற ஒரு நிலையிலே பார்க்கும்பொழுது படிக்கிற மாணவர்களுக்கு அறிவு கொஞ்சம் அதிகமாகவே ஏற்படக்கூடிய நிலை இருந்ததால் பல இன்னல்களும், கஷ்டங்களும் நாம் அனுபவித்தது தெரிந்ததே. அப்படித் தெரிந்ததால் பழையபடி மாற்றி அமைத்து ஒரு ஆண்டு கூடச் செய்து 11 ஆண்டுகள் உயர்நிலைக் கல்வி முடியட்டும் என்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து பி. யூ. சி. வகுப்பு கல்லூரி பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு அதற்கு மேல் 3 ஆண்டுகள் பட்டப்படிப்பு படிப்பதற்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் சுவாமிநாதன் சொன்னது போல இன்டர்மீடியட் தனியாக இரண்டு வருஷ படிப்பு என்று மாற்றம் செய்துவிட்டால் மிகவும் அழகாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பாடத்திட்டம். அந்தப் பாடத்திட்டங்கள் நான் சாதாரணமாக இந்த மாமன்றத்தில், தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதற்கு முன்னால், கல்வியைப் பற்றி என்ன நினைத்துக்கொண்டிருந்தேனோ, நான் சில கூட்டங்களில் எதைப்பற்றிச் சொன்னேனோ, அவைகள் அப்படியே நூற்றுக்கு நூறு இந்த அறிக்கையில் இடம் பெற்று இருக்கிறது என்பது குறித்து நான் ஆச்சரியப்படவேண்டிய நிலையில் இருக்கிறேன். பாடதிட்டம் முதலில் நான் சொன்னது—இந்த சோஷல் ஸ்டடீஸ் என்று இருப்பது ஒரு கதம்பம், ஒரு அவியல், மாணவர்களுக்கு அதனால் எந்தவிதமான அறிவும் ஏற்படவில்லை—என்பதுதான். ஆகவே பழைய மாதிரி சயின்ஸ், ஜியாகிரபி, ஹிஸ்டரி என்ற மூன்றையும் தனியாகப் பிரித்து வைத்துவிட்டால் நலமாக இருக்கும் என்று சொன்னேன். அது அப்படியே இதிலே உருப்பெற்று வந்திருக்கிறது.

அடுத்தபடியாக நான் படித்த காலத்தில் நாலாவது பாரத்தில் அடிஷனல் "ஸி. பிஸிக்ஸ்" எடுத்திருந்தேன். அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அடிஷனல் சப்ஜக்ட் இரண்டு இருந்தது. பிஸிக்ஸ், கெமிஸ்டிரி, கணக்கு, சரித்திரம் என்று எல்லாம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அது நல்லதாகவும், மிக அழகாகவும் இருந்தது. அந்த முறையில் இனிமேல் பத்து, பதினோராவது வகுப்பிலிருந்து இரண்டு அடிஷனல் சப்ஜெக்ட்ஸ் வரக்கூடிய ஒரு நிலையிலே இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பற்றி நான் பெரிதும் பாராட்டக் கூடிய நிலைமையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆங்கிலத்தைப்பற்றி. ஆங்கிலம் வேண்டாமென்று சொல்பவர் அனேகமாக இந்த நாட்டில் யாரும் இருக்க முடியாது. வேறு நாட்டிலும் கிடையாது என்று நினைக்கிறேன். ஆகையினாலே இது ஒரு உலக மொழி. அதாவது கல்வி என்ற வகையில் திட்டம் அமைக்கும்

போது நாம் வாழ்கிற, குடியிருக்கிற ஒரு மாநிலத்தைப்பற்றியும், அந்த மாநிலம் இணைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய நாட்டைப்பற்றியும், தேசத்தைப் பற்றியும் அந்த பெரிய தேசம் உலகத்தோடு எவ்வாறு இணங்க வேண்டுமென்ற ஒரு நிலை பற்றியும், வருகிற காலத்தைப் பற்றியும்—இவைகளை எல்லாம் நாம் கருத்தில் கொண்டு அந்தக் கல்வித் திட்டத்தை அமைக்க வேண்டும். அப்படி கல்வித் திட்டம் அமைக்கிறபோது ஆங்கிலத்தின் ஒரு இன்றியமையாத தேவையை யாருமே மறுக்க முடியாது. ஆகையினாலே, வருகிற நாட்களில் மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைத் தொடருவது என்ற இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பாட திட்டத்தை முதாலாவது வகுப்பிலிருந்து எடுத்துக் கொண்டால், முதலாவது எழுதும் பயிற்சி மிகவும் அவசியம். அதாவது அ, ஆ-முதலில் எழுதுவது. கரும்பலகையில் எழுதுவது, அல்லது ரூல் பென்சிலால் காகிதத்திலே எழுதப் பழகுவது என்று எழுதுவதில் தனிப் பயிற்சி இருந்தது. இடைக்காலத்தில் அது கூட தேவை இல்லை என்று, சொற்கள் பயிலும்போதே எழுத்துக்களை அனுபவ பூர்வமாக தெரிந்துக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை விரைவாக ஏற்பட்டது. அதுகூட சரியாக அமையவில்லை. எழுத்துப் பயிற்சி கெட்டுப் போனதினால் மாணவர்கள் எழுதும் எழுத்தின் வண்ணம் நிச்சயமாக கேடு அடைந்துவிட்டது என்பதை நாம் பார்க்கிறோம். எதிர் கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். எழுத்துப் பயிற்சி, காப்பி எழுதும் பயிற்சி நல்ல பயிற்சி என்று சொன்னார்கள். பத்தாவது வரையிலே மாணவ மாணவிகள் காப்பி எழுதக்கூடிய முறையை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். சீரிய அழகான கருத்து அது. "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்," என்று சொல்லுவது போல, சித்திரமும் கைப்பழக்கம் என்ற ஒரு நிலைமையின் அடிப்படையிலே பார்க்கும்போது, அந்த எழுத்துக்களை தனியாக எழுதுகிற ஒரு பயிற்சி முறையைக் கைக்கொண்டால் வண்ண ஓவிய வடிவிலே அந்த எழுத்துக்கள் அமையும் என்பதை தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு மேலே, கேள்வி போடுகிற முறையை மாற்றி அமைத்தார்கள். ஒரு சில சின்னஞ்சிறிய கேள்விகள் கேட்டு அதற்கு மாணவர்கள் "எஸ்" அல்லது "நோ" என்ற பதிலை எழுதவேண்டிய முறை ஏற்பட்டது. சுண்டு விரலைத் தொட்டால் "எஸ்" என்றும், பெருவிரலைத் தொட்டால் "நோ" என்றும் மாணவர்கள் எழுதினார்கள். அது ரொம்பக் கேடு. காரணம் என்னவென்றால் காமன்ஸென்ஸ் ஏற்படுவதற்கு மாணவர்களுக்கு கொஞ்சம் வாய்ப்பு இருக்க வேண்டுமென்று அந்த முறை ஏற்பட்டது. ஆனால் அதற்கு மாறாக காமன்ஸென்ஸ் வாஸ்தவமாக கெட்டு விட்டது. கண்டிப்பாக உருப்போடும் முறை வேண்டும். வேதம் என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய பொக்கிஷம் நமக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அது மனப்பழக்கத்தால்தான். அதனால்தான் வேதத்திற்கு எழுதாக் கிளவி என்ற பெயர் ஏற்பட்டது. மனப் பழக்கத்தினால் வளர்ந்த பெருமை வேதத்திற்கு உண்டு. ஒரு சிறு பகுதியைக்கூட மாணவர்கள் நெட்டுரு போடக்கூடாது என்ற ஒரு நிலைமை மிகவும் மோசமான ஒரு சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுவிடுமென்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதனால்தான் "செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்" என்றார்கள். மனப்பழக்கத்தை பெருக்குவது நிச்சயமாக நெட்டுரு போடக்கூடிய முறைதான் என்பதை மீண்டும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்குப் பிற்பாடு, மொழி பற்றிய விவகாரம் வருகிறது. ஆங்கிலம் மிக அவசியம்தான் என்று சொல்கிறோம். ஆனால் கூட மொழிப் பாடங்களைத் தவிர்த்து, எவ்வாறு அந்த ஒரு நிலையில் ஆங்கிலத்தை கையாளுவது என்பது இந்தக் குறிப்பிலே தெளிவாக குறிப்பிடப்பட வில்லை. சாதாரணமாக ஆப்ஷனல் ஸப்ஜெக்ட்டுகளை ஆங்கிலத்தில் கண்டிப்பாக வைக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆப்ஷனல் ஸப்ஜெக்ட்டுகளை ஆங்கிலத்தில் படித்தால்தான் கல்லூரிகளில் மாணவ மாணவிகளுக்குத் தொடர்பு ஏற்படும். இல்லை என்றால் சிரமம் ஏற்படும். "ஃபி. பிஸிக்ஸ்"-ஐ தமிழிலே படித்து விட்டு, ஆர்க்கிமிடிஸ பிரின்ஸிபிளை—ஆர்கிமிடிஸ் தத்துவம், அல்லது சித்தாந்தம் என்று சொல்லுவார்கள். பெண்டுலத்திற்கு, தமிழிலே தொங்குபாரம் என்று சொல்லுவார்கள். தொங்குபாரம் பற்றி கல்லூரியில் புரொபஸர் சொல்லுவார் என்று எதிர்பார்த்தால் அங்கே அது வராது. பெண்டுலத்தைப் பற்றிச் சொல்வார். செண்டர் ஆப் கிராவிட்டி பற்றிச் சொல்வார், ஆர்க்கிமிடிஸ் பிரின்சிபிள் பற்றிச் சொல்லுவார். தொங்குபாரம் என்று மாணவன் எதிர்பார்த்து ஏமாந்து போக வேண்டியது தான்.





(மணி அடிக்கப்பட்டது.)

இதிலே விரிவாக பேசவேண்டிய சப்ஜெக்டாக இருப்பதனால் ஒரு ஐந்து நிமிடம் கூட அவகாசம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகையினாலே, அடிஷனல் சப்ஜெக்ட்டுகளை ஆங்கிலத்திலே வைக்கலாம். அப்போதுதான் கல்லூரிக்குப் போகிற போது நிச்சயம் தொடர்பு ஏற்படும். இதைப் பற்றியெல்லாம் கட்சிப் பிரதிகட்சி ரீதியில் நான் சத்தியமாக, பேசவில்லை. வருங்காலத்து தமிழ் மக்கள் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் "சத்தியமாக" என்று சொல்வது நல்லதல்ல.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** நாட்டுமன்னர்களாக வரக்கூடிய இந்தக் குழந்தைகளுக்கு அகில இந்தியாவிலும் வாய்ப்பு கிடைப்பதற்கு ஒரு நிலை ஏற்பட வேண்டும். அது மட்டுமல்ல. அகில உலகத்திற்கும் கூட 'போவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட வேண்டும். அந்த நிலைமை வேண்டுமானால் ஆங்கிலம் படித்தாக வேண்டும். ஆங்கிலம் படித்தால்தான் அதைச் சாதிக்க முடியும். அது இல்லை என்றால் கண்டிப்பாக முடியாது என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். என் பையன் அடையாரில் படிக்கிறான். அவனையும் இன்னும் 10 பிள்ளைகளையும் கூப்பிட்டு வைத்து உங்களுக்கு கல்வி முறை எப்படி இருக்க வேண்டுமென்று கேட்டேன். அதில் என் பையன் சொன்னான், "ஆங்கிலம் வேண்டும், தமிழ் வேண்டும், ஹிந்தி இருந்தாலும் சரி, இல்லாது போனாலும் சரி" என்று சொன்னான். (எதிர் தரப்பிலிருந்து கைதட்டல்). என் பையன் சொன்னதைத்தான் நான் இங்கு சொல்லுகிறேன். அது என்னுடைய கருத்து அல்ல. நான் தமிழும், ஆங்கிலமும் அவசியம் வேண்டுமென்றுதான் சொன்னேன். இன்னொரு பையனைக் கூப்பிட்டு கேட்டேன். அந்தப் பையன் சொன்னான், "தமிழும் வேண்டும், ஹிந்தியும் வேண்டும், ஆங்கிலமும் வேண்டும்" என்று. அப்போது கனம் அங்கத்தினர் சண்முகசுந்தரமும் கூட இருந்தார். ஏன் என்று சொன்னால் இந்தியா பூராவும் இணக்கமாக வாழ்வதற்கு, ஒரு ஒருமைப்பாடு உணர்ச்சி ஏற்படுவதற்கு, நம்முடைய தாயகத்தினுடைய ஒரு மொழி நமக்குத் தெரியவில்லை என்ற குறை ஏற்படக்கூடாது. ஆகையினாலே கண்டிப்பாக ஹிந்தி பயிற்சி தேவை என்று சொன்னேன். நான் புளுகவில்லை, அந்தப் பையன் சொன்னான். அதற்காகத்தான் சாட்சியும் வைத்தேன். இளம் குழந்தைகள் மனது எப்படிப் போகிறது! அவர்கள் உணர்ச்சி எப்படி இருக்கிறது? மனப் போக்கு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு, எவ்வண்ணம் பையன்கள் கருதுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்தால் தான் நல்ல நடவடிக்கை எடுத்துக் கொள்ள இயலும். ஆகையினாலே இந்த அறிக்கையிலே கண்டுள்ள இந்த மும்மொழிக் கொள்கையை நான் வரவேற்கத்தான் செய்கிறேன்.

இந்திப் பரீட்சையைப் பற்றிச் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே கூடக் குறிப்பிட்டேன் "இந்திப் பரிட்சை இருக்கட்டும், மார்க் பற்றிக் கவனிக்க வேண்டாம், இந்தி என்ற மொழி இருக்கிறது என்ற அளவில் ஒரு 'அவுட் லைன்' அல்லது 'ஷேப்' மாணவர்களுடைய இதயத்தில் பதிந்தால் போதும், வருகின்ற காலத்தில் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்" என்று சொன்னேன். அதை அனுசரித்து இந்த அறிக்கையிலே

[திரு. வ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்] [30th March 1963

குறிப்பிட்டிருப்பதை நான் கவனத்தோடு படித்து மிக ஆனந்தப் பட்டேன். நகர மக்களைப் பொறுத்த வரையில் என்ன நிலைமையோ எனக்குத் தெரியாது. கிராம பகுதிகளைப் பொறுத்த மட்டில் பார்க்கப் போனால் இந்தக் கல்வி முறை இல்லை என்றால் வருங்காலம் இருக்காது. ங்களுக்குக் கல்வி போதவே போதாது. நாங்கள் அப்படிப்பட்ட சூழ் நிலையில் இருக்கிறோம். கல்வி என்பது எங்களுடைய வாழ்க்கையில் இரண் டறக் கலந்திருக்கும் நிலையில் இல்லை. எங்களுடைய தொழில் வேறு. கல்வி வேறு. தொழிலுக்கும் கல்விக்கும் தொடர்பே இல்லை. அதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நினைக்கிறேன். எங்களுக் குத்தான் கல்வியிலே சிரத்தை வேண்டும். இதிலே நல்ல முறை இல்லை என்றால் கவிழ்ந்து விடுவோம். நிச்சயமாக வருங்காலம் கிடையாது. இதிலே, ஆளும் கட்சி, ஆளாத கட்சி என்ற எண்ணம் எனக்குக் கண்டிப்பாகக் கிடையாது. அந்த முறையிலே இந்த அறிக்கை திறம்பட, ஒழுங்காக, கிராம மக்களுக்காகவே, ஏற்படுத்தப்பட்ட அறிக்கை என்று சொன்னால் கூட மிகை அல்ல. அந்த அளவிலே இருக்கின்ற இந்த அறிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்பதோடு, இதைக் கூடிய சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரக் கூடிய திறத்தையும், ஆற்றலையும் ஆண்டவன் கல்வி அமைச்சர் அவர்களுக்கு அருள வேண்டுமென்று பிரார்த் தித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. செ. சீனிவாசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கல்வி பற்றிய அறிக்கையை வரவேற்று எனது சில கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு நாட்டிலே குழந்தைகள் தான் அந்த நாட்டின் செல்வங்கள். அந்த நாட்டின் வருங்காலமே அவர்கள் பெறும் கல்வியின் அளவு, தரம், வகை இவைகளைப் பொறுத்திருக்கிறது என்று ஒரு பேறிஞர் கல்வி சம்பந்தமாக எழுதும் போது குறிப்பிட்டிருக்கிறார். அந்த உண்மை எவ்வளவு தூரம் இந்த அறிக்கையிலே பிரதிபலிக்கிறது என்பதை உண்மையிலேயே கல்வியைப் பற்றி நன்கு அறிந்தவர்கள்தான் தெரிந்து கொள்ள முடியுமே தவிர, மற்றவர்களுக்குச் சாதாரணமாக இது புரியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சிலர், ஏதோ கடந்த சில ஆண்டுகளாகக் கல்வியினுடைய போக்கு சிலவிதமாக மாற்றப்படுகிறது என்று வருத்தம் தெரி வித்துப் பேசினார்கள். ஆனால் பிற நாடுகளைப் பார்க்கும் போது, இந்த மாதிரி "பார்ட்டி அட்மினிஸ்ட்ரேஷன்" இருக்கும் நாடுகளில் எல்லாம், ஜனநாயகம் வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் எல்லாம் இந்த மாதிரி பிரச்னைகள் சாதாரணமாக வருவதை நம் கண் முன்னாலே காண் கிறோம்; படித்தும் இருக்கிறோம். இங்கிலாந்து இந்த நாட்டை ஆண்ட தாலே ஒரு விதத்தில் பெரிய நன்மையைச் செய்து விட்டுப் போயிற்று என்பதை யாரும் மறுக்க முடியாது. அது தான் ஆங்கில மொழி அறிவு. அதற்காகப் பிரிட்டிஷாருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது. 1944-ல் எஜூகேஷன் ஆக்ட் போட்டார்கள். அதைத் தொடர்ந்து 1947, 1949, 1950, 1952 என்று பல வருஷங்கள் ஆக்ட் வந்திருக்கிறது. ஏன்? 1960-ஆம் ஆண்டில் கூட ஒரு ஆக்ட் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். நம்முடைய நாட்டில் ஐந்தாறு வருஷத்தில்தான் மாற்றம் ஏற்பட்டிருக் கிறது என்று பெருமை கொள்ள முடியுமே தவிர, அதிலே வருத்தப்பட வேண்டியது ஒன்றும் இல்லை. மற்ற நாடுகளில் எல்லாம் "எஜூகேஷன் பாட்டர்ன்" அடிக்கடி மாற்றப்பட்டிருப்பதைப் பற்றிய வரலாற்றை நாம் படித்திருக்கிறோம். அதே போன்று அமெரிக்காவினுடைய எஜுகேஷன் சிஸ்டத்தை எடுத்துப் பார்த்தால் பலவிதமான மாற்றங்கள் ஏற்பட்டிருக் கின்றன என்பதை எஜுகேஷன் சிஸ்டங்களைப் படித்தவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, "இந்த நாட்டில்தான் பெரிய குழப்பம் வந்து விட்டது, எல்லாமே போய் விட்டது" என்று சொல்வது எல்லாம் பொது ஜனங்களை உணர்ச்சி வசப்படச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான். அவர்கள் மற்ற நாடுகளில் எல்லாம் என்ன நடக்கிறது என்பதைப் படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும்.



30th March 1963] [திரு. செ. சீனிவாசன்]

முக்கியமாக, மொழிப் பிரச்னையைப் பற்றி மெம்பர்கள் ரொம்பக் காரசாரமாகப் பேசினார்கள். மொழிப் பிரச்னையிலே ஏன் அவ்வளவு காரம் என்று கேட்க விரும்புகிறேன். சாதாரணமாக இந்த மாதிரி ஒரு பிரச்னை வேறு எந்த ஒரு நாட்டுக்கும் ஏற்பட்டிருக்காது என்ற நிலைமைதான் இருக்கிறது. மற்ற நாடுகள் எல்லாம் ஒரு மொழியை அடிப்படையாக வைத்து அவர்களுடைய கல்வி முறையை அனுசரித்துக் கொள்ள வேண்டிய கட்டத்தில் இருந்தார்கள். ஆனால் நாம் 200 வருஷம் துரதிருஷ்டவசமாக அடிமைப்பட்டிருந்த காரணத்தினால் கல்வி முறையிலே பலவிதமான மாற்றங்களைச் செய்ய வேண்டியது அவசியமாக இருக் கிறது. யாருக்கும் கெடுதி விளைவிக்கக் கூடிய மாறுதல் இல்லை. நல்ல முறையில் மாறுதல் தேவை என்றால், அந்த மாறுதல் நல்ல மாறுதல் என்றால் திருத்திக் கொள்வதிலே தவறு இல்லை. மற்ற நாடுகளில் எல்லாம் அந்த நாட்டின் குழந்தைச் செல்வங்கள் நிறையப் படிக்க வேண்டும். பலவிதமான "சப்ஜெக்ட்ஸ்"-ஐ நல்ல முறையிலே கற்றுக் கொள்ளவேண்டுமென்ற பேரவாவுடன் இருந்து கொண்டிருக்கும்போது நம்முடைய மாணவர்கள் பலவிதமான மொழிகளையும், பாடங்களையும் படிப் பதற்கு நாம் ஏன் பயப்படவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, "கரிகுலம்" பற்றி ஒரு வார்த்தை கூற விரும்பு கிறேன். நான் சொல்வது என்னுடைய கருத்து அல்ல. தலைமை ஆசிரி யர்கள் வந்து என்னிடம் சொன்னார்கள். "பலவிதமான சப்ஜெக்ட்ஸ் வைத்திருக்கிறார்கள். இரண்டு எலக்டிவ்ஸ், இருக்க வேண்டுமென்று இருக்கிறது. இப்போது இருக்கும் எலக்டிவ்ஸ் வைத்துப் பார்த்தால் ஒரு வாரத்தில் 48 பீரியடு வரை போட வேண்டியதாக இருக்கிறது. இந்த "சப்ஜெக்டுக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது? மாணவர்கள் வரு வார்களா என்று ஐயப்படுகிறோம்" என்று அவர்கள் என்னிடம் சொன் னார்கள். அவர்களுடைய ஐயப்பாடு நியாயமானது,நான். பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் இருந்த நிலை வேறு, இப்போது இருக்கும் நிலை வேறு. இந்த நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு பலவிதமாக முன்னேற்றப் பாதைகளில் சென்று கொண்டிருக்கிறோம். இரண்டு "எலக்டிவ்ஸ்" ரொம்ப அவசியந்தான். அதைக் கண்டிப் பாக ஆக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே அந்தத் திட்டத்தைக் குறிப்பிட்டதற்காக என் போன்றவர்கள் எல்லாம் நன்றி தெரிவிக்காமல் இருக்க முடியாது.

அடுத்தாற்போல், 11 வருஷம் செகண்டரி எஜுகேஷன், ஒரு வருஷம் ப்ரி யூனிவர்சிடி, பிறகு யூனிவர்சிடி கோர்ஸ் மூன்று வருஷம் என்று இருப்பதிலே மாறுதல் செய்ய வேண்டுமென்று சக மெம்பர் திரு. ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இண்டர்மீடியட் வரை படித்து விட்டு கிராஜுவேஷன் வாங்காமல் நின்று விட்டாலும் ஒன்று தான்; பிரி யூனிவர்சிடி படித்து விட்டு கிராஜுவேட் ஆகாமல் விட்டு விட்டாலும் ஒன்றுதான். இண்டர் மீடியட் ஸ்டாண்டர்டுதான் பிரி யூனிவர் சிடிக்கு இருக்கிறது. கிராஜுவேட் ஆக வேண்டுமென்றால் பிரி யூனிவர்சிடி படித்து விட்டு மேலும் 3 ஆண்டுகள் படிக்க வேண்டும். ஆகவே, பட்டப் படிப்புக்கு மொத்தம் நான்கு ஆண்டுகள்தான் படிக்கவேண்டும். முன்பு இரண்டும் இரண்டும் நான்கு என்று இருந்தது. இப்போது ஒன்றும் மூன்றும் நான்கு என்ற நிலைமையில் மொத்தம் நான்கு வருஷங்கள் என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே, இதையே தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வெளிநாடுகளில் கூட, இங்கிலாந்து, அமெரிக்காவில் கூட அப்படித் தான் இருக்கிறது. 15 வயது வரை செக்கண்டரி எஜூகேஷன் இருக் 1-30
கிறது. ஒரு வருடம் கூடுதலாக வருகிறது. ஆகவே காம்பட்டிட்டிவ் பரீட்சை p.m.
களில் அப்பியர் ஆக ஒரு ஆண்டு பின்னால்தான் போக வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது பள்ளிகளில் 6 வயதில் சேர வேண்டும் என்பதை 5 வயது என்று ஆக்கிவிடலாம். நான் ஐந்தாம் வயதில்தான் சேர்ந்தேன். ஐந்து வயதில் படிக்கும் அறிவு வந்து விடு கிறது. ஆகவே ஐந்து வயது என்று செய்வதில் தப்பு ஒன்றுமில்லை. அப்படிச் செய்வோமானால் இந்த 20 வயது, 21 வயது என்ற காண்ட்ர

வோலி இருக்காது. மற்ற மாநிலங்கள் எப்படியிருந்தாலும் நம் மாநிலம் கல்வித் துறையில் நல்ல பெயர் எடுத்திருக்கிறது. புரட்சிகரமான திட்டங்களை சென்னை மாநிலம்தான் நிறைவேற்றுகிறது என்ற பெருமை நமக்கிருக்கிறது. பின்னர், மற்ற நாடுகளில் உள்ளது போல் பள்ளிகளில் மெடிக்கல் சர்வீஸ் ஏற்படுத்த வேண்டும். பெற்றோர்களுக்கு செலவு இல்லாத முறையில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பள்ளி மாணவர்களுக்கு மெடிக்கல் செக்அப் செய்ய வேண்டும். வருடா வருடம் வேண்டியதில்லை, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை போதும். அதுவும் முடியாவிட்டால், ப்ரைமரி கிளாஸில் ஒரு தடவை, அப்பர் ப்ரைமரி முடிக்கும்போது ஒரு முறை, ஹைஸ்கூல் முடிக்கிற போது ஒரு முறை, கல்லூரியில் ஒரு முறை இந்த செக்அப்பை வைத்துக் கொள்ளலாம். இதற்கு கிராமங்களில் மருத்துவ வசதி இப்போது இல்லாமல் இருக்கலாம். ஆனால் Cities, Towns, ப்ரைமரி ஹெல்த் செண்டர்ஸ் உள்ள இடங்களில் இதை வைத்துக் கொள்ளலாம். இந்த அறிக்கை நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொண்டு இதை விரைவில் அமுல் நடத்த அமைச்சரவை எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, கல்விக் கொள்கையில் நான் என் கருத்துக்களை இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். நம் மாநிலத்தில் ஆரம்பக் கல்வியில் 40 லட்சம் குழந்தைகளும், இடைநிலைக் கல்வியில் 10 லட்சம் பேர்களும், அதேபோல் மேல்நிலைக் கல்வியிலும் படித்து வருகிறார்கள். இந்தக் கல்வித் திட்டம், ஏதோ சொல்வார்களே, குரங்கின் கையில் கொடுத்த பூமாலையைப் போல் இந்த அரசாங்கத்தின் கையில் சிக்குண்டு சீரழிந்து கொண்டிருக்கிறது, பத்தாண்டு காலமாக. இந்தப் பத்து ஆண்டு காலத்தில் ஒரு நோயாளியை வைத்துக் கொண்டு இரண்டு டாக்டர்கள் போட்டி போட்டுக் கொண்டு எப்படி ஆப்பரேஷன் செய்வார்களோ, சர்ஜரி செய்வார்களோ அதேபோன்று குழந்தைகளின் கல்வித் தரத்தை பரீட்சை செய்து, பரீட்சை செய்து இதுவரை ஒரு முடிவான கருத்தைக் கொள்ளாமல் இருக்கிறார்கள். இதில் கவனிக்கவேண்டியது, கல்வித்துறையில் மொழி அறிவு என்பது வேறு, அறிவு என்பது வேறு. இங்கிருக்கிற குழப்பம் எல்லாம், மொழி அறிவும், அறிவும் ஒன்றுதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேல் நாடுகளில் அறிவிற்கு சாதகமாக மொழியைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இந்த நாட்டிலே மொழி அறிவுதான் அறிவு என்று கருதுகிறார்களே தவிர, அறிவு என்பதைத் தனியாக வைத்து மொழியை மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷனாக, அறிவு பெறத்தக்க சாதனமாக இங்கு பயன்படுத்துவதில்லை. நம் மாநிலத்தில் உள்ள மாணவர்களின் எதிர்காலம் இருண்ட சூழ்நிலையில்தான் இருக்கிறது. நம் மாணவர்கள், ஆங்கிலத்தில் படிக்க வேண்டுமென்றால் தமிழில் எண்ணித்தான் ஆங்கிலத்தில் எழுதும் நிலை இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுத வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் எண்ணி ஆங்கிலத்தில் எழுதினால் அது வேறு. ஆனால் இங்கு தமிழில் எண்ணி ஆங்கிலத்தில் எழுதுகிறதினால்தான் ஆங்கிலத்தில் குறைந்த மார்க்ஸும் மற்ற பிரிவுகளில் அதிக மார்க்குகளும் வாங்குகிறார்கள். பிற நாடுகளில், ஒரு மொழிதான் இருக்கும். அமெரிக்காவாக இருந்தாலும் சரி, இங்கிலாந்தாக இருந்தாலும் சரி, பிரான்சாக இருந்தாலும் சரி, ஜெர்மனியாக இருந்தாலும் சரி, ஜப்பானாக இருந்தாலும் சரி, சைனாவாக இருந்தாலும் சரி ஒரு மொழியில்தான், அந்த மொழியில்தான் 15 வயது வரை கற்றுக் கொண்டு பிறகு அறிவு பெற முயற்சிக்கிறார்கள். அப்படிக் கற்று பத்து ஆண்டுகளுக்குள்ளாக ஒரு விஞ்ஞான மேதையாக வருகிறான், ஒரு புலவனாக வருகிறான். இப்படி ஒவ்வொரு துறையிலும் மாணவர்கள் முன்னேறி வருகிறார்கள். ஆகவே அங்கு விஞ்ஞானம் போன்ற துறைகளில் மாணவர்கள் நல்ல முறையில் முன்னுக்கு வர முடிகிறது. ஆக, அறிவு வேறு, மொழி அறிவு வேறு. மொழியைக் கற்று அந்த மொழி மூலம் அறிவைப் பெறுகிறான். ஆகவே அவர்கள் முன்னேறுகிறார்கள், பல்வேறு துறைகளில். இந்த நாட்டிலே மொழி அறிவு, அறிவு இரண்டும் ஒன்றுதான் என்று நினைக்கிறார்கள்.



இந்தி மொழியில் அறிவு வேண்டும், ஆங்கில மொழியில் அறிவு வேண்டும், தமிழில் அறிவு வேண்டும் என்று சொல்லி சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு இம்மொழி ஒரு சுமையாக இருப்பதினால்தான் மாணவர்கள் மற்ற துறைகளில் அனுபவம், ஆற்றல் இல்லாதவர்களாகப் போய் விடுகிறார்கள். ஆங்கிலத்தில் சொல்லித் தருகிற ஹைஸ்கூல்களை எடுத்துக் கொள்வோம், அங்கு மாணவர்கள் தமிழில் பெயில் ஆவார்களே தவிர ஆங்கிலத்தில் பெயில் ஆவதில்லை. தமிழ் மீடியம் உள்ள ஸ்கூல்களில் மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் 40-க்கு 38 மார்க்குதான் வாங்குவார்கள். ஆக, மொழியை அறிவு வளர்ச்சிக்கு பயன்படுத்தாமல் இரண்டும், மொழி அறிவும், அறிவும் ஒன்றுதான் என்று நினைக்கிற காரணத்தினால்தான் கல்வித்துறையில் பெரிய மாற்றத்தை உண்டு செய்யாமல் இருக்கிறோம். இந்த ஆட்சியில் உள்ளவர்கள் குழந்தைகளை, மாணவர்களை பம்பரமாக வைத்துக் கொண்டு இதுவரை விளையாடி வந்திருக்கிறார்கள். நாம் சொல்வதைத்தான் பிள்ளைகள் படிக்கப் போகிறார்கள் என்று நினைத்துத்தான் 1937-ல் இந்தியைப் புகுத்த நினைத்தார்கள், தோல்வி கண்டார்கள், 1949-ல் இந்தியைப் புகுத்த நினைத்தார்கள், தோல்வி கண்டார்கள், 1952-ல் கல்விக் கொள்கையில் கை விட்டார்கள், தோல்வி கண்டார்கள். எனக்கு முன்னர் பேசிய திரு. தட்சணாமூர்த்தி கவுண்டர் யாரையோ சனி பிடித்துக் கொண்டது என்று சொன்னார்கள். இந் நாட்டில் மாணவர்கள் அரசியலில் முதிர்ந்தவர்களை பின்னுக்கு தள்ளியிருக்கிறார்கள். இதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு படித்தமேதை, உலகில் உள்ள ஒரு பெரிய அறிஞர் என்று சொல்லக்கூடியவர், இந்தியாவில் முதல் கவர்னர்-ஜெனரலாக இருந்தவர், காங்கிரஸில் இருந்தவர்கள் தேடிப்பிடித்து அழைத்து வந்து முதல் அமைச்சராக ஆக்கப்பட்டு பின்னர் வெளியே அனுப்பப்பட்ட ராஜகோபாலாச்சாரியார் முதல் அமைச்சர் பதவியிலிருந்து இறங்குவதற்கு யார் காரணம். சின்னஞ்சிறு குழந்தைகள்தான் காரணம். ஆகவே குழந்தைகளாக இருக்கிறார்கள், எதைச் சொன்னாலும் படிப்பார்கள், எதையும் ஜீரணித்துக் கொள்வார்கள் என்று நினைத்தால் நிச்சயமாக பிடித்திருக்கிற சனி உங்களை விட்டுப் போகாது.

**கனம் திரு. பூ. கக்கன் :** பிடித்திருக்கிற சனி உங்களை விட்டுப் போகாது என்று Chair-ஐப் பார்த்து பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** " உங்கள் " என்று சொன்னால் அது தலைவரைத்தான் குறிக்கும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஒன்று நான் கூற விரும்புகிறேன். இந்தி மொழி திணிப்பிற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சரித்திர பூர்வமான தொடர்பு உண்டு. இந்தியை புகுத்த நினைத்தார்கள். இந்த நாட்டில் கட்டாய பாடமாக அதைக் கொண்டு வர முயன்றார்கள். அப்படி இந்தியைப் புகுத்த நினைத்ததுதான் எங்கள் வளர்ச்சிக்கு வேரானது, நீரானது. அதுதான் நாங்கள் வளர்வதற்கு உண்டான ஆதாரம். ஆகவே மீண்டும் இந்தியைப் புகுத்தினால் உங்கள் ஆட்சி கவிழ்ந்து விடும், ஆகவே அம்முயற்சியை விட்டுவிடும்படி சொல்லிக் கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** இந்த அங்கத்தினர் மட்டுமல்ல, எந்த அங்கத்தினரும் நீங்கள் என்று சொன்னால் அது செயரைத்தான் குறிக்கும். சர்க்காரைப் பற்றி சொல்ல வேண்டுமானால் சர்க்கார் என்று சொல்ல வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அமைச்சர் அவர்கள் இந்திப் பரீட்சை வேண்டாமென்று சொன்னார்கள், பாராட்டினோம். இந்த நாட்டிற்கு விடுதலை கிடைத்த பிறகு நல்ல அத்தியாயம் பிறக்கிறது என்று கருதினோம். ஒரு வாரத்திற்குள்ளாக திரு. வெங்கட்ராமன் அவர்கள் மைலாப்பூரில் பேசுகிறபோது இந்திப் பரீட்சை வைக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். இரண்டு நாட்களுக்குள்ளாக டெல்லியில் இருக்கிற மந்திரிகள், லால் பகதூர் சாஸ்திரி, சென்னை சர்க்காரின் போக்கு பிடிக்கவில்லை என்று சொன்னதால் மாற்றப்பட்டிருக்கிறது......

[30th March 1963

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி அவர்கள் சொல்லவில்லை. உள்நாட்டு அமைச்சர் சென்னை சர்க்கார் போக்கு எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லவில்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் ஸார், மெம்பர் சபைக்குள்ளே தண்ணீர் குடிக்கலாமா ?

**கனம் உதவி சபாநாயகர் :** நம்முடைய இந்த சபையைப் பொறுத்த வரையிலும் தண்ணீர் குடிப்பது அனுமதிக்கப்பட்டுதான் வந்திருக்கிறது. அதைப்பற்றி ஆட்சேபிக்கவேண்டிய அவசியமில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்றைக்கு "சென்னையின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை" என்று லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் சொன்னது பத்திரிகையில் வந்ததோ அன்றைய தினத்திலிருந்து இந்த மந்திரி சபை நடு நடுங்கிக்கொண்டிருக்கிறது. ஆகையால்தான் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இந்தியிலே பரீக்ஷை வேண்டாமென்று சொன்னவர்கள் இப்போது "மாடரேஷன்" என்று சொல்கிறார்கள். மாடரேஷன் என்றால் என்ன மாடரேஷன் ? கனம் பக்தவத்சலம் அவர்களுக்கும், கனம் வெங்கட்டராமன் அவர்களுக்கும் பேதத்தில் இருக்கிற இடைவெளியை குறைக்க மாடரேஷனா ? அல்லது சென்னை சர்க்காருக்கும், மத்திய சர்க்காருக்கும் இடையிலே இருக்கிற பேதத்தைக் குறைக்கிற மாடரேஷனா ? இந்தியில் பரீட்சை நடத்தினால் எழுத மாட்டேன் என்று சொன்னார்கள் மாணவர்கள். மாணவர்கள் பூஜ்யம் மார்க்கு வாங்குவார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த ஆட்சியில் இருப்பவர்கள் மத்திய சர்க்கார் ஏஜெண்டாக இருக்கிறார்கள், வட நாட்டு ஏஜெண்டாக இருந்து இந்தியை பரப்புகிறார்கள். அப்போது ஒரு காலத்தில் வெள்ளைக்காரன் போட்ட ஒரு உத்தரவை இங்கே நிறைவேற்ற கவர்னர் ஜெனரல்கள் இருந்தார்கள். அதைப்போன்று மத்திய சர்க்காரிலிருந்து வரக்கூடிய உத்தரவுகளைத்தான் நிறைவேற்றக்கூடிய மந்திரிகள் இங்கு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவர்கள் மறைமுகமாக கட்டாய இந்தியை புகுத்துகிறார்களா என்றுதான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இதுதான் நாணயமான செயலா ? மாடரேஷன் என்று சொன்னால் என்ன அர்த்தம் ? ஒருவனுக்கு ஆங்கிலத்தில் 40 மார்க்கு வாங்கவேண்டுமென்று சொன்னால் அவன் 30 மார்க்கு ஆங்கிலத்திலே வாங்கி இருந்தாலும் இந்தியிலே 10 மார்க்கு வாங்கியிருந்தாலும் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து விடுவான். கம்பல்சரி சப்ஜெக்ட்டுகளில்—ஜியாகிரபியிலோ, ஹிஸ்டரியிலோ, 5, 10 மார்க்குகள் குறைவாக வாங்கியிருந்தாலும் இந்தியிலே மார்க்கு வாங்கியதை வைத்துக்கொண்டு அதை ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்றால்......

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர் ஸார்..........

**Sri V. KRISHNAMOORTHY :** I am not yielding to the hon. Lady Member, Sir.

**Srimathi T. N. ANANDANAYAKI :** The Chair should give the ruling. I want to speak on a point of order, Sir. மாடரேஷன் என்பதைப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறார்.

**Sri V. KRISHNAMOORTHY** rose.

**Srimathi T. N. ANANDANAYAKI :** Sit down. மாடரேஷன் என்றால் "மினிமம்" ஒவ்வொரு பாடத்திலும் வாங்கவேண்டிய மார்க்கைக் குறைக்க முடியாது ; மொத்தத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

**Mr. DEPUTY SPEAKER :** There is no point of order. The hon. Member Sri V. Krishnamoorthy may proceed.



30th March 1963]

**திரு. மு. கருணாநிதி :** ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்ட அம்மையார் "sit down" என்று கூறலாமா ? இதற்கு சபாநாயகர் தீர்ப்பு என்ன ?

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் "sit down" என்று சொல்லக்கூடாது. அந்தப் பொறுப்பை சபாநாயகர் அவர்களிடம் விட்டுவிடவேண்டும்.

**Sri V. KRISHNAMOORTHY :** I am completely ignoring the remarks of the hon. Lady Member. I am proceeding. இன்றைக்கு இந்த முறையிலே இந்தியை மறைமுகமாக புகுத்தக்கூடிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே நீங்கள் தமிழ் மக்களுக்கு தொண்டு செய்கிறவர்களாக இருந்தால் தமிழை வளருங்கள். ஆங்கிலத்தை வையுங்கள். இன்றைக்கு இந்தி மொழியை கொண்டுவந்து என் புகுத்துகிறீர்கள். இந்தியிலே பரீட்சை வைத்து எஸ் எஸ்.எல்.சி. பரீட்சையில் பாஸ் செய்வதற்கு அந்த மார்க்கையும் கூட்டிக் கொள்ளலாம் என்றால் அடுத்து இந்தியை கல்லூரியிலும் புகுத்தப் போகிறீர்களா ? இன்றைக்கு இந்தியிலே 10 மார்க்கு 8 மார்க்கு வாங்கினால் அது மாடரேஷனுக்கு உதவி கொடுக்கும் என்று சொல்லிவிட்டு நாளைக்கு மறுநாள் காலம் செல்லச் செல்ல இந்தியிலே 35 மார்க்கு வாங்கவேண்டும் 40 மார்க்கு வாங்கவேண்டுமென்று கட்டாயப் படுத்துவதற்கு முதல் முயற்சியல்லவா இது ? கல்லூரியிலே இந்தியைப் புகுத்த முதல் முயற்சியல்லாவா இது. கடந்த 10 ஆண்டுகாலமாக நல்லமுறையிலே ஆட்சியை நடத்தி வந்த காமராஜரின் அமைச்சரவையைப் பாராட்டுகிறேன். அவருடைய ஆட்சி இந்த பத்தாண்டுகாலத்தில் ஆட்டம் காணவில்லை. ஆனால் இன்று அவரை கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணத்தினாலோ என்னவோ, இந்தியை இந்த நாட்டிலே புகுத்தி காமராஜரை இறக்கவேண்டுமென்ற எண்ணத்தினாலோ என்னவோ இந்தியைப் புகுத்த சிலபேர் முனைந்திருக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

இரண்டாவதாக தமிழ் மொழியைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கல்லூரியிலே தமிழ் மொழியிலே பாடத்தைக் கற்றுக்கொள்ள மாணவர்கள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அந்தக் காலத்தில் தமிழ் மொழி எப்படி வளர்ந்தது, இப்போது என் வளராமல் இருக்கிறது? தமிழிலே படித்தால் அந்த பட்டதாரிகளுக்கு சர்க்கார் துறையிலே உத்தியோகம் கொடுப்பதில் முதல் பிரயாரிட்டி கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள். அப்படி உத்திரவாதம் அளிப்பீர்களேயானால் உங்களால் மாணவர்கள் வந்துசேரும் அளவுக்கு கல்லூரிகளைத் திறக்க முடியாதா ? உங்களால் ஆசிரியரை உருவாக்க முடியுமா ? அதை விட்டுவிட்டு . . .

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் "நீங்கள்" "உங்கள்", என்று சொல்லுவதை குறைத்துக்கொண்டால் இவ்வளவு வேகமாக பேசுவதற்கு வேண்டிய அவசியம்கூட வராது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, "நீங்கள்" என்று. நான் கூறுவதெல்லாம் அரசாங்கத்தை பற்றித்தான் குறிப்பிடுகிறேன் என்பதையும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** "நீங்கள்" என்பதை நீங்கள் உபயோகபடுத்தவில்லையானால் நீங்கள் பேசுவதிலேகூட வேகம் குறைந்திருக்கும். இந்தச் சபையின் கவுரவத்திற்கும் உகந்ததாக இருக்கும். நம்முடைய வழக்கம்கூட இம்மாதிரி "நீங்கள்" என்று சொல்வது தவிர்க்கப்பட்டு வருகிறது. ஆகவே "நீங்கள்" என்று சொல்லவேண்டாம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தமிழை பயிற்சி மொழி ஆக்கவேண்டுமென்று இந்த மன்றம் முடிவு செய்து இருக்கிறது. கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழை உள்ளபடியே வளர்க்கவேண்டுமென்று கருதுவார்களேயானால் இந்த மாமன்றத்தினுடைய கட்டளையை நிறைவேற்ற இன்றைய மந்திரி சபை அக்கறைகொள்ளவேண்டும். ஆனால், 1963-64-ம் ஆண்டிலே "ஹியூமானிட்டீஸ்" என்று சொல்லுகிறார்களே,

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [30th March 1963

அந்தப் பகுதியில் என் தமிழிலே போதிக்க முன்வரக்கூடாது. இதை எதிர்க்க சென்னையிலே ஒரு கூட்டமே இருக்கிறது. அதை இந்த நாடும், மாமன்றமும் நன்ருக அறியும். மாணவர்கள் தமிழிலே படிக்கவேண்டுமென்றால் 30 ரூபாய் ஸ்டைபெண்டாக கொடுத்துவிட்டால் போதுமா? தமிழிலே படித்தும் பட்டம் பெற்றவர்களுக்கு அரசாங்கத்தின் வேலைகளில் முதல் சலுகை கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள், கோயம்புத்தூர் மட்டுமல்ல, தமிழகத்திலே உள்ள அத்தனை கல்லூரிகளிலும் தயார், தயார் என்று சொல்லக்கூடிய ஆயிரம் ஆயிரம் மாணவர்களை நாங்கள் காட்டுகிறோம். அதை மூடிமறைக்கும் முறையிலே 10 மாணவர்கள் வந்தார்கள், 8 மாணவர்கள் வந்தார்கள், 6 மாணவர்கள் கூட வரவில்லை என்ற முறையிலே ஒரு கூட்டம் அதை எதிர்க்கும் முறையிலே சூழ்ச்சி நடத்திக்கொண்டு வருகிறது. அந்தக் காரணத்திஞல்தான் தமிழை எப்படியும் நீக்கி இந்தியைப் புகுத்தி தமிழை வீழ்த்தவேண்டுமென்ற முறையிலே இந்த அமைச்சரவை சென்று கொண்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக்கொண்டு இதை மாற்றுகிறீர்கள்? சமீபத்தில் எடுத்த முடிவை என் உடனடியாக மாற்றுகிறீர்கள்? 10, 12 கல்லூரிகளில் தமிழில் பயிற்சி கொடுக்க சில ஆண்டுகளாவது முயற்சித்தீர்களா? நான் இங்கே சொல்கிறேன், தமிழ் மொழியிஞல் ஆகாதது ஒன்றும் இல்லை. அமைச்சர் அவர்கள் தவருகக் கருதக்கூடாது. இந்த அமைச்சரவைக்கு அடிமை புத்தி இருக்கக் கூடாது. நம்முடைய மொழி வளமான மொழி. மூத்த மொழி. முன் தோன்றிய மொழி.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லிய "அடிமை புத்தி" என்ற வார்த்தை இந்த மன்றத்தில் உபயோகிக்கக் கூடிய வார்த்தை அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் எதைச் சொன்னலும் நான் எடுத்துக்கொள்வதில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த வார்த்தைகள் பல தடவை....

MR. DEPUTY SPEAKER : It is not desirable to use such words here. In keeping with decorum of the House, the hon. Member, Sri V. Krishnamoorthy should withdraw his word.

**திரு. மு. கருணாநிதி :** "அடிமை புத்தி" இருக்கக்கூடாது என்றுதான் சொன்னரே தவிர, "அடிமை புத்தி" இருக்கிறது என்று குறிப்பிடவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அமைச்சரவைக்கு அடிமை புத்தி இருக்கக் கூடாது என்று சொன்னேன். நான் சொன்னதினுடைய நோக்கம் இந்த அமைச்சரவை தெள்ளத் தெளிய..................

MR. DEPUTY SPEAKER : I presume the hon. Member, Sri V. Krishnamoorthy will withdraw that word.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** "அடிமை புத்தி" என்று சொல்வது அமைச்சர் அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் விட்டுவிடுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM rose.

MR. DEPUTY SPEAKER : The hon. Member, Sri V. Krishmoorthy will resume his seat.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் மிக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன், அவர்கள் சொல்லுவதை இந்த சமயத்தில் மறுக்க வேண்டாம், ஆட்சேபிக்கவேண்டாம். இந்த மன்ற அங்கத்தினர்கள் அதைப்பற்றி விளக்கத்தைத் தாங்களே எடுத்துக்கொள்வார்கள்.



30th March 1963]

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே ஆகையால், ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த அமைச்சரவை தமிழர்களுடைய வாழ்வைப் புறக்கணிக்கிறது, தமிழின் மொழி வளத்தைப் புறக்கணிக்கிறது, தமிழ் நாட்டில் இருக்கிற மாணவர்கள் வாழ்வைச் சீரழிக்கிறது, மாணவர்களுடைய எதிர் காலத்தைப் பாழாக்குகிற . தமிழுக்கு விரோதிகள் இருக்கிருர்கள் என்ருல், அவர்கள் வட நாட்டில் இல்லை, வேறு எவரும் இல்லை, தமிழ் மொழியை அழிக்கிறவர்கள், தமிழுக்கு எதிரிகள் தமிழகத்திலேயே இருக்கிருர்கள், அது இந்த, மந்திரி சபையைத் தவிர வேறு இல்லை என்று வலியுறுத்திக்கொண்டு சொல்லுகிற கருத்துக்கள் உங்களுடைய உள்ளத்தைக் குத்துவதாக இருக்கலாம், இருந்தாலும் நாங்கள் கூறுகிற கருத்தை "சரி" என்று தமிழ் மக்கள் கடந்த 20 வருஷ காலமாக ஏற்றுத் தான் இருக்கிருர்கள், தமிழ் நாடு பார்த்துத் தான் வருகிறது. ஆகையால், எங்களுடைய கருத்தைப் போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும், தொடர்ந்து சொல்லுவோம் ஏற்றதொரு கருத்தை, எமதுள்ளம் என்று எடுத்து உரைப்போம், எவர் வரினும் அஞ்சோம், நில்லோம் என்று கூறி, ஹிந்தி மொழி திணிக்கப்படுவதை எதிர்த்து, தமிழ் மொழியை அழிக்கிற முறையை எதிர்த்து, ஆங்கிலமும் தமிழும் மட்டும் இருந்தால் போதும் என்று கூறி, தமிழ் மொழியை அழிக்கிறது என்று இந்த மந்திரி சபையை நான் குற்றம் சாட்டி, இந்த முறைகளிலிருந்து நீங்கள் பின்வாங்கவேண்டும் என்று கூறிக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 1st April 1963. 1-53 p.m.

The House then adjourned.

## VIII.—PAPERS LAID ON THE TABLE ON THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

145. *Notification issued with G.O. Ms. No. 317, Home, dated 28th January 1963, extending further period of grace time for payment of motor vehicles tax for fourth quarter of 1962–63 as a special case in respect of Ramanathapuram bus operators.* [*Laid on the Table of the House under section* 11(2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931].

### B. Reports, Notifications and other papers.

*Nil.*

[30th March 1963

## Appendix I.

[*Vide* answer to Starred Question No. 446 on page 245.]

The delay in sanction of pension to retired Government servants was due to the complicated nature of the rules as well as failure on the part of the administrative authorities to take proper and timely action in the maintenance and completion of essential pension records and documents. With reference to the recommendation made by a Committee appointed by the Government of India, to examine the matter and suggest effective measures for the expeditious disposal of pension cases, and also, with reference to the recommendations of the Second Central Pay Commission, the Government of India revised the procedure and simplified the pension rules to eliminate delay in finalisation of pension cases. In November 1961, the Government of Madras also adopted the improved procedure and simplified pension rules, for the expeditious disposal of pension cases. The salient features of the scheme are as follows :—

(1) *Simplification of rules*—

(i) All continuous temporary or officiating service followed without interruption by confirmation, will count in full as qualifying service. (Previously temporary and officiating service in excess of first 5 years only will count.)

(ii) One half of the difference between the substantive pay and the higher officiating pay drawn during the last three years will count for pension in all cases. (Previously in this concession was admissible only to those who officiated in the higher post for not less than 2 years.)

(2) *Improvement in procedure*—

(i) In each department/office, an officer of appropriate rank has been specifically charged with the responsibility for initiating action, in due time regarding the completion of pension records and documents in respect of Government servants due to retire 12 to 18 months later.

(ii) A proforma called the 'check list' and a form of 'Progress Statement' have been introduced to ensure that necessary steps for the finalisation of pension cases are taken well in advance.

(iii) In cases where Government dues are outstanding for recovery from Government servants pension will be released on furnishing a suitable surety or a suitable cash deposit by the concerned Government servant. If the Government servant is unable or unwilling to furnish the surety or cash deposit, a portion of the Death-*cum*-Retirement Gratuity, which is considered sufficient, will be witheld till the outstanding dues are recovered or adjusted.

(iv) Pension sanctioning authorities record their order for payment of pension which would be found admissible by the Accountant-General, in the pension application itself, instead of



30th March 1963]

sending the pension papers to the Accountant-General, to report the amount of pension and issue formal orders of sanction to pensions based on such reports.

(v) For proper maintenance of service books of Government servants, all Heads of Offices will have to furnish a certificate by the end of April in each year to his next superior officer to the effect that services rendered by all Non-Gazetted staff of his office during the preceding calendar year have been verified and certificate of verification recorded in the respective books.

It is considered that the above instructions will go a long way in eliminating delays in sanction of pension.

2. In addition to the above, the Comptroller and Auditor-General of India has also suggested—

(1) All leave taken during the period of continuous service may be counted for pension. (Now earned leave or leave on average pay, as the case may be, taken up to 120 days or 4 months at a time will count for pension and other leave with allowances will count for pension upto one year if the Government servant has put in 15 years of service and upto 2 years if the Government servant has put in 30 years of service. Extraordinary leave without allowances does not count for pension.)

(2) The arrears of pension due to deceased Government servants are now paid to the legal heirs without a succession certificate if the arrears are Rs. 500 or less. The Auditor-General has suggested that this limit may be enhanced to Rs. 2,500.

The above two suggestions are under the consideration of the Government of India and if accepted will, in due course, be implemented in this State also.

[5-ம் பக்கத்திலுள்ள 446 நம்பர் நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

வேலையிலிருந்து ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்குப் பென்ஷன் அனுமதிப்பதில் சில காரணங்களால் தாமதம் நேரிடுகிறது. விதிகள் சிக்கலானவை; முக்கியமான பென்ஷன் ரெகார்டுகளையும், தஸ்தாவேஜுகளையும் வைத்துவருவதிலும் பூர்த்தி செய்வதிலும் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள் உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறுகிறார்கள். இவையே பென்ஷன் தாமதத்துக்குரிய முக்கிய காரணங்களாகும். இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து, பென்ஷன் அனுமதிப்பதை விரைந்து செய்வதற்காக உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கூறுமாறு இந்திய அரசினர் நியமித்த கமிட்டி செய்த சிபாரிசுகளையொட்டியும், இரண்டாவது சம்பளக் கமிஷன் செய்த சிபாரிசுகளை அனுசரித்தும், இந்திய அரசினர் பென்ஷன் நடைமுறையை மாற்றியமைத்து பென்ஷன் விதிகளை எளிதாக்கினர். பென்ஷன் அனுமதிப்பதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கவே இவ்வாறு செய்தனர். 1961 நவம்பரில் இந்த நோக்கத்தை முன்னிட்டு சென்னை அரசினரும் பென்ஷன் நடைமுறையை மாற்றியமைத்து புதிய பென்ஷன் விதிகளை மேற்கொண்டனர். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு :—

1. விதிகளை எளிதாக்குதல் :

(i) இடையீடின்றி தொடர்ந்து இருந்த தாற்காலிக அல்லது பதிலிப்பணி அனைத்தும் உறுதி செய்யப்படுவதன் மேல் தகுதிப் பணிக்கு முழுதும் சேரும். (முன்னர் முதல் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இத்தகைய பணி மட்டுமே அதற்குச் சேர்ந்து வந்தது.)

[30th March 1963

(ii) கடைசி மூன்றாண்டுகளில் வாங்கிய அடிப்படைச் சம்பளத்துக்கும் பதவி உயர்வில் பதிலியாகப் பெற்ற சம்பளத்துக்கும் உள்ள வித்தியாசத்தொகையில் பாதி எல்லா விஷயங்களிலும் பென்ஷனில் சேரும். (முன்னர் 2 ஆண்டுகளுக்குக் குறையாமல் உயர் பதவியில் வேலை பார்த்தவர்களுக்கு மட்டுமே இச்சலுகை உண்டு.

(2) நடைமுறையில் அபிவிருத்தி :

(i) ஒவ்வொரு துறையிலும்/அலுவலகத்திலும், 12 முதல் 18 மாதங்களுக்குப் பின்னர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் அரசாங்க ஊழியர்கள் விஷயமாக, பென்ஷன் ரெகார்டுகளையும் தஸ்தாவேஜுகளையும் பூர்த்திசெய்வது குறித்து உரிய நேரத்தில் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கும் பொறுப்பு தகுந்த அந்தஸ்துள்ள அதிகாரியிடம் பிரத்தியேகமாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

(ii) பென்ஷன் முடிவு செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் போதுமான காலம் முன்னதாகவே எடுத்துக்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, "சோதனைப்பட்டியல்" நமூனா ஒன்றும், "முன்னேற்ற அறிக்கை" நமூனா ஒன்றும் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

(iii) அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்துக்கு பாக்கித் தொகை எதுவாகிலும் கொடுக்கவேண்டியிருந்தால், சம்பந்தப்பட்ட அரசாங்க ஊழியர் தகுந்த நபர் ஜாமீன் கொடுப்பதன் மேல் அல்லது போதுமான ரொக்கத் தொகை கட்டுவதன்மேல், அவருக்கு பென்ஷன் அனுமதிக்கப்படும். அரசாங்க ஊழியர் அவ்வாறு ஜாமீன் கொடுக்க அல்லது ரொக்கத் தொகை கட்ட முடியாவிட்டால் அல்லது விரும்பாவிட்டால், இறப்பு, பதவி ஓய்வு பணிக்கொடையில் போதுமானதெனக் கருதப்படுகிற தொகை நிறுத்தி வைத்துக் கொள்ளப்படும். அவர் அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகை வசூலிக்கப்படுகிற வரையில் அல்லது சரிக்கட்டப்படுகிற வரையில் இவ்வாறு நிறுத்தி வைத்துக்கொள்ளப்படும்.

(iv) பென்ஷன் அனுமதிக்கும் அதிகாரிகள் கணக்குத் துறைத் தலைவர் (அக்கவுன்டண்ட்-ஜெனரல்) கொடுக்கப்படலாம் என அனுமதிக்கத்தக்க பென்ஷன் தருவதற்குரிய ஆணையைப் பென்ஷன் விண்ணப்பத்திலேயே எழுதிவிடுகின்றனர். பென்ஷன் தொகையைக் குறிப்பிடுவதற்காகக் கணக்குத்துறைத் தலைவருக்கு பென்ஷன் காகிதங்களை அனுப்பி, அவர் அறிக்கை அனுப்புவதன்மேல் அதில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு பென்ஷன் ஆணை மாமூலாகப் பிறப்பிப்பதற்குப் பதிலாக இப்படிச் செய்யப்படுகிறது.

(v) அரசாங்க ஊழியர்களில் பணிப் புத்தகங்களை (செர்விஸ் ரிஜிஸ்டர்களை) சரிவரப் பராமரிப்பதற்காக, அலுவலகத் தலைவர்கள் அனைவரும் தங்களுடைய அடுத்த மேலதிகாரிக்கு ஒவ்வோராண்டும் ஏப்ரல் மாத முடிவிற்குள் செர்டிபிகேட் ஒன்றை அனுப்பி வைக்கவேண்டும். தமது அலுவலகத்திலுள்ள, கெஜட் பதிவு பெறாத பணியாளர்கள் சென்ற காலண்டர் ஆண்டில் செய்த பணி சரிபார்க்கப்பட்டது என்றும் சரிபார்த்தது பற்றிய சான்று அந்தந்தப் புத்தகங்களில் எழுதி வைக்கப்பட்டதென்றும் அதில் உறுதி கூற வேண்டும்.

பென்ஷன் அனுமதிப்பதில் ஏற்படும் தாமதத்தைப் போக்குவதற்கு இவ் விதிகள் பெருமளவு துணை செய்யும் எனக் கருதப்படுகிறது.

2. மேற்கண்டவைகளுடன்கூட, இந்திய அரசாங்க மாபெருங் கணக்கர் பரிசோதகர் (இந்திய கம்ப்ட்ரோலர் ஆடிட்டர் ஜெனரல்) அடியிற்கண்ட ஆலோசனை கூறியுள்ளார் :—

(i) தொடர்ச்சியான பணிக்காலத்தில் எடுத்த லீவ் முழுவதும் பென்ஷனை முன்னிட்டுத் தகுதிக் கால அளவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இப்போது ஈட்டிய லீவ் அல்லது சராசரிச் சம்பள லீவ் ஒரு சமயத்தில் 120 நாட்கள் அல்லது 4 மாதங்கள் வரை எடுத்துக் கொள்வது மட்டுமே பென்ஷன் தகுதிக் கால அளவில் சேரும். இதற்கு



30th March 1963]

மேற்பட்ட லீவ் (படிகளுடன் சேர்ந்தது) எடுத்த அரசாங்க ஊழியர் 15 ஆண்டு பணி புரிந்திருந்தால் அத்தகைய மேற்பட்ட லீவ் ஓராண்டு வரையிலும், அவர் 30 ஆண்டு பணி புரிந்திருந்தால் அத்தகைய மேற்பட்ட லீவ் 2 ஆண்டு வரையிலும் பென்ஷன் தகுதிக் கால அளவில் சேரும். படிகள் இராத அசாதாரண லீவ் பென்ஷனுக்குச் சேராது.

(ii) இறந்த அரசாங்க ஊழியருக்குக் கொடுக்கவேண்டிய பென்ஷன் பாக்கி ரூ. 500 வரை இருந்தால், வாரிசுச் சான்று இன்றியே சட்டப்படிக்கான அவருடைய வாரிசுக்குக் கொடுக்கப்படுகிறது. இந்த வரையறையை ரூ. 2,500 ஆக உயர்த்த வேண்டுமென இந்திய அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் ஆலோசனை கூறியுள்ளார்.

இந்த இரண்டு ஆலோசனைகளையும் இந்திய அரசினர் பரிசீலனை செய்துவருகின்றனர். இவற்றை அவர்கள் ஏற்றுக்கொண்டால், அவை நாளடைவில் இந்த மாநிலத்திலும் அமலுக்குக் கொண்டுவரப்படும்.

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 447 on page 245.]

STATEMENT SHOWING PARTICULARS OF EXPENDITURE INCURRED IN THE FIVE JAILS UNDER DIFFERENT HEAD OF ACCOUNTS FOR 1961-62 IN THE MAINTENANCE OF PRISONERS AND RECEIPTS ON JAIL INDUSTRIES.

| *Head of Account.* | *Central Jail, Madras.* | *Central Jail, Tiruchi-rappalli.* | *Centarl Jail, Madurai.* | *Central Jail, Coimbatore.* | *Centrale Jails, Vellore.* |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | RS. | RS. | RS. | RS. | RS. |
| Pay of Officers .. .. | 24,476·45 | 27,201·79 | 14,934·35 | 24,648·79 | 20,728·60 |
| Pay of Establishment .. | 1,62,997·38 | 1,32,750·44 | 1,14,898·99 | 1,65,904·06 | 1,31,822·66 |
| Allowances .. .. .. | 27,710·79 | 28,099·00 | 28,805·45 | 36,155·68 | 25,276·35 |
| Rents .. .. .. | 6,587·95 | 1,575·67 | 196·67 | 1,306,35 | 155·61 |
| Rates and taxes .. .. | 25,045·26 | .. | .. | 83·88 | 3,941·84 |
| Telephone charges .. .. | 2,915·74 | 1,294·95 | 1,162·16 | 1,362·35 | 1,740·80 |
| D.A. to contingent staff .. | 562·00 | 220·00 | 305·17 | 934·80 | 326.00 |
| S. C. A. to contingent staff | .. | 172·00 | 204·00 | .. | 204·00 |
| M. A. to contingent staff .. | 48·00 | .. | .. | .. | .. |
| Other contingencies .. | 1,830·95 | 7,949·66 | 4,975·65 | 8,978·71 | 5,879·76 |
| Transport of prisoners .. | 10,609·60 | 34,854·85 | 15,969·73 | 52,167·34 | 46,822·54 |
| Livestock and Tools and plants | 13,729·09 | 15,474·65 | 3,658·68 | 7,912·91 | 12,068·11 |
| Other charges .. .. | 22,851·58 | 32,470·12 | 22,833·01 | 26,645·97 | 30,393.56 |
| Expenditure in connection with the adoption of Metric system of Weights and Measures. | 140·20 | 5,136·35 | 7,511·00 | 2,557·35 | 378·00 |
| Petty Construction and Repairs. | 1.155·40 | 4,788·84 | 3,508·89 | 6,503·63 | 5,185·12 |
| Dietary charges .. .. | 4,60,290·02 | 6,41,682·41 | 4,17,620·35 | 7,80,279·77 | 511,159·63 |
| Medical and sanitary .. | 56,211·71 | 49,152·97 | 39,892·15 | 68,575·46 | 54,065·58 |
| Clothing and bedding .. | 65,303·17 | 1,18,582·06 | 34.451·75 | 1,30,422·54 | 63,984·59 |
| TOTAL .. | 8,82,465·35 | 11,01,405·76 | 7,10,928·00 | 13,14,439·59 | 914,132·75 |

*Receipt on Jail Industries.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| IV. A. Receipt .. .. | 2,03,117·28 | 2,47,207·96 | 1,92,442·01 | 9,86 396·30 | 4,46,478·38 |
| IV. B. Receipt .. .. | 54,699·00 | .. | .. | .. | 138·70 |
| IV. C. Receipt .. .. | 39,697·27 | 98,704·54 | .. | 5,68,037·88 | 1,45,975·90 |
| Cash Receipt .. .. | 443·01 | 10,116·76 | 6,667·46 | 41,425·23 | 5,183·20 |
| TOTAL .. | 2,97,956·56 | 3,56,029·26 | 1,99,109·47 | 15,95,859·41 | 5,97,776·18 |



## APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 462-F on page 265.]

*Wholesale prices of certain articles in Madras.*

| *Commodity.* | *Unit.* | *Wholesale price.* 15th February 1963. | *Wholesale price.* 15th March 1963. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | RS. NP. | RS. NP. |
| 1 Rice— | | | |
| (a) Nellore raw I sort. | Quintal. | 74·60 | 71·43 |
| (b) Red Kar Boiled II sort. | Do. | 54·05 | 51·36 |
| 2 Toor Dhall .. .. | Do. | 72·04 | 72·04 |
| 3 Chillies (Ramnad—New) | Do. | 320·00 | 220·00 |
| 4 Potatoes (Farookbad) | Do. | 33·07 | 42·25 |
| 5 Onions—Bellary variety | Do. | 35·71 | 32·85 |
| 6 Brinjals (Rail variety) | Do. | 26·50 | 17·50 |
| 7 Beans (Broad) .. .. | Do. | 35·00 | 26·50 |
| 8 Lady's finger .. .. | Do. | 44·00 | 31·00 |
| 9 Cabbage .. .. .. | Do. | 17·75 | 17·50 |
| 10 Tomatoes (Bangalore) .. | Do. | 44·00 | 35·00 |
| 11 Radish (country) .. | Do. | 17·50 | 17·62 |
| 12 Peas (Green) .. .. | Do. | 88·00 | 110·00 |
| 13 Ribbed Gourd .. .. | Do. | 26·50 | 35 25 |
| 14 Snake Gourd .. .. | Do. | 48·50 | 50·00 |
| 15 Carrots .. .. .. | Do. | 44·00 | 31·00 |
| 16 Plantain curry .. .. | Do. | 40·00 | 39·50 |
| 17 Drumsticks .. .. | Per 100. | 2·50 | 2·00 |
| 18 Vanaspathi (O.K.) .. | Quintal. | 278·13 | 281·82 |
| 19 Gingelly oil .. .. | Do. | 183·00 | 176·35 |
| 20 Groundnut oil .. .. | Do. | 160·00 | 152·00 |
| 21 Coffee seeds Plantation 'A' | Do. | 520·00 | 550·00 |
| 22 Brooke bond Kora dust. | Do. | 615·00 | 615·00 |
| 23 Fire wood— | | | |
| (a) Casuarina .. | Do. | 7·50 | 7·87 |
| (b) Junglewood .. | Do. | 7·00 | 7·35 |
| 24 Kerosene .. .. | 18·5 litres. | 5·80 | 8·25 |
| 25 Mettur mull M. 81 .. | Metre. | 1·20 | 1·20 |

[30th March 1963

*Wholesale price of certain articles in Madras*—cont.

| Commodity. | Unit. | Wholesale price. 15th February 1963. | Wholesale price. 15th March 1963. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | RS. NP. | RS. NP. |
| 26 B and C Mills (Khaki drill). | 20 metres. | 37·00 | 37·00 |
| 27 Cigarettes— | | | |
| (a) Wills Navy cut medium | per packet of 10. | 0·50 * | 0·60 * |
| (b) Berkely .. .. | Do. | 0·30 * | 0·35 * |
| (c) Players Navy cut medium | Do. | 1·00 * | 1·25 * |
| 28 Petroleum .. .. | Litre. | 0·67 * | 0·80 * |
| 29 Diesel .. .. .. | Do. | 0·50 * | 0·71 * |
| 30 Cement .. .. | Tonne. | 130·50 | 151·64* |
| 31 Infant food "Amul" | Per tin of 500 gms. | 4·30 * | 4·30 * |
| 32 Drugs— | | | |
| (a) Glycodin terp vasaka. | Per bottle of 6 oz. | 3·60 * | 3·60 * |
| (b) Multi-vitamin forte (B.D.H) | Per bottle containing 100 tablets. | 5·90 * | 5·90 * |
| (c) Penicillin .. | per vial. | | |
| 5 lakhs .. | Do. | 0·70 * | 0·62* |
| 2 lakhs .. | Do. | 0·50 * | 0·46* |
| 33 Automoblie Standard Companian car. | each. | 12,092·37 | 12,425·70 |

* Relates to retail price.



30th March 1963]

[25–ம் பக்கத்திலுள்ள 462 F நம்பர் நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

**சென்னையில் சில பொருள்களின் மொத்த விற்பனை விலைகள்.**

| பொருள். | அளவு. | மொத்த விற்பனை விலை. 1963–ம் வருடம் பிப்ரவரி மாதம் 15–ம் தேதி. | மொத்த விற்பனை விலை. 1963–ம் வருடம் மார்ச் மாதம் 15–ம் தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ.ந.பை. | ரூ. ந.பை. |
| 1 அரிசி— | | | |
| (அ) நெல்லூர் பச்சரிசி முதல் தரம். | குவிண்டல். | 74·60 | 71·43 |
| (ஆ) சிகப்பு காரரிசி (புழுங்கல், இரண்டாம் தரம்). | ,, | 54·05 | 51·36 |
| 2 துவரம் பருப்பு .. | ,, | 72·04 | 72·04 |
| 3 மிளகாய் (இராமநாதபுரம்-புதியவை.) | ,, | 320·00 | 220·00 |
| 4 உருளைக்கிழங்கு (பளுக்பாத்). | ,, | 33·07 | 42·25 |
| 5 பெல்லாரி வெங்காயம் .. | ,, | 35·71 | 32·85 |
| 6 ரயில் கத்திரிக்காய் .. | ,, | 26·50 | 17·50 |
| 7 பீன்ஸ் (பெரியவை) .. | ,, | 35·00 | 26·50 |
| 8 வெண்டைக்காய் .. | ,, | 44·00 | 31·00 |
| 9 கோசுமுட்டை .. .. | ,, | 17·75 | 17·50 |
| 10 தக்காளி (பெங்களூர்) .. | ,, | 44·00 | 35·00 |
| 11 சிவப்பு முள்ளங்கி (நாட்டு வகை). | ,, | 17·50 | 17·62 |
| 12 (பச்சைப்) பட்டாணி .. | ,, | 88·00 | 110·00 |
| 13 பீர்க்கங்காய் .. | ,, | 26·50 | 35·25 |
| 14 புடலங்காய் .. .. | ,, | 48·50 | 50·00 |
| 15 கேரட் .. .. .. | ,, | 44·00 | 31·00 |
| 16 வாழைக்காய் .. .. | ,, | 40·00 | 39·50 |
| 17 முருங்கைக்காய் .. | நூற்றுக்கு. | 2·50 | 2·00 |
| 18 வனஸ்பதி (O.K.) .. | குவிண்டல். | 278·13 | 281·82 |
| 19 நல்லெண்ணெய் .. | ,, | 183·00 | 176·35 |
| 20 கடலெண்ணெய் .. | ,, | 160·00 | 152·00 |
| 21 காப்பிக்கொட்டை "A" ரகம். | ,, | 520·00 | 550·00 |
| 22 ப்ரூக் பாண்ட் கோசா டஸ்ட் தேயிலை. | ,, | 615·00 | 615·00 |

| பொருள். | அளவு. | மொத்த விற்பனை விலை. 1963-ம் வருடம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதி. | மொத்த விற்பனை விலை. 1963-ம் வருடம் மார்ச் மாதம் 15-ம் தேதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ.ந.பை. | ரூ.ந.பை. |
| 23 விறகு— | | | |
| (அ) சவுக்கு .. .. | குவிண்டல். | 7·50 | 7·87 |
| (ஆ) காட்டுக்கட்டை .. | ,, | 7·00 | 7·35 |
| 24 மண்ணெண்ணெய் .. | 18·5 லிட்டர். | 5·80 | 8·25 |
| 25 மேட்டூர் மல் M 81 .. | மீட்டர். | 1·20 | 1·20 |
| 26 பி. அண்ட் சி. மில் காக்கி டிரில். | 20 மீட்டர். | 37·00 | 37·00 |
| 27 சிகரெட்— | | | |
| (அ) வில்ஸ் நேவிகட் (மீடியம்). | 10 சிகரெட் கொண்ட பாக்கெட் ஒன்றுக்கு. | 0·50 * | 0·60 * |
| (அ) பெர்க்லி .. | ,, | 0·30 * | 0·35 * |
| (இ) பிளேயர்ஸ் நேவிகட் (மீடியம்). | ,, | 1·00 * | 1·25 * |
| 28 பெட்ரோலியம் .. .. | லிட்டர். | 0·67 * | 0·80 * |
| 29 டீசல் .. .. .. | ,, | 0·59 * | 0·71 * |
| 30 சிமெண்ட் .. .. | மெட்ரிக் டன். | 130·50 * | 151·64 * |
| 31 குழந்தைக்கான பால் உணவு "அமுல்". | 500 கிராம் கொண்ட டின் ஒன்றுக்கு. | 4·30 * | 4·30 * |
| 32 மருந்துகள்— | | | |
| (அ) கிளக்கோடின் டிர்ப் வசாகா. | 6 அவுன்ஸ் பாட்டில் ஒன்றுக்கு | 3·60 * | 3·60 * |
| (ஆ) மல்டி வைட்டமின் (போர்ட்டி) (B.D.H.). | 100 மாத்திரை கொண்ட புட்டிக்கு. | 5·90 * | 5·90 * |
| (இ) பென்சிலின் .. | குழல் ஒன்றுக்கு | | |
| 5 லட்சம் .. | ,, | 0·70* | 0·62 |
| 2 லட்சம் | ,, | 0·50* | 0·46 |
| 33 மோட்டார்-ஸ்டாண்டர்டு காம்பனியன் வண்டி. | ஒவ்வொன்றுக்கும். | 12,022·37 | 12,425·70 |

* சில்லறை விலையைக் குறிக்கிறது.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## Monday, the 1st April 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS

*மழையினால் பயிர்ச்சேதம் (திருத்துறைப்பூண்டி தாலூகா)*

*463 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் உள்ள பல கிராமங்களில் இவ்வாண்டு பெய்த பருவ மழையால் மகசூல் குறைந்திருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், அக்கிராமங்களில் வரிவஜா செய்ய உத்தேச முண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : Clauses (அ) & (இ) The yield was low in a portion of Tiruthuraipundi taluk but it was not to such a degree as to warrant the grant of remission under the provisions of B.S.O. 13 or 14. In fact only 34 applications for remission are reported to have been received so far and they will be disposed of on merits after due inspection and enquiry.

*கோமுகி நதி அணை நீர்த்தேக்கத் திட்டம்*

*464 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் கோமுகி நதி அணை நீர்த்தேக்கத் திட்டத்தினால் பயனடையும் கிராமங்கள் யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : The attention of the Member is invited to the peper[a] placed on the Table of the House.

*Long Staple Cotton (Coimbatore)*

*467 Q.—THE HON. SRI P. KAKKAN : The hon. Member is not in the seat.

MR. SPEAKER : The Hon. Minister may read the answer for the benefit of other hon. Members.

[a] Printed as Appendix I on page 484 infra.

[1st April 1963

* 467 கேள்வி.—திருமதி சி. குழந்தையம்மாள் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில் பெரிய பருத்தியில் இந்த ஆண்டு விழுந்த புழு தொடர்ந்து அடுத்த ஆண்டும் விழுந்து நஷ்டப்படுத்தாமல் இருக்க என்ன ஏற்பாடு செய்ய உத்தேசம்?

(இ) நிபுணர் குழு ஆராய்ந்து கண்ட முடிவு என்ன?

(உ) ஆகாய விமானத்தின்மூலம் மருந்தடிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : (அ) to (உ) A statement is placed on the Table of the House.

*Mitta villages*

* 468 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have any proposals to pay the same allowance to the Triune Officers of Mitta villages not taken over by the Government as is paid to the village officers working in ryotwari villages?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

**கிராம அதிகாரிகள்**

* 471 கேள்வி.—திரு. கே. சீமைசாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமாதிகாரிகளின் மிராசு பாத்தியத்திற்கு குந்தகமாக அளிக்கும் ஹை கோர்ட் தீர்ப்பிற்கு பிறகு மிராசு பாத்தியத்தை நம்பி வாழ்ந்த கிராமாதிகாரிகளின் குடும்பத்தினரின் புனருத்தாரணத்திற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

(இ) கிராமாதிகாரிகளின் குழந்தைகளுக்கு சர்க்கார் வேலை வாய்ப்பில் சலுகையளிக்குமா?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government have not yet taken any decision in the matter.

(*b*) Does not arise.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுக்கு லோயர் டிவிஷன் கிளார்க்குக்கு உரிய 'ஸ்கேல் ஆப் பே' யில் சம்பளம் கொடுக்க திட்டம் உண்டா, இருந்தால் அது எப்பொழுது அமுலுக்கு வரும்?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்தக் கேள்வி பரம்பரை பாத்தியதை போனதால், கிராம அதிகாரிகளுக்கு உதவி பற்றியது. இப்பொழுது திட்டம் ஒன்றும் இல்லை. பரிசீலனையில் இருக்கிறது. இது சம்பந்தப்பட்ட மானியத்திற்குப் பதில் சொல்லும்போது,

a Printed as Appendix II on pages 484–485 infra



1st April 1963]

கிராம அதிகாரிகள் நியமனம், உத்தியோகம், சம்பளம் இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது, அரசாங்கம் கூடிய சீக்கிரம் ஒரு முடிவுக்கு வரும் என்று சொன்னேன்.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, இந்திய தலைமை நீதி மன்றம் ஹெரிடிடரி ப்ரின்சிபிள் செல்லாது என்று கூறிவிட்டது. ஆகவே, இந்த உத்தியோகங்களை மாற்றி அமைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? 1949-க்குப் பின்னால் எந்த அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்திருந்தாலும் அது செல்லாது என்ற தீர்ப்பு கொடுத்திருக்கிறது. அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : சுப்ரீம் கோர்ட் முடிவுக்குப் பின்னால், எங்காவது வேலை காலி ஏற்பட்டால், தற்காலிகமாக போடுகிறோம். அது பற்றி ஓர் தீர்மானமான முடிவுக்கு வர எல்லா நிலைமைகளையும் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்படி ஒரு முடிவுக்கு அரசாங்கம் விரைவில் வரும் என்று ஏற்கெனவேயே தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ம. கமலநாதன் : ஸார், அரசாங்கக் கடைநிலை ஊழியர்களின் (பியூன்களின்) சம்பளத்திற்கும் கிராம அதிகாரிகளின் சம்பளத்திற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : அவர்களுடைய நிலையை உணர்ந்து வித்தியாசம் இருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர் ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ராமசாமி : தலைவர் அவர்களே, ஜமீன்தாரி ஒழிப்பு காரணமாக, பல ரெவினியூ கிராமங்களில் கிராம அதிகாரிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்கு வழி வகை செய்ய என்ன நிலை கடைபிடிக்கப் படுகிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எஸ். மாதவன் : கிராம அதிகாரிகள் கிஸ்தி வசூல் செய்வதை பஞ்சாயத்துக்குக் கொடுக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறதா? அதில் மாறுதல் ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : வசூல் செய்யப்படுகிற கிஸ்தி அரசாங்கத்திற்கு வரும். பஞ்சாயத்தைப் பொறுத்த வரை, பரிசீலனை செய்யவேண்டும் என்பதே இப்பொழுது இருக்கும் நிலைமை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, பரம்பரை பாத்தியப் பதவியை எடுக்கும்போது, அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க யோசனை இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதில் நஷ்ட ஈடு எப்படி வரும் என்று எனக்குத் தெரியவில்லை. உத்தியோகம் கொடுக்கப்படுகிறது. யார் உத்தியோகம் பார்க்கிறார்களோ, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

[1st April 1963

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுடைய பரம்பரைக்கு அந்த உத்தியோகத்தைக் கொடுப்பது தவறு என்றாலும், அவர்களும் தேர்வு வைக்கப்பட்ட பிறகுதான் அதிகாரிகளாக வருகிறார்கள், ஆகவே, உள்ளூரிலேயே உள்ளவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால், அவர்களுக்கு இந்த உத்தியோகம் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** பரம்பரை பாத்தியமாக நியமனம் கொடுக்கக் கூடாது; அவ்வளவு தான். ஒரு உத்தியோகத்திற்குப் பல தகுதிகளைப் பார்க்கிறோம். அப்படி அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்த தகுதிகள் உள்ளவர்களாக இருந்தால், அவர்களை நியமனம் செய்வதில் ஆட்சேபம் இல்லை.

### பக்கிங்காம் கால்வாய்

*472 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை பக்கிங்ஹாம் கால்வாயில் படகு மூலம் மக்கட் போக்கு வரத்து நடத்தும் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : The Government have decided that the improvements to the Buckingham Canal should await the implementation of the improved drainage scheme of Zone V (Adayar, Mylapore, etc.) by the Corporation of Madras, as the two schemes are interlinked.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் போக்குவரத்தை அதிகரிக்கும்; தேசிய நெருக்கடி காலத்தில் போக்குவரத்து மிகவும் அவசியம் என்ற காரணத்தினால் இதை உடனடியாக எடுத்து நடத்த உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** போக்குவரத்து மட்டுமல்ல; இன்னும் பல பிரச்னைகள் இதில் சேர்ந்து இருக்கின்றன. இதை ஒரு நல்ல திட்டமாக அமைக்க வேண்டும் என்பதுதான் நிபுணர் குழுவின் ஆலோசனை. அதை ஒத்திப் போட வேண்டும் என்பது அல்ல நினைப்பு. இந்த திட்டத்திலே பல பிரச்னைகள் சிக்கியிருக்கின்றன. இந்த 'ஸோன் 5, மைலாப்பூர் பகுதி சாக்கடை' பக்கிங்காம் கனாலில் வந்து சேருகிறது. அதற்கு ஒரு திட்டம் வேண்டும். அது உருவாகிக் கொண்டு இருக்கிறது. இதற்கு, ட்ரெட்ஜர் முதலியவை வாங்க வேண்டும். அதற்கு அன்னியச் செலாவணி வேண்டும். அது தொடர்ந்து நடக்க வேண்டிய திட்டம். ஏதோ ஒத்திப் போடுவதாக இல்லை நிலைமை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சென்னையிலே ஓடக்கூடிய கூவம் நதியானது ஒரே துர் நாற்றம் வீசுவதால், அது பலகாலமாக தீர்க்கப்படாத பிரச்னையாக இருப்பதினால், சென்னை அரசாங்கம் முயற்சி செய்து அதை நிவர்த்திப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?



1st April 1963]

**கனம் திரு. வெ. ராமைய்யா :** சென்னை அரசாங்கமும், சென்னை நகர சபையும் சேர்ந்து, கூவம் நதி, பக்கிங்ஹாம் கெனால் இவைகளையெல்லாம் போக்குவரத்து வசதி உள்ள முறையில், அங்கு ஏற்படக்கூடிய பலவிதமான கஷ்டங்களைப் போக்கக்கூடிய முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நல்ல திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசாங்கமும், சென்னை நகரசபையும் எல்லா முயற்சிகளையும் எடுக்கும்.

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர் அவர்கள் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் அமுல் நடத்தப்படும் என்பதையாவது அரசாங்கம் அறிவிக்குமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஆராய்ச்சியெல்லாம் முடிந்து, இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல் நடத்த வேண்டிய கட்டத்தில் தான் இருக்கிறோம். இதற்கு டிரட்ஜர், மற்றும் சில முக்கியமான கருவிகள் வேண்டும். அவைகளை வாங்கியபிறகு இந்தத் திட்ட வேலை தொடங்கும்.

*473 *Q.*—MR. SPEAKER : This question will be taken up a little later.

### இரும்புத் தாது (கடையம் பெரும்பத்தூர்)

*474 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடையம் பெரும்பத்தூரில் இரும்பு தாதுப்படிவங்கள் இருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், இது சம்பந்தமாய் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Investigations carried out by the Geological Survey of India during the year 1945-56 reveal the existence of two or three small occurrences of magnetite quartzite deposits in Ambasamudram area but they are not of economic importance. However the area is being investigated by the State Geological Branch with a view to find out the occurrence of iron ore deposits and the report of the State Geologist in this regard is awaited.

### தீவிரச் சாகுபடி

*476 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தீவிர சாகுபடித் திட்டம் செயல்படும் பகுதியில் நெல் தவிர, வேறு தானியம் எதுவும் பயிர் செய்யக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இல்லை.

[1st April 1963

**புலவர் கா. கோவிந்தன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் மணிலாக் கொட்டை சம்பந்தமாக தீவிர சாகுபடித் திட்டம் கொண்டு வருவதற்கு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மணிலா, கரும்பு போன்ற பல பயிர்களையும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கே ? தஞ்சாவூர் ஜில்லாவிலா ? தஞ்சாவூர் ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு குறிப்பாக 9 பயிர்கள், அதாவது 'பஞ்சு, ஷுகர் கேன், கோகநட், கிரௌண்டுநட், இர்ரிகேடட் மில்லட்ஸ், வெஜிடபில், காட்டன், டுபாகோ' ஆகியவை நெல்லோடு சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட ஆற்காடு ஜில்லாவைப் பற்றி அந்த மாதிரி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. கோ. சி. மணி :** தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் இருக்கிற பகுதிகளில் இடை மகசூல் செய்கிற நேரத்தில் பருத்தி உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் உதவி அளித்து, அதை ஊக்குவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பருத்தி, காட்டன் இதில் சேர்க்கப் பட்டிருக்கிறது. எக்கர் ஒன்றுக்கு ரூ. 70 தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன் வரும்.

### தொழிற்பேட்டை (விருத்தாசலம்)

* 479 கேள்வி.—**திரு. கே. நாராயணசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் எவ்வளவு செலவில் தொழிற்பேட்டை அமைப்பதென்று சர்க்கார் முடிவு செய்துள்ளது ?

(இ) அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) சுமார் 32,76,000 ரூபாயில்.

(இ) இந்த தொழிற்பேட்டை இந்த ஆண்டு நடுவில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Minor Ports (Development)*

* 480 Q.—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Works be pleased to state the various schemes to be implemented by the Government in the Third Five-Year Plan period for developing minor ports?

THE HON. SRI V. RAMAIAH : A paper [a] is placed on the Table of the House.

[a] Printed as Appendix III on pages 485–488 infra.



1st April 1963]

### *'Koothangal Channel' (Paramakudi taluk)*

* 482 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal to repair the 'Koothangal Channel' branching off from the Vaigai river in Paramakudi taluk, in Ramanathapuram district; and

(b) if so, the steps taken to carry out the work?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes.

(b) An estimate for carrying out special repairs to Koothangal channel in Paramakudi and Mudukulathur taluks at an estimated cost of Rs. 12 lakhs has been prepared by the Superintending Engineer (Food Production) and it is under the consideration of the Board of Revenue (Food Production).

(அ) ஆம்.

(இ) பரமக்குடி, முதுகுளத்தூர் வட்டங்களிலுள்ள கூத்தங்கால் கால்வாயை ரூபாய் 12 லட்சம் செலவில் பழுதுபார்க்க மதிப்பீடு ஒன்றை மேற்பார்வைப் பொறியாளர் (உணவு உற்பத்திப் பிரிவு) தயாரித்துள்ளார். இந்த மதிப்பீடு ரெவின்யூ போர்டு (உணவு உற்பத்திப் பிரிவில்) பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. செ. சீனிவாசன் :** இந்தத் திட்டத்தில், அதுவும் பின் தங்கிய பிரதேசமாகிய கிழக்கு இராமநாதபுரத்தில் இரண்டு தாலுக்காக்களும் இணைக்கப்பட்டிருப்பதால், தற்பொழுது நெருக்கடிநிலையில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டுமென்பதினாலும், உடனடியாக இந்தத் திட்டத்தை அமுலாக்குவதற்குத் தயவுசெய்து அமைச்சர் அவை முற்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்து இருப்பதினால்தான், ஏற்கெனவே புட் புரடக்ஷன் சூபரின்டெண்டிங் என்ஜினியரிடம் சொல்லி இந்தத் திட்டத்திற்கு எஸ்டிமேட் தயாரிக்கச்சொல்லி, இப்பொழுது ரெவின்யூ போர்டில் இருக்கிறது. பரிசீலனை செய்த பிற்பாடு எடுத்துக்கொள்ளப்படும். குறிப்பாக பரமக்குடி தாலுக்காவில் 9 ஏரிகளுக்கும், முதுகளத்தூர் தாலுக்காவில் 23 ஏரிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதினாலும், பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இதன் மூலம் பயன்பட இருப்பதினாலும், அரசாங்கம் இதை எடுத்துக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது. அதை எவ்வளவு துரிதமாக நிறைவேற்றுவதற்கு முடியுமோ அவ்வளவு துரிதமாக நிறைவேற்றுவதற்கு முயல வேண்டும்.

### *Minor Irrigation and Soil Conservation Scheme*

* 484 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the State Government have made any representation in regard to the allocation of additional funds under the centrally-sponsored minor irrigation and soil conservation scheme?

[1st April 1963

The Hon. Sri P. KAKKAN : Except for the scheme ' Training Programme on Minor Irrigation water use ' all other Minor Irrigation schemes are classified as Centrally assisted plan schemes. The budgeted outlay for these schemes during the current year is Rs. 311·70 lakhs. We have now addressed the Government of India for an additional allocation of Rs. 71·51 lakhs.

We have not requested the Government of India for any additional allocation towards Soil Conservation Schemes.

'சிறிய பாசனத்திற்கு நீரைப் பயன்படுத்தல் பற்றிய பயிற்சித் திட்டம்' நீங்கலாக மற்ற எல்லா சிறிய பாசனத் திட்டங்களும் மத்திய அரசாங்க உதவி பெறுபவை ஆகும். இத் திட்டங்களுக்காக நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் 311.70 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 71.51 லட்சம் ரூபாய் ஒதுக்கும்படி இப்போது நாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளோம்.

மண்வளப் பாதுகாப்பு திட்டங்களுக்காக மேற்கொண்டு நிதி ஒதுக்கும்படி இந்திய அரசாங்கத்தை நாம் கேட்கவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** மண்வளப் பாதுகாப்பு திட்டம் இப்பொழுது எந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது? இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் கிடைக்கும் பலாபலன் கனி . முறைப் பார்வையிட வரும் மேலதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் பயணப்படி மிக அதிகமாக இருப்பது என்பது உண்மையா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட இடங்களில் இந்தத் திட்டம் நன்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது. எடுத்த உடனே இவையெல்லாம் வெற்றிகரமாக முடியும் என்று சொல்வதற்கில்லை. சில இடங்களில் தகராறு செய்கிறார்கள். எங்கள் பக்கத்தில் வரப்பு கட்டக்கூடாது என்றெல்லாம் தகராறு செய்கிறார்கள். இதை யெல்லாம் பார்த்து பரிசீலனை செய்துதான் பின்னாலே முடிவு செய்துகொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** முன்பு மண்வளப் பாதுகாப்புத் திட்டம் தனிப்பட்ட முறையில் கண்டிராக்டுக்கு விட்டு, நிறைவேற்றப்பட்டு வந்தது. இப்பொழுது பஞ்சாயத்துகள் மூலம் செய்வதால் தான் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்ந்து, அரசாங்கம் பழைய முறையை மேற்கொண்டு இந்த முறையை கைவிடுமா என்று அறிய இரும்புகிறேன் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த முறையைக் கொண்டு வந்து பஞ்சாயத்துகள் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் தான் வெற்றிகரமாக முடியும் என்பதினால்தான் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஊரில் ஏதாவது தாராறு ஏற்பட்டால், பஞ்சாயத்து சேர்மன், மற்றுமுள்ள முக்கியஸ்தர்கள் கலந்து பேசி எல்லோரும் ஒத்துக்கொண்டு, திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முன்வருவார்கள் என்ற காரணத்தினால்தான், பஞ்சாயத்துக்கள் மூலம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.



1st April 1968]

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்து தலைவர்கள் நேரடியாகப் போய் கான்வாஸ் செய்தாலும் அதை ஒத்துக்கொள்வதில்லை என்பதினால், தனிப்பட்ட முறையில் கண்டிராக்டுக்கு விடுவதுதான் நல்லது என்று அனுபவபூர்வமாகக் கண்டதைச் சொல்லுகிறோம். ஆகவே, இதை ஏற்று அரசாங்கம் நடத்த முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கெனவே இருந்த திட்டத்தினால் ஏற்பட்ட அனுபவத்தைப் பார்த்துத்தான் இந்த மாற்றத்தை இப்பொழுது அரசாங்கம் செய்திருக்கிறது. ஏனென்றால், சில இடங்களில் பணத்தைக் கொடுக்கிறோம் அதை ஒழுங்காகச் செலவழிக்காமல் ஏதாவது மண்ணைக்கொட்டி சரி செய்து விடுகிறார்கள். ஆகவே, அரசாங்கமே பணம் கொடுத்து, நேரில் கவனித்துத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு எஸ். ஜே. ராமசாமி :** இந்தத் திட்டத்தை எதற்காக நிறைவேற்ற வேண்டுமோ அதற்கு மாறான முறையிலே, வரப்புக்களைக் கட்டுகின்ற நேரத்திலே, எங்கே பள்ளமாக இருக்கிறதோ அங்கே வரப்புகளை போட்டுவிடுகிறார்கள், அதனால் தண்ணீர் வெளியில் போகக் கூடிய நிலை ஏற்பட்டு விடுகிறது. இதைப் போக்க அரசாங்கம் வழி வகை செய்ய முற்படுமா ?

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, இந்தத்திட்டம் சமவெளியான நிலங்களைவிட தோட்டக்கால் போன்ற இடங்களில் மிகுந்த பலன் அளிக்கிறது. ஆகவே தோட்டக்கால்களுக்கு மட்டும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி சாதாரண நஞ்சை நிலங்கள் புஞ்சை நிலங்கள் இவைகளுக்கு இது அவசியமில்லை என்பதை ஏற்று நடத்த முன்வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஒரு இடத்தில் பள்ளமாகவும், ஒரு இடத்தில் மேடாகவும் இருந்தால் சரிசமப்படுத்தி மழை பெய்யும் போது தண்ணீர் நின்று அதைப் பயன் படுத்த வேண்டுமென்பதற்கு திட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அதை எல்லாம் பரிசீலனை செய்துதான் மேடாக இருந்தால் அதை வெட்டி, பள்ளத்தை சரிபடுத்தி, வரப்புகளைப் போட்டு வருகிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பெரும் பகுதி புஞ்சை நிலங்களுக்குத் தான் அதிகம் பயன்படுத்தி வருகிறோம்.

### *Tank-bed lands*

* 485 Q.—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Works be pleased to state how many acres were classified or (Surveyed) as Tank-bed lands in the taluks of Paramakudi, Ramanathapuram, Mudukulathur, Thiruvadanai, Tiruppathur and Aruppukottai?

The Hon. Sri V. RAMAIAH : An extent of 276.407.04 acres has been classified as Tank-bed lands in the taluks of Paramakudi, Ramanathapuram, Mudukulathur, Tiruvadanai, Tirupattur and Aruppukottai in Ramanathapuram district.

SRI C. SRINIVASAN: May I know, Sir, on what basis they were classified as Tank-bed lands?

THE HON. SRI V. RAMAIAH: Sir, this classification has been made in places where there is submersion for more than three weeks.

SRI C. SRINIVASAN rose and began to put a supplementary question.

MR. SPEAKER: The hon. Member, Sri C. Srinivasan, must take the permission of the Chair before he puts his supplementary. He cannot simply stand and put questions.

**திரு. செ. சீனிவாசன்:** அந்த மாதிரி 'டாங்பெட்' என்று 'கிளாஸிபை' ஆன லாண்ட்ஸ், ஹைகோர்ட்டுக்குப் போய் அது டாங்க் பெட் லாண்ட் அல்ல என்று தீர்மானமாகி இருக்கிறது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** அந்த விவரம் இல்லை. அப்படி ஏதாவது பிரச்னை இருந்தால் தனியாக எழுதியனுப்பினால் பார்க்கலாம்.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர்:** ஸார், நிலங்களிலே சில குளம் கோர்வை என்று சொல்லப்படுகிறது. இங்கு ஏற்கெனவே ஜமீன் காலத்திலிருந்து, 20, 25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவத்திலிருந்த நிலங்களும் கூட இந்தக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறதா, அல்லது அது தள்ளி சேர்க்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா:** மூன்று வருஷத்திற்கு மேற்பட்டு தண்ணீர்பிடிக்கு அப்பாற்பட்ட நிலங்கள் இதெல்லாம். ராமநாதபுரத்தில், இந்த தாலுக்காவில் அங்கத்தினர் சொன்ன ஒரு கஷ்டம் இருக்கிறது. ஜமீன்தார்கள் காலத்திலே இந்த டாங்குகளைப் பயன்படுத்துவதைவிட அதிகமாக இந்த நிலங்கள் சாகுபடி செய்வதற்கு பட்டாக்கள் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அந்த வட்டாரத்தில் பெரிய சிக்கல்கள், கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. செட்டில்மெண்ட் காலத்தில் அதிகாரிகள் உத்திரவுகள் போட்டு பல விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு அங்குள்ள கஷ்ட நிலையை உணர்ந்து, அரசாங்கம் அந்த மூன்று வருஷம் அல்லது அதற்குக் கொஞ்சம் குறைந்த அளவுக்கு தண்ணீர்பிடி இடத்தைக் கூட்டு பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறது. தனிப்பட்ட முறையில் ஏதாவது கஷ்டமிருந்தால் அரசாங்கத்துக்கோ, அதிகாரிகளுக்கோ மனு செய்துகொள்ளலாம். அதற்கப்புறம் ஒரு பொதுவான முடிவிற்கு அரசாங்கம் வந்திருக்கிறது. நீர்ப்பாசன இலாகா எஞ்ஜினியர்கள் மேலும் எங்கெங்கு இது போன்று தாராறுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் அப்போது இருக்கக்கூடிய நிலையில் தகுந்த முறையில் டாங்க் எவ்வளவு இருக்கவேண்டும், நீர்ப்பிடி எவ்வளவு இருக்கவேண்டுமென்று ஆராய்ச்சிசெய்து முடிவு எடுக்கப்படுகிறது. குளம் கோர்வை விவசாயிகளுக்குப் பாதகம் வந்துவிடக் கூடாது என்ற முறையில் உத்தரவுகள் போட்டிருக்கின்றன.



அந்த உத்தரவைக் கூட இப்போது நீட்டி இருக்கிறார்கள். பூர்வாங்க ஆராய்ச்சிகள் முடிந்ததற்குப் பிறகுதான் ஒரு முடிவுக்கு வரப்படும்.

**திரு. சி. சீனிவாசன்:** ஸார், ஜமீன் காலத்திலே கொடுத்த மாதிரி நாம் எப்போது வேண்டுமானாலும் அந்த நிலங்களை எடுத்துக் கொள்ளலாம் என்ற கண்டிஷனில் மறுபடியும் பட்டா கொடுக்க அரசாங்கம் மறுபடியும் முயற்சி எடுக்குமா?

**கனம் திரு. வெ. ராமையா:** ஜமீன் காலத்திலே கொடுத்த மாதிரி இப்போது நாம் கொடுக்க ஆரம்பித்தால் ஒரு போதும் எடுத்துக்கொள்ள முடியாது. நம் பிரச்னை, அந்தக் கண்மாய்கள் விவசாயத்திற்குப் பயன்பட வேண்டுமா, வேண்டாமா என்பது தான். பயன்படவேண்டுமென்றால் கண்மாய் மராமத்தை முறையாகச் செய்யவேண்டும். இதிலுள்ள கஷ்டங்களை உணர்ந்து இன்ஜினியர்கள் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்ற முறையிலே இப்போது அங்கு நிலைமை இருக்கிறது. இதில் ஏதாவது சிக்கல் இருந்தால் அங்கத்தினர் என் கவனத்திற்குக் கொண்டு வரும் பட்சத்தில் இதிலுள்ள கஷ்டங்களை நீக்க என்னென்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ அவை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** ஸார், நாம் அதிகமாக உணவு உற்பத்தியைச் செய்யவேண்டுமென்று சொல்கிறோம். இருக்கிற நிலம் போதாமல் இருப்பதால் ஏரி, எதுவாய் நிலங்களை நீர் பிடிப்புக்குப் பாதகம் இல்லாமலிருந்தால் அவைகளை கண்டிஷனல் பட்டாவாக ஏழைகளுக்கு பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமையா:** கனம் அங்கத்தினர் கேள்வியை சரியான முறையிலேதான் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆரம்பத்திற்கும் அடுத்தபடியாகச் சொன்னதிற்கும் முரண்பாடு இருக்கிறது. கண்மாய்களை சரியானபடி பாதுகாப்பு செய்யவேண்டுமென்றால் கண்மாய் உழுவாயில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் இருக்கக்கூடாது. ஆனால் ஆக்கிரமிப்பை நாம் ஏற்றுக்கொள்ளலாம், கண்டிஷனலாக கொடுத்தால் என்றால் எப்படி அந்தக் கண்மாய் மராமத்து சரியாக இருக்கும், நீர்பிடிப்பு எப்படி சரியாக இருக்கும்? இதைத் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டு உப கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

SRI V. KRISHNAMURTHY rose and began to put a supplementary question.

MR. SPEAKER: The hon. Member, Sri V. Krishnamurthy also must take the permission of the Chair before he puts his supplementary. Once I told the hon. Member Sri C. Srinivasan also about the same thing. I will give any number of chances to the hon. Members. I am not in a hurry. But there are a number of questions to be answered. However, the hon. Member may now put the question.

[1st April 1963

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், ஏரிகளுடைய எருவாய் என்று சொல்லும் சமயத்தில் அமைச்சரவர்கள் நீர்பிடிப்பு பாகத்தை நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏரியில் தண்ணீர் இருந்தால் தண்ணீர் குறைவாக கடைசியாக, உள் பகுதியில், தண்ணீர் இல்லாமல் இருக்கும் பகுதிகளை ஜமீன் காலத்தில் கண்டிஷனல் பட்டாவாக கொடுப்பார்கள். இரண்டு போகம் இல்லாமல் ஒரு போக நஞ்சைக்குக் கொடுப்பார்கள். அதுபோன்று ஏரியில் உட்புறங்களில் நீர்த் தேக்கம் பாதிக்காத வகையில் நிலங்கள் இருந்தால் அந்த நிலங்களை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு பட்டா செய்து தரப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நீர்பிடிப்பில் விவசாயம் செய்வது பற்றி அரசாங்கம் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** ஸார், தற்போதுள்ள குளங்களில் உழுவாயை ஆழப்படுத்த முடியாத நிலை இருப்பதால், கரைகளை மட்டும் ரிப்பேர் செய்துகொண்டு வருகிறார்களா ? இப்போது இருக்கக்கூடிய டாங்க் பெட் ஏரியா பற்றாத நிலையில் இருப்பதால் பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்து டாங்க் பெட்டுகளை அகலப் படுத்த எதாவது திட்டம் இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ஒவ்வொரு கண்மாயும் மராமத்துக்கு எடுத்துக்கொள்ளும்போது இந்த ஆக்கிரமிப்பை அப்புறப் படுத்த அரசாங்க அதிகாரிகள் தீவிர முயற்சிகள் எடுக்கிறார்கள். இது சுலபமாக நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. இதில் எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்கவேண்டும். ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தும்போது உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் போவதற்குப் பதிலாக அரசாங்கத்தில் வந்து ஸ்டே வாங்கி எப்படியாவது நிலத்திலிருந்து விவசாயியை அப்புறப்படுத்தக் கூடாத முறையில் எல்லா முயற்சியும் செய்யப்படுகிறது. இதில் சட்டமன்ற அங்கத்தினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் இவர்களுடைய ஒத்துழைப்பு இருக்கும் பட்சத்தில் முறையாக வைக்க முடியும். ஏராளமான கண்மாய் மராமத்துக்கு செலவு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது.

**திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, புதிதாக காண்மாய் வெட்டப்பட்டு கலிங்கை உயர்த்திக் கட்டியிருக்கிறார்கள். ஆகவே இந்தக் குழப்பம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் எற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ராமைய்யா :** அந்த மேற்பார்வை வேலைகளில் எந்தவிதமான குழப்பமும் இல்லை. இதைப் புரிந்து கொள்ளாததால் தான் பலருக்குக் குழப்பம். கண்மாய் மராமத்து செய்யும் போது அதில் நீர்பிடி எவ்வளவு ஏக்கர் ஆயக்கட்டுகளுக்காக தண்ணீர் கிடைக்கும் என்பதற்கு விதிகள், முடிவுகள் எல்லாம் இருக்கின்றன. கிழக்கு ராமநாதபுரம் பகுதிகளில் கண்மாய் மராமத்து செய்யாததால் நஞ்சை விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. முதுகுளத்தூர் போன்ற இடங்களில் பெயருக்கு



1st April 1963]

ஏதாவது கண்மாய் என்று இருக்கும். ஜமீன் காலத்தில் இருந்ததை அரசாங்கம் எடுத்துக்கொண்டபிறகு உணவு உற்பத்தியில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. பழைய கண்மாய்களை சீரான முறையில் அமைக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்படுகிறது. தக்க முயற்சிகள் எடுத்து கண்மாயை மராமத்து செய்வது, கலிங்குகள் கட்டுவது போன்றவை செய்யப்படுகிறது. இது சில விவசாயிகளுக்கு பாதகமாக இருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** ஜிமீன் ஒழிப்புச் சட்டம் வருவதற்கு 9-00 a.m.
முன்பு, ஜமீந்தார்களுக்குச் சொந்தமான ஏரிகள் முதலியவற்றை, 'ஜமீன் ஒழியப் போகிறது, அந்த நிலங்களெல்லாம் அரசாங்கத்திற்கு சேரப்போகின்றன என்று முன்கூட்டியே அறிந்து 1945 ஆம் ஆண்டுக்குப்பின் கொடுக்கப்பட்ட பட்டாக்கள் செல்லாதவையாகி விடும் என்று பழைய தேதியைப் போட்டு, வேண்டியவர்களுக்கெல்லாம் பட்டா கொடுத்துவிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்கவேண்டுமென்பதை முன்னிட்டாவது கொடுக்கப்பட்ட பட்டாக்கள் எந்தத் தேதியில் இருந்தாலும் கவலை இல்லை என்று கருதி, ஆக்கிரமிப்புகளை எந்த விதமான நஷ்ட ஈடும் கொடுக்காமல் நீக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினருடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராயிருக்கிறேன். ஆனால், கனம் அங்கத்தினருடைய யோசனையை நான் ஏற்றுக்கொண்டால், உடனே அந்த வட்டாரங்களில் அதற்குப் பெரிய எதிர்ப்பு இருக்கிறதென்பதையும் பார்க்கிறோம். ஜமீன்தார்கள் எந்த நோக்கத்துடன் கொடுத்தார்கள் என்கிற ஆராய்ச்சிக்கு இப்பொழுது நான் போக விரும்பவில்லை. ஜமீன்தார்கள் பட்டா கொடுத்து விட்டார்கள். அந்தப் பட்டாவை வைத்துக்கொண்டு இருக்கும் விவசாயிகளுக்கும் பாதகம் இல்லாமல், அந்த மராமத்து வேலைக்கும் பாதகம் இல்லாமல் செய்யவேண்டும் என்பதுதான் அங்கு இருக்கும் நிலை. கனம் அங்கத்தினருடைய ஆலோசனைப்படி அரசாங்கம் கொஞ்சம் தீவிரமாக இருப்பதற்கில்லாமல், சற்று வளைந்துகொடுத்து, விவசாயிகளுக்கு அதிக பாதகம் வந்து விடாமல் இருப்பதற்குத்தான் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் அது நல்ல விதமாகத்தான் முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**புலவர் கா. கோவிந்தன் :** ஒரு ஏரியின் கீழிருக்கும் பாசன நிலங்கள் எவ்வளவோ காலத்திற்குமுன் வரையறுக்கப்பட்டன. இப்பொழுது அதை அடுத்திருக்கும் புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாக மாறியிருக்கின்றன. அந்த நிலையில் ஏரியினுடைய எப்.டி.எல்.ஐ. ஓரளவு உயர்த்தினால் புதிய நிலங்களுக்கெல்லாம் கூட பாசன வசதி செய்ய முடியும். நீர்ப் பிடிப்பினால் பாதிக்கக் கூடிய நிலங்கள் குறைவாக இருந்து, பயன்படக்கூடிய நிலங்கள் அதிகமாக இருந்தால், அந்த இடங்களில் எப்.டி.எல்.ஐ. உயர்த்த முடியுமா ?

[1st April 1963

**கனம் திரு. வெ. ராமைய்யா :** முக்கிய கேள்வியில் 'இருக்கக் கூடிய நீர்ப் பிடிப்பைக் குறைப்பது' பற்றி இருக்கிறது. இப்பொழுது, நீர்ப்பிடிப்பை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்கிருர். இருக்கும் நீர்ப்பிடிப்பை ஒழுங்காக வைக்கவே சங்கடங்கள் அதிகமாக இருக்கின்றன. கனம் அங்கத்தினருடைய ஆலோசனையைக் கேட்டால் தீராத கஷ்டமாக வரும். இதையெல்லாம் செட்டில்மெண்ட் காலத்தில்தான் திருத்தியமைப்பதற்கான நிலைமை ஏற்படும். அப்பொழுது அவர்கள் பரிசிலனை செய்வார்கள்.

### சிமெண்ட் பற்ருக்குறை

*** 486 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதைய நெருக்கடியான நேரத்தில் சிமெண்ட் பற்ருக்குறையை தவிர்ப்பதற்கு அரசாங்கமே சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தும் நோக்கம் உண்டா?

(இ) இல்லையேல் தனியார் துறையில் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க லைசென்சு வழங்கப்பட்டதா அல்லது வழங்க உத்தேசம் உண்டா?

(உ) எத்தனை தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டன? எங்கே?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) The question of Government starting a cement factory to cater to their own requirements will depend on the availability of sufficient raw materials and other facilities.

(இ) & (உ) A licence has been granted to set up a new cement factory at Sankaridrug in the Salem district. It is hoped that licences will be issued shortly for setting up two more cement factories one at Karur in Tiruchirappalli district and the other at Rameswaram in Ramanathapuram district.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, லால்குடி வட்டத்தில், திரணி, ஒகளூர், பாளையம், கருடமங்கலம் ஆகிய பகுதிகளில் செமண்டுக்குத் தேவையான சுண்ணும்புக் கல், ஜிப்சம் அதிகமாகக் கிடைக்கின்றன. அங்கு சிமெண்ட் தொழிற்சாலை வைக்க தனியார்த் துறைக்கு அனுமதி கொடுக்க முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. அதைக் கூட்டுறவு முறையில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சிமெண்டுத் தொழிற்சாலை வைப்பதற்கு ஜிப்சம் மிக முக்கியமான பொருள் அல்ல. அது மிகவும் குறைவு. சுண்ணும்புக் கல் போதிய அளவு இல்லை என்றுதான் ஜியலாஜிகல் சர்வே ரிபோர்ட்டிலிருந்து தெரிகிறது.



1st April 1963]

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அமைச்சர் அவர்கள் 'போதிய சுண்ணும்புக் கல் இல்லை' என்று சொல்கிருர்கள். டால்மியா சிமெண்ட் பாக்டரியினர் நான்காவது ஆலையொன்றைத் துவங்க அங்கே முயற்சி எடுத்துக்கொண்டு, மத்திய சர்க்காரிடம் அனுமதி கோரியிருப்பது இந்த சர்க்காருக்குத் தெரியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 'மைனிங் லீஸ்' சம்பந்தமாக ராஜ்ய சர்க்காரிடம்தான் அனுமதி கோரவேண்டும். இப்பொழுது சிமெண்ட் தொழிற்சாலை வைத்திருப்பவர்களுக்கு ஏராளமான சுண்ணும்புக் கற்கள் எடுப்பதற்கு 'மைனிங் லீஸ்' கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு கொஞ்சம் சேர்த்தால் நான்கு பிளாண்ட்கள் வைக்கலாம் என்கிற நிலைமை இருக்கலாம். ஆனல், தனியாகப் புதுத் தொழிற்சாலை வைக்கவேண்டுமென்ருல், அதற்காக ஏராளமான சுண்ணும்புக் கல் (லைம் ஸ்டோன்) வேண்டும். அந்த அளவுக்கு இல்லை என்றுதான் இப்பொழுதிருக்கும் அறிக்கை கூறுகிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** திருநெல்வேலி ஜில்லா, நாங்குனேரி, திருச்செந்தூர் பகுதிகளில் ஏறக்குறைய 90 லட்சம் டன் சிமெண்ட் தயாரிப்பதற்கு லாயக்கான சுண்ணும்புக் கற்கள் இருப்பதால் அங்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைக்கவேண்டும் என்று கோரி எப்போதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா? அதன் பேரில் அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு பகுதிகளில் நமக்கு லைம் ஸ்டோன் கிடைக்கும் என்று அறிக்கைகள் இருக்கின்றன. ஒன்று நாசரத் பகுதி. அந்த நாசரத் பகுதியில்தான் சற்றேக்குறைய 9 மிலியன் டன் சுண்ணும்புக் கற்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனல், அந்தச் சுண்ணும்புக் கற்கள் நல்ல நஞ்சை நிலத்திற்கு அடியில் இருக்கின்றன. நஞ்சை நிலத்தை விலை கொடுத்து வாங்கி சிமெண்ட். பாக்டரி வைக்க முடியாது. இரண்டாவது ரிபோர்ட்டில் வள்ளியூர்ப் பகுதிபற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. அங்கே போதுமான அளவு லைம் ஸ்டோன் இருக்கலாம் என்று எதிர்பார்க்கிருர்கள். அதற்காக இரண்டு அப்ளிகேஷன்கள்கூட வந்திருக்கின்றன.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** அமைச்சர் அவர்கள் சொல்வது போல, புதிதாக நஞ்சையாகத் திருத்தப்பட்ட சில நூற்றுக்கணக்கான ஏக்கர் அவர்கள் குறிப்பிடுகிற நாசரத் பகுதியில் உண்டு. அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள், தங்களுடைய நிலங்களுக்கு ஒரு முறையான காம்பென்சேஷன் கொடுத்தால் பெரும் பகுதி நிலங்களை சிமெண்ட் தொழிற்சாலைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று விருப்பம் தெரிவித்தால் அரசாங்கம் இது போன்ற கோரிக்கைகளைக் கவனிக்குமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நஞ்சை நிலத்திற்குக் காம்பன்சேஷன் கொடுத்து சிமெண்ட் தொழிற்சாலை வைக்க முடியாது. அப்பொழுது சிமெண்ட் தங்கம் விற்கும் விலைக்கு வந்துவிடும்.

**திரு. எஸ். மணி:** பெரம்லூர் தாலுக்காவில் ஜிப்சம் கிடைப்பது உண்மையா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** திருச்சி ஜில்லாவில் நிறைய ஜிப்சம் இருக்கிறது. அதை வைத்துத்தான் டால்மியா தொழிற்சாலை வேலை செய்கிறது. அதை வைத்துத்தான் கரூர் தொழிற்சாலை கூட வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** இப்பொழுது நம்முடைய ராஜ்யம் முழுவதிலுள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளினுடைய 'கபாஸிடி' 500,000 டன் என்று இருக்கிறது. இவ்வளவு பெரிய கபாஸிடியுள்ள சிமெண்ட் பாக்டரிகளில் சிமெண்ட் உற்பத்தி செய்யும்போதே சிமெண்ட் ப்ளாக் மார்க்கெட்டில் 15 ரூபாய், 16 ரூபாய் என்று விற்கிறது. 'அன்-இகனுமிக்'-காக இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி, சுண்ணும்புக் கற்கள் கொஞ்சமாகக் கிடைக்கும் இடங்களில் கூட, 50 டன், 100 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் அளவுக்கு காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் ஆக சிறிய சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா? அன்-இகனுமிக்காக இருந்தாலும் ப்ளாக் மார்க்கெட் விலைக்காவது சிமெண்ட் கிடைக்குமல்லவா? ஆகவே, அந்த அளவுக்கு சிறிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்க சர்க்கார் அனுமதி கொடுக்க முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் ஒரு பிரசங்கம் செய்தார். 'அன்-இகனுமிக் யூனிட் வைத்தால் கட்டுபடியாகாது. கட்டுபடியாகாததைச் சர்க்கார் எடுத்து நடத்த வேண்டுமென்றால், இந்த சர்க்கார் அதற்குத் தயாராக இல்லை. சிறு சிமெண்ட் தொழிற்சாலை வைக்க முடியுமா என்பது நீண்டகாலமாகப் பரிசீலனை செய்யப்பட்டு, கன ரகத் தொழில்கள் மூலமாகத்தான் செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவ்வாறு (ஹெவி இன்டஸ்ட்ரீஸ்) கன ரகத் தொழிலாகச் செய்யக்கூடிய சிமெண்ட் உற்பத்தியை சிறு ரகத் தொழிலாகச் செய்ய இயலாது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அப்படி யாராவது தனியார் முதல் போட்டு முன்வந்து, லாப நஷ்டத்தை ஏற்றுக்கொள்வதாகச் சொன்னால், இந்த சர்க்கார் அவர்களுக்கு உதவி செய்வதற்குத் தயங்காது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மேலும், நம்முடைய ராஜ்யத்தில் 15 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு கபாஸிடி இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. கி. இரா. சம்பந்தம்:** தஞ்சை ஜில்லாவிலும் நிறைய ஜிப்சம் கிடைக்கிறபடியால், அங்கே ஏதாவது சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த மனுக்கள் வந்து, சர்க்காரின் பரிசீலனையில் இருக்கின்றனவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஜிப்சத்தை வைத்து சிமெண்ட் பண்ண முடியாது. லைம் ஸ்டோனை வைத்துத்தான் சிமெண்ட் பண்ண முடியும்.





### கைத்தறி நெசவாளர்கள்

* 487 **கேள்வி.—திரு. எஸ். ஆறுமுகம்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேசிய நெருக்கடியின் காரணமாக கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டதாக புகார் ஏதேனும் வந்து உள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ) ஆம்.

(இ) மார்ச் மாதம் முழுவதும் சில்லறை விற்பனையின்மேல் கூடுதலாக ரூபாய்க்கு ஐந்து நயா பைசாவும், மொத்த விற்பனையின் மேல் ரூபாய்க்கு 3 நயா பைசாவும், விசேஷ ரிபேட் கொடுக்கும்படி நெசவாளர்க் கூட்டுறவு சங்கங்களுக்கும், கூட்டுறவு ஜவுளி டிப்போக்களுக்கும் அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து கைத்தறித் துணி விற்பனைப் பிரசாரம் நடத்துவதற்காக அரசாங்கம் ரூ. 25,000 மானியமும் வழங்கியுள்ளது. இந்த ஏற்பாடுகளால் கூட்டுறவுச் சங்கங்களிடம் தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் விரைவாக விற்பனையாவதற்குப் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்.

### கைத்தறித் துணி (விற்பனையாகாது தேங்கிக்கிடத்தல்)

* 488 **கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுமார் 4½ கோடிக்கு கைத்தறித் துணி விற்பனையாகாமல் தேங்கியிருக்கின்றனவென்றும் உடனே சர்க்கார் நிவாரணம் தேவையென்றும் தமிழ்நாடு நெசவாளர் சங்கத் தலைவரிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(இ) அப்படியென்றால், அரசாங்கம் அக்கோரிக்கையின் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடம் 15-1-1963 தேதி வரைக்கும் மூன்று கோடியே அறுபத்து நான்கு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அரசாங்கத்திடம் தெரிவித்து, நிவாரணம் அளிக்கும்படி கேட்டுக் கொண்டது.

(இ) 1963 மார்ச் மாதம் முழுவதும் சில்லறை விற்பனையின் மேல் கூடுதலாக ரூபாய்க்கு ஐந்து நயா பைசாவும், மொத்த விற்பனையின்மேல் ரூபாய்க்கு மூன்று நயா பைசாவும் விசேஷ ரிபேட் கொடுக்கும்படி நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவு ஜவுளி டிப்போக்களுக்கும் அரசாங்கம் அனுமதியளித்

துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து கைத்தறித் துணி விற்பனைப் பிரசாரம் நடத்துவதற்காக அரசாங்கம் ரூபாய் 25,000 மானியமும் வழங்கியுள்ளது. இந்த ஏற்பாடுகளால் கூட்டுறவுச் சங்கங்களிடம் தேங்கிக் கிடக்கும் கைத்தறி துணிகள் விரைவாகக் விற்பனையாவதற்குப் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** சார், எந்த எந்த நம்பர் நூலில் தயார் செய்யும் கைத்தறித் துணி எந்தெந்த மாநிலங்களுக்கெல்லாம் விற்பனைக்காக அனுப்பப்பட்டு நெருக்கடியின் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நெருக்கடி இப்போது தீர்ந்து போய்விட்டது. மார்ச் மாதம் 15-ஆம் தேதி வரை ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கைத்தறித் துணிகள் விற்பனையாகி இருக்கின்றன. அதற்கு மேல் 15 நாள் சேல்ஸ் கணக்கு இன்னும் வரவில்லை. எங்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல்படி ஒன்றேமுக்கால் கோடிக்கு மேல் விற்பனையாகி இருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. நெருக்கடி என்று பிரசங்கம் பண்ணுவதன் மூலமாகப் புது நெருக்கடி ஏற்படாமல் இருக்கவேண்டுமென்றுதான் நான் கூற ஆசைப்படுகிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** என்னுடைய கேள்வியாவது, "எந்த எந்த 'கவுண்ட்ஸ்' நூலில் தயார் செய்த ஜவுளி எந்த எந்த மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டன ?" என்பதாகும். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் என்ன ? — ,

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தக் கேள்வி கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதைப் பற்றிய கேள்வி. ஆகையால் கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கும் விஷயத்தைப் பற்றிப் பதில் சொன்னேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, கைத்தறித் துணிகள் பெருமளவில் விற்பனையாக வேண்டுமென்று சொன்னால், மாணவர்களுக்கு வழங்கப்படும் சீருடைக்கு நிறம் வழங்கப்பட்டிருப்பதோடு கூட அது கைத்தறித் துணியாகத்தான் இருக்க வேண்டுமென்றும், இராணுவத்துக்கு வழங்கப்படும் துணிகளும் கைத்தறித் துணிகளாகத்தான் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்த அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான அவசியம் இப்போது ஏற்படவில்லை.

**திரு. காஞ்சி மணிமொழியார் :** கழிவுத் தொகை தரும் திட்டம் நிரந்தரம் அல்லவென்றும், அது படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டுமென்பதுதான் மத்திய சர்க்கார் திட்டம் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் உண்மை என்ன ?

**கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் :** கொள்கை அளவில் அது உண்மைதான்.





**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, பட்டுக் கைத்தறி நெசவுக்குத் தங்க் கட்டுப்பாட்டின் காரணமாகக் கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதை நிவர்த்திக்க கனம் அமைச்சர் அவர்கள் ஏதேனும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதைத் தவிர்ப்பதற்காக, ராஜ்ய சர்க்காரே மொத்த ஜரிகையையும் டைரக்டர் ஆப் ஹாண்ட்லூம்ஸ் மூலமாக வரவழைத்து நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதற்குக் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது.

**திரு. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** இதன் மூலம் போதிய ஜரிகை கிடைக்க வழி ஏற்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அகில இந்தியாவிலும் எவ்வளவு கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறதோ, அந்த அளவுக்கு நமக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய அளவு கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து இன்னும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் கைத்தறித் துணிகளின் தேக்கம் இருப்பதாகத் தெரிகிறது. அந்தத் துணிகளை எல்லாம் விற்க சித்திரைத் திருவிழாவின் போது இப்போது வைத்திருப்பது போன்று பொருள் காட்சி வைத்தால் துணிகள் எல்லாம் விற்பனையாகிவிடும் என்ற காரணத்தால் அந்தப்பொருள் காட்சியை அமைக்க முன் வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, தேக்கம் இல்லாதபோது தேக்கம் இருக்கிறது என்ற அபிப்பிராயத்தைப் பரப்புவோமானால் அதன் மூலம் சாதாரணமாக விற்பனை ஆகின்ற நிலைமை கூடப் பாதிக்கப்படும். இப்போது தேக்கம் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, அமெரிக்காவிலே பெண்கள் எல்லாம் க்யூ வரிசையில் நின்று கைத்தறித் துணிகளை வாங்குகிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? எனக்குத் தெரிந்தவரையில், கலர்கள் சாயம் போய் விடுவதன் காரணமாக அதிகமாகத் துணிகள் விற்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. அதை நம்முடைய மத்திய சர்க்கார் உதவி நிதியமைச்சர் அவர்கள் சொல்லும்போது நான் இருந்தேன். குறிப்பாக, அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் துணிகளுக்கு நல்ல சாயமாகப் போட்டு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அமெரிக்காவுக்கு 'பிளீடிங் மெட்ராஸ்' என்ற ரகத் துணி சற்றேறக்குறைய 80 லட்சம் கஜம் இப்போது ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் விரும்புவது, வண்ணம் மாறுகின்ற துணிதான். அவர்கள் விரும்புவது 'பாஸ்ட்' கலர் அல்ல.

**திரு. எஸ். ராமசாமி நாயுடு :** பெண்களுடன் ஜவுளி எடுக்கக் கடைக்குச் சென்றால், இதுவரை கட்டாத புடவையாக, இதுவரை இல்லாத பார்டராக உள்ள புடவை வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகவே, அதிகப்படியான புது ரகங்களிலே துணிகள் நெய்யப்பட்டால் துணிகள் தேங்காத நிலைமை ஏற்படும் என்ற காரணத்தால் அந்த வகையில் முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்காகத்தான் 'டிசைன் செண்டர்' என்று வைத்திருக்கிறோம். பெண்கள் விரும்புகிற புதிய புதிய மோஸ்தரிலே பார்டர்கள், முகப்புகள் எல்லாம் போடும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். ரங்கசாமி :** கைத்தறி துணிகள் தேங்கிவிட்டன என்ற காரணத்தினால் ஒவ்வொரு வருஷமும் விழாக்கள் நடத்தி ஸ்பெஷல் ரிபேட் கொடுப்பது வழக்கமாகப் போய்விட்டதால், துணிகள் தேக்கப்படும் நிலைமையும், துணிகளை வாங்குபவர்களும் ரிபேட் கொடுக்கும்போது வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கக் கூடிய நிலைமையும் இருப்பதால் இந்த 'ரிபேட்டை' நிரந்தரமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வருஷம் பூராவும் 5 ந.பை. ரிபேட் கொடுக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல் தேக்கி வைத்துக் கொள்கிறார்கள் என்பது சரியல்ல. நாட்டில் இருக்கக்கூடிய நெருக்கடியின் காரணமாகத் தேக்கம் இந்த வருஷம் ஏற்பட்டது.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** டிசைன்ஸ் செய்யப்படுகிற போர்டில் பெண்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ? ஆண்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது போர்டு அல்ல. டிசைன் செண்டர். தொழிலாளர்கள் இருந்து அந்த டிசைனைச் செய்கிறார்கள். அதிலே, படம் வரையக்கூடியவர்கள் பல இடங்களுக்குச் சென்று, சிற்ப சாஸ்திரங்களில், கல்வெட்டுக்களில் இருந்து படம் எடுத்து வந்து பிறகு டிசைன்களை உருவாக்குகிறார்கள்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** புது மோஸ்தரில் டிசைன்கள் தயாரிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. அந்த விஷயத்தில் பெண்களுக்குத்தான் டிசைன்களை ரசிக்கும் தன்மை இருக்கும் என்ற காரணத்தால் அந்தமாதிரிப் படங்களை எடுத்துப் புது டிசைன்களை உருவாக்கும் பணியில் பெண்களை ஈடுபடுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பெண்கள் அங்கு சென்று இந்த விதமான டிசைன்கள் வேண்டுமென்று சொன்னால் அதையும் டிசைன் செண்டர் தயாரித்துக் கொடுக்கும். பெண்கள் இந்த விதமாகப் படங்களைப் போட்டு டிசைன்களைக் காட்டினால் அவற்றை ஏற்றுக்கொள்ள டிசைன் செண்டர் தயாராக இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** செயற்கைப் பட்டும், நூலும் கலந்து தயாரிக்கப்படுகிற கோடம்பாக்கம் சேலைகளுக்கு ரிபேட் தரப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லை.

**திரு. செ. சீனிவாசன் :** ஆர்ட் சில்க் வகைகளுக்கும் சில இடங்களில் ரிபேட் கொடுக்கிறார்கள். அதேமாதிரி ப்ராவின்ஸ் பூராவும் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆர்ட் சில்க்குக்கு ரிபேட் கொடுப்பதில்லை. பருத்தி நூலில் நெய்யப்படும் துணிகளுக்கு மட்டுந்தான் ரிபேட் கொடுக்கப்படுகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், துணிகள் நெய்யப்படுகிற சமயத்தில் பார்டர் போடுவதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி போன்று சிவப்பும் கருப்பும் கலந்த பார்டரைப் போடக் கூடாது என்று கைத்தறி போர்டுக்குச் சென்னை அரசாங்கம் உத்தரவிட்டதா ? அப்படியானால் அதற்கு என்ன காரணம் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதன் மூலம் கட்சிப் பிரசாரம் நடக்கக் கூடாது என்பதுதான்.

**திரு. கோ. வெங்கட்டராமன் :** கூட்டுறவுத் துறையில் இந்த சலுகை காரணமாக தேங்கிக் கிடந்திருக்கிற துணிகள் நல்ல முறையில் விற்பனையாகி இருக்கின்றன. இதுபோன்று, பல்லாயிரக் கணக்கான கூட்டுறவுத்துறையில் சேராத நெசவாளர்களின் உற்பத்தி தேங்கியிருப்பதையும் நல்லமுறையில் விற்பனை செய்ய யாதொரு கடன் வசதியும் இல்லாத காரணத்தால் அவர்களுக்கு வழிவகை ஏற்படுத்துவதற்கு கைத்தறி நிதி கார்ப்பரேஷன் உடனடியாக ஏற்படுத்தப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கைத்தறி கார்ப்பரேஷன் சம்பந்தமாக இந்த மான்யக் கோரிக்கை வந்தபோது யாராவது சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்போது யாரும் சொல்லாத காரணத்தால் இப்போது அது பற்றி விளக்கிச் சொல்கிறேன். இந்தக் கார்ப்பரேஷன் பாங்கிங் கம்பனிச் சட்டத்தின்கீழ் நாம் ரெஜிஸ்டர் செய்யவேண்டியிருக்கிறது. பாங்கிங் கம்பனிச் சட்டத்தின் கீழ் ரெஜிஸ்தர் செய்யவேண்டுமென்றால் ரிசர்வ் பாங்க் அனுமதி பெற வேண்டும். ரிசர்வ் பாங்க் இதற்கு அனுமதி கொடுக்க மறுப்பதால் இந்த பைனான்ஸ் கார்ப்பரேஷன் அமைப்பதில் சிறிது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. வேறு எந்த வழியில் செய்யலாம் என்று சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[1st April 1963

### மின்சாரம் (நெய்வேலியிலிருந்து பெறல்)

* 489 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெய்வேலி கார்ப்பரேஷனிடமிருந்து எவ்வளவு அளவு மின்சாரம் சென்னை மின்சார போர்டு வாங்குகிறது ?

(இ) யூனிட் ஒன்று என்ன விலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது ?

(உ) மின்சார போர்டார் இப்போது தனியாருக்கு (High tension supply) என்ன விலைக்கு விற்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A total of 126.1 million units of electrical energy has been fed into the Madras Grid from the Neyveli Thermal Station from May 1962 up to the end of January 1963.

(b) The rate has not yet been fixed. The matter is under correspondence.

(c) The rates for H.T. supply are fixed at graded regressive rates according to increasing slabs of consumption. The average rate works out to about 5 nP. per unit.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நெய்வேலியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 7 நயே பைசே விதம்தான் சென்னை ராஜ்ய மின்சார போர்டு கொடுக்கவேண்டுமென்று ஏதாவது நெய்வேலி ஸ்தாபனத்தார் வற்புறுத்துகிறார்களா ? அப்படியானால் அது நமக்கு கட்டுப்படியாகுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும், வியாபாரம் என்று சொன்னால் விற்கிறவர்கள் ஒரு விலை சொல்வார்கள், வாங்குபவர்கள் ஒரு விலை கேட்பார்கள், பேரம் நடக்கும். பேரம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த சமயத்தில் விற்பவர்கள் என்ன விலை சொல்கிறார்கள், வாங்குகிறவர்கள் என்ன விலைக்கு கேட்கிறார்கள் என்று இதையெல்லாம் வெளிப்படுத்துவது உசிதம் அல்ல.

### மன்னியாற்றிலிருந்து பாசன வசதி

* 490 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடந்தை வட்டம் 37, மகாராஜபுரம் கிராமத்துக்கு மன்னியாற்றிலிருந்து நல்ல பாசன வசதி செய்வது சம்பந்தமாய் ஊராட்சி மன்றத்திலிருந்து 1962 மே மாதத்தில் தீர்மானம் வந்ததா ?



1st April 1963]

(இ) வந்ததென்றால், அரசாங்கம் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes. The Maharajapuram Panchayat has recommended the request of the local ryots for shifting the head of Ayyanallur channel taking off at Mile 60-7-132 L.B. of Manninar River to a place higher up, i.e., above the lower dam called "Irrupiniavattam dam" at mile 59-7-396, in order to improve supply conditions in the channel.

(b) The matter has been examined by the Chief Engineer (Irrigation) and it has been considered not necessary to shift the head of the channel which would cost roughly Rs. 20,000. It is, however, proposed to reconstruct the nose revetment in front of the existing head sluice and to erect a groyne on the opposite side of the head sluice during the ensuing closure. This will improve the supply conditions in the channels.

### *Small industries (Development)*

* 491 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether proposals have been submitted to the Planning Commission for intensive development of small industries in selected rural areas during the Third Five Year Plan period, and

(b) if so, the areas selected and other details of the scheme?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) The pilot projects for the intensive development of rural industries have been started in 1962-63 in the following areas :—

(1) Sriperumbudur and Trivellore Taluks of Chingleput districts.

(2) Omalur Taluk of Salem District.

(3) Nanguneri Taluk of Tirunelveli District.

A note[a] on the scheme is placed on the table of the House.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தங்கக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட செயற்கை வைரத் தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் ஏதாவது உதவி செய்ய சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்கள் இத்திட்டத்தின் கீழ் வரமாட்டார்கள். இது புதிதாக, எந்தெந்த இடங்களில் விவசாயிகள் ஓய்வு நேரத்தில் அதிகமாக வேறு வழியில் சம்பாதிப்பதற்கு வகை செய்ய வேண்டுமென்று எடுத்துக் கொள்கிற முயற்சி காரணமாக ஏற்படுத்தப்பட்டது.

திரு. ம. கமலநாதன் : தேசிய நெருக்கடியைக் காரணம் காட்டி அரசாங்கத் துணைக் காரியதரிசி ஒருவர் ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களை அழைத்து உடனடியாகக் கிராமங்களில் கைத்தொழில்கள் ஏதாவது ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்ல, ஆணையாளர்கள் அவர்கள் நினைவிற்கு வந்த

---

[a] Printed as Appendix IV on pages 488–489 infra.

[1st April 1963

கைத்தொழில்களை அவரிடம் சொல்ல மூலப்பொருள் கிடைக்காத இடங்களில் கூட அந்தக் கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு பெரிய நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறார்களே, அது உண்மையா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எனக்கு அந்த விவரம தெரியாது. ஆனால், அந்த விதமாகச் செய்வதை நான் குறை கூற மாட்டேன். ஏனெனில், லாபம் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற பிறகுதான் தொழில் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னால் அது நீந்தத் தெரிந்த பிறகுதான் தண்ணீரில் இறங்கும் நிலையாகும். நம் ராஜ்யத்தில் இருக்கக் கூடிய தொழில் பிற்போக்கு நிலையில் பல முயற்சிகள் செய்யவேண்டும். அதில் லாப நஷ்டம் ஏதாவது வந்தால் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறது.

### ஆறுகள் தூர் எடுத்தல் (தஞ்சை மாவட்டம்)

*492 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், ஆறுகள் தூர் எடுத்து, வடிகால் வசதி செய்து கொடுக்க திட்டமுள்ளதா ?

(இ) உண்டென்றால், எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ): There is no proposal for the silt clearance of rivers in Thanjavur District. Provision of drainage facilities is being attended to where and when found necessary.

**திரு. ஆ. கு. சுப்பையா :** பல ஆண்டுகளாகவே இம்மாதிரி வடிகால் வசதி இல்லாமல் தஞ்சையில் உள்ள கிராமங்கள் பாதிக்கப் படுகின்றன. ஆகவே, ஒவ்வொரு தாலூகாவாக எடுத்துக்கொண்டு இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** வடிகால் பிரச்னையைப் பொறுத்த மட்டில் இப்போதுள்ள திட்டங்களின்படி மண் வார நடைமுறையில் திட்டங்கள் இருக்கின்றன. அதை மொத்தமாகச் செய்ய வேண்டுமென்பது கனம் அங்கத்தினர் ஆலோசனையும், என் கருத்தும் கூட, இதற்குத் தஞ்சை ஜில்லாவில் உள்ள பாசன வசதிகள் எப்படியிருக்கின்றன என்று பார்த்து விசேஷ ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். அந்த அறிக்கை வந்த பிறகு ஃபேஸ்டு ப்ரோக்கிராமாக எடுக்கவேண்டும் என்பது என் நினைப்பு.

**திரு. எம். தண்டாயுதபாணி :** ஆறுகளில் தூர் எடுக்காவிட்டாலும் கல்லணைக் கால்வாய்த் தலைப்பிலாவது தூர் எடுக்கத் திட்டம் அமுல் நடத்தப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்போதுள்ள முறைப்படி, அப்போதைக்கப்போது இந்த கஷ்டங்கள் வரும்போது நீக்கிக்



1st April 1963]

கொண்டிருக்கிறார்கள். இதைப் பெரிய திட்டமாகச் செய்யவேண்டுமென்ற கருத்தை அங்குள்ள விவசாயிகள் சொல்வதால் ஆராய்ந்து நல்ல திட்டமாக அமைக்கவேண்டும். அரசாங்கம் அதற்கான முயற்சியைச் செய்யும்.

### படிப்பு உதவித்தொகை (பிற்பட்ட வகுப்பு மாணாக்கர்)

*493 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த கல்லூரி மாணவர்களுக்கு எந்த அடிப்படையில் ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மிகப் பின்னிலை வகுப்பினர்கள் உட்பட பின்னிலை வகுப்பினருக்கு மேற்படிப்பிற்கான (Post-Matric) உபகாரச் சம்பளங்கள் மாநில நிதிகளிலிருந்தும் இதற்கென இந்திய அரசாங்கம் ஆண்டுக்கு ஆண்டு தனியாக ஒதுக்கும் நிதியிலிருந்தும் வழங்கப்படுகின்றன. மாநில அரசாங்க உபகாரச் சம்பளங்களை வழங்குவதற்கான நிபந்தனைகளாவன—

(1) பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமானம் 1,500 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது.

(2) பின்னிலை வகுப்பு மாணவர்கள் 50 சதவீத மார்க்குகள் அல்லது அதற்கு மேற்பட்ட மார்க்குகள் வாங்கவேண்டும். மிகப் பின்னிலை வகுப்பு மாணவர்கள் 45 சதவீத மார்க்குகள் அல்லது அதற்கு மேற்பட்ட மார்க்குகள் வாங்கவேண்டும்.

(3) இந்த நிபந்தனைகட்கு உட்படாமலுள்ள ஆனால் உபகாரச் சம்பளம் பெறுவதற்கேற்ற சில மாணவர்களுக்கு யுக்தப்படி உபகாரச் சம்பளம் வழங்க மொத்த உதவித் தொகையில் சுமார் 10 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. மாவட்டங்களில் மாவட்ட நல அதிகாரிகளும், சென்னை நகரில் ஹரிஜன நல டைரக்டரின் நேர் உதவி அலுவலரும் இவ்வாறு யுக்தப்படி உபகாரச் சம்பளம் வழங்கலாம்.

இந்திய அரசாங்க உபகாரச் சம்பளங்கள் பெறுவதற்கு மனுதாரர்களுடைய பெற்றோர்களின் அல்லது காப்பாளரின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய்க்கு மேற்படக்கூடாது. மிக அதிக மார்க்குகள் வாங்கும் மாணவர்களுக்கே இந்த உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்திய அரசாங்கம் இதற்கென்று ஆண்டு தோறும் பிரத்தியேகமாய் ஒதுக்கும் நிதி வரையறைக்குள் இவை கொடுக்கப்படுகின்றன.

Scholarships to Backward Classes including most Backward Classes for post-Matric courses are granted from out of State funds as well as the allotment specially made by the Government of India year after year. Conditions governing the grant of State scholarships are as follows :—

(1) The annual income of the parents or guardians should not exceed Rs. 1,500 per annum.

[1st April 1963

(2) Students belonging to Backward Classes should have obtained 50 per cent and above marks while those belonging to most Backward Classes should have obtained 45 per cent and above marks.

(3) A sum approximately equal to 10 per cent of the total grant is reserved for sanction of scholarships to hard cases at discretion. The District Welfare Officers in the districts and the Personal Assistant to the Director of Harijan Welfare in Madras City are empowered to exercise this discretion.

For the grant of Government of India scholarships the annual income limit of the candidates' parents or guardians should not exceed Rs. 6,000 and scholarships are awarded to such of those students who have secured the highest percentage of marks within the limit of funds specially allotted by the Government of India for the purpose, year after year.

9-30 a.m. **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், இந்த ஸ்காலர்ஷிப் வழங்கும் விஷயங்களில் ஹரிஜனங்களைவிட ஏழையாக இருக்கும் மிகவும் பிற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் பாஸ் செய்வதே மிகவும் சிரமமாக இருந்து பாஸ் செய்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு 40 சதவீதம், 50 சதவீதம் மார்க்குகள் வாங்கி இருக்கவேண்டுமென்று சொல்கிற காரணத்தினால் பல பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கவில்லை என்பதை அரசாங்கம் உணருமா? அப்படி இருக்கும் பிள்ளைகளுக்கு 40 சதவிகிதம் மார்க்கு போதும் என்று வைத்து ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு அரசாங்கம் இனிமேலாவது முயலுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** நம்முடைய மாநில அரசாங்கத்தின் நிதிநிலைமைக நன்கு பரிசிலனை செய்துதான் மிகவும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு எல்லாம் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. 45 சதவீதம் வைத்தால்தான் நல்லது என்று அவர்களுக்கு தனிச் சலுகை காட்ட வேண்டுமென்று இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தொழிற்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கடன் உதவித் தொகையில், பெற்றோர்கள் அவர்களுக்கு கார்டியனாக இருந்தால் வழங்கப்படும். சகோதரர்கள், மற்றவர்கள் கார்டியனாக இருந்தால் வழங்கப்படாது என்று இருப்பது உண்மையா? அப்படி இருந்தால், சகோதரர்கள் கார்டியனாக இருந்தாலும் இந்தக் கடன் உதவித்தொகை அளிக்கப்படும் என்கிற விதியை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் புதுக் கேள்வி கேட்கிறார். அதற்குத் தனியாக கேள்வி வேண்டும்.

**திரு. கோ. சி. மணி :** 1962-63-ம் வருடத்தில் உதவித் தொகை கோரி வந்த மனுக்கள் எத்தனை? எத்தனை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன, எத்தனை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்ற விவரங்களை அறியலாமா?



1st April 1963]

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த விவரங்களை எல்லாம் தரவேண்டுமென்றால், தனியாகக் கேள்வி வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, எம்.ஏ., எம்.எஸ்ஸி., படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகி இருக்கிறது. அவர்களுக்கு குறிப்பிட்ட எண் அளவுதான் கொடுக்க முடியும் என்று வரையறை இருக்கிறது. அதனால் பல மாணவர்கள் படிக்க முடியாத நிலை இருக்கிறது. அந்த வரையறையை நீக்கி தகுதி உள்ள மாணவர்கள் அத்தனை பேருக்கும் கொடுக்க சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** முன்பு எம்.ஏ. படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படவில்லை. இப்போதுதான் பின்தங்கிய மாணவர்கள் எம்.ஏ., படித்து உயர்ந்த நிலையை அடைய வேண்டுமென்பதற்காக 40 ஸ்காலர்ஷிப்புகள் இந்த மாநிலத்திலே வழங்கப்படுகின்றன.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு 45 தகுதி எண்களும், மிகவும் பின்தங்கிய மாணவர்களுக்கு 40 தகுதி எண்களும் என்று இருக்கிறது. அதிலே சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் ஆகியவர்களுடைய குழந்தைகளும் சேர்க்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அவர்களை மிகவும் பின்தங்கிய வகுப்பில் சேர்த்து சலுகைகள் வழங்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை அவர்களைப் பார்த்தாலே நன்றாகத் தெரியும்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** தலைவர் அவர்களே, "மிகவும் பின்தங்கிய வகுப்பினர்கள்" என்று சொல்லக்கூடிய வர்க்கத்தில் சேர்க்கப்பட்ட வகுப்பினர்கள் எத்தனை? "பின்தங்கிய வகுப்பினர்கள்" என்ற வர்க்கத்தில் சேர்க்கப்பட்ட வகுப்பினர் எத்தனை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன் :** உத்தேசமாகச் சொல்கிறேன். "பின்தங்கிய வகுப்பினர்கள்" கிட்டத்தட்ட 157 வகுப்பினர்கள். "மிகவும் பின்தங்கிய வகுப்பினர்கள்" கிட்டத்தட்ட 50 வகுப்பினர்கள்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** இந்திய அரசாங்கத்தால் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப்புக்கு 60 சதவிகிதம் மார்க்குகள் வேண்டுமென்று கூறப்படுகிறது. ஆனால் ஸ்காலர்ஷிப் வழங்கும் போது 65 சதவிகிதத்திற்கே ஒதுக்கப்பட்ட தொகை சரியாகி விட்டது. ஆகவே மற்றவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மாநில சர்க்காரால் கொடுக்கப்படுகிற ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. ஆனால், அடுத்த வருஷம் கொஞ்சம் அதிகமாக மார்க்கு வாங்கி அப்ளிகேஷன் போட்டால்

[1st April 1963

ராஜ்ய சர்க்காருடைய ஸ்காலர்ஷிப் பெற்றிருக்கும் காரணத்தால் மத்திய சர்க்காரால் கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட மாட்டாது என்று சொல்கிறார்கள். அதை எப்படி நிவர்த்திப்பது? அவர்களுக்கு இந்திய சர்க்காருடைய ஸ்காலர்ஷிப் கிடைக்க என்ன முயற்சி எடுக்கவேண்டுமென அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மாணவர்கள் மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப்புக்கு மனு போடுகிறார்கள். மாகாண சர்க்கார் ஸ்காலர்ஷிப்புக்கும் மனு போடுகிறார்கள். சிலருக்கு மாகாண சர்க்கார் ஸ்காலர்ஷிப் கிடைத்துவிடுகிறது. அதற்குப் பிறகு மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் வேண்டுமென்று சொல்கிறார்கள். மாகாண சர்க்கார் ஸ்காலர்ஷிப் வாங்கிக்கொண்டிருப்பவர்கள் அதையே வாங்கிக் கொண்டு இருக்கலாம். மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் வாங்கிக் கொண்டிருப்பவர்கள் அதையே வாங்கிக்கொண்டிருக்கலாம்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டு, அவர்கள் படித்து முடிந்து வேலைக்குச் சென்ற பிறகு "ஸ்காலர்ஷிப் கொடுத்தது தவறு ; அவர்களுக்கு அதிகமான வருமானம் வருகிறது" என்று கூறி 4,000 5,000 ரூபாய் ஒரே முறையில் கட்டச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இப்படி இல்லாமல் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கு முன்பே பரிசீலனை செய்து தகுதி உடையவர்களுக்கே ஸ்காலர்ஷிப் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாணவர்கள் ஏற்கனவே அப்ளிகேஷன் போட்டு ஸ்காலர்ஷிப் வாங்கி விடுகிறார்கள். பிற்பாடு ஜில்லாக்களிலிருந்து "அதிகமான சொத்து இருப்பவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்ற முறையில் விண்ணப்பங்கள் வருகின்றன. அப்படிப்பட்ட விண்ணப்பங்களை கலெக்டருக்கு அனுப்பி அவர் சொத்து உள்ளவரா அல்லது ஏழையா என்று பரிசீலிக்கிறோம். சொத்து உடையவர் என்றால் எல்லாப் பணத்தையும் திருப்பி வாங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

**திரு. சி. பொன்னுசாமி :** தலைவர் அவர்களே, "கன்வர்டெட் கிரிஸ்டியன்களுக்கும்" மத்திய சர்க்காரால், மாகாண சர்க்காரால் கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கப்படுகின்றனவா ? அப்படிக் கொடுக்கவில்லை என்றால் என்ன காரணம்.?

**கனம் திரு. பூ. கக்கன் :** தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ சகோதரர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் சில விசேஷச் சலுகைகளை ஹரிஜனங்களுக்குக் கொடுக்கிறார்கள். அதுதான் கிறிஸ்தவ சகோதரர்களுக்கு இல்லை. பாக்வர்டு கம்யூனிட்டிகளுக்குக் கொடுப்பதுபோல் மற்ற ஸ்காலர்ஷிப்புகள் கன்வர்டெட் கிரிஸ்டியன்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பி.யூ.சி. படிக்க ஸ்காலர்ஷிப் வாங்கி, பிறகு படிக்கமுடியாமல் சானிட்டரி கோர்ஸ் போன்ற வகுப்புகளுக்குச் சென்று படித்தால் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை என்ற நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதனால் பல பையன்கள் அவர்களுடைய படிப்பை முடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், இந்த ஆண்டு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படாவிட்டாலும் அவர்களுக்குக் கடன் கொடுக்கவாவது அரசாங்கம் ஏதாவது வழிவகை **செய்யுமா ?**



1st April 1963]

**கனம் திரு. பூ. கக்கன் :** கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதைக் காட்டிலும் இனமாகக் கொடுத்தால் நல்லது என்றுதான் இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு பி.யூ.சி.-க்குப் போய்விடுகிறார்கள். அவர்கள் அங்கு பெயிலான பிறகு மறுபடியும் பாலிடெக்னிக் சேர வருகிறார்கள். அதனால் சில சமயங்களில் இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் ஆடிட் அப்ஜெக்ஷன் இருந்தது. அப்படிப்பட்டவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். பி.யூ.சி. படித்துவிட்டு பாலிடெக்னிக் போனால் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். சானிட்டரி இன்ஸ்பெக்டர் கோர்ஸுக்குப் போகிறவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதா என்பதைப் பின்னால்தான் பரிசீலனை செய்ய வேண்டும்.

### கழிவுநீர்க்கால் திட்டம் (திருவாரூர்)

*438 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருவாரூர் நகருக்கான சாக்கடைத் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அத்தகைய திட்டம் எதுவும் தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

There is no such proposal under consideration of the Government at present.

### *Malaria Eradication Programme*

*445 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) the number of officials employed for the implementation of the Malaria Eradication Programme in Madras State; and

(*b*) whether they will be paid the pay and allowances like N.G.O's?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Under the National Malaria Eradication Programme the following staff are employed :—

(i) Gazetted 37 (Five posts not filled up).

(ii) Non-Gazetted technical and ministerial staff 10,701 (Thirty posts not filled up).

[1st April 1963

(*b*) Out of the staff referred to in item (ii) above, the staff paid from contingencies are allowed only fixed pay and they are given the increase in Dearness allowance of Rs. 5 sanctioned in July 1962. Other regular staff are in receipt of prescribed pay and Dearness allowance.

(அ) மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் கீழ்ப் பின்வரும் பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் :—

(1) கெஜெட் பதிவு பெற்றவர் 37 (ஐந்து பதவிகள் நிரப்பப் படவில்லை).

(2) கெஜெட் பதிவு பெருதவர்கள் (தொழிற்றுறையைச் சார்ந்தவர், சாராதவர்) 10,701 (முப்பது பதவிகள் நிரப்பப்படவில்லை).

(ஆ) (2) இனத்தில் குறிப்பிட்ட பணியாளர்களில் சில்லறைச் செலவு நிதியிலிருந்து சம்பளம் பெறும் பணியாளர்களுக்கு நிலையான சம்பளம் மட்டுமே கொடுக்கப்படுகிறது. 1962 ஜுலையில் அனுமதித்த ரூ. 5 அகவிலைப்படி உயர்வும் கொடுக்கப்படுகிறது. முறையாக அமர்த்தப்பட்ட இதர பணியாளர்கள் நிர்ணய சம்பளத்தையும் அகவிலைப் படியையும் பெற்று வருகின்றனர்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, இந்தப் பதவிகள் நிரப்பப்படாததற்குக் காரணமென்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆட்கள் வராததுதான் காரணம். போஸ்ட் அட்வர்டைஸ் பண்ணியும் ஒருவரும் மனு செய்யவில்லை.

**திரு. கோ. சி. மணி :** அந்த பதவிகளுக்கு ஒருவரும் வரவில்லை என்பதற்குக் காரணமென்ன என்பதை அரசாங்கம் தீர ஆராய்ந்திருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதை அரசாங்கம் ஆராயவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களிடம் யாராவது 'ரெப்ரசென்ட்' பண்ணியிருந்தால் அதைப்பற்றிச் சொன்னல் நன்ருக இருக்கும்.

### அரசாங்க மருத்துவ மனை (கரம்பக்குடி)

* 448 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்தில் உள்ள அரசாங்க மருத்துவ விடுதியில் பிரசவ விடுதி ஏற்படுத்துவது சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் விண்ணப்பம் வந்ததா ?

(இ) அப்படியாளுல் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இல்லை.

(இ) எழாது.



1st April 1963]

**திரு. பி. முருகையன் :** மாவட்ட வளர்ச்சி மன்றம் மூலமாக டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸுக்கு ஒரு நிர்மானம் அனுப்பி அது இப்போது அமுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு தகவல் கிடைத்துள்ளது. அது அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்து போர்டு, கரம்பக்குடியிலிருந்து ஒரு ரெப்ரெஸென்டேஷன் வந்தது. அவர்களே எடுத்து நடத்தி, கட்டடத்தைக் கட்டி, அதற்கு 48,000 ரூபாய் ஆகுமென்றும், அதற்கு மேல் மெயின்டினென்ஸ் எக்ஸ்பென்ஸை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அதைப்பற்றி டி.எம்.ஓ. எழுதிக் கேட்டிருக்கிருர். இப்போது அதைப் பற்றிய தகவல் ஏதும் பஞ்சாயத்து போர்டிலிருந்து வரவில்லை.

### குடிதண்ணீர் திட்டம் (திண்டிவனம்)

* 452 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோடைக்கால பற்ருக்குறையை தவிர்ப்பதற்காக திண்டிவனம் நகர குடிதண்ணீர் திட்டத்துடன் ரெட்டணையிலுள்ள ரெட்டியார் கிணற்றை இணைக்கும் நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ரெட்டியார் கிணற்றிலும், மற்ற கிணறுகளிலும் வரும் கோடைக் காலத்தில் நீர்வளம் சம்பந்தமாகச் சோதனைகள் நடத்தும்படி சுகாதார இன்ஜினியரைக் கேட்டிருக்கிருர்கள்.

**திரு. ஆ. தங்கவேலு :** இந்தத் திட்டம் எடுத்துக்கொள்வதற்குக் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதிலே இப்போது இன்வெஸ்டிகேஷன் செய்வதற்காக வேண்டி ஒரு குழு அமைத்திருக்கிருர்கள். இன்வெஸ்ட்டிகேஷன் ரிப்போர்ட் வந்த பிறகு தான் இதைக் கால தாமதம் இல்லாமல் எடுத்துக் கொள்ள முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

### வானூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனை

* 454 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வானூர் பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனையில் டாக்டர் இல்லாமல் சுமார் ஓராண்டு காலமாக அந்த வட்டாரத்து மக்கள் சிகிச்சைக்கு அவதிப்படுவது உண்மையா ?

[1st April 1963

(இ) அங்கு டாக்டர் குடியிருப்பு இல்லமும், மருத்துவ மனையும் பழுதுபட்டு கிடப்பது உண்மையா ?

(ஈ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a), (b) & (c) : Government understand that the post of Medical Officer of the dispensary is vacant since 2nd March 1962. It is for the Panchayat Union Council to take necessary action in the matter.

### மருத்துவ மனைகளில் பொது நூல்நிலையம்

*466 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை எர்ஸ்கின் மருத்துவ நிலையத்தில் ஏற்படுத்தியிருப்பது போல சென்னையிலும் மாவட்டத் தலைநகர்களிலும் உள்ள எல்லா மருத்துவ நிலையங்களிலும் பொது நூல்நிலையம் நிறுவப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தந்த ஸ்தல நூலக அதிகார சபைகள் ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சென்னை நகர அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்துவதைக் குறித்து கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். அதுவாயிருந்தால், செங்கற்பட்டு ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரியில் நூலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதகை தலைமை ஆஸ்பத்திரியில் நூலகம் ஒன்றை ஏற்படுத்த விரைவில் அனுமதி வழங்கப்படும். மருத்துவத் துறை டைரக்டர் இது விஷயமாய் திட்டங்கள் அனுப்பும்போது ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளிலும் சென்னை நகரிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் நூலகங்கள் ஏற்படுத்த இதைப்போலவே அனுமதி வழங்கப்படும்.

It is presumed that the Honourable Member refers to the opening of libraries in District Headquarters and City State Hospitals by the Local Library Authorities concerned. If so, a library has been established in the District Headquarters Hospital at Chingleput. Permission for the opening of a library in the Headquarters Hospital, Ootacamund, will be accorded shortly. Similar permission will be granted in respect of other District Headquarters and City State Hospitals as and when proposals in that regard are received from the Director of Medical Services.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நூலைப் படிப்பது ஓரளவுக்கு நோயை மறந்திருக்கிற நிலையை உண்டாக்கும். நூல் நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்துவதோடு, எழுந்து போக முடியாத நிலையில் நூலகத்திற்குச் சென்று வேண்டிய நூல்களை எடுத்துவர முடியாத நிலையில் இருக்கக்கூடிய நோயாளிகளுக்கு நூலகங்கள் அவர்கள் படுக்கைக்குச் சென்று கொடுக்கும் முறையில் வழி வகுப்பார்களா ?



1st April 1963]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மூலக் கேள்விக்கு நான் அளித்த பதில்தான் இதற்கும்.

### *Medical and Engineering Courses*

*469 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the several changes proposed to be introduced in the Medical and Engineering courses of studies to meet the needs of the National Emergency ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதிய மருத்துவப் படிப்பு (Integrated M.B.B.S. Course) சம்பந்தப்பட்டவரை சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது. புதிய இன்ஜினீயரிங் படிப்பு பற்றிய விவரங்கள் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன.

### குடி தண்ணீர்த் திட்டம் (கள்ளக்குறிச்சி)

*470 கேள்வி.—திரு. எல். ஆனந்தன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி நகர குடி தண்ணீர்த் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

THE HON. SRIMATHI JOHTHI VENCATACHELLUM : The Government have recently received the outline proposals for the Kallakurichi water-supply scheme from the Chief Engineer (Public Health Engineering and Municipal Works). The question of sanctioning the scheme is under consideration.

### *Rural dispensary (Hosur taluk)*

*473 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have received any representation from the erstwhile Salem District Board to open a Rural Dispensary at Nammandahally village in Hosur taluk ; and

(b) if so, the action taken thereon ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இந்த ப்ரொபோஸலானது அனுப்பப்பட்டு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸிடம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படி இருந்தால் அதைப் பரிசீலனைக்கு எடுத்து ஆவன செய்ய முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதை முதலிலே பஞ்சாயத்து போர்டிலே திறக்கவேண்டுமென்று டிஸைட் செய்தார்கள். மறுபடியும் ப்ரைமரி ஹெல்த் சென்டர் தான் திறக்கவேண்டும், ரூரல் டிஸ்பென்ஸரி வேண்டாம் என்று சொன்னார்கள். ப்ரைமரி ஹெல்த் சென்டர் திறக்கவேண்டுமென்றால், தற்போது அவசர

[a] Printed as Appendix V on pages 489–490 infra.

[1st April 1963

நிலைமை இருப்பதை உத்தேசித்து, கட்டடங்களெல்லாம் கட்டுவ தில்லை என்று முடிவு எடுத்திருப்பதால் பஞ்சாயத்து போர்டுக்கே எழுதியிருக்கிறோம், ரூரல் டிஸ்பென்ஸரி திறக்கவேண்டுமென்று அவர்களுக்கு அபிப்பிராயம் இருந்தால் அதைப் பற்றித் தெரிவிக் கச் சொல்லியிருக்கிறோம்.

**சித்த வைத்தியர்கள்**

* 475 **கேள்வி.—திரு. அ. ஆறுமுகம் :** கனம் சுகாதார அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டிலுள்ள எல்லா சித்த வைத்தியர்களுக்கும் வாய்மொழிப் பரீட்சை வைத்து சர்ட்டிபிகேட் வழங்க என்ன நட வடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (1) The rules for the registration of traditionally trained or/and hereditory practitioners of Indigenous medicine which include Siddha Vaidyas also have been framed.

(2) As per the rules oral examinations are conducted in batches.

(3) The Central Board of Indigenous Medicine has been constituted in December 1962. This Board will scrutinise the applications of the successful candidates at the oral examination and orders for registration will be issuedon the basis of the recommendations of the Board.

*Food adulterants*

* 477 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any instructions have been received from the Central Government regarding the question of prohibition of manufacture and sale of food adulterants; and

(b) if so, the action taken in the matter ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) இது விஷயமாய் எந்தத் தகவலும் கொடுப்பது பொது நலனுக்கு உகந்ததல்ல.

*General Hospital (South Madras)*

* 478 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to build a General Hospital for South Madras?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆம். உண்டு. இந்த ஆஸ்பத்திரியை நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டுவதாக உத்தேசம்.



1st April 1963]

**குடிநீர் வழங்கும் திட்டம் (இராசிபுரம்)**

* 481 **கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு :** கனம் சுகா தார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

பனமரத்துப்பட்டியிலிருந்து இராசிபுரம் நகராட்சிக்கு குடி நீர் வழங்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இவ்வேலை மேற் கொள்ளப்பட்டு நடப்பு ஆண்டில் (1962-63) ரூ. 6·598 லட்சம் செல விடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**குடிநீர் வழங்குதல் (சென்னை நகர்)**

* 433 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) காவிரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம் பற்றிய ஆராய்ச்சி முடிந்து விட்டதா ?

(இ) அத்திட்டம் எப்போது செயலாக்கப்படும் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The investigation report submitted by the Chief Engineer, Public Works Department (General) is under the consideration of the Government.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இப்போது புதிதாக கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற திட்டத்தைப் பற்றிப் பேசப்படுகிற காரணத்தினால் இது நிறுத்தி வைக்கப்படுமா ? அப்படி அது வருகிறபோது, சென்னையின் தேவை அதிகமாக இருக்கும் என்று இந்தத் திட்டத்தையும் உட னடியாக அமல் நடத்தப் போகிறார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்தத் திட்டத்தை நடத்துவதற்காக வேண்டி ஹெல்த் இன்வெஸ்டிகேஷன் டிவிஷன் என்று, சப்-டிவிஷன்கள் இரண்டு வைத்து என்னென்ன ஸ்டாஃப் வேண்டுமோ அதைப் போட்டு நடத்த அரசாங்கம் தீர்மானம் செய்திருக்கிறது. அவர்கள் பி. டபிள்யூ.டி-க்குக் கொடுக்கவேண் டும், இதற்கென்று தனிப்பட்ட முறையிலே வாட்டர் சப்ளை போர்டு ஒன்று எலெக்ட்ரிஸிட்டி போர்டு மாதிரி வைத்தால் நன்றாக இருக் கும் என்று கூறியிருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

## UNSTARRED QUESTIONS.

*Godowns for foodgrains*

22 Q.—**திரு. முனு. ஆதி :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை எங்கெங்கு எத்தனை கூட்டுறவு தானியக் கிடங்குகள் (Co-operative godowns for foodgrains) கட்டப்பட்டுள்ளன ?

[1st April 1963

(இ) இவைகளைக் கட்டுவதற்காக அரசாங்கத்திற்கான செலவென்ன ?

(உ) இக் கிடங்குகளைப் பயன்படுத்துபவர்கள் தனிப்பட்டோரா அல்லது கூட்டுறவு முறையில் விவசாயம் செய்பவர்களா ?

(எ) எந்த அடிப்படையில் இந்த கிடங்குகள் பயன்படுத்த அளிக்கப் படுகின்றன ?

A.—(*a*) Eight hundred and three (803) co-operative godowns have been constructed in the places mentioned in the annexure given below.

(*b*) A sum of Rupees one hundred and twenty-four lakhs and fifty-eight thousand (Rs. 124·58 lakhs) has been sanctioned for the construction of the godowns during the period from April 1956 up to the middle of December 1962.

MR. SPEAKER : If he wants to raise anything, there is no time now. It can be taken up afterwards.

## III.—CALLING ATTENTION TO THE INADEQUACY OF SUPPLY OF WATER IN THE KRISHNAGIRI RESERVOIR PROJECT CANALS.

*திரு. பி. வி. சீராமுலு: தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் உள்ள கால்வாய்களில் சுமார் 8,000 ஏக்கர் நிலத்திற்கு வழங்கப்படும் நீர் போதுமானதாக இல்லை என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(Mr. Deputy Speaker in the Chair)

THE HON. SRI V. RAMAIAH : Mr. Deputy Speaker, Sir, according to the tentative rules of regulation for the Krishnagiri

[Sri V. Ramaiah] [1st April 1963

Reservoir Project the due date for opening the two canals for irrigation is 1st August. But during this year (62–63) it was not possible to adhere to the rules as the storage position in the reservoir was prevarious. As soon as storage improved, the canals were opened on 15—9—1962 for irrigating the entire project ayacut of 9,000 acres (i.e., 4,500 acres under Krishnagiri Reservoir Project left main canal and 4,500 acres under the Right Main Canal). The supply was to have stopped from 14th February 1963.

The Collector of Salem reported in February 1963, that standing crops over an extent of about 4,500 acres would require water even beyond 14th February 1963 and that they would become ripe for harvest by the end of March or in the middle of April 1963. He, therefore, recommended extension of supplies beyond 14th February 1963 and up to 15th April 1963 (inclusive). Accordingly, supplies were extended beyond 14th February 1963 and up to 15th April 1963 (inclusive).

The total draw off in the two canals of the project sinc the date of opening has been as follows :—

| | |
|---|---|
| From 15th September 1962 to end of December 1962 about. | 100 cusecs. |
| From 1st January 1963 to 9th January 1963 about .. | 120 to 125 cusecs. |
| From 10th January 1963 to 23rd January 1963 about .. | 110 cusecs. |
| From 24th January 1963 to 31st January 1963 about .. | 80 to 85 cusecs. |
| From 1st February 1963 to 14th February 1963 about .. | 95 cusecs. |
| From 15th February 1963 to 17th February 1963 about .. | 60 „ |
| From 18th February 1963 to 28th February 1963 about .. | 80 „ |
| From 1st March 1963 to 22nd March 1963 about .. .. | 82 to 90 cusecs. |

It can be seen from the above, that supply has not been reduced from 1st March 1963 as stated by the M.L.A. in his Notice. This supply is more than sufficient for the standing crops in about 4,500 acres. It has also been reported by the Executive Engineer, Salem Division at Mettur Dam that there was absolutely no complaint from the ryots about any dearth of supply.

## IV.—ANNOUNCEMENTS.

### (1) INDUSTRIAL DISPUTES (MADRAS AMENDMENT) BILL, 1963 (L.A. BILL No. 7 OF 1963.)

MR. DEPUTY SPEAKER : I have to announce that the Industrial Disputes (Madras Amendment) Bill, 1963 (L.A. Bill No. 7 of 1963) has been passed by the Legislative Council without any amendment.

### (2) NOMINATION OF COUNCIL MEMBERS TO ASSOCIATE WITH THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. DEPUTY SPEAKER : I have also to announce that the Legislative Council has nominated the following three members of the Council to associate with the Committee on Subordinate Legislation of the Assembly for the financial year 1963–64 :—

1. Dr. P. V. Rajamannar.
2. Sri K. Balasubramania Ayyar.
3. Sri M. Seshachariar.



1st April 1963]

## V.—GOVERNMENT MOTION

### DISCUSSION ON THE EDUCATIONAL PATTERN—*cont.*

MR. DEPUTY SPEAKER : Now the discussion on the motion on the Educational Pattern as enunciated in the note placed on the Table of the House on the 25th March 1963, will continue.

**திரு. கே. பி. பழனி**: மதிப்பிற்குரிய மாமன்ற உதவி தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை ஆலோசனைக் குழு சமர்ப்பித்து சபைமுன் வைக்கப்பட்டுள்ள குறிப்பின்மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 'அடுத்து வரும் தேர்தலைப் பற்றி சிந்திப்பான் அரசியல்வாதி, அடுத்து வரும் சமுதாயத்தைப் பற்றி சிந்திப்பான் அரசியல் ஞானி' என்று கூறினார் சிந்தனைச் சிற்பி ப்ளேட்டோ. அந்தக் கருத்திற்கு இணங்க அரசியல் ஞானியாகிய நமது முதல் அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும், அதிகாரிகளும், வருங்கால சமுதாயம் வளமாக, வகையாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தினால், சிறந்த பல ஆலோசனைகளை நம் முன் வைத்திருக்கிறார்கள். நேற்றைய முன் தினம் விவாதத்தில் இந்தக் குறிப்பிலே உள்ள குற்றங்களைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக, ஒரு சில கனம் அங்கத்தினர்கள், ஆத்திரமாக, ஆவேசமாக உரத்த குரலில் பேசினார்கள். "சொத்தையான கருத்துக்களை வைத்துக்கொண்டு வாதாடுபவர்கள் சப்தம் போட்டுப் பேசுவது ஒரு வகையான பழக்கம்" என்று உலக கவி ஷேக்ஸ்பியர் ஓர் இடத்தில் சொல்லுகிறார். "Sound and fury signify nothing". இவர்களைப்பற்றி அவ்வாறுதான் எண்ணத் தோன்றுகிறது. கருத்துக்களை வாதங்களில் நடுநிலை கொண்டு எடுத்துரைக்க வேண்டும் என்று அன்பர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்**: கனம் அங்கத்தினர் "பர்சனல் ரெஃபரன்ஸ்" செய்யாமல் இருந்தால் நல்லது.

**திரு. கே. பி. பழனி**: Nothing personal, Sir. இந்தக் குறிப்பில் பல்வேறு விதமான சிறந்த அம்சங்கள் இருக்கின்றன. நம் கல்வித் திட்டமானது, பல ஆண்டுகளாக, உயர்நிலைப் படிப்பு 11 ஆண்டுகள் கொண்டு இருந்தது; இடையில் 10 ஆண்டுகளாக மாற்றப்பட்டு, மீண்டும் 11 ஆண்டுகளாக இப்பொழுது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே குழுமியுள்ள நமக்கு நன்றாகத் தெரியும், பல்வேறு மாநிலங்களைவிட நம் மாநிலத்திலே கல்வித் தரம் சிறந்ததாக இருக்கிறது என்று. அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. ஏனைய மாநிலங்களில் உயர்நிலைப் படிப்பு 10 ஆண்டுகளாகவே இன்றும் இருக்கிறது. 11 ஆண்டுக் கல்வி முறையால் தரம் உயருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படித் தரமும் திறனும் வாய்ந்த 11 ஆண்டுகள் மீண்டும் கொண்டு வருவது சீரான அம்சம். இந்தக் குறிப்பில் உயர்நிலைப் பள்ளியில் 11-வது ஸ்டாண்டர்டை வைத்தால் சிரமங்கள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இன்று நம் மாநிலத்திலே பார்த்தால் ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன.

[திரு. கே. பி. பழனி] [1st April 1963

உயர்நிலைப் பள்ளி வைப்பதால் அதிகப்படியான செலவினங்கள் ஏற்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. கல்லூரிகளில் எம்.ஏ. பயின்ற ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படுகின்றனர் என்பதால், அவர்களுக்கு அதிகப்படியான ஊதியம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, 11-வது ஸ்டாண்டர்டை கல்லூரியில் சேர்ப்பது அவசியம் என்று ஒரு கருத்து சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. உயர்நிலை வகுப்பில் படிக்கக்கூடிய மாணவன் பள்ளியிலிருந்து தன்னைவிட மேம்பட்ட மாணவர்களுடன், கல்லூரி மாணவர்களுடன் பழகி சிந்தனை வளர வழிவகை இருக்கிறது என்ற காரணத்தினால், அந்த வகுப்பானது கல்லூரியிலே சேர்க்கப்படுவது நல்லது என்ற கருத்தே அது. சபை முன் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிலே, 8-வது ஸ்டாண்டர்டை தொழில் கல்வி வாய்ப்பு உள்ளதாகச் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பாக்டரி சட்டத்தின்படி, அப்படி தொழில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குப் பல வகையான வேலை வாய்ப்புகள் கிட்ட இடம் இருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய திட்டத்தின்கீழ் பட்டம் பெறுவோர், புகுமுக வகுப்பில் நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட்டிருப்பதைக் காண்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

சமூக அறிவு நூல் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது, வரலாறு, புவி நூல் என்று. அந்தப் பாடங்களில் நல்ல ஆர்வமும், பயிற்சியும் பெற, அவற்றைக் கட்டாயப் பாடமாகவும், தேர்வு முக்கியத்துவம் உள்ளதாகவும் செய்யவேண்டும்

அடுத்தபடியாக, பயிற்சி மொழிப் பிரச்னை. இங்கு குழுமியுள்ள அன்பர்களில் ஒரு சிலர் பொதுக் கூட்டங்களிலும் சரி, நம்முடைய மாமன்றத்திலும் சரி குறிப்பிட்டு வருகிறார்கள். ஏதோ காங்கிரஸ்காரர்கள் தமிழ் மொழிக்கு விரோதிகள் போலவும், தமிழ் மொழியின் வளர்ச்சியில் அக்கறை அற்றவர்கள் போலவும், இந்தி மொழி இந்த நாட்டில் வளர்வதற்கு ஆதரவு கொடுத்து, தமிழ் மொழியை அழிப்பதற்கு ஆதரவாக இருப்பதுபோலவும் கருதிப் பேசுகிறார்கள், இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடியவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல்,
இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"

10-00 a.m. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்."

என்றெல்லாம் பாடிய பாரதியார் பாடல்களை அச்சடித்து வெளியிடுவதற்கு அன்னியர் ஆட்சி புரிந்த காலத்திலே தடை விதிக்கப்பட்ட காரணத்தினால், தமிழகத்தில் அச்சடித்து அந்த பாடல்களை வெளியிட யாரும் முன்வரவில்லை. அந்த நேரத்தில் அந்தப் பாடல்களை பர்மாவில் அச்சிட்டு, தமிழகத்தில் விற்று, சிறைக்குச் சென்றவர் ஏனையர் ஒருவரும் இல்லை. ஆனால், அவர் தமிழை வளர்த்த காங்கிரஸ்காரரில் ஒருவர்தான். காங்கிரஸ்காரர்கள்



1st April 1968] [திரு. கே. பி. பழனி]

அன்று மட்டுமல்ல, என்றும் தமிழை வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கையை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாட்டிலே இருக்கக்கூடிய மொழிப் பிரச்னை தமிழுக்கும், இந்திக்கும் உள்ள பிரச்னை அல்ல என்பதை நாம் நன்றாக எண்ணிப் பார்க்கவேண்டும். தமிழ் மொழியினுடைய வளர்ச்சிக்காக வழிவகைகள் அத்தனையும் நமது அரசாங்கம் செய்துவிட்டது. இந்த நாட்டில் இருக்கக்கூடிய பிரச்னை, அகில இந்திய மொழியாக, அகில உலக அந்தஸ்து பெற்றிருக்கிற ஆங்கில மொழி இருக்கவேண்டுமா, அல்லது இந்தி மொழி இருக்கவேண்டுமா என்பதுதான். எவ்வாறு தேசீய இனம் என்று பேசுகிறோமோ, தேசீய நாகரீகம் என்று பேசுகிறோமோ, தேசீயப் பண்பாடு என்று பேசுகிறோமோ, தேசீயக் கலை என்று பேசுகிறோமோ, தேசீயக் கலாசாரம் என்று பேசுகிறோமோ, அதைப் போல தேசீய மொழி ஒன்று தேவை. அந்தத் தேசீய மொழி இந்தி மொழியாக இருக்கவேண்டுமா, அல்லது அன்னிய மொழியாகிய ஆங்கிலம் இருக்கவேண்டுமா என்பதுதான் நாட்டிலுள்ள பிரச்னை. அதனை முடிவு செய்யவேண்டிய பொறுப்பு டெல்லி பாராளுமன்றத்திற்கு இருக்கிறது. தமிழ் மொழியை வளர்ப்பதற்கான வழிவகைகள் அத்தனையும் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, தமிழை அழிக்கக்கூடிய அளவுக்கு நமது அமைச்சர்கள் முன்னதாக இருக்கிறார்கள் என்று எண்ணுவது போலியான கருத்து, அரசியல் கட்சி, மனமாச்சரியங்களின் காரணமாகப் பேசப்படுகிற கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டில் இருக்கக்கூடிய போதனா மொழிப் பிரச்னையைப் பொறுத்த அளவில் தமிழ் மொழி கல்லூரிகளில் போதனா மொழியாக இருப்பதற்கான வழி வகைகள் அத்தனையும் நம்முடைய அரசாங்கம் செய்திருக்கிறது. எந்த ஒரு கல்லூரியும் தமிழ் மொழியைப் போதனா மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு நாங்கள் குறுக்கே நிற்க மாட்டோம் என்ற கருத்தை நமது கல்வி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். இந்தக் குறிப்பிலும் திட்டவட்டமாக அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் இதற்கு எதிராக வாதித்துப் பேசுகிற கனம் அங்கத்தினர்கள் ஆங்கில மொழிக்கு இன்று இருக்கக்கூடிய முக்கியத்துவத்தைக் குறைக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆங்கில மொழி போதனாமொழியாக இருக்கும் திட்டத்திற்கு இருக்கக்கூடிய அங்கீகாரமானது அகற்றப்படவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இங்கே நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், தமிழ் மொழி ஒன்றுதான் போதனா மொழியாக இருக்கவேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாணவர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய பாடங்களை தமிழிலேயே பயிலுகிறார்கள் என்று சொன்னால், எதிர்காலத்தில் பி.ஏ., எம்.ஏ. அல்லது பி.இ. அல்லது எம்.பி.பி.எஸ்.

பட்டம் பெற்ற பிறகு கேரளாவிலோ, ஆந்திராவிலோ, வங்காளத்திலோ, அல்லது டெல்லியிலோ வேலை செய்யக்கூடிய வாய்ப்பை இழந்தவர்களாக ஆவார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வித் துறை முன்னேற்றத்தில் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மாணவர்கள் எதிர்காலத்தில் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதே நேரத்தில் பட்டம் பெற்ற அத்தனை மாணவர்களுக்கும் வேலை கொடுக்கக்கூடிய உத்திரவாதம் இன்று நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கம் கொடுக்கக்கூடிய சூழ்நிலையிலே இருக்கிறதா என்று பார்த்தால், நிச்சயம் இல்லை. இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் தமிழிலே பாடங்கள் போதிக்கப்பட்டால் அன்னிய மாநிலங்களுக்கும், அயல் நாடுகளுக்கும் சென்று மாணவர்கள் வேலை பார்ப்பதற்கு நம்முடைய அமைச்சர்கள் குறுக்கே நின்றதாக எதிர்காலத்தில் குற்றம் சாட்டப்படுவார்கள். அந்த உண்மையை உணர்ந்து, வருங்கால சமுதாயம் வளமாக வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் நமது மாநிலத்தில் ஆங்கில மொழியும் போதனாமொழியாக இருக்கக்கூடிய சூழ்நிலையை நமது அரசாங்கம் உருவாக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று நம்முடைய மாநிலத்தில் ஆதாரக் கல்வியானது போதிக்கப்பட்டு வருகிறது. அந்த ஆதாரக் கல்வியைப் பொறுத்தவரையில் அவ்வளவு சிறப்பாக காந்தியடிகள் கனவு கண்ட வகையிலும், முறையிலும், நடைபெறாத காரணத்தினால் அந்த ஆதாரக் கல்வி நிலையங்களைக்கூட இந்தக் கல்வித் திட்டத்தின்கீழ் கொண்டுவருதல், மாற்றம் செய்துவிடுதல் சாலச் சிறந்தது என்பதைத் தாழ்மையுடன் இந்த அமைச்சர் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆறாவது வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு வரையில் உள்ள வகுப்புகளில் 'கிராப்ட்ஸ்' என்று சொல்லக்கூடிய கைத்தொழில்களை பாடத்திட்டமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும், அதற்கான திட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவையைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் கட்சி காய்ப்பு எண்ணங்களைக் கடந்து, வருங்கால சமுதாயத்தின் நல்வாழ்வை உத்தேசித்து, அதற்கான எண்ணங்களைக் கருத்தில்கொண்டு, இந்தப் பிரச்னையை நன்றாக ஆராய்ந்து, சிந்தனை செய்து முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. மீ. அழகர்சாமி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன்பு வைக்கப்பட்டிருக்கக்கூடிய கல்வி சம்பந்தமான குறிப்பை நான் வரவேற்கிறேன். அது ஒரு சிறப்பான குறிப்பு. அரசியல் கண்ணோட்டத்தோடு அல்லாமல், நடு நிலையிலே இருந்து பார்க்கக்கூடியவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையிலே இந்தக் குறிப்பு அமைந்திருக்கிறது. குறிப்பாக, செகண்டரி



நிலையிலே போதனாமொழி தமிழாக இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த போதனாமொழி விஷயத்தில் ஒரு சில மாற்றங்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். எந்தெந்த பள்ளியில் போதனாமொழியை ஆங்கிலத்தில் வைத்துக்கொள்ள அனுமதி கேட்கிறார்களோ, அதற்கு அனுமதி கொடுக்கும் விஷயத்தில் கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, விஞ்ஞானம், கணக்கு ஆகிய இந்த இரண்டு பாடங்களையாவது எல்லா செகண்டரி பள்ளிகளிலும் ஆங்கிலத்தில் போதித்தால் மாணவர்களுக்கு மிக நலமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இது முடியாவிட்டாலுங்கூட குறைந்த பட்சம், எலெக்டிவ் சப்ஜெக்ட்ஸ் என்று சொல்லப்படுகிற அந்த சப்ஜெக்ட்டையாவது ஆங்கிலத்தில் போதிப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். குறிப்பாகப் பார்க்கும்பொழுது, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும், எலக்டிவ் சப்ஜெக்ட்ஸ்—பிஸிக்ஸ், ஸயன்ஸ் போன்ற பாடங்களை போதிப்பதற்கான வாய்ப்பு இருக்காது. ஆகவே, அந்த மாணவர்கள் கல்லூரிகளில் சேருவதற்கு ஒரு இடைஞ்சலாகக்கூட அது அமைந்துவிடும். எஸ்.எஸ்.எல்.ஸி. (11-வது) வகுப்பிலே எலெக்டிவ் ஸப்ஜெக்ட்ஸ், விஞ்ஞானம், கணக்கு போன்ற பாடங்களை எடுத்து, தேர்ச்சி பெறாதவர்களுக்கும்கூட இந்தப் பாடங்களையெல்லாம் பி.யு.ஸி. வகுப்பில் எடுப்பதற்கான ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டிலும், குறிப்பாக பார்ட் II மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டிலும் செய்யப்பட்டிருக்கக்கூடிய ஒரு முடிவு மிகச் சிறந்த முடிவு என்று நான் கருதுகிறேன். தேசம் ஒன்று என்று நினைக்கக்கூடியவர்கள், நம்பக்கூடியவர்கள் எல்லோரும் இந்தக் கொள்கையை முழு மனதோடு வரவேற்பார்கள். கட்டாயமாக ஒரு தேசிய மொழி இருந்துதான் ஆகவேண்டும். அந்த மொழியானது ஆங்கிலமாக இருக்கவேண்டுமா அல்லது இந்தியாக இருக்கவேண்டுமா என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னை. வேறு எந்தப் பிரச்னையும் இதில் வருவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்த தேசத்தைப் பிரிக்கவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் இந்த மொழிக் கொள்கையிலே, குறிப்பாக இந்தி மொழிக் கொள்கையிலே மாறுபட்ட கருத்து உடையவர்களாக இருப்பதிலே ஆச்சரியத்திற்கு இடமே இல்லை.

அடுத்து, சரித்திரம், பூகோளம் இந்த இரண்டு பாடங்களிலும் பரீட்சை இருக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். குறிப்பாக சரித்திரத்தைப் பொறுத்தமட்டிலும், நம்முடைய மாணவர்கள் ஏனைய நாடுகளின் சரித்திரத்தை நன்கு தெரிந்திருக்கிறார்கள். ஏனைய நாடுகள் சுதந்திரம் அடைந்த வரலாற்றைப் பற்றி நன்கு தெரிந்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய நாடு எந்த முறையிலே சுதந்திரம் அடைந்தது என்பதை, சுதந்திரம்

[திரு. மீ. அழகர்சாமி] [1st April 1963

அடைந்த வரலாற்றை மாணவர்கள் கற்றுத் தெரிந்துகொள்ளவில்லை. ஆகவே, சரித்திர பாடத் திட்டத்தில், குறிப்பாக மாடேர்ன் ஹிஸ்டரி பாடத் திட்டத்தில் நம்முடைய நாடு சுதந்திரம் அடைந்த வரலாற்றினுடைய ஒரு பகுதி சிறப்பாக அமையவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அடுத்து, ஒரு நாட்டிலே இருக்கக்கூடிய மக்களுக்குப் பிற்கால சந்ததிகளை நல்ல மக்களாக உருவாக்குவதற்கு இந்தக் கல்வித் திட்டம் ஒரு சிறந்த அம்சமாக ஆகிறது. ஆகவே, இந்த நாட்டு மக்கள் வல்லவர்களாக, கெட்டிக்காரர்களாக இருந்தால் மட்டும் போதாது, நல்லவர்களாக இருக்கவேண்டுமென்ற கருத்தினை மனதில் கொண்டு இந்தக் கல்வித் திட்டத்தினை அமைக்கவேண்டும். இன்றைக்கு நம்முடைய நாட்டிற்கு சுதந்திரம் தேடித்தந்த அண்ணல் காந்தியடிகள் அவர்களுடைய கோட்பாடுகளை மாணவர்களுக்கு, குறிப்பாக இளம் மாணவர்களுக்குப் போதிக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

அடுத்து, சில கனம் அங்கத்தினர்கள் இந்த இண்டர்மீடியட் வகுப்பைப் பற்றிக் கூறினார்கள். என்னுடைய அபிப்பிராயம் இந்த டிக்ரி கோர்ஸைப் பொறுத்தமட்டில், பட்டப்படிப்பைப் பொறுத்த மட்டில் கட்டாயம் 3 ஆண்டுகள் இருக்கவேண்டும். முன்பு இரண்டு ஆண்டுகள் இருந்தது போதாது. மூன்று ஆண்டுகளாக இருக்கவேண்டுமென்று ஒத்துக்கொண்டால் இண்டர்மீடியட் 2 வருஷம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு வருஷங்கள் இருக்குமானால் ப்ரொபஷணல் காலேஜுக்குப் போகக்கூடியவர்கள் ஓர் ஆண்டு அதிகமாகப் படிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த பி.யூ.சி. என்பது டிக்ரி கோர்ஸ் அல்லது ப்ரொபஷணல் காலேஜுகளுக்குப் போகக்கூடிய முறையில் ஒரு என்ட்ரன்ஸ் படிப்பாக அமைகிறது. ஆகவே பி.யூ.சி. இருந்தால் போதும். இண்டர்மீடியட் அவசியம் இல்லை என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, இந்த டெக்ஸ்ட்புக்குகளைப் பொறுத்தமட்டிலும் அவற்றைத் தேர்ந்தெடுப்பதில் இருக்கக்கூடிய ஒரு குறையைப் பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஒவ்வொரு யூனியனுக்கும் ஒவ்வொரு விதமான புத்தகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு யூனியனில்—அந்த மெம்பர்களை நான் குறைகூறுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது—அந்தப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தகுதி இல்லாதவர்கள் கையிலே இன்று இந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பது ஜில்லா அளவில் இருக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவில் இருக்கக்கூடிய எல்லாப் பள்ளிகளுக்கும், குறிப்பாக இப்போது பிரைமரி, அப்பர் பிரைமரி என்றெல்லாம் வரப்போகிறது; இந்த இரண்டு பகுதிக்கும் 8-ம் கிளாஸ் வரையில் இருக்கும் புத்தகங்களை ஜில்லா முழுமைக்குமாக வைக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். குறைந்தபட்சம், என்னுடைய



1st April 1963] [திரு. மீ. அழகர்சாமி]

அபிப்பிராயம், இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்தப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய குழுவிலே அங்கத்தினராக இல்லாமல் இருக்கவேண்டும். இந்த முறையில் இல்லாமல் இருப்பது நல்லது என்பது எனது கருத்து. அந்தத் துறையில் இருக்கக்கூடியவர்கள், அந்தத் துறையில் பல ஆண்டுகளாக வேலை செய்து அனுபவம் பெற்றிருக்கக்கூடிய ஆசிரியர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகிப்பது பொருத்தமாக இருக்கும் என்ற எனது கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, இதில் ஒரு சிறந்த அம்சம் ஹையர் கிரேடை ஒழித்துவிடப் போகிறார்கள். இப்போது ஒருவர் ஒரு கிராமத்தில் 8-ம் கிளாஸ் படிக்கிறார்; படித்துவிட்டு இரண்டு வருஷங்கள் ட்ரெயினிங் போய்விட்டு வந்த அந்த உபாத்தியாயர் கையில் பிள்ளைகளை ஒப்படைக்கிறோம். அதில் பிரயோசனம் இல்லை. அவர்களுக்குப் போதிக்கக்கூடிய திறமை இல்லை. அவர்களைப் பற்றிக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை. அவர்கள் 8-ம் கிளாஸ் வரைதானே படித்திருக்கிறார்கள்? அவர்களிடம் எதிர்பார்க்கக் கூடியது இவ்வளவுதான். மாணவர்களுக்குக் கல்வி போதிக்கக் கூடிய முறையில் எதிர்பார்க்கக்கூடிய திறமை •அவர்களிடத்தில் இல்லை. ஆகவே, இந்த ஹையர் கிரேடை ஒழித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாக இருக்கிறது. இப்போது ஏராளமான மாணவர்கள் வருகிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்து நல்ல அம்சங்கள் பெற்று, 350, 400 என்ற வகையில் அம்சங்களைப் பெற்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் செலக்ஷனுக்கு வருகிறார்கள். ஆகவே எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்ச்சி அடைந்த மாணவர்கள் வேண்டிய அளவுக்குக் கிடைப்பார்களா என்ற சந்தேகத்திற்கு இடமில்லை. அந்தமாதிரி எஸ்.எஸ்.எல்.ஸி. படித்த மாணவர்கள், "நாங்கள் ஹையர் கிரேடு படிக்கக்கூடத் தயாராக இருக்கிறோம். எங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்று, நல்ல அம்சங்களைப் பெற்று தேர்ச்சி அடைந்தவர்கள் எல்லாம் வருகிறார்கள். ஆகவே இந்த ஹையர் கிரேடை ஒழிப்பது வரவேற்கத்தக்கது என்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. காஞ்சி மணிமொழியார்** : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வித் திட்டத்தின்மீது சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**Mr. DEPUTY SPEAKER** : Let the hon. Member first move his amendment. He can speak afterwards.

**திரு. காஞ்சி மணிமொழியார்** : என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு திருத்தத்தை நான் பிரேரேபிக்கின்றேன் :—

"In the amendment given notice of by Sri K. B. Palani for the words 'while approving the Educational Pattern enunciated in the note is also of the opinion that History and Geography should also be subjects for examination' substitute the following :—

"is of opinion that History and Geography should also be subjects for examination."

[1st April 1963

SRI RAMA. ARANGANNAL : I second the amendment, Sir.

MR. DEPUTY SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

*திரு. காஞ்சி மணிமொழியார்* : துணைத் தலைவர் அவர்களே, நான் என் பெயரால் கொடுத்திருக்கிற திருத்தம், நில நூல், சரித்திரம் ஆகிய இரண்டையும் பரிட்சைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாகும். இதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த கனம் உறுப்பினர்கள்கூட வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே பெரும்பாலும் ஆட்சேபணை இருப்பதற்கில்லை என்று கருதுகிறேன். சரித்திரமும், நில நூலும் மிகமிக முக்கியமான பாடங்களாகும். நாங்கள் படிக்கிற காலத்திலே சரித்திரம், "பி. குரூப்" என்ற பிரிவிலே சேர்க்கப்பட்டு அதில் வெளிநாட்டு சரித்திரங்களெல்லாம் மிகத் தெளிவாக எங்களுக்கு உணர்த்தப்பட்டன. சரித்திரம் எவ்வளவு படிக்கிறோமோ அவ்வளவுதான் நாட்டு உணர்ச்சியும், நாட்டின்மீது பற்றும் ஏற்படக்கூடும். வெளிநாடுகளில் எப்படி எப்படி அந்த நாடுகள் சுதந்திரம் பெற்றன என்பனவற்றை அறிந்து, அதன் மூலம் இந்த நாட்டுக்குத் தேவையான பெருமைகளையும் சிறப்பையும் தேடித் தரும் அளவுக்கு உணர்ச்சியை ஊட்டக்கூடிய பாடம் சரித்திரப் பாட்மேயாகும். ஆகையினாலே, சரித்திரமும், நில நூலும் கண்டிப்பாக பரீட்சைக்கு, தேர்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் பேசுகிறபோது ஏதோ தமிழுக்கு இந்தியால் ஆபத்து வந்துவிட்டது என்று நாங்கள் சொல்வதாக ஆளுங்கட்சியினரால் எடுத்துக் கூறப்பட்டது. உண்மையிலேயே தமிழுக்குத் தடை மட்டுமல்ல. இளம் குழந்தைகள், சிறு குழந்தைகள் மீது பல மொழிகளைச் சுமத்தி, தாங்கமுடியாத சுமையை அவர்கள் மீது ஏற்றி அதனால் கல்வியின் தரத்தைப் பாழாக்கக் கூடாது என்பதுதான் நாங்கள் எடுத்து வைக்கிற கருத்தாகும். ஒரு சிறு குருவியின் மீது ஒரு குண்டுமணியை வைத்தால் தாங்கக் கூடும். அதன் மேல் பனங்காயை வைப்போமானால் தலை நசுங்கித்தான் போகும். பனங்காயைவிட பூசணிக்காயை வைத்தால் அந்தக் குருவியின் கதி என்ன ஆகும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு மும்மொழிக் கொள்கை புகுத்தப்பட்டிருக்கிறது. சிறு மாணவர்கள் 3 மொழிகள் மட்டுமல்ல, அதற்கு மேலும் அவர்கள் விருப்பமாக 2 மொழிகளை எடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்தால், சிறு மாணவர்கள் எழுத்தைப் படிப்பதிலும், சொற்களை நெட்டுரு பண்ணுவதிலும் மொழிகளைக் கற்றுக்கொள்வதிலும் பல காலம் செலவழித்துக் கொண்டே போவார்களானால் வேறு வகையில் வளர வேண்டிய அறிவு நிச்சயமாக தடைப்படுகிறது என்பதுதான் எங்களுடைய வாதமாகும். எவ்வளவுதான் சிறந்த அறிவுள்ள மாணவனாக இருந்தாலும் வேற்று மொழிச் சொற்களை மனப்பாடம் செய்து கொண்டு அதிலே காலம் கழித்தால் மற்ற பாடங்களில் எப்படி திறமையைக் காட்ட முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.



1st April 1963] [*திரு. காஞ்சி மணிமொழியார்*]

ஆகவே பல மொழிக் கொள்கையைப் புகுத்துவதால் தமிழகத்தின் அறிவு வளர்ச்சி மிகுந்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. நமது தமிழகம் மற்ற மாநிலங்களை எல்லாம்விட அறிவுத் துறையில் மிகவும் சிறந்தது என்று எல்லோராலும் பாராட்டக்கூடிய நிலையில் இருக்கிறதென்று சொல்லுகிறோம். அதற்குக் காரணமென்ன? அப்போதெல்லாம் இங்கே இரண்டு மொழித் திட்டம் இருந்தது. தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டு மொழிகள் மட்டும் நன்றாக கற்றுக் கொடுக்கப்பட்ட காரணத்தினால் இங்கே பல அறிஞர்கள் வெளிவந்து மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டக்கூடியவர்களாக, மற்ற மாநிலங்களெல்லாம் போற்றக்கூடியவர்களாக இரண்டு மொழிகளிலும் வல்லுநர்களாக ஆக வாய்ப்பு இருந்தது. அந்த இரண்டு மொழிகளில் கூட தமிழைத் தனியாக எடுத்துப் படித்திருக்கிறார்கள் சிலர். அந்த முறையிலே பயின்று தமிழிலே தனி ஆற்றல் பெற்று வந்திருக்கிறார்கள். இரண்டு மொழி படிக்கிற காலத்திலிருந்த சிறப்பு, அந்தத் தரம், இன்றைய தினம் நிச்சயமாக, இந்த மாணவர்களிடத்திலே இல்லை என்பதை நன்றாக அறிவோம். மாணவர்கள் இன்றைக்கு பழைய காலத்தைப் போல சிறந்த அறிவைப் பெற்றிருக்கவில்லை என்பதை உணர வேண்டும். ஆகையால்தான், நாங்கள் 'மும்மொழிக் கொள்கை தேவை இல்லை' என்று சொல்கிறோம்; 'இந்தி தேவை இல்லை இந்த நாட்டுக்கு' என்றும் கூறுகிறோம். இந்தி மொழி பயில்வதால் எத்தனையோ நன்மைகள் ஏற்படக்கூடும் என்று அமைச்சர் அவர்களும், ஆளுங்கட்சியில் உள்ளவர்களும் பொதுக் கூட்டத்தில் எவ்வளவோ எடுத்து வைத்தாலுங்கூட, மாணவர்கள் அதை விரும்பிப் படிக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. சில நாட்களுக்கு முன்னால்தான் கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லும் நேரத்தில் "மாணவர்கள் கேள்வித் தாள்களுக்கு விடை எழுதுவதற்குத் தரப்படுகிற விடைத் தாள்களை வெறும் தாள்களாக மடித்துக் கொடுத்துவிட்டார்கள். ஆகவேதான் பரீட்சை தேவை இல்லை என்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள். வெறும் தாள்களை ஏன் மடித்துக் கொடுத்தார்கள்? மடித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? அவர்களுக்கு அந்தப் பாடத்தில் விருப்பம் இல்லை; படிக்கவேண்டும் என்கிற ஆசை இல்லை; அதனால் வெறும் தாள்களை மடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : சரித்திரம், பூகோளம் இவற்றுக்கு பரீட்சை வேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் திருத்தம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதிலே விருப்பம் இருக்குமானால், பரீட்சை இல்லாவிட்டால் என்ன? 'பரீட்சை வேண்டும்' என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஏன் கோருகிறார்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*திரு. காஞ்சி மணிமொழியார்* : நாங்கள் சொல்லி வருவதெல்லாம், இந்தி தமிழகத்திற்கு ஒரு வேற்று மொழி. அதிலே பயிலு

வதற்கு மாணவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது. மற்றப் பாடங்களையெல்லாம் உயர்நிலைப் பள்ளி வரையில் தமிழில் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்ற திட்டம் இப்பொழுது வந்திருக்கிறது. ஆகவே, அந்தப் பாடங்களைப் படிப்பதிலே மாணவர்களுக்கு எந்த விதமான சிரமமும் இருக்க முடியாது. கருத்துக்களைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், இந்தியைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு சொல்லையும் தனித் தனியாக மனப்பாடம்செய்து தீரவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆங்கிலம் எப்படியோ அதுபோல் இந்தி ஒரு வேற்று மொழியாக இருப்பதால், ஒவ்வொரு சொல்லையும் தெரிந்து மனப்பாடம் செய்து நெட்டுரு பண்ணித் தெரிந்துகொள்ள வேண்டியவனாக இருக்கிறான். ஆகவே, அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது, மும்மொழிக் கொள்கை தேவை இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். நாங்கள் மட்டுந்தான் இப்படிக் கருதுகிறோம் என்பது அல்ல. உண்மையிலேயே, மந்திரிகளுக்குப் பின்னால் இருக்கிறவர்கள் கூட, நிச்சயமாக அந்தக் கருத்தோடுதான் இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். நம்புகிறேன் என்பதல்ல, சக்தியும் சிவமுமாக இங்கே வீற்றிருக்கிற திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் அன்றைக்குப் பேசுகிறபோது, தானே சொல்லாமல் தன்னுடைய மகன்மீது அந்தப் பாரத்தைப் போட்டுவிட்டு ஒரு கருத்தைச் சொன்னார்கள். தன்னுடைய மகனைக் கேட்டபோது, 'ஆங்கிலம் தேவை, தமிழும் தேவை, ஆனால் இந்தி வந்தாலும் வரட்டும் போனாலும் போகட்டும்' என்று சொன்னதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்தக் கருத்து மகனுடைய கருத்தாக சொல்லப்பட்டு இருந்தாலும், அவருக்குள்ளே இருக்கும் அந்தக் கருத்துத்தான் கொஞ்சம் வெடித்து அப்படி வந்திருக்கிறது என்று சொல்வதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அதை அவர்களால் தெளிவாகச் சொல்ல முடியவில்லை, நாங்கள் தெளிவாகச் சொல்கிறோம். அவ்வளவுதான். ஆகவே, மும்மொழிக் கொள்கை நம்முடைய நாட்டின் இளைஞர்கள் உண்மையிலேயே அறிவுத் துறையில் வேகமாக வளர ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

சரியாகப் பதினைந்து நாட்கள் கூடக் கழியவில்லை, இந்தியில் பரீட்சை தேவையில்லை எனச் சொல்லி. அதற்குள்ளே, 'இப்பொழுது இந்தி பரீட்சை உண்டு' என்று புகுத்தப்பட்டிருக்கிறது. பதினைந்து நாட்களுக்குள்ளே என்ன மாற்றம் திடீர் என்று ஏற்பட்டது? மாணவர்கள் மந்திரியின் காலில் விழுந்து, 'எங்களுக்குப் பரீட்சை வைத்தே தீரவேண்டும், பரீட்சை வைத்தால் பக்கம் பக்கமாக எழுதிக் குவிக்கத் தயாராயிருக்கிறோம்' என்று சொல்லி ஏதாவது மனுக் கொடுத்துக்கொண்டனரா? எந்தக் காரணத்தினால் இப்படித் திடீர் என்று பரீட்சை வைக்கவேண்டும் என்ற எண்ணம் மந்திரி அவர்களுக்கு ஏற்பட்டது? என்று நான் கேட்க விரும்புகிறேன். இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து, மீண்டும் அந்தப் பரீட்சையை எடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.





இந்தியை கடைசி வரையில்—9, 10, 11-வது வகுப்புகளிலும்—கொண்டுபோவதைக் காட்டிலும், 6, 7, 8-வது வகுப்புகளோடு முடித்து விட்டால் நிச்சயமாக பொதுத் தேர்வு எழுதவேண்டிய ஒரு நிலையாவது அவர்களுக்கு ஏற்படாது. ஆகையால் அதைத் குறைந்து, அதற்குப் பதிலாகப் பூகோளத்தையும், சரித்திரத்தையும் அங்கே பாடமாக வைத்துக் கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். சர்க்காருடைய மும்மொழிக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு திட்டம் என்று சொல்லப்படுமானால், எட்டாம் வகுப்போடு அந்தச் சனியனைத் தொலைத்துவிடுங்கள். எட்டாவது வகுப்பை முடித்துக்கொண்டு மேலே போகிறவர்களுக்கு ஒரு பாடம் குறையட்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** "எட்டாவதோடு இந்தியை முடித்துத் தொலைத்துவிடலாம்" என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். எட்டாவதிலும் பரீட்சை இருக்கிறது. எட்டாவதில் இந்திப் பரீட்சை எழுதி, அதிலும் பாஸ் மார்க் வாங்கவேண்டியிருக்கிறது என்பதையும் கனம் அங்கத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. காஞ்சி மணிமொழியார் :** எட்டாவதோடு இந்தியை முடித்துவிடவேண்டும். அங்கே கூட பரீட்சை தேவை இல்லை என்று நான் சொல்கிறேன். எந்த இடத்திலும் இந்தியைப் பொறுத்தவரையில் பரீட்சை கூடாது. பரீட்சை குறையவேண்டும் என்பதற்காகத்தான் அதைத் தள்ளவேண்டும் என்று சொல்கிறேன். இப்பொழுதிருக்கும் பாடத் திட்டப்படியே மாணவன் ஏழு பாடங்களில் தேர்வு எழுதவேண்டியவனாக இருக்கிறான். ஏழில் ஒன்று குறைந்தால் மிகவும் நலமாக இருக்கும். ஏழில் ஒன்றைக் குறைத்து, அதற்குப் பதிலாக நில நூல், சரித்திரம் ஆகிய இரண்டையும் பரீட்சைக்குரிய பாடத் திட்டமாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, பயிற்சி மொழியைப்பற்றிப் பேசினார்கள். இப்பொழுது 11-வது வகுப்பு வரையில் பயிற்சி மொழி தமிழில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழை பயிற்சி மொழியாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாகக் கொண்டுவரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். விதி விலக்கு அளிப்பதென்பது மாணவர்களுடைய உள்ளத்தை வேறு திசையில் திருப்புவதாக அமையும். அன்றைக்குச் சொல்கிறபோதுகூட கல்வி அமைச்சர் அவர்கள், 'கோவையில் தமிழில் சொல்லிக்கொடுக்கப்படுகிற காரணத்தாலும், ஆங்கிலத்திலே சொல்லித் தரப்படவில்லை என்கிற காரணத்தாலும், கோவையை விட்டுவிட்டு பொள்ளாச்சிக்குப் போய்ப் படிக்கிறார்கள்' என்று சொன்னார்கள். பொள்ளாச்சியில் அப்படி ஆங்கிலம் இருக்கும் காரணத்தால்தான் மாணவர்கள் அங்கு தாவுகிறார்கள். அந்த நிலைமைக்கு இடம் தரக்கூடாது. எல்லா இடங்களிலும் 11-வது வகுப்புவரை தமிழில் நிச்சயமாக இந்த ஆண்டில் துவக்கப்படும் என்று நிர்ணயித்து, 'ஆங்கில மீடியம் கிடையாது' என்று செய்து

[திரு. காஞ்சி மணிமொழியார்] [1st April 1963

விட்டால் மாணவர்கள் எந்தப் பள்ளியிலும் படித்து திறமை பெறுவார்கள். அந்த நிலைமையை உண்டாக்கவேண்டும்.

மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதற்கான ஸிலபஸ் விரைவிலே தயாரிக்கப்படவேண்டும். சென்ற ஆண்டில் நான்காம் வகுப்புக்கு ஸிலபஸ் இல்லாத காரணத்தால், ஐந்தாம் வகுப்பின் முதல் அரையாண்டு பாடத்தை நான்காம் வகுப்புப் பாடங்களாகப் போதித்திருக்கிறார்கள். ஆகவே, 3, 4, 5 வகுப்புகளுக்கு ஸிலபஸ் உடனே தயாரிக்கப்படவேண்டும்.

முதலில் 11 ஆண்டுப் படிப்பு என்று இருந்தது. பிறகு அது 10 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. மீண்டும் 11 ஆண்டாக உயர்த்தப்படுகிறது. அதைக் குறைப்பதனால் கல்வியின் தரம் குறைகிறது; குறைப்பதை ஆசிரியர்கள் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இருந்தாலும், கூடியவரை 11 ஆண்டுக் கல்வியை 10 ஆண்டுகளிலே முடிக்கக்கூடும் என்றுதான் நான் நம்புகிறேன். ஏனென்றால், நாம் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னால் பள்ளிக்கூட நாட்களை 30 நாட்கள் வீதம் ஒவ்வொரு துறையிலும் உயர்த்தியிருக்கிறோம். துவக்கப் பள்ளியிலும் அதிகப்படுத்தியிருக்கிறோம். உயர்நிலைப்பள்ளியிலும் 30நாட்கள் உயர்த்தியிருக்கிறோம். கல்லூரிக்கும் உயர்த்தியிருக்கிறோம். ஏழு ஆண்டுகளுக்குக் கணக்கெடுத்தால் 210 அதிக நாட்களை ஏற்பாடு செய்திருக்கிறோம். 210 நாட்கள் என்பது கிட்டத்தட்ட பள்ளி ஆண்டு ஒன்றுக்குச் சமம் ஆகும். ஆகவே, எட்டு ஆண்டுப் படிப்பை ஏழாண்டுகளிலேயே நிச்சயமாகப் போதிக்க முடியும். எட்டாண்டுக் கல்வியை ஏழாண்டுகளிலேயே முடித்து, மொத்தமாக பத்து ஆண்டுகளில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிட்டால், பல துறைகளுக்கு வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். டெல்லி பல்கலைக்கழகத்தில் கரஸ்பாண்டென்ஸ் கோர்ஸ் இருக்கிறது. அதற்கு இங்கிருந்து பல பேர் போகிறார்கள். இங்கிருந்து போகிறவர்கள் பி.யு.ஸி. படித்தால்தான் போகமுடியும். மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் போல், பத்து ஆண்டுகள் படித்து முடித்துவிட்டால், 11-வது ஆண்டு அங்கே போய்ச் சேர்ந்து படிக்க வாய்ப்பு இருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பத்து ஆண்டுகள் ஹையர் செகண்டரி கோர்ஸ் என்று வைத்திருந்ததே அதையே நம்முடைய உயர்நிலைப் பள்ளியில் வைத்துவிடவேண்டுமென்று கனம் அங்கத்தினர் கருதுகிறாரா?

**திரு. காஞ்சி மணிமொழியார்:** ஹையர் செகண்டரி கோர்ஸ் இருந்தால் அது எல்லாவற்றிற்கும் வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் சீக்கிரம் உரையை முடித்துவிடவேண்டும்.



1st April 1963]

**திரு. காஞ்சி மணிமொழியார்:** கடைசியாக, ஆதாரக் 10–30 a.m.
கல்வியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆதாரக் கல்வி பற்றி ஆராய்வதற்காக 1937-ஆம் ஆண்டில் முதன் முதலாக கமிட்டி அமைக்கப்பட்டது. அப்போது ஆதாரக் கல்வி மகாத்மா காந்தியடிகளால் புகுத்தப்பட்டது. இப்போது 25 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 25 ஆண்டு காலத்தில் அதனால் ஏற்பட்ட நன்மை என்ன என்பதைச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எந்தத் திட்டமும் புகுத்தப்பட்ட பிறகு, 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகு அதனால் ஏற்பட்ட பலனைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். அதைப் பற்றி ஆராய்ந்து கருத்துத் தெரிவிப்பதற்காக திரு. அரியநாயகம் அவர்களை நியமித்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. பொதுவாக ஆதாரக் கல்வியினால் நாட்டிலே நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், பொதுவாக அதனால் நன்மை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. நான் பல பள்ளிகளைப் பார்த்தேன். அதிலே உள்ள ஆசிரியர்கள் உண்மையிலேயே அதிலே பற்றுக்கொண்டவர்களாக இருக்கிறார்களா என்றால் இல்லை. எந்த எந்தத் தொழில்கள் இந்த நாட்டில் பயன் இல்லாமல் இருக்கின்றனவோ, பரம்பரையாக எந்தத் தொழில்களைச் செய்து வாழ்க்கை வசதி இன்றித் திண்டாட வேண்டிய நிலை இருக்கிறதோ, அந்தத் தொழில்கள்தான் ஆதாரப் பள்ளிகளிலே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. நூல் நூற்றல், தறி நெய்தல், தச்சு வேலை போன்ற தொழில்கள் அங்கே கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அந்த வேலைகளைச் செய்து வருகின்றவர்கள் மாதம் 30 ரூபாய் சம்பாதிப்பதற்குகூட மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வருமானத்தை வைத்துக் கொண்டு குடும்பத்தை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பலர் அதை விட்டு விட்டுப் போகவேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே சொல்லிக் கொடுக்கப்படக் கூடிய தொழில்கள் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய தொழில்கள் அல்ல. உண்மையிலேயே, ஆதாரக் கல்வியைப் பயின்று வெளி வந்த மாணவர்கள் யாராவது அந்தத் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்களா? ஆகவே ஆதாரக் கல்வி பயனற்றதாக இருக்கிறது. அதை யாரும் விரும்பவில்லை. ஆசிரியர்களும் விரும்பவில்லை. அதை நடத்துகிறவர்களைக் கேட்டால் 'பயனற்றதாகத்தான் இருக்கிறது, அதனால் தொந்தரவு செய்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். ஆகவே, அதற்காக ஏன் கோடி கோடியாகப் பணத்தைச் செலவு செய்யவேண்டும்? அந்தக் கல்விக்காக ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி கொடுக்கவேண்டும், ஏராளமான நிலங்களை வாங்கவேண்டும். ஆகவே, ஆதாரக் கல்வியை எடுத்து விட்டால் அரசினருக்கு பெருந்தொகை மிச்சமாகக் கூடும் என்று தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** கனம் உபதலைவர் அவர்களே, கல்வி முறையிலே அவசியமான மாற்றத்தைச் செய்து அந்த அறிக்கை இந்தச் சபை முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. கல்வி, நாட்டு மக்களின் அறிவு பெருக மிகவும் முக்கியமானது. அதன்

காரணமாகத்தான் நமது அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்து அவ்வப்போது என்னென்ன சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து வருகிறார்கள். 'கல்வி முறையிலே அடிக்கடி திருத்தம் செய்யலாமா? நல்லதா?' என்று பலர் கண்டித்துப் பேசினார்கள். எட்டு ஆண்டுப் படிப்பை ஏழாண்டாக மாற்றியதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை உணர்ந்து, அதை மாற்றியமைக்க முற்பட்டால் அதிலே என்ன தவறு இருக்கிறது என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பா வெட்டிய கிணற்றுத் தண்ணீர் உப்பாக இருந்தாலும் அதையேதான் சாப்பிடுவேன் என்று சொல்லிக் கொண்டிருப்பது நல்லதாகாது. ஆகவே, காலத்திற்கேற்ப, தான் இயற்றிய சட்டமாக இருந்தாலும், தான் கொண்டுவந்த திட்டமாக இருந்தாலும் அதிலே கஷ்டங்கள் இருக்குமாயின் அதை மாற்றி வருங்கால சந்ததிகளுக்கேற்ப அமைப்பதிலே தவறு இல்லையென்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நல்ல காரியத்திற்காக எந்தத் திருத்தத்தையும் செய்யலாம். 'ராஜாஜி அவர்கள் குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தார், அவர்களை நாங்கள் ஒழித்து விட்டோம்' என்றெல்லாம் பேசினார்கள். அது அப்படி அல்ல. அந்தக் கல்வித் திட்டம் நாட்டு மக்களுக்கு நல்லது அல்ல என்று நாங்கள் எதிர்த்தோம். அந்தக் கல்வித் திட்டம் நாட்டுக்கு அவசியமாகத் தென்படவில்லை என்று கருதி அதைத் தடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தோம். அவரை வெளியேறச் செய்தது கூட நாங்கள்தான் என்பதனையும் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இந்தி விஷயமாக அதிகமாகப் பேசப்பட்டது. இந்தி இந்த நாட்டின் தேசிய மொழியாக இருக்கவேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதோடு மாத்திரமல்ல. இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த காந்தியடிகள் குஜராத்தியாக இருந்த போதிலும் இந்தி மொழி அதிகமாகப் பேசப்பட்டு வருகிற மொழி என்ற காரணத்தினால் அதுதான் தேசிய மொழியாக இருக்கவேண்டுமென்று அவர்களே கூறியிருக்கிறார்கள். எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந்த நாட்டுக்குத் தேசிய மொழி என்று ஒன்று இருக்கும்போது இந்தியா தேசம், பாரத நாடு என்று சொல்லப்படுகிற இந்த நாட்டுக்குத் தேசிய மொழி அவசியமில்லை என்று சொல்வது நல்லதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தியை இந்த அமைச்சரவை ஒப்புக்கொண்ட காரணத்தால் இவர்கள் மத்திய சர்க்காரிடம் அடிமைத் தனமாக இருக்கிறார்கள் என்று யாராவது கருதினால் அது நல்லது அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் சட்டப்படி 1965-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெற வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் நமது மாநில சர்க்கார், 'இப்போதே அதை மாற்றுவது நல்லது அல்ல, மக்கள் அதற்குரிய பக்குவமடையவில்லை, ஆகவே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, தென்னாட்டைப் பொறுத்தவரை ஆங்கிலமே தொடர்ந்து இருக்கவேண்டும்' என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவித்ததன்



காரணமாகத்தான் மத்திய சர்க்காரும் அந்தத் தன்மையை மாற்றிக்கொண்டு தென்னாடு விரும்பும் வரை ஆங்கிலமே இருக்கட்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நமது சர்க்காரை அடிமைத்தனமாக நடந்து கொள்கிறது என்று சொல்வது அர்த்தமல்ல.

நம்முடைய தமிழ்நாட்டைத் தவிர மற்ற எல்லா மாகாணங்களிலும் இந்திக்கு அதிகமாக ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து அடுத்த இடங்களுக்குச் சென்றால், ஆந்திராவிலே ஹைதராபாத்துக்குச் சென்றால் அங்கே இந்தியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கேரளத்திலும், கன்னடத்திலும் அங்குள்ள மாணவர்கள் முன்னுக்கு வரும் வகையில் இந்தியைக் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டாமென்று சொன்னாலும் என்றாவது ஒரு நாள் இந்த நாட்டுக்குத் தேசிய மொழியாக இந்தி மொழி வரத்தான் போகிறது. ஆகவே, இந்தியை இப்போது மாணவர்கள் கற்றுக்கொள்ளவில்லையானால், எதிர்காலத்தில் பாதிக்கப்படுகிறவர்கள் வருங்கால சந்ததியினர்தான். அதையெல்லாம் எண்ணிப் பார்த்து, இந்திக்கு ஆக்கம் அளித்து அதற்குப் பரிட்சை வைக்க வேண்டுமென்று முடிவு செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும். எதிர்க்கட்சி அன்பர்களும் அதற்கு எதிர்ப்பு அதிகம் தெரிவிப்பது நல்லதல்ல. வருங்கால தமிழ் சந்ததியார்களுக்கு அது தீமை செய்வது போலாகும்.

அடுத்தபடியாக, நமது அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் பெற்றவர்கள். அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. புத்தக விற்பனை சம்பந்தமாக ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன். நமது சர்க்காராலே புத்தகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால் அந்தப் புத்தகங்கள் விற்பனைக்காக ஒரு சில கடைகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதனை எல்லோருக்கும் விற்பனைக்குக் கொடுக்க வாய்ப்பு இருந்தால் நல்லது. புத்தக விற்பனை உரிமையை எல்லோருக்கும் கொடுப்பதன் மூலம் வாங்குபவர்களுக்கு கிடைப்பதற்கு எளிதாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு இந்திக்கு இன்னும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** கனம் சட்ட மன்ற உபதலைவர் அவர்களே, கல்வி முறை பற்றிய குறிப்பின் விவாதத்தில் நானும் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு பெற்றமைக்காக நன்றி, வணக்கம். நேற்று முன்தினம் பேசிய கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் அவர்கள் மிக ஆவேசத்தோடு, அனல் கக்கும் பாணியில், 'இந்தி எதற்காக?. ஏன் இந்தி படிக்கவேண்டும்? ஏன் இந்தி புகுத்தப்படுகிறது?' என்றெல்லாம் பேசினார்கள்.

அப்படிப் பேசுவது மட்டுமல்லாமல், 'இந்தியைத் திணித்தால், புகுத்தினால் உங்கள் ஆட்சி கவிழ்ந்து விடும், உங்கள் ஆட்சி நிலை நிற்காது' என்றெல்லாம் சபதம் செய்தார்கள். அவர்கள் இந்தக் கலியுகத்தின் துர்வாச முனியா என்று நான் அவர்களைக்

தங்கள் மூலம் கேட்க ஆசைப்படுகிறேன். இந்தக் கலியுகத்தில் போடுகிற சபதம் எல்லாம் எங்களைச் சாராது, இந்த கனல் கக்கும் மொழிகள் எல்லாம் எங்களை வீழ்த்தாது, நாங்கள் வீழ மாட்டோம். நாட்டிற்கு நன்மையே செய்கிறோம் என்று தங்கள் மூலம் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தி எங்கே திணிக்கப்படுகிறது? இந்தி திணிக்கப்படவில்லை. வேண்டுமென்றால் இந்தியைப் படிக்கலாம், இல்லையெனில் .இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்றையாவது கற்றுக் கொள்ளலாம் என்றுதான் சொல்லப்படுகிறது. இந்தி அவர்களுக்கு வேண்டியதில்லை என்றால் அதை விட்டு விடலாம், அதற்குப் பதிலாக இந்தி படிக்க விரும்புகிறவர்களை, 'ஏன் படிக்கவேண்டும்? எதற்காகப் படிக்க வேண்டும்?' என்று கேட்பது நியாயமா? படிக்க இஷ்டப்படுகிறவர்கள் படிக்கட்டும், மார்க்குகள் வாங்க விரும்புகிறவர்கள் மார்க்குகள் வாங்கட்டும். அதன்மூலம் இந்திய சர்க்கார் கொடுக்கிற ஸ்பெஷல் ஸ்காலர்ஷிப்பை வாங்க விரும்புகிறவர்கள் அதை வாங்கி கல்வி அறிவு பெறட்டுமே! அதில் ஏன் ஒரு சில அரசியல் கட்சியினர் குறுக்கிடவேண்டும்? ஒரு அரசியல் கட்சியை வளர்ப்பதற்காக 'மாணவர்கள் இந்தி படிக்கவேண்டாம்' என்ற கெட்ட ஒரு அறிவினைப் புகட்டாதீர்கள் என்று தங்கள் மூலம் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டில் இந்தி மட்டுமல்ல, வேறு எதைப் படிக்கவேண்டுமானாலும் அதற்கு வசதி செய்து தர வேண்டியது சர்க்கார் கடமை. ஆகவே நம் தேசீய மொழியான இந்தியைப் படிக்க வசதி செய்து தரப்பட்டால், 'இந்தி திணிக்கப்படுகிறது', 'புகுத்தப்படுகிறது' என்றெல்லாம் பேசுவது வருங்கால மாணவர்களுக்கு ஒரு நல்ல படிப்பினையாக இருக்காது. அதை ஒரு அரசியல் கட்சி தங்கள் அரசியல் கொள்கையாக வைத்துக்கொண்டு இந்த நாட்டு மாணவர்களைக் கெடுக்கவேண்டாமென்று தங்கள் மூலம் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். என் கருத்தைக் கூற வேண்டுமானால், இந்தியில் பரிட்சை வைத்து குறைந்தது இவ்வளவு மார்க்குகள் வாங்க வேண்டுமென்று வைக்க வேண்டும். இந்தியைத் திணிக்கக் கூடாது என்பதற்காகத்தான் மார்க் வைக்காமல் பரீட்சை எழுதி அந்த மார்க்கை மாடரேஷனுக்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்கிறார்களே தவிர இவ்வளவு குறைந்த மார்க்குகள் வாங்க வேண்டுமென்று இந்தக் குறிப்பில் கூறவில்லை. இந்திக்கு குறைந்தது 15 மார்க்காவது வைத்து அதை பரீட்சைக்கு எடுத்துக் கொள்ளலாம். நல்ல முறையில் இந்தி படிக்க விரும்புகிறவர்களுக்கு அது உற்சாகம் அளிக்கக்கூடிய ஒரு முறையாக இருக்கும் என்ற என் கருத்தை இந்த மன்றத்தின் முன் நான் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இந்தி திணிக்கப்படவில்லை, அதற்குப் பதிலாக எந்த ஒரு மொழியை வேண்டுமானாலும் படிக்கலாம். ஆகவே இந்தி என்றிருப்பதை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அறிக்கை நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யப்பட்டு, நன்கு திருத்தியமைக்கப்பட்டு மாணவர்கள் நல்ல அறிவு பெற, நல்ல படிப்பு முறை இருக்கும் விதத்தில் இந்த அறிக்கை





தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் இந்த அறிக்கை அமைக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றாமல், மேலும் மேலும் இதை மாற்றாமல், குறைந்தது 25 ஆண்டுகளுக்காவது இதே முறை இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி கல்வி முறை மாற்றப்படுவதால் பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. அதோடு, கல்வி நிலையங்களில் எதை எந்த நேரத்தில் மாற்றுவார்கள், எதை எப்படி செய்வது என்று தெரியாமல் முழிக்கிறார்கள். ஆகவே இப்போது வகுக்கப்பட்டிருக்கும் முறையில் சிறு சிறு மாற்றங்கள் மட்டும் செய்து கொண்டு, குறைந்தது இதை 25 ஆண்டுகளுக்கு மாற்றக் கூடாது, இது நீடித்திருக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 10 ஆண்டுப் படிப்பு என்பதை 11 ஆண்டுப் படிப்பு என்று மாற்றியமைத்திருப்பது மிக மிக நல்ல முறையாகும். பதினான்கு வயதில் படிப்பை முடிப்பது இப்போது 15 வயதாகும். அப்படி ஓர் ஆண்டு கூடுதலாக இருப்பதால் அதிகமாகப் படித்து நல்ல அனுபவத்தையும், நல்ல கல்வி அறிவையும் மாணவர்கள் பெற முடியும். ஆகவே, 10 ஆண்டுகள் என்பதை 11 ஆண்டுகள் என்று மாற்றியிருப்பதை நான் பாராட்டுகிறேன். 'சோஷியல் ஸ்டடீஸ்' என்பதற்குப் பதிலாக 'பூகோளம்', 'சரித்திரம்' என்று வைக்கப்பட்டிருக்கிறது. அது நல்ல முறையாகும். அதை எல்லோரும் பாராட்டினார்கள். நம் நாட்டு பூகோளம், பிற நாடுகளின் பூகோளம் ஆகியவற்றை அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது இந்த முறை. சில ஆண்டுகளாக வரைமுறை இல்லாது 'சோஷியல் ஸ்டடீஸ்' என்று வைத்து, எதைக் கற்றுக்கொள்வது, எதைக் கற்றுக் கொள்ளாமல் இருப்பது என்று தெரியாமல் இருந்த ஒரு நிலைமாறி இப்போது சரித்திரம், பூகோளம் என்று வைத்திருப்பது வரவேற்கத்தக்கது. இதற்கும் பரீட்சை வைத்தால் நலம் என்ற என் கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆங்கிலம்—தமிழ். தமிழ் மூலமாகத்தான் கல்வி போதிக்கப்படவேண்டுமென்று தமிழ் நாட்டில் பலர் கூறுகிறார்கள். தமிழ் மூலம் படிக்க விரும்புகிறவர்கள் தமிழ் மூலம் படிக்கட்டும். ஆனால் ஆங்கிலம் மூலம் படிக்க விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலம் மூலம் படிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கிய விஷயம். ஜனநாயக நாட்டில் தமிழ் மூலம்தான் படிப்பேன் என்று விரும்புகிறவர்களுக்கு அதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் படிக்க விரும்புகிறவர்களுக்கு அதற்கான வசதி செய்யப்பட்டிருக்கிறது. அம்முறையில்தான் இந்தக் கல்விக் கொள்கை வகுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஆங்கிலம் மூலம் படிக்கக்கூடாது என்று ஒரு சில கட்சியினர் கூறுகிறார்கள். அது தவறு. ஆங்கிலத்தில் படிக்க விரும்புகிறவர்கள் அப்படிப் படிக்கட்டுமே. ஏன் அதைத் தடுக்க வேண்டும்? தமிழ் மூலம் படிக்க விரும்புகிறவர்களுக்கு தமிழ் மூலம் படிக்க சுதந்திரம் கொடுத்திருக்கும்போது, ஆங்கிலத்தில் படிக்க விரும்புகிறவர்களுக்கும் ஆங்கிலத்தில் படிக்க சுதந்திரம் இருப்பதுதான் சரி.

கல்லூரிகளில் தமிழ் மூலம்தான் கல்வி கற்பிக்கப்படவேண்டும், அதை ஒரு சட்டமாக இயற்ற வேண்டுமென்று ஒரு சில கட்சிக் காரர்கள் கூறுகிறார்கள். ஏன் அப்படிச் செய்யவேண்டும்? தமிழில் படிக்க வசதி செய்து தரவேண்டுமென்று சொல்வது நியாயம். தமிழில் படிக்க விரும்புகிறவர்களுக்கு அதற்குள்ள வசதி கல்லூரிகளிலும் செய்து தரப்படுகிறது. அதற்கு அப்படி வசதி செய்து தராவிடில் சர்க்காரைக் குறை கூறலாம், குற்றஞ்சாட்டலாம். அதற்கு வேண்டிய வசதிகளோ செய்து தரப்பட்டிருக்கின்றன. ஆங்கிலத்தின் மூலம் படிக்க விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் படிக்க வசதி செய்யப்படவேண்டியதும் நியாயம்தான். ஆக, நம் குழந்தைகளுக்கு மூன்று மொழிகள் கற்பிக்கப்படவேண்டுமென்ற மும்மொழிக் கொள்கையாக இருக்கிறது இது. சிலர் இக்கொள்கை தவறு, குழந்தைகள் மீது மூன்று மொழிகள் திணிக்கப்படுகின்றன என்று கூறுகிறார்கள். "இளமையில் கல்" என்று சொல்லும் வாக்கியத்தை நாம் மறந்து விடக்கூடாது. குழந்தைகளாக இருக்கும்போது அவர்கள் பல மொழிகளைக் கற்றுக்கொள்ளும் திறமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். வயதான பிறகு இத்திறமை அதிகமாகயிருப்பதில்லை. ஆகவே, குழந்தையாக இருக்கும்போது இந்த மூன்று மொழிகளைக் கற்றுக் கொள்வது சுலபம், அது அவர்களுக்கு ஒரு சுமையாக இருக்காது, ஒரு பாரமாக இருக்காது. ஆகவே குழந்தைகளுக்கு மூன்று மொழிகள் கற்றுக கொடுக்கப்படவேண்டுமென்று இருப்பது மிக மிக வரவேற்கத்தக்க அம்சம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஹையர் கிரேட் முறையை ஒழித்துவிட்டு, சிறிய வகுப்புகளுக்கும் கூட செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் போட வேண்டுமென்ற முறையைக் கொண்டுவரவேண்டுமென்று பல தடவை நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். அது போல், கொண்டுவந்திருக்கும் இந்த ஏற்பாடானது மிக மிக நல்லது. இந்த ஏற்பாட்டைச் செய்ததற்கு கனம் அமைச்சர் அவர்களைப் பாராட்டி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் கல்விக் கொள்கையிலே ஒரு மாறுதல் ஏற்படுகின்ற நேரத்தில் எனக்குப் பேச சந்தர்ப்பம் கிடைத்ததற்கு உண்மையிலேயே நான் மகிழ்ச்சி அடைகிறேன். கல்விக் கொள்கை என்று சொல்லும்போது, நாட்டு மொழி, மற்றும் பல்வேறு விஷயங்களில் நம்முடைய கண்ணோட்டம் செல்வதற்குக் கல்விக் கொள்கை ஆதாரமாக விளங்குகிறது. எனக்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர்கள் கூறியது போல கல்விக் கொள்கை அடிக்கடி மாற்றப்படுவது வருந்தத்தக்க ஒன்றாகும். குறைந்த பட்சம் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை, திட்டமிட்ட முறையில், கல்விக்கொள்கை பரிசீலிக்கப்பட்டு, அதன் பிறகு மாற்றம் ஏற்படுவது நன்றாக இருக்கும். பதினைந்து ஆண்டு காலமாக, நேரம், காலம் இல்லாமல், பல்வேறு தடவைகளில் கல்விக்கொள்கையில் குழப்பம் ஏற்பட்டு, புதிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், மாறுதல்கள் எல்லாம் பயன் அளித்து இருக்கின்றனவா என்று பார்த்தால், பயனை விட, குழப்பம் அதிகமாக இருக்கும் நிலைமையைத்தான் நமது சர்க்கார் செய்திருக்கிறது. கல்விக்கொள்கை தேசத்தின் கருத்தோட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்பது தான் என்னுடைய குற்றச்சாட்டு.





பொது மொழியைப் பொறுத்த வரையில் நம்முடைய தமிழக சர்க்கார் கொண்டிருக்கும் கருத்து சரியானதுதானா என்பதைப் பற்றி என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். பொது மொழி இந்தி என்று சொல்லும்போது, அதை ஒத்துக்கொள்ள முடியுமா? பொது மொழியாக ஒரு மொழிதான் இருக்க வேண்டுமா? நான்கு மொழிகள் இருக்க வேண்டுமா? என்பதைப் பற்றித் திட்டவட்டமான முடிவுக்கு வரவேண்டும். இங்கே இருக்கும் ஒரு சில கட்சிக்காரர்கள் வற்புறுத்துகிறார்கள் என்பதற்காக இப்படியும், அப்படியும் நெளிவது, எதிர் காலத்தில் இந்த நாட்டுக்கு நல்லதல்ல என்பதை நான் வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன். நாடு ஒன்றாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். நாடு ஒன்றாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள், தங்களுடைய கல்விக்கொள்கையை அதற்கேற்ப வகுத்துக்கொள்ள வேண்டும். நாடு ஒன்றல்ல, பல்வேறு வகையாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்லக்கூடியவர்கள், தங்களுக்கேற்ற மொழிக் கொள்கையை வகுத்துக்கொண்டு அதற்கேற்றவாறு தங்களுடைய கருத்தை வற்புறுத்துகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், என்னுடைய கொள்கையை விட்டுக்கொடுப்பேனானால், அது உண்மையிலேயே நாட்டுக்கும், நான் நம்பிக்கொண்டிருக்கிற கட்சிக்கும் செய்யும் துரோகமாகத் தான் இருக்கும். அதுமாத்திரமல்ல, இந்த நாடு ஒன்றாக இருக்கவேண்டுமென்றால், இரண்டு மொழி வைத்துத்தான் ஒன்றாக இருக்கவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. பொது மொழி ஒன்றாக இருக்கவேண்டுமா? நான்கு மொழிகள் இருக்கவேண்டுமா? என்பது ஒரு பிரச்னை. 14 மொழிகளில், நான்கு மொழிகள் பொது மொழியாக இருக்க வாய்ப்பு இருக்கிறது என்றால், அப்படியாவது துணிந்த கருத்தாகச் சொல்லுங்கள். ஒரு மொழிதான் இருக்கவேண்டும், அதுவும் இந்தியாகத்தான் இருக்கவேண்டுமென்று அரசாங்கத்தார் சொல்வதாக இருந்தால், அதைக் கற்றுக்கொள்வதற்கு ஒரு நிச்சயமான வழிவகையை சர்க்கார் வகுத்தாக வேண்டும். அதைப் பரீட்சைக்குரிய மொழியாகவும் சர்க்கார் ஆக்கவேண்டும். இதுவும் இல்லை, அதுவும் இல்லை, எது தான் இருக்கிறது என்று தெரியவில்லை. நாடு ஒன்றாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள், இதிலே ஒரு நிச்சயமான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். இதிலே ஒரு தடுமாட்டம் இருக்குமானால், தெளிவற்ற நிலை இருக்குமானால், நாட்டின் ஒற்றுமையை வலுப்படுத்துவதாக இருக்காது. இதிலே தெளிவான கண்ணோட்டத்தோடு, கொள்கைக்காக நிற்க வேண்டுமென்ற கண்ணோட்டத்தோடு இருக்கவேண்டும். சில சமயங்களில் எதிர்ப்பு இருக்கலாம். ஆட்சியைக் கவிழ்த்துவிடுவதாகச் சொல்லும் அளவுக்குக் கூட எதிர்ப்பு இருக்கலாம். ஆனால்,

[திரு. க. ர. நல்லசிவம்] [1st April 1963

எதிர்ப்புக்காக நம்முடைய கொள்கையை விட்டுவிட முடியாது என்கிற ஒரு குறிக்கோளைத் தமிழக சர்க்கார் சிந்தித்துப் பார்த்தால் இதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட முடியும்.

மறுபடியும் சொல்கிறேன், பொது மொழியாக ஒரு மொழி வேண்டுமென்று சொல்கிறோம் என்றால் அதை நிலைநிறுத்த வேண்டும். அதிலே பலவீனம் இருக்கக்கூடாது. ஏதாவது ஒரு மொழியைப் பொது மொழியாக ஆக்கவேண்டும். தமிழைக்கூட பொது மொழியாக ஆக்கலாம் அல்லது வடக்கிலுள்ள ஒரு மொழியையாவது வைத்து விடலாம். அஸ்ஸாமிய மொழியையாவது வைத்து விடுங்கள். இதை ஏன் தமிழக சர்க்கார் துணிவாகச் சொல்லக் கூடாது? இந்த முறையிலே இதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொது மொழியைப் பொறுத்த வரையில் தெளிவற்ற நிலையில் இருக்கவேண்டாம். தமிழகத்து மாணவன் நம்முடைய நாட்டில் எங்கே வேண்டுமானாலும் பதவி பெற வேண்டுமென்றால் வடக்கே போய் அவன் பதவி பெறவேண்டுமென்றால்—வடக்கே பிரதான மொழியாக இருக்கும் இந்தி மொழி அறிவு அவனுக்கு அவசியமாகிறது. இந்தி வேண்டுமென்ற வெறி எங்களுக்கு இருப்பதாக சிலருக்குக் கற்பனை ஒன்று இருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் அதற்கு நான் பதில் சொல்கிறேன். நாங்கள் சொல்வதெல்லாம், இந்த நாட்டில் இருக்கும் மொழிகள்தான் இந்த நாட்டு மக்களை ஆளக்கூடிய மொழிகளாக இருக்க வேண்டுமென்று சொல்கிறோமே தவிர, இந்தி தான் வந்து தீர வேண்டும், இந்தி இல்லாவிட்டால் நாடே அழிந்து விடும் என்கிற கருத்து எங்களுக்கு அடியோடு இல்லை. நாங்கள் சொல்வதெல்லாம் தேசிய மொழி இந்தி என்றால், அதற்குரிய இடத்தைக் கொடுத்து, 'பரீட்சை உண்டு' என்று சொல்லுங்கள். அதற்குள்ள தொல்லையையும் அனுபவியுங்கள். அரசாங்கத்தினுடைய கொள்கையை தேசியக் கட்சிகள் தோளோடு தோள் நின்று ஏற்றுக்கொள்ளும். ஏன் இதிலே கோழைத்தனம் இருக்க வேண்டும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறும் கருத்துக்களைப் பற்றி நான் விளக்கம் கூறவேண்டும், அல்லது அரசாங்கத்தின் நிலைமையை எடுத்து விளக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு முன், ஒன்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் அவர்களைப் பொறுத்த வரையில் பொது மொழி, அல்லது ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கவேண்டும் என்று, அவர்கள் கருதுகிறார்கள்? அதைத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டால் அதற்குப் பிறகு நான் அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்க முடியும்.

**திரு. க. ர. நல்லசிவம்:** நான் தெளிவாகச் சொல்வேன், இந்த இடத்தில் எங்களுக்குக் குழப்பம் கிடையாது. பொது மொழியாக ஒரே மொழிதான் இருக்கவேண்டும். பொது மொழியாக இந்தி இருப்பது நல்லது என்று நம்புகிறோம். நான்கு பொது மொழிகள் கூடாது. எங்களுடைய கொள்கையைப் பொறுத்த வரையில், பொது மொழியாக ஒரே மொழிதான் இருக்கவேண்டும்,



1st April 1963] [திரு. க. ர. நல்லசிவம்]

அதுவும் இந்தியாகத் தான் இருக்க வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். இதிலே ஒளிவு, மறைவுக்கு இடமில்லை. அந்த நிலையிலே சரியாக நிற்கவேண்டுமென்பதுதான் என்னுடைய வாதமே தவிர, வேறொன்றும் இல்லை. தமிழகத்தைப் பொறுத்த வரையில், இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது என்றால், குறிப்பாக நான் சொல்கிறேன், அந்தக் கட்சிகளை விட, இன்றைக்கு இங்கே ஆளும் கட்சியாக இருக்கும் கட்சிதான் அதற்குப் பொறுப்பாக இருக்கிறது. தாய் மொழி மூலமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும், அப்படிப்பட்ட நிலை உருவாக வேண்டுமென்று சொல்லும்போது, இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸினுடைய முன்னாள் தலைவர்கள், "தேசிய மொழி ஒன்று வேண்டும், அது இந்தியாகத் தான் இருக்கவேண்டும், அதன் மூலம் தான் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற முடியும்" என்று சொல்லி வந்தார்கள். அது அந்த தலைமுறையினுடைய கருத்து. ஆனால், இன்றைக்கு இருக்கும் தலைமுறை அதை பொறுத்த வரை தெளிவாக இல்லை. இன்றைக்கு தேசிய மொழிக்கு, பொது மொழிக்கு, எதிர்ப்பு இருப்பதற்கு அடிப்படைக் காரணம் அது தான். இந்தி வேண்டாமென்று சொல்லக் கூடியவர்கள்தான் இதற்குப் பிரதான காரணம் என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

பயிற்சி மொழியைப் பொறுத்த வரையில், கல்லூரிகளில் 1963-64-ல் தமிழைக் கொண்டுவரப் போவதாக, இதே சர்க்காருடைய கொள்கைதான் முன்பு வகுக்கப்பட்டது. அது ஏன் மாற்றப்பட்டது? அப்படி என்ன ஆங்கிலத்திற்குத் திடீரென்று புதிய சக்தி வந்து விட்டது? ஆங்கிலத்திற்கு உரியவனே இன்று மூன்றாவது, நான்காவது வல்லரசாகப் போய் விட்டான். வெவ்வேறு மொழிகளைக் கொண்ட அரசுகள் இன்றைக்கு உலகத்தின் முன்னால் முதல் தர வல்லரசுகளாக வந்து விட்டன. அது மட்டுமல்ல, ஆங்கிலத்தில்தான் எல்லாம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, நம்முடைய மொழியை நாம் வைக்க வேண்டிய இடத்தில் வைக்காவிட்டால், நம்முடைய மொழியில் ஒன்றும் வராது. வேற்று மொழிகளில்தான் எல்லாம் இருக்கும். உலகத்திலேயே இன்றைக்கு முன்னணியில் இருக்கும் சோவியத் ரஷியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் ஏதோ ஒரு மொழியின் மூலமாகத்தான் விஞ்ஞானம் முதலிய துறைகளில் அறிவைப் பெறுகிறார்கள். அவரவர்களுடைய தாய் மொழியின் மூலமாகத்தான், தேசிய மொழியின் மூலமாகத்தான், உலகத்திலிருக்கும் சகல அறிவுச் செல்வங்களையும் பெற முடியும் என்று அந்தந்த மக்கள் நம்புகிறார்கள். ஆகவேதான், உலகத்தில் முன்னோடி நாடுகளாக அவை இருக்கின்றன. ஆனால், நம்மைப் பொறுத்த வரையில், ஆங்கிலத்தின் மூலமாகத்தான் எல்லாவற்றையும் செய்ய முடியும்; இல்லாவிட்டால், ஒன்றும் முடியாது என்று நினைப்பதால்தான் நாம் பல தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே நம்முடைய மொழியை நம்பாமல், மற்ற மொழிகளை நம்புவது தான் பல சங்கடங்களுக்குக் காரணம் என்று நான் கருதுகிறேன். பயிற்சி மொழியைப் பொறுத்த வரையில், கல்லூரி அளவில் நிச்சயமாக சர்க்கார் தங்களுடைய கொள்

கையை மாற்றிக்கொள்ளவேண்டும். வேறு புதிய மாற்றங்கள் செய்திருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். சரித்திரம், பூகோளம், ஆகியவைகளைத் தனித்தனியாக வைத்து, அவைகளுக்குப் புதிய நிலையைக் கொடுத்திருக்கிறார்கள். இது பாராட்டப்பட வேண்டியதுதான்.

கல்லூரிகளிலே தமிழைப் பாட மொழியாக ஆக்குவது என்பது சர்க்காருடைய முன்னாள் கொள்கையாக இருந்தது. அதற்குத் தேவையான ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டுமென்று சொல்லியதும் இதே சர்க்கார் தான். 'முன்னால் இருந்த அமைச்சருக்குத் தமிழ் பேரில் அக்கறை இருந்தது, இப்போது இருக்கிறவருக்கு தமிழ் பற்றி அக்கறை இல்லை' என்கிற பிரசாரத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஒரே சர்க்கார்தான் இந்தக் கொள்கைக்கு எல்லாம் காரணமாக இருந்தது, எந்தத் தனிப்பட்ட அமைச்சரும் காரணமாக இல்லை என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன். இந்த சர்க்கார் தங்களுடைய கொள்கையாக, ஆங்கிலத்தின் மீது வைத்திருக்கும் மோகத்தை ஒழித்துவிட்டு, கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக ஆக்குவதற்கு எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக ஆக்காத வரையில் நிச்சயமாக ஜனங்களுடைய எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும்.

அடுத்தபடியாக, இந்த ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில் எத்தனை நாள் நாம் இந்த ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறோமோ அத்தனை நாள் நம் மொழி வளரப் போவதில்லை. நம்முடைய மொழி வளரவேண்டுமானால், பிற மொழியின் ஆதிக்கம், பிற மொழியின் தலையீடுகள் குறைந்தால்தான் தமிழ் வளர முடியும். இன்றைக்குத் தமிழைப் பற்றி எவ்வளவோ பேசப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழ் இருந்து வருகிறது என்று சொல்லுகிறோம். ஆனால், தமிழை இன்றைக்கு உலக மொழிக்கு ஈடாகக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால், தமிழைப் பயிற்சி மொழியாக, தமிழை ஆட்சி மொழியாக, இன்னும் எல்லா வகையிலும் தமிழை ஏற்றி வைத்தால்தான் முடியும். இன்றைக்கு என்ன சொல்லப்படுகிறது ? இன்றைக்கு தமிழைப் பயிற்சி மொழியாக வைப்பதற்குப் பல்வேறு புத்தகங்கள் கிடையாது என்று சொல்லப்படுகிறது. பலர் தமிழில் படிக்க முன்வரவில்லை என்று சொல்லுகிறார்கள். நாம் எல்லாவிதமான ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தால் உற்சாகப்படுவார்கள். அந்த மாதிரி ஊக்கம் கொடுக்காவிட்டால் நம்முடைய நாட்டில் போதிய வளர்ச்சி காண முடியாது. நம்முடன் சண்டை போடுகிறானே, அவமானப்படுத்தினானே அவன் ஆங்கிலத்தை வைத்துக்கொண்டா செய்தான் ? ஆங்கில்த்தை வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் நாம் என்ன செய்து விட்டோம் ? இதில் கூடியவரையில் தயக்கம் காட்டக் கூடாது. ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது என்று தான் புரிய வில்லை. அரசியல் வஞ்சனத்தோடு நான் சொல்லவில்லை. உண்மையிலேயே இன்றைக்கு எண்ணியெண்ணிப் பார்த்தால் நூற்றுக்கு ஒருவர் அல்லது இருவர் ஆங்கிலம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். பாக்கி இருக்கிற 98 பேர்களுக்கு ஆங்கிலம்





தெரியாது. அவர்களுக்குத் தமிழ்தான் தெரியும். அவர்களுடைய நிலை என்ன என்று கேட்கிறேன். பாட மொழியாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதில் கவலை இல்லை. வேண்டுமானால் ஆங்கிலத்தைப் பாட மொழியாகக் கற்றுக் கொடுக்கட்டும். ஆங்கிலம் என்ன, ரஷ்ய மொழியை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். லட்சம் லட்சமாகச் செலவழித்து மற்ற மற்ற மொழிகளைச் சொல்லித் தாருங்கள். ஆனால் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பது மக்களுக்கு விரோதமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, ஆட்சி மொழியாக, பயிற்சி மொழியாக தமிழைக் கொண்டுவர வேண்டும், அதற்கு உரிய திருத்தத்தைக் கொண்டு வந்தாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய கல்வி அறிக்கையில் சிறப்பான அம்சங்கள், பல காணக் கிடக்கின்றன. இந்த அரசாங்கம் இப்போது கொடுத்திருக்கக் கூடிய குறிப்பைப் பார்த்த பிற்பாடு, இது முன்பு இருந்த கல்விக் கொள்கையை மாற்றுவதாக நான் கருதவில்லை. இவைகளைக் கல்விச் சீர்திருத்தங்களாக நான் ஏற்கிறேன். கொள்கையில் சீர்திருத்தமே வேண்டாமென்று கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்களும் மற்றவர்களும் சொல்ல மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். முன் இருந்ததற்கும் இதற்கும் ஒருமைப்பாடுகள் காணக் கிடக்கின்றன. கல்லூரிப் படிப்பை முடிக்க மூன்று வருஷப் படிப்பு இருக்கவேண்டும் என்பது முன்பே ஏற்றுக்கொள்ளப்பட்டது, இப்போதும் அந்த நிலைதான் இருக்கிறது. ஹையர் செகண்டரி படிப்பைச் சேர்த்துப் பார்த்தால் கூட, முன்பே ஏற்றுக்கொண்டது மொத்தத்தில் செண்டரி கல்வி முடிய 11 ஆண்டு படிப்பு. அதே நிலைதான் இப்போதும் இருக்கிறது. கல்லூரியிலே தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டும் இருக்கலாம் என்று இருக்கிறது. மத்தியிலே பி.யூ.ஸி. என்ற பெயரிலோ அல்லது எந்தப் பெயரிலோ ஒரு வகுப்பு வைத்து மத்தியில் தங்கி மீண்டும் புனராலோசனை செய்து போக ஒரு வாய்ப்பு இருக்கும் என்று ஒரு வருஷம் கொடுத்து, இந்த முறையில் ஒரு சீர்திருத்த அறிக்கையாக இதை நான் கருதுகிறேன். இந்த அறிக்கையில் இருக்கக் கூடிய சிறந்த அம்சங்கள் 1-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரையில் ஒரு சீரான கல்வி அமைப்பு, மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலப் பயிற்சி, ஓர் ஆண்டு அவகாசம் பாடத் திட்டங்களை நல்ல முறையில் அமைக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் குழந்தைகள் கல்லூரிக்குச் செல்லும்போது அவர்களை நாம் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்க முடியுமா ? கனம் அம்மையார் சுட்டிக்காட்டியபடி தமிழ் விரும்புகிறவர்கள் இருக்கலாம். ஆனால் தமிழில்தான் கற்றுக் கொள்ளவேண்டும் என்று அவ்விதம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. புதிதாக அமைந்திருக்கிற கல்லூரிகளில் ஆங்கிலத்தில் படிக்க வசதி, தமிழில் படிக்கிறவர்களுக்கும் வசதி ; தனியார் இஷ்டத்திற்குத் தகுந்தபடி, விருப்பத்திற்குத் தகுந்தபடி உதவிகள் கொடுத்து, கல்லூரிப் படிப்பு முடிகிற வரையில் தமிழில் கற்றுக்

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [1st April 1963

கொடுக்க வாய்ப்பைக் கொடுத்திருப்பது—இவ்வளவு சிறந்த அம்சங்களைக் கொண்ட கல்வி அறிக்கை இது. திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் பேசியபோதெல்லாம் மூன்று மொழிகளை ஏற்கிறார்களா என்று தெரிவித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் மூன்று மொழிக் கொள்கையை ஏற்பதாக இருக்குமானால், இந்தியைப் பொறுத்த மட்டில், இந்தி இல்லாவிட்டாலும் திராவிட மொழி என்று எதையேனும் கற்கவேண்டுமென வலியுறுத்தியிருக்கவேண்டும். ஆனால், அவர்களுக்குத் தமிழ் நாட்டில் உள்ள செல்வங்கள் மீது, குழந்தைகள் மீது நம்பிக்கைக் குறைவு இருப்பதாக நான் கருதுகிறேன். திறமையைப் பற்றி சந்தேகப்படுவதாக நான் கருதுகிறேன். ஆனால் நம் செல்வங்கள் திறமையைப் பற்றி நான் சந்தேகப்படவில்லை. குஜராத், பீஹார், போன்ற மாநிலங்களில் 4 மொழி கூடக் கற்கவேண்டுமென்று பாடத் திட்டங்களில் ஏற்பாடு செய்திருப்பதாக நான் அறிக்கையில் பார்க்கிறேன். ஜம்மு-காஷ்மீர், ஒரிஸா ஆகிய இடங்களைப் பார்த்தால் 5, 6 மொழிகள் கூட கற்க வாய்ப்பு இருப்பதாகப் பார்க்கிறேன். அப்படியிருக்கும்போது தமிழ் நாட்டுக் குழந்தைகள் மீது நிச்சயமாக நம்பிக்கை இருக்கிறது. பரவாயில்லை, அவர்களால் 3 மொழிகள் கற்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அத்தகைய நம்பிக்கை இருந்து, அதற்கு உரிய அமைப்போடு, அதற்கு உரிய உருவோடு சிறந்த அமைப்போடு, சிறந்த கருத்துகளோடு இது வந்திருக்கிறது என்று கருதுகிறேன். 3-வது மொழியாகக் கற்பதில் ஆங்கிலத்தோடு அன்னிய தேச மொழிகள் அத்தனைக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு ஒரு அபிப்பிராயம். இதிலே ஆங்கிலமே தனியாக இடம் பெறலாம். பிற தேச மொழிகளையெல்லாம் சிறப்புப் பாடமாக, ஆப்ஷனலாக எடுத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தி, எத்தனை பாஷைகள் கற்க முடியுமோ, அத்தனையையும் சரளமாகக் கற்க வாய்ப்பும் வசதியும் கொடுக்கலாம். இப்போதுள்ள முறையில் இந்திக்கு பரீட்சை மாத்திரம் போதாது என்ற அபிப்பிராயம்கூட ஏனென்றால் திறமை குறைந்த பிள்ளைகளுக்குத் துணையாக நிற்க வேண்டிய சந்தர்ப்பம் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் நல்ல திறமையுள்ளவர்கள் நமக்கு இது தேவையில்லை என்று அலட்சியம் செய்துவிடக் கூடிய சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடக் கூடாது. திறமை உள்ளவர்கள் இதை அலட்சியப் படுத்தி, இதிலே லைபர் மார்க் பெற்றாலும் பரவாயில்லை என்று அதைப்பற்றி கவனம் செலுத்தாமல் போகலாம். அவர்கள் எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கும் அளவுக்கு இந்தியில் மார்க் பெற வசதி செய்து கொடுத்தால் நலம். இதற்கும் குறைந்த பட்ச மார்க் வைப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். கல்லூரியில் ஆங்கிலமா, தமிழா என்ற சர்ச்சை வெகு காலமாக இருந்து வருகிறது. ஆங்கிலத்தில் கல்லூரியில் பாடங்களைக் கற்றாலும் கூட, அந்தக் குழந்தைகள் தமிழில் பரீட்சை எழுத வாய்ப்புக் கொடுக்க முடியுமா என்று பரிசீலனை செய்யலாம். இன்னும் ஒரு யோசனை எனக்குத் தோன்றுகிறது. நான் கருதுகிறேன், நம்முடைய கொள்கையின் விளைவாக மற்ற ராஜ்ய பிள்ளைகளுக்கு, மற்ற பாஷை பேசக் கூடிய பிள்ளைகளுக்கு, தாய்மொழி அல்லது பிரதேச மொழி என்று சந்தர்ப்பம்



1st April 1963] [திரு. எம். எஸ். செல்வராஜன்.]

கொடுக்கும்போது, தெலுங்கு மொழி பேசுகிறவர்கள் தெலுங்கை அவர்கள் முதல் பார்ட்டில் எடுத்துக்கொள்ள முடியும். இரண்டாவது பார்ட்டில் இந்தி எடுத்துக்கொள்ள முடியும். 3-வது பார்ட்டில் ஆங்கிலத்தை எடுத்துக்கொள்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் தமிழை அலட்சியப்படுத்தும் நிலை ஏற்படலாம். இப்படிப்பட்ட குழந்தைகள் தமிழை ஏற்றுக் கொள்ளும் நிலை இருக்குமானால், தமிழை கற்றுக்கொள்ளும் வாய்ப்போடு இஷ்டபாடமாக எடுக்கும் இடத்திலாவது இடம் அளிக்கும் அளவுக்கு அந்தக் குழந்தைகள் தமிழையும் அலட்சியம் செய்யாமல் எடுத்துக் கொள்ள வாய்ப்புக் கொடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

இன்றைய தினம் அறிக்கையிலேயும் சரி, அரசாங்கக் கொள்கையிலேயும் சரி, ஒரு ஆசிரியருக்கு 35 குழந்தைகள் இருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். திருநெல்வேலியில் ஒரு அமைப்பு இருக்கிறது. எத்தனையோ பஞ்சாயத்து யூனியனகளுடைய பள்ளிகளின் புள்ளிவிவரங்களைப் பார்த்திருக்கிறேன். இன்றைய தினம் ஒரு ஆசிரியருக்கு 26, 27 என்று பல பள்ளிகளில் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இப்போது அரசாங்கம் வற்புறுத்தப் போகிறது—அல்லது ஆலோசனை சொல்லப்போகிறது, ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் இருக்கவேண்டும். நாற்பதாவது ரோலில் இருக்கவேண்டும் என்று சொல்லப்போகிறார்கள். அந்த ஜில்லாவில் ஹையர் கிரேடு, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் வருடா வருடம் போதனா முறைப் பயிற்சிப் பள்ளியிலிருந்து ஆயிரக் கணக்கில் ஆணும், பெண்ணு வெளிவர இருக்கிறார்கள் இந்த மாதிரி, புதிய முறையில் அரசாங்கம் விரும்புவதுபோல் 35 பிள்ளைகள் வரும் அளவுக்கு இருக்கிற ஆசிரியர்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால், ஒரு ஆசிரியருக்குக் கூட, வரக் கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய் விடலாம் என்று அஞ்சுகிறேன். இது போன்ற இடங்களில் எந்த அளவு விசேஷ அமைப்புகள், விசேஷ நிலைமைகள் எய்டெட் பள்ளிகளிலோ அல்லது சர்க்கார் பள்ளிகளிலோ இருக்குமானால் அவற்றைப் பற்றி விசேஷ கவனம் செலுத்த முடியுமா என்று பார்க்கவேண்டும். அரசாங்கத்திலிருந்து கொடுக்கும் சர்குலர்களை ஆசிரியர்கள் படித்தால் கூட, இருக்கக் கூடிய சீனியர், ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் அவர்கள் சரிவர உணர்ந்து அவர்கள் உணர்வதை மானேஜ்மெண்டார் உணரச் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். நான் தெரிந்திருக்கிற எத்தனையோ சந்தர்ப்பங்களில் இவர்கள் கொடுக்கிற விளக்கத்தைப் பற்றி வேறு விதமாகப் புரிந்து எந்தெந்த இடத்தில் கஷ்டம் இருக்கிறது என்று என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது.

அரசாங்க சர்குலரைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 2—5—1962-ம் தேதியிட்ட, நெ. 1014 என்ற சர்குலர் எட்டாவது வரை உள்ள ஹையர் எலிமெண்டரி பள்ளியில் மூன்றுவது செகண்டரி ஆசிரியர் நியமனம் சம்பந்தமாக, மானேஜ்மெண்ட் நினைப்பது ஒன்றாகவும், டெபுடி இன்ஸ்பெக்டர் கொடுக்கும் விளக்கம் வேறு விதமாகவும் ஆகிவிட்டது. ஆகவே, இம்மாதிரி சர்குலர்களை அனுப்பும் போது, அதற்கான விளக்கத்தோடு கூட அனுப்பினால், அரசாங்கத்தின், அதிகாரிகளின் எண்ணம் சரியாகப் புரிந்து

ஏற்றுக்கொள்ளத் தயார். எனக்கு சம்பளம் வேண்டியதில்லை. பொறுப்பை இன்றைக்கே கூட ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படிப் புத்தகங்கள் அமைத்துக் கொடுத்தால், அதற்கு முதல் பரிசு ரூ. 25,000, இரண்டாவது பரிசு ரூ. 10,000 மூன்றாவது பரிசு ரூ. 5,000, பிறகு நாலாவது பரிசு என்று ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் பல சப்ஜெக்ட்டுகளிலும் பல ஆயிரம் புத்தகங்களை அடைய முடியும். இதை எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னார்கள் என்று தள்ளிவிடாமல் இருக்கவேண்டும். நாலு கல்லூரிகளில் தமிழ் மொழிப் பாடம் வைத்திருக்கிறார்கள். பல பாடங்களுக்கும் புத்தகங்கள் இருக்கின்றன. நல்ல எண்ணம் இருந்தால், இந்தப் பாடபுத்தகங்களையே, 40 கல்லூரிகளில் ஏன் வைக்கக்கூடாது? அதிலே என்ன இடைஞ்சல்? இந்த இடத்திலேதான் எங்களுக்குச் சந்தேகம் வருகிறது.

கல்லூரியில் தமிழ், உயர்நிலைப் பள்ளியில் தமிழ், ஆனால் நடுவில் புகுமுக வகுப்பில், பி.யு.சி. வகுப்பில் இன்னும் ஆங்கிலம்—இது என்ன தமிழை வளர்க்கிற முறையா? அதே போன்று இன்றைக்கு தமிழ் மொழியை ஆட்சி மொழியாக நம்முடைய சர்க்கார் ஆக்கியிருக்கிறார்கள். நான்கு நாட்களுக்கு முன்பாகக்கூட மேலும் சில இலாகாக்களில் தமிழ் மொழியைப் புகுத்தி நம்முடைய அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறார்கள். அப்படி இலாகாகளிலே தமிழைக் கொண்டுவருகிற நேரத்தில் வேரிலே வென்னீர் ஊற்றி தழையிலே தண்ணீர் ஊற்றுவது போல் உற்பத்தி ஸ்தானங்களை அழித்துவிட்டிருக்கிறார்கள். ஆட்சி மொழி தமிழ் மொழி என்று சொல்லுகிறார்கள். ஆனால், கல்லூரிகளில் தமிழ் கிடையாது, வேறு மொழி இருக்கிறது. இதைக் கொஞ்சம் யோசிக்கவேண்டும். அதே நேரத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதனால் தரம் குறைந்துவிடும் என்று சொன்னார்கள். 1961-வது ஆண்டு நிதி மந்திரி கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 'தரம் குறையாது, இதற்கு உத்திரவாதம் அளிக்கலாம்' என்று 1963-வது ஆண்டு நிதி மந்திரிக்குப் பதில் சொல்லுகிறார்கள்.

காந்தியார் கல்வியைப் பற்றிச் சொன்னது எனக்கு ஞாபகம் இருக்கிறது. "நான் சர்வாதிகாரியாக இருந்தால், எல்லாப் பாடங்களையும் தாய் மொழியிலேயே ஆக்குவேன்; அதை போதிக்க முடியாது என்று சொல்லுகிற ஆசிரியர்கள் இருந்தால்; அவர்களை வேலையிலிருந்து நீக்குவேன். பாட புத்தகங்கள் இல்லையே என்று கவலைப் படமாட்டேன்" என்று சொல்லியிருக்கிறார். அதை இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பெரிய அறிஞர்கள், பெரிய நிபுணர்கள் இவர்களெல்லாம் இன்றைக்கு நாட்டில் இருக்கிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள் அன்னிய மொழி ஒரு பெரிய குறுக்குச் சுவர் என்று. அவர் ரொம்பப் பெரிய அறிவாளி பாண்டித்தியம் பெற்றவர். தமிழ் நாட்டில் முதல் இடம் வகிக்கக் கூடிய தமிழ் அறிவாளி என்று நாட்டு மக்களால் பாராட்டப் படுபவர்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member's time is up.





SRI K. A. MATHIAZHAGAN : Please give me five more minutes, I shall finish my speech within that time.

அதே போலத்தான் திரு. ஆர். சண்முகம் செட்டியார் ஜப்பான் நாட்டுக்குச் சென்றிருந்தபொழுது, அங்கு இருக்கிறவர்களை 'உங்களுக்கு ஆங்கிலம் தெரியாதா? என்று கேட்டார்களாம். அதற்கு அவர்கள் பதில் கூறினார்களாம் 'நாங்கள் 150 வருஷங்களாக அடிமைகளாக இல்லை' என்று சொன்னார்களாம். அதே போலத் தான் முதலில் இங்கிலாந்தில் லத்தீன் மொழியும், பிரெஞ்சு மொழியும் தான் இருந்தன. பிறகு கிராம்வெல் காலத்தில் தான் ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஆகவேண்டும் என்ற ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பின்னால் வந்த அரச வம்சத்தினரின் ஆட்சி அந்த சட்டத்தை ரத்து செய்துவிட்டது. பிறகு மீண்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு, கடந்த 250 ஆண்டுகளில் தான் ஆங்கிலம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

'ஒற்றுமைக்காக இந்தி இருக்க வேண்டும், பல மொழிகள் இருக்க முடியாது' என்றெல்லாம் சொன்னார்கள். ஒற்றுமைக்கும், இதற்கும் கலப்பே கிடையாது. சுவிட்சர்லந்து நாட்டில் பல மொழிகள் இல்லையா? 2, 3 மொழிகள் இல்லையா? கனடா நாட்டில் 2, 3 மொழிகள் இல்லையா? ஐக்கிய நாட்டுச் சபையில் பல மொழிகள் கிடையாதா? என்று அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். ஒற்றுமைக்கும், அதற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

14-வது நூற்றாண்டில் ஒரு சரித்திர புருஷர், மிகப் பெரிய சரித்திரப் புருஷர், டெல்லியில் இருக்கிற ஒரு சாம்ராச்சியத்தை ஆண்டுவந்தார். அவர் பெயர் முகமது துக்ளக். அவர் ஒரு பெரிய படிப்பாளி—கலைகளில் பெரிய பாண்டித்தியம் பெற்றவர்—பிறருக்கு இல்லாத அரிய ஞாபகசக்தி பெற்றவர்—உயர் கலைகளில் அன்பு உடையவர்—வான நூல், கணிதம், தர்க்க சாஸ்த்திரம் ஆகியவைகளில் வல்லுநர்—பெரிய பக்திமான்—சிறந்த மதப்பற்று உடையவர்—பிற மதங்களில் வெறுப்பு கிடையாது—பகைவரிடம் அன்பு காட்டும் இயல்புடையவர்—அரசாங்கத்தைக் காப்பாற்றுவதில் எப்பொழுதும் கண்ணும் கருத்துமாய் இருந்தவர்—நான் சுருங்கச் சொல்லவேண்டுமென்றால், நமது நிதி அமைச்சர் அவர்களுக்கு இருக்கிற அருங் குண நலன்கள் அத்தனையும் பெற்ற ஒரு சரித்திர புருஷர் இன்றைக்கும் அவரை ஒரு பெரிய சரித்திர மகாபுருஷர் என்று வரலாற்று ஆசிரியர்கள் பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட சரித்திர மகாபுருஷர் ஒரு முறை ஒரு சிறிய தவறை செய்தார். தன்னுடைய அரசாங்கத்தின் தலைநகரத்தை டெல்லியிலிருந்து தேவகிரிக்கு மாற்றினார். அதனால் குழப்பங்கள்—பெரிய பயங்கரமான குழப்பங்கள்—ஏற்பட்டன. அதனுடைய விளைவை—நாட்டு நலனுக்கே பாதகம் ஏற்படக்கூடிய ஒரு பெரிய விளைவை—சரித்திரம் படித்த கல்வி அமைச்சர் அவர்கள் அறிவார்கள். துங்கபத்திரையின் தென்கரையில் விசயநகர சாம்ராச்சியம் நிர்மாணம் ஆயிற்று. டெல்லியிலிருந்து திராவிட நாடு பிரிந்தது. பாமினி ராச்சியம், கோல்கொண்டா, பீடார் பேரார்; அகமது நகரம்;

கொள்ளப்படும். இம்மாதிரி அரசாங்கத்தின் எண்ணத்தை சரிவரப் புரிந்து கொள்ளாததால பல இக்கட்டுகள் ஏற்படுகின்றன. ஒரு பள்ளியில் ஒரு வருஷத்திற்கு கிராண்டு கூட வாங்கி விடுகிறார்கள். ஆனால், அதற்குப் பிறகு, இரண்டாவது வருஷத்தில், இடையில் ஏற்படும் விளக்க வேறுபாட்டினால், கிராண்டு கொடுக்காத கஷ்டம் ஏற்படுகிறது. தவறுகளை விலக்கும் முறையில், உத்தரவுகள் மூலம் விளக்கங்களைக் கொடுக்க முடியுமா என்று யோசிக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. கல்லூரி பாடத் திட்டத்தில் விஞ்ஞானம், கணிதம், என்ஜினியரிங், எகானமிக்ஸ் முதலிய பாடங்களில் இன்னும் குழப்பம் இருக்கக் கூடிய அளவுக்குப் பாடங்கள் இருக்கின்றன. மாணவர்கள சிரமம் இல்லாமல் படித்து முன்னுக்கு வரும் வகையில் பாடத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்தப் புனிதமான சீர்திருத்தத்தை எல்லோரும் விரும்பி ஏற்பாடுகள் என்று நம்பி என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி அறிக்கை பற்றிய விவாதத்தில், நான் பிறந்த மண்ணுக்கும், என்னைப் பெற்று வளர்த்து பெருமைப்படுத்திய மண்ணுக்கும் நான் செய்யவேண்டிய கடமையை மனதில் இருத்தி இந்த மன்றத்திலேயும், இந்த மன்றத்திற்கு வெளியிலேயும், பல நாட்களாக மிக்கப் பொறுப்பு உணர்ச்சியுடன் கடமை ஆற்ற முன் வந்திருக்கிறேன் என்று உங்கள் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கை பற்றிச் சொல்லும்போது, இந்த அறிக்கை இந்தியை ஏந்தி வந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். நான் அமைச்சரவர்களைப் பாராட்டின எதிரொலி மாயவில்லை, அதற்குள்ளே, என்னுடைய துரதிர்ஷ்டமோ என்னவோ, இந்த அறிக்கை இந்தியை ஏந்தி வந்திருக்கிறது. அது பற்றி விரிவாக கனம் அங்கத்தினர் கருணாநிதி விளக்குவார்கள். நான் தமிழ் பாடமொழி பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விட்ட இடத்தில் மீண்டும் தொடர்கிறேன். 1963-64-ல் கோயம்புத்தூரில் வைத்த தமிழ் திட்டம் முடிந்த முடிவான திட்டம். அது முன்மாதிரி கல்லூரி பரீட்சார்த்தத் திட்டம் அல்ல. அதற்கு இந்த சட்ட மன்றம் கட்டளை இட்டிருக்கிறது. எல்லாக் கட்சிக்காரர்களும் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள். அதை அமல் நடத்த உத்தரவுகள் பிறப்பித்து இருக்கிறார்களா? இல்லை. இன்றைக்கு கடமையில் தவறவில்லையா? கட்டளையை மீறவில்லையா? இம்மாதிரி வினாவை எழுப்பினேன். கனம் நிதி அமைச்சர் அமெரிக்க, ரஷ்ய வான வெளி வீரர்கள் போல, எங்கெங்கோ நம்மை இழுத்துச் சென்றார்கள். கம்பனின் காதையையும், காளிதாசனையும், வால்மீகியையும், குமரகுருபரையும் சொன்னார்கள். குறிப்பிட்ட கல்லூரியில் தமிழை வைத்திருந்து, மதியழகன் போன்றவர்கள் தேறவில்லையா என்று கேட்டார்கள். அப்படிக் கல்லூரியில் வைத்திருப்பது தமிழ் இலக்கிய வகுப்பு; லிட்ரச்சர்; பூகோளத்தையும், சரித்திரத்தையும் பொருளாதாரத்தையும் பற்றியது அல்ல. மேல் சபையிலே கனம் அமைச்சர் சொன்னார்கள், "ஐயர் வருகிற வரையில் அமாவாசை காத்திருக்காது' என்று. அந்தப் பழமொழியை





ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால், நான் கேட்டதற்கும், இதற்கும் என்ன இணைப்பு? அது அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் உள்ள இணைப்புத்தான். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களில் ஆங்கில லிட்ரச்சர் படிக்கிறார்கள், ஆனால், குறைவாகத்தான் படிக்கிறார்கள். சமஸ்கிருதத்தைப் பற்றிச் சொன்னார்கள் அணுவையும், பராசரரையும் படிக்க வேண்டாமா என்று கேட்டார்கள். அப்படி ஞான பண்டிதர்களாகவும், சமர்த்தர்களாகவும் இருக்கக் கூடியவர்கள் கோடியில் ஒருவர்தான் இருப்பார். அதிலெல்லாம் பாண்டித்தியம் பெறக் கூடியவர்கள், ஒரு பதஞ்சலி சாஸ்திரியாரும், ஒரு வரதாசாரியாரும், பெரும் நிபுணர்களும். அப்படிப்பட்டவர்கள் படிக்க வேண்டிய ஒன்றே தவிர, அது நாட்டு மக்களின் பொதுப் பிரச்சனை ஆகாது. நான் கேட்ட கேள்விக்கு, திருப்பி ஒரு கேள்வியை கேட்டார்கள்; "எனக்கு முன்னால் இருந்த அமைச்சர் எத்தனை கல்லூரிகளில் தமிழை வைத்தார்கள், நானாவது கும்பகோணத்திலும், க்வீன் மேரியிலும் வைத்திருக்கிறேன்" என்று சொன்னார்கள். நாங்கள் திரு. சுப்பிரமணியத்தின் வாரிசு அல்ல. அந்தக் கேள்வியை அமைச்சர் திரு. சுப்பிரமணியத்திடம் கேட்க வேண்டும். கேட்க வேண்டியது மதியழகனை அல்ல; மனச்சாட்சியை. 1956-லிருந்து, அவினாசிலிங்கம் செட்டியார் காலத்திலிருந்து, மறுபடியும் மறுபடியும் எவ்வளவு மாறுதல்கள்; இதற்கு ஒரு நிலையான உத்தரவாதம் அமைச்சரவர்கள் தங்கள் ஆயுள் காலத்திலேயே கொடுக்கவேண்டும்—ஆயுள் காலம் என்று சொல்வது, காங்கிரஸ் கட்சி மந்திரி சபையின் ஆயுள் காலத்தைக் குறிக்கிறேன்; அமைச்சரவர்கள் ரொம்பவும் திடகாத்திரமாக, சுகபோக சௌபாக்கியங்களுடன் நீண்ட நாள் இருந்து, நாங்கள் மந்திரி சபை அமைக்கும் நேரத்தில் எங்களுக்கும் நல்லாசி கூற வேண்டுமென்று (சிரிப்பு) கேட்டுக்கொண்டு, அடுத்து விவரத்திற்குப் போகிறேன்.

நூல்கள் பற்றிச் சொன்னார்கள், 40, 50 புத்தகங்கள்தான் இருக்கின்றன என்று சொன்னார்கள். எங்களுக்குப் பல எண்ணிக்கை புத்தகங்கள் வேண்டும். சினிமாவில் வேண்டுமானால்; ஆயிரம் புத்தகம் போட்டுவிடலாம் அதனால் பாட புத்தகம் போடுவதில் சிரமம் இருக்கிறது என்றார்கள் . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சினிமாப் புத்தகங்கள் வேண்டுமானால் எழுதி விடலாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், விஞ்ஞானம், எகனாமிக்ஸ் போன்ற சப்ஜெக்ட்களில் ஆயிரம் புத்தகங்கள் வெகு சீக்கிரத்தில் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சினிமா புத்தகங்களும் சுலபம் அல்ல. எங்கள் தலைவர் அண்ணா போன்றவர்கள் எழுதிவிடலாம். நானோ அமைச்சரோ எழுதினால் ஒரு கொட்டகையிலே கூட வசூல் ஆகாது. (சிரிப்பு) பாட புத்தகம் சம்பந்தப்பட்டவரை, அமைச்சருடைய அறைகூவலை ஏற்றுக்கொள்ளுகிறேன். இதிலே கோளாறு என்னவென்றால், ஊக்கம் அளிக்கப்படவில்லை. இப்பொழுதும், பரிசுகள் வழங்குவதனால், அந்தப் பொறுப்பை

[திரு. எஸ். ராமசாமி நாயுடு] [1st April 1963

11-30 a.m. மேற்கொண்டிருக்கும் இந்த ஆதாரக் கல்வியை ஓரளவு கைவிட வேண்டுமென்ற குறை ஏற்பட்டாலுங்கூட அதைப் பொருட்படுத்தாமல் மக்களுக்கு பயனபடும் என்று எல்லோராலும் கருதப்படுகிற சில கொள்கைகளைக் கொண்டுவர முன்வந்ததற்காக ஆளும் கட்சியினருடைய தைரியத்தைப் பாராட்டவேண்டும். யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் காங்கிரஸ் ஆட்சி நடத்த வேண்டுமென்று மககள் விரும்புவதால் காங்கிரஸ் சாககார் இந்தக் கல்வித் திட்டத்தைப் புனா நிர்மாணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக, தகுந்த முறையில் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும், மாற்ற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு பேசவேண்டுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. என்னைப் போன்றவர்கள் நான் என்று பேச வேண்டுமே தவிர, 'நாங்கள்' என்று பேச முடியாது. அரசியல் கட்சி ரீதியாக இந்தக் கொள்கையை விவாதிக்க ஆரம்பித்தால் அரசியல் கட்சித் தலைவர்களுக்குள் உடன்பாடு ஏற்படும் மற்றவர்களுக்குள் உடன்பாடு ஏற்படவில்லை என்று ஏற்படக்கூடும். அரசியல் கட்சியின் கொள்கையை விட்டுவிட்டு தனிப்பட்டவர்கள் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லும் ரீதியில் இந்த விவாதம் அமைய வேண்டுமே தவிர, 'நாங்கள்' என்று சொல்வது பொருந்தாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மாற்றி அமைக்கப்பட்டிருக்கும் செகண்டரி அல்லது கீழ் மட்டப் படிப்பு என்ன படிப்பு என்று சொல்வதற்குத் தெரியவில்லை. ஆங்கிலத்திலே "செகண்டரி" என்று சொல்கிறார்கள். தமிழிலே, "உயர்நிலைப்பள்ளி" என்று சொல்கிறார்கள். இதற்கும் அதற்கும் எந்தவிதமான பொருத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. செகண்டரி எஜுகேஷன் என்று சொல்லுகிறபோது உயர்நிலைக் கல்வி என்று அதைப் பேசுவோமானால் கல்வியிலே ஆரம்பக் கல்வி என்று ஒரு தரம், உயர் நிலைப் பள்ளிகளில் போதிக்கப்படும் கல்வி என்று வேறொரு தரம் என்ற வேற்றுமையை இந்தத் திட்டம் மாற்றியிருப்பது பற்றி மிகவும் சந்தோஷப்படவேண்டும். முதலாவது வகுப்பிலே படிக்கும் பையனுக்கும் பதினோராவது வகுப்பிலே இன்று படிக்கப்போகும் பையனுக்கும் பதினோராவது வகுப்பிலே சொல்லிக்கொடுக்கும் பாடத்தை அனுசரித்து முதல் வகுப்பில் போதிக்கவேண்டுமென்ற நிலைமையை ஏற்படுத்தி இருப்பது மிகவும் பொருத்தமான காரியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, ஆங்கிலத்திலே சொல்கிறார்கள் "இண்டக்கிரேட்டட் எஜுகேஷன்" என்று. தமிழிலே, 'இணைக்கப்பட்ட கல்வி' என்று வைத்துக்கொள்ளலாம். முதல் வகுப்பில் இருந்து பதினோராவது வகுப்பு வரை ஒரே ரீதி கல்வியாக போதிக்கப்பட்டு வரும் என்று நிச்சயமாகக் கொள்ளலாம். அது மிகவும் பிரயோசனமுள்ள கல்வியாக இருக்கும் என்பதைப்பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை. முன்னாலே ஆரம்பக் கல்வி ஒரு விதத்தில் திட்டமிட்டக் கல்வியாகவும், உயர்நிலைக் கல்வி வேறொரு திட்டமிட்டக் கல்வியாகவும் இருந்த காரணத்தினால் ஆரம்பக் கல்விக்கும் உயர்நிலைக் கல்விக்கும் பேதம் இருந்தது என்பது



1st April 1963] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

குறிப்பிடப்படவேண்டும். அதையெல்லாம் தவிர்த்து, எல்லாம் ஒரே முறைக் கல்வியாக ஏற்கப்பட்டுவிட்டதுபற்றி மிகவும் சந்தோஷப்படவேண்டும். ஆகவே புனர் நிர்மாணிக்கப்பட்ட இந்த திட்டத்தை நான் மிகமிக வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தை அமலாக்கும் முறையிலே முன்பு இருந்தபடி ஒரு ரீதியாகவும், இப்போதுள்ளபடி ஒரு ரீதியாகவும் சில வேற்றுமைகளைக் காணுகிறோம்.

முன்னால் பத்தாவது வகுப்பு என்று சொல்லப்பட்ட அந்த வகுப்பிலே, அதாவது பதினொருவது வகுப்பிலே ஆறு பாடங்கள் தான் பரீட்சை எழுத வேண்டியிருந்தது. தகுதி பெறுவதற்கு இன்றைக்குச் சில பாடங்கள் அதிகமாக எழுதவேண்டிவருகிறது. பாடங்கள் அதிகமாக எழுதவேண்டி வருவதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், தீர்வாக நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு அந்தப் பையன்களுக்குப் போதுமான அளவு அறிவு ஏற்படவேண்டுமென்று எண்ணுங்கால் ஆங்கிலமும், தமிழும், பொது விஞ்ஞானமும்; பொதுக் கணக்கும் 4 பாடங்கள். $4 \times 6 = 24$ பாட நேரங்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்பால் இந்திக்கு இரண்டு பாட நேரம் சொல்லிக்கொடுத்தால், அதற்கப்பால் உடல் பயிற்சிக்கு 4 பாட நேரம விட்டுவிட்டு, அப்பால் நல்லொழுக்கத்திற்கு ஒரு பாடநேரம் விட்டுவிட்டு, பின்னால் நாம் தேர்தெடுக்கும் பாடங்கள் இரண்டுக்கும் சொல்லிக்கொடுக்கும் நேரம் மிகக்குறைந்துவிடும். அதை எப்படி சரிக் கட்டுவது என்பது ஆராய்சிக்குரிய விஷயம். அதைக் கல்வித்துறை இயக்குநரும், கல்வித் துறையை நிர்வகிப்போரும் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், இந்தப் பாடங்களிலும் சரியான தேர்ச்சி பெற இடம் இல்லாமற்போய்விடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வாரத்திற்கு 35 பாட நேரங்கள் போதிக்கும் இந்த நேரத்தில் இந்தத் தேர்வு பாடங்களுக்கு நேரம் மிகமிகக் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால்தான் நான் இதைச் சொல்லிக்கொள்கிறேன். அதை எப்படி மாற்றியமைத்து மக்களுக்குப் பூர்ணமாக அறிவு ஏற்படும்படியான, ஒவ்வொரு பாடத்திலும் அறிவு ஏற்படும்படியான முறையை ஏற்படுத்தவேண்டுமோ அந்த முறையில் கல்வித்துறை இயக்குநர் அவர்களும், கல்வித் துறை அமைச்சர் அவர்களும் கலந்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு 'இன்டக்கிரேடெட் எஜுகேஷன்' என்று சொல்லும் இந்தப் பாடத் திட்டத்தைப் பற்றி மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன் என்று சொன்னேன். அதிலே 6, 7, 8 வகுப்புகள் 5 வகுப்புகளைத் தொடர்ந்த வகுப்புகளாகக் கருதப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மொத்த பாடங்களும் இணைக்கப்பட்ட பாடங்களாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. எட்டாவது வகுப்பிலே இருந்த சர்க்கார் பரீட்சையும் இன்று எடுக்கப்பட்டு விட்டது. ஆகவே, 6, 7, 8 வகுப்புகளில் படிக்கிறவர்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு வந்து சேர்வதற்கான திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று பாடத்திட்டத்தைத் தயாரித்தவர்கள் எண்ணு

[திரு. கே. ஏ. மதியழகன்] [1st April 1963

மீசய்பூர் போன்ற பல இற்றரசுகள் தோன்றின. அவர்களுக்குப் பிடிக்காத இப்படிப்பட்ட ஒரு விளைவு ஏற்படக்கூடாது என்ற கருத்தில், நவீன துக்ளக் என்ற பெயர் அவருக்கு வந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்துடன்தான் நான் சொல்லுகிறேன்.

அமைச்சர் அவர்கள் கல்விப் பிரச்னையை அரசியல் லாபத்திற்கு பயன் படுத்துவது 'ஹீனஸ் க்ரைம்'; அதிக்கிரமமான குற்றம் என்று சொன்னார்கள். கல்விப் பிரச்னையை அரசியலுக்குப் பயன்படுத்துபவர்கள் குற்றவாளிகளா என்ற விவாதத்தில் நான் ஈடுபட விரும்பவில்லை. ஆனால், ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

Mr. Deputy Speaker, Sir, I would designate it as a most heinous crime to use educational problem to serve the whims and fancies of a few individuals however great, eminent, and powerful they may be.

தனிப்பட்டவர்களுடைய ஆசாபாசங்களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், எவ்வளவு மேதாவிகளாக இருந்தாலும், எவ்வளவு அதிகாரம் படைத்தவர்களாக இருந்தாலும்—இந்தக் கல்விப் பிரச்னையை உபயோகப்படுத்துவது மிகப் பெரிய அதிக்கிரமமான குற்றம் என்று நான் சொல்வேன்.

நான் கடமையை ஆற்ற விரும்புவது எல்லாம் 50 வருட காலத்திற்கு, 100 வருட காலத்திற்குப் பின்னால் என்னுடைய கல்லறைக்குப் பக்கத்தில் ஒரு பேரனோ, பேத்தியோ இருந்து, 'தமிழ் நாட்டு அத்தாணி மண்டபத்தில் தமிழை ஒழிக்க முயற்சி நடைபெற்றது, அந்த நேரத்தில் அந்த முயற்சிக்கு என்னுடைய பாட்டன் தன்னுடைய எதிர்க் குரலை எழுப்பாது வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டான்' என்ற மாபழி என்னை சூழவிடக்கூடாது என்பதற்காகத் தான். இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று மற்ற நேரத்தில் வற்புறுத்தியிருப்பேன். அவரது கடமையைச் செய்கிறார் என்று கருதினால், இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளட்டும் என்று கூறி, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் எப்பொழுதும் உணர்ச்சி வசப்பட்டு பேசுபவர் இன்றைக்கு மிக அழகாகப் பேசினார்கள். அவருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முகமது துக்ளக்கைப்பற்றி அவர் ஒரு பெரிய சரித்திர புருஷர் என்றெல்லாம் சொன்னார்கள். இவர்கள் சரித்திரம் படித்தவர்கள். துக்ளக்கை இவ்வளவு பாராட்டிப் பேசினது சரித்திரம் படிக்காதவர்களுக்கு ஒரு அறிவூட்டுதலாக இருக்கிறது. அதற்கு என் நன்றி.

***திரு. எஸ். ராமசாமி நாயுடு:** கனம் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிக்குக் கீழ் மட்ட கல்வி புனர்நிர்மாண திட்டத்தை கல்வி இலாகா அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்ததற்கு



1st April 1963] [திரு. எஸ். ராமசாமி நாயுடு]

நன்றி தெரிவித்து அவரை பாராட்ட விரும்புகிறேன். இந்த திட்டமானது பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் எண்ணப்பாடுகளுடன் உடன்பாட்டுடன் வெளியாகி இருக்கிறது என்பது பெருமைக்குரிய மகிழ்ச்சிக்குரிய விஷயம். இந்தக் கல்விப் புனர் நிர்மாணத் திட்டத்தின் மீது இரண்டொரு வார்த்தைகள் பொதுவாகச் சொல்லிவிட்டு, மேலும் சில அம்சங்களைக் குறிப்பாக விவாதிக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டிலிருந்து ஆங்கிலேயர் வெளியேறின காலத்தில் நம்முடைய நாட்டிற்கு ஒரு கல்வித் திட்டம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் குமாஸ்தாக்களை சிருஷ்டிக்கும் கல்வித் திட்டத்தை வைத்திருந்தார்கள். அதை மாற்றி ஒரு நல்ல திட்டமாக அமைக்கவேண்டுமென்ற எண்ணம் நமக்கு ஏற்பட்ட நேரத்திலே, இந்த ராஜ்யத்தை காங்கிரஸ் கட்சியினர் மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்ட அந்த நேரத்தில், காந்தியடிகளினால் நல்லது என்று கருதப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கல்வித் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையிலே கல்வியியலை ஏற்று நடத்த முன்வந்திருக்கிறார்கள். பெருகிக்கொண்டிருக்கும் ஜனத்தொகை உள்ள இந்த நாட்டில், பல பேர்கள் ஊதியம் இல்லாது குலத் தொழிலைச் செய்துகொண்டிருக்கும் இந்த நாட்டில், மக்கள் வாழ்க்கையைச் செவ்வையாக நடத்துவதற்கு ஏதாவது ஒரு தொழிற்பற்று அவர்களுக்கு ஏற்படவேண்டும் என்ற காரணத்தினால் தொழிலை மையமாக வைத்து ஒரு கல்வித் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, அது நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைபெற்று வந்தது. ஆனால், அந்தத் திட்டத்தை முழுமனதுடன் ஏற்று நடத்த மனம் இல்லாது போனதினாலும், அந்தத் திட்டமானது சரியில்லையென்று அடிக்கடி வாயால் சொல்லிக்கொண்டு, சொல்வன்மையினால் மெய்யைக்கூட பொய்யாக அடிக்கக்கூடிய பலர் இருந்த காரணத்தினால் அந்தத் திட்டம் நல்ல முறையில் நடைபெறாமல் போய்விட்டது என்று ஒப்புக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு வேறு ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய கொள்கையோ, கோட்பாடோ நல்லவை அல்ல அல்லது பொருத்தம் உள்ளவை அல்ல என்ற காரணத்தினால் கைவிடப்படவில்லை. ஆனால், அதை ஏற்று நடத்தும் ஒரு திறமையும், சக்தியும், மனோபாவமும் மக்களுக்கு இல்லை என்ற காரணத்தினால் தற்காலிகமாகக் கைவிடப்பட்டிருக்கிறது என்றுதான் கொள்ளவேண்டுமே தவிர, கொள்கை அளவிலே இந்தத் திட்டம் புறக்கணிக்கப்படவில்லை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஆகவே, ஆளும் கட்சியினர் தாங்கள் கொடுத்த ஒரு திட்டத்தை ஓரளவு மாற்ற முன்வந்திருக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய ஏழ்மைத்தனத்தைக் காட்டுகிறது என்று மற்றவர்கள் எண்ணுகிறார்கள் என்றால், அது தப்பாகும், சரியல்ல. மக்களில் ஒரு சாரார் புரிந்து கொள்ள இயலாது என்ற காரணத்தினால் மாற்றி அமைக்க முன்வந்திருக்கிறார்கள் என்றால் அது பெருந்தன்மையைக் காட்டுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. திங்கள் உலக இருளை நீக்கும் காலத்து தனக்கு ஏற்பட்ட குறையைக் கருதாது செய்வதுபோல ஆளும் கட்சியினர் இன்று தாங்கள்

கிறார்கள். நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். அப்படியானால் 6, 7, 8 வகுப்புகளை உயர்நிலைப் பள்ளிகளுடன் தொடர்பு கொண்ட பாடத்திட்டமாக ஒரு பாடத்திட்டத்தைச் சொல்லிக்கொடுக்க இன்றைக்கு இருக்கும் சூழ்நிலை சரியாக இருக்குமா என்று நான் ஐயப்படுகிறேன். 6, 7, 8 வகுப்புகள் ஆரம்பப் பள்ளியின் தொடர்பாக உள்ளவை என்று கருதி விட்டால் ஆரம்பக் கல்வியின் ஆரம்ப காலங்களிலே இன்றைக்கு வைத்திருக்கும் விகிதாசாரமான, ஒரு ஆசிரியருக்கு 40 பிள்ளைகள் என்று பார்த்தால் 6, 7, 8 வகுப்புகளில் முறையாகப் பாடம் கற்பிக்கப் போதுமான சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும். அந்த மாதிரி முறையில் பள்ளிகள் நகரங்களில் இருந்தால் கவலை இல்லை. ஒரு வகுப்பில் 45 பிள்ளைகள் நிச்சயமாக இருப்பார்கள். இந்த முறையில் ஆரம்பக் கல்வியின் தொடர்ச்சியாக இருக்கும்போது கிராமாந்திரங்களில் விவசாயிகளுடைய பிள்ளைகள் விவசாயத்திற்கு உபயோகிக்கக் கூடிய நிலையில் இருந்து, இந்த வகுப்புகளில் படித்த பின்னால் உயர்நிலைப் பள்ளிக்கு அதிகமாக செலவில்லாமல் போய்ச் சேர வசதியுள்ள பள்ளிகளாக ஏற்பட்டு, ஆரம்பக் கல்வியை தொடர்ச்சியாக அமைத்து, ஆசிரியருக்கு 45 மாணவர்கள் என்று வைத்துவிட்டால், பல பாடங்கள் சொல்லிக்கொடுக்க வேண்டிய இந்த நெருக்கடி நிலையிலே, ஆசிரியர்களுக்குப் போதுமான சந்தர்ப்பமும் அவகாசமும் இல்லாமல் போய்விடும். அதனால் குழந்தைகள் நல்ல முறையில் படிப்பைப் பெறமுடியாது. உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாவது வகுப்பில் சேரும்போது தரம் குறைவாகப் போய்விடுமென்று எனக்குத் தோன்றுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் விகிதாசாரம் ஒரு ஆசிரியருக்கு 40 என்று வைத்துக்கொண்டாலும்கூட, 6, 7, 8 வகுப்புகளில் அதைக் கொஞ்சம் தளர்த்தவேண்டும். ஒரு உயர்நிலைப் பள்ளியில் எட்டாவது வகுப்புக்கு மேலுள்ள பள்ளியாக இருந்தால் 6, 7, 8 வகுப்புக்களுக்கு; வகுப்புக்கு ஒரு ஆசிரியரும், மற்றபடி ஒரு தமிழ்ப் பண்டிதர், ஒரு சித்திர வல்லுனர், ஒரு உடற்பயிற்சி ஆசிரியர் எல்லோரும் இருப்பார்கள். ஆகவே இந்த நாட்டுக் கிராமங்களிலே இருக்கும் 6, 7, 8 வகுப்புள்ள ஆரம்ப பள்ளிக்கு தொடர்ச்சியாக இந்த வகுப்புகளோடு இருக்கும் பள்ளிகளுக்கு இந்த விகிதாசாரத்தை எடுத்துவிட்டு கொஞ்சம் சலுகை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மும்மொழிப் பாடத் திட்டத்தைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்தி தேவையா? இல்லையா? என்பது கேள்வி. இந்த நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. அதாவது—'We call our fathers fools but our wiser sons will call us so.' இன்றைக்கு நாம் எந்தப் பாடத் திட்டத்தை ஏற்படுத்தினாலும், எந்த நிலைமைகளை உருவாக்கினாலும், நாமே நமக்குத் தோன்றிய ஒரு எண்ணத்தைக் கொண்டு உருவாக்குகிறோமே தவிர, இருபது வருஷங்களுக்குப் பின்னால் வருபவர்கள் இதை எப்படி நினைப்பார்கள் என்ற எண்ணத்துடன் உருவாக்குவது இல்லை. ஆகவே,





உருவாக்கியவர்களைக் குறை சொல்கிறவர்களும், தாங்கள் எதை உருவாக்க விரும்புகிறார்களோ, அதுவும் குறை சொல்லப்படும் காலம் பின்னால் இருக்கும் என்று எண்ணிப்பார்த்துக் குறை சொல்ல வேண்டுமே தவிர, தாங்களாகக் கற்பித்துக்கொண்ட கற்பனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று குறை சொல்லக் கூடாது. இந்தி நல்லது; நாட்டுக்குப் பொது மொழி ஆகப் போகிறது; அவசியம் படிக்கவேண்டும் என்று எண்ணுகிறோம். தாமரைத் தடாகத்தில் தேனை அருந்துவதற்கு வண்டுகள் வருகின்றன. அதுபோன்ற எண்ணம் இல்லாத சில பிராணிகளும் அந்தத் தடாகத்தில் இருக்கின்றன. தமிழ்ப் புலவர் ஒருவர்—

"கூனிரால் பாய குவளை தவளைவாய்
தேனிரால் பாயும் திருநாடா"

என்று சொல்லியதுபோல், குட்டையைக் குழப்பியாவது தாமரைத் தடாகத்துப் பிராணிகளுக்கு இந்தத் தேனைக் கொடுக்கலாமா என்ற எண்ணத்திலே இந்தி இன்றைக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்தி அவசியமான மொழி. இதைப் படிக்க முடியுமா என்கிற கவலை இல்லை. மக்களாய்ப் பிறந்தவர்கள் எல்லோரும் 100-க்குத் 90 பேர் அறிவாளிகளாகத்தான் இருக்கிறார்கள். அறிவில் குறைந்தவர் அல்ல. 4,000, 10,000 பாட்டுகளைக்கூட மனப்பாடம் செய்திருக்கும் பெரியவர்களும் இருக்கிறார்கள். ஆனால், என் போன்றவர்கள் இரண்டு பாட்டுக்கள்கூட பதிந்து வைத்திருக்க முடியாமலிருக்கலாம். சிலரால் மூளையிலே ஏற்றுக்கொள்ள முடியாது, முறையாகத் திருப்பிக் கொடுக்க முடியாது என்பதை வைத்துக் கொண்டு, சிறார்களின் மூளையிலும் ஏறாது என்று கொள்ள வேண்டியதில்லை. இந்தி என்பது சிறார்களின் மூளையில் செலுத்தக்கூடிய வஸ்துதான் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

**திரு. எ. சுவாமிதாஸ்:** மதிப்புமிக்க உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி முறையைபற்றி எனது ஒருசில கருத்துக்களைக் கூறலாம் என்று நான் ஆசைப்படுகிறேன். பாடத் திட்டத்தைப் பொறுத்த அளவில், தமிழ், ஆங்கிலம், இன்னொரு மொழியோ—இந்தியோ ஏனைய பிராந்திய மொழியோ—கோர் ஸப்ஜெக்ட்களாக பொது விஞ்ஞானமும், பொதுக் கணிதமும், எலெக்டிவ் சப்ஜெக்டாக சரித்திரமும், புவியியலும் இருக்கும் என்று கொடுத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பொதுவாக எல்லா ஆசிரியர்களும் வரவேற்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். என்னைப் பொறுத்த அளவில், பாட அமைப்பு மிகவும் பாராட்டக் கூடியதாக இருக்கிறது என்றுதான் சொல்லுவேன். ஆனால், எலக்டிவ் பாடமாக பூகோளப் பாடமும், சரித்திரப் பாடமும் கொடுக்கப்பட்டிருப்பதைக் கட்டாயப் பாடமாக வைத்து, அவற்றுக்கு தேர்வு வைக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1st April 1963

தமிழைப் பொறுத்தவரையில், தேர்வுக்கு 40 சதவிகிதம் மார்க் வேண்டும். ஆங்கிலத்திற்கும் இன்றைய அமைப்பில் தேர்வுக்கு 40 சதவிகிதம் தேவை இருக்கிறது. நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில் 40 சதவிகிதம் என்று இருப்பதை 35 சதவிகிதமாகக் குறைத்து மாற்றியமைக்கலாம். தமிழுக்கும் இரண்டு பேப்பர்கள் வைத்து, முதல் பேப்பரில் உரைநடைப் பாடம், செய்யுள் பாடம், அவைகளோடு அமைந்த இலக்கணப் பாடத்திற்கும் பரீட்சை நடத்த வேண்டும். இரண்டாவது பேப்பரில் துணைப் பாடம் தவிர, பொதுவான இலக்கண அறிவு மாணவருக்கு இருக்கிறதா என்பதைச் சோதிப்பதற்காக பிழை திருத்தங்கள், சொற்பிழை திருத்தங்கள், வாக்கியப் பிழை திருத்தங்கள் ஆகியவற்றையும் வைத்துக் கொண்டு, பாடல்களுக்குப் பொருள் கேட்கலாம். பாடல்களின் சில கருத்துக்களைக் கொடுத்து, வேண்டுமென்றால் அதற்கேற்றவாறு பாடல்களை அமைக்கவும் செய்யலாம். இப்படி முதல் பேப்பர், இரண்டாம் பேப்பர் என்று கொடுத்திருக்கவேண்டும்.

அதேபோல், தமிழ்ப் பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில், பாடப் புத்தகக் கமிட்டியார் நன்கு சீர்தூக்கிப் பார்த்து, பாடப் புத்தகங்களை அமைக்கவேண்டும். ஏறத்தாழ ஏழு ஆண்டு ஆசிரியர் அனுபவம் எனக்கு இருக்கிறது. பல பாடப் புத்தகங்களைப் பார்க்கும்போது—க்ரூப் தமிழ் பாடப் புத்தகங்களைத் தவிர—எஸ். எஸ். எல். ஸி.-க்கு வைத்திருக்கும் பாடப் புத்தகங்களில்கூட சொற் பிழைகள், இலக்கணப் பிழைகள், வாக்கியப் பிழைகள் காணப்படுகின்றன. குறிப்பாகச் சொல்லப்போனால், ஆங்கிலத்தில் துணைப் பாடங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. மொழிப் பாடப் புத்தகமாக வைக்கும்போது, அது நன்றாகச் சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும். அதில் இலக்கணப் பிழையோ, சொற்பிழையோ இருக்கக் கூடாது. ஆங்கிலப் புத்தகத்தை எடுத்துக்கொண்டால், தமிழ்ப் புத்தகத்தில் காணக்கூடிய அளவுக்கு ஆங்கிலப் புத்தகத்தில் சொற் பிழை, இலக்கணப் பிழை இல்லை. தமிழில் மட்டும் ஏன் இம்மாதிரி பிழைகளோடு பாடப் புத்தகங்கள் அமைக்கவேண்டும்? நல்ல அறிஞர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் இருக்கிறார்கள். புலமை மிக்கவர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பாடப் புத்தகக் குழுவிலே கூடிய வரையில் அமைக்கவேண்டும். குறிப்பாகச் சொல்லப்போனால், அனுபவ மிகுந்த ஆசிரியர்களில் ஒருவருக்காவது பாடப் புத்தகக் கமிட்டியில் இடம் கொடுத்து, நன்றாகப் பரிசீலனை செய்த பிறகு தான் புத்தகங்கள் வெளியிடப்படவேண்டும்.

'ஜெனரல் ஸயன்ஸ்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாங்கள் படிக்கிற காலத்தில், 'ஜெனரல் ஸயன்ஸ்' என்றாலும், அதிலே இரண்டு விடைத்தாள்கள் எழுதவேண்டும். முதல் பேப்பர், இரண்டாவது பேப்பர் என்று இருக்கும். முதல் பேப்பரில் கெமிஸ்ட்ரியும் ஃபிஸிக்ஸும் இருக்கும். இரண்டாவது பேப்பரில் பாட்டனி, ஸுவாலஜி ஆகிய இரண்டும் இருக்கும். அதே போல் இப்பொழுது தனித் தனியாகக் கொடுத்திருந்தால், பிற்



1st April 1963] [திரு. எ. சுவாமிதாஸ்]

காலத்தில் விஞ்ஞானம் படிக்க விரும்புகிறவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். பொதுப் பாடமாக ஜெனரல் ஸயன்ஸ் என்று போட்டு விட்டு, பட்டப் படிப்புக்குச் செல்லும்போது சில மாணவர்கள் என்ன பாடங்கள் படிக்கவேண்டுமென்று நிலை தெரியாமல் போய்விடுகிறார்கள். அத்தகைய கருத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் 'சோஷல் ஸ்டடீஸ்' என்று இருந்ததை புவியியல், சரித்திரம் என்று மாற்றியமைத்திருப்பது மிகவும் வரவேற்கத் தக்கது.

மொழியைப் பொறுத்தவரையில், எழுத்து வடிவமாக அமைப்பதற்கு 'காப்பி ரைட்டிங்' தேவை. அதையும் ஸிலபஸிலே புகுத்த வேண்டும். பல பள்ளிக்கூடங்களில் ட்ராயிங் கற்றுக் கொடுப்பதில்லை. அதுவும் கட்டாயமாக இருக்க வேண்டும். எழுத்து வடிவமாக எழுதுவதற்கு காபி ரைடிங்கும், படங்கள் (மேப்) அழகாக வரைவதற்கு ட்ராயிங் பயிற்சியும் தேவை. 'க்ராஃப்ட்' பாடம் என்றிருப்பது ஆண் மாணவர்களுக்குத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். சில பள்ளிக் கூடங்களில் 'க்ராஃப்ட்' பீரியட்டில் ஆங்கிலம் கற்றுக்கொடுக்கிறார்கள் ஆங்கில ஆசிரியர்கள். பெண்களுக்கு 'ஹோம் ஸயன்ஸ்' வைத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. பெண்களுக்கு ஹோம் ஸயன்ஸ் கட்டாயம் வேண்டும். பெண்கள் எந்தப் பாடத்தையும் எளிதாகக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ஆண்களுக்கு கைத்தொழில் பயிற்சி வேண்டுமென்று க்ராஃப்ட் பாடம் வைத்திருந்தாலும், அவர்கள் அதை ஊன்றிப் படிப்பது கிடையாது. ஆகவே, அவர்களுக்கு அத்தகைய க்ராஃப்ட் பாடம் வைக்காமல் 'ட்ராயிங்' கட்டாயமாக வைக்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆங்கிலத்திற்கு 35 மார்க் இருந்தால் மிக எளிதாக இருக்கும். மாணவர்களுக்கும் நன்றாக இருக்கும். இந்தியைப் பொறுத்த வரையில், பல கருத்து வேற்றுமைகள் இந்த அவைக்குள்ளே இருந்துகொண்டிருக்கின்றன. நாம் எந்தக் கொள்கையைப் புகுத்தவேண்டுமென்றாலும் திட்டவட்டமாக இருக்கவேண்டும். திட்டவட்டமாக இல்லாமல், 'இந்தியிலே மாணவர்கள் பரீட்சை எழுதவேண்டும், அதே நேரத்தில், பாஸ் ஆவதற்கோ, காலேஜ் அட்மிஷனுக்கோ அந்த மார்க் தேவைப்படாது, மாடரேஷனுக்குத் தேவைப்படும்' என்றால், இந்தி மாணவர்கள் அதை மனதில் வைத்துக்கொண்டு, அதை ஊன்றிப் படிக்க இடமில்லாமல் போய் விடும். எந்தப் பாடமாக இருந்தாலும் ஒரு குறைந்த அளவாவது மார்க் வைத்துவிடவேண்டும். 20 சதவிகிதமாவது கட்டாயமாக மார்க் எடுக்க வேண்டுமென்று இருந்தால்தான் ஓரளவுக்காவது பாடத்தை ஊன்றிக் கவனிப்பார்களேயொழிய, மற்றபடி மாணவர்கள் கவனிக்கமாட்டார்கள். பரீட்சை இருந்து, குறிப்பிட்ட மார்க் எடுத்தால்தான் பாஸ் ஆக முடியும் என்று கட்டாயம் இருந்தால்தான் கற்றுக்கொடுக்கும் ஆசிரியரை மாணவர்கள் மதிக்கிறார்கள்.

செலக்ஷன் பரீட்சை வேண்டாம் என்பதை மாணவர்கள் வரவேற்பார்கள் என்றாலும்கூட, கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்

கூறும் பள்ளிக்கூடங்களும் வரவேற்கக்கூடியதாக இல்லை. பத்தாவது ஸ்டாண்டர்டோ, பதினோராவது ஸ்டாண்டர்டோ, எதுவாக இருந்தாலும், படித்தாலும் படிக்காவிட்டாலும் இறுதிப் பரீட்சைக்கு தகுதியுடையவர்களாகிவிட்டோம் என்று எண்ணி, பல மாணவர்கள் படிக்காமலிருந்துவிடலாம். பள்ளிக்கூடத்தில் கண்டிப்பும், கட்டுப்பாடும் இல்லையென்றால், மாணவர்கள் படிக்க மாட்டார்கள். கிராமாந்திரப் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் இத்தகைய கட்டுப்பாடு இருந்தால்தான் மாணவர்களை ஓரளவுக்காவது படிக்க வைக்க முடியும். 'செலக்ஷன் இருக்கிறது, நன்றாகப் படி,' என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கட்டுப்பாடு இருந்தால்தான் பாடங்களைப் படிப்பார்கள். பட்டணத்து மாணவர்கள் வேண்டுமானால் தாங்களே படித்துவிட முடியும். ஆனால், கிராமப் பகுதியிலிருந்து வரும் மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்களைக் கொஞ்சம் அச்சுறுத்தித்தான் படிக்க வைக்கவேண்டும். இல்லையென்றால் படிக்க மாட்டார்கள். ஆகவே, செலக்ஷன் முறையைப்பற்றி இன்னும் கொஞ்சம் பரிசீலனை செய்வது நலமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். பதினோராவது ஸ்டாண்டர்டில் வரும் மாணவர்களைப் பொறுத்தவரையில், செலக்ஷன் பரீட்சை இல்லாவிட்டால் அவர்கள் ஒன்றிக் கவனிக்காமல் போய்விடுவார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தனியார் பாடசாலைகளைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தனியார் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் சென்னை மாகாணத்தில் பாடசாலைகளுக்குக் கிராண்ட் கொடுத்து வருகிறார்கள். கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கையாளப்படக்கூடிய முறை நல்லபடியாக இருக்கிறது. அங்கு ஆசிரியர்கள் நேரடியாகவே அரசாங்கத்திலிருந்து சம்பளத்தைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது. இங்கே அப்படி இல்லை. மானேஜர்கள் ஓர் ஆண்டுக்குரிய கிராண்டை வாங்கிக்கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை எப்போதாவது கொடுத்தால் உண்டு, இல்லையென்றால் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் எங்கள் மாவட்டத்தில் அப்படி இல்லை. ஆசிரியர்கள் அரசாங்கத்திலிருந்து முதல் தேதியன்று பில் போட்டுச் சம்பளத்தை வாங்கிக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த முறையை எல்லா மாவட்டங்களிலும் புகுத்தினால் நன்மையாக இருக்கும்.

இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். மானேஜ்மெண்ட் பள்ளிகளில் கூடுதலாக தேர்வைப் பார்க்க முடியும். அதை மனதில் கொண்டு எந்த எந்த இடத்தில நல்ல மானேஜர்கள் இருக்கிறார்களோ அவர்கள் மேலும் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டால் அவர்களுக்கு அனுமதி கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பேசிக் ஸ்கூலைப் பொறுத்த அளவில் தொழில் மூலம் கல்வி என்ற நல்லெண்ணத்தோடு ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில் மூலம் கல்வி இதுகாறும் நல்ல முறையில் நடத்தப்படவில்லை. தொழிற் கல்வி கட்டாயம் வேண்டும். அதை எப்படியாவது ஆறு முதல் எட்டு வகுப்பு வரையில் கட்டாயமாகச் செய்ய வேண்டும்.



பள்ளிக்கூடங்களில் லெபரடரிஸ் இருக்கின்றனவா என்பதை முதலில் கவனிக்கவேண்டும். அப்போதுதான் சயன்ஸ் போன்ற பாடங்களைக் கற்றுக் கொடுக்க வசதியாக இருக்கும். தற்போது பல பள்ளிக்கூடங்களில் லெபரடரிஸ் இருப்பதில்லை. இன்ஸ்பெக்ஷன் நேரத்தில் மட்டும் சில பொருள்களை வாங்கி வைத்து விடுகிறார்கள். சயன்ஸ் போன்ற பாடங்களையெல்லாம் நேரடியாக எக்ஸ்பரிமெண்ட் மூலம் கற்றுக்கொடுத்தால்தான் மாணவர்களின் மனதில் நன்றாகப் பதியும்.

ஹையர் கிரேடு டிரெயினிங்கை எடுத்துவிடப்போவதாகச் சொன்னார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியர்களே எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இருக்கவேண்டும்.

(மணியடிக்கப்பட்டது.)

* திரு. மு. கருணாநிதி: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டுள்ள கல்விக் கொள்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று முன் தினம் இந்தக் கொள்கையைப் பற்றி ஆளும் கட்சி உறுப்பினர் ஈரோடு நண்பர் அவர்கள் பேசும்போது, 'கல்வியைப் பிடித்திருந்த சனி தொலைந்தது' என்று சொன்னார்கள். அவர் பேசிய அந்தத் தினம்கூட சனிக்கிழமைதான். சனி தொலைவதற்கு ஞாயிறு காரணமாக இருந்து கல்விக் கொள்கை என்ற திங்கள் இப்போது வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறக்கூடும். சனி தொலைவதற்குக் காரணமாக இருந்த ஞாயிறு என்பதற்குச் சூரியன் என்றுகூடப் பொருள் உண்டு. அந்தச் சூரியனை உதயசூரியன் என்று நான் குறிப்பிடுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் கருதிக்கொண்டால் அதை நான் மறுக்க விரும்பவில்லை. இந்தக் கல்விக் கொள்கை திங்களாக வந்திருக்கிறது என்று நாம் எண்ணிக் கொள்வோமானால்—திங்கள் என்றால் சந்திரன், அந்தச் சந்திரனிலே களங்கம் இருப்பது போல் கல்விக் கொள்கையிலே இருக்கின்ற களங்கங்களை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. நிலவிலே களங்கம் இருப்பதால் அதனுடைய நேர்த்தி கெட்டுவிடுவதில்லை என்று வாதிக்கலாம். நிலவிலே களங்கம் இருக்கலாம். ஆனால் கல்வியிலே களங்கம் இருக்கக் கூடாது. அந்தக் காரணத்தினாலேதான் "கற்க கசடற. . . ." என்று பெரியவர்கள் கூறினார்கள். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று நம்முடைய நாட்டிலே பழமொழி வழங்கி வருகிறது. கண் எனத்தக்க எண்ணும் எழுத்தும் ஏறத்தாழ 15 ஆண்டு காலக் காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு முறைகளை அடிக்கடி மாற்றுகின்ற காரணத்தால் எப்பாடுபடுகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்த 15 ஆண்டு காலத்தில்

கல்விக்காகச் செலவிடப்பட்டிருக்கின்ற தொகை ஏறத்தாழ 150 கோடி ரூபாய் அல்லது 200 கோடி ரூபாய் இருக்கும். ஆனால், இவ்வளவு பெருந் தொகையைக் கோடிக் கணக்கில் செலவிட்டும், ஏற்பட்டிருக்கின்ற திட்டங்கள் அடிப்படையிலே ஏற்பட்ட குழப்பமோ, மொழிக்கொள்கை அடிப்படையில் உள்ள குழப்பமோ நீங்கிற்றா என்றால் இல்லை.

கடந்த 15 ஆண்டு காலமாக, முதல் தடவை ஏற்பட்டது காங்கிரஸ் சர்க்கார், அடுத்தது கழகத்திலுடைய சர்க்கார், அடுத்தது கம்யூனிஸ்டு சர்க்கார், அடுத்தது காங்கிரஸ் சர்க்கார் என்ற அளவிலே இங்கு சர்க்கார் அமையவில்லை. ஒரே நிலையான சர்க்கார் 15 ஆண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பிலே இருந்து கல்விக்காக 150 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் அளவுக்குப் பெருந் தொகையைச் செலவழித்து, அதற்குப் பிறகும் இந்தத் துறையிலே குழப்பந்தான் மிச்சம் என்ற நிலைமை இருக்குமானால், உள்ளபடியே எங்களுடைய வருத்தத்தை எப்படித் தெரிவிக்காமல் இருக்க முடியும்? எத்தனை வருஷம் படிப்பது என்பதிலே குழப்பம் ஏற்பட்டு, 11 ஆண்டாக இருந்தது 10 ஆக மாற்றப்பட்டு, மறுபடியும் 11 ஆண்டு என்ற நிலைமைக்குக் குழப்பமும், சரித்திரமும் புவியியலும், சமூகப் பாடம் என்கிற நிலைமையிலே மாற்றப்பட்டு, பிறகு சமூக இயல் பாடங்கள் சரியானவையாக இல்லையென்ற காரணத்தால் மறுபடியும் சரித்திரம், புவியியல் என்று செய்ய வேண்டுமென்ற குழப்பமும், விருப்பப் பாடம் இருந்து, இடையிலே நீக்கப்பட்டு மறுபடியும் வேறு உருவில் வந்திருக்கிற குழப்பமும், ஆறும் வகுப்பிலிருந்து ஆங்கிலம் படித்தால் போதும் என்று சொல்லி, மறுபடியும் மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கிலம் படிக்கவேண்டுமென்ற இத்தகைய குழப்பமும், வடி கட்டும் முறை முதலிலே இருந்து பின்னர் நீக்கப்பட்டு, மறுபடியும் புகுத்தப்பட்டு, மறுபடியும் நீக்கப்படுகிற குழப்பமும், கல்வியைப் பொறுத்த அளவிலே கடந்த 15 ஆண்டு காலத்திலே ஏற்பட்ட பயங்கரமான குழப்பங்கள் ஆகும். பயங்கரமான குழப்பங்கள் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், கல்வியிலே இளம் சிறார்கள், பிஞ்சு மனம் படைத்தவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதுதான். அவர்கள் ஈடுபட்டிருக்கின்ற இந்தத் துறையிலே அவர்களுடைய எதிர் கால வாழ்க்கையோடு விளையாட்டு நடத்துவது போல் வேதனையான விளையாட்டுக்களைக் கடந்த 15 ஆண்டுக் காலமாக ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவிலே நடத்தி வருவது முறைதானா, தர்மமா, நியாயமா, நேர்மையா என்பதை உள்ளபடியே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அன்றையதினம் புலவர் கோவிந்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, 'அப்படியானால் இப்போது ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா?' என்று கேட்டார்கள். அது வேறு பிரச்னை. இப்போது ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைக் குறித்து எங்களுடைய கருத்தைத் தெரிவிக்கும் நேரத்தில், இப்படிப் பலவிதமான மாற்றங்களை, 15 ஆண்டு காலமாக ஒரே நிலையான சர்க்காராக





இருந்தும் நீங்கள் செய்ததற்கு என்ன காரணம்? ஆளும் கட்சி கனம் உறுப்பினர் திரு. பழனி அவர்கள், 'இப்போது வந்திருக்கும் திட்டந்தான் ஒழுங்கான முறையில் போடப்பட்ட அருமையான திட்டம், இந்தத் திட்டத்தைத் தயாரித்தவர்கள் அறிஞர்கள் என்று புகழத்தக்கவர்கள்' என்று சொன்னார்கள். அப்படியானால் போன தடவை திட்டம் போட்டது யார்? இப்போது போடப்பட்ட திட்டந்தான் ஒழுங்கானது, அறிவுடைமைக்கு ஏற்ப போடப்பட்ட திட்டம், இதைப் போட்டவர்கள்தான் அறிஞர்கள் என்றால், இதற்கு முன்பு குழப்ப நிலைமையில் திட்டங்களைப் போட்டவர்கள் யார்? வேடிக்கையாக ஒவ்வொரு தடவையும் ஆளும் கட்சியின் சார்பிலே கல்வித் துறையிலே குழப்பங்களை ஏற்படுத்துவதும், கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக அதற்கு ஆளும் கட்சியினர் ஆதரவு கொடுப்பதும், அவ்வப்போது மாறுதல்களைச் செய்வதும் நியாயந்தானா? 'அப்படியானால் இந்த மாறுதலை, இப்போது ஏற்பட்டிருக்கும் மாறுதலை நீங்கள் விரும்பவில்லையா?' என்று புலவர் கோவிந்தனைப் பார்த்துக் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். சாதாரண உதாரணந்தான். வீட்டிலே சாப்பிடுகிற நேரத்தில் சமையல்காரன் குழம்பிலே புளியை அதிகமாகக் கரைத்து விட்டான் என்று சொன்னதும், அதைச் சரிக்கட்ட உப்பைப் போட்டு, உப்பு அதிகமாகிவிட்ட காரணத்தால் தண்ணீரைக் கொட்டி, பிறகு புளி, உப்பு இல்லாத காரணத்தால் மறுபடியும் அவற்றைப் போட்டு 'ஏற்றுக்கொள்ளுகிறீர்களா?' என்று கேட்டால், அன்றைய தினத்தில் வேண்டுமானால் சாப்பாட்டை ஏற்றுக் கொள்ளலாமே தவிர, சமையல்காரனைத் தொடர்ந்து ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதைப்பற்றி யோசிக்கத்தான் வேண்டும். இப்படிப்பட்ட குழப்ப நிலைமையில் 15 ஆண்டு காலமாக 200 கோடி ரூபாய் செலவழித்த பிறகு, இப்போது மாறுதல் செய்து ஒழுங்கான திட்டத்தை வகுத்து இந்த மன்றத்திலே வைத்திருக்கும் நிலையில், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அத்தனை பேருடைய உள்ளத்து உணர்ச்சிகளுக்கும் மதிப்பளித்து இந்தத் திட்டத்தை நிலையாக ஆக்குவதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டுக் காட்டினேன்.

கல்வித்துறை வட்டாரங்களில் புனர் பரிசீலனை செய்யப்பட்டு 12-00 noon. தான் இப்போது இத்திட்டம் வந்திருப்பதாக கொடுக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. புனர் பரிசீலனை செய்யப்பட்டதின் அழகு எப்படியிருக்கிறது? புனர் பரிசீலனை செய்யப்பட்டு மன்றத்திற்கு வந்த பிறகு சரித்திரத்திலும், புவியியலிலும் பரீட்சை வேண்டுமென்று திருத்தம் தரப்படுகிறது. இந்த வெள்ளை அறிக்கை வெளியான பிறகு தமிழகத்தில் உள்ள ஆசிரியர்களும், கல்வித்துறை நிபுணர்களும் அவர்கள் கோரிக்கைகளை அதற்குப் பிறகுதான் தெரிவிக்க நேரம் தரப்பட்டு சரித்திரத்திலும் புவியியலிலும் பரீட்சை வேண்டுமென்று வலியுறுத்துகிற நிலையில் திருத்தம் ஆளும் கட்சியினரால் இன்றையதினம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போதாவது

ஒழுங்கான முறையில் புனர்பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா? கலக்க வேண்டியவர்கள் அத்தனை பேர்களும் கலக்கப்பட்டிருக்கின்றனரா? அடிமட்டத்திலுள்ள ஆசிரியர்களின் எண்ணங்கள் சரியாக அறியப்பட்டிருக்கின்றனவா? என்ற ஐயப்பாடு திடீரென்று திருத்தம் வந்த பிறகு எனக்கு ஏற்படுகிறது. இத்திட்டப்படி மூன்றும் படிவத்திலுள்ள மாணவனின் பாடத்திட்டங்கள் ஏறக்குறைய ஏழாம் வகுப்பு மாணவனுக்கு இருக்கிறது. மூன்றும் படிவ மாணவன் ஒன்பதாம் வகுப்புக்குச் செல்லமுடிகிறது. ஏழாம் வகுப்பு மாணவனுக்கு மூன்றும் படிவ பாடத்திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டிருந்தாலும், ஏழாவதில் இருந்து எட்டாவதுக்குத்தான் செல்ல முடிகிறது. இனி ஒரு பரிதாப நிலை. சென்னை போன்றயிடங்களில் மூன்றும் படிவத்தில் இடம் இல்லாததால் ஏழாம் வகுப்பிற்குச் சேர்க்கப்பட்டு இன்றைய தினம் கல்விக் கொள்கை மாற்றத்தால் மூன்றும் படிவத்தில் இடம் இல்லாது ஏழாம் வகுப்பிற்குச் சென்ற மாணவன் எங்கே செல்வது என்ற கவலை மாணவர் வட்டாரத்தில் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன தீர்வு காணப்போகிறாரோ தெரியவில்லை. அவர்கள் பதிலில் அதைக் கூறுவார்கள் என்று ஆவலோடு நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, வட்டார மொழிகளை போதனா மொழிகளாக ஆக்க வேண்டும், பயிற்சி மொழிகளாக ஆக்கவேண்டுமென்ற கொள்கை இன்று நேற்றல்ல ஏற்பட்டது. இந்த மன்றத்தில் உள்ள ஆளும் கட்சி கனம் அங்கத்தினர்களுக்கு நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். "நாஷனல் லாங்குவேஜ் பார் இந்தியா" என்ற புத்தகம் 1941-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் மதிப்பு மிகுந்த பண்டித நேரு அவர்கள் எழுதியுள்ள மொழிப்பற்றிய கட்டுரையில் குறிப்பிடுகிறார், "பல்கலைக்கழகக் கல்வி அந்தந்தப் பிராந்திய, வட்டார மொழியில் இருந்து தீரவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். இப்படி எடுத்துரைத்திருப்பது நேரு அவர்கள் மட்டுமல்ல. நாவலர் சோமசுந்தர பாரதி அவர்கள் 20—5—1948 இல் திருச்சி வானொலியில் பேசும்போது குறிப்பிட்டார்கள் 'ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி முதலிய பிறமொழிகளில் நிரம்பட எழுதிய அறிவு நூல் அனைத்தையும் மொழி பெயர்த்து உதவத் தூண்டுதல் வேண்டும். இன்னும் மேதைகள் ஆராய்ந்து தெளிந்த அரும்பொருள் பற்றி அவர்களைக் கொண்டு புதிய நூல்களை ஆக்குதல் வேண்டும். இருவகை நூல்களும் உயர்தரப் பள்ளிகள், பெரிய கல்லூரிகள் எங்கும் அருந்திறனுடைய பேராசிரியரால் பயிற்றப்படுதல் வேண்டும். அயராது இந்த முறை கையாளின் உயர்தரக் கல்விக்கு ஆங்கிலப் பயிற்சியை ஐயிரண்டாண்டில் அறவே விடலாம்". பத்து ஆண்டுகளில் ஆங்கிலப் பயிற்சியை அறவே விடும் அளவு இந்த நூல் எழுதப்படவேண்டுமென்று நாவலர் சோமசுந்தர பாரதியார் கூறியிருக்கிறார் 1948-இல். 1947-இல் காங்கிரஸ் ஆட்சி அமைகிறது. அதற்கு முன்பே நேரு அவர்கள் எழுதிய





புத்தகத்தில் அந்தந்த வட்டார மொழிகளில்தான் கல்லூரிப் பயிற்சி மொழி இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு நாட்டில் தொழில்கள் வளரவும், திட்டங்கள் பெருகவும், அறிவு செழிக்கவும், ஆற்றல் பொங்கிடவும் அடிப்படையானது கல்வி. ஆக, பயிற்சி மொழி அந்தந்த வட்டார மொழியில், அந்தந்தப் பிராந்திய மொழியில் இருக்கவேண்டுமென்பது நேரு போன்ற பெரும் தலைவர்கள் ஒப்புக் கொண்ட உண்மை. ஆனால், கல்லூரிகளில் வட்டார மொழியில் கல்வியைப் பரப்ப என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது? முயற்சி எடுத்தோம்; ஆனால் அந்த முயற்சிகள் வெற்றி அளிக்கும் அளவிற்கு அவகாசம் இல்லாமல் போய் விட்டது, தயக்கம் ஏற்பட்டுவிட்டது என்றெல்லம் இன்றைய தினம் நம் கல்வி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கல்லூரித் தமிழ் குழு 1960-ஆம் ஆண்டில் இந்த மன்றத்தில் சமர்ப்பித்த செயல் நிலை அறிக்கையில் தமிழ் குழுத் தலைவர் திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் சமர்ப்பித்த கல்லூரி செயல் நிலை அறிக்கையில் என்ன குறிப்பிடுகிறார்கள்? ஆசிரியர்கள் இந்த போதனா மொழியில் அக்கறை காட்டவில்லையா? அக்கேள்விக்கு திரு. தாமோதரன் அவர்கள் அறிக்கையில் அழகாகப் பதில் அளித்திருக்கிறார்கள். "தமிழில் கல்லூரிப் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்களின் ஆர்வமும், தகுதியும் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளக் குழு விரும்பிற்று. அதன்படி ராஜ்யத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. பல்வேறு கல்லூரிகளிலிருந்து வந்த பதில்கள் கல்லூரித் தமிழ் குழுவினருக்கு மிகவும் உற்சாகமூட்டக் கூடியவைகளாக இருக்கின்றன. தமிழில் பாடங்களை நடத்துவதற்கு ஆசிரியர்கள் ஊக்கம் காட்டியிருக்கின்றனர். ஓரளவேனும் தயக்கம் இருக்கக் கூடும் என்று நினைத்த குழுவினருக்கு இந்த மகிழ்ச்சியான முடிவு எதிர்பாராததாக அமைந்தது" என்று சொல்லியிருக்கிறார்கள், ஆசிரியர்கள் அக்கறையோடு இதை வரவேற்கிறார்கள் என்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்? கலைச் சொற்கள் கிடைக்கவில்லையா? தமிழில் பயிற்சி மொழியை, ஆர்வத்தோடு பரப்ப கலைச் சொற்கள் கிடைக்காமல் போய் விட்டனவா? அதுபற்றியும் திரு. தாமோதரன் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "கல்லூரித் தமிழ்க் குழுவினரின் முதல் கவனம் கலைச் சொல்லாக்கத்தில்தான் சென்றது. கல்லூரிகளில் இருந்தும் கல்வி நிபுணர்களிடமிருந்தும் பட்டியல்கள் உரிய காலத்தில் திரும்பி வந்தன. அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்ட கல்வி நிபுணர்கள் தங்கள் கருத்துக்களையும் திருத்தங்களையும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள பெருமக்கள் இவ்வாறு ஒத்துழைத்த செயல், குழுவினருக்கு மிகவும் ஊக்கம் ஊட்டுவதாக இருந்தது" என்று கூறியிருக்கிறார்கள். பிறகு என்ன வேண்டும்? அப்படிக் கிடைத்த கலைச் சொற்களைப் பரப்ப வழியில்லாமல் போய் விட்டதா? அதற்கும்

பதில் தருகிறார். "இவ்வாறு முடிவு செய்யப்பட்ட கலைச் சொற்களை ஒன்று சேர்த்து சென்னையில் உள்ள அரசாங்க அச்சுக் கூடமும், கோவை கலைக் கதிர் அச்சுக்கூடமும், 14 பட்டியல்களை மூன்றே வாரங்களில் அச்சிட்டுக் கொடுத்தன" என்று குறிப்பிட்டிருக்கிறார். பிறகு என்ன? பாட நூல் வெளியிட கலைச் சொற்கள் அமைய வழி காணவில்லையா? "பாட நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும், ஒவ்வொரு குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுக்கள் தகுந்த பாட நூல்களைத் தேர்ந்தெடுத்து தெரிவித்தது. முதலாண்டில் புத்தகங்களுக்கு அதிக கிராக்கி இருக்கமுடியாது என்பதால் பிரசுர கர்த்தாக்கள் தயக்கம் காட்டினர். 1963-ல் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்சி மொழி ஆகும்போது புத்தகங்களுக்கு நல்ல கிராக்கி இருக்குமென்று குழு உறுதி கூறியது". புத்தகங்களை வெளியிட்டார்களா? இடையில் ஒன்று சொல்லப்படுகிறது. லண்டன் போன்ற நகரங்களில் உள்ள இந்திய நாட்டு பிரசுரகர்த்தாக்கள் பிரதிநிதிகள் காட்டிய தாமதத்தால் மொழி பெயர்ப்பிற்கான உரிமை கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அது பற்றி கூறும்போதும், "மொழி பெயர்ப்பு உரிமை பெறுவதற்கு சில நூல்களுக்குத் தாமதம் ஏற்பட்டது. ஆனால், இப்படி நேர்ந்து விட்டால் என்ன செய்யலாம் என்று ஒரு மாற்றுத் திட்டத்தை குழு முதலிலேயே எண்ணி வைத்திருந்தது. அதன்படி அந்தந்தப் பாடத்தில் சிறந்த புலமையும் தெளிவும் கொண்ட நிபுணரைத் தேர்ந்தெடுத்து தமிழில் புத்தகம் எழுதச் செய்வது என்று முடிவாயிற்று. குழுவின் முயற்சி வீண் போகவில்லை. வெளியிடுவோரும் நூல் ஆசிரியர்களும் காட்டுகின்ற ஆர்வத்தை பார்க்கும்போதும் அரசாங்க ஆதரவையும் தாராள மனப்பாங்கையும் காணும்போதும், ஜூன் மாதத்துக்குள் சிறந்த நூல்களை வெளியிடுவதில் வெற்றி காணமுடியும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். 1960 ஜூனுக்குள் நூல்கள் வெளியிடுவதில் வெற்றி காணலாம் என்று கூறியிருப்பதுபோல் நூல்கள் வெளிவந்திருக்கின்றனவா? 52 புத்தகங்களின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. பொருளாதாரம், பொது அறிவியல், வரலாறு, இந்திய அரசியல் அமைப்பு . . இன்ன பிற 52 நூல்களின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. 1961-62-இல் அரசாங்கச் செலவில் 57,883 ரூபாய் செலவில் 37 புத்தகங்கள் தயாராயிருக்கின்றன. ஆக கலைச்சொற்கள் இல்லாமையினால் தமிழைப் பயிற்சி மொழியாகப் பரப்ப இயலவில்லை என்று சொல்வது சரியான காரணமாகாது. செயல் நிலை அறிக்கை கடைசியாக ஒன்று குறிப்பிடுகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் பேச்சிலே குறிப்பிட்ட வாசகத்திற்கான பதில்தான் அது. 'சிக்கல்கள் அதிகம் இருக்கின்றன, பிரச்சனைகள் அதிகம் இருக்கின்றன, நிறைவேற்ற முடியவில்லை' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1960-ஆம் ஆண்டில் கல்லூரித் தமிழ்க் குழு செயல் நிலை அறிக்கையில்—

"பல்கலைக் கழகப் போதனா மொழியாகத் தமிழை ஆக்குவதில் உள்ள பிரச்சனைகளையும் சர்க்கார் அறியாமல் இல்லை, சிக்கல்களை நினைத்துக் கொண்டிருந்து செயலிலே தளர்ந்தால்



குடியாட்சித் தத்துவம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடும். மேலும் ஆக்கச் சிந்தனை வளர்வதற்கு இந்நாட்டு மக்களுக்கு என்றுமே வாய்ப்பு ஏற்பட முடியாமல் போய்விடும்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வளவுக்கும் பிறகு செயல் நிலைக் குழுவினுடைய தலைவர் 'சிக்கல்களைப் பற்றி கவலைப் படாதீர்கள், குடியாட்சித் தத்துவத்தை உணருங்கள்' என்று சொன்ன பிறகும் கூட, தளரா உள்ளம் படைத்த நம்முடைய அமைச்சர் பெருந்தகை இதிலே தயக்கம் காட்டுவானேன்? உள்ளபடியே செயல் முறையிலே ஏற்பட்ட தயக்கமாகக் கருதவில்லை. சிந்தனையிலே ஏற்பட்ட தயக்கமாகத்தான் நான் அதை கருதுகிறேன்.

அன்றைக்கு 'இரண்டு அமைச்சர்களுக்குள்ளேயே போராட்டம்' என்று குறிப்பிட்ட போது, 'எங்களுக்குள்ளேயே போராட்டத்தை மூட்டிவிட விரும்புகிறீர்களா? அதைக் கொஞ்சம் விளக்குங்கள்' என்று கனம் உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்களைப் பார்த்து அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் அதை விளக்க விரும்புகிறேன்.

நம்முடைய பழைய கல்வி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் இந்த மன்றத்தில்தான் வீராவேசத்துடன் பேசினார்கள்.

"என்றாவது ஒரு காலத்தில் இந்த மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் ஏதாவதொன்றில் ஆங்கிலம் போதனா மொழியாக இல்லாமல் போகுமேயானால் அந்த இடம் தமிழ் மொழிக்குக் கிடைக்குமே தவிர இந்திக்கு அல்ல என்பதை இந்த அரசாங்கம் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறது" என்று பழைய கல்வி அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே தான் வீரக் குரல் எழுப்பினார்கள். இப்படி வீர நெஞ்சத்தோடு . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நானும் கல்வி அமைச்சர் பொறுப்பை ஏற்ற இரண்டு நாட்களுக்குள்ளாக இவ்வாறு வீர முழக்கம் செய்யாவிட்டாலும், இதை அப்படியே திட்டவட்டமாகத் தெரிவித்தேன். தியாகராயக் கல்லூரியில் கல்லூரி ஆசிரியர்கள் மாநாட்டில் பேசும்போது நான் இதை நன்றாகச் சொன்னேன்.

**திரு. மு. கருணாநிதி:** இந்தி அளவிலே அதைக் கூறி இருக்கலாம். தமிழைப் பயிற்சிமொழி ஆக்கவேண்டுமென்று கூறவில்லை என்பதைக் குறித்து நான் வருத்தம் தெரிவிக்காமல் இருக்க முடியாது.

இன்றைய கல்வி அமைச்சர் அவர்களின் தயக்கத்திற்குக் கூறும் காரணங்களில் ஒன்றிரண்டை நாம் ஆராயவேண்டும்.

"பிராந்திய மொழிகளோடு ஆங்கில மொழியும் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும்" என்று தேசீய ஒருமைப்பாட்டுக் குழுவினர் ஆலோசனை வழங்கி இருக்கிறார்கள். ஒரு சிலர் வற்புறுத்துவதுபோல் பல்கலைக் கழகத்தில்

[திரு. மு. கருணாநிதி] [1st April 1963

தமிழ் மட்டும் பயிற்சி மொழியாக இருந்தால் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்". இது நம்முடைய அமைச்சர் அவர்களின் திருக்கரத்தால் எழுதப்பட்ட வாசகங்கள். 'பயிற்சி மொழிப் பிரச்சனை' என்ற பெயரால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியி னுடைய வெளியீடாக வந்திருக்கும் புத்தகத்தில்தான் அவர் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்கு உடனடியாகப் பதிலை இன்றைய கல்வி அமைச் சருக்கு அன்றைய கல்வி அமைச்சர் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். "பயிற்சி மொழிப் பிரச்சனை" என்கிற இன் றைய கல்வி அமைச்சருடைய புத்தகமும், "தமிழால் முடியும்" என்கிற அன்றைய கல்வி அமைச்சருடைய புத்த கமும் இருக்கின்றன, இரண்டு புத்தகங்களையும் நான் இங்கே பேச வைக்க விரும்புகிறேன்.

இன்றைய கல்வி அமைச்சர் கூறிய அந்த வாசகத்திற்கு அன்றைய கல்வி அமைச்சர் தந்திருக்கும் பதில் என்ன?

"ஆங்கிலம் வளமுள்ள மொழி, உலகிலெல்லாம் வியாபித் துள்ள மொழி, ஆனால் நம்முடைய கல்வி பயனுள்ளதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மொழியையும் பயன் படக் கூடிய முறையிலே உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும், என் கிறபோது தாய் மொழியல்லாத ஒரு மொழி இருக்கிறவரையில் கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியாது. சிந்தனா சக்தி வளர்ச்சி ஏற்படாது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது ஆங்கிலத்திற்கு இடமில்லை. வட்டார மொழிதான் போதனா மொழியாக அமையவேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பி ராயபேதம் இருக்க இடமில்லை" என்று அவர் குறிப்பிடு கிறார்.

அடுத்து இன்றைய கல்வி அமைச்சர் இன்னொரு இடத்தில் "ஒரு சிலர் வற்புறுத்துவது போல் பல்கலைக் கழகத்தில் தமிழ் மட்டும் பயிற்சி மொழியாக இருந்தால் தேசீய ஒருமைப்பாடு பாதிக்கப்படும் . . . பல்கலைக் கழகங்கள் எல்லாம் தனித் தனி ஸ்தாபனங்கள் ஆகி பிரிவு மனப்பான்மை வளர இடம் ஏற்பட்டு விடும்" என்று 'பயிற்சி மொழிப் பிரச்னை' என் கிற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

அன்றைய கல்வி அமைச்சர்—"சர்வகலாசாலை போதனை மொழி பற்றி அகில இந்திய ரீதியிலும் சிந்திக்கப்பட்டது. சர்வ தேச மொழி என்ற முறையில் ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்பது அவசியம் என உணரப்பட்டாலும், ஆங்கிலத்தில் பாடங் களைப் போதிப்பது கூடாது" என்று 'தமிழால் முடியும்' என்கின்ற புத்தகத்தில் கூறி இருக்கிறார்.

இன்றைய கல்வி அமைச்சர் என்ன கூறுகிறார்?

உலகில் உள்ள எல்லா நாடுகளும் தங்களுடைய நாட்டுக் குழந்தைகளுக்கு அந்தந்த நாட்டுத் தாய்மொழியுடன் பிற மொழிகளையும் கற்றுத் தருகிறார்கள். எகிப்து நாட்டில் அரா பிய மொழியுடன் ஆங்கிலம் கற்றுத் தரப்படுகிறது. ரஷ்ய



1st April 1963] [திரு. மு. கருணாநிதி]

நாட்டில் பல பிரதேசங்களில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக் கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது தமிழ் நாட்டில் மொழிப் பிரச்சனை அர்த்தமற்றது என்றே தோன்றும்," என்று கூறியிருக்கிறார்.

இதற்கு அன்றைய கல்வி அமைச்சர் கூறுவதென்ன?

"உலகில் உள்ள எந்த நாடுகளைப் பார்த்தாலும், அவர வர்களுடைய மொழியிலே பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, ஆங்கில மொழியையும் கூடவே கற்றுக் கொள்ள முடியும் என்று ஏற்படுகிறது. ஆங்கிலத்தைப் போதனா மொழியாக இல்லாமலே கற்றுக் கொள்ள முடியும் என்பதை அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். நம்முடைய குழந்தைகளுக்கு அறிவுக் குறைவா? திறமைக் குறைவா? என்று தான் நான் கேட் கிறேன்". என்று அன்றைய கல்வி அமைச்சர் இன்றைய கல்வி அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறார்.

'பரீட்சார்த்தமாகக் கோவையில் தமிழைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் திட்டத்திற்குப் போதிய மாணவர்கள் வர வில்லை' என்பது இன்றைய கல்வி அமைச்சரவர்களுடைய வாதம். இன்றைய கல்வி அமைச்சருடைய இந்த வாதத்தை, அன்றைய கல்வி அமைச்சர் எப்படித் தீர்த்து வைக்கிறார்?

"இப்பொழுது நாம் தமிழ் மொழியை ஆட்சி மொழி யாக ஆக்கி, சட்டம் வகுத்து அது ஆட்சி மொழி ஆகிக் கொண்டும் வருகிறது, கூடிய சீக்கிரம் எல்லா விவகாரங் களும் இங்கு தமிழிலேயே நடக்கும். அப்படியிருக்கும் போது ஆங்கிலம் படித்தவர்கள் இந்த நிர்வாகத்தை எப்படி நடத்த முடியும்? முடியாது. ஆகவே தமிழ் படித்தவர்களுக் குத்தான் உத்தியோகத்தில் முதல் இடம் கொடுக்கப் போகிறோம் என்றால், தானாகவே இதற்கு முக்கியத்துவம் வந்து விடும்" என்று அன்றைய கல்வி அமைச்சர் அருமையாகப் பதில் சொல்கிறார்.

இன்றைய கல்வி அமைச்சர் "நக்கீரர், திருமுருகாற்றுப் படையில், 'தமிழகம் உவப்ப, பாரதம் உவப்ப' என்று கூற வில்லை. 'உலகம் உவப்ப' என்று தெளிவாக்கியதின் மூலம் அவருடைய உலகக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தியிருக் கிறார்" என்று சொல்கிறார்.

இதற்கு அன்றைய கல்வி அமைச்சர்—

"மொழியைப் பற்றிப் பேசும்போது—உலகத்தைப்பற்றிப் பேசியவர்கள், நாட்டை மறந்து விட்டார்கள், நாட்டைப் பற்றிப் பேசியவர்கள் உலகத்தை மறந்துவிட்டார்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்" என்று கூறியிருக்கிறார்.

இதை நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணம், "பயிற்சி மொழிப் பிரச்னை" என்ற பெயரில் நம்முடைய கல்வி அமைச்சர் வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் சில கருத்துக் களைக் கூறியிருக்கிறார்கள் என்பதற்காகத்தான். உள்ளபடியே சட்ட மன்றத்தில் அவரைக் காணும் நேரத்தில் மென்மையான குரலில், சில நேரங்களில் எதிர்க் கட்சிகளைக் குத்த வேண்டு மென்பதற்காக உபயோகிக்கும் சில வார்த்தைகளைத் தவிர.

அத்தனை வார்த்தைகளும் தென்றலாக விழும். அப்படிப்பட்ட கல்வி அமைச்சரை இங்கே சந்தித்திருக்கிறேன். ஆனால், 'பயிற்சி மொழிப் பிரச்சனையில்' சந்தித்திருக்கிற கல்வி அமைச்சராக இருக்கிற அவர் மிக மிக முரட்டுத்தனம் வாய்ந்த கல்வி அமைச்சராக இருக்கிறார். (எதிர்க்கட்சித் தரப்பில் ஆரவாரம்).

சட்டமன்றத்திலே சொல்லும் நேரத்தில் என்னென்ன மொழிதான் இங்கே அனுமதிக்கப்படலாம். எந்த அளவுக்கு நாகரிகமாகத் தாக்க வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், நான் அவருடைய இந்தப் புத்தகத்திலே தேடி எடுத்த வார்த்தைகளைச் சொல்கிறேன். தமிழை போதனா மொழி ஆக்கவேண்டுமென்று வலியுறுத்துகிற கட்சியைப் பற்றி அவர் குறிப்பிட்டிருக்கும் வாசகங்கள் என்ன? 'வழி இல்லாதவர்கள்', 'இழிதகையாளர்', 'மூடத்தனம் கொண்டவர்', மாமேதையர்', 'பேதைகள்', 'தேம்பி அழும் திருக்கூட்டத்தார்' என்கிற இத்தகைய வாசகங்கள் வெட்கக்கேடான நிலைமையை உண்டாக்கியிருக்கின்றன. எதிரே காணும் நேரத்தில் மென்மையாகவும், மிருதுவாகவும் பழகிக் கொண்டிருக்கும் நம்முடைய கல்வி அமைச்சரா அப்படி எழுதினார் என்று நாங்கள் வியப்படையும் அளவுக்கு அந்த நூலில் இத்தகைய வாசகங்கள் போடப்பட்டிருக்கின்றன. சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும், தமிழை போதனா மொழி ஆக்கவேண்டுமென்று கல்வி அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் இரண்டொரு இடங்களில் பிழைகள் இருந்தன. அந்தக் கடிதத்தைப் புத்தகத்தில் எடுத்துப் போட்டு 'ஒழுங்காகத் தமிழில் கடிதம் எழுதத் தெரியாதவர்கள், தமிழ் போதனா மொழியைப் பற்றிப் பேசுவதா?" என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குக் கோபமா படுவது? இந்த நிலைமை இருக்கிறதே என்று வருத்தம் அல்லவா படவேண்டும்? இப்படிப்பட்ட கடிதங்கள் எழுதப்படுகிற நிலைமை இருக்கிறதே, தமிழுக்குச் சரியான ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்படவில்லையே என்று வருத்தம் அல்லவா பட்டிருக்கவேண்டும்? இப்படியா புத்தகத்தில் போட்டு உலகத்திற்குக் காட்டுவது 'எங்களுடைய தமிழின் இழிநிலையைப் பார், தமிழ் தாழ்ந்து கிடக்கும் கோரத்தைப் பார்' என்று உலகத்திற்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் எழுதிய அந்தப் புத்தகத்திலாவது பிழை இல்லாமல் இருக்கிறதா? 'தெய்வீகம்' என்பதற்கு 'தெய்விகம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் போல 'உலக வழக்கு' என்பதற்கு 'உலகவாழ்க்கை' என்று குறிப்பிட்டிருக்கிறது. அதற்காக "இந்தப் புத்தகத்தை எழுதியவருக்குத் தமிழ் அறிவு இருக்கிறதா?" என்று கேட்டுவிடுவது? அந்தக் கடிதத்திலே வந்த பிழையைக் காட்டுவதற்கு, மந்திரியினுடைய மனதிலே இருக்கும் பிழைகளைச் சேர்த்து, 'உங்களுக்குத் தமிழை வளர்க்க என்ன யோக்கியதை





இருக்கிறது?' என்று கேட்கும் முறையில் 'மூடத்தனம்', 'இழிதகையாளர்' என்றெல்லாம் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது உள்ளபடியே என் போன்றவர்களுடைய உள்ளத்திலே மிகுந்த வேதனையை அளித்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

கடைசியாக, நான் இங்கே கொடுத்திருக்கும் திருத்தத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தி மொழியில், அதாவது இரண்டாவது மொழியில், இந்தி அல்லது இந்திய மொழிகளில் ஒன்று என்ற பகுதியில் பொதுத் தேர்வு இருத்தல் ஆகாது' என்ற திருத்தத்தை நான் இங்கே கொடுத்திருக்கிறேன். அதை வலியுறுத்தவும் போகிறேன். அந்தத் திருத்தத்தைப் பற்றிக் குறிப்பிடும் நேரத்தில் திரு. மணிமொழியார், பேசும்போது 'இந்தியிலே பரிட்சை வேண்டாமென்று சொல்கிறீர்களே, சரித்திரத்திலே புவியியலிலே பரீட்சை வேண்டுமென்கிறீர்களே, என்ன அர்த்தம்?' என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் அப்போது குறிக்கிடுவது முறையல்ல. இப்போது அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். 'ஆறு வயது பெண்ணுக்கும் அறுபது வயதுக் கிழவனுக்கும் திருமணம் வேண்டாம்' என்றால் உடனே அப்படித் திருமணம் வேண்டாமென்று சொன்னவனைப் பார்த்து, ஒரு வாலிபமான பையனுக்கும், யவ்வனமான மங்கைக்கும், திருமணம் நடைபெறும் நேரத்தில், 'அன்றைக்கு ஆறு வயதுப் பெண்ணுக்கும், அறுபது வயது கிழவனுக்கும் திருமணம் வேண்டாமென்று சொல்லிவிட்டு இப்போது மாத்திரம் எப்படி ஒத்துக்கொள்கிறாய்' என்றா கேட்பது? (சிரிப்பு)

இந்திப் பரீட்சை கிடையாது என்று நீங்கள் முதலில் சொன்னீர்களே, கனம் சபாநாயகர் மூலமாக நான் கனம் கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சொன்ன நேரத்தில் எல்லாப் பாடங்களுக்கும் பரீட்சையை எடுத்துவிட்டா சொன்னீர்கள்? எந்தப் பாடத்திற்கும் பரீட்சை கிடையாது, இந்திக்கும் கிடையாது என்றா சொன்னீர்கள்? மத்திய அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் டில்லி ராஜ்ய சபா மன்றத்தில், 'என்ன காரணம் பற்றியோ தமிழ் நாட்டில் இந்திப் பரீட்சையை எடுத்து விட்டார்கள்' என்று கோபத்தோடு சூசகமாக எடுத்துக்காட்டி, 'இது தேசிய ஒருமைப்பாடு தீர்மானத்திற்கு ஒத்தது அல்ல, அதற்கு முரணானது' என்று சுட்டிக் காட்டிய பிறகு, நமது அமைச்சர் பெருந்தகை அவர்கள் இங்கே நிருபர்களிடத்தில் பேசியபோது வீரத்துடன் பதில் சொன்னார்கள். என்ன சொன்னார்கள்? இந்திப் பரீட்சை கிடையாது என்று சொன்னார்கள். அதற்காகப் பாராட்டுதலை இந்த மன்றத்தில் பெற்றார்கள். இந்திப் பரீட்சை கிடையாது என்று கூறிய அவர், அதற்கு முன்பு பத்திரிகை நிருபர்களைக் கண்டு பேசிய நேரத்திலே இந்திப் பரீட்சை கூடாது என்பதற்குச் சில நல்ல பல காரணங்களை

எடுத்துக் கூறியிருக்கிறார். "இரண்டாவது பாகத்தில் மொழிப் பரீட்சை வேண்டாமென்று செய்ததற்குக் காரணம் முக்கியமானது, இந்தப் பரீட்சையில் குறைந்தபட்ச மார்க் வாங்க வேண்டுமென்று விதி கிடையாது. அந்த விதி செய்த பிறகு பரீட்சைக்குச் செல்லும் மாணவன் அந்தப் பரீட்சையில் ஒன்றுமே எழுதாமல் வெறும் காகிதத்தை மடித்துக் கொடுத்துவிட்டுப் போகிறான். இது அந்த மொழியை அவமதிப்பதாகும். இம்மாதிரியான பரீட்சை கேலிக் கூத்து வேண்டாம் என்றுதான் பரீட்சை ரத்து செய்யப்பட்டது. இம்முறை புதிதல்ல; முன்பு படிக்கும்போது 'பி' க்ரூப் பாடத் திட்டம் இருந்தது; அதில் பரீட்சை கிடையாது" என்றெல்லாம் ஆதாரங்களை தேடி, அள்ளி அள்ளிக் கொடுத்தார் நிருபர்களிடத்தில். அதுமாத்திரமல்லாமல் ஜனவரி மாதம் 7-ம் தேதி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் 'இந்திப் பரீட்சையில் தேறுவதற்காகக் குறைந்தபட்ச மார்க் இருக்கவேண்டும் என்பது தமது சொந்த கருத்து என்றும், அவ்வாறு குறைந்தபட்ச மார்க் நிர்ணயித்தால் பின்வழியாக இந்தியைப் புகுத்த சர்க்கார் முயற்சிப்பதாக ஆட்சேபம் கிளம்பும் என்றும், தற்சமயம் சர்ச்சை எதுவும் தோற்றுவிக்கத் தாம் விரும்பவில்லையென்றும் ஆகவே இந்திப் பரீட்சையைக் கைவிடுவது பொருத்தமானது என்றும் பக்தவத்சலம் குறிப்பிட்டார்" என்று பத்திரிகைகளில் வந்திருக்கிறது. பிறகு ஏன் இப்போது சர்ச்சையைக் கிளப்புகிறார்கள்? லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் அங்கே சர்ச்சையைக் கிளப்பிய பிறகு, அதை மூடி மறைக்க வேண்டிய நிலைமைக்கு, குழப்பத்தைத் தீர்க்க வேண்டிய நிலைக்கு அத்தகைய நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டார்களா? அந்தக் குழுவில் அமர்ந்து வலுவூட்டிய பெரியவர்களுள் மிக முக்கியமானவர்கள், டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களிடம் ஜனவரி 13-ல் நிருபர்கள் பேட்டி கண்டபோது, அவரும் சொல்லியிருக்கிறார், இரண்டாவது பிரிவு மொழியில் பரீட்சை நடத்தும் திட்டம் கைவிடப்பட்டது பற்றி கேட்கப்பட்டபோது அவரும் சொன்னார், "குறைந்தபட்ச தரம் இருந்து வருவதுதான் பிரச்னை. இல்லையேல் பரீட்சைகள் வெறும் ஏமாற்று வித்தைதான். முன்பெல்லாம் 'க்ரூப்' பாடங்களில் பரீட்சைகள் எதுவும் நடந்தது இல்லை" என்று தான் அவரும் குறிப்பிட்டிருக்கிறார். கடைசியாகச் சொல்லுவேன், அமைச்சர் அவர்கள் பரீட்சை வைப்பதற்குக் காரணங்களை வலியுறுத்தும்போது பரீட்சையில் தேறியவர்கள், நல்ல எண் எடுத்தவர்களுக்கு ஸ்காலர்ஷிப் இருக்கிறது. ஆகவே பரிட்சை இருந்தால்தானே நல்ல எண்களை எடுத்து ஸ்காலர்ஷிப் பெற முடியும்? என்று அவர்கள் கேட்டார்கள். இதுவே இந்தியைத் திணிப்பதற்கு மத்திய சர்க்காரால் நடத்தப்படுகிற ஒரு மறைமுகமான தூண்டுகோல் அல்லவா? அதைப்பற்றி யோசித்துப் பார்க்க வேண்டாமா? நாம் அந்தத் தூண்டுகோலுக்கு பலியாக வேண்டுமா? இதன் மூலமாக இந்தி திணிக்கப்படவில்லை என்று நீங்கள் கருதுகிறீர்களா? மறைமுகமாகத் திணிப்ப



தற்கு இதுவும் ஒரு வழி இல்லையா? வேறு மாநிலங்களில் இந்தி கட்டாயமாக இருக்கிறது, இங்கே அப்படிக் கட்டாயம் இல்லை என்று கூறினால் அம்மாதிரியாக இருக்கக் கூடிய நிலைமைக்குக் காரணம் யார்? 1937-ம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாகவும், இயக்கம் கொண்ட போர்க்கோலமும், இரண்டு மூன்று பேர்கள் பிணமாக ஆனதும், தாய்மார்கள் காராக்கிருகத்தில் தொல்லைகள் அனுபவித்ததையும் மறந்து விட முடியுமா? அந்தப் போராட்டங்களின் விளைவுகளையும் பொருட்படுத்தாமல் இப்போது மறைமுகமாக இந்தி திணிக்கப்படுகிறது. நமது குடியரசுத் தலைவர் மதிப்புக்குரிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் கல்கத்தாவில் ஜனவரி 20-ல் நிகில் பாரத வங்க பாஷா பிரச்சார சமிதியின் புதுக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டியபோது குறிப்பிட்டிருக்கிறார், "இந்தியைப் பரப்ப இப்போது முயற்சி செய்யப்படுவதால் அதன் எதிர்காலம் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. இந்தி பேசப்படாத பிரதேசங்களிலும் ஹைஸ்கூலில் இந்தி கட்டாயமாகப் போதிக்கப்படுகிறது. துளசிதாசர், மீராபாய் நூல்களைப் பரப்பினால் மேலும் இந்தி பரவும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே இந்தியைப் பரப்புவதற்கான மறைமுக முயற்சிகள் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குத் துணை போக வேண்டும் என்று ஹிந்தியில் பரீட்சை வைப்பது, நல்ல எண் எடுக்கவேண்டுமென்று சொல்வது, மாடரேஷன் என்றெல்லாம் மழுப்புவது அத்தனையும் மறைமுகமாக ஹிந்தியைத் திணிக்க நீங்கள் போகிற துணையே அல்லாமல் வேறு அல்ல.

கடைசியாகக் கேட்டுக்கொள்வேன், நமது கல்வி அமைச்சரை எல்லா மாநிலங்களிலும் இருக்கிற அமைச்சர்கள் வயதோடு ஒப்பிடும்போது, அறிவோடு ஒப்பிடும்போது, அனுபவத்தோடு ஒப்பிடும்போது, தியாக உள்ளத்தோடு ஒப்பிடும்போது அவர்களிலே யாருக்கும் தாழ்ந்த கல்வி அமைச்சர் இல்லை; உங்கள் குரலை உயர்ந்த குரலாக ஆக்கிக் கொண்டு, மத்திய அமைச்சர் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடைய குரலை மங்க அடிக்கிற விதத்தில் கிளப்பி, இந்திப் பரீட்சை கிடையாது என்று சொல்லுங்கள். அதற்கு அவர்கள் முடியாது என்று சொன்னால் மான உணர்ச்சியோடு ராஜிநாமா செய்யப் போகிறோம் என்றாவது அறிவித்து விடுங்கள், அதுவே தக்க வழி, என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கோ. ராஜாராம்**: மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிற கல்விக் கொள்கை பற்றிய குறிப்பினை நான் ஆதரிக்கிறேன். இன்றைய தினம் இந்த மாநிலத்தில் ஆட்சி புரிகிற அரசு அதன் தலைமை—தலைமை ஏற்ற நாளிலே இந்த நாட்டு நிலைமை என்ன என்பதை இந்த நேரத்தில் ஒரு முறை சிந்தித்துப் பார்ப்பதும், ஒரு முறை திரும்பிப் பார்ப்பதும் நல்லது என்று கருதுகிறேன். இந்த நாட்டு மக்களுடைய அறிவுக் கண்களையெல்லாம் குருடாக்குகிற வகையில் கல்வித்

துறையில் ஒரு நிலை பிறந்தபோது, முதலை வாயில் சிக்கிய புராண கால கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்தது போல், இந்த நாட்டு மக்களுக்கு அறிவுத்துறையில் விமோசனம் தருவதாக, விடிவு காண்பதாக, ஒரு நல்ல தலைவரின் கீழ் நல்ல ஆட்சி பிறந்தது என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அந்த ஆட்சியும், அந்தத் தலைமையும் நீடித்து நல்ல முறையில் இயங்குகிற நேரத்திலே இங்கே ஒரு கல்விக் கொள்கை உருவாகிறது என்றால், அந்தக் கல்விக் கொள்கை இந்த நாட்டு மக்கள் நலனில் அக்கறையோடும், இந்த நாட்டு மக்களுடைய நன்மையிலே நாட்டத்தோடும் தீட்டப் பெற்ற திட்டமாக, வகுக்கப் பெற்ற கொள்கையாக இருக்க முடியுமே யன்றி, இந்த நாட்டு மக்களுக்கு கேடு விளைவிப்பதாக, தீங்கு பயப்பதாக இருக்க முடியாது என்று சாதாரணமாக தெளிவு உள்ளவர்கள் கூட புரிந்து கொள்வார்கள்—உணர்ந்து கொள்வார்கள். அந்த அடிப்படையிலே பின்னணியிலே இந்தக் கல்விக் கொள்கை பற்றிய குறிப்பினை, அணுகுகிற, ஆராய்கிற நான் அதனை வரவேற்கிறேன்.

இன்றையக் கல்விக் கொள்கையில் மூன்று அம்சங்கள் முக்கியமான அம்சங்களாகும். உயர் நிலைப் பள்ளி அளவில் கல்வி பெறுகிற கால அளவை நிர்ணயிப்பது முதலாவது அம்சம். அந்த அம்சத்தைப் பொறுத்த வரையில் நாம் பழமைக்குத் திரும்பிச் செல்கிறோம். பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கை என்று சொன்னாலும் கூட பண்புள்ள பழமையில் புதுமை காண்பது பயனுள்ள பழமைக்கு திரும்பிச் செல்வதும் தவறல்ல என்பது மட்டுமல்ல சிறப்பான செயலுமாகும் என்ற வகையில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கல்வித் துறைக்கும் பயன் அளிக்கக் கூடிய 11 ஆண்டு கால படிப்பு என்ற அந்தப் பழைய கொள்கையை ஏற்றுக்கொள்ளுவது வரவேற்கத் தகுந்தது என்று கூறிக் கொள்கிறேன். அதைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், கல்லூரியின் நுழைவு வாயிலாக இருக்கிற புகுமுக வகுப்பு என்கிற மாணவர்களுக்கு இடர்மிகு வகுப்பையும் பழைய முறையில் தவிர்த்திருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பயிற்சி மொழிப் பிரச்னை. அதுபற்றி பலவாறாகப் பேசப்பட்டது. குறிப்பாக நாங்கள் எல்லாம் தமிழுக்குப் பகைவர்கள் என்றும், சங்கம் வளர்த்த தமிழை, பாண்டியர்கள் மடியில் தவழ்ந்த தமிழை சீரிளமை திறங் குன்றாத் தமிழை, ஆர்வத்தோடு வளருந் தமிழை, கன்னித் தமிழை, தேனினும் இனிய தமிழை, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றி மூத்த குடி மொழிந்த தமிழைப் புறக்கணிப்பதாக, அலட்சியப்படுத்துவதாகக் கருதிக்கொண்டு சில கருத்துக்கள் இங்கே பரிமாறப்பட்டன. கல்லூரியில் தமிழ் மணம் கமழவேண்டும் என்ற ஆசைக்கு, எண்ணத்திற்கு நாங்கள் தடைகற்களாக இருப்பது போலக் கருத்துக்கள் வழங்கப்பட்டன. ஆனால் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன், கல்லூரியில் மட்டுமல்ல; இந்த மாநிலத்தில் மட்டுமல்ல; நானிலமும் தமிழ் ஒலிக்கவேண்டும் என்ற ஆசை எங்களுக்கு உண்டு. தேமதுரத் தமிழ் ஓசை உலகெங்கும் ஒலிக்கவேண்டும் என்று தேசியக் கவியின் பாட்டுக்கு மதிப்பு அளிக்கிறவர்கள் நாங்கள் ஆனால்



இங்கே கல்விக் கொள்கையில் பயிற்சி மொழி பற்றித் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இன்றையக் கல்வி அமைச்சரையும், அன்றையக் கல்வி அமைச்சரையும் பேச வைத்துப் பார்த்தார்கள்; இல்லை—மோத வைத்து வேடிக்கை பார்த்தார்கள், வேடிக்கை காட்டினார்கள். ஆனால் இங்கே தரப்பட்டிருக்கிற இந்த அறிக்கையிலே திட்ட வட்டமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், இன்றைய ஆட்சியின் இறுதி லட்சியம் கல்லூரியில் பயிற்சி மொழியாக தமிழை கொள்வது என்பதுதான் என்று. கல்லூரியில் தமிழைப் பயிற்சி மொழியாக அமைப்பதற்கான வாய்ப்பு வசதிகள் கல்லூரிகளில் ஏற்படுத்தத் தக்கமுறையில் இந்த ஆட்சி மேலும் சகல முயற்சிகளையும் செய்யும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தனிப்பட்ட கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக வைக்க முன்வந்தால், அதற்கான உதவிகள் செய்யவும் அரசாங்கம் தயார் என்றும், இடைக்காலத்தில் மட்டுமே ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருக்கும் என்பதையும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனைப் படித்த பிறகும், வாதத்தை தவறான திசையில் திருப்புவது சரியாகாது. அரசியல் அறமாகாது.

மூன்றாவது அம்சம் மும்மொழி கொள்கை. அதுபற்றி வேடிக்கையான கருத்துக்கள் வழங்கப்பட்டன. பாராளுமன்றத்திலே 12-30 p.m.
ஒலித்தது அதிகாரக் குரல் பணிந்துவிட்டது இங்கே அரசு என்றார்கள். கொள்கையிலே குழப்பம் என்றார்கள். இந்தி கட்டாயப் படுத்தப் படுகிறது—திணிக்கப்படுகிறது என்றார்கள். இன்னும் ஒரு படி மேலே போய் சிலர் "ஓடுகிறார்கள்—ஒளிகிறார்கள்—மறைகிறார்கள்" என்றெல்லாம் ஏதோ சட்டத்தின் கண்களுக்குத் தப்பி ஓடுகிற சமுதாய விரோதியை வர்ணிப்பதைப் போல நம்மை வர்ணித்தார்கள். மும்மொழி கொள்கையை ஆராய்கின்றபோது கட்டாயம்—திணிப்பு என்ற சொற்களுக்கு தேவை அவசியத்தை உணர்வதற்கான முகாந்திரம் கூட இல்லை.

இந்திப் பரிட்சை வைக்கப்பட்டிருக்கிறது. யாருக்கு? இந்தி வேண்டுமென்ற மாணவர்களுக்கு. இந்தி வேண்டாத மாணவர்களுக்கு இப்போது இதனால் என்ன புது நஷ்டம் வந்து விட்டது? இந்தி வேண்டாமென்றால் யார் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள்? Hindi or any other Indian language என்று II Part-ல் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இந்தி வேண்டாம் கவின் மலையாளம் கற்கப் போகிறேன் என்றால் கற்கட்டுமே—களி தெலுங்கு தான் தேவையெனில் பயிலட்டுமே' கன்னடம் படிக்க விரும்பினால் படிக்கட்டுமே. எதற்கும் வாய்ப்பு—வசதி இருக்கிறது. மும்மொழித் திட்டம் தெளிவாக இருக்கிறது. எங்கே கட்டாயம்? எங்கே திணிப்பு? எங்கே குழப்பம்? குழப்பம் இங்கே இல்லை அது எங்கோ இருக்கிறது.

மும்மொழி கொள்கை பற்றி பேசுகின்ற போது இத்திட்டத்தினாலே "ஆட்சி ஆட்டங்கண்டு விடும்" என அனுதாபங் கலந்த எச்சரிக்கையை எதிர்க்கட்சி உறுப்பினரொருவர் அனுப்பினார்கள். அவருக்கேன் அத்தனை அக்கறை? ஆட்சி கல கலத்து விடுமோ—

ஆட்டங்கண்டு விடுமோ என்று கவலைப்பட வேண்டியவர்கள்
நாங்களல்லவா ? என்றாலும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்
வேன் அவர் கருதுவதைப் போல கையாலே கலைத்து விட இது
மணல் வீடல்ல—காற்றடித்தால் குலைந்து விட அட்டையால்
அமைத்த வீடு அல்ல மக்கள் ஆதரவெனும் மகத்தான சக்தி மீது
உருவாகிய இந்த ஆட்சியை—ஆட்சி பீடத்தின் சிறிய தூணைக்
கூட அசைக்கின்ற வலிவு இந்த நாட்டிலே எந்த கட்சிக்குமில்லை
எனக் கூறி அறிக்கையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி
உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திருமதி. டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, இன்றைக்கு நம் கல்வி அமைச்சர் அவர்கள் சபைமுன்
வைத்திருக்கும் கல்வி அறிக்கை, வெறி உணர்ச்சிக்கு இடம்
கொடாமல், ஆத்திரப்படாமல் ஆராயப்படவேண்டிய ஒரு அறிக்
கை. ஏதோ எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி கனம் அங்கத்
தினர்கள் ஏதாவது புதிய ஆலோசனைகள் சொல்லுவார்கள் என்று
எதிர்பார்த்தோம். ஆனால், அவர்கள் எந்த ஆலோசனையையும்
கூறவில்லை. ஆனால், கிராமப் புறங்களில் நடக்குமே காமன்
பண்டிகை, அது போலல்லவா நடக்கிறது ! நாம் அனுபவத்திற்
குத் தக்கபடி அவ்வப்போது சிற்சில மாறுதல்களைச் செய்ய
வேண்டி இருக்கிறது. அதுதான் மக்கள் ஆட்சியில் முக்கிய
தத்துவம் என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள். முன்பு
சோஷல் ஸ்டடீஸ் பாடத்தை ஏற்படுத்தினோம். அப்படி ஏற்
படுத்தும்போது, சில விளைவுகளை ஆலோசித்துச் செய்தோம்;
ஆனால், ஏற்பட்ட விளைவுகள் வேறு விதத்தில் இருக்கின்றன
என்பது புரிந்த உடனே, அதை இன்றைக்கு இரண்டாகப் பிரித்து,
சரித்திரம், பூகோளம் என்று ஏற்படுத்துகிறோம். இது இந்த
நாட்டு மக்களுடைய நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்ற
எண்ணத்தில்தான் செய்யப் படுகிறது. வெறி உணர்ச்சிக்கும்,
ஆத்திரத்திற்கும் உட்படுகிறார்கள் சிலர். 10 ஆண்டுப் படிப்பு
என்றால், 11 ஆண்டுப் பாடத்தை திணிக்கிறார்கள் என்கிறார்கள்.
11 ஆண்டுகளை 10 ஆண்டுகளாகச் செய்ததில் என்ன தவறு?
அப்படியே தவறுகள் இருந்தாலும் அதைச் சீர் செய்து கொள்ள
லாம். ஆனால், அப்படியெல்லாம் இந்தக் கொள்கையை
ஆராயாமல், எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், மக்களின் நலனில்
அக்கறை இல்லாமல் ஏதேதோ பேசிக்கொண்டு போனார்கள். 11
ஆண்டு தேவை இல்லை யென்றால், அதைக் குறைத்துக் கொள்ள
லாம். இரண்டு எலெக்டிவ்ஸ் வேண்டாம் என்றால், அதை ஆர
அமர ஆலோசித்து அவசியமானால் மாற்றிக்கொள்ளலாம். அதில்
ஏன் வெறி உணர்ச்சி? சட்டசபைப் பொது மேடைகளாகப்
பயன் படுத்திக் கொள்வது சரி இல்லை என்பதை எடுத்துக் காட்ட
விரும்புகிறேன்.

இந்தி மறைமுகமாகத் திணிக்கப் படுகிறது என்று சொன்னார்
கள். இந்திப் பரீட்சை எதற்காக என்று கேட்கிறார்கள்.
600 மார்க்கில் குறைந்த மார்க்குகள் எடுக்கிற பையனுக்கு;
எஸ்.எஸ்.எல்.சி. யைத்தாண்ட சிறிது உதவியாக இருக்கும் என்று
இதைக் கட்டாயமாக ஏற்படுத்தாமல்; மாடரேஷனுக்கு என்று
வைத்திருக்கிறார்கள். இதிலே எப்படித் திணிப்பு வரும்? எங்கே





கட்டாயம் இருக்கிறது? ஏதோ "இங்குள்ள அமைச்சர் டெல்லி
அமைச்சருக்கு பயந்துவிட்டார்கள்" என்று ஒரு கனம் அங்கத்
தினர் குறிப்பிட்டார். இதில் நாமாகவே யோசித்து நம் மாணவர்
களுக்கு உகந்த முறையில், அதைக் கட்டாயமாக வைக்க வேண்டிய
அவசியம் இல்லை; விரும்புவோர்களுக்கு வாய்ப்பு அளிக்க
வேண்டும், என்ற முறையில், மாடரேஷனுக்கு இருக்கட்டும் என்று
அதை வைத்திருக்கிறோம். 'மறைமுகமாக இந்தியைத் திணிக்
கிறார்கள்' 'டெல்லி அமைச்சருக்குப் பயப்படுகிறார்கள்' என்று
சொல்கிறார்கள் என்றால் அது ஒன்றும் எதிர்க்கட்சிக்காரர்
களுக்குப் புதிதல்ல. அவர்கள் அதை என்றைக்குமே புரிந்து
கொண்டதில்லை. புரிந்துகொள்ள விரும்புவதும் இல்லை. இதைப்
பிரசாரத்திற்காக வேண்டுமானால் அவர்கள் பயன் படுத்திக்
கொள்ளலாம். ஆனால், அதைத் தமிழ் உலகம் ஏற்றுக்கொள்ளாது.

பல கல்லூரிகளில் ஏன் தமிழ் பயிற்சி மொழியாக இல்லை என்று
கேட்கிறார்கள். கலைக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களைக்
கொண்டு சில புத்தகங்களை எழுதச் செய்தோம். பையனுக்கும்
ரூ. 30 உதவிச் சம்பளம் கொடுத்தோம். ஆனால், இவர்கள் கேட்பது
எல்லாப் பாடங்களையும், எல்லாக் கல்லூரிகளிலும் ஏன் தமிழி
லேயே வைக்கவில்லை என்பது. தமிழைப் பரப்புவதில் நாங்கள்
யாருக்கும் குறைந்த அக்கறை கொண்டவர்கள் அல்ல. ஆனால்,
அதைப் பரிசீலனை செய்து தகுதியும் சாதனங்களும் உள்ள இடங்
களில் கொஞ்சம் கொஞ்சம் ஆகச் செய்துகொண்டு வருகிறோம்.
அதை மக்கள் ஏற்கிறார்கள். மேலும், மாறுதல்களை மேற்கொள்ள
வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அதைக் கட்டாயம் செய்தே
ஆகவேண்டும். தமிழிலே பாடம் சொல்லிக் கொடுக்க கல்லூரி
கள் முன்வந்தால், சலுகைகள் கொடுக்கிறோம். இன்னும்
எவ்வளவோ புத்தகங்கள் தேவைப்படுகின்றன. கனம் அங்கத்தினர்
திரு. கருணாநிதி தமிழ் சினிமாக் கதைகள் எழுதுவது போல,
பொருளாதாரம், விஞ்ஞானம் முதலியவை பற்றியும் எழுதலாம்.
ஆனால் அவர்களுக்கு நேரமும் ஆர்வமும் கிடையாது. 52 ஆசிரியர்
களைக் கொண்டு "ஹ்யுமானிடீஸ்" வகையில், ஹிஸ்டரி, எகனமிக்ஸ்
போன்ற பாடங்களில் புத்தகங்கள் எழுதி இருக்கிறார்கள்.
இன்னும் பல ஸப்ஜெக்ட்களிலும் எழுதியாக வேண்டும். இதிலே
இன்னொரு சங்கடம் என்னவென்றால், பல ஸப்ஜெக்ட்களில் வெளி
நாடுகளிலிருந்து ஸ்காலர்ஷிப்கள் கிடைக்கின்றன. மாணவர்கள்
பத்தில் ஒருவராக இருந்தாலும், மேற்படிப்புக்கு அன்னிய நாடு
களுக்குச் செல்லும் வாய்ப்பும் இருக்கிறது. அதையும் நாம்
இழந்து விடக்கூடாது. எதிலுமே கட்டாயப் படுத்தினால் மக்கள்
விரும்பமாட்டார்கள். தமிழிலே ஆர்வம் இருந்தாலும் எப்படியும்
தமிழைக் கற்கமுடியும். நாங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான்
பாடங்களைக் கற்கிறோம். எங்களுக்கு என்ன தமிழ் ஆர்வம்
குறைந்து விட்டதா ?

பயிற்சி மொழி மிக்க அவசியமானது. பல தமிழ் அன்பர்கள்
"ழ" வுக்கும்; "ல" வுக்கும்; "ள" வுக்கும் வித்தியாசம் தெரியாமல்
எழுதுகிறார்கள். ஆகையினாலே அறிவு இருந்து விட்டால் மட்டும்
போதாது. அறிவைத்தக்க ரீதியில் பயன் படுத்தவேண்டும்.

அந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுதான் வளர்ச்சி. தமிழை வளர்க்கவேண்டும் என்ற ஆர்வம் இருப்பதினால்தான், தமிழிலே அக்கறை இருப்பதினால் தான் தமிழில் பி.ஏ. படிக்கும் மாணவர்களுக்குப் பலவித சலுகைகள் காட்டப்படுகின்றன. ஐம்பத்து மூன்று ஆசிரியர்களை அழைத்து 'நீங்கள் புத்தகங்கள் எழுதுவதைக் கவனித்துக்கொண்டு வாருங்கள்' என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அப்படி எல்லாம் இருக்கும்போது இந்தக் கல்வித் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாமல் ஏதோ ஒரு வெறியை ஒட்டி 'இது மிக தவறுதலான திட்டம்; இதைத் தமிழகம் ஏற்றுக்கொள்ள முடியாது' என்றெல்லாம் சொல்லுவது பொருத்த மற்றது.

இந்தக் கல்வித் திட்டத்தில் இன்னும் ஒரு சில மாறுதல்கள் செய்துவிட்டால் இது மேலும் சிறப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இஸ்டரி, ஜாகரபி இவைகளைப் படித்தால் மட்டும் போதாது. அவைகளைப் பரீட்சை வரையிலும் கொண்டு போகவேண்டும். அந்தப் பாடங்களைப் படிப்பது மிக அவசியம். அப்படி இருக்கும்பொழுது அவைகளை பரிட்சை வரையிலும் கொண்டுவருவது மிகவும் அவசியம். ஒன்பதாவது வரையில் ஜெனரல் மாத்சைப் படித்துவிட்டு அதற்கு மேலே ஸ்பெஷல் மாத்ஸ் 10, 11-வது வகுப்புக்களில் படிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்து, ஆப்ஷனல் ஸப்ஜெக்ட்டாக எடுத்துக் கொள்ளும்படியாகச் செய்வது நல்ல கல்வித் திட்டமாக இருக்கும். இப்பொழுது 9, 10, 11-வது வகுப்புக்களில் பொது விஞ்ஞானமும், பொதுக் கணிதமும் கொண்டுவரப் படுகிறது. ஜெனரல் மாத்ஸை 9-வது வகுப்பில் நிறுத்திவிட்டு, 10, 11-வது வகுப்புக்களில் ஸ்பெஷல் மாத்ஸை ஒரு ஆப்ஷனல் ஸப்ஜெக்ட்டாக எடுத்துக் கொள்ளலாம். இப்பொழுது இரண்டு விருப்பப் பாடங்கள் வைத்திருப்பதை ஒரே விருப்பப் பாடமாக வைத்தால் நலம் என்று கருதுகிறேன். காரணம் பல உயர்நிலைப் பள்ளிகளில் இவைகளைப் புகுத்துவது சிரமம். பல பள்ளிகளில் லெபாரடரி பெஸிலிடீஸ் கிடையாது. இரண்டு விருப்பப் பாடங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றால் இரண்டு பாடங்களைச் சேர்க்கும்பொழுது, காம்பினேஷன் சரியாக இருக்காமல் போகலாம். கணக்கு, ஸயன்ஸ், ஸயன்ஸ்-கிளாஸிகல் லாங்குவேஜ்; ஹிஸ்டரி-ஸயன்ஸ் இப்படிக் கண்டபடி இரண்டு பாடங்களைச் சேர்த்து விட்டால் மேல் படிப்புக்குப் போகாத பிள்ளைகளுக்கு ஊருக்கு தகுந்த முறையில் பல பிரச்னைகள் ஏற்படலாம். ஆகவே, ஒரே ஒரு விருப்பப் பாடமாக இருப்பது சிறந்தது. ஸயன்ஸ் படிக்கிறவர்கள், ஜெனரல் ஸயன்ஸை விட்டு விட்டு, ஸ்பெஷல் மாத்ஸ் 10, 11 வகுப்புக்களில் படிக்கலாம் என்று சொன்னால்கூட சாலச் சிறந்ததாக இருக்கும்.

இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய அறிக்கை விருப்பு வெறுப்பு இல்லாமல் எல்லா மக்களாலும் ஏற்கக்கூடிய ஒரு அறிக்கையாகும். நடுவிலே ஏற்பட்ட மாறுதல்களினால் படிப்பின் தரம் குறைந்துவிட்டது என்று பரவலான எண்ணம் இருந்ததினால், ஆர அமர யோசித்து, அந்த முறையைத் திருத்தி அமைக்க



வேண்டுமென்று கருதி; ஆரம்பக் கல்வி, உயர் ஆரம்பக் கல்வி, உயர் நிலைக் கல்வி, பட்டப் படிப்பு என்ற முன்றயில் மிக அழகாக அமைத்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இஷ்ட பாடத்தைத் தமிழிலே போதிப்பது என்றால், ஆதிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. 'பெண்டுலம்' என்பதற்கு 'தொங்குபாரம்' என்றும் தமிழில் படித்துவிட்டு, பின்னால் மாணவர்கள் அது என்ன என்று புரியாமல் தவிக்க நேரிடுகிறது. இஷ்டபாடங்களை ஆங்கில மொழிச் சொற்களை வைத்தே சொல்லிக் கொடுப்பது நலமாகும். 'ஆஸிட்ஸ்' என்பதற்கு 'அமிலம்' என்று படித்துவிட்டு, பின்னால் மேலே போகும்பொழுது அமிலமா; அமிலமா என்று தெரியாத அளவுக்கு திணறுகிறார்கள் மாணவர்கள். மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்க வேண்டுமே தவிர, மொழி வெறிக்கு இதை ஒரு சொக்கட்டான் காயாக வைத்து ஆடுவது தவறு. அரசாங்கம் தமிழை வளர்ப்பதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. அரசாங்கத்தினுடைய முயற்சியினால் தான் இன்றையதினம் தமிழ் ஆட்சி மொழியாக விளங்குகிறது. வருங்கால சந்ததிகள் விதியோடு விளையாடுவதற்கு மொழி வெறியைப் பயன்படுத்திக்கொள்வது மிகத் தவறு. ஸயன்ஸ், மாத்ஸ் இப்படிப்பட்ட பாடங்களைப் போதிப்பதில் கூடியவரையில் ஆங்கிலச் சொற்களையே மேற்கொள்ளவேண்டும், இல்லையேல் ஆங்கிலத்தையே சொல்லித் தரவேண்டும். அப்படிச் செய்தால் பி.யு.சி. படிப்பதற்கு சற்று எளிதாக இருக்கும், புரிந்து கொள்வதற்குச் சிரமம் இல்லாமல் இருக்கும். புரியாத வார்த்தைகளை கீழே படித்து விட்டு, அங்கே மேலே வருகிறபொழுது வேறு வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அப்பொழுது மாணவர்கள் திணறுகிறார்கள். ஒரு ஆண்டிலே பி.யு.ஸி. வகுப்பிலே அத்தனையும் புரிந்து கொண்டு பரீட்சை எழுதுவதற்கு மிகத் திணறுகிறார்கள். பி.யு.சி.-யில் நான்கு ஸப்ஜெக்ட் ஆப்ஷனலாக வைத்திருப்பதை மூன்றாகக் குறைத்து, இங்கே இரண்டு ஸப்ஜெக்ட்ஸ் எலெக்டிவாக வைத்திருப்பதை ஒன்றாகக் குறைத்து வேறு சில மாறுதல்களையும் இந்தக் கல்வித் திட்டத்தில் செய்துவிட்டால் 10 ஆண்டு காலத்திற்கு மட்டுமல்ல, 10 தலைமுறைக்குக்கூடத் தமிழகத்திற்கு நல்ல முறையில் பயன்படத்தக்க கல்வித் திட்டமாக அமையும், வருங்கால சந்ததிகள் வாழ்த்துவார்கள் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, கனம் கல்வி அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ள புதிய கல்வித் திட்ட அறிக்கை பற்றி சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். கல்வித் திட்டம் புதிய ஒரு உரு கொடுக்கப்பட்டு, இந்த மன்றத்தினுடைய கருத்துக்களை அறியவும் இந்த மன்றத்தின் முடிவுகளைத் தெரிந்து கொள்ளவும் ஆய்வுக்காக இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கல்வித் திட்டம் சென்ற 15 ஆண்டுக் காலமாக பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டிருக்கிறது

என்பதை இந்த மன்றத்தில் இருக்கிற அனைவரும் நன்றாக உணர்வார்கள். நீண்ட நெடுங்காலமாக கல்வித் திட்டம் மெல்ல மெல்ல, மெல்ல தேவையையும், நிலைமையையும் ஒட்டி வளர்த்து கொண்டு வந்து சென்ற 15 ஆண்டுகாலத்தில் அமைச்சரவை மாறுகிற பொழுதெல்லாம் கல்வி அமைச்சர் மாறுகின்ற பொழுதெல்லாம், கல்வித் திட்டத்தில் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. மாறுதல்கள் ஏற்படுத்துவது தவறு என்று எதிர்க் கட்சியைச் சார்ந்த நாங்கள் எடுத்துக் கூறவில்லை. மாறுதல்கள் ஏற்படுவது முற்போக்குக்கான அடையாளமாக இருப்பவைகள்தான்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே."

என்று இலக்கணம் வகுத்த தொல்காப்பியனார் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். காலம் செல்லச் செல்ல, கருத்துக்கள் வளர, வளர, தேவைகள் ஏற்பட, ஏற்பட அவைகளை ஒட்டி மாறுதல்கள் ஏற்படவேண்டியது இன்றியமையாத ஒன்றுதான். ஆனால், ஏற்படுகிற மாறுதல்கள் வளர்ச்சியை நோக்கி, முற்போக்கு நிலையை நோக்கி, இருக்கின்ற நிலைமையிலிருந்து வேறு ஒரு நல்ல நிலைமைக்கு இழுத்துச் செல்லுகிற நிலையை நோக்கி, ஏற்படக்கூடிய மாறுதல்களாக இருக்கவேண்டுமே ஒழிய, ஏற்படுகிற மாறுதல்கள் முன்னுக்கும், பின்னுக்கும் சென்று ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தக்கூடிய மாறுதல்களாக இருந்தால், அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது. நேற்று முன்னால் பேசிய ஈரோட்டு நண்பர் அவர்கள் சொன்னதுபோல், தயிர் சிலுப்பும் ஆய்ச்சியருடைய கை போல் முன்னுக்கும் பின்னுக்கும் திட்டம் போய்வருகிற காரணத்தினால், பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகின்றன. மாறுதல்கள் முற்போக்கு நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தால், மாறுதல்களை வரவேற்பார்கள். ஒரு கல்வி அமைச்சர் வருகிறபொழுது ஒரு மாறுதல் ஏற்படுகிறது; மற்றொரு கல்வி அமைச்சர் வருகிறபொழுது மறுபடியும் பழைய நிலைக்குப் போகிறது; மற்றொரு கல்வி அமைச்சர் வருகிறபொழுது மீண்டும் வேறு ஒரு நிலைக்கு வருகிறது. மற்றொரு கல்வி அமைச்சர் வருகிறபொழுது மீண்டும் பழைய நிலைக்குப் போகிறது. அந்த வகையிலேதான் கல்வி அமைச்சர் திரு. அவினாசிலிங்க செட்டியார் காலத்திலிருந்து, பிறகு கல்வி அமைச்சராக இருந்த திரு. மாதவமேனன் காலத்திலும், பிறகு திரு. ஆச்சாரியார் காலத்திலும், பிறகு கனம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் காலத்திலும், இப்பொழுது கல்வி அமைச்சராக இருக்கிற கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் காலத்திலும் பல்வேறு மாறுதல்கள், அமைச்சர்கள் மாறுகிறபொழுதெல்லாம் ஏற்படுகிற நிலைமைகளைப் பார்க்கிறோம். மாறுதல்கள் தேவையேயில்லை, கூடாது என்பது எதிர்கட்சியினரின் கருத்து அல்ல. மாறுதல்கள் முற்போக்கு வளர்ச்சிக்கு அறிகுறியாக இருக்கிற நல்லதொரு நிலைக்கு இட்டுச் செல்கிற நிலையில் அமையவேண்டும் என்பதைத்தான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த 15 ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவத்தை ஒட்டி, இனிமேல் அடிக்கடி இப்படிப்பட்ட குழப்பம் ஏற்படாத நிலையை, அடிப்படையில் மாறுதல் ஏற்படாத நிலையைப் பெறவேண்டும் என்ற உணர்வில், இந்த மன்றத்தில்





அத்தனை பேர்களுக்கும் ஒன்று சேர்ந்து புதியதொரு கல்வித் திட்டம் உருவாக்குவதன் மூலம் இன்னும் சிலபல ஆண்டுகளுக்காவது மாறுதல் ஏற்படாத நிலையை ஏற்படுத்தவேண்டும் என்ற நல்லுணர்வுக்கு வந்திருப்பது உள்ளபடியே வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அந்த அடிப்படையிலே இந்த மாறுதல் செய்யப்படுகிறது என்று கனம் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவிப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றுதான். ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமையில் குழப்பம் அத்தனையும் நீக்கப்பட்டுவிட்டதா? சர்ச்சைக்கு இடம் இல்லாமல் ஆகிவிட்டதா? கருத்துக்கள் அத்தனையும் சீர்செய்யப்பட்டுவிட்டனவா என்று பார்த்தால், இன்னும் சர்ச்சைகளுக்கு, வாதங்களுக்கு இடம் வைக்கிற நிலைமையையும், சில பல குழப்பங்கள் இருக்கின்ற தன்மையையும் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தேவையை ஒட்டி, கல்வி நிலைமையும், போக்குகளும், அதனுடைய கருத்துக்களும் மாறவேண்டிய நிலைமைகள்தான் இருக்கின்றன. வெள்ளையர் நாட்டை விட்டுச் சென்ற காலத்தில் அவர்கள் எத்தகைய கல்வி நிலையை வைத்துவிட்டுச் சென்றார்களோ, அதே கல்வி நிலையை மாறாமல் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்ற கருத்தில் நான் எடுத்துச் சொல்லவில்லை. அதில் மாறுதல் வேண்டும். அப்படி ஏற்படுகின்ற மாறுதல் எதை நோக்கி இருக்கவேண்டுமென்றால், மக்கள் தேவையை நிறைவேற்றும் முறையில் அமைந்திருக்கிற ஒரு கல்வித் திட்டமாக இருக்கவேண்டும். பொதுவாக பெற்றிருக்கக்கூடிய அறிவு தங்களுடைய பயிற்சியையும் பழக்கத்தையும் பெருக்கச் செய்யவும், அவற்றின் மூலமாக வாழ்க்கையை நடத்த வழிவகை காண வேண்டும் என்ற வகையில் கல்வித்திட்டம் அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடு மக்கள் இருக்கிறார்கள்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், அதிலே விருப்பத்திற்கோ வேறு பல வகை எண்ணங்களுக்கோ இடமில்லாத அளவுக்கு உலகில் வாழ எந்தெந்த அடிப்படையில் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமோ, அந்த அடிப்படையில் கருத்துக்களைத் தெரிந்து, அறிவைப் பெறுகிற அளவுக்கு ஆரம்பக் கல்வி அமையவேண்டும். பிறகு, உயர்நிலைப் பள்ளிகளில் கடைசி மூன்றாண்டுக் காலத்தில் தன்னை ஒரு துறைக்கு ஆயத்தப் படுத்திக்கொள்வதற்கான வழியில் செல்வதற்கும், அதற்கான வழிவகைகளை அமைப்பதற்கும் உயர்நிலைக் கல்வி அமைய வேண்டும். உயர்நிலைக் கல்வி முடிந்த பிறகு, கல்லூரிக்கு வருகிறபோது, மிகத் தெளிந்து முழுவதும் ஒரு துறையைப் பற்றித் தெரிந்து, தன்னை ஒரு துறைக்கு ஆளாக்கிக்கொள்கிற அளவுக்குக் கல்லூரிப் படிப்பு அமையவேண்டும். பிறகு, தொழில் கல்வியானது வாழ்க்கைக்கு ஏற்ற அளவுக்கு, வசதிக்கேற்ற அளவுக்கு அமைய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்

இந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, அத்தகைய அடிப்படையில் எந்த மொழியில் எடுத்துச் சொன்னால் நல்லது என்ற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1st April 1963

ஆட்சியினர் பலரும் பல்லாண்டு காலமாக எடுத்துத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருக்கிற நிலை இருந்து வருவதை நாம் நன்றாக காண்கிறோம். நீண்ட பெருங் காலமாகவே மொழி பாடத்திட்டம் என்பதைத் தவிர மற்ற பாடங்களை எல்லாம் போதிக்கின்ற மொழி ஆங்கிலமாகவே இருந்து வந்திருக்கிறது. உயர்நிலைப்பள்ளிக் கட்டத்திலே அந்த நிலைமை முதலில் மாறிற்று. மக்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தாம் சிந்திப்பதையும், சொல்வதையும், செய்வதையும், செய்யவேண்டுமென்று எண்ணுவதையும், தாய்மொழி தமிழிலேயே, வட்டார மொழியிலேயே எழுத வேண்டுமென்ற ஆர்வத்துடன் இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆங்கிலம் பெற்றிருந்த இடத்தை தமிழ் மொழி, வட்டார மொழி, மெல்ல மெல்லப் பெற வேண்டுமென்ற, நீண்ட நெடுங் காலமாக எடுக்கப்பட்டு, உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலம் பாட மொழியாக இருந்த நிலைமை மாறி, ஆங்கிலத்தில் மொழி அறிவு பெறும் அளவு மட்டும் வைத்து, வரலாறு, பூகோளம், உயிர் நூல், கணக்கு, பொருளாதாரம் ஆகியவை அத்தனைப் பாடங்களுக்கும் தமிழிலேயே பயிற்சி பெறவேண்டுமென்று முயற்சி எடுக்கப்பட்டது. அந்த நிலைமைகள் அந்த அளவோடு முடிந்து விட்டதா என்று பார்க்கும் போது, ஆராய்ச்சியாளர்களும், வல்லுநர்களும் எடுத்துக்கூறியுள்ள கருத்து என்றைக்காவது ஒரு நாளைக்கு பல்கலைக் கழகப் படிப்பு, வட்டார மொழியிலேதான் இருக்கவேண்டும், வட்டார மொழியில்தான் அந்த அறிவைப் பெறுவதற்கான வசதிகளை அளிக்கவேண்டும் என்பதுதான். நாட்டில் இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் தாய் மொழியிலேயே எழுதக்கூடிய அறிவையும், ஆற்றலையும் பெறுவதற்கான அந்த அடிப்படையிலே கல்லூரி போதனையாவது தாய் மொழியிலேயே பெறுவதற்கான நிலைமைகள் ஏற்படவேண்டுமென்பதைப் பல்லாண்டுகாலமாக பலரும் வற்புறுத்திக் கூறிவந்திருக்கிறார்கள், அந்த முயற்சி செய்துகொண்டு வருவதில் வெற்றிபெற்றோமா? அதை நிறைவேற்றுவதில் அரசினர் போதிய கவனம் செலுத்தினார்களா? என்பதை உன்னிப் பார்க்கும்போது எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், 'இந்த அரசினர் அத்தகைய முயற்சிகள் எடுப்பதிலே தயக்கம் காட்டி வருகிறார்கள், அத்தகைய முயற்சி சரியாகச் செய்யவில்லை' என்ற குற்றச்சாட்டை தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

(திரு. ந. சண்முகசுந்தரம் தலைமை.)

இன்று ஆட்சிமொழி தமிழாக இருக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லும்போது, ஆட்சிச் துறைகளிலே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அதிகாரிகள் தமிழ் அறிவு பெற்றவர்களாக இருந்து தீரவேண்டும். ஆட்சித் துறைகளிலே அவர்கள் தமிழ் அறிவு பெற்றவர்களாக இருந்தால்தான் தமிழ்க் கொள்கையை நிலைநாட்ட முடியும். இன்றைய தமிழக அரசு ஆட்சி மொழி தமிழ் என்பதைத் திட்டவட்டமாக எடுத்து தெரிவித்திருக்கிறது.



1st April 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

யில் இயக்கவேண்டிய பொறுப்பு அரசினருக்கு இருக்கிறது. பொறுப்பு அரசினரிடத்தில் இருக்கிறது என்றால் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள் தமிழ் அறிவு பெற்றவர்களாக, தமிழிலே படித்தவர்களாக இருக்க வேண்டும். அந்த அதிகாரிகள் தமிழிலே படித்தவர்களாக இருந்து தீரவேண்டுமென்றால் அவர்கள் அந்தத் தமிழ் அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பைக் கல்லூரியிலே ஏற்படுத்தித் தரவேண்டும். கல்லூரியிலே தமிழ் அறிவை ஏற்படுத்தித் தரும் வகையில், பயிற்சி மொழியாக ஆங்கிலம் இருப்பதை மாற்றி, தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கவேண்டும். இன்றைக்கு தமிழ் ஆட்சிமொழி என்ற திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையில், மீன் துறையாக இருந்தாலும்; விவசாயத் துறையாக இருந்தாலும்; பொதுப்பணித் துறையாக இருந்தாலும்; பொறியியற்றுறையாக இருந்தாலும்; அலுவலகத் துறையாக இருந்தாலும்; மாவட்ட ஆட்சி மன்றமாக இருந்தாலும்; உள்ளாட்சி மன்றமாக இருந்தாலும், சட்ட மன்றமாக இருந்தாலும், அந்தத் துறையிலே பணியாற்றக்கூடிய அலுவலர்களாக இருந்தாலும்; இந்த மன்றத்திலே குறிப்பெடுக்கின்றவர்களாக இருந்தாலும்; அத்தனைபேரும், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்றால் தமிழ் அறிவைப் பெற்றவர்களாகத்தான் இருந்து தீர்வேண்டும். அப்படித் தமிழ் அறிவு பெற்றவர்களாக இருந்து தீரவேண்டுமென்று சொல்லும்போது அவர்கள் பத்தாவது படிக்கும் அளவுக்கு தமிழ் அறிவு பெற்றிருந்தால் மட்டும் போதாது. கல்லூரிப் பாட மொழியின் மூலமும் தமிழ் அறிவைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஆட்சிமொழி தமிழாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்திய இந்த அரசினர் பாடமொழியைத் தமிழிலேயே கொண்டுவர, எந்த அளவுக்கு முயற்சி எடுத்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, இந்த அரசின் இறுதி நோக்கமாக, பல்கலைக் கழகப் பயிற்சி மொழி, தமிழாகத்தான் இருக்கவேண்டுமென்று முடிவு செய்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. அதற்கான முயற்சிகளிலே ஈடுபடுகிறோம் என்று சொல்வதும் வரவேற்கத் தக்க ஒன்று. ஆனால், கிடைத்திருக்கும் அதிகாரிகள், வைத்திருக்கும் உரிமை, பொருளாதார வசதிகளை வைத்துக்கொண்டு ஆட்சி மொழி தமிழாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்த பிறகு இந்த முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்படுகிறதா, எண்ணம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறதா என்றால் நிறைவேற்றப்படவில்லை, தயக்கம் காட்டப்பட்டு வருகிறது என்ற குற்றச்சாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாந்தவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் இத்தகைய நிலைமை ஏற்பட வழிவகை ஏற்பட்டிருக்காது.

1939 மார்ச்சுத் திங்களில் பம்பாயில் கூடிய இந்தியப் பல்கலைக் கழகங்களின் மாநாட்டில் "கல்வித் துறையின் பல்வேறு நிலைகளிலும் பட்டப் படிப்பு உள்பட சூழ்நிலைகள் இடங்கொடுப்பதற்கு ஏற்ப மாணவர்களின் தாய் மொழியிலேயே பாடங்களைப் பயிற்றுவிக்க முற்படவேண்டும்" என்று தீர்மானித்திருக்கிறது.

1939-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1st April 1963

திற்கு ஏற்ப கல்லூரிகளின் இடைநிலை வகுப்புகளிலும் பட்டப் படிப்பு வகுப்புகளிலும் இந்திய மொழி ஒன்றில் பயிற்றுவிக்க அனுமதி அளிக்கப்படுமென்றும் அதுவும் விருப்பத்தை முன்கூட்டியே தெரிவித்தால் அந்த மொழியில் தேர்வு எழுதுவதற்கான வசதி செய்யப்படுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

1943-ல் மறுபடியும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சின்டிகேட் "மாணவர்கள் ஒரு ஆண்டு முன் அறிவிப்பு கொடுத்து இடைநிலை வகுப்பின் மூன்றாவது பாகத்தில் அடங்கியுள்ள பாடத் திட்டங்களை இந்திய மொழி ஒன்றில் எழுத விரும்பினால் அனுமதி அளிக்கப்படும், வசதி செய்து தரப்படும்" என்று தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

1948-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முடிவு "கலை இளைஞர் அதாவது பி.ஏ. பட்டப்படிப்புத் தேர்வு எழுதுபவர்கள் ஓராண்டு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு இந்திய மொழியில் தேர்வு எழுதலாம், அதற்கு வசதி செய்து தரப்படும்" என்பதாகும்.

1946-ல் எடுத்துக்கொண்டாலும், மூன்று கல்லூரிகளில் தமிழ் பாடமொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது. கோவை கலைக் கல்லூரியிலும் தமிழ்ப் பாடமொழித் திட்டம் புகுத்தப்பட்டிருக்கிறது. போதுமான ஆயத்தம் சரியாக இல்லை என்று அந்த முயற்சி கைவிடப்பட்டிருக்கிறது.

1958-ல் இந்தியப் பேரரசால் அமைக்கப்பட்ட துணை வேந்தர்கள் அடங்கிய குழு "1948-ல் இருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கு பல்கலைக் கழக நிலையில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்திய மொழிகள் பாட மொழியாக ஆக்கப்படவேண்டும். பாடம் சொல்லிக் கொடுப்பதிலும், தேர்வு எழுதுவதிலும் இந்திய மொழிகளிலேயே நடைபெற வேண்டும். 1953-க்குப் பிறகு ஆங்கிலம் பாடமொழியாகவும் தேர்வு மொழியாகவும் இருப்பதிலிருந்து நீங்கவேண்டும்" என்று தெரிவித்திருக்கிறது.

மத்திய கல்வி ஆலோசனைக் குழுவினர் Central Advisory Board of Education "எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக் கழக நிலையில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்திய மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டுவருவது குறிக்கோளாக இருக்கவேண்டும்" என்று கூறி இருக்கிறார்கள்.

1-00 p.m. மத்திய கல்வி ஆலோசனைக் குழு (சென்ட்ரல் அட்வைசரி போர்டு ஆஃப் எஜுகேஷன்) எல்லாப் பல்கலைக் கழகங்களும் பல்கலைக்கழக நிலையில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்திய மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு வருவதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 15, 20 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலிருந்தே, 'பல்கலைக்கழகப் படிப்பு தமிழில் கொண்டுவரப்படவேண்டும், வசதி செய்துத் தரப்படவேண்டும், தேர்வு எழுதுவதற்கு வசதி செய்து தரப்படும்' என்று உறுதி



1st April 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உறுதிமொழி இவ்வளவு ஆண்டுக் காலமாக, பன்னெடுங்காலமாகக் கொடுக்கப்பட்டுவந்தும், நிறை வேற்றப்பட முடியாமல் போனதற்கு காரணம் என்ன என்பதைத்தான் நாங்கள் கேட்க ஆசைப்படுகிறோம். தக்க முயற்சிகள் எடுக்கப்படாததன் காரணமாகத்தான் அத்தகைய நிலைமை இருக்கிறது.

சமஸ்க்ருதத்தில் பல்கலைக்கழகத்தை நடத்த முடியும் என்கிற அளவுக்கு உத்தரப் பிரதேசத்திலுள்ள வாரணசி பல்கலைக் கழகத்தில் சமஸ்க்ருதத்தைப் பாடமொழியாக அங்கே வைத்து நடத்தும் அளவுக்கு இருக்கிறார்கள். ஐதராபாத் ஒஸ்மானிய பல்கலைக்கழகம் நீண்ட காலத்திற்கு முன்னால் உருது மொழியைக் கொண்டு பல்கலைக் கழகத்தில் பாடம் நடத்தலாம் என்கிற அளவுக்கு முயற்சி எடுத்து, அதையும் நடத்திக்கொண்டு வருகிறார்கள். பல்வேறு மாநிலங்களிலும் கல்லூரிப் படிப்பையும், பல்கலைக்கழகப் படிப்பையும் அந்தந்த வட்டார மொழிகளில் கொண்டுவர முயற்சிகள் எடுத்திருக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில், கல்லூரியில் பட்டப் படிப்புக்கும் இந்தி மொழி பயிற்சி மொழியாக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. அகமதாபாத்திலுள்ள குஜராத் பல்கலைக்கழகம் குஜராத்தி மொழியைப் பாட மொழியாகக் கொண்டிருக்கிறது. எம். ஏ. பட்டம், பிஎச். டி. என்கிற டாக்டர் பட்டம் பெறுகிற தேர்வுகளுக்குக்கூட குஜராத்தியைப் பாடமொழியாக அறிவிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வளவு தரமுள்ள முடிவு எடுக்கப்பட்டது வரவேற்கத்தக்கது என்று அந்தப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையில் சொல்லப்படுகிறது. மராட்டியத்தில் மராட்டிய மொழியில் நூல்களை அதிகமாகக் கொண்டுவர தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு, அதற்காகத் தனி இலாக்கா அமைத்திருக்கிறார்கள். இதுபோல், பல்வேறு மாநிலங்களில்கூட, வட்டாரமொழியைப் பயிற்சி மொழியாகவும், பாட மொழியாகவும் கொண்டுவருவதற்காக ஒரு தனித் துறையை வைத்தே மிகத் தீவிரமாக ஈடுபட்டு, நூல்களை அதிகமாகக் கொண்டுவரவும், தேவைகளை நிறைவேற்றவும், நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு என்ன என்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ, அத்தகைய முயற்சிகளை எடுப்பதற்காகத் தனி இலாகா வைத்து, நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். நாகபுரி பல்கலைக் கழகத்தில் இந்தி, மாராத்தி ஆகிய இரண்டு மொழிகளையும் பாட மொழியாக வைக்கலாம் என்கிற அளவுக்குக்கூட அந்தப் பல்கலைக்கழகம் இடம் அளித்திருக்கிறது. பஞ்சாப் பல்கலைக்கழகம் இந்தியையும் பஞ்சாபியையும் பாட மொழிகளாகக் கல்லூரி நிலையில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மாநிலத்தை பொறுத்தவரையிலும், இறுதிக் குறிக்கோள், பாட மொழி தமிழில்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்கிற முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டும் என்று ஏற்கனவே பத்து, பன்னிரண்டு ஆண்டுக்

காலமாக வற்புறுத்தி வந்துங்கூட, அந்த முயற்சிகள் எடுக்கப்படாமல் தயக்கப்படுவதற்குக் காரணம் என்ன என்பதைத்தான் நாங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

இந்தியை அகில இந்திய ஆட்சிமொழியாக ஆக்கவும், அகில இந்தியாவில் இந்திக்கான வளப்பத்தையும் வளர்ச்சியையும் காண்பதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 கோடி 40 லட்சம் ரூபாய் அந்த மொழிக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் 3,50,000 கலைச் சொற்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு பெருந்தொகை செலவழிக்கப்பட்டும் 2,90,000 கலைச் சொற்கள் இந்தியில் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அளவுக்கு நாம் தமிழ் நூல்களைக் கொண்டுவர, ஆட்சிச் சொற்களைக் கண்டுபிடிக்க, அதற்கான ஆட்சியினுடைய நேரம், நினைப்பு, உழைப்பு, பொருள் ஆகியவற்றைச் செலவழிப்பதற்கு இந்த அரசினர் முயற்சி எடுக்கவில்லை. இப்பொழுது சிக்கல்கள் பலவற்றை மன்றத்தின் முன் கொண்டுவந்து வைக்கிறார்களே தவிர, முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தால், இத்தகைய சங்கடங்கள், தொல்லைகள் ஏற்படுவதற்கு வழி இருக்க முடியாது. இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் எல்லாம் 1960-ஆம் ஆண்டில் இரண்டு மூன்று கல்லூரிகளில் 'ஹ்யூமானிடீஸ்' என்று சொல்லப்படுகிற கலைப் பாடங்களைத் தமிழில் கொண்டுவர முயற்சி செய்தோம். "முதலில் 20 மாணவர்கள் இருந்தார்கள். அடுத்த ஆண்டு 9 மாணவர்கள் படிக்க வந்தார்கள். மூன்றாவது ஆண்டு மூன்று மாணவர்கள்தான் படிக்க வந்தார்கள். எனவே, மாணவர்களிடையே இதற்கு உற்சாகம் இல்லை, ஊக்கம் இல்லை, ஆகவே இதற்காகப் பணம் செலவழிக்கவேண்டிய நிலை ஏற்படவேண்டுமா? ஆசிரியர்களைப் போட வேண்டுமா? இதற்காகப் பெருந்தொகை செலவழிக்கவேண்டிய நிலையை இந்த அமைச்சரவை ஏற்றுக் கொள்ள வேண்டுமா?" என்ற கருத்தை கனம் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்து வைத்தார்கள். இப்படி எடுத்துச் சொல்லப்படுகிற நிலைமையிலுங்கூட, பல கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 'கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவை அத்தனையிலும் இப்போதே தமிழைப் பாட மொழியாகக் கொண்டுவரவேண்டும், பாடமொழி ஆக்கவேண்டும்' என்ற கருத்தை எதிர்க் கட்சியினர் வற்புறுத்துவதாக நினைத்துக்கொண்டு, 'அது எப்படி ஆகும்? தமிழை மட்டும் வைத்துக்கொண்டால் ஆகுமா?' என்ற கருத்தைச் சொல்கிறார்கள். இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுடைய கருத்தை மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தமிழில் ஆட்சின்ய நடத்த, நிர்வாக அறிவைப் பெற, பாட மொழிப் பயிற்சியைப் பெற, ஒருவர் மற்றொருவரோடு உரையாட, உள்ளாட்சி மன்றத்தை நடத்த, சட்ட மன்றத்தை நடத்த, வரி வசூலிக்க, வாணிபம் செய்ய, வியாபாரம் செய்ய, வேறு பல வகைகளில் தமிழன் தமிழனோடு தொடர்புகொள்ள தமிழர்





களோடு தொடர்பு கொண்டு ஆக்கப் பணிகள் பலவற்றைச் செய்ய, ஆகியவற்றிற்குத் தமிழ் மொழி போதும். தமிழ் அல்லாதவர்களோடு தமிழ்மட்டும் போதாது. அதை நாங்கள் திட்டவட்டமாக உணருகிறோம். அமெரிக்காவோடு, ஜப்பானோடு, வேறு பல நாடுகளோடு தொடர்பு கொள்ள தமிழ் மட்டுமே போதுமா என்றால் போதாது. அமெரிக்கத் தலைவரோடு தொடர்பு கொள்ள, ஜப்பானிய நாட்டுத் தலைவரோடு தொடர்பு கொள்ள, ருஷ்ய நாட்டு விஞ்ஞானிகளோடு தொடர்பு கொள்ள தமிழ் மட்டும் போதாது. ஆகவே, தமிழ் போதாது என்ற காரணத்தினால்தான், தமிழ் நிறைவேற்றித்தராத பணிகளை நிறைவேற்றித்தர, தமிழால் எங்கெங்கே இயலவில்லையோ அப்படி இயலாத இடத்தில் வந்து உதவி செய்ய, ஒரு மொழி தேவை. அந்த மொழி இன்றைக்கு உலகத்திலே இருக்கும் 999 மொழிகளில் எந்த மொழி என்று பார்க்கும்போது, அதிக வாய்ப்புடைய, வசதியுடைய மொழியாய், தமிழினுடைய குறையை நிவர்த்தி செய்யக்கூடிய மொழியாய், தமிழுக்கு என்றைக்கும் உதவி மொழியாய் வரக்கூடிய மொழி என்ன என்று பார்க்கும்போது, சரியாகவோ தவறாகவோ, நம்முடன் 150, 200 ஆண்டுகளாகத் தொடர்பு கொண்டிருக்கிற மொழி ஆங்கிலமாக இருக்கிறது. எனவே, ஆங்கில அறிவு அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறோம். அதை உணர்ந்திருப்பதால்தான், ஆங்கிலத்தை முழு அளவுக்கு மூன்றாவது வகுப்பிலிருந்து சொல்லிக் கொடுக்கும் கொள்கையைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முழுமனதோடு ஆதரிக்கிறார்கள். நானும் அதை ஆதரித்து பேசியிருக்கிறேன்.

தமிழ் பாடமொழியாக இருந்து, அதன் மூலம் பாடங்கள் சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும். கல்லூரியிலும் தமிழ பாடமொழியாக இருந்து அதன்மூலம் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படவேண்டும். அதே நேரத்தில் ஆங்கில மொழி அறிவும் வேண்டும். அந்த அறிவு பெறுவதற்கான முறையில், மூன்றாவது வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பு வரையில் திட்டத்தை ஏற்றவாறு அமைத்துத்தர வேண்டும். பத்தாவது படித்து முடிக்கும்போது, ஆங்கிலத்தின் மூலம் தெரிவிக்கும் வகையில் ஆங்கில பாட திட்டங்கள் அமையவேண்டும். அந்த ஆசிரியர்களும் நடத்தித் தீரவேண்டும் என்ற நிலை இப்பொழுது இருக்கிறது. தமிழில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் நிலைமைக்கு, தமிழில் எடுத்துச் சொல்லும் அளவுக்கு, 10-வது முடிக்கும் நிலையில் இருக்க வேண்டும். அதற்கு மேலே தொடர்ந்து ஆங்கிலம் இருந்து கொண்டு வந்தது. பாடமொழி தமிழாகக் கொண்டுவரவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டு முயற்சி செய்ததன் காரணமாக உயர்நிலைப்பள்ளிக் கட்டம் வரையில் ஆங்கிலம் பாட மொழியாக இருந்தது மாறி, தமிழகத்தில் தமிழ் பாடமொழியாக இருக்க வேண்டுமென்று ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிலேதான் தமிழ் பயிற்சி மொழி ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு போக வேண்டிய கட்டம் கல்லூரி. ஏனென்றால், கல்லூரியில் இப்பொழுது சொல்லிக்கொடுக்கப்படுகின்ற பாட மொழி ஆங்கிலமாக

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1st April 1963

இருக்கிறது. அங்கே தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வது பி.ஏ. அளவோடு நின்றுவிடாமல், ஆனர்ஸ், போஸ்ட்-க்ராஜுவேட் வகுப்பினரும் தமிழ் அறிவு பெற்று இன்றைக்கு ஆங்கிலத்தில் படிக்கும் கெமிஸ்டரி, ஃபிஸிக்ஸ், அல்லது வேறு பல பாடங்களையும் தமிழில் படிக்கும் நிலைமை ஏற்படவேண்டும். எம்.ஏ. பட்டம் பெற்று வெளியே வரும்போது, ஆங்கிலத்திலே பெற்ற அளவுக்குத் தமிழில் ஆற்றல் பெறுவதற்கு எந்த அளவு தமிழைக் கல்லூரியில் புகுத்த முடியுமோ, அந்த அளவுக்கு எம்.ஏ.-இலும் தமிழறிவோடு இலக்கணமும் அந்த அளவுக்குச் சொல்லிக்கொடுக்கும் முயற்சியை உடனடியாக எடுப்பதில் தவறோ, கஷ்டமோ, தொல்லையோ இருக்க நியாயம் இல்லை. உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் ஆங்கிலத்தை மெல்ல மெல்ல அகற்றி, தமிழுக்கு எப்படி இடம் அளித்தோமோ அந்த முறையில் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் தமிழுக்கு இடம் அளிக்கவேண்டும். உயர்நிலைப்பள்ளி முடியும் வரையில் அத்தகைய முயற்சி வெற்றி பெற்றுவிட்டது. இப்பொழுது வெற்றிபெற வேண்டிய கட்டம் கல்லூரிக் கட்டம். அதிலே பாட மொழியாக தமிழ் மெல்ல மெல்ல இடம் பெறவேண்டியதாக இருக்கிறது. அத்தகைய நிலையில் ஆங்கிலத்திலே படிப்பதற்கான வாய்ப்பு அறவே கூடாது, நூற்றுக்கு நூறு தமிழில் படித்துக் கொள்ளவேண்டும் என்ற நிலைமையை நான் வற்புறுத்திச் சொல்லவில்லை. ஆனால், உயர் நிலைப்பள்ளிப் படிப்பில் எப்படி தமிழ், ஆங்கிலத்தின் இடத்தைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறதோ அப்படி, மெல்ல மெல்ல கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடித்து வெற்றிபெறவேண்டும் என்ற கொள்கை நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். அந்தக் கொள்கையை இந்த மன்றம் ஏற்றுக்கொண்டு 1963-64-ம் ஆண்டில் பட்டப்படிப்பைப் பொறுத்த வரையில், ('ஹ்யூமானிடீஸ்') கலையியல் பாடங்கள் தமிழில் போதிக்கப்படவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. இப்பொழுது தமிழைப் புகுத்த வேண்டுமென்று நாங்கள் சொல்லும்போது, பல கனம் உறுப்பினர்கள் இன்றைய நிலையில் நாளை காலை 6 மணிக்கே பல்கலைக் கழகங்களில் இருக்கும் இயற்கைப் பொருட்பாடம்; கலைப் பொருட்பாடம்; உயிர் நூல்; கணக்கு, கால்குலஸ், ட்ரிக்னமெட்ரி போன்ற அத்தனையும் தமிழில் கொண்டுவந்துவிடவேண்டும் என்று சொல்வதாக நினைத்துக் கொண்டு கருத்துக்கள் சொல்கிறார்கள். இந்த ஆட்சியினர் எடுத்த முடிவு, பட்டப் படிப்பில் கலையியல் பாடங்களை மட்டும் 1963-64-ம் ஆண்டில் தமிழிலேயே மாற்றுவது என்பதுதான் விஞ்ஞானப் பாடங்களைப் பொறுத்தவரையில், எந்த மாற்றத்தையும் வெள்ளை அறிக்கையில் கூறவில்லை. மற்றவர்களும் இன்றைய நிலையில் கூறவில்லை. 1963-64-ல் கெமிஸ்டரி, ஃபிஸிக்ஸ், ஸுவாலஜி போன்ற பாடங்கள் தமிழில் சொல்லிக் கொடுக்கப்படவேண்டும். தமிழில் ஆக்கப்படவேண்டும் என்ற திட்டம் வெள்ளை அறிக்கையில் புகுத்தப்படவில்லை, இப்பொழுதும் வற்புறுத்தப்படவில்லை. வெள்ளை அறிக்கையில் சொல்லியது, 1963-64-ல் மாற்றுவதாகச் சொல்லப்பட்டது கலையியல் பாடம் மட்டுந்தான்



1st April 1963] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அந்தக் கலையியல் பாடங்களைத் தமிழில் மாற்றுவதிலே கடினம் ஏற்பட்டிருக்கிறதா என்றால், கடினம் ஏற்பட நியாயம் இல்லை. பொருளாதாரத்தையும், தர்க்கசாஸ்திரத்தையும், பூகோளத்தையும், வரலாற்றையும் தமிழ் மயமாக ஆக்கிக் கொடுப்பதில் அதிகக் கடினம் இருக்க நியாயம் இல்லை. "கால்குலஸ், ட்ரிக்னமெட்ரி, ஜியாமெண்டரி", ஆகியவற்றைத் தமிழ் மயமாக ஆக்குவது கடினம். கலையியல் பாடங்களைத் தமிழ் மயமாக ஆக்க முடியும் என்ற காரணத்தால் மூன்று கல்லூரிகளிலே தமிழை பயிற்சி மொழியாகப் புகுத்தியிருக்கிறார்கள். தமிழிலே கலையியல் பாடங்களை மூன்று பள்ளிகளிலே படிக்க முடியும் என்றால், 74 கல்லூரிகளிலே ஏன் படிக்க முடியாது? நாலைந்து பேர்கள்தான் வருகிறார்கள் என்றால், ஆரம்ப கட்டத்தில் அப்படித்தான் இருக்கும். இருபது பேர் 9 ஆகி, 9 பேர் 3 ஆகி விட்டதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டுவிட்டதன் காரணமாகத்தான் 1963-64-ல் எல்லாக் கல்லூரிகளிலும் கலையியல் பாடங்களைத் தமிழிலே படிக்கவேண்டுமென்ற, திட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை. தமிழிலே படிக்கவேண்டுமென்றால் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்திருக்கவேண்டும். ஆங்கிலமும் தமிழும் தெரிந்தவர்களாகவும், அதே சமயத்தில் தமிழார்வம் கொண்டவர்களாகவும் யார் யார் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து, அவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருக்கவேண்டும். இன்றைய நிலையில் கல்லூரிகளில், பல்கலைக் கழகத்தில் இருப்பவர்கள் பெரும்பாலோர் தங்களுடைய கருத்தை ஆங்கிலத்தில் சொல்வதற்கு மட்டுமே ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிறார்கள். தமிழில் சொல்ல ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறார்கள். இரண்டிலும் எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர்களும் பல கல்லூரிகளில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பேராசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்திருந்தால் இந்தக் குறையை இப்போது தீர்த்திருக்க முடியும். ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் ஆட்சி மொழி என்று ஏற்படுத்தப்பட்ட பிறகு, இன்ன இன்ன துறைகளில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்பட்டு வருகிறது என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறைகளுக்கான அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும்போது அந்த அதிகாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் கல்லூரியிலே தமிழிலே படித்தவர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று சொன்னால், 20 மாணவர்கள் என்ற எண்ணிக்கை மூன்று என்ற அளவுக்குக் குறையாது; 40 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கும். இன்னொரு குறைபாட்டையும் அரசினர் வைத்துக்கொண்டு சிக்கலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பி.ஏ. படிப்பிலே தமிழ் என்று வைத்து விட்டு இடையிலே இருக்கின்ற புகுமுக வகுப்பிலே தமிழைப் புகுத்தும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. பத்தாவது படிப்பு வரையிலே தமிழிலே படித்துவிட்டு மீண்டும் ஓராண்டுக் காலம் ஆங்கிலத்திலே படித்து விட்டு, மறுபடியும் தமிழிலே பி.ஏ. வகுப்பிலே படிக்கவேண்டுமென்று இருப்பது சரியான முறையல்ல. அந்த வகையில் புகுமுக வகுப்பிலும் தமிழிலே பாடம் சொல்லிக்

கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கலையியல் பாடங்களைத் தமிழில் படிப்பதன் காரணமாக ஆங்கில அறிவு அடியோடு அற்றுப் போய்விடுமோ என்றால், 1963-64-ல் இருந்து மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கில மொழிப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யபட்டிருக்கிறது. கலையியல் பாடங்களைத் தமிழிலே படிப்பதன் காரணமாக ஆங்கில அறிவு அற்றுப்போகும் நிலைமை இல்லை. பல நூறு ஆண்டுக் காலமாக சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாக, சமுதாயத்தில் பெற வேண்டிய வசதிகளைப் பெற முடியாத நிலைமையில் ஒதுக்கப்பட்டவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக, பிற்படுத்தப்பட்டவர்களாக இருப்பவர்களை மற்றவர்களுடைய நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகச் சில பல சலுகைகளை அவர்களுக்குத் தந்து, அவர்களுக்காகத் தனியாக நிதி ஒதுக்கி அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதுபோல், பல்லாண்டு காலமாக ஆட்சித்துறையிலும், பாட மொழியிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிற நிலைமையில் தமிழுக்குச் சில பல சலுகைகளைத் தரும் வகையில் தமிழிலே படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமும், அதற்கான பொருள் செலவைச் செய்கின்ற வகையிலும், தமிழிலே படித்துத் தேறுகின்றவர்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்பிலே முதல் சலுகை கொடுக்கப்படும் என்ற வகைகளில் முயற்சிகளை அரசினர் மேற்கொண்டிருந்தால் இந்தச் சிக்கல்கள் வர நியாயமே இல்லை. பதினைந்து, இருபது ஆண்டு காலமாக இந்தக் கொள்கை வற்புறுத்தப்பட்டு வந்த போதிலும், இந்தக் கொள்கையை ஈடேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகள் குறைவு; தயக்கம் அதிகம். இதிலே எடுத்துக் கொள்ளப்படவேண்டிய அளவுக்கு அக்கறை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்குமானால் கலையியல் பாடங்களைப் பொறுத்தமட்டில் தமிழிலே சொல்லிக் கொடுப்பதில் வெற்றி கண்டிருக்க முடியும். அந்த வகையிலே அதிகமான அக்கறையை இந்த அரசினர் எடுத்துக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டைத்தான் நாங்கள் கூறுகிறோம்.

தமிழ் பாட மொழித் திட்டத்துக்காக நிதி ஒதுக்கப்பட்ட கணக்கைப் பார்த்தால்; 1961-62-ல் ரூ 8,77,000, 1962-63-ல் ரூ. 18,37,000, தற்போது 1963-64-இல் ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 11,33,700 பாட மொழிப் புத்தகங்களைக் கொண்டுவரும் முழுப் பொறுப்பையும் அரசினர் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைத்து, அதற்காகத் தனியாக இலாகா ஏற்படுத்திக் தேவையான நூல்களைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைச் செய்திருக்கலாம். அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, நூல்களைக் கொண்டு வருவதற்கான பயிற்சியை ஆசிரியர்களுக்குக் கொடுத்திருக்கலாம்.

அப்போது 1963-64-ல் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாட மொழியாக வைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று கூறினார்கள். அப்போது அரசினர் எல்லாக் கல்லூரிகளுக்கும் நோட்டீஸ் விட்டதாகவும் முன்னாள் கல்வி அமைச்சர் கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். அந்த நோட்டீஸ்களுக்கு அந்த அந்தக் கல்லூரிகள் அளித்த பதில் என்ன



என்று தெரியவில்லை. 1963-64-ல் கலையியல் பாடகள் எல்லாம் தமிழ் மொழியிலே பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்று அறிக்கை விடப்பட்டதாகக் கூறினார்கள். அந்த அறிக்கைக்கு என்ன பதில் கிடைத்தது என்று தெரியவில்லை. மேலும், அரசினர் கல்லூரிகள் அத்தனையிலும் கலையியல் பாடங்கள் அத்தனையும் தமிழிலே பயிற்றுவிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். "தனியார் துறையிலே ஆங்கிலத்திலே சொல்லிக் கொடுப்பதுபற்றி ஆட்சேபணை இல்லை, அரசினர் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழிலே சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். ஆனால், ஆங்கிலத்திலே சொல்லிக் கொடுக்கப்படுகிற கல்லூரிகளுக்கு அரசாங்க மானியம் நிறுத்தி வைக்கப்படும்" என்று முன்னாள் கல்வி அமைச்சர் கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் பல்கலைக் கழகங்களுக்கு மானியம் கொடுத்து உதவுகிற போதுகூட சில பல நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் மானியம் தரப்படும் என்ற கொள்கையை யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று நம்முடைய அரசாங்கமும், ஆரம்பக் கல்வி இலவசமாகப் போதிக்கவேண்டுமென்ற திட்டத்தை நிறைவேற்றும் வகையில், மாணவர்களிடம் இருந்து சம்பளம் பெறுகின்ற பள்ளிகளுக்கு அரசாங்கத்தின் மானியம் கிடையாது என்று சொன்னார்கள். அந்த முறையில் கல்லூரிகளில் கலையியல் பாடங்களைத் தமிழில் கொண்டுவர இயலாது. ஆங்கிலத்தில்தான் வைத்துக்கொள்வோம் என்று கூறுகின்ற கல்லூரிகளுக்கு அரசாங்க மானியம் குறைக்கப்படும் என்ற கொள்கையை நிலைநாட்டுவதில் தவறு இல்லை. அந்தக் கொள்கையை நிலைநாட்டுவதில் தயக்கம் ஏன் என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

மும்மொழிக் கொள்கையைப்பற்றி ஒரு கருத்தைக்கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் ஆட்சி நடத்த, தமிழர்கள் ஒருவருக்கொருவர் பழக, தமிழ் போதும். அகில உலகத் தொடர்பு கொள்ள, அகில இந்தியத் தொடர்பு கொள்ள, திராவிடத்தின் மற்றப் பகுதிகளுடன் தொடர்பு கொள்ள ஆங்கிலம் போதும். தமிழ்நாடு அமைய வேண்டுமென்ற கொள்கையானாலும் சரி, திராவிடக் கூட்டாட்சி பெற வேண்டுமென்ற திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையானாலும் சரி, இந்தியா ஒன்றாக இருக்கவேண்டுமென்ற கட்சியினரானாலும் சரி, பாகிஸ்தானும் கொண்ட அகண்ட பாரதத்தை அமைக்கவேண்டுமென்று சொல்கிற இந்து மகாசபையினரானாலும் சரி, உலகத் தொடர்பு கொள்ள வேண்டுமென்று சொன்னாலும் சரி, ஆங்கில மொழி ஒன்று இருந்தால் போதும். இப்போது ஆங்கிலம் மூலமாகத்தான் அந்தத் தொடர்புகளை நாம் கொண்டிருக்கிறோம். அது அப்படியே நீடிக்கவேண்டும்.

1965-க்குப் பிறகு இந்திதான் முழுக்க முழுக்க இடம் பெறும் என்ற கொள்கையை வகுத்திருந்தார்கள். இந்தி பேசும் மாநிலத்

தவர் தங்களுக்கு இந்திதான் வேண்டுமென்றால் இந்தியை வைத்துக்கொள்ளட்டும். ஆனால், இந்தி பேசாத மாநிலங்கள் தொடர்ந்து அகில இந்தியத் தொடர்பு கொள்ள, அகில உலகத் தொடர்பு கொள்ள, தேவைப்படுகிறபோது ஆங்கிலம் இருக்கட்டும் என்ற நிலை இருக்கிறது. முதல் மொழி வட்டார மொழியாக இருக்கும், மூன்றாவது மொழியாக ஆங்கிலம் அகில உலகத் தொடர்பு கொள்ள, அகில இந்தியத் தொடர்பு கொள்ள கட்டாய பாடமாக இருக்க வேண்டுமென்று வைக்கப்பட்டது. இரண்டாவது மொழி தேவையற்றது என்ற நிலையில் எடுத்துச் சொல்லப்படுகிறது. வடநாட்டு மாநிலங்களைச் சுற்றி பார்த்துவிட்டு, அங்குள்ள பல்கலைக் கழகங்களின் படிப்பை, மற்றவற்றை உணர்ந்திருப்பவர்கள் சொல்கிறார்கள். இந்திக்கு இடம் கொடுத்து விட்டு, ஆங்கிலத்திற்கு இடம் கொடுத்துவிட்டு வேறு எந்த மொழிக்கும் ஆசிரியர்களோ அல்லது மாணவர்களை சேர்க்கும் நிலை இல்லாமல் இரண்டு மொழிகளுக்கு மட்டும் இடம் கொடுத்து கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்கள் வேறு மொழி பயில்வதோ அல்லது இந்தி அல்லாத ஒரு மொழியில் ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் பழக்கமோ பல இடங்களில் இல்லை. ஏட்டில் மும்மொழி என்று குறிப்பிடப்பட்டிருந்தும் இரண்டு மொழிகள்தான்—இந்தியும், ஆங்கிலமும்—சொல்லிக் கொடுக்கப்படுகிற முறை வட மாநில பல்கலைக் கழகங்களில் இருக்கிறது. அங்கு இந்தி, ஆங்கிலம் என்றிருப்பதுபோல் இம்மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் தமிழ், ஆங்கிலம் இவை போதும். ஆகவே, நாம் ஏற்கனவே கடைப்பிடித்துவரும் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றுதான் திராவிட முன்னேற்றக் கழகம் கூறுகிறது. 'ஸ்டாடஸ்கோ'-வை மாற்றாதீர்கள். இருக்கிற கொள்கையை நிறைவேற்றுங்கள். 1963-64-ல் கல்லூரிகளில் கலையில் பாடங்களைத் தமிழில் போதிப்பது என்ற விதியை மாற்றாதீர்கள். இரண்டாம் மொழிக்குப் பரீட்சை தேவையில்லை, ஆனால் இப்பொழுதுள்ள திட்டத்தில் பரீட்சை உண்டு, மார்க்குகள் கணக்கிடப்படமாட்டாது என்றிருக்கிறது. இதில் 'ஸ்டாடஸ்கோ'-வைக் கடைபிடியுங்கள் என்றுதான் சொல்கிறோம். இந்தி பரீட்சை மொழியாக இருக்க வேண்டாம். இருக்கிற விதிப்படி, 1963-64-ல் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழில் கலையியல் பாடங்கள் வரவேண்டும். ஆனால் அரசினர் அந்த நிலையை மாற்றுகிறார்கள். அரசினர் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றுதான் நாங்கள் கூறுகிறோம். அதில் எந்தவித கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த மன்றத்தில் முன்னர் விவாதம் செய்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுகிறேன். தற்போது கையாண்டு வருகிற கொள்கையை அரசினர் முன்பு வகுத்த கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றுதான் கூறுகிறோம். புதுக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்தவில்லை. ஸ்டாடஸ்கோ இருக்கட்டும், வரலாற்றையும், புவியியல் நூலையும் தமிழில் கற்பிக்க நாங்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். [illegible] மாற்றம் ஒன்றும் செய்யவேண்டிய





தில்லை. இப்போதிருக்கும் முறையைத்தான் தொடர்ந்து கடைப்பிடிக்க முயலவேண்டும், இதுவரைக் கடைப்பிடித்துவந்த கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறி அமைச்சர் அவர்களும், ஆளும் கட்சியினரும் எங்கள் திருத்தத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திங்கள் அன்று முக்கியமான இந்தக் கல்விப் பிரச்னை பற்றிய விவாதம் முடிவு பெறுகிறது. திங்களில் ஒரு களங்கம் உண்டு என்று கனம் எதிர்க்கட்சி உப-தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஏப்ரல் முதல் தேதிக்கும் ஒரு களங்கம் உண்டு. இந்த களங்கங்களை எல்லாம் மாற்றவேண்டும். இந்தக் களங்கங்களை எல்லாம் அடியோடு அகற்றி, நம் பிள்ளைகள் நல்ல உயர்ந்த அறிவு பெறும்படிச் செய்ய வேண்டும், எந்தவிதமான களங்கத்திற்கும் இடம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில்தான் இந்தப் பிரச்னையில் சிந்தனையைச் செலுத்துகிறோம். இந்த மன்றமும் சிந்தனை செலுத்துகிறது. இந்த 15 ஆண்டுகளில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு, அதனால் மாணவர்கள் அறிவு பெறவில்லை, அறிவு வளர்ச்சி ஏற்படவில்லை என்று சில கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது, இந்த மன்றமும் ஏற்றுக்கொள்ளாது. அறிவு வளர்ந்து கொண்டுதான் வருகிறது. நேற்று நம் ஜனாதிபதி அவர்கள் கோவையில் ஒரு கருத்தரங்கில் கூறினார்கள், கல்வித் துறையில் பண்பாட்டை அமைக்கிற வகையில் செய்யவேண்டுமென்று கூறி கருத்தரங்கைத் துவக்கி வைத்தார்கள். இன்னும் இரண்டு நாட்கள் அது நடக்கும் "பண்பாடோடு கூடிய அறிவு இருக்கவேண்டும், வெறும் 'இன்டெலக்ட்' மட்டும் போதாது" என்று குறிப்பிட்டார்கள். அவ்வகையில் பண்பாடோடு கூடிய அறிவு வளர்ந்து கொண்டுதான் வருகிறது. இம்மன்றத்தில் 207 கனம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஒரு கனம் உறுப்பினர், அரசாங்கத்தினிடம் கல்வித் திட்டம் குரங்கின் கையில் கொடுத்த பூமாலை போல் இருக்கிறது என்று சொன்னார். 207 பேர்களில் ஒருவர்தானே அப்படிச் சொன்னது? ஆக நாம் எவ்வளவோ தூரம் முன்னேறியிருக்கிறோம். இன்னும் களங்கம், குறைபாடு இருக்கிறது. இன்னும் பண்பாட்டை நாம் சீராக அமைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இருந்தாலும், நாம் வேகமாக முன்னேறிக்கொண்டுதான் போகிறோம். சுதந்திரம் பெற்ற இந்த 15 ஆண்டுகளில் நாம் அறிவு வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோமா, இல்லையா என்று பார்த்தால் பண்பாடோடுகூடிய அறிவை நாம் அதிகமாகப் பெற்றிருக்கிறோம் என்பதைக் கண்டு நாம் திருப்தி அடையலாம். திருப்தி என்றால், இதோடு போதும் என்ற அளவில் சொல்லவில்லை. ஒரு முன்னேற்றமும் அடையவில்லை, அறிவு வளரவில்லை என்று நினைக்க வேண்டாம் என்பதற்காகத்தான் கூறினேன். கல்வித் துறையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றன என்று கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். எதிர்க்கட்சித்

[திரு. எம். பக்தவத்சலம்] [1st April 1963]

தலைவரோ அல்லது மற்றவர்களோ கூறியதுபோல், மாறுதலே கூடாது என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அப்போதைக்கப் போது நிலையை உணர்ந்து, தேவையை உணர்ந்து மாறுதல் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல் சில சமயம் பின்னால் போகவேண்டுமானாலும் போகத்தான் வேண்டும். 70, 75 மைல் ஸ்பீடில் போகக்கூடிய நல்ல மோட்டார்கார்கூட சில சமயங்களில் பின்னால் போக வேண்டியிருக்கிறது. பின்னால் இழுத்து, பின்னர் மேலே செல்ல வேண்டியிருக்கலாம். பின்னால் போனாலும் சிலர் பள்ளத்தில் விழுவார்கள். சிலர் முன்னால் போனாலும் பள்ளத்தில் விழுவார்கள். நல்ல முறையில் சவாரி செய்ய சில சமயங்களில் பின்னால் போக வேண்டியிருக்கிறது. பின்னால் போக வேண்டியிருந்தால் போகத்தான் வேண்டும். அந்தந்த நிலையை உணர்ந்து பார்த்து, மாறுதல் அவசியம் என்றால் செய்கிறோம். ஆனால், அடிக்கடி மாறுதல் கூடாது. நன்கு ஆராய்ந்து பார்த்துத்தான் மாறுதல் செய்வோம். ஒரு நிரந்தர அமைப்பு இருக்கவேண்டும், அதுவும் கல்வித் திட்டத்தில் அவசியம் என்றுதான் குறிப்பிட்டேன். 'அமைச்சருக்கு அமைச்சர்' என்று கனம் எதிர்க்கட்சி உப தலைவர் அவர்கள் எதை எதையோ படித்தார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். அவர்கள் குறிப்பிட்ட அதே கல்வி அமைச்சரை எடுத்துக்கொண்டாலும், இன்று நான் பேசுவது போல்தான் அவரும் பேசுவார். இன்று இங்கிருந்துகொண்டு எதிர்க்கட்சியினரின் வாதத்திற்கு விடை அளிக்க, அல்லது சமாதானம் அளிக்கவேண்டுமென்றால் இன்று நான் பேசுவதுபோல்தான் அவரும் பேசுவார். இதில் கருத்து வேற்றுமை ஒன்றும் இல்லை. அப்படியிருப்பதாக பிரமையிருக்கலாம், அல்லது அப்படி பிரமை ஏற்படுத்த நினைக்கலாம். ஒரே கல்வி அமைச்சர் காலத்திலேயே மாறுதல் செய்யவேண்டியிருந்தது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். இதற்கு கட்சி மாறவேண்டியதில்லை. இன்று காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. ஆனால் கல்விக்கொள்கையை நிர்ணயிக்க காங்கிரஸ் சர்க்காருக்குத்தான் ஏகபோக உரிமை. ஆகவேதான் அதை அனுசரிக்கிறோம் என்று சொல்லவில்லை. மாறுபட்ட கருத்துக்கள் கல்வித்துறையில் இருக்கின்றன என்பதை நான் உணராமல் இல்லை. நம் குழந்தைகள் நல்ல படிப்பு பெறவேண்டும், நல்ல அறிவு பெறவேண்டும், அவர்கள் உயர்ந்த மக்களாக எதிர்காலத்தில் விளங்கவேண்டும், உயர்ந்த அந்தஸ்தை அவர்கள் பெறவேண்டும், அவர்கள் அபிலாஷைகள் எல்லாம் பூர்த்தி அடைந்து உயர்ந்த அறிவு பெற வேண்டும் என்பதுதான் பெற்றோர்களின் ஆசை. அது பூர்த்தி பெறவேண்டும். நம் நாட்டிற்குத் தொன்றுதொட்டே கல்வியில் சிறந்த நாடு என்ற பெயர் உண்டு. ஆக, இன்றையத் தேவைக்
1-30 p.m. கேற்றவாறு குழந்தைகள் அதிக அறிவு பெறவேண்டுமென்று சிந்திக்கும்போது, அவசியம் இருந்தால் மாறுதல் செய்கிறோம். ஆனால், எந்த மாதிரிச் செய்தாலும், இந்த மன்றத்தில் வைத்து, இந்த மன்றத்தினுடைய கருத்துக்களை அறிந்துதான் செய்கிறோம். 'பாட மொழியைப்பற்றி முன்பு ஒரு முடிவு செய்யப்



1st April 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

பட்டது. அது இப்போது மாற்றப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள். 1959-ஆம் ஆண்டிலே போடப்பட்ட உத்தரவு அது. அந்த உத்தரவுதான் இப்போது நடைமுறையில் இருக்கிறது. அதிலே ஒன்றை நான் படிக்க விரும்புகிறேன்.

"There is conflict requiring reconciliation between, two objectives, viz., the need for raising higher educational standards and the need also to develop the potentialities of the mother-tongue as the vehicle of culture."

மேலும் "The Government of Madras have not yet taken a decision on how this recommendation is to be effected. The present indications are that the answer will have to be found."

என்பது தான் 1959-ஆம் வருஷத்தில் போடப்பட்ட உத்தரவு. இந்த அடிப்படையில்தான் இதுவரையில் நடைபெற்று வந்தது. மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பது கவனிக்க வேண்டிய விஷயம். இந்த அடிப்படையிலேதான் நான் இன்று சமர்ப்பித்த அறிக்கையிலே அரசாங்கம் என்ன செய்வதாக இருக்கிறது, என்ன கொள்கையை அனுசரித்து வருகிறது என்பதை யெல்லாம் அறிவித்திருக்கிறேன். கனம் எதிர்க் கட்சி-உபதலைவர் அவர்கள், பாட மொழிக்காக அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். கருத்துக்களில் வேற்றுமை ஒன்றும் இல்லை திரு. தாமோதரன் அவர்கள் தலைவராக இருந்த குழுவின் பெயரை இப்போது 'ப்யூரோ ஆப் டமில் பப்ளிகேஷன்ஸ்' என்று மாற்றி அமைத்திருக்கிறோம். அவர் கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பாகக்கூட தலைவராக இருந்தார். இப்போது அந்தப் பொறுப்பை வேறு ஒருவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். திரு. தாமோதரன் அவர்கள் அந்த அறிக்கையில் 'அரசாங்கம் எங்களுக்கு ஒத்துழைப்பைத் தரவில்லை, போதிய நிதி ஒதுக்கவில்லை' என்று புகார் சொல்லி இருக்கிறாரா? அப்படிச் சொல்லி இருந்தால் நிச்சயமாக கனம் எதிர்க்கட்சி உப-தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் படித்து இருப்பார்கள். (திரு. கருணாநிதி: 'ஒத்துழைக்கிறார்கள்' என்றே நான் படித்தேன்). 'ஏன் இவ்வளவு ரூபாயைச் செலவு செய்யவில்லை' என்று விவசாய இலாக்காவிலோ, அல்லது மராமத்து இலாக்காவிலோ கேட்பார்கள். எவ்வளவு தான் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், செலவு ஆகக்கூடிய தொகைதான் செலவாகும். 'ப்யூரோ ஆப் டமிள் பப்ளிகேஷன்' என்ற நிறுவனத்திற்கு 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறோம். அதைச் செலவழித்துக் கொண்டும் வருகிறோம். ஏதாவது ஒரு புத்தகத்தை ஒரு கடையில் வாங்கிச் செய்வது போல் அல்ல. அது நல்லதும் அல்ல. இந்தக் காரியத்தைச் செய்வதில் ஆசிரியர்கள் உற்சாகம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்' என்று திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதை எதிர்க் கட்சி உப-தலைவர் அவர்கள் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அதிக உற்சாகம் இன்று இருக்கிறது. 'செல் ஆப் ஆதர்ஸ்' என்று அமைக்கப்பட்டு அதன் கூட்டம் கோவையில் முன்பு நடைபெற்றது. இப்போது பல்கலைக்

கழக வைஸ்-சான்ஸலர் அவர்கள் பரிபூர்ண ஒத்துழைப்பை அளிக்கிறார்கள். ஆசிரியர்கள் பல விஷயங்களைப்பற்றித் தமிழில் நூல்கள் எழுத உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டு, அவர்களும் ஏற்றுக் கொண்டு மனப்பூர்வமாக ஒத்துழைக்கிறார்கள். 50 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அப்போதைக்கப்போது நூல்களை எழுதுவதற்கு 'செல் ஆப்ஃ ஆதர்ஸ்' என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஏப்ரல் 10-ம் தேதி துவக்கப்படும். 50 ஆசிரியர்கள் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். கோவையிலிருந்துகூட அவ்வளவாக மனுக்கள் வரவில்லை. மொத்தத்தில் 58 பேர் மனுப் போட்டிருக்கிறார்கள். இந்தப் பணியிலே உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. திரு. தமோதரன் அவர்களுக்கு இருக்கிற உற்சாகம், நம்பிக்கைபோல் எங்களுக்கும் உற்சாகம், நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னால் எதிர்க் கட்சியினர் நம்பாமல் இருக்கலாம். ஆனால், முன்பு இருந்த கல்வி அமைச்சருடைய உற்சாகத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவருடைய ஆர்வத்தைப்பற்றி நம்புகிறார்கள். திரு. தாமோதரன் அவர்களுடைய உற்சாகத்தையும் எதிர்க் கட்சினர் நம்புகிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** அந்தக் கல்வி அமைச்சர் அவர்களும் இப்போது இருந்தால் இப்படித்தான் பேசுவார்கள் என்று இன்றைய கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குப் பிறகு அந்த நம்பிக்கைகூட இப்போது கொஞ்சம் குறைந்து விட்டது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது புதிது அல்ல. கனம் அங்கத்தினர் அவர்களும் ஐந்து ஆண்டுகளாக இங்கிருக்கிறார்கள். நானும் அவர்களை ஐந்தாண்டுகளாகப் பார்த்துத் தெரிந்தவன். எதிர்க் கட்சி உப-தலைவர் அவர்கள் அப்போது அங்கத்தினராக இருந்தார். உண்மையில் கருத்தில் மாறுதல் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான் சொன்னேன். திரு. தாமோதரன் அவர்கள் அதிகமாகப் புத்தகம் வெளியிடுவதில் யார் குறுக்கே நின்றார்கள்? யார் மீதும் குற்றம் சாட்ட முடியாது. திரு. தாமோதரன் அவர்களும் யார் மீதும் குற்றம் சாட்ட மாட்டார்கள். அந்த மாதிரி புத்தகம் எழுதுவது என்றால் கணக்குப் போட்டுக் கொண்டு புத்தகம் எழுதிவிட முடியாது. புத்தகங்களை மொழி பெயர்த்தால் மட்டும் போதாது. அசல் நூல்களை எழுத வேண்டும். சிந்தனையைச் செலுத்தி எழுத வேண்டும். இப்போது சில நூல்களை எழுதி வருகிறார்கள். சில நூல்களை எழுதுவதற்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தோம். அவர்களிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. சிக்கிரத்தில் ஆறு மாதம், ஒரு ஆண்டில் எழுத வேண்டுமென்றால் கூட மூல நூலை வைத்துக் கொண்டு 'அடாப்ட்' செய்துதான் எழுத வேண்டும். புதிய நூல்கள் வந்துகொண்டிருக்கின்றன. புதிய கருத்துக்களும் அப்போதைக்கப்போது கூறப்படுகின்றன. 'ஹ்யூமானிடிஸ்' என்பதில்கூட ஆராய்ச்சி உண்டு. விஞ்ஞானத்தில் மட்டும்தான் ஆராய்ச்சி என்பதில்லை. கலைப்





பாடங்களிலும் ஆராய்ச்சி வேண்டியிருக்கிறது. 'இகனாமிக்ஸ்' கலையியலைச் சேர்ந்தது. நேற்றுதான் மைசூர் கல்வி அமைச்சரோடு கோவையில் பேசிக் கொண்டிருந்தேன். அவர்கள், நாங்கள் 'ஹ்யூமானிடிஸை'க் கன்னடத்தில் சொல்லிக் கொடுக்க எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால், 'இகனாமிக்ஸ்'-க்கு விலக்குக் கொடுத்திருக்கிறோம்', என்று சொன்னார்கள். "ஏன் அவ்வாறு விலக்குக் கொடுத்திருக்கிறீகள்?" என்று கேட்டதற்கு "'இகனாமிக்ஸை'ப் புரிய வைக்க முடியாது. 'இகனாமிக்ஸில்' மேன்மேலும் ஆராய்ச்சி நடக்கிறது, புதிய புதிய கருத்துக்கள் வருகின்றன. பழைய கருத்துக்களை எல்லாம் வைத்துக் கொண்டிருந்தால் பயனில்லை" என்று சொன்னார்கள். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், 'வேறு சில பல்கலைக் கழகங்களில் தங்கள் பிராந்திய மொழியிலே பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முற்பட்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். அந்த ஜாபிதாவிலே சென்னைப் பல்கலைக் கழகத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். சென்னைப் பல்கலைக் கழகமும் அறிக்கைவிட்டு அவர்களும் தமிழில் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த அளவிலே சென்னைப் பல்கலைக் கழகத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். அது பிராந்திய மொழியிலே பாடம் சொல்லிக் கொடுப்பதாக நினைத்துக் கொள்வதற்குத் தான் பயன்படுமே தவிர, நடைமுறையில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. நான் மகாராஷ்டிர அமைச்சரோடு பேசிக் கொண்டிருந்தேன், பீஹார் கல்வி அமைச்சரோடும் பேசிக் கொண்டிருந்தேன். அவர்களும், 'உடனடியாகப் பிராந்திய மொழியிலே, இந்தியிலே, பாடம் சொல்லிக்கொடுக்க முடியாது, அவசரப்படுவதில் பயனில்லை' என்று சொன்னார்கள். குஜராத் கல்வி அமைச்சர் அவர்களும்கூட இதிலே தீவிரமான கருத்து உடையவர்கள். இருக்கக்கூடிய சங்கடங்களை அவர்களும் எடுத்துக் காட்டினார்கள். ஒரேயடியாக அவர்களும் இதை மாற்றிவிடவில்லை. கனம் எதிர்க் கட்சி உப-தலைவர் அவர்கள் . . . . .

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் அமைச்சர் அவர்கள் சர்க்காருடைய 1959-ம் வருஷ ஜி.ஓ.-வில் இருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டினார்கள்.

"There is a conflict requiring reconciliation between two different objectives, viz., the need for raising higher educational standards and the need also, to develop the potentialities of the mother-tongue.'

என்று படித்தார்கள். 1955-ம் வருஷம் 'அபிஷியல் லாங்வேஜ் கமிஷனு'-க்குச் சமர்ப்பித்த மெமொராண்டத்தில் இருப்பதுதான் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. 1959-ம் வருஷம் வந்த அந்த உத்தரவில் மற்றொன்றையும் பற்றி திட்டவட்டமாக முடிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதியை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"In order to commence the change-over during the year

the end of 1962-63. The adequacy of these preparations should be demonstrated by the fact that those who have made to preparation have actually succeeded in providing the instruction in Tamil successfully for all the three years of the B.A. degree course Text books, Technical terms, Instructional machinery and procedure should be involved in the actual process of imparting instruction in the Tamil medium." என்று அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"It will be open to private Colleges to continue to provide English medium instruction in the B.A. degree course even after this change-over is effected but no grant will be payable by the State Government in respect of such courses." என்று 1959-ம் வருஷ உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பழைய வாதம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது வாசித்ததை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் கேட்டிருக்கிறார்கள். அது 1963-64-இல் துவக்குவது பற்றியது. In order to 'Commence' என்று இருக்கிறது. 'Adopt' என்று இல்லை. (**திரு. கே. ஏ. மதியழகன் :** இன்னொரு பாஸேஜ் படித்துக் காட்ட விரும்புகிறேன்.) இன்னொரு பாஸேஜைப் படித்துக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. இதிலே 'கமென்ஸ்' என்று தான் இருக்கிறது. அவர்கள் ஒரு லட்சியம் வைத்துக் கொள்ளலாம்; நிறைவேற்றவேண்டும் என்ற எண்ணத்தோடு போடலாம்; அப்படிப் போட்டால்—இப்போது இருக்கிற மந்திரி சபை சென்ற ஆண்டு, 1962-ம் ஆண்டு, மார்ச் மாதம் 15-ம் தேதிதான் வந்தது—அதற்கு முன் இருந்தவர்கள் வேறு கருத்தைக் கொண்டிருந்தால், இவர்கள் மாற்றி விட்டார்கள் என்றால், அவர்கள் ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கலாமே? நான் அவர்களைக் குற்றம் சாட்டவில்லை. எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் குற்றம் சாட்டுவார்கள். நான் ஒன்றும் அப்படிக் குற்றம் சாட்ட மாட்டேன். இதிலே சங்கடங்கள் இருக்கின்றன. அனுபவ உணர்ச்சியோடு காரியங்களைச் செய்ய வேண்டும். நான் சொல்ல வந்ததை மறந்துவிடக் கூடாது—எதிர்க் கட்சி உப-தலைவர் அவர்கள், நான் இந்த மன்றத்தில் பேசுவது போல இல்லை என்று அந்த வெளியீடு பற்றிக் குறிப்பிட்டார்கள். 'அதில் கொஞ்சம் கடும் சொற்கள் இருக்கின்றன' என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான்—ஏற்றுக் கொள்கிறேன். இந்த மந்திரி சபையைப் பொறுத்த மட்டில் குறை கூறுகிறார்கள். இந்த ஆட்சியைப் பற்றிக் குறை கூறுகிறார்கள். ஏன்? தனிப்பட்ட முறையில் அமைச்சர்களை, முதலமைச்சர் உட்பட எல்லோரையும் குறை கூறுகிறார்கள். சரியாகத் தெரியாமல் இருக்கலாமே தவிர, வேறு ஒன்றும் இருக்காது என்று நாங்கள் அவர்கள் பேரில் ஆத்திரப்படமாட்டோம். அதைக் கண்டு உணர்ச்சிவசப்பட மாட்டோம். சில சமயத்தில் ரொம்பவும் தவறுதலாகக் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். என்றாலும், நாங்கள் சுமுகமான முறையில்தான் நடந்து கொள்கிறோம். அப்படியும் ஆத்திரம் வருகிறது என்றால், எதற்கும் ஒரு வரம்பு உண்டு. வரம்பு உண்டு என்று சொன்னால், என்னைப் பொறுத்தமட்டில், ... எது





வரம்பு என்றால் நம் குழந்தைகளைப் பாழாக்கக் கூடாது; நம் குழந்தைகளுடைய அறிவு வளர்ச்சியில் குறுக்கிடக் கூடாது; யாராவது குறுக்கே நின்றால் அப்போது ஆத்திரம் வருகிறது. அந்த முறையில் ஆத்திரம் வரும்போது அதை அடக்கிக் கொள்ள முடியாது. அந்த ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள நான் பழகிக் கொள்ளவில்லை. அடக்கிக்கொள்வது என்பது ஒரு நடிப்புத் திறமை. இப்படிக் குழந்தைகளுடைய வளர்ச்சியில், அறிவு வளர்ச்சியில் ஒரு குறுக்கீடு ஏற்படுகிறது என்றால், அப்போது ஆத்திரம் வரத்தான் செய்கிறது. ஏதோ எனக்கு எழுதியவர்கள் தவறுகளை எடுத்துக் காட்டக் கூடாது என்று சொன்னார்கள். அதில் எடுத்துக் காட்டிய குறை என்ன? தமிழில் வல்லின 'ற'-வுக்கும் இடையின 'ர'-வுக்கும் வித்தியாசம் தெரியவில்லை, 'ல'-வுக்கும், 'ள'-வுக்கும் வித்தியாசம் தெரியவில்லை; இவர்கள் மேல் படிப்புப் படிக்கிறவர்கள். இந்த மாதிரிப் படிக்க வேண்டும் என்று கூறுவது தவறு என்று சொன்னேன். மேல் படிப்பு ஒரு சிலர் படிக்கிறார்கள். நாம் இங்கே உட்கார்ந்து யாரும் படிக்கக் கூடாது என்று சொன்னால் . . . .

**திரு. மு. கருணாநிதி :** தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க வேண்டுமென்று எழுதியது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நெடுஞ்செழியனாகவோ, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானமாகவோ, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கல்யாண சுந்திரமாகவோ, தவறு செய்திருந்தால் அதைச் சுட்டிக் காட்டுவது என்றால் அது பொருத்தமாக இருந்திருக்கும். ஆங்காங்குள்ள பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்குப் போதனை மொழியாகத் தமிழை ஏற்படுத்த வேண்டுமென்று எழுதிய கடிதத்தை, அவர்கள் எழுதிய கடிதம்தானா என்றுகூடச் சந்தேகப்படும் நேரத்தில் அதைப் பிரசுரித்திருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நாவலரும், ஒரு புலவரும், திரு. மதியழகனும், திரு. கருணாநிதி அவர்களும் படித்திருந்தால் போதும் என்று நான் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும். எல்லோரும் தமிழ் அறிவு பெற வேண்டும். திரு. மதியழகன் சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை. தமிழை எதற்காகப் படிக்க வேண்டும்? தமிழில் பாடம் சொல்லிக் கொடுத்தால் போதும், தமிழ் இலக்கியங்கள் வேண்டாம். (திரு. கே. ஏ. மதியழகன் : குறுக்கீடு.) இவர் எப்படிச் சொல்வது? தமிழ் இலக்கியங்கள் எதற்காக? இதெல்லாம் வேண்டியதில்லை. பாடத்தைப் படித்தால் போதும். இந்த மாதிரியெல்லாம் சொன்னார்கள். கனம் எதிர்க் கட்சி உப-தலைவர் அவர்கள் கூறியதற்குச் சொல்லுகிறேன். இம்மாதிரி ஒன்றும் தமிழ்கூடப் படிக்காதவர்கள் மேல் படிப்பு இப்படித்தான் படிக்கவேண்டும் என்று 'டிக்டேட்' செய்தால் அது நியாயம் இல்லை. பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு உரிமைகள் இருக்கின்றன; பொறுப்புகளெல்லாம் இருக்கின்றன. உயர்ந்த படிப்புகளெல்லாம் இருக்

[திரு. எம். பக்தவத்சலம்] [1st April 1963

கின்றன. உயர்ந்த படிப்பு என்பது வேறு விஷயம். ஒரு சிலர் உயர்ந்த படிப்பு வேண்டுமென்று விரும்புகிறார்கள். நாம் குறுக்கே நின்றுகொண்டு இப்படித்தான் படிக்க வேண்டும் என்று சொல்லுவது ஒன்று. தமிழ் இலக்கியங்கள் வேண்டியதில்லை என்று கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் கூறியது போல் சொல்லுவது மற்றொன்று தமிழ் இலக்கியங்கள் முக்கியம் என்று நான் சொல்லுவேன். கம்பன், இளங்கோ, வள்ளுவர், இப்படிப்பட்டவர்களுடைய நூல்களையெல்லாம் படிக்காதவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். தவறுதல் இல்லாமல் எழுதத் தெரிந்தால் போதும் என்று சொல்லுவது சரியல்ல . . . .

**திரு. மு. கருணாநிதி:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன் ....

MR. SPEAKER : The time now is 1-45 p.m. I will give the hon. Member a chance to say what he has to say at the end. The Hon. Minister may continue.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மற்றொன்று, எதிர்க் கட்சியில் வீற்றிருக்கிற பல கனம் உறுப்பினர்களைப் போல, எனக்கும் தமிழ் ஆர்வம் உண்டு. புலவன் என்றோ, பண்டிதன் என்றோ நான் சொல்ல மாட்டேன். ஆனால், தவறுதல் நன்றாகத் தெரிகிறது. இம்மாதிரி ரொம்பவும் தவறுதல் இருப்பது தெரிகிறது. இப்போது சங்கீதம் இருக்கிறது. பாடத் தெரியாதவனாக இருந்தாலும் யாராவது பாடும்போது அபஸ்வரம் வந்தால் அவன் காதில் நாராசமாக விழுகிறது. தப்பிதம் இருக்கிறது. பிழைகள் இருக்கின்றன. ஏதோ வெளியீட்டில் தவறுகள் என்று சொன்னார்கள். ப்ரூஃப் கரெக்ட் செய்கிற வழக்கம் எனக்குக் கிடையாது. (திரு. மு. கருணாநிதி: குறுக்கீடு.) அச்சிட்டதா? .... அச்சிட்டதில் வல்லினத்திற்கு இடையினம் இருக்கிறதா? அது வேறு இருக்கட்டும். நான் பண்டிதனாக இல்லாததால்தான் எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் நன்றாகப் படித்துவிட்டார்கள். மற்றவர்கள் படிக்கவேண்டாம் . .

(திரு. கே. ஏ. மதியழகன் எழுந்தார்.)

**கனம் சபாநாயகர்:** இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு தடவை சொல்லிக்கொண்டிருந்தால் என்ன செய்வது? அப்புறம் சொல்லுங்கள் I will give the hon. Member a chance afterwards. The Hon. Minister will please carry on. Hon. Members need not interrupt but can say what they have to say at the end of the Hon. Minister's speech.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தமிழே கூடாது என்று சொல்லுகிறார் ....

MR. SPEAKER : Let the Hon. Minister continue.

(Sri V. Krishnamoorthi rose.)



1st April 1963]

MR. SPEAKER : I don't allow. The hon. Member need not raise any point now. I will give the hon. Member a chance at the end.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இன்னொன்று, அப்போது போட்ட உத்தரவில் எப்படி இருக்கிறது?

"The medium of instruction of the reorganized B.A. degree course in the State will accordingly be changed to Tamil. It is obvious that the best time schedule for this change will be one of when will link it with the reorganization of Secondary Education."

என்று அவர்கள் அப்போது ஒரு திட்டம் போட்டார்கள். ஹையர் செகண்டரி கோர்ஸ் வைத்துவிடுவது என்று திட்டம் போட்டார்கள். அதை வைத்து அதோடு 1963-64-இல் காலேஜில் தமிழ் மீடியம் என்ற முறையில் வைத்தார்கள். அதற்குப் பிறகு ப்ரீ-யூனிவர்ஸிட்டியில் வைத்திருக்கலாம். அதே கருதது இருந்தால் வைத்திருக்கலாம். 1963-64-ல இந்தக் கருததுடன் போட்டது, ஹையர் செகண்டரி கோர்ஸ் எதில் வைப்பது என்பது இதுவரையில் முடிவு செய்யப்படாமல் இருந்தது. எல்லாவற்றையுமே நாம் எல்லோரும் அறிவோம். இப்போது ஹையர் செகண்டரி கோர்ஸ் முடியாது என்று தெரிந்து விட்டது. ஹையர் செகண்டரி கோர்ஸ் இருக்கலாம் என்று ஒரு கனம் அங்கத்தினர் பேசினார்கள். அது ஒருகாலும் முடியாது. இன்றையதினம் நம் மாநிலத்தில் 1,800 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. இந்த நிலையில் ஹையர் செகண்டரி வைப்பது என்பது முடியாத காரியம். எல்லோரும் இதை இன்று உணர்கிறார்கள். ஹைஸ்கூலில் ஹையர் செகண்டரி வைக்க வேண்டுமென்று சொன்னவர்கள்கூட இப்போது முடியாது என்று ஏற்றுக்கொள்ளும் நிலை இருக்கிறது. '1963-64-ல்' என்று போட்டார்கள். இப்போது எப்படி வைப்பது? நூல்கள் போதாது, அதிகமாக ஆக்க வேண்டும் என்று ஏதோ ஆக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், புதிய நூல்கள் ஏராளமாக வேண்டும். இன்றையதினம் இதையே நம்பினால்கூட நாளையே புதிய நூல்கள் வருகின்றன. மற்ற நாடுகளில் இம்மாதிரி இல்லையா என்று கேட்கலாம். ஆனால், இங்கேயே கொஞ்ச காலத்தில் வரலாம். "Ultimately Tamil should be the medium" என்று போட்டிருக்கிறது. இப்போது அந்த நிலை இல்லை என்பதை உணரவேண்டும். மாணவர்களுடைய நிலை என்ன என்று உணர வேண்டும்.

இன்றைக்கு எக்னாமிக்ஸ் எடுத்துக் கொண்டால், என்ன விதமான புத்தகங்கள் வேண்டும் என்று பார்க்க வேண்டும். எதைப் படித்தால் நலம் என்று பார்க்க வேண்டும். புத்தகம் மட்டும் போதாது. ஜர்னல்கள், பத்திரிகைகள் எல்லாம் படிக்க வேண்டும். எல்லாவற்றையும் படிக்க வேண்டும். ஆகவே, தமிழின் முன்னேற்றத்திற்கு எதெல்லாம் குறுக்கே நிற்கிறது என்று பார்க்க வேண்டும். நான் திரும்பவும் சொல்லுகிறேன். மொழியைக் கற்பது ஒன்று, பாடத்தைக் கற்பது வேறொன்று. கல்லூரிக்குப் போனால் பாடம் தீவிரமாக ஏற்படுகிறது. அதைப் புரிந்து கொள்வது எப்படி? 40, 50 புத்தகங்கள் இருக்கின்றனவே, அவை

[திரு. எம். பக்தவத்சலம்] [1st April 1963

போதாதா என்று கேட்டார்கள். ஒன்று கவனிக்க வேண்டும்.
கல்லூரியிலே மற்ற உயர்நிலைப் பள்ளிகள் போல டெக்ஸ்ட் புக்
என்று வைப்பதில்லை. 'ரெபரன்ஸ்' புத்தகங்கள்தான் சொல்லு
வார்கள். 10, 15 புத்தகங்களின் பெயர்களைக் கொடுப்பார்கள்.
ஹிஸ்டரியாக இருந்தாலும் சரி, வேறு பாடங்களாக இருந்தாலும்
சரி, அப்படித்தான் படித்தாக வேண்டும். இதை எல்லாம் இன்
றைக்கே ஒரேயடியாக மாற்ற வேண்டுமென்றால், அது மாணவர்
களுக்கு நல்லதல்ல. இதிலே எங்களுக்குத் தயக்கம் என்று சொன்
னார்கள். இதிலே இருக்கும் சிரமங்களைப் புரிந்துகொள்ள வேண்
டும். ஆர்வம் குறைவில்லை. நாம் செய்வது மாணவர்களைப்
பாதிக்கும் முறையில் இருக்கக் கூடாது. நிர்வாகத்தைத்
தமிழிலே நடத்த முற்படுகிறோம். அதிலும் சலுகைகள் கொடுத்
தால், இன்னும் அதிகமான பலன் ஏற்படும் என்றார்கள். அதில்
தடை ஒன்றும் இல்லை. மாணவர்கள் ஆயிரக்கணக்காக வரவேண்
டும். அவர்களுக்கு ஆயிரக்கணக்கான புத்தகங்கள் வெளியிட
வேண்டும். அப்படியே படித்தாலும், அவர்களுக்கெல்லாம் உத்தி
யோகம் கொடுப்போம் என்று 'காரண்டி' பண்ண முடியாது. முன்
பெல்லாம் இருந்தது, இந்தியன் எஞ்ஜினியரிங் சர்வீஸ் என்று.
அதிலே, கல்லூரியில் முதலாகத் தேறுபவர்கள், உடனடியாக உத்தி
யோகத்திற்குச் சென்று விடுவார்கள். ஐ.இ.எஸ். என்று இருந்
தது. அதேபோல ஐ.ஸி.எஸ். இருந்தது, இன்றைக்கு ஐ.ஏ.எஸ்.
என்று இருப்பதுபோல. அதிலும் கூட, எவ்வளவு உத்தியோகங்
கள் தேவையோ, அவ்வளவுக்குத்தான் எடுப்பார்கள். பரீட்
சைக்கு வந்தவர்களுக்கெல்லாம் உத்தியோகம் என்று கிடையாது.
இன்னொன்று. இன்றைக்கு வேறு மாநிலங்களிலே தமிழர்கள்
உத்தியோகம் பார்க்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில், மகாராஷ்ட்
ராவில், இன்னும் எவ்வளவோ இடங்களில் உத்தியோகம் பார்க்
கிறார்கள். 'பர்ம்'களிலும் தொழிற்சாலைகளிலும், அரசாங்க
அலுவலகங்களிலும் வேலை பார்க்கிறார்கள். எங்கே போனாலும்
தமிழர்களைப் பார்க்கிறோம். ராஜஸ்தானில், ஜய்ப்பூரில், பஞ்சா
பில், எங்கு போனாலும் நம் தமிழர்கள் உத்தியோகங்களில் இருக்
கிறார்கள். டெல்லியில் மட்டும் 20,000 பேர்கள் இருக்கிறார்கள்.
இன்றைக்கு நாம் அவசரப்படுவதனால் மாணவர்களுக்குப் பாதகம்
ஏற்படாதா, அது நியாயமா, சரியா என்பதையும் நாம் யோசிக்க
வேண்டும். நாளாவட்டத்தில் தமிழிலேயே செய்வது என்பது
சாத்தியப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவசரப்
படுவது மாணவர்களுக்கு நல்லதல்ல. மேலும், கலித்து இயங்கு
வது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் உகந்த
தல்ல. மற்றொன்று. மாணவர்களைக் கட்டாயப் படுத்துவதில்
எனக்கு நம்பிக்கை இல்லை. படித்தால் படிக்கட்டுமே. மாணவர்
கள் உயர்ந்த படிப்பு படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.
ஆகவே, இப்பொழுது நாங்கள் கல்லூரிப் பாடமொழி பற்றித்
தெரிவித்திருக்கிற கருத்து மாணவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு
உகந்த கருத்து. 1963-64-ல் எல்லாக் கல்லூரிகளிலும் வரும்
என்று அந்த ஜி.ஓ.-வில் இல்லை. கொண்டுவந்து விடவேண்டும்
என்று திருத்தம் கொடுத்தால், அது மாணவர்களுக்கு நன்மையா



1st April 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

என்று பார்க்க வேண்டும். தமிழை நன்றாகக் கற்க வேண்டும். ஷேக்ஸ்பியர் படிக்காத ஆங்கில இளைஞர்கள் இருப்பார்களா? தமிழ் இளைஞர்கள் தமிழ் கற்க வேண்டும் என்று கோட்பாடாகச் சொல்லலாம். தமிழையும் நன்றாகக் கற்க வேண்டும். இன்றைக்கு 'தமிழ்க் கல்லூரி' என்று வைத்தால், அதற்கு வேண்டிய ஆதரவு அரசாங்கம் அளிக்கும் என்று சொன்னேன். தமிழிலே போதிய அளவு புலமை வேண்டும். விஞ்ஞானம் ஆக இருந்தாலும், எகனாமிக்ஸ் ஆக இருந்தாலும், 'அப்டுடேட்'-டாக இருக்க வேண்டும். இன்றைக்கு ஒரு நாட்டிலே ஒரு நூல் வெளியிடப்பட்டால், உடனே அது ஆங்கிலத்தில் ஒரு க்ஷணத்திலே மொழிபெயர்க்கப்பட்டு விடுகிறது. மேலும் மேலும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்றால், வசதி இருக்கிறது. தமிழிலே வேண்டாம் என்று சொல்லவில்லை. அதை ஒரு கட்சியாக வைத்துக்கொண்டு, வாதாடுவது மாணவர்களுக்கு நல்லதல்ல, நாட்டிற்கு நல்லதல்ல, அறிவு வளர்ச்சிக்கு நல்லதல்ல.

ஹிந்தியைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்கலாம். வேண்டாம் என்று சொல்லலாம். அரசாங்கம் தடுக்க முடியாது. தாய் மொழி படிக்க வேண்டும். ஆங்கிலம் படிக்க வேண்டும். இந்தியாவிலேயே பெரும்பாலோரால் பேசப்படுகிற மொழி—கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவத்திற்கு என்ன மொழி என்று தெரியும்—ஒன்று இருக்கிறது என்றால், அது ஹிந்திதான். அகில இந்தியாவும் ஒன்று என்று ஏற்றுக்கொள்பவர்கள் யாரும் அதை மறுக்க முடியாது. நம்மைப் பொறுத்த வரையில், ஹிந்தியைப் போதிய அளவுக்குக் கையாள முடியாது. தமிழ்நாட்டு இளைஞர்கள் பாதகம் அடைவார்கள். ஆகையால்தான், ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம். ஆனால், ஹிந்தியைக் கற்றுக் கொள்ளவில்லையென்றால், நம் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். மாணவர்களின் எதிர் காலத்தில் நாம் குறுக்கே நிற்கக் கூடாது. பழைய பிரிட்டிஷ் ஆட்சி சபையிலே நடந்த ஒரு விவாதத்தைப் பத்திரிகையில் படித்தேன். அப்பொழுது நான் ஒரு மாணவன். சில கனம் அங்கத்தினர்கள் ஏதோ கல்லூரிப் படிப்பு வேண்டாம் என்று சொன்னார்கள். எனக்கு விசித்திரமாக இருந்தது. இன்றைக்கு ஹிந்தி தெரிந்து கொள்வது நல்லது என்றால், தெரிந்து கொள்ளட்டுமே. அதில் கட்டாயம் வேண்டியதில்லை. கட்டாயப் படுத்துவதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால், மாணவர்கள் நன்றாகப் படிக்கிறார்கள் என்பதைக் காண்கிறோம். ஆகவே, மூன்று மொழிகள் கற்க வேண்டும். இந்தி அல்லது வேறு மொழி என்று சொல்லுகிறோம். குறைந்த பட்ச மார்க்கு என்று இல்லை. ஆனால், ஒரு பர்பசும் இல்லாமல் பரீட்சை என்பது என்ன பயன்? இந்த ஆண்டுக்குப் பரீட்சை வேண்டாம் என்று போட்டோம். பரீட்சை என்றால் அதற்கு ஒரு அர்த்தம் வேண்டும். ஒரு பர்பஸ் இல்லாத பரீட்சை பரீட்சையே இல்லை. இப்பொழுது அது மாடரேஷனுக்கு உபயோகப்படும். குறைந்த பட்ச மார்க்கு எலிஜிபிலிடிக்கு வேண்டியிருக்கிறது. அதில்

[திரு. எம். பக்தவத்சலம்] [1st April 1963

என்ன ஆட்சேபணை? சிலருக்குப் பரீட்சை என்றால் ஒரு 'அலர்ஜி', அதற்கு என்ன தமிழ் வார்த்தை சொல்வது என்று தெரியவில்லை. பல 'அலர்ஜி'-கள் உண்டு. ஒரு பெண்மணிக்குப் பட்டு சேலை கட்டுவதால் தலைவலி இருந்தது. ஆனால், அது இங்கு தெரியவில்லை. அமெரிக்காவிற்குப் போய் பட்டு சேலை கட்டுவதில் 'அலர்ஜி' என்று கண்டுபிடிக்கப் பட்டது. அது அங்கேதான் கண்டுபிடிக்கப்பட்டது. பிறகு அந்தப் பெண் கைத்தறிச் சேலை கட்ட ஆரம்பித்ததும் தலைவலி நீங்கி விட்டது. அது சிக்கனம் கூட. அந்த போல, ஒரு ஆணுக்குப் பஞ்சணை அலர்ஜி. அதுவும் அமெரிக்காவில்தான் கண்டுபிடித்தார்கள். பஞ்சணை, பருத்தி அவருக்குக் கூடாது. அப்படிப் பல 'அலர்ஜி'-கள் உண்டு.

அப்படி 'அலெர்ஜி' இருக்கிறது மாதிரி இந்தியையும் பரீட்சை
2-00 p.m. யையும் சேர்த்தால் 'அலெர்ஜி' ஏற்பட்டுவிடுகிறது. இந்தி, பரீட்சை இரண்டும் சேரவில்லை. இரண்டையும் சேர்த்து விட்டால் உடனே 'அலெர்ஜி ஏற்பட்டுவிடுகிறது. படிக்க வேண்டாம் என்று எண்ணுபவர்கள் படிக்காமல் இருக்கட்டும். அவர்களுக்கு ஒன்றும் இடைஞ்சல் இல்லை. படிக்கிறவர்கள் படிக்கிறார்கள். படிக்கிறவர்கள பயன்படுத்திக் கொள்ளட்டும், மாடரேஷனுக்குப் பயன்படும். படிக்காதவர்கள் பற்றி ஒன்றும் கவலை இல்லை. நாமும் படிக்கக் கூடாது. அவர்களும் படிக்கக் கூடாது என்று சொல்லுவது நியாயமா? படிக்கிறவர்கள் படித்து மாடரேஷனுக்குப் பயன் படுத்திக் கொள்ளட்டும். படிக்காதவர்கள் பற்றி ஒன்றும் பாதகமில்லை. வேண்டாம் என்றால், பரீட்சையில் வினாத்தாளைச் சும்மா ஒன்றும் எழுதாமல் கொடுத்துவிடட்டும். அப்படி மாணவர்கள் கொடுக்க வேண்டுமென்று தூண்டக்கூடிய வகையில் நான் சொல்ல மாட்டேன். வாதத்திற்காகத்தான் சொல்கிறேன். ஏதோ மத்திய அரசாங்கத்தின் ஆட்சேபணை இதற்கு இருந்தது. அதனால்தான் இப்பொழுது மாற்றிவிட்டோம் என்றெல்லாம் சொல்லுவது தவறு. என்ன மாற்றிவிட்டோம்? பரீட்சையில் மார்க்கு வாங்க வேண்டியவர்கள் படிக்கலாம் என்று தான் சொல்லுகிறோம். அதிலும், மத்திய அரசாங்கம் சில ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். அப்படி ஸ்காலர்ஷிப் வாங்குபவர்கள் படிப்பதில் முற்றவர்களுக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்? வேண்டுமென்று படித்தவர்கள் மார்க்கு வாங்குகிறார்கள், படிக்காதவர்கள் மார்க்கு வாங்க வேண்டாம். நானும் படிக்க மாட்டேன், மற்றவர்களும் படிக்கக் கூடாது என்று சொல்லுவது நியாயமா? படிக்காதவர்களுக்கு இதனால் பாதகம் இல்லை. அபீஷியல் லாங்குவேஜ் கமிஷனில் இருந்தவர்கள் இந்தி பரீட்சையைக் குறித்துச் சொன்னார்கள். பல பரீட்சைகளிலும் சேர்ந்து குறைந்த மார்க்கு வாங்குபவர்களுக்குப் பாதகம் ஏற்படும் என்று சொன்னார்கள். அதனால் இம்மாதிரிச் செய்கிறோம் என்று சொன்னோம். என்ன மாறுதல் வந்துவிடுகிறது? ஒரு மாறுதலும் இல்லை.

கனம் அங்கத்தினர் ஒருவர் இண்டர்மீடியட் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது 11 ஆண்டுகள் இருக்க வேண்டுமென்பது திட்டம். கனம் அங்கத்தினர் சொன்னது



1st April 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

பழைய பாடம். பத்து ஆண்டு படிப்பு ஹையர் செகண்டரி கோர்ஸ் இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமல்ல. ஹையர் செகண்டரி கோர்ஸ் வரப்போகிறது என்று பத்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. ஏதோ 'துக்லக்' என்று சொன்னார்கள். துக்லக் செய்திருக்கிற அருமையான காரியங்களையெல்லாம் கனம் அங்கத்தினர் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். நல்லதைச் செய்ய வேண்டியது தான். அதில் தயக்கம் கூடாது. பத்து ஆண்டுப் படிப்பு எந்த சூழ்நிலையிலே நிர்ணயிக்கப்பட்டது? ஹையர் செகண்டரி கோர்ஸ் வரும் என்று நினைத்து நிர்ணயிக்கப்பட்டது. ஹையர் செகண்டரி கோர்ஸ் ஒருகாலும் முடியாது என்பதை எலோரும் உணர்ந்திருக்கிறார்கள். ஒரு கனம் அங்கத்தினர் அதையும் வைத்துக்கொள்ளலாம் என்று பழைய பாடத்தைத் திருப்பிப் படிக்க வேண்டும் என்ற வகையிலே சொன்னார்கள். அது நடக்காது. நல்ல படிப்பு படிக்க வேண்டும், அதை வேண்டாமென்று சொன்னால் எப்படி?

ஏழாவது, எட்டாவது ஸ்டேன்டேர்ட்களில் இருப்பவர்களுக்கு ஒரு குழப்பம் ஏற்படும் என்று கனம் எதிர்க்கட்சி உப தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்கிறேன், இப்போது செய்திருக்கக் கூடிய மாறுதல்படி எந்த மாணவரும் பதினொரு ஆண்டுகள் படித்து கடைசியில் பரீட்சைக்கு போக வேண்டும். இதுவரையில் எட்டாண்டுகள் படித்தவர்கள் இன்னும் மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டும். இதுவரையில் ஏழு ஆண்டுகள் படித்தவர்கள் இன்னும் நான்கு ஆண்டுகள் படிக்க வேண்டும். மொத்தத்தில் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரையிலே 11 ஆண்டுகளுக்கு மேல் போகாது. பதினொரு ஆண்டுகள் படிக்க வேண்டும். இந்த ஆண்டு பத்தாவது ஸ்டான்டேர்டில் பரீட்சைக்குப் போகிறவர்கள் 11 ஆண்டுகள் படித்தவர்கள். ஒன்றும் குழப்பத்திற்கு இடம் இல்லை.

இன்டர்மீடியட் கோர்ஸ் வைத்து விட்டு காலேஜ் படிப்பை இரண்டு ஆண்டுகளாக ஆக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் தரம் குறைக்கப்பட்டு விடும். மூன்று ஆண்டுகள் டிக்ரீ கோர்ஸ் என்று இப்போது வைத்திருக்கிறோம். ஆகவே பள்ளிக் கல்வி 11 ஆண்டுகள், அதற்குப் பிறகு பீ.யு.ஸி. ஓர் ஆண்டு, பிறகு, பட்டப் படிப்பு 3 ஆண்டுகள். ஆக மொத்தம் 15 ஆண்டுகள், என்று வைத்திருக்கிறோம். பதினொரு ஆண்டுகள் உயர் நிலைக் கல்விக்குப் பிறகு ஓராண்டு பீ.யு.ஸி. தொடர்ந்து இருக்குமென்று வைத்திருக்கிறோம், இப்போது புது முக வகுப்பில் பிரின்ஸிப்பால்ஸைக் கலந்துகொண்டு பல்கலைக் கழகம் சில மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள்.

ஆதாரக் கல்வி பற்றிச் சொன்னார்கள். நான் முன்பே குறிப்பிட்டேன். ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது, வற்புறுத்துகிறது. நம்புகிறது. ஆனால், நூற்பதோ, தறியில் நெய்வதோ ஏதோ ஒரு தொழில்

இருக்க வேண்டும். அந்தத் தொழிலை அடிப்படையாக வைத்து அந்தக் கல்வி அமைய வேண்டும். எல்லாக் கல்வித் துறையிலும் தொழில் 'பையாஸ்' இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. இதை மத்திய அரசாங்கத்தின் ஒரு குழு ஆராய்ந்து பார்த்தது. இதை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கொள்கையை ஏற்றுக் கொண்டு ஒரு சில மாறுதல்களைச் செய்ய வேண்டியிருக்கிறது; செய்ய வேண்டுமென்பது தான் இந்த அரசாங்கத்தின் கருத்து. அந்த வகையிலே இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

எலெக்டிவ் ஸப்ஜக்ட்ஸ் இரண்டு வேண்டாம், ஒன்று போதும் என்று கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது விஞ்ஞானப் படிப்புக்கு ரொம்ப முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சரித்திரம் படிக்க வேண்டுமென்றும் முக்கியத்துவம் இருக்கிறது. அதற்காகத்தான் இரண்டு எலெக்டிவ் ஸப்ஜக்ட்ஸ் கொடுத்திருக்கிறோம். நன்றாக ஆராய்ந்து பார்த்துத்தான் இரண்டு எலக்டிவ் ஸப்ஜக்ட்ஸ் கொடுத்திருக்கிறோம். ஹிஸ்டிரி ஜாக்ரபி எலக்டிவ் ஸப்ஜக்ட்ஸில் வராது. மாணவர்கள் ஹிஸ்டரி, ஜாக்ரபி படிக்க வேண்டும் என்பதில் ஒன்றும் அபிப்பிராயபேதமே இல்லை. அந்த ஸப்ஜக்ட்டுகளுக்குப் பரீட்சை இருக்க வேண்டுமென்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதுபற்றி முன்பு ஒன்று சொன்னார்கள். இப்பொழுது ஒன்று சொல்லுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். எலக்டிவ் ஸப்ஜக்ட்ஸ் பற்றி கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி சொன்ன அதே கருத்தின் அடிப்படையில்தான் முதலில் ஹிஸ்டரி, ஜாக்ரபி ஆகிய பாடங்களில் பரீட்சை கிடையாது என்று வைத்தோம். ஏனென்றால், 'பர்டன்' அதிகமாகப் போய்விடும் என்று நினைத்தோம். ஹிஸ்டரி, ஜாக்ரபி ஆகிய பாடங்களில் பரீட்சை இல்லாமல் இருந்தால் அது நல்லதல்ல என்று பல ஆசிரியர்களும் பின்னால் சொன்னார்கள். 'விம்ஸ் அண்டு பான்ஸீஸ்' என்றெல்லாம் 'கோட்' செய்தார்கள் கனம் அங்கத்தினர். 'விம்ஸ் அண்டு பாஸீஸ்' இல்லை, அம்மாதிரி ஒன்றும் பிடிவாதம் இல்லை என்று நான் கூறினேன். மற்றவர்கள் சொன்னதினால்தான் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். முதலில் ஹிஸ்டரி, ஜாக்ரபி ஆகிய பாடங்களில் பரீட்சை வேண்டாமென்றுதான் நினைத்தோம். பின்னால் பல ஆசிரியர்கள் அந்தப் பாடங்களில் பரீட்சை வேண்டுமென்று சொன்னதினால், பரீட்சை வைக்கலாம் என்று உத்தேசம். இரண்டு எலக்டிவ் ஸப்ஜக்ட்ஸ் இருப்பதனால் பர்டன் அதிகமாகப் போய்விடும் என்ற காரணத்தினால் சரித்திரம், புவியியல் பாடங்களில் பரீட்சை உண்டு ஆனால் மார்க்குகள் கல்லூரிப் படிப்பில் சேரும் எலிஜிபிலிடிக்குக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் மாடரேஷன் விதிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதாவது இந்திக்கு எப்படி வைத்திருக்கிறோமோ அதே முறையில் செய்யலாம் என்பது தான் கருத்து. ஹிஸ்டரி ஜாக்ரபி படிக்க வேண்டுமென்பதுதான் கருத்து. ஆகவே, இதைப்பற்றி கனம் அங்கத்தினர் திரு. பழனி



அவர்கள் கொடுத்த திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுதே நேரம் அதிகமாகி விட்டது. மேலும் இந்த மன்றத்தின் காலத்தை எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை.

சீரான ஒரு கல்விக் கொள்கையை இப்பொழுது நாங்கள் சமர்ப்பித்திருக்கிறோம். இது ஒரு அவுட்லைன். 'காப்ஸ்' இருப்பதை 'பில்அப்' பண்ணிக் கொள்ளவேண்டியதுதான். ஆனால், பொதுவாக ஒரு அவுட்லைன், ஒரு கொள்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதை அவசரப்பட்டுச் செய்யவில்லை. ஓர் ஆண்டுக் காலம் நன்றாக ஆராய்ந்து, இதிலே அனுபவப்பட்டவர்கள், இதிலே ஈடுபட்டவர்களுடைய கருத்துக்களைத் தெரிந்துகொண்டு, நம்முடைய குழந்தைகளுக்குச் சீரான படிப்பு முறை ஒன்று வேண்டும், கூடியவரையில் அடிப்படையில் மாறுதல் இல்லாமல் கொஞ்ச காலத்திற்கு அது அப்படியே நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதைக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பண்டைக் காலத்தில்—பண்டைக் காலத்தில் மட்டுமல்ல, சென்ற காலத்தில்—நமது தமிழ்நாட்டுக் குழந்தைகள் உலகப் புகழ் பெற்றவர்கள் என்று வாழ்த்தப்பட்டிருக்கிறார்கள், அறிவு வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள், அதற்கேற்றவாறு குழந்தைகள் நல்ல முறையில் மேலும் அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டு அவர்கள் சிறந்த மக்களாக இருந்து, தமிழ் நாட்டிற்குப் பணிபுரிவதோடு மட்டுமல்லாமல், பாரத் நாட்டிற்குப் பணி புரிவதோடு மட்டுமல்லாமல், உலகில் பெரிய அந்தஸ்து பெறக்கூடிய அளவுக்கு அவர்கள் கல்வி பெறக்கூடிய வகையிலே எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும், ஆதரவு காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** நான் அமைச்சர் அவர்களைக் கேட்டேன். தமிழ் பாடமொழியாக எல்லாக் கல்லூரிகளிலும் வரவில்லையே என்று நான் நேரிடையாகக் கேட்டேன். அவர்கள் அதற்குப் பதில் சொல்லாமல் காரைக்குடி இலக்கிய வகுப்பிற்குப் போனார்கள். அமைச்சர் அவர்கள் பாணியை நான் உணர்ந்திருக்கிற காரணத்தினால்தான் அப்துல்காதருக்கும் அமாவாசைக்கும் இருக்கிற சம்பந்தம்போல் இருக்கிறது என்று சொன்னேன். இங்கிலாந்தில் இலக்கிய வகுப்பில் ஷேக்ஸ்பியர் 4, 5 பேர்கள்தான் படிக்கிறார்கள். எனக்குத் தமிழில் அக்கறை இல்லை என்று சொல்லுவது சரியானதல்ல, பொருத்தமில்லை. அதை நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** திருப்பிச் சொல்லுகிறேன். முன்பு சொன்ன கருத்தை கனம் அங்கத்தினர் அவர்கள் வர்ஜிதப் படுத்துகிறார்கள். ஷேக்ஸ்பியர் 4, 5 பேர்கள்தான் படிக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதனால் தமிழ் இலக்கியத்திலும் அப்படித்தான் படிக்க வேண்டுமா? தமிழ் இலக்கியத்தை அதிகமான பேர்கள் படிக்க வேண்டும், ரொம்பப் பேர்கள் எம். ஏ.,

[திரு. எம். பக்தவத்சலம்] [1st April 1963

படிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. பெரும்பாலும் தமிழ் மக்கள், தமிழ்ப் பெற்றோர்கள், தமிழ் மாணவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** இந்த நாட்டில் மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்றவைகளை 5, 6 பேர்கள்தான் கல்லூரியில் ஹானர்ஸில் படிக்கிறார்கள் என்றால், எனக்குத் தமிழிலே அக்கறை இல்லை என்று அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளுவதா ?

**SRI V. KRISHNAMOORTHI:** On a point of personal explanation, Sir.

**MR. SPEAKER:** No personal explanation can be allowed now.

**SRI V. KRISHNAMOORTHI:** On a point of order, Sir.

**MR. SPEAKER:** Nobody can enter into a discussion now. First the Hon. Member said 'explanation' and now he says 'point of order'. No point of order now.

**திரு. மு. கருணாநிதி:** யாரோ சிலர் தவறாக எழுதியதாக நாம் புரிந்துகொள்ளலாமே தவிர, அதை கேலி செய்யக் கூடாது என்ற முறையிலேதான் அந்தக் கருத்தைத் தெரிவித்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் தமிழ்க் குழந்தைகள் தவறாக எழுத வேண்டுமென்று நான் குறிப்பிட்டது போலச் சொன்னார்கள். அமைச்சர் இது மாதிரி பொய்ப் பிரசாரம் செய்வது சரியல்ல. ஆகவேதான் நான் இதை விளக்குகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினருக்கு 'பொய்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியவில்லை. நான் அவரைப் பண்டிதன் என்று நினைத்தேன். பொய்ப் பிரச்சாரம் என்று சொல்வது பொருத்தமல்ல. ஏதோ நேற்று முன் தினம் 'பொய்' என்று சொன்னதற்கு, திருப்பிச் சொல்வது சரியல்ல. தமிழ்ப் படித்தவர்கள்கூட இம்மாதிரி இருப்பது நல்லதல்ல. அர்த்த மற்றது. பொய்ப் பிரச்சாரம் என்ற வகையிலே சொல்வது அர்த்த மற்றது. பொருத்தமற்றது.

(SRI K. A. MATHIALAGAN rose.)

**MR. SPEAKER:** I won't allow anymore explanation. When the Chair is on its legs, nobody should stand.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் உறுப்பினர்கள் திரு. மதியழகன் அவர்களும், திரு. கருணாநிதி அவர்களும் கொண்டு வந்த திருத்தங்களை அமைச்சர் ஏற்றுக்கொள்கிறாரா, இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நான் ஒரே ஒரு திருத்தத்தைத்தான் ஏற்றுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர் திரு. பழனி அவர்கள் பிரேரேபித்த திருத்தத்தைத்தான் நான் ஏற்றுக் கொள்கிறேன். மற்ற திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1st April 1963]

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கனம் உறுப்பினர்கள் திரு. மதியழகன் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தையும், திரு. கருணாநிதி அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்று கூறுவதின் காரணமாக எங்களுடைய அதிருப்தியைக் காட்டுவதற்கு அறிகுறியாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் வெளியேறுகிறோம் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த கனம் அங்கத்தினர்கள் சபையைவிட்டு வெளியேறினார்கள்.)

**திரு. க. ர. நல்லசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கல்லூரிப் படிப்பில் ஆங்கிலம் பயிற்சி மொழியாக இருப்பதை நீக்காததைக் கண்டித்தும் பொதுமொழிக் கொள்கை தெளிவற்ற முறையில் இருப்பதைக் கண்டித்தும் வருத்தம் தெரிவிக்கும் வகையில் நானும் வெளிநடப்பு செய்கிறேன்.

(கனம் அங்கத்தினர் திரு. க. ர. நல்லசிவம் அவர்கள் வெளியேறினார்)

**MR. SPEAKER:** I will now put the amendment of Sri K. B. Palani.

*Add* the following at the end—

"and on such consideration the House while approving the Educational Pattern enunciated in the note is also of the opinion that History and Geography should also be subjects for examination."

The amendment was put and carried.

**MR. SPEAKER:** The other amendments are deemed to have been withdrawn since the hon. Members concerned are not in their places now. I will now put the main motion as amended to vote :—

The question is—

"That the Educational Pattern as enunciated in the note placed on the Table of the House on the 25th March 1963 be taken into consideration and on such consideration the House while approving the Educational Pattern enunciated in the note is also of the opinion that History and Geography should also be subject for examination."

The motion, as amended, was put and carried.

## IV. ANNOUNCEMENTS—*cont.*

### (3) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

**MR. SPEAKER:** I have to announce to the House that the following fifteen members were duly nominated for the election of

fifteen members of the Madras Legislative Assembly to the Committee of Privileges for the year 1963–64 :—

1. Hon. Sri M. BHAKTAVATSALAM.
2. Sri M. KARUNANIDI.
3. Sri S. MADHAVAN.
4. Sri KANCHI MANIMOZHIAR.
5. Sri A. RAGAVA REDDI.
6. Sri R. S. VEERAPPA CHETTIAR.
7. Sri A. K. SUBBIAH.
8. Sri C. SRINIVASAN.
9. Sri S. RAMALINGAM.
10. Sri P. RAMACHANDRAN.
11. Sri G. RAJARAM.
12. Sri V. SANKARAN.
13. Srimathi T. N. ANANDANAYAKI.
14. Sri K. B. PALANI.
15. Sri K. R. SAMBANDAM.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., fifteen, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges for the year 1963–64. The Deputy Speaker is a Member ex-officio of the Committee.

Under sub-rule (4) of rule 188 of the Madras Assembly Rules, I nominate Sri K. Parthasarathy to be the Chairman of the Committee.

2-12 p.m. The House will now adjourn *sine die*.

The House then adjourned.

### VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders

* 146. *Notifications issued with G.O. Ms. No. 4669, Revenue, dated 19th December 1962 amending (i) the Pannaiyal Protection (South Arcot) Rules, 1953, (ii) the Madras Cultivating Tenants Protection Rules, 1955 and (iii) the Madras Cultivating Tenants (Payment for Fair Rent) Rules, 1956. [Laid on the Table of the House under section 16 (2) of the Tanjore Pannaiyal Protection Act, 1952 (Madras Act XIV of 1952 and under section 17 (4) of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent), Act, 1956 (Madras Act XXIV of 1956).]*

147. *Notification issued with G.O. Ms. No. 667, Revenue, dated 15th February 1963, constituting the Tahsildar, Ambasamudram Taluk as the Rent Court with jurisdiction over that*

* Laid on the table of the House on 30th March 1963.





*taluk. [Laid on the Table of the House under section 17 (4) of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956).]*

148. *Notification issued by the Chairman, State Bhoodan Yagna Board, Madurai, in the Proceedings No. D. Dis. 64737/62-A, dated 18th January 1963, regarding appointment of Sri S. R. Subramanian as Secretary to the said Board. [Laid on the Table of the House under section 28 (3) of the Madras State Bhoodan Yagna Act, 1958 (Madras Act XV of 1958).]*

149. *Notification issued in the G.O. Ms. No. 4337, Revenue, dated 21th November 1962, effecting ryotwari settlement of Melakondaiyur inam estate in Tiruvallur Taluk of Chingleput district which was taken over by the Government under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948. [Laid on the Table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

#### B. Reports, Notifications and other papers.

* 103. *Statement showing the activities of the Accommodation Control Department for the half-year ending 31st December 1962.*

* 104. *Report of the Committee of Privileges on the " Dina Thanthi case ".*

* 105. *Fourth Report (Third Assembly) of the Committee on Subordinate Legislation.*

* 106. *Report of the Committee on Estimates on Jails and other Allied Departments.*

* 107. *Second Report (Third Assembly) of the Committee on Government Assurances.*

108. *Notification issued with G.O. Press No. 171, Revenue, dated 1st January 1963, amending Rule 7 (2) of the Madras Sales of Motor Spirit Taxation Rules, 1939, issued under the Madras Sales of Motor Spirit Taxation Act, 1939 (Madras Act VI of 1939).*

* Laid on the table of the House on 30th March 1963.

[1st April 1963

### Appendix I.

[Vide answer to Starred Question No. 464 at page 339.]

The following eight villages in Kallakurichi taluk will be benefited by the Gomukhi Nadhi Reservoir Scheme :—

(1) Vadakkanandal.

(2) Mathur.

(3) Madhavacheri.

(4) Palarambathur.

(5) Thirukkanangur.

(6) Manmalai.

(7) Karadisithur.

(8) Thavadipattu.

கள்ளக்குறிச்சி தாலூகாவில் உள்ள கீழ்க்கண்ட எட்டு கிராமங்கள் கோமுகி நதி அணை நீர்த்தேக்கத் திட்டத்தினால் பயனடையும் :—

1. வடக்கானந்தல்.
2. மாத்தூர்.
3. மாதவச்சேரி.
4. பாலாரம்பட்டுர்.
5. திருக்கானங்கூர்.
6. மாணமலை.
7. கரடி சித்தூர்.
8. தாவடிப்பட்டு.

### Appendix II.

[Vide answer to Starred Question No. 467 at page 340.]

A Scheme for undertaking plant protection measures on cotton in Madras State has been sanctioned at a total cost of Rs. 5 lakhs during 1962–63. Proposals for the continuance of the scheme during 1963–64 are still awaited from the Director of Agriculture.

The object of the scheme is to undertake intensive prophylactic and control measures on a large scale against pests and diseases of cotton crop through offer of incentive to growers by supplying pesticides and fungicides at half cost. During 1963–64, the scheme is proposed to cover 70,000 acres of cotton crop. The amount of subsidy proposed under the scheme is Rs. 7 lakhs. In addition, 30,000 acres of winter Cambodia crop in Coimbatore District and 30,000 acres of summer Cambodia crop in Ramanathapuram District are proposed to be brought under Package Programme. It is proposed to try a combined spray of Folidol and D.D.T. 50 per cent wettable powder to control the green caterpillar *Heliothis Armigera*. In using this spray schedule, the larvae are immediately knocked down by Folidol and residual action by D.D.T. This was very successful to arrest the further spread of the green caterpillar this year. If there is incidence of



1st April 1963]

mite by the use of D.D.T. 50 per cent wettable powder after 2 rounds, it can be controlled by the application of Sulphur. Further, Folidol with D.D.T. 50 per cent has been found effective and Methyl Parathion is used in checking Ballworm attack.

(*b*) The matter will be discussed by the Plant Protection Committee which will be meeting during the second week of March for undertaking trials with some new insecticidal formulation of recent origin for the control of *Heliothis Armigera*. There is no information about the Expert Committee mentioned by the Honourable Member.

(*c*) Recourse to aerial spraying on cotton in areas affected by pest does not appear to be feasible for the following reasons :—

(i) The American Cotton is not grown in large continuance areas, but is grown in small holdings scattered all over the district. The extent of cotton grown by individual ryot is also limited.

(ii) In most of the holdings where the long staple cotton is grown in Coimbatore district the crop is irrigated from wells fitted with electric pumps. The presence of overhead electric wires in the holdings is reported to stand in the way of resorting to aerial spraying. The presence of coconut or other tall trees also acts as a limiting factor for the use of aircraft.

### Appendix III.

[Vide answer to Starred Question No. 480 at page 344.]

List of Schemes proposed to be executed in the Minor Ports of the Madras State during the Third Five-Year Plan Period.

*Cuddalore Port.*

1. Cuddalore Port Development Scheme—

(*a*) Construction of river training works.

(*b*) Construction of breakwaters.

2. Construction of R.C.C. wharf wall on two sides of Spoil Island.

3. Concreting the stacking areas north, central and south wharves.

4. Electrification of Spoil Island.

5. Reconstruction of entire wharf.

6. Capital dredging.

7. Inspection with survey launch.

8. 50-ton steel water barge with equipment.

9. Provision of a 2 ton mobile crane.

*Cuddalore Port—cont.*

10. Purchase of a grab dredger with necessary punts.

11. Provision of a 300 h.p. tug for towing lighters.

12. Providing navigational aids such as lighted beacons and lighted buoys for night work.

13. Provision of quarters for Port staff.

14. Purchase of a 12" sea going cutter section dredger with pipe line.

15. Extension of dry dock.

*Nagapattinam Port.*

1. Construction of a R.C.C. jetty with needle pile and mobile sand pump.

2. Reconstruction of wharf wall.

3. Improvements to the timber wharf including revetment.

4. Construction of transit sheds in timber wharf.

5. Reconstruction of passenger shed.

6. Joining up the two ramps in central and south wharf.

7. Slipway for dredger and tug.

8. Provision of 100 h.p. tug for towing passenger lighters.

9. Provision of quarters for Port staff.

10. Provision of a small suction dredger.

11. Improving the intensity of the Light House.

*Colachel Port.*

1. Construction of a pier with stacking platform, etc.

2. Construction of Port office and quarters.

3. Construction of cargo shed.

*Kilakarai Port.*

**Construction of wharf wall and stacking areas.**

*[6-ம் பக்கத்திலுள்ள 480 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]*

*மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இம்மாநிலத்தில் நிறைவேற்ற உத்தேசித்துள்ள சிறு துறைமுக திட்டங்களின் பட்டியல்:—*

**கடலூர் துறைமுகம்.**

1. கடலூர் துறைமுக அபிவிருத்தித் திட்டம்—

(a) ஆறுகளின் கரைகளைச் சீர் செய்தல்.

(b) உப்பங்கழிகளைக் கட்டுதல்.

2. தூர் மண் திட்டின் இரு கரைகளிலும் R.C.C. கப்பல் துறை சுவர் கட்டுதல்.



3. வடக்கு, மத்திய, தெற்குத் துறைகளில் சாக்கு சேர்த்து வைக்கும் பகுதிகளில் காண்கிரீட் போடுதல்.

4. தூர் மண் திட்டில் மின்வசதி.

5. கப்பல் துறையை மீண்டும் கட்டுதல்.

6. பெருமளவு சேறுவாருதல்.

7. சர்வே லாஞ்சுடன் பார்வையிடுதல்.

8. ஐம்பது டன் உருக்கலான தண்ணீர் படகு (சாதனங்களுடன்).

9. இரண்டு டன் மொபைல் கிரேன் வசதி.

10. சிறுபடகுகளுடன் சேறுவாரிக்கப்பல் வாங்குதல்.

11. சரக்கு ஏற்றி இறக்கும் படகுகளை இழுப்பதற்காக 300 குதிரைத் திறனுள்ள இழுகப்பல் வசதி.

12. இரவில் வேலை செய்ய வசதியாயிருப்பதற்காக ஒளிரும் சிக்னல் நிலையங்கள், ஒளிரும் மிதவைகள் போன்ற நாவாய் வசதிகள்.

13. துறைமுகப் பணியாளருக்கு வீட்டு வசதி.

14. கடல் பயணத்துக்கு ஏற்ற, சேறு உறிஞ்சி எடுக்கத்தக்க 12 அங்குலம் கட்டர் படகு (குழியுடன்) வாங்குதல்.

15. நீரற்ற துறையை விரிவு படுத்தல்.

*நாகப்பட்டிணம் துறைமுகம்.*

1. R.C.C. தோணித்துறை (ஊசிக் குழாய், இயக்கும் மணல் வாரிப் பம்ப் சகிதமாய்) கட்டுதல்.

2. கப்பல் துறை சுவரை மீண்டும் கட்டுதல்.

3. வெட்டுமா கப்பல் துறை அபிவிருத்தி (ரிவெட்மெண்ட் உட்பட).

4. வெட்டுமா கப்பல் துறையில் இடைக்கால கூடம் கட்டுதல்.

5. பயணிகள் தங்கும் கூடம் கட்டுதல்.

6. மத்திய, தெற்கு கப்பல் துறையில் இரண்டு சரிவுப் பகுதிகளை இணைத்தல்.

7. சேறுவாரும் கப்பலுக்கும் இழு கப்பலுக்கும் சறுக்குப் பாதை.

8. சரக்கு ஏற்றி இறக்கும் படகை இழுப்பதற்காக 100 குதிரைத்திறன் இழு படகுவசதி.

9. துறைமுகப் பணியாளருக்கு வீட்டு வசதி.

10. உறிஞ்சி எடுக்கும் சிறு சேறுவாரிக் கப்பல் வசதி.

11. கலங்கரை விளக்கத்தின் திறனை அபிவிருத்தி செய்தல்.

### கொளச்சல் துறைமுகம்.

1. பியர் கட்டுதல் (சரக்கு ஏற்றி இறக்க மேடை வசதி முதலியவற்றுடன்).

2. துறைமுக அலுவலகம், பணியாளர் குடியிருப்பு கட்டுதல்.

3. சரக்கு கூடம் கட்டுதல்.

### கீழக்கரை துறைமுகம்.

கப்பல்துறை சுவர், சரக்கு சேர்த்துவைக்கும் பகுதி கட்டுதல்.

## APPENDIX IV.

[*Vide* Answer to Starred Question No. 491 on page 361 supra.]

**A note giving details of the scheme is furnished below :—**

In the context of the problem of finding work for the present labour force in the country and the additions expected over the foreseeable future, as supplementary to the Third Plan programmes for development of agriculture, irrigation, communications, industries, social services, etc., a rural works programme has also been initiated by the Planning Commission. The programme is expected in due course to provide work for about 100 days in a year to 2·5 millions persons. About 200 rural works projects are being taken up during the current year and a much larger programme will be taken up in the next phase. However, it is recognisd that while the largest scope for utilising man-power resources in rural areas would for some years lie in programme of agricultural development and provision of housing and other rural amenities, a *lasting solution* of the problem of unemployment and under employment would require not only the adoption of scientific agriculture but also the diversification of rural economy through building up of industries based on agriculture and other resources and promotion of none-agricultural occupations. This is of particular importance for raising the levels of living and productivity and for providing larger employment opportunities to the landless and weaker sections of village communities. Therefore one of the main aims of the Third Plan is to encourage the growth of village and small industries in rural areas and small towns so as to bring about the development of these industries in close integration, on the one hand, with the agricultural economy and on the other, with the large scale industry.

2. In order to secure the objective specified above, the Planning Commission has evolved a scheme for the development of rural industries by starting pilot projects in all States during the Third Plan. The areas for implementing the pilot projects had to be selected from the backward areas in the States, where there is considerable under-employment because of unfavourable natural conditions and lack of development of potential resources. Areas in the neighbourhood of rural universities and institutes had also to be considered so that these institutions can provide a valuable reserve for personnel and continuity of technical guidance



and assistance. From out of 40 areas selected in the first series of the projects in the light of the experience gained from earlier pilot projects, Madras State has been allotted three projects of this kind. Each selected area for the project will have a population of 3 to 5 lakhs consisting of complete development blocks, all of which are to be situated within the same district. Each project is expected to draw funds from three sources, namely funds from State Plan and the All-India Boards according to the respective programmes, loans and credits from financial and co-operative institutions and under the State-Aid to Industries Acts and additional funds to be given to the project as its own nucleus. As a nucleus to start with an assured minimum provision for each Project of Rs. 20 lakhs is to be provided for the four-year period 1962-63 over and above the present allocations under the Third Plan. In addition to Rs. 8 crores for 40 projects, there will also be provision for a contingent fund of Rs. 7 crores.

3. The Planning Commission has already set up a Rural Industries Planning Committee, which is to function as a Standing Committee for continuous guidance of the programme for rural industries formulated by the Committee. At the State level, a High Level Advisory Committee is to be set up with a representative of the State Khadi and Village Industries Board with a senior State official connected with village and small industries to serve as Secretary of the Committee. In Madras State it is proposed to have the Minister for Finance as Chairman of the Committee with Secretary of the State Khadi and Village Industries Board and officers of the Industries Department as Members in addition to non-officials interested in Rural Industries Programme.

For each project area, an Advisory Committee is to be constituted with a view to secure maximum co-ordination. The Planning Commission arranged for the training of Project Officers. The officers have taken charge of the projects in December 1962 and are at presnt engaged in conducting the survey and starting of new industries in three areas.

## APPENDIX V.

[*Vide* Answer to Starred Question No. 469 on page 371 supra.]

### *Integrated M.B.B.S. Course.*

Owing to the present National Emergency, and at the instance of the Medical Council of India, the Government of Madras have, with the concurrence of the University of Madras, decided :—

(i) to replace the existing internship training in the curriculum of studies for M.B.B.S., students by one year of compulsory housemanship training;

(ii) to hold three M.B.B.S. Examinations in a year; and

[1st April 1963

(iii) to allot ten marks out of 50 to be awarded by the Clinical Professor of the Unit in respect of Medicine, Surgery Obstetrics and Gynæcology, Public Health, Social and Preventive Medicine for the day to day work of the students.

2. The replacement of the existing internship training by one year compulsory housemanship training will take effect for the candidates who have passed the M.B.B.S. examination in December, 1962 and who pass thereafter. (The House Surgeoncy will be of the rotating type, three months being spent in each of the four departments of Medicine, Surgery, Obstertrics and Gynæcology and Public Health.

3. In regard to those who have partially finished their internship, they may put in a minimum period of six months as House Surgeons and this will be reckoned for their total period of one year of House Surgeoncy. Those who have completed their period of internship will be deemed to have done the compulsory House Surgeoncy for one year.

4. The Medical Council of India has requested all the Universities that the compulsory housemanship training may be dispensed with in the case of new graduates who opt for Armed Forces, Medical Services and that their military services may be counted towards the compulsory housemanship for purposes of full registration. The Council has also requested that in the case of candidates applying for Emergency Commission in the Armed Forces Medical Services who are already undergoing the (internship training), i.e., compulsory housemanship training as envisaged under the revised curriculum, they may be permitted to complete the remaining period of compulsory Housemanship in military service and that this may be adjusted towards fulfilment of the requirements of internship for the award of M.B.B.S. degree. The matter is under correspondence with the University of Madras.

5. These arrangements will be in force during the period of the National Emergency.

## APPENDIX VI

[*Vide* Answer to Unstarred Question No. 33 on page 390 supra.]

***List of Blocks in their respective stages in the Community Development Programme.***

*North Arcot district.*—

| | | |
|---|---|---|
| 1 | Arni | Stage I |
| 2 | Tiruppattur | ,, |
| 3 | Wallajah | ,, |
| 4 | Sholingur | ,, |
| 5 | Kaveripakkam | ,, |
| 6 | Kanivambadi | ,, |
| 7 | Chengam | ,, |
| 8 | Nemili | ,, |

*North Arcot district*—cont.

| | | |
|---|---|---|
| 9 | Cheyyar | Stage I. |
| 10 | Kandili | ,, |
| 11 | Madanoor | ,, |
| 12 | Arkonam | ,, |
| 13 | Pernambat | ,, |
| 14 | Wandiwash | ,, |
| 15 | Anakavur | ,, |
| 16 | Kasthambadi | ,, |



1st April 1963]

*North Arcot district*—cont.

| | | |
|---|---|---|
| 17 | Timiri | Stage I |
| 18 | Chetpet | Stage II |
| 19 | Arcot | ,, |
| 20 | Vembakkam | ,, |
| 21 | Pernamallur | ,, |
| 22 | Kilvaithiankuppam | ,, |
| 23 | Kalasapakkam | ,, |
| 24 | Thurinjapuram | ,, |
| 25 | Keelpennathur | ,, |
| 26 | Polur | ,, |
| 27 | Pudupalayam | Pre-extension |
| 28 | Thiruvannamalai | ,, |
| 29 | Katpadi | ,, |
| 30 | Alangayam | ,, |
| 31 | Thellar | ,, |
| 32 | Thandrampattu | ,, |
| 33 | Gudiyatham | ,, |
| 34 | Anniout | ,, |
| 35 | Vellore | ,, |
| 36 | Natrampalli | ,, |

*South Arcot District*—

| | | |
|---|---|---|
| 37 | Merkanam | Stage I |
| 38 | Tirunavalur | ,, |
| 39 | Kolianur | ,, |
| 40 | Kanai | ,, |
| 41 | Thyagadurgam | ,, |
| 42 | Porto Novo | ,, |
| 43 | Nal ur | ,, |
| 44 | Thiruvennainallur | ,, |
| 45 | Olakkur | ,, |
| 46 | Vanur | ,, |
| 47 | Mogaiyur | ,, |
| 48 | T. Vallam | ,, |
| 49 | Vikravandi | ,, |
| 50 | Kandamangalam | ,, |
| 51 | Tirukoilur | ,, |
| 52 | Kallakurichi | Stage II |
| 53 | Gingee | ,, |
| 54 | Mangalore | ,, |
| 55 | Ulundurpet | ,, |
| 56 | Orathur | ,, |
| 57 | Mel Bhuvanagiri | ,, |
| 58 | Pemuti | ,, |
| 59 | Kurinjipadi | ,, |
| 60 | Chinnasalem | ,, |
| 61 | Melmalayanur | ,, |
| 62 | Sankarapuram | Pre-extension |
| 63 | Cuddalore | ,, |
| 64 | Kammapuram | ,, |
| 65 | Rishivandiyam | ,, |
| 66 | Kalrayan Hills | ,, |
| 67 | Komaratchi | ,, |
| 68 | Nell kuppam | ,, |
| 69 | Kattumannarkoil | ,, |
| 70 | Virudhachalam | ,, |
| 71 | Mailam | ,, |

*Chingleput district*—

| | | |
|---|---|---|
| 72 | Uthiramerur | Stage I |
| 73 | Kattankolathur | ,, |
| 74 | Kunnathur | ,, |
| 75 | Kancheepuram | ,, |
| 76 | Gummudipoondi | ,, |
| 77 | Villivakkam | ,, |
| 78 | Acharapakkam | ,, |
| 79 | Ramakrishnarajupet | ,, |

*Chingleput district*—cont.

| | | |
|---|---|---|
| 80 | Sholavaram | Stage I |
| 81 | Thiruvalankadu | ,, |
| 82 | Poonamallee | Stage II |
| 83 | Maduranthakam | ,, |
| 84 | St. Thomas Mount | ,, |
| 85 | Minjur | ,, |
| 86 | Thirukalikundram | ,, |
| 87 | Poondi | ,, |
| 88 | Thiuvallur | ,, |
| 89 | Kadambathur | ,, |
| 90 | Pallipet | ,, |
| 91 | Uthukottai | ,, |
| 92 | Sriperumbudur | ,, |
| 93 | Thiruvottiyur | Pre-extension |
| 94 | Walajabad | ,, |
| 95 | Tiruporur | ,, |
| 96 | Tiruttani | ,, |
| 97 | Lathur | ,, |
| 98 | Chithamur | ,, |

*Coimbatore district*—

| | | |
|---|---|---|
| 99 | Perianaickenpalayam | Stage I |
| 100 | Bhavanisagar | ,, |
| 101 | Talavadi | ,, |
| 102 | Kinnathukadavu | ,, |
| 103 | Moolanur | ,, |
| 104 | Udumalpet | ,, |
| 105 | Ammapet | ,, |
| 106 | Thondamuthur | ,, |
| 107 | Annur | ,, |
| 108 | Pollachi | ,, |
| 109 | Singanallur | ,, |
| 110 | Gudimangalam | ,, |
| 111 | Karamadai | ,, |
| 112 | Sarcarsamakulam | ,, |
| 113 | Dharapuram | Stage II |
| 114 | Avanashi | ,, |
| 115 | Bhavani | ,, |
| 116 | Sulur | ,, |
| 117 | Thuckanaickenpaluyam | ,, |
| 118 | Lakshminaickenpalayam | ,, |
| 119 | Palladam | ,, |
| 120 | Tiruppur | ,, |
| 121 | Pongalur | ,, |
| 122 | Kangayam | ,, |
| 123 | Vellakoil | ,, |
| 124 | Kundadam | ,, |
| 125 | Satyamangalam | ,, |
| 126 | Gobichettipalayam | ,, |
| 127 | Erode | ,, |
| 128 | Perundurai I. | ,, |
| 129 | Kodumudi | ,, |
| 130 | Modakurichi | ,, |
| 131 | Anamalai | Pre-extension |
| 132 | Perur | ,, |
| 133 | Madukkarai | ,, |
| 134 | Madathukulam | ,, |
| 135 | Audiyur | ,, |
| 136 | Uttukuli | ,, |
| 137 | Namiyur | ,, |
| 138 | Perundurai II. | ,, |

*Kanyakumari district*—

| | | |
|---|---|---|
| 139 | Rajakkamangalam | Stage I |
| 140 | Kuruthancode | ,, |
| 141 | Thovala | ,, |
| 142 | Melpuram | Stage II |

*Kanyakumari district*—cont.

| | | |
|---|---|---|
| 143 | Killiyur | Stage II |
| 144 | Agasteeswaram | ,, |
| 145 | Munchira | ,, |
| 146 | Thiruvattar | Pre-extension |
